Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

S. VIS

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

अभ्यषिञ्चन्नरव्याघ्रं प्रसन्नेन सुगन्धिना ।
सलिलेन सहस्राक्षं वसवो वासवं यथा

CC-0. In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ ராமஜயம்

ஸகல காரிய ஸித்தியும்
ஸ்ரீமத் ராமாயண பாராயணமும்
ஸ்ரீமத் திராவிட வேதங்களும்

(ஸ்தோத்திரமாலையுடன்)

ஸங்கீத விமர்சகாசார்ய,
அபிநவ தியாக ப்ரம்ம, கீர்த்தனாசார்ய
ஸ்ரீ உ. வே. C. R. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் B.A.,

அவர்களுடைய ஸ்ரீமத் வால்மீகி ராமாயண
மொழிபெயர்ப்பிலிருந்து தொகுக்கப்பெற்று

அம்ருதவாக்வர்ஷி, உபந்யாஸக சக்ரவர்த்தி, வைதிக தர்மஸம்ரக்ஷக,
ப்ரவசன துரீண, வேதயாக பரிபாலக, ராமாயண தத்வ உபதேசக,
ராமாயண கேஸரி, பாரதஸிம்ஹம், தர்மோபதேச வாசஸ்பதி,
யக்ஞரக்ஷக, மதுவாணிநிதி

சேங்காலிபுரம் ப்ரஹ்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர்

அவர்கள் முதற்பதிப்புக்குத் தந்தருளிய
ஆசியுரையுடன் கூடியது.

பதிப்பகத்தார் :

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி,
தி. நகர், சென்னை-17.

லிப்கோவின் திருச்சி விற்பனை நிலையம் :
17/1, நந்திகோயில் தெரு, தெப்பக்குளம், திருச்சி–2.

சென்னையில் லிப்கோ ஸ்டாகிஸ்டுகள் :
எம். தாமோதரம் அண்டு கம்பெனி,
108, கார்ப்பொரேஷன் பழக் கடை, சென்னை-1.

ான்காம் பதிப்பு] [விலை ரூ. 4-60

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

(C) பதிப்புரிமை பதிப்பகத்தாரைச் சார்ந்தது.

முதற் பதிப்பு: 1960
இரண்டாம் பதிப்பு: 1963
மூன்றாம் பதிப்பு: 1969
நான்காம் பதிப்பு: 1972

பொருளடக்கம்

	பக்க
ஸ்ரீ ராமர் ஜாதகம்	(i
முதற்பதிப்பின் ஆசியுரை	(
பதிப்பாசிரியரின் முன்னுரை	(vi
ருக்வேத மந்த்ரங்களும் ஸகல காரிய ஸித்தியும்	(xxii
முக்கியமான த்யான சுலோகங்கள்	(xxi
முக்கியமான மங்கள சுலோகங்கள்	(xx
பாராயணக் கிரம விவரம்	(xxx

ஸகல காரிய ஸித்தியும் ஸ்ரீமத் ராமாயணமும்:

1.	எடுத்த தருமகாரியம் நிறைவேற	...
2.	செய்தொழிலில் தனலாபம் உண்டாக	...
3.	கல்யாணமாகாதவர்களுக்குக் கல்யாணம் நடக்க	...
4.	மோக்ஷபலன் ஸித்திக்க	...
5.	தீராத வியாதிகள் தீர	...
6.	பேய் பிசாசு பில்லிசூனியம் நீங்க	...
7.	பைத்தியம் தெளிய	...
8.	தரித்திர நிலை நீங்க	...
9.	அடுத்தடுத்து வரும் துக்கம் நீங்க	...
10.	எதிர்பாராமல் வந்த ஆபத்து ஒழிய	... 9
11.	விட்டுப் பிரிந்தவர் வந்து சேர	... 1
12.	துர்சொப்பன தோஷம் நீங்க	... 1
13.	பரஸ்த்ரீகமன தோஷம் நீங்க	... 1
14.	ஸ்ரீ ராமனுக்குச் செய்த அபசார தோஷம் நீங்க	... 1
15.	மறு பிறவியில் ஸகல சுகங்களும் பெற	... 1
16.	பிள்ளையில்லாதவர்களுக்குப் பிள்ளையுண்டாக	... 1
17.	சுகப்பிரஸவம் உண்டாக	... 1

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

		பக்கம்
18.	சிறைவாஸ பயம் நீங்க ...	195
19.	துர்நடத்தையுள்ள பிள்ளை நல்லவனாக ...	201
20.	நினைத்த காரியம் நிறைவேற ...	215
21.	ராஜாங்கக் காரியங்களில் வெற்றி பெற ...	223

ஸகல காரிய ஸித்தியும் ஸ்ரீ திராவிட வேதங்களும் :

	முன்னுரை ...	241
	நாலாயிர திவ்ய ப்ரபந்தத் தனியன்கள் ...	243
1.	எடுத்த காரியம் எதுவும் வெற்றி பெற ...	247
2.	மாணவர் கல்வி நலன் பெற ...	249
3.	க்ஷேமமா ? ...	253
4.	ஆபத்தா ? அஞ்சவேண்டா ! ...	257
5.	மானம் காக்க ...	269
6.	வளமெலாம் நிறைந்து வாழ விருப்பமா ? ...	270
7.	மணமாக வேண்டுமா ? மணமாகி மணமாக வாழ விருப்பமா ? ...	277
8.	ஆண்டவனே அருமருந்து ...	278
9.	நம் அங்கங்களால் காரிய ஸித்தி ...	283
10.	வீட்டைவிட்டுக் கிளம்பும்போது ...	287
11.	கடிதங்கள் மூலம் காரிய ஸித்தி ...	289
	முடிவுரை ...	291
	ஸ்ரீமத் ராமாயண நாட்குறிப்பு (டயரி) ...	292
	ஸ்ரீஸூக்தம் ...	297
	சில ஸ்ரீ ராமர் ஸந்நிதிகள் ...	303
	ஸ்தோத்திரமாலை	

CC-0.In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ ராமசந்த்ராய நம:

ஸ்ரீ ராமர் ஜாதகம்

ததச்ச த்வாதசே மாஸே சைத்ரே நாவமிகே திதௌ ।
நக்ஷத்ரே(அ)திதி தைவத்ய ஸ்வோச்ச ஸம்ஸ்த்தேஷு பஞ்சஸு ॥
க்ரஹேஷு கர்க்கடகே லக்நே வாக்பதா விந்துநா ஸஹ ।
ப்ரோத்யமாநே ஜகந்நாதம் ஸர்வலோக நமஸ்க்ருதம்
கௌஸல்யா(அ)ஜநயத் ராமம் ஸர்வலக்ஷண ஸம்யுதம் ॥

—ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

சுக்கிரன்	சூரியன் புதன்		கேது
	ராசி சக்கரம்		லக்னம் குரு சந்திரன்
செவ்வாய்			
ராகு		சனி	

"மேடமா மதிதிதி நவமி மீன்கழை
நீடுறு மாலைகர்க் கடகம் நீதிசேர்
ஓடைமா களிறஸன் உதய ராசிகோள்
நாடினே காதசர் நால்வர் உச்சரே."

—கம்ப ராமாயண[ம்]

ஸ்ரீய: பதியான பகவான் ஸ்ரீமந் நாராயணனுடைய அவதாரங்களில் முக்கியமானது ஸ்ரீ ராமாவதாரம். ஸ்ரீ ராமபிரானுடைய ஜனன ஜாதகத்தில் ஐந்து க்ரஹங்கள் உச்ச ஸ்தானத்தில் இருக்கின்றன. எனவே, இந்த மஹிம சிரேஷ்டமான ஜாதகத்தைப் பூஜா மண்டபத்தில் எழுந்தருளப்பண்ணி, தின தோறும் சிரத்தையுடன் ஆராதிப்பது அவசியம். இந்தப் புனிதமான ஜா[தக]சத்தை வைத்திருப்பவர்களுக்கும், பூஜிப்பவர்களுக்கும், ஜாதக ரீதியா[க] ஏற்பட்டிருக்கும் நவக்ரஹ தோஷ நிவிருத்தியும், ஸர்வ வ்யாதி நிவிருத்தியு[ம்] ஐசுவர்ய அபிவிருத்தியும், ஆயுள், ஆரோக்யம் முதலான ஸகல பாக்[ய] அபிவிருத்திகளும் ஸ்ரீ சக்கரவர்த்தித் திருமகன் திருவருளால் திண்ணமா[க] ஏற்படும் என்பது ஸர்வ சாஸ்த்ர ஸம்மதம்.

CC-0. In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

முதற்பதிப்பின் ஆசியுரை

அம்ருதவாக்வர்ஷி, உபந்யாஸக சக்ரவர்த்தி,
வைதிக தர்மஸம்ரக்ஷக,
ப்ரவசன துரீண, வேதபாக பரிபாலக,
ராமாயண தத்வ உபதேசக,
ராமாயண கேஸரி, பாரதஸிம்ஹம்,
தர்மோபதேச வாசஸ்பதி, யக்ஞரக்ஷக,
மதுவாணிநிதி

சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர்,

25, வடக்கு மரவனேரி, சேலம்-1.
(Camp) சென்னை,
26-9-1960.

ஸ்ரீ பகவான் ராமகிருஷ்ணாதிகளாய் இவ்வுலகில் அவதாரம் செய்ததால் நவக்ரஹங்களின் அனுக்ரஹத்தை விரும்புகிறவராகவும், அவற்றிற்குக் கட்டுப்பட்டுள்ளவராகவும் இருக்கின்றார். அதனாலேயே ஸ்ரீ ராமன் முதலியவர்களுக்கு நக்ஷத்திரம், லக்னம் முதலியவற்றை முனிவர்கள் கூறியுள்ளனர். இப்படித் தெய்வத்திற்கே நவக்ரஹங்களின் உதவி தேவையென்றால் மனிதர்களான நம் யாவருக்கும் நவக்ரஹ ப்ரஸாதம் மிக்க அவசியமேயன்றோ! அந்த நவக்ரஹங்களின் அனுக்ரஹம் அடைவதற்கு மார்க்கத்தைக் கருணாமூர்த்தியான ஸ்ரீ பரமேச்வரன் ஸ்ரீ பார்வதி தேவிக்கு உபதேசம் செய்திருப்பதாய் உமாஸம்ஹிதையில் கூறப்பட்டுள்ளது. அதுவும், ஸம்ஸாரிகளான நமக்குச் சுலபமாய் நவக்ரஹ தோஷங்கள் விலகி, ஆயுஸ், ஆரோக்யம், ஸந்தானம், ஸம்பத்து முதலிய மங்களங்களை அளிப்பதாக அமைந்துள்ளது. இம்முறையை உலகத்திலுள்ள யாவரும் அறிந்துகொள்வதற்காக, லிட்டில் ப்ளவர் கம்பெனியார் வெகு அழகான முறையில் சிறு குழந்தைகள், ஸ்திரீகள், பெரியவர்கள் யாவரும் நித்யம் பாராயணம் செய்யும்படி, "தசாபுக்திகளும் ஸ்ரீமத் ராமாயண பாராயணமும்" என்ற ஒன்பது புஸ்தகங்களையும் "ஸகல காரிய ஸித்தியும் ஸ்ரீமத் ராமாயண பாராயணமும்" என்ற புஸ்தகத்தையும் அச்சிட்டு வெளியிட்டுள்ளனர்,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Harihiaran Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீமத் ராமாயணத்தில் நவக்ரஹ தோஷங்களைப் போக்கி ஸகல பாக்யங்களையும் கொடுக்கக்கூடிய, பல ஸர்க்கங்கள் அமை துள்ளன. எந்தஎந்த தசைக்கு எந்தஎந்த ஸர்க்கத்தின் கதை உணரவேண்டுமோ, எந்தஎந்த தசைகளின் புக்திகளின் தோஷ களை விலக்கிக்கொள்ள எந்தஎந்த ஸர்க்கத்தின் கதையை உண வேண்டுமோ, அந்தஅந்த ஸர்க்கங்களின் கதையை எளி நடையில் தமிழில் இக்கம்பெனியார் அச்சிட்டளித்தது நம தென்னாட்டின் பாக்யமேயாகும்.

இதோடு அந்தஅந்த ஸர்க்கத்தின் ஆரம்ப சுலோகத்தையு முடிவு சுலோகத்தையும் ஒவ்வொரு ஸர்க்கத்திலும் சேர்த் அச்சிட்டிருக்கின்றனர். அவ்விரண்டு சுலோகங்களையும் படிப் தால் அந்த ஸர்க்கம் முழுவதையும் படித்த பயன் ஏற்படும். அந் ஸர்க்கத்தின் அர்த்தத்தை ஸ்ரீ ராமனிடத்தில் அளவு கடந்த பக் உள்ளவரும், ஸ்ரீ ராமாயணத்தின் உட்கருத்தை வெகு எளி நடையில் எழுதியவருமான அபிநவ தியாக ப்ரம்ம, கீர்த்தனசார்ய ஸ்ரீ C. R. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் அவர்கள் மொழிபெயர்த்தபடி வெளியிட்டுள்ளனர்.

அதோடு "ஸகல காரிய ஸித்தியும் ஸ்ரீமத் ராமாயண பாராயண மும்" என்ற ஒரு சிறந்த புஸ்தகத்தையும் இக்கம்பெனியா வெளியிட்டுள்ளனர். இதுவும் ஒவ்வொரு குடும்பத்திற்கு ரக்ஷையாக இருக்கும்.

இப்புஸ்தகங்களில் பல ஸ்தோத்ரங்களையும் பல தெய்வ களின் அஷ்டோத்தரங்களையும் நாமாவளிகளையும் சேர்த் அச்சிட்டுள்ளனர். பக்தர்களுக்கு இதுவும் ஒரு பெரிய லாபமாகு

இவைகளைப் படிப்பதால் நவக்ரஹ ப்ரஸாதமும், ஸ்ரீ ராமனுடை ப்ரஸாதமும், ஸர்வதேவதா ப்ரஸாதமும் கிடைப்பது நிச்சயம்.

ஆஸ்திகர்கள் அனைவரும் இப்புஸ்தகங்களை வாங்கி இ கம்பெனியாருக்கு இம்மாதிரி இன்னும் பல புஸ்தகங்களை வெளியி உத்ஸாஹத்தை உண்டுபண்ணும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு,

சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷித

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பதிப்பாசிரியரின் முன்னுரை

நான்கு புருஷார்த்தங்கள்

ஆதிப் பரம்பொருளின் படைப்பில் பகுத்தறிவுடன் விளங்கும் மானிட ஜன்மமே உயர்ந்ததாகும். அத்தகைய மானிட ஜன்மத்தைப் பயனுள்ளதாகச் செய்துகொள்ள அறம், பொருள், இன்பம், வீடு எனப்படும் நான்கு புருஷார்த்தங்களையும் அடையவேண்டும். இவைகளில் தருமத்தைக் கடைப்பிடித்தே ஏனைய புருஷார்த்தங்களை அடையவேண்டுமென்பதே, தருமத்தை முதலாவதாக அமைத்ததன் நோக்கம் ஆகும்.

"பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை" என்பதற்கேற்ப ந்யாயமாக ஈட்டிய பொருளும், அறத்திற்குப் புறம்பாகாத இன்பமும், அவைகளை ஆதாரமாகக் கொண்ட மற்றவைகளும் மானிட வாழ்விற்கு மிகமிக அவசியமாகின்றன.

மேற்கண்ட பொருளும் இன்பமும் அவைகளைச் சார்ந்த மற்றவைகளும், நம் சாஸ்திரங்களில் சொல்லியபடியும், நம் முன்னோர்கள் ஆணையிட்டபடியும், அவரவர் முன்வினைப் பயனாகவே குறிப்பிட்ட அளவில் குறிப்பிட்ட காலத்தில் கிடைக்கின்றன.

வினைப்பயனாவது யாது ?

இறைவனின் படைப்பில் எத்தனையோ லக்ஷம் ஜீவராசிகள் இருக்கின்றன. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விதமான சரீர அமைப்பும் வெவ்வேறு விதமான செயற்பாடுகளும் பலவேறு விதமான தேவைகளும், முயற்சிகளும், முரண்பாடுகளும் உள்ளன. இப்படி ஒன்றுக்கொன்று இவ்வளவு வித்தியாசமாக இருக்கக் காரணம் என்ன? இதற்குக் காரணம் அந்த அந்த ஜீவாத்மா செய்த முன்வினையே என்பர் நம் பெரியோர்.

இப்போது நாம் மற்ற ஜீவராசிகளையெல்லாம் விட்டுப் பூவுலகிலுள்ள மனிதவர்க்கத்தை மாத்திரம் எடுத்துக்கொள்வாம். ஆஹா! மனிதர்களில் எவ்வளவு, எவ்வளவு வித்தியாசம்!

ஒருவன் பணக்காரன் — இன்னொருவன் ஏழை.
ஒருவன் அறிவாளி — இன்னொருவன் மூடன்.
ஒருவன் சிவப்பு — இன்னொருவன் கருப்பு.
ஒருவன் நெட்டை — இன்னொருவன் குட்டை.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இத்தகைய முரண்பாடுகள் எல்லாம் ஒருவருக்கு ஒருவர் சம்பந்தமில்லாதவர்களுக்கு மாத்திரந்தானே என்று நினைக்க வேண்டாம். ஒரே தாயின் வயிற்றில் பிறந்த பிள்ளைகளில்கூட இந்த முரண்பாடுகள் உள்ளன. உதாரணமாக, ஒரே தாயின் வயிற்றில் பிறந்த பல பிள்ளைகளில் ஒரு பிள்ளை மாதம் ஆயிரக் கணக்கில் சம்பாதிக்கும் அதிகாரி! இன்னொரு பிள்ளை தன் பெண் பிள்ளைகளைக்கூடக் காப்பாற்றப் போதாத ஐம்பது ரூபாய் சம்பளம் வாங்குபவன்! இன்னொரு பிள்ளை சமையற்காரன்! இன்னொருவன் தலையில் சாமான்களைச் சுமந்து வீதி வீதியாய் விற்பவன்! இப்படிப் பலவிதம் உண்டு!

மற்றொரு விதமும் உண்டு: தகப்பன் படிப்பு வாசனை அறியாதவன்; ஆனால், பிள்ளையோ உலகமெலாம் புகழும் உயர்ந்த மேதாவி. அல்லது தந்தை உலகமெல்லாம் புகழும் அறிவாளி; பிள்ளையோ எழுத்து வாசனையே அறியாத மூடன்.

மேலும், ஒரே மனிதனின் வாழ்க்கையை எடுத்துக்கொண்டாலும், அவனுக்கு வெவ்வேறு காலங்களில் நேரும் வெவ்வேறு தொழில்களையும் சுகதுக்கங்களையும் பார்க்கிறோம். ஒரு சமயம் தேவையான அநேக வசதிகளுடன் அமோகமாக அவன் வாழ்கிறான். அநேகவிதச் சிறப்புக்களை அடைகிறான். அ[ந்த] மனிதனுக்குத் தன் வாழ்நாளில் மற்றொரு சமயத்தில் சக[ல] சௌக்கியங்களும் மறைந்து, ஆற்று வெள்ளம் வற்றின போல் ஆகிறது. செல்வம் அவனை விட்டு அகலுகிறது. உலகம் அவனைத் தாழ்ந்தவனாக மதிக்கிறது. இதற்கெல்லாம் காரண[ம்] பூர்வ ஜன்ம கர்மம் என்று சொல்லப்படும் முற்பிறப்பு வினை யாகும். "பற்றித் தொடரும் இருவினைப் புண்ணிய பாவமு[ம்]" என்பது பட்டினத்தார் வாக்கு.

பூர்வ ஜன்ம கர்மம் என்பது, புண்ணிய ரூபமாகவும் பா[வ] ரூபமாகவும் இருக்கும். ஒவ்வொருவனும் தன் வாழ்நாள் மு[ழு]வதும் புண்ணியம் மாத்திரமோ, பாவம் மாத்திரமோ தனியாக செய்திருக்கமாட்டான். மிகுந்த புண்ணிய சீலனுங்கூட தனக்குத் தெரியாமலே ஏதாவது பாவம் செய்திருக்கலா[ம்]. அவ்விதமே பாவியும் தனக்குத் தெரியாமல் ஏதாவது புண்ணிய[ம்] செய்திருப்பான். ஆகையால், ஒருவன் முன் ஜன்மத்தில் செய்[த] புண்ணியத்தையும் பாவத்தையும் அனுபவிப்பதற்காகவே ம[று]படியும் ஜன்மம் எடுக்கின்றான் என்பது இயற்கை நியதி.

மனிதனுடைய வாழ்க்கையை ஒரு தராசுக் கோலுக்கு ஒப்பிடலாம். அதன் இருபுறத்திலும் உள்ள தட்டுக்களி[ல்] ஒன்றில் புண்ணியமும், மற்றொன்றில் பாவமும் வைக்கப்பட்டி[ருக்]கின்றன. புண்ணியம் அதிகமாக இருந்தால் அதற்குத் த[க்க]படி வீடு, வாசல், வாகனம், பூமி, பசு, தனம், தானிய[ம்]

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

போன்ற அதிக சுகங்களை அநுபவிக்கிறான். அதனால் அவனைப் புண்ணியம் செய்தவன் என்று உலகில் பேசுவார்கள். ஆனால், அவனும் முன் ஜன்மத்துப் பாவத்தின் பலனை அதே சமயத்தில் ஓரளவுக்கு அனுபவிக்காமலில்லை. உதாரணமாக, கை நிறையப் பணமும், கண் நிறைந்த மனைவியும், மற்ற வாழ்க்கை வசதிகளும் இருந்தும், தனக்குப் பின் தன் பெயர் சொல்ல — தன் செல்வத்தை அநுபவிக்க — ஒரு குழந்தை பிறக்கவில்லையே என்று ஏங்குகிறவன் இருக்கிறான் அல்லவா? இம்மாதிரியே பாவம் செய்தவன் என்று எண்ணப்படும் மற்றொருவன், மனைவி மக்களும், உற்றார் உறவினரும் நிறைந்திருந்தும் குடிக்கக் கூழும் உடுக்கத் துணியும் இல்லையே என்று அல்லும் பகலும் அல்லலற்படுகிறான். ஆகையால், மனிதன் என்ற தராசுக் கோலுக்கு இருபுறமும் இருக்கும் புண்ணிய பாவங்கள் இடத்தை விட்டு மாறாமல் மனிதனுக்குச் சுகத்தையும் துக்கத்தையும் மாறி மாறிக் கொடுத்து வருகின்றன என்பது கண்கூடாகும்.

வேறொரு விதமும் காணலாம்: ஒருவன் துஷ்டன்; பல பாவச் செயல்களைப் புரிகிறான். ஆனால், அவன் வாழ்நாளில் வசதியாக வாழ்கிறான். மற்றொருவன் நல்லவன்; ஒருவருக்கும் தீங்கு செய்ய மனத்தாலும் நினையாதவன்; தெய்வ பக்தி உள்ளவன். ஆனால், அவன் படும் கஷ்டமோ சொல்லி முடியாது. நம் கண்முன் சுகங்களை அனுபவிக்கும் துஷ்டன் இந்த ஜன்மத்தில் தீச்செயல்களைப் புரிபவனாக இருந்தாலும், முன் ஜன்மத்தில் செய்த புண்ணியத்தின் பலனை இந்த ஜன்மத்தில் அநுபவித்து வருகிறான். அவனே இந்த ஜன்மத்திலும் புண்ணிய காரியமே செய்வானானால், இந்தப் பிறப்பின் முடிவிலேயே மறு பிறப்பில்லாத முக்தியை அடைவது திண்ணம். ஆனால், அவன் தீச்செயல்களைச் செய்வானாகில் அதன் தீய பலனை இப்பிறப்பிலோ அல்லது அடுத்த ஜன்மத்திலோ அநுபவிப்பது நிச்சயம். அப்படியே இந்த ஜன்மத்தில் நற்செயல் புரிபவனாக இருந்தும், கஷ்டத்தை அநுபவிப்பவன் தன் கஷ்டங்களுக்குப் 'பூர்வ ஜன்ம வினையே' காரணம் என்று தெரிந்து, அதற்காகத் தன்னாலியன்ற அளவில் நற்காரியங்களைச் செய்ய மேன்மேலும் முயல வேண்டும்.

இதை மற்றொரு விதமாகவும் விளக்கலாம்: ஒருவன் ஒரு பாங்கில் பணம் போட்டு வைக்கிறான். பணம் போடுகிறவன் நல்லவனா கெட்டவனா என்பதைப்பற்றிப் பாங்கிக்காரர்களுக்கு அக்கறை இல்லை. அவன் போட்டிருக்கும் பணம் கணக்கில் இருக்கும் வரையில் அவன் கேட்டபொழுதெல்லாம் பணம் கொடுத்துக்கொண்டே வருகிறார்கள். அவனுடைய பாங்கில் மிச்சம் இல்லாதிருந்தால் அவன் கொடுக்கும் 'செக்கை'த் திருப்பி அனுப்பிவிடுவார்கள், அதுபோலவே, ஒருவன் இப்பொழுது

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

துஷ்டனுக இருந்தாலும், பூர்வ ஜன்மத்தில் அவன் சேர்த்து வைத்த புண்ணியம் செலவழிந்து போகும்வரையில் அந்த புண்ணியத்துக்குத் தகுந்த சுகத்தைப் பகவான் கொடுத்து வருகிறுர். அவ்விதமே பாங்கில் கடன்பட்டவன் நல்லவனுனுலும் அவன் கடன் முழுவதையும் தீர்க்கும்வரையில் பாங்கிக்காரர்கள் அவனே வருத்துவதுபோலவே, பூர்வ ஜன்மத்தில் செய்த பாவம் தீரும்வரையில் இந்த ஜன்மத்தில் நல்லவனுக இருந்தாலும் அவனுக்குப் பகவான் கஷ்டங்களேக் கொடுத்து வருகிறுர். இம்மாதிரி பாங்கிக்காரன் உள்ள நிலேயில் இருக்கும் பகவானே நிந்திப்பதில் என்ன பயன்?

ப்ரார்த்தனேயின் மஹிமை

பூர்வ ஜன்மத்தில் பாவம் செய்ததனுல் தற்பொழுது கஷ்டத்தை அநுபவிப்பவர்களுக்கு விமோசனமே இல்லேயா என்றுல், இருக்கிறது.

அதையும் ஓர் உதாரணத்தால் விளக்கலாம் : ஒருவன் ஏதோ குற்றம் செய்துவிட்டான். அவன் செய்த குற்றத்திற்கு அவனுக்கு ஏழு வருஷம் கடின தண்டனே விதிக்கப்படலாமென்று சட்டம் இருக்கிறது. அவன் கண்ணீரும் கம்பலேயுமாக, மனம் நெகிழ்ந்து தான் செய்த குற்றத்தை உணர்ந்து நீதிபதியிடம் தனக்குத் தண்டனேயேயில்லாமல் மன்னித்துவிடவேண்டுமென்று மன்றுடிக் கேட்டுக்கொள்கிறுன். ஆனுல் சட்டப்படி தவறு செய்தவன் தண்டனேயை அநுபவித்தே தீரவேண்டுமென்று இருப்பினும், அவன் தன் குற்றத்துக்காக மனமார வருந்தியதனுல் ஏழு வருஷ தண்டனேயை ஐந்து வருஷமாகக் குறைத்துவிட்டதாக நீதிபதி தீர்ப்பளிக்கிறுர். அவ்விதமே முன் ஜன்மத்தில் செய்த பாவத்துக்கு இந்த ஜன்மத்தில் கஷ்டங்களே அநுபவிக்க வேண்டியது நியதியானுலும், மனம் உருகி மன்றுடிக் கேட்டுக் கொண்டால் பகவான் நம் கஷ்டங்களேக் குறைத்து, அத்தோடு கஷ்டங்களேப் பொறுத்துக்கொள்ளும் ஆற்றலேயும் அருளுகிறுர். நல்ல நிலேயில் உள்ளவர்கள் மீண்டும் மீண்டும் பகவானே துதித்து வந்தால், அவர்களுக்கு மேன்மேலும் சுகம் உண்டாகும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? ஆகவே,

> "கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசிந்துருகி
> நில்லாப் பிழையும் நினேயாப் பிழையும்நின் னேந்தெழுத்தைச்
> சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும் தொழாப்பிழையும்
> எல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி ஏகம்பனே!"

என்று பட்டினத்தார் கூறுகின்றபடியும்,

> "தந்ததுன் தன்னேக் கொண்டதென் தன்னேச்
> சங்கரா ஆர்கொலோ சதுரர்
> அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
> யாதுநீ பெற்றதொன் றென்பால்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யானிதற் கிலன்ஓர்கைம் மாறே."

என்று மணிவாசகர் கூறுகின்றபடியும் நெஞ்சம் நெக்குருகி நினைந்துநினைந்து துதிக்கவேண்டும். தெய்வம் செவிசாய்க்கும்.

எந்த வேலையில் ஈடுபட்டிருக்கையிலும் மனத்துக்குள் "ஸ்ரீஹரி: சரணம்; ஸ்ரீஹரி: சரணம்; ஸ்ரீஹரி: சரணம்" என்றோ அல்லது வேறு பகவந் நாமாக்களையோ ஸ்மரணை செய்வதனுல் ஏற்படும் நன்மைகளை அம்மாதிரியான முறையை அனுஷ்டித்து வருபவரே அறிவர். சுருங்கக் கூறின், பிரார்த்தனையின் இன்பத்தை அனுபவிப்பவர் வேறு இன்பத்தை வேண்டார்.

பூஜை அறை

எந்த ஒரு காரியத்தைச் சாதிப்பதற்கும் சூழ்நிலையும் சுற்றுப்புறமும் சரிவர அமைந்திருக்கவேண்டும் என்பது யாவரும் அறிந்ததே. உதாரணமாக, அலுவலகங்களில் ஊழியர்கள் தளர்ச்சியடையாமல் திறமையுடன் பணிபுரிவதற்காக ஏர்கண்டிஷன் செய்கிருர்கள். அதேபோல் நாள் பூராவும் கடினமாக உழைக்கும் ஒரு மனிதன் பகவந் நிஷ்டையில் நிம்மதியுடன் ஈடுபட விரும்பினுல் அதற்குப் பூஜை அறையை விடச் சிறந்த சாதனம் இருக்க முடியாது. ஆனுல், மத்தியதரக் குடும்பத்தைச் சேர்ந்த பெரும்பாலான நம் மக்கள் நகரங்களில் ஒண்டிக் குடியாக வாழும் நிலையில் பூஜைக்காக ஒரு தனி அறை ஒதுக்குதல் சாத்தியமா என்ற கேள்வி எழுதல் நியாயமே. பூஜைக்காகத் தனி அறை இல்லை என்பதற்காக மனச் சஞ்சலமடைந்து பிரார்த்தனை செய்யவேண்டும் என்ற எண்ணத்தைக் கைவிடவேண்டிய அவசியம் இல்லை. தினமும் குறித்த நேரத்தில் ஏதாவதொரு தனிப்பட்ட இடத்தில் மன நிம்மதியோடு வெகு சுத்தமாய்ப் பிரார்த்தனையில் ஈடுபட்டால் போதுமானது. தினமும் தவருமல் உருக்கத்துடன் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இஷ்ட தெய்வத்தின் சொரூபத்தைத் திடமாக மனத்தில் இருத்தி மிகவும் பக்தியுடன் பிரார்த்தனை செய்து வந்தால் அந்த இடத்திற்கே ஒரு தெய்வீகத் தன்மை வாய்ந்த மகத்துவம் ஏற்பட்டுவிடுகிறது. உலகில் கிடைக்கும் சாதனம் எவற்றிலும் பல கோடி மடங்கு உயர்வான கடவுளின் அருளை விரைவில் பெறத் தீவிர முயற்சியுடனும் தளரா உறுதியுடனும் பிரார்த்தனையில் ஈடுபடவேண்டும். பிரார்த்தனையின் மூலம் கடவுளின் சித்தத்தைத் தொட்டவர் கெட்டுப் போவதில்லை.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ப்ரார்த்தனை செய்தபின்பே தினசரி அலுவல்கள் ஒவ்வொன்றையும் செய்தல்

கோரிய பலன் கிட்டக்கூடாத எந்த ஒரு செயலிலும் ஈடுபட நாம் விரும்புவதில்லை. ஆனால், அடிக்கடி நம் செயல்களில் ப வெற்றி பெறாமல் வீணாவது வாஸ்தவமே. எந்த ஒரு காரிய தையும் ஆரம்பிக்கும் முன்பும் கடவுளை உருக்கமாகப் பிரார் தித்துவிட்டுப் பிறகு செயல்பட ஆரம்பித்தால் தோல்விகளையு ஏமாற்றங்களையும் தவிர்க்கலாம்.

நாம் சாதாரணமாகத் தினமும் செய்வது என்னென் என்பதையும், அவைகளுக்குப் பொருத்தமான பிரார்த்தனைக எவை என்பதையும் கவனிப்போம்.

1. துயிலெழுதல்

(அதிகாலையில் தூக்கம் கலைந்து விழித்தவுடன் கடவு நினைத்து ஒரு விநாடி பிரார்த்தித்தால் அன்றைப் பொழுது நல் படியாகக் கழியும். "உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோ களும் மெள்ள எழுந்து 'ஹரி' என்ற பேரரவம், உள்ளம் புகுந் குளிர்ந்து" என்பது திருப்பாவை.)

ஹரி: ஹரி: ஹரி:

(மூன்று தரம் உச்சரிக்கவேண்டும்.)

2. பல் துலக்குதல்

ஆயுர் பலம் யசோ வர்ச்ச: ப்ரஜாம் பசு வஸூநி ச।
ப்ரஹ்ம ப்ரஜ்ஞாம் ச மேதாம் ச த்வம் நோ தேஹி வநஸ்பதே॥

3. நீராடல்

ஸமஸ்த ஜகதாதார சங்கசக்ர கதாதர।
தேவ தேஹி மமாநுஜ்ஞாம் யுஷ்மத் தீர்த்த நிஷேவணே॥

4. ஸ்நானம் முடிந்தவுடன்

(தினசரி பூஜைக்குமுன்)

அஸ்மத் குருப்யோ நம:

5. போஜனத்துக்கு உட்காருதல்

அச்யுத! அநந்த! கோவிந்த!

6. ஆபீஸுக்குப் புறப்படுதல்

வனமாலீ கதீ சார்ங்கீ சங்கீ சக்ரீ ச நந்தகீ।
ஸ்ரீமாந் நாராயணோ விஷ்ணு: வாஸுதேவோ பிரக்ஷது॥

7. ஆபீஸை அடைந்து வேலையை ஆரம்பிக்குமுன்

யாம் மேதாம் தேவகணா: பிதரஸ்சோபாஸதே।
தயா மாமத்ய மேதயாக்நே மேதாவிநம் குரு ஸ்வாஹா॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

8. மாலையில் ஆபீஸிலிருந்து வீடு திரும்புதல்
(இப்போதும் ஒரு ச்லோகம்)

ா க்ருபா முநி ஸந்த்ராணே யா க்ருபா கபி ரக்ஷணே।
ா விபீஷண ரக்ஷாயாம் ஸா ராம மயி தீயதாம் ॥

9. மாலையில் வீட்டில்
(வழக்கமான பிரார்த்தனைக்குப் பிறகு)

வ தாஸோஹம் தவ தாஸோஹம்
தவ தாஸோஹம் தாசரதே ।

10. இரவு போஜனத்துக்குமுன்

ரத்தாம் ப்ராதர் ஹவாமஹே ச்ரத்தாம் மத்யந்திநம் பரி ।
ரத்தாம் ஸூர்யஸ்ய நிம்ருசி ச்ரத்தே ச்ரத்தாபயேஹ ந: ॥

11. படுக்கைக்குச் செல்லுமுன்
(நிம்மதியாகத் தூங்குவதற்காக)

ர்மஸ்கந்தம் ஹநூமந்தம் வைநதேயம் வ்ருகோதரம் ।
யநே ய: ஸ்மரேந் நித்யம் துஸ்ஸ்வப்நம் தஸ்ய நச்யதி ॥

12. ஏதாவதொரு முக்கியமான வேலையை ஆரம்பிக்கும் முன்னர் விசேஷ ப்ரார்த்தனை

அசேஷ விக்ந சமந மநீகேச்வர மாச்ரயே ।
ரீமத: கருணாம்போதௌ சிக்ஷாஸ்ரோத இவோத்திதம் ॥

13. முக்கியமான பிரயாணத்துக்குமுன்
(யாத்ரா தானம் முதலியவை செய்து ஆசி பெற்று விசேஷப் பிரார்த்தனை செய்தல்)

அக்ரத: ப்ருஷ்டதஶ்சைவ பார்ச்வதஹச மஶாபலௌ ।
ஆகர்ண பூர்ண தந்வாநௌ ரக்ஷேதாம் ராமலக்ஷ்மணௌ ॥

14. மருந்துண்ண ஆரம்பிக்குமுன்

அபாமார்ஜது கோவிந்தோ நரோ நாராயணஸ் ததா ।
ஸ்தாஸ்து ஸர்வ துக்காநாம் ப்ரசமோ வசநாத்தரே: ॥

15. எதிர்பாராமல் நேரவிருக்கும் ஆபத்திலிருந்து தப்புவதற்கு

நம: கோதண்ட ஹஸ்தாய ஸந்தீக்ருத சராய ச ।
கண்டிதாகில தைத்யாய ராமாயாபந் நிவாரிணே ॥

16. அவகாசம் கிடைத்தபோதெல்லாம் உச்சரிக்க வேண்டிய ப்ரார்த்தனை

ஸநா ச ஸோம ஜேஷி ச பவமாந மஹிச்ரவ: ।
அதாநோ வஸ்ய ஸஸ்க்ருதி ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

17. எல்லாம் அடங்கிய ப்ரார்த்தனை

ஔஷதே சிந்தயேத் விஷ்ணும் போஜநே ச ஜநார்தநம் ।
சயநே பத்மநாபம் ச விவாஹே ச ப்ரஜாபதிம் ॥
யுத்தே சக்ரதரம் தேவம் ப்ரவாஸே ச த்ரிவிக்ரமம் ।
நாராயணம் தநுத்யாகே ஸ்ரீதரம் ப்ரியஸங்கமே ॥
துஸ்ஸ்வப்நே ஸ்மர கோவிந்தம் ஸங்கடே மதுஸூதநம் ।
காநநே நாரஸிம்ஹம் ச பாவகே ஜலசாயிநம் ॥
ஜலமத்யே வராஹம் ச பர்வதே ரகுநந்தநம் ।
கமநே வாமனம் சைவ ஸர்வகார்யேஷு மாதவம் ॥

18 மாணவர்கள் பாடங்களைப் படிக்க ஆரம்பிப்பதற்குமுன்

ஜ்ஞாநாநந்தமயம் தேவம் நிர்மல ஸ்படிகாக்ருதிம் ।
ஆதாரம் ஸர்வ வித்யாநாம் ஹயக்ரீவமுபாஸ்மஹே ॥

19. பள்ளியில் ஒவ்வொரு பாடவகுப்பும் ஆரம்பமாவதற்குமுன்

ஸரஸ்வதி நமஸ்துப்யம் வரதே காமரூபிணி ।
வித்யாரம்பம் கரிஷ்யாமி ஸித்திர் பவது மே ஸதா ॥

20. பரீக்ஷை எழுத ஆரம்பிப்பதற்குமுன்

புத்திர் பலம் யசோ தைர்யம் நிர்பயத்வ மரோகதா ।
அஜாட்யம் வாக்படுத்வம் ச ஹநூமத் ஸ்மரணாத் பவேத் ॥

21. வாய்மொழியான பரீக்ஷை ஆரம்பமாவதற்குமுன்னரும் விவாதத்தில் பங்கெடுத்துக் கொள்வதற்கு முன்னரும்

"ஹயக்ரீவ! ஹயக்ரீவ!! ஹயக்ரீவ!!!"

22. தீர்வு காணமுடியாத பிரச்னை எதிர்நோக்கி இருக்கும்போது

கார்ப்பண்ய தோஷோபஹத ஸ்வபாவ :
ப்ருச்சாமி த்வாம் தர்ம ஸம்மூட சேதா: ।
யச்ச்ரேய: ஸ்யாந் நிஸ்சிதம் ப்ரூஹி தந் மே
சிஷ்யஸ் தேஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம் ॥

23. பகவானைச் சரணடைந்து செய்துகொள்ளவேண்டிய ப்ரார்த்தனை

த்வய்யாராதந காமோயம் வ்ரதம் சரிதுமிச்சதி !
ஸங்கல்ப ஸித்த்யை பகவந் பூரயாஸ்ய மநோரதாந் ॥

24. பயம் நீங்கவும் எந்த ஸமயத்திலும் எந்தவிதமான பிரச்னைகளை துணிவுடன் சமாளிக்கவும்

அபயம் மித்ராத் அபயம் அமித்ராத்
அபயம் ஜ்ஞாதாத் அபயம் புரௌ ய:|

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அபயம் நக்தம் அபயம் திவா ந:
ஸர்வா ஆதா மம மித்ரம் பவந்து ॥

25. புகழ் கிட்டுவதற்கு

யசோ மா த்யாவா ப்ருதிவி யசோ மேந்த்ர ப்ருஹஸ்பதி ।
யசோபகஸ்ய விந்தது யசோ மா ப்ரதிமுச்யதாம் ॥

ஒரு வேண்டுகோள்

மேலே கொடுத்துள்ள ப்ரார்த்தனைகள் மிகவும் சுருக்க மானவை. நாள் முழுவதும் ஓய்வு ஒழிவில்லாமல் வேலை செய் பவர்கள்கூட மனம் வைத்தால் சில நாட்களில் மனப்பாடம் செய்யக்கூடியவை. எனவே, ஆஸ்திக மஹாஜனங்களை நாம் வேண்டிக்கொள்வது என்னவென்றால், தினமும் தாங்கள் செய்ய வேண்டிய பல வேலைகளுக்கிடையில் மேலே கொடுத்துள்ள ப்ரார்த்தனைகளை அவ்வப்போது உச்சரிப்பதற்கு எப்படியாவது அவகாசம் கண்டுபிடித்து பகவானின் பரம கருணையில் நம்பிக்கை வைத்துப் பக்தியுடன் உச்சரித்து வந்தால் தோல்வியும் தீய சக்திகளும் தங்களை அண்டாமல், தங்கள் முயற்சிகளில் எல்லாம் வெற்றியடைந்து, தங்களுக்கும் தங்களைச் சேர்ந்தவர்களுக்கும் சகலவித நன்மைகளும் ஸித்திக்கப் பெறுவது உறுதி.

ப்ரத்யேக ப்ரார்த்தனை

மேலே பொதுவாகத் தினமும் பல ஸமயங்களில் செய்ய வேண்டிய ப்ரார்த்தனைகளைப் பார்த்தோம். தெய்வபக்தியுடன் தினமும் செய்யத்தக்க ப்ரார்த்தனைகள் யாவும் செய்து வருபவ ரும் துன்பச் சுழலில் அகப்பட்டுத் தவிப்பதைச் சில ஸமயங் களில் பார்க்கிறோம். அதைப் பூர்வ ஜன்ம பாவம் என்றே சொல்லவேண்டும்; ஏனெனில், ஒருவன் ஆரோக்கிய வழியினின்று மாறுபடாமல் நடந்துவந்தாலும் ஒரோவொரு சமயத்தில் அவனையும் நோய் வருத்துகிறது. அத்தகைய நோய் வந்தால் எப்போதும் கடைப்பிடிக்கும் ஆரோக்கிய நெறி தவறாமல் மேலும் வைத்தியரிடமும் சென்று அவர் தரும் மருந்துகளையும் பத்தியங்களையும் பொறுமையுடன் தாங்கி மீண்டும் நலம் பெறுகிறோம். அதுபோலவே தசாபுக்தி விசேஷத்தாலும் பூர்வ ஜன்ம பாபங்களாலும் கஷ்டங்கள் வருமாயின் அவற்றை போக்கிக்கொள்ள ப்ரத்யேக ப்ரார்த்தனைகள் செய்யவேண்டும். அத்தகைய பிரார்த்தனைகளில்,

1. ஸ்ரீமத் ராமாயண பாராயணம் மிகச் சிறப்பு வாய்ந்தது.

2. அதுபோலவே, திராவிட வேதங்களாகிய தேவார, திருவாசக, திவ்ய ப்ரபந்தங்களும் பெருஞ்சிறப்பு வாய்ந்தவை.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

1. ஸ்ரீமத் ராமாயண பாராயணமும் காரிய ஸித்தியும்

ஸ்ரீமத் ராமாயணம், மஹாபாரதம், பாகவதம் ஆகி மூன்றும் நம் நாட்டுத் தெய்விக நிதிகளாகும். நம்மிட கொண்டுள்ள அளவற்ற கருணையால் முனிவர்கள் இம்மூன் அழியாச் செல்வங்களையும் நமக்கு அருளியுள்ளார்கள். அவற்று ராமாயணம் தலைசிறந்தது.

மக்கள் உய்யும்பொருட்டு நம் முன்னோர் நல்ல வழிக வகுத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஸன்மார்க்கங்களை ஸ்ரீம ராமாயணம் அழகாக எடுத்துக் காட்டுகிறது. ஸ்ரீராம, லட்சும பரத, சத்ருக்னர் என்ற நான்கு அவதார மூர்த்திகளும் மனித கடைப்பிடிக்க வேண்டிய பலவித தர்மங்களை நல்ல முறைய நடத்திக் காட்டியிருக்கிறார்கள். ஸ்த்ரீ தர்மத்தைச் சிறப்பா விளக்கவே, நம் லோகமாதா "ஸீதா தேவியாக" அவதரித்தா முக்கியமாக, "சரணாகதி" தத்துவத்தை விளக்கவே திருமா ஸ்ரீ ராமசந்த்ர மூர்த்தியாக அவதரித்தார். "சரணாகதிக்கு ஜா மத வேறுபாடு இல்லை; ஆண் பெண் வேறுபாடு இல் உயர்திணை, அஃறிணைப் பாகுபாடு இல்லை" என்னும் உண்மை அவர் காண்பித்திருக்கிறார்.*

நம் வாழ்க்கையில் துன்பம் வரும்பொழுது ராம கதையை பாராயணம் செய்தால், துன்பங்கள் விலகி மனச்சாந்தி ஏற்ப

---

*The conception of God in the TIRUVAIMOLI very sublime. The very first line of the TIRUVAIMO describes the Lord as One whose excellence is supreme. this Being of Supreme Excellence is not a far-off, high mighty Being, indifferent to the weal and woe of sou Hidden in everything It pervades everything, even as t invisible soul pervades and actuates the body. This bei is so full of love for souls that in the incarnations, e. Ramavatara, it takes on the human form and suffers every w that human flesh is heir to.

"Are those born in the world, anything in themselv if they do not become devotees of the Lord, after havi heard how He was born in the world and for the sake human beings endured untold suffering; Who, seeking the evil ones who afflicted the earth, destroyed them thus protected and redeemed the world ?"

— Dr. V. A. Devasenapathi (in "The Bhavan's Journal

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

என்பது நம் முன்னோர்கள் கண்ட உண்மை. அந்தக் கருத்துடன் தான் வால்மீகி முனிவர் ராமாயண காவியத்தைப் பாடினார். ராம நாமத்துக்கு அளவற்ற பெருமை உண்டு. சர்வமங்களத்தையும் அளிக்கக்கூடிய ஸ்ரீமத் ராமாயணத்தை எல்லோரும் பாராயணம் செய்து பெரும் பயன் அடைதல் வேண்டும்.

"நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே !
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே !
சென்மமும் மரணமும் இன்றித் தீருமே !
இம்மையே 'ராம'வென் றிரண்டெ ழுத்தினால்"

என்ற கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பரின் வாக்கு, கல்லையும் கனிவிக்கும்; இரும்பையும் இளக வைக்கும்.

நாம் கஷ்டத்தில் இருக்கும்பொழுது கஷ்டங்களைக் குறைத்துக் கொள்ளவும், கவலையுற்றிருக்கும்போது மனச்சாந்தி பெறவும், சுகத்தில் இருக்கும்பொழுது மேன்மேலும் சுகத்தை வளர்த்துக் கொள்ளவும் எளிதாக அநுசரித்து வரக்கூடிய பல பொது வழிகளை நம் பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஜாதகத்தில் ஒவ்வொரு தசைக்கும், தசையில் உள்ள புக்திகளுக்கும் ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்திலிருந்து குறிப்பிட்ட சில ஸர்க்கங்களைத் தினந்தோறும் பக்தியுடன் பாராயணம் செய்துவந்தால் நவக்ரஹ சாந்தியுண்டாகின்றதென்றும் சொல்லியிருக்கிறார்கள்.

மற்றும், ராமாயணத்தின் ஒவ்வொரு ஸர்க்கத்தையும் பாராயணம் செய்வதற்கு பிரத்தியேகமான ஒரு பலன உண்டு. இதை ஸர்வலோக ரக்ஷகனான ஸ்ரீ பரமேசுவரன் லோகமாதாவான பார்வதிதேவியிடம், மனிதனுக்கு எந்தெந்த ஸமயங்களில் எந்தெந்தக் காரியங்கள் ஸித்திப்பதற்கு எந்தெந்த ராமாயண ஸர்க்கங்களைப் பாராயணம் செய்ய வேண்டும் என்பதைக் கூறியிருக்கிறார். இதனைப் பதினெண் புராணங்களில் ஒன்றான வாயு புராணத்தைச் சேர்ந்த 'உமா ஸம்ஹிதை' என்ற பகுதி கூறுகிறது.

2. திராவிட வேதங்களும் காரிய ஸித்தியும்

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே"

—திருஞான. தேவாரம்.

என்ற பாசுரத்தை எழுதி வையையாற்றில் இட்டார் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார். அவ்வேடு நீரோட்டத்தை எதிர்த்துச் சென்று திருவேடகம் என்ற இடத்தில் கரையேறிற்று.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Harinaran Collection, Sholinganallur, Chennai

"மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே"

என்ற பாசுரத்தைக் கூறிக் கூன்பாண்டியன்தன் கொடுநோயை தீர்த்தார்.

அங்ஙனமே ஆழ்வார்களும் அனந்தரம் ஆண்டவன் அ லீலா விபூதியில் ஈடுபட்டுத் தம்மை மறந்து அருள்வாக்குகள் பொழிந்துள்ளனர். இன்ன பொருள் வேண்டுமென்பதை நமக் கேட்கத் தெரியாது; எப்படிக் கேட்பதென்பதும் தெரியா அப்பெரியார்கள் நமக்கு என்னென்ன பொருட்கள் வேண் மென்பதை அறிந்து அவைகளைக் கேட்கவேண்டிய முறையை நமக்குக் காட்டியுள்ளார்கள். நாமே பகவானைத் தோத்திர செய்து கேட்பதைவிட,

"முன்னோர் மொழிபொருளே யன்றி யவர்மொழியும்
பொன்னேபோற் போற்றி"

ஆசாரியர்களுடைய பாசுரங்களை உருக்கமாகத் தின பாராயணம் செய்து வந்தால் எத்தகைய இடுக்கணும் கதிரவ முன் பனியாய் நீங்கிப் பேரின்பம் பெறலாம்.

ஆகவே, இந்நூலில் திராவிட வேதங்களினின்றும் தேர்ந்தெடுக் பட்ட தெய்வீகத் தன்மை மிகுந்தனவும் கல்வி, செல்வம் ஆகியவற் அளிக்கக்கூடியனவும் ஆபத்து, துன்பம் முதலியவைகளைப் போக் கூடியனவும் ஆகிய சிறந்த பாசுரங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

எனவே, புராணப் பிரசித்தமான உமாஸம்ஹிதை ஆதாரமாகக் கொண்டும், ஆன்றறிந்து அடங்கிய பொய்யி நாவிற் புலமை மிக்க சான்றோர்களின் அனுமதி பெற்றும் "ஸ காரிய ஸித்தியும் ஸ்ரீமத் ராமாயண பாராயணமும் திராவி வேதங்களும்" என்ற இந்தப் புத்தகத்தைப் பிரசுரித்துள்ளோம்.

இந்தப் புத்தகம் எதற்காக ?

*"ஆண்டவனின் படைப்புறத்திறம் ஒரு விசித்திரம்; அவ அழிவு வேலையும் ஒரு விசித்திரந்தான்.

"ஒரு புறத்தில் தூய்மையைப் பரப்பிவைக்கிறான்; எதி புறத்தில் கயமையையும் தூண்டிவைக்கிறான். அழகை அற்புதத்தையும் படைக்கிறான் ஒரு புறத்தில்; அவலட்சணத்தை யும் மறந்துவிடாமல் கூடவே குவித்துவைக்கிறான் — மறுபுறத்

* "கலகி", 18-9-1960.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri Uttamur Collection, Sholinganallur, Chennai

"அத்துடனா? அவனது பராமரிப்பில்தான் எத்தகைய ஜாலங்கள்? தன் ஜாலங்களை எங்கேயோ இருந்தபடி கண்டு சிரிக்கிறான். அவனது சிரிப்பொலியின் பெயர் விதி!"

இந்த விதியினால் ஏற்படும் தீய விளைவுகளைப் பக்தியால் சமாளிக்கலாம்; விதியினால் விளையும் இன்பங்களைப் பக்தியால் பெருக்கலாம்.

பக்தியைப் பேரளவில் பரப்பவே, முன் காலத்தில் நம் தேசத்தை ஆண்ட அரசர்கள் தெய்வ நம்பிக்கை மிகுந்து தெய்வ வழிபாட்டில் அதிக அக்கறை காட்டி வந்தனர்.

கோயில்களில் பூஜை செய்பவர் பகவானுக்குப் பாமாலையும் பூமாலையும் சூட்டிப் பூஜை செய்து கடைசியில் "தேசமெல்லாம் சுகமாக இருக்கவேண்டும்" (ஸர்வே ஜநாஸ் ஸுகிநோபவந்து) என்று பிரார்த்தனை செய்வது வழக்கம். அதனால் நாட்டுக்காவது, தனி மனிதனுக்காவது எவ்விதக் கெடுதியும் நேராமலிருந்தது; மாதம் மும்மாரி பொழிந்தது; நாடு செழித்தது. மக்களும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர்.

ஆனால், இன்று நம் நாட்டின் நிலை என்ன? நாம் எல்லோரும் எதிர்பார்த்த சுதந்திரம் கிடைத்தது. ஆயினும் சுதந்திரத்தால் நாம் எதிர்பார்த்த சுகம் கிடைக்கவில்லை. அதற்குப் பதிலாக நம்மைச் சுற்றி எங்கே பார்த்தாலும் கஷ்டம்! கஷ்டம்! கஷ்டம்! வாழ்க்கைக்கு மிகவும் அவசியமான பொருள்களின் விலைவாசிகள் விஷம்போல் ஏறி வருகின்றன. கள்ள மார்க்கெட் வியாபாரத்தாலும், கெட்ட வழக்கங்களாலும் மனிதன் மனிதனையே விழுங்க முயலுகிறான். அருகதையற்றவன், தன் அதிகாரியிடம் கோள் சொல்லி, அருகதையும் அநுபவமும் நிறைந்த, முன்னேற வேண்டியவனைப் புறக்கணிக்கச் செய்து, தன் அதிகாரத்தில் உயர்வைப் பெறுகிறான். இந்த அநீதிகள் எல்லாம் ஒழியவேண்டுமானால், கடவுளைக் குறித்துத் தினந்தோறும் கூட்டுப் பிரார்த்தனை (Mass-Prayers) நடத்தவேண்டும். *கூட்டுப் பிரார்த்தனையின் மகிமையாலேயே நாம் சுதந்திரத்தை அடையமுடியும் என்பதை அண்ணல் காந்திமகான் தன் அன்றாட வாழ்க்கையில் செய்து

*"Of the twelve Alvars, Nammalvar is considered to be the greatest. Taking the Alvars as a 'whole', Nammalvar is considered to be their soul. The very term 'Nammalvar' (which means our Alvar) shows the esteem in which he was and is held by the Vaishnavites. But we can go further and say that not only Vaishnavites but also all those whose hearts are thrilled by the utterances of the mystics, can claim Nammalvar as their own.

[Contd, on the next page

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

காட்டினர். ஆகையால், ஒவ்வொருவரும் தங்கள் வீட்டிம
ராமாயணத்தையும், நாலாயிர திவ்யப்ரபந்தம், தேவாரம்
திருவாசகம் முதலியவைகளையும் தினந்தோறும் பாராயண
செய்து வந்தால், அதுவே ஒரு வகையில் கூட்டுப் பிரார்த்தனைக்
ஒப்பாகி, நாட்டுக்கு நன்மை உண்டாக்கும் என்பது எங்க
டைய திடமான நம்பிக்கை. முக்கியமாக மேற்படி கிரந்தங்க
யும் பாசுரங்களையும் முழுவதும் பாராயணம் செய்வதற்கு
சௌகரியமில்லாதவர்கள் சில ஸர்க்கங்களையாவது அல்லது சி
பாசுரங்களையாவது நாள்தோறும் பாராயணம் செய்வார்களானு
அதன்மூலம் அவர்களுடைய கஷ்டங்களெல்லாம் நீங்கி சுக
உண்டாகும்.

நம் முன்னோர்கள் தம் நலத்துக்காக மட்டும் அல்லாம
உலகமெல்லாம் உய்யவேண்டும் என்னும் பரந்த நோக்கத்து
னேயே தெய்வ வழிபாட்டைச் செய்து வந்தார்கள். அவ்வித
அனைவரும் நாள்தோறும் தாம் செய்யும் பாராயணத்தா
'எல்லாரும் இன்புற்றிருக்கவேண்டும்' என்னும் நல்ல மனப்பா
மையுடன் பாராயணம் செய்வார்களாக !

அனைவரும் முக்கியமாக மனத்தில் இருத்திக்கொள்
வேண்டிய மற்றொரு விஷயமும் உண்டு. நாம் தெய்வத்
வழிபாடு செய்வது இம்மைப் பயன் ஒன்றுக்காக மாத்திர
இல்லை. இம்மைப் பயன் அழிவுள்ளது ; சுக துக்கங்களுக்குக் கார

Contd. from the previous page]

"Nammalvar worships the Supreme as Vishnu. But
does not frown upon those who worship the Supreme under oth
names. He is sure that all true worship must be of the Suprem
Every one, according to his capacity, worships the Supreme
he conceives It and attains It. Hence there is no deficiency
the object of worship. In other words, his message is : 'Let
worship be sincere ; it will reach the Supreme.'

"It is usual to deplore Kaliyuga as a period wholly given
to wickedness. Nammalvar's remedy is sincere and joint worsh
He says, 'If you sincerely and jointly worship, there will be
Kaliyuga.' This is sound practical advice. If we all worship
Supreme, the One with infinite auspicious qualities, how
there be wickedness? If light is let in, how can there be darkne
There is no use deploring darkness when we are enveloped by
Let us let in light. Darkness will automatically disappear.
so, worship of the Supreme is the antidote to wickedness."

— **Dr. V. A. Devasenapathi** (in "The Bhavan's Journa

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Hanumantham Collection, Sholinganallur, Chennai

மான மறுபிறப்பை அளிக்கவல்லது. ஆகையால், அழிவற்ற மறுமைப் பயனை, அதாவது பிறப்பில்லாத முக்தி நிலையை அடைவதே நம் வழிபாட்டின் முக்கிய நோக்கமாக இருத்தல் வேண்டும். இதையே நம் முன்னோர்கள் வாழையடி வாழையாகச் சொல்லி வந்திருக்கிறார்கள்.

அப்படி ஒவ்வொருவரும் இம்மை மறுமைப் பயன்களையும் உலக நன்மையையும் விரும்பி, இந்தப் புத்தகத்திலுள்ள ராமாயண ஸர்க்கங்களையும் திராவிட வேதப் பாசுரங்களையும், பாராயணம் செய்து வருவார்களானால் நம் நாட்டில் இன்று இருக்கும் அவல நிலை ஒழிந்து, ராமராஜ்ய சௌக்கியங்கள் உண்டாகும் என்பது திண்ணம்.

ஸம்ஸ்கிருதத்தில் ஓரளவு அறிவு பெற்றவர்களே ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தைத் தொடர்ந்து தினமும் பாராயணம் செய்து வர முடியும். ஸ்ரீமத் ராமாயணத்தை முழுவதும் பாராயணம் செய்யமுடியாதவர் சுந்தர காண்டத்தையேனும் பாராயணம் செய்வது சிறந்தது. அதுவும் முடியாதவர்கள் விசேஷ பலனைக் கொடுக்கக்கூடிய தேர்ந்தெடுக்கப்பட்ட ஸர்க்கங்களில் தமக்குத் தேவையானதொன்றை மட்டும் முறையாகப் பாராயணம் செய்து வரலாம்.

அதுபோலவே, ஆழ்வார்கள், நாயன்மார் முதலியவர்கள் அருளிய பரசுரங்களையும் முழுவதும் படிப்பது விசேஷமானது. ஆனாலும் சில பகுதிகளைப் படிப்பதால் விசேஷ நன்மைகள் உண்டாகும். ஸகல காரியங்களிலும் ஸித்தி உண்டாகும்.

ஸம்ஸ்கிருதம் தெரியாதவர்கள் ஸ்ரீமத் ராமாயணத்தை எந்த மொழியிலும் படித்துப் பலன் பெறலாம். ஏனெனில், நமக்கு ஸம்ஸ்கிருதம் தெரியாமல் இருக்கலாம்; ஆனால் ஆண்டவனுக்கு எல்லா மொழியும் தெரியும்; புரியும். ஆகவே

"வடகலை தென்கலை வடுகு கன்னடம்
இடமுள பாடையா தொன்றி னாயினும்
திடமுள ரகுகுலத் திராமன் தன்கதை
அடைவுடன் கேட்பவர் அமரர் ஆவரே."

என்று கம்பர் கூறியபடி, எம்மொழியிலும் ராமாயணத்தைப் படித்துப் பலன் பெறலாம். அதனாலேயே ஸம்ஸ்கிருதம் தெரியாத தமிழ் மக்களனைவரும் ராமாயண பாராயணம் செய்து பலனை அடையவேண்டுமென்னும் நோக்கத்துடன் ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்திற்குக் கீர்த்தனாசார்ய ஸ்ரீ C. R. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், B.A. அவர்கள் செய்த உயர்ந்த மொழிபெயர்ப்பு இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதைப் பாராயணம் செய்தாலே மூலக் கிரந்தத்தைப் பாராயணம் செய்த பலன் உண்டாகும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இனி, தங்கள் குறை என்ன? அதை நிவர்த்திக்க ராமாயணத்தின் எந்த ஸர்க்கங்களைப் பாராயணம் செய்ய வேண்டும்? அதற்கு நிவேதனப் பொருள்களும் மற்ற நியமங்களும் என்ன? இந்த விவரங்களைப் பக்கங்கள் (xxxi) (xxxii)-ல் அட்டவணையிட்டுக் காட்டியுள்ளோம்.

இவ்வாறே பகவானுடைய அனந்த கல்யாண குணங்களில் ஈடுபட்டு ஆழ்வார்களும் நாயன்மார்களும் மற்ற அடியார்களும் மனம் நெகிழ்ந்து அருளிய பல இன்னிசைப் பாசுரங்களையும் அவ்வப்போது நெஞ்சுருகிப் பாராயணம் செய்து வருதல் ஸகல காரியங்களையும் ஸித்திபெறச் செய்யும். ஆகவே, அத்தகைய அருட்பாடல்களையும் வகைப்படுத்தி இந்நூலில் கொடுத்துள்ளோம். அவைகளின்படி பாராயணம் செய்து, பக்தர்கள் "ஸகல காரியங்களிலும் ஸித்தி" பெறவேண்டுமென்று ஸர்வேசுவரனை துதிக்கின்றோம்.

மேலும் மக்களை ஆட்கொள்ளவே எம்பெருமான் இந்நிவுலகில் ஆங்காங்குக் கோயில் கொண்டருளியிருக்கிறார். இதை மணிவாசகப் பெருமான் "வான்பழித்து இம்மண் புகுந்து மனிதரை ஆட்கொண்ட வள்ளல்" என்று போற்றுகிறார். அத்தகைய கோயில்கள் பலவற்றுக்கும் சென்று அவன் அன்பிலே திளைத்து பக்தியிலே ஊறி அவனை நினைந்து நினைந்து உருகி உருகிப் பதறிக் கதறிப் பாசுரம் பல செய்து மனித குலத்துக்கே வழி காட்டிகளாக இருக்கிறார்கள் ஆழ்வார்களும் நாயன்மார்களும். தீயன கடிந்து நல்லன இவையென நாட்டிப் பேரின்பம் பெற்றுப் பெருவாழ்வு வாழும் வகையிஃதெனப் பன்னிப் பன்னிப் பலவகையாலும் உணர்த்தியிருக்கிறார்கள். ஆழ்வாராதிகளாலும் நாயன்மார் முதலியவர்களாலும் பாடப்பெற்ற புகழ்வாய்ந்த பெருங்கோயில்கள் இமசேது பரியந்தம் ஏராளமாக இருக்கின்றன. எல்லாக் கோயில்களுக்கும் எல்லாரும் சென்று எம்பிரானை தரிசனம் செய்வது எளிதல்ல. ஆகையால் இயன்றவரை கோயில்களுக்குச் சென்று கண்குளிரக் கண்டுகளித்துத் துதித்து வழிபடுதலும் பகவானுடைய அனுக்ரஹத்தைப் பெற்று ஸகல காரியங்களிலும் ஸித்தி பெறுவதற்கு மற்றொரு வழியாகும். எனவே, பல க்ஷேத்ரங்களில் கோயில்கொண்டுள்ள ஸ்ரீ ராமபிரானின் திருவுருவப் படங்களையும் இப்புத்தகத்தில் சேர்த்துள்ளோம்.

ஸர்வே ஜநாஸ் ஸுகிநோ பவந்து ॥

ஓம் சாந்தி : சாந்தி : சாந்தி :

— கீழாத்தூர் ஸ்ரீநிவாஸாச்சாரியர், P. O.

ந்யாயசிரோமணி, ஹிந்தீ விசாரத

(பரீக்ஷாமந்த்ரி, ஸம்ஸ்க்ருத பாஷா ப்ரசாரிணீ ஸபா)

பதிப்பாசிரிய

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ :

ஸகல காரிய ஸித்தி பெற சுலபமான வழிகள்

1. அவரவர் ஸம்ப்ரதாயப்படி நெற்றிக்குறி இட்டுக்கொள்ளு தல் ; சுருக்கமாகவாவது நித்யகர்மாநுஷ்டானங்களைச் செய்தல் ;
2. ஸ்ரீ ராமநாம ஜபம் ;
3. பெரியோர்களிடம் பணிவும் மதிப்பும் கொண்டிருத்தல் ;
4. இவ்வனைத்துக்கும் மேலாக, மனத்தாலும் வாக்கினாலும் செய்கையினாலும் பிறர்க்குக் கெடுதல் சிறிதும் செய்யா திருத்தல் ;
5. எவரிடமும் த்வேஷ மனப்பான்மை காட்டாதிருத்தல்.

ஸ்ரீ :

ருக்வேத மந்த்ரங்களும் ஸகல காரிய ஸித்தியும்

ஸ்ரீ சௌநகர் எனும் முனிவர் ருக்வேதத்தில் உள்ள மந்த் ரங்களைக் கொண்டு இஷ்டப்ராப்தி அநிஷ்ட நிவ்ருத்திகளைப் பெறும் முறைமை விளக்கி ருக்விதாநம் எனும் நூலை இயற்றி யுள்ளார். திருவானைக்காவல் வாஸியும் ருக்வேதத்தில் தலை சிறந்த பண்டிதராக அகில பாரதத்திலும் போற்றப்படுபவரு மான தசக்ரந்தி K. S. வெங்கடராம சாஸ்த்ரிகள் இதனை ருங்மந்த்ர பரிஹாரம் எனும் பெயருடன் வெளியிட்டிருக்கிறார்.

அன்பர்கள் ஸ்ரீமத் ராமாயணத்தைப் பாராயணம் செய்யும் பொழுது முன்போ பின்போ இந்த ருங்மந்த்ரங்களையும் தம்மால் முடிந்த ஆவ்ருத்தி ஜபம் செய்து வந்தால் அனுபானத்துடன் அருந்தப்படும் ஔஷதம் விரைவில் பலமளிப்பதுபோல் ஸ்ரீமத் ராமாயண பாராயணமும் விரைவில் பலனைத் தட்டின்றி யளிக்கும்.

இந்த உத்தேசத்துடன் அந்த மந்த்ரங்களின் ருஷிச் சந்தோ தேவதாந்யாஸத்துடன் விநியோகமும் தரப்பட்டுள்ளது. இதனை ஆஸ்திகர்கள் உபயோகித்துப் பயனடையவேண்டும் என்று பகவானைப் ப்ரார்த்திக்கிறோம்.

இதற்கு அனுமதி தந்த தசக்ரந்தி ருக்வேத கனபாடி K. S. வெங்கடராம சாஸ்த்ரிகளுக்கு நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இதில் தேவையான மந்த்ரங்களைத் தம் ஆசார்யரிடமிருந்து உபதேசம் செய்துகொள்ள வேண்டுவது அவசியம். அதனால் அக்ஷரங்களைப் பிழையற உச்சரிக்கவும் மந்த்ரங்களைச் சக்தியுள்ள தாகச் செய்யவும் ஸௌகர்யப்படும். ரொம்ப ஆசாரத்துடனும், ச்ரத்தையுடனும், நம்பிக்கையுடனும் பாராயணம் செய்தல் வேண்டும்.

லிப்கோ பதிப்பகத்தார்,
சென்னை-17.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஶ்ரீ :

ருக்வேத மந்த்ரங்களும் ஸகல கார்ய ஸித்தியும்

1. நற்பணியில் இடையூறு நீங்க

கணாநாம் இத்யாதி மந்த்ரஸ்ய க்ருத்ஸமத: ருஷி:, ஜ
சந்த:, ப்ரஹ்மணஸ்பதிர்தேவதா. நிர்விக்ந தர்மகார்ய ஸித்
யர்த்தே ஜபே விநியோக:॥

"கணாநாம் த்வா கணபதிகும் ஹவாமஹே
கவிம் கவீநாம் உபமஶ்ர வஸ்தமம் ।
ஜ்யேஷ்டராஜம் ப்ரஹ்மணாம் ப்ரஹ்மணஸ்பதே
ஆந: ஶ்ருண்வந் ஊதிபி: ஸீத ஸாதநம் ॥"

108 தடவை ஜபம்

2. செய்தொழிலில் தனலாபமுண்டாக

ஶசீவ இத்யாதி மந்த்ரஸ்ய ஆங்கிரஸ: ஸவ்ய: ருஷி:, ஜ
சந்த:, இந்த்ரோ தேவதா. தனலாப ஸித்த்யர்த்தே ஜ
விநியோக:॥

"ஶசீவ இந்த்ர புருக்ருத் த்யுமத்தம
தவேதித மபிதஶ் சேகிதே வஸு ।
அத: ஸங்க்ருப்யாபிபூத ஆபர
மாத்வாயதோ ஜரிது: காமமூநயீ: ॥"

ப்ரதி தினமும் 10 தடவை ஜபம்

3. கல்யாணமாகாதவர்களுக்குக் கல்யாணம் நடக்க

ப்ராத ரக்நி மித்யாதி மந்த்ரஸ்ய மைத்ராவருணி:
வஸிஷ்டருஷி:, ஜகதீ சந்த:, அக்நிர்தேவதா.
அபீப்ஸித (வர) (வதூ) ஸித்த்யர்த்தே ஜபே விநியோக:॥

"ப்ராதரக்நிம் ப்ராதரிந்த்ரம் ஹவாமஹே
ப்ராதர்மித்ரா வருணா ப்ராதரஶ்விநா ।
ப்ராதர்பகம் பூஷணம் ப்ரஹ்மணஸ்பதிம்
ப்ராதஸ்ஸோமம் உத ருத்ரம் ஹுவேம ॥"

லக்ஷம் தடவை ஜபித்து 100 தடவை பொரியால் ஹோம
செய்தால் பொருத்தமான கன்யா (வர) லாபம் ஏற்படும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

4. மோக்ஷபலன் ஸித்திக்க

இதம் விஷ்ணுரித்யாதி மந்த்ரஸ்ய மேதாதிதி: காண்வ: ருஷி:, அநுஷ்டுப் சந்த:, விஷ்ணுர்தேவதா .
மோக்ஷஸித்த்யர்த்தே ஜபே விநியோக: ॥

"இதம் விஷ்ணுர் விசக்ரமே
த்ரேதா நிதகே பதம் ।
ஸமூடமஸ்ய பாகும்ஸுரே ॥"

எப்பொழுதும் ஜபம் செய்யவும்

5. அபஸ்மாராதிகள் நீங்க

தீவ்ரஸ்யேத்யாதி மந்த்ரஸ்ய வைஶ்வாமித்ர: பூரணோ ருஷி:, த்ரிஷ்டுப் சந்த:, இந்த்ரோ தேவதா .
அபஸ்மார (வ்யாதி) நிவாரணார்த்தே ஜபே விநியோக: ॥

"தீவ்ரஸ்யாஸ்ய வயஸோ அஸ்ய பாஹி
ஸர்வரதா விஹரீ இஹ முஞ்ச ।
இந்த்ர மாத்வா யஜமாநாஸோ அன்யே
நிரீரமந்துப்ய மிமே ஸுதாஸ: ॥"

ப்ரதி தினம் 108 தடவை ஜபம்

6. பேய், பிசாசு, பில்லி சூன்யம் நீங்க

ராத்ரீ இத்யாதி மந்த்ரஸ்ய ஸௌபர: குசிக: ருஷி:, காயத்ரீ சந்த:, ராத்ரிர் தேவதா.
பிஶாசாதி பாதா நிவ்ருத்த்யர்த்தே ஜபே விநியோக: ।

"ராத்ரீ வ்யக்யதாயதீ, புருத்ராதேவ்யக்ஷபி: ।
விஶ்வா அதி ஶ்ரியோ தித॥"
தினமும் ராத்திரி 3 தடவை ஜபிக்கவும்

7. பைத்தியம் தெளிய

ஈளே இத்யாதி மந்த்ரஸ்ய ஆங்கிரஸ: குத்ஸருஷி:, ஜகதீ சந்த: அக்நிர்தேவதா! மௌட்ய நிவ்ருத்தி பூர்வக ஸம்யக்ஜ்ஞாந ஸித்த்யர்தே ஜபே விநியோக: ॥

"ஈளே த்யாவாப்ருதிவீ பூர்வசித்தயே
அக்நிம் தர்மம் ஸுருசம் யாமந்நிஷ்டயே ।
யாபிர்பரேகார மம்ஶாய ஜின்வதஸ்
தாபிருஷு ஊதிபி ரஶ்விநா கதம் ॥"

பில்வ மரத்தினடியில் 10,000 ஜபம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

8. தரித்திர நிலை நீங்க

ஸக்துமித்யாதி மந்த்ரஸ்ய ஆங்கிரஸ: ப்ருஹஸ்பதி: ருஷி: த்ரிஷ்டுப் சந்த:, ஜ்ஞானம் தேவதா. தாத்ர்யநிவ்ருத்த்யர்த்தே ஜபே விநியோக: ।

"ஸக்து மிவ திதஉநா புநந்தோ
யத்ர தீரா மநஸா வாச மக்ரத ।
அத்ராஸகாய: ஸக்யாநி ஜாநதே
பத்ரைஷாம் லக்ஷ்மீர் நிஹிதாதி வாசி ॥

தினம் 100 தடவை ஜபம்

9. அடுத்தடுத்து வரும் ஆபத்து நீங்க

ஸுகோஹிவோ இத்யாதி மந்த்ரஸ்ய க்ருத்ஸமத: ருஷி:, த்ரிஷ்டுப் சந்த:, ஆதித்யா: தேவதா. ஸர்வ ஆபந்நிவாரணார்த்தே ஜபே விநியோக: ॥

"ஸுகோ ஹிவோ அர்யமன் மித்ர பந்தா:
அந்ருக்ஷரோ வருண ஸாது ரஸ்தி ।
தேநாதித்யா அதிவோசதா நோ
யச்சதா நோ துஷ்பரிஹந்து ஶர்ம ॥"

தினமும் 100 தடவை ஜபம்

10. எதிர்பாராது வந்த ஆபத்து நீங்க

அயம் தேவாயேத்யாதி மந்த்ரஸ்ய காண்வோ மேதாதி ருஷி:, காயத்ரீ சந்த:, ருபவோ தேவதா.

அதர்க்கித ஶத்ருக்ருதாபத் விமோசநார்த்தே ஜபே விநியோக: ॥

"அயம் தேவாய ஜன்மநே
ஸ்தோமோ விப்ரேபி ராஸயா ।
அகாரி ரத்ந தாதம: ॥"

சிவ ஸந்நிதியில் தினமும் 13 தடவை ஜபம்

11. விட்டுப் பிரிந்தவர் வந்து சேர

ஸம்பூஷன் இத்யாதி மந்த்ரஸ்ய கௌர: கண்வோ ருஷி: காயத்ரீ சந்த:, விஷ்ணுர் தேவதா. வியுக்த பந்துஜந ஸமாகமார்த்தே ஜபே விநியோக: ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V.Hariharan Collection, Sholinganallur, Chennai

"ஸம்பூஷந் நத்வநாஸ்தி
ரவ்யம்ஹோ விமுசோநபாத் ।
ஸக்ஷ்வா தேவ ப்ரண ஸ்புர: ॥"

யதா சக்தி ஜபம்

12. துஸ்வப்ன தோஷம் நீங்க

த ஸ்வப்நஸ்ய இத்யாதி மந்த்ரஸ்ய தைர்க்கதமஸ:
ஔஶிஜ: கக்ஷீவான் ருஷி:, காயத்ரீ சந்த:, அஶ்விநௌ தேவதே।
துஸ்வப்ந நிவ்ருத்த்யர்த்தே ஜபே விநியோக: ॥

அத ஸ்வப்நஸ்ய நிர்விதே
புஞ்ஜதஶ்ச ரேவத: ।
உபாதா பஸ்ரி நஶ்யத:

1008 தடவை ஜபம் செய்யவும்

13. பகவதபசாரம் நீங்க

தத்விப்ராஸ இதி மந்த்ரஸ்ய காண்வ: மேதாதிதி: ருஷி: ...ாயத்ரீசந்த: விஷ்ணுர் தேவதா. அபசார பரிஹாரார்த்தே ...பே விநியோக: ॥

"தத் விப்ராஸோ விபந்யவோ
ஜாக்ருவாகும் ஸஸ் ஸமிந்ததே ।
விஷ்ணோர்யத் பரமம் பதம் ॥"

யதா சக்தி ஜபம்

14. ஸத்புத்ரன் உண்டாக

இமாம் த்வமிந்த்ர இத்யாதி மந்த்ரஸ்ய ஸாவித்ரீ ருஷி: ...நுஷ்டுப் சந்த: ஸாவித்ரீ தேவதா । ஜீவத்ஸுகுணஸுபுத்ர ...ாபார்த்தே ஜபே விநியோக: ॥

"இமாம் த்வமிந்த்ர மீட்வ: ஸுபுத்ராம் ஸுபகாம் க்ருணு ।
தஶாஸ்யாம் புத்ரா நாதேஹி பதி மேகாதசம் க்ருதி ॥"

தினம் 100 தடவை ஜபித்தால் அறிவும் பாக்யமும் நீண்ட ...யுளும் உள்ள பிள்ளைகளை அடைவார்கள்.

15. ஸுகப்ரஸவம் உண்டாக

ஸயோ வ்ருஷேத்யாதி மந்த்ரஸ்ய
வார்ஷாகிர: ருஷி: த்ரிஷ்டுப் சந்த: இந்த்ரோ தேவதா
(ஸுகப்ரஸவஸித்த்யர்த்தே ஜபே விநியோக:)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸயோ வ்ருஷா வ்ருஷ்ணயேபி: ஸமோகா
மஹோ திவ: ப்ருதிவ்யாஶ்ச ஸம்ராட் ।
ஸதீ ந ஸத்வா ஹவ்யோ பரேஷு
மருத்வாந் நோ பவத்விந்த்ர ஊதீ ॥

சிவாலயத்தில் யதாசக்தி ஜபம்

16. சிறைவாஸ பயம் நீங்க

த்ருவாஸு இத்யாதி மந்த்ரஸ்ய மைத்ராவருணிர் வஸிஷ்ட: ருஷி: த்ரிஷ்டுப் சந்த: வருணோ தேவதா । காராக்ருஹவாஸ நிவ்ருத்த்யர்த்தே ஜபே விநியோக: ॥

"த்ருவாஸு த்வா ஸுக்ஷிதிஷு க்ஷியந்தோ
வ்யஸ்மத் பாஶம் வருணோ முமோசத் ।
அவோ வந்வானா அதிதே ருபஸ்தாத்
யூயம் பாத ஸ்வஸ்திபி: ஸதா ந: ॥

30000 தடவை ஜபம்

17. துர்நடத்தையுள்ள பிள்ளை நல்லவனாக

யஜ்ஞோ தேவா நாமித்யாதி மந்த்ரஸ்ய ஆங்கிரஸ: கு ருஷி: ஜகதீ சந்த: விஶ்வே தேவா தேவதா । குமாரஸ்ய ஸு ப்ராப்த்யர்த்தே ஜபே விநியோக: ॥

"யஜ்ஞோ தேவாநாம் ப்ரத்யேதி ஸும்நம்
ஆதித்யாஸோ பவதா ம்ருளயந்த: ।
ஆவோர்வாசீ ஸுமதிர் வவ்ருத்யா—
தம்ஹோ ஶ்சித்யா வரிவோ வித்தராஸத் ॥"

யதா சக்தி ஜபம்

18. நினைத்த கார்யம் நிறைவேற

மந்தஸ்யேத்யாதி மந்த்ரஸ்ய க்ருத்ஸமத: ருஷி:, ஜகதீ ருது தேவதா: தேவதா। சிந்திதமநோரதாவாப்த்யர்த்தே விநியோக: ॥

"மந்தஸ்வஹோத்ராத் அநுஜோஷமந்தஸோ—
ரத்வர்யவஸ் ஸுபூர்ணவஷ்ட்யாஸிசை ।
தஸ்மா ஏதம் பரத தத்வஶோ ததிர்—
ஹோத்ராத் ஸோமம் த்ரவிணோத: பிப ருதுபி:

யதா சக்தி ஜபம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidya Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

19. ராஜாங்கக் கார்யங்களில் வெற்றி பெற

க்ருணுஷ்வேத்யாதி மந்த்ரஸ்ய கௌதமோ வாமதேவோ ருஷி:, த்ரிஷ்டுப் சந்த:, ரக்ஷோ ஹா அக்நிர் தேவதா, ராஜத்வாரே ஸர்வாநுகூல்ய ஸித்த்யர்த்தே ஜபே விநியோக: ॥

"க்ருணுஷ்வ பாஜ: ப்ரஸிதிம் ந ப்ருத்வீம்
யாஹி ராஜே வாமவாகும் இபேந।
த்ருஷ்வீமநு ப்ரஸிதிம் த்ரூணுநோ
அஸ்தாஸிவித்த்ய ரக்ஷஸஸ்தபிஷ்டை:॥"

யதா சக்தி ஜபம்

20. தம்பதிகளுள் ப்ரேமை பெருக

ஸமஞ்ஜந்து இத்யாதி மந்த்ரஸ்ய ஸாவித்ரீருஷி: அநுஷ்டுப் சந்த: ஸாவித்ரீ தேவதா। தம்பத்யோ: அவிச்சிந்நப்ரீதி அபிவ்ருத்த்யர்த்தே ஜபே விநியோக: ॥

"ஸமஞ்ஜந்து விஶ்வே தேவா:
ஸமாபோ ஹ்ருதயாநி நௌ।
ஸம் மாத ரிஶ்வா ஸம் தாதா
ஸமுதேஷ்ட்ரீ ததாது நௌ ॥"

யதா சக்தி ஜபம்

முக்கியமான த்யான சுலோகங்கள்

ஸ்ரீமத் ராமாயண பாராயணம் செய்வதற்குமுன்பு, கீழ்க்கண்ட த்யான சுலோகங்களைப் படிக்கவேண்டும்:—

ஸ்ரீ வால்மீகி

கூஜந்தம் ராம ராமேதி மதுரம் மதுராக்ஷரம்।
ஆருஹ்ய கவிதா சாகாம் வந்தே வால்மீகி கோகிலம் ॥
வால்மீகேர் முநிஸிம்ஹஸ்ய கவிதா வந சாரிண:।
ச்ருண்வன் ராமகதா நாதம் கோ ந யாதி பராம்கதிம் ॥

ஸ்ரீ ஹநுமான்

கோஷ்பதீக்ருத வாராசிம் மசகீக்ருத ராக்ஷஸம்।
ராமாயண மஹாமாலா ரத்நம் வந்தே(அ) நிலாத்மஜம் ॥

யத்ர யத்ர ரகுநாத கீர்த்தனம்
தத்ர தத்ர க்ருதமஸ்தகாஞ்ஜலிம்।
பாஷ்ப வாரி பரிபூர்ண லோசநம்
மாருதிம் நமத ராக்ஷஸாந்தகம் ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ ராமன்

வைதேஹீ ஸஹிதம் ஸுரத்ருமதலே ஹைமே மஹாமண்டபே
மத்யே புஷ்பகமாஸநே மணிமயே வீராஸநே ஸுஸ்த்திதம் ।
அக்ரே வாசயதி ப்ரபஞ்ஜந ஸுதே தத்வம் முனிப்ய: பரம்
வ்யாக்யாந்தம் பரதாதிபி: பரிவ்ருதம் ராமம் பஜே ச்யாமளம் ॥

முக்கியமான மங்கள சுலோகங்கள்

ஸ்ரீமத் ராமாயண பாராயணம் முடிந்தபிறகு, கீழ்க்கண்ட சுலோகங்களைப் படிக்கவேண்டும் :

ஸ்வஸ்தி ப்ரஜாப்ய: பரிபாலயந்தாம்
ந்யாய்யேன மார்கேணமஹீம் மஹீசா: ।
கோப்ராஹ்மணேப்ய: சுபமஸ்து நித்யம்
லோகாஸ் ஸமஸ்தாஸ் ஸுகிநோ பவந்து ॥

காலே வர்ஷது பர்ஜந்ய: ப்ருதிவீ ஸஸ்யசாலிநீ ।
தேசோயம் க்ஷோபரஹித: ப்ராஹ்மணாஸ்ஸந்து நிர்ப்பயா: ॥
மங்களம் கோஸலேந்த்ராய மஹநீய குணாப்தயே ।
சக்ரவர்த்தி தநூஜாய ஸார்வபௌமாய மங்களம் ॥
வேத வேதாந்த வேத்யாய மேக ச்யாமள மூர்த்தயே ।
பும்ஸாம் மோஹந ரூபாய புண்ய ச்லோகாய மங்களம் ॥
விச்வாமித்ராந்தரங்காய மிதிலா நகரீ பதே: ।
பாக்யாநாம் பரிபாகாய பவ்யரூபாய மங்களம் ॥
பித்ரு பக்தாய ஸததம் ப்ராத்ருபிஸ்ஸஹ ஸீதயா ।
நந்திதாகில லோகாய ராமபத்ராய மங்களம் ॥
த்யக்த ஸாகேத வாஸாய சித்ரகூட விஹாரிணே ।
ஸேவ்யாய ஸர்வயமிநாம் தீரோதாராய மங்களம் ॥
ஸௌமித்ரிணா ச ஜானக்யா சாபபாணாஸி தாரிணே ।
ஸம்ஸேவ்யாய ஸதா பக்த்யா ஸ்வாமிநே மம மங்களம் ।
தண்டகாரண்யவாஸாய கண்டிதாமர சத்ரவே ।
க்ருத்ர ராஜாய பக்தாய முக்திதாயாஸ்து மங்களம் ॥
ஸாதரம் சபரீ தத்த பலமூலாபிலாஷிணே ।
ஸௌலப்ய பரிபூர்ணாய ஸத்வோத்ரிக்தாய மங்களம் ॥
ஹநுமத் ஸமவேதாய ஹரீசாபீஷ்ட தாயிநே ।
வாலி ப்ரமதநாயாஸ்து மஹா தீராய மங்களம் ॥
ஸ்ரீமதே ரகுவீராய ஸேதூல்லங்கித ஸிந்தவே ।
ஜித ராக்ஷஸ ராஜாய ரணதீராய மங்களம் ॥
ஆஸாத்ய நகரீம் திவ்யாம் அபிஷிக்தாய ஸீதயா ।
ராஜாதிராஜ ராஜாய ராமபத்ராய மங்களம் ॥
மங்களாசாஸந பரை: மதாசார்ய புரோகமை: ।
ஸர்வைஸ்ச பூர்வைராசார்யை: ஸத்க்ருதாயாஸ்து மங்களம் ।

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy, .

சொல்லிய பாராயணக் கிரம விவரம்

வரிசை எண்	குறிப்பிட்ட காரியங்கள்	காண்டம்	பாராயண ஸர்க்கங்கள்	பாராயண கட்டத்தின் பெயர்	பாராயணம் செய்யவேண்டிய காலம்	நிவேதனப் பொருள் முதலியன
1	எடுத்த தரும காரியம் நிறைவேற	அயோ	21, 22, 23, 24, 25	கௌஸல்யா ராம ஸம்வாதம்	காலை அல்லது மத்யானம்	5 வாழைப்பழங்கள்
2	செய்தொழிலில் தன லாபமுண்டாக	,,	32	யாத்ராதானம்	காலை, மத்யானம், மாலை	,,
3	கல்யாணமாகாதவர்களுக்கு, கல்யாணம் நடக்க	பால	73	ஸீதா கல்யாணம்	காலை	அப்போது கறந்த பசுவின் பால்
4	மோக்ஷபலன் ஸித்திக்க	ஆரண்ய	65, 66, 67, 68	ஜடாயு மோக்ஷம்	காலை	5 வாழைப்பழங்கள்
5	அபஸ்மாரம், ச்வாஸம், காஸம், குஷ்டம் தீர	யுத்த	59	ராவண கிரீட பங்கம்	இரண்டு வேளை	முதலில் தேன், முடிவில் பால்
6	பேய் பிசாசு, பில்லி சூன்யம் நீங்க	ஸுந்தர	3	லங்கா விஜயம்	மாலை	முதலில் சர்க்கரைப் பொங்கல், ஹநுமாரை த்யானம் செய்து கடைசியில் கற்பூர ஹாரதி
7	பைத்தியம் தெளிய	,,	13	ஹநுமத் சிந்தை	காலை	உளுந்தன்னம்
8	தரித்திர நிலை நீங்க	,,	15	ஸீதா தரிசனம்	காலை	5 வாழைப்பழங்கள்
9	அடுத்தடுத்து வரும் துக்கம் நீங்க	யுத்த	116	ஸீதாஞ்ஜனேய ஸம்வாதம்	காலை	5 வாழைப்பழங்கள்.

[P.T.O.

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

10	எதிர்பாராமல் வந்த ஆபத்து ஒழிய	யுத்த	18, 19	விபீஷண சரணாகதி	காலை	முதலிலும் கடைசியிலும் தேங்காய் பலாப்பழம், மாம்பழம்
11	விட்டுப் பிரிந்தவர் வந்து சேர	ஸுந்தர	36	அங்குலீயக ப்ரதானம்	காலை மாலை	
12	துர்சொப்பன தோஷம் நீங்க	,,	27	திரிஜடை ஸ்வப்னம்	காலை	3 நாட்கள் பாராயணம், சர்க்கரை நிவேதனம்
13	பரஸ்த்ரீ கமன தோஷம் நீங்க	,,	7, 8, 9, 10, 11	ஹநுமார் சிந்தை	காலை	இருபது அப்பங்கள்
14	ஸ்ரீராமனுக்குச்செய்த அபசார தோஷம் நீங்க	,,	38	காகாசுர விருத்தாந்தம்	காலை	5 வாழைப்பழங்கள்
15	மறுபிறவியில் ஸகல சுகங்களும் பெற	யுத்த	131	ஸ்ரீராம பட்டாபிஷேகம்	காலை	ஒரு மாதம் பாராயணம் செய்யவேண்டும். வெண்பொங்கல்
16	பிள்ளையில்லாதவர்களுக்குப் பிள்ளையுண்டாக	பால	15, 16	புத்திரகாமேஷ்டி பாயஸ தானம்	காலை	20 நாட்கள் பாராயணம். நெய் பாயஸம் நிவேதனம்
17	சுகப்ரஸவம் உண்டாக	,,	18	ஸ்ரீ ராமாவதாரம்	காலை	கர்ப்பிணி கேட்கவேண்டும். ஏதாவதுஸ்வல்ப நிவேதனம்
18	சிறைவாஸபயம் நீங்க	யுத்த	117	விபீஷணன் ஸீதையை ஸ்ரீ ராமரிடம் சேர்த்தல்	காலை	மதுர பதார்த்தங்கள்
19	துர்நடத்தையுள்ள பிள்ளை நல்லவனுக	அயோ	1, 2	ஸ்ரீ ராமகுண வர்ணனம்	காலை	5 வாழைப்பழங்கள்
20	நினைத்த காரியம் நிறைவேற	பால	75, 76	பரசுராம கர்வபங்கம்	காலை	பாயஸம், அப்பம்
21	[illegible]	அயோ	100	ராஜ	காலை	5 வாழைப்பழங்கள்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ ராமசந்த்ராய நம :

1. எடுத்த தருமகாரியம் நிறைவேற

(For the Fulfilment of Virtuous Acts)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்
அயோத்யா காண்டம்
ஸர்க்கங்கள் 21 முதல்
25 முடிய

உமா ஸம்ஹிதா

த4ர்ம காமஸ்து கௌஸல்யா ராம ஸம்வாத3மாத3ராத் |
மங்க3ளாந்தம் படே2த் ப்ராத: மத்4யாஹ்நே வா ஸ்மரந் ப்ரபு4ம்॥

தாம் தொடங்கிய தருமகாரியங்களுக்கு ஏதாவது விக்னம் ஏற்பட்டு, அவை நிறைவேறுமற் போனால், "கௌஸல்யா ராம ஸம்வாதம்" என்ற அயோத்யா காண்டம் 21, 22, 23, 24, 25 ஆகிய ஐந்து ஸர்க்கங்களையும் காலையிலோ மாலையிலோ பாராயணம் செய்யவேண்டும்.

நிவேதனம் : ஐந்து வாழைப்பழங்கள்.

ஸங்கல்பம்

ஸ்ரீ ஸீதாலக்ஷ்மண ப4ரத சத்ருக்4ந ஹநுமத் ஸமேத
ஸ்ரீ ராமசந்த்3ர ப்ரபோ4: ப்ரஸாதே3ந
ப்ராரீப்ஸித த4ர்மகார்ய ஸமாப்த்யர்த2ம்
"கௌஸல்யா ராமஸம்வாத3"த்மக
ஸ்ரீமத்3 ராமாயணக4ட்ட பாராயணம்
அஹம் கரிஷ்யே |

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



CC-0 In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ராமன் கௌஸல்யையை ஸமாதானம் செய்தது

தத:² து விலபந்தீம் தாம் கௌஸல்யாம் ராமமாதரம்।
உவாச லக்ஷ்மணோ தீ³ந: தத்கால ஸத்³ருஶம் வச:॥ (1)

அப்படிப் பிரலாபிக்கும் கௌஸல்யையைப் பார்த்து லக்ஷ்மணன் மிகுந்த வருத்தத்துடன் அந்தச் சமயத்திற்குத் தகுந்தபடி பின்வருமாறு பேசினார்:

"அம்மா! ஒரு ஸ்த்ரீயின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு, தனக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய ராஜ்யத்தை விட்டு ராமன் காட்டிற்குப் போவது உசிதமென்று எனக்கும் தோன்றவில்லை. 'கைகேயியின் உத்தரவால் நான் போகவில்லை; அரசனுடைய கட்டளையாலல்லவா போகிறேன்' என்றால், அவரோ மிகவும் வயது சென்றவர்; இந்திரிய ஸுகங்களில் ஆசையை ஒழிக்கமுடியாதவர். ஆனால் 'பரிசுத்தமானவனை இந்திரியங்கள் என்ன செய்ய முடியும்?' என்றால், இப்பொழுது அவர் ஒரு ஸ்திரீயிடத்தில் எல்லையற்ற ஆசை கொண்டிருக்கிறார். ஆகையால் அவருடைய புத்தி விபரீதமாயிருக்கிறது. இது அநியாயமென்று அவருக்குத் தெரியவில்லை. தான் மிகவும் பிரீதி வைத்த ஸ்திரியை ஸந்தோஷப்படுத்துவதற்காக எல்லையற்ற அதிகாரத்தைப் பெற்றிருக்கும் ஒரு மஹாராஜா என்னதான் சொல்லமாட்டார்? என்னதான் செய்யமாட்டார்?

"ராமனிடத்தில் எந்தக் குற்றத்தையாவது தோஷத்தையாவது கண்டு வனத்திற்கு அனுப்பியிருக்கக்கூடாதோ என்றால் ராஜத் துரோகம்முதலிய கொடிய குற்றங்களை ராமன் செய்தாரா? அல்லது கோரமான பாபங்களைச் செய்தாரென்றாவது சொல்ல முடியுமா? அவருக்குப் பரமசத்துருவானாலும் அல்லது ஏதாவது குற்றம் செய்து அதற்காக அவரால் தண்டிக்கப்பட்டிருந்தாலும் அவர் இல்லாதவிடத்திலும் அவரைப்பற்றித் தோஷத்தை கற்பிக்கக்கூடிய மனிதனை இந்த லோகத்தில் காணேன். அப்படியிருக்க அவருக்கெதிரில் எவனாவது சொல்லத் துணிவானோ?

"இது நான் ஊஹமாகச் சொல்லும் விஷயமல்ல. எல்லோருக்கும் வெளிப்படையாகத் தெரிந்ததே; ராமனோ தேவதைகளைப்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Hariharan Collection, Bhojanagarain, Chennai

போல் பரமசுத்தர் ; அவருடைய மனமும் வார்த்தையும் நடத்தையும் நியாயமான வழியிலேயே எப்பொழுதும் நடக்கும் ; குடிகள் இஷ்டத்தை அனுஸரிக்கிறவர் ; பெரியோரால் பழக்கப்பட்ட இந்திரியங்களை அடக்கினவர் ; கைகேயி முதலிய சத்துருக்களுக்கும் பிரியமானவர் ; தர்மஸ்வரூபி; மேற்சொன்ன குணங்களில் விட்டாலும் ஸகல தோஷங்களிருந்தாலும் மூத்த புத்திரனை நியாயத்தால் ராஜ்யத்திலிருந்து விலக்கத்தகாதவர். இப்படியிருக்க தர்மத்தை அனுஷ்டிக்கும் எந்த மனிதனுவது யாதொரு காரணமுமில்லாமல் அவரை ராஜ்யத்திலிருந்து துரத்துவானு?

“அது போகட்டும். அரசனுக்குப் பால்யம் திரும்பியிருக்கிறது ; காமத்திற்கு வசப்பட்டிருக்கிருர். அப்படிப்பட்டவருடைய வார்த்தையை ராஜநீதியறிந்த எந்தப் புத்திரனுவது கவனிப்பான்? ஆகையால் அண்ணு ! இந்த விஷயம் பிறர்க்குத் தெரிவதற்கு முன் அந்த ராஜ்யத்தை ஸ்வாதீனப்படுத்திக்கொள்ளும். நான் கையில் வில்லை எடுத்துப் பக்கத்தில் நின்றுகொண்டு தங்களைக் காப்பாற்றும்பொழுது எவனுவது நம்மை மீறமுடியுமா? கொல்லும் யமனை ஜயித்தாலும் ஜயிக்கலாம் ; நம்மை நெருங்கவும் முடியுமோ? இந்த நகரத்திலுள்ள ஜனங்கள் அனைவரும் சேர்ந்து நம்மை எதிர்த்தாலும், என் கூர்மையான பாணங்களால் இதை மனுஷ்ய சஞ்சாரமில்லாமல் செய்யமாட்டேனு? பரதனுக்கு நண்பர்களையும் உதவி செய்கிறவர்களையும்—அவர்கள் யாராயிருந்தாலும்—ஒரு நொடியில் நாசம் செய்கிறேன். கொட்டினுல் தேள், கொட்டாவிட்டால் பிள்ளைப்பூச்சியல்லவா? ஏழையைக் கண்டால் மோனுமும் பாயாதோ?

“நமது பிதா கைகேயியால் தூண்டப்பட்டு, நமது சத்துருக்களுக்கு உதவி செய்தால், அந்தத் துர்புத்தி பிடித்தவரை சிறையில் வைக்கக்கூடாது? ஏன் கொல்லக்கூடாது? எல்லோரும் கர்வத்தையடைந்து, இதைச் செய்யலாம், இதைச் செய்யக்கூடாதென்ற விவேகமின்றிக் கெட்ட வழியில் நடப்பவரை, நமது குருவானுலும் பிதாவானுலும், சிக்ஷித்து அந்த வழியிலிருந்து விலக்கவேண்டுமென்று மனு முதலிய தர்ம சாஸ்திரங்கள் சொல்லுகின்றன.

“உமக்குத் தர்மமாய்க் கிடைக்கவேண்டிய இந்த ராஜ்யத்தைக் கைகையிக்குக் கொடுக்கத் துணிந்ததற்கு என்ன காரணம்? ஸைன்யங்களால் உம்மை ஜயித்துத் துரத்திவிடலாமென்றே? அல்லது, முன்பு கைகேயிக்குக் கொடுத்த வரன்களைப் பூர்த்தி செய்யவேண்டுமென்ற காரணத்தாலோ? அவ்விரண்டும் இங்கே செல்லாது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உம்மையும் என்னையும் விரோதித்துக்கொண்டு பரதனுக்கு இந்த ராஜ்யத்தைக் கொடுக்க இவரால் முடியுமா?

"அம்மா! ராமன் என் ஸகோதரர்; என்னால் பூஜிக்கத் தகுந்தவர். அவரிடத்தில் உண்மையான பிரீதியை வைத்திருக்கிறேன். நான் பேசும் ஸத்தியத்தையும் கையில் பிடித்திருக்கும் வில்லையும் கொடுத்திருக்கும் தானங்களையும் செய்திருக்கும் தேவபூஜைகளையும் ஸாக்ஷி வைத்து ஆணையிட்டுச் சொல்லுகிறேன். பயங்கரமான காட்டிற்கு ராமன் போனாலும் ஸரி; ஜ்வலிக்கும் நெருப்பில் குதித்தாலும் ஸரி; அவருக்கு முன் என்னை அங்கே பார்க்கலாம். தாயே, தாங்கள் படும் கஷ்டத்தை என் வீரியத்தால் அழிக்கிறேன். என் பராக்கிரமத்தைத் தாங்களும் அண்ணனும் இன்றல்லவா பார்க்கப் போகிறீர்கள்."

அதைக் கேட்டுக் கௌஸல்யை சோகத்தால் மனம் கலங்கி அழுதுகொண்டு, "குழந்தாய்! தம்பி லக்ஷ்மணன் சொன்ன வார்த்தைகள் காதில் விழுந்தனவா? இதற்குமேல் என்ன செய்ய வேண்டுமென்று உனக்குத் தோன்றுகிறதோ அப்படிச் செய். பிதாவின் கட்டளையை எவ்வாறு மீறி நடப்பேன் என்று சொல்லலாம். ஆனால் இது அவர் செய்த கட்டளையல்ல; எனக்கு விரோதியான கைகேயி செய்த கட்டளை; மேலும் தர்மவிரோதமானது. அப்படியிருக்க அதைக் கேட்டு, துக்கத்தால் தவிக்கும் என்னை அநாதையாய் விட்டு நீ காட்டிற்குப் போவது நியாயமா?

"நீ ஸகல தர்மங்களையும் அறிந்தவன்; உன் பிதாவின் கட்டளையை நிறைவேற்றுகிறதென்ற தர்மத்தை அனுஷ்டிக்க விரும்புகிறாய். ஆனால் அதைக் காட்டிலும் மேலான தர்மம் ஒன்றுண்டு; கேள். லோகத்திலுள்ள மற்ற யாவற்றையும் காட்டிலும் தாயே ஒருவனுக்கு மேலான வஸ்துவென்று தர்ம சாஸ்திரங்கள் உபதேசிக்கின்றன. ஆகையால் நீ இங்கிருந்தே எனக்குப் பணிவிடை செய். இதைவிட சிரேஷ்டமான தர்மமில்லை. முன் காலத்தில் காசியபர் இந்திரியங்களை அடக்கி, தன் வீட்டிலிருந்தே தன் மாதாவுக்கு ஒப்பற்ற சிச்ருஷை செய்து வந்தார். அந்த சிரேஷ்டமான தவத்தால் உத்தமலோகங்களை அடைந்து பிரஜாபதிகளில் ஒருவரானார்.

"உன் பிதா உனக்கெப்படியோ நானும் அப்படியல்லவா? உனக்கு அவர் எப்படிப் பூஜிக்கத் தகுந்தவரோ நானும் அப்படியல்லவா? அவருடைய கட்டளையை எப்படி நிறைவேற்ற வேண்டுமோ அப்படியே என் கட்டளையையும் நிறைவேற்ற வேண்டுமல்லவா? நீ காட்டிற்குப் போவதில் எனக்கிஷ்டமில்லை.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அதற்கு அனுமதி கொடுக்கமாட்டேன். நீ இல்லாமல் என
என்ன ஸுகம்? உன்னைவிட்டு நான் பிழைத்திருக்
வேண்டுமோ! உன்னுடனிருந்து நான் புல்லைத் தின்றுகொண்டி
தாலும் அதுவே எனக்கு நல்லது. நான் துக்கப்பட்டுக்கொ
டிருக்கும்பொழுது நீ என்னை விட்டுக் காட்டிற்குப் போனால்,
பட்டினியிருந்து பிராணனை விடுவேன். முன் காலத்தில் ஸமு
ராஜன் தன் தாய்க்கு துக்கத்தை உண்டுபண்ணின பாபத்
பிராம்மணனைக் கொன்றவர்கள் அடையும் நரகத்தை அ
தான். நீயும் நரகத்தில் என்றும் அழியாத துக்கத்தை அடைவ
என்றாள்.

இப்படித் தீனமாய்த் தன் தாய் பிரலாபிப்பதைக் கே
தர்மாத்மாவான ராமன், தர்மத்தை அனுஸரித்து, "நான்
பிதாவின் ஆக்ஞையையும் நிறைவேற்றவேண்டும்; தங்களுடை
கட்டளையையும் கீழ்ப்படியவேண்டும்; ஆனால் ஒரே காலத்
இரண்டையும் அனுஷ்டிக்கமுடியாது. மேலும், அவருடை
கட்டளையோ முந்தினது. அதையே இப்பொழுது நிறைவே
வேண்டும். அதை மறக்கக்கூடாது. ஆகையால் நான் வ
திற்குப் போகவேண்டும். தங்கள் பாதத்தில் நமஸ்கரிக்கிறே
கிருபை செய்து அனுமதி கொடுக்கவேண்டும்.

"இப்படிச் செய்து உன் தாய்க்குத் துக்கத்தை உண்டுபண்
லாமா என்றால், முன் காலத்தில் ஸகல தர்மங்களையும் அ
கண்டு மஹரிஷி, தன் தகப்பன் உத்தரவால் ஒரு பசு
கொன்றார். அவர் தபஸ்வியல்லவா? ஞானியல்லவா? ந
குலத்தில் ஸகரரென்ற ஓர் அரசரிருந்தார். தன் அறுபதினா
புத்திரர்களை இந்தப் பூமி முழுவதையும் வெட்டும்படி கட்டளை
டார். அதை நிறைவேற்றி அதனால் அவர்கள் சாம்பலாக எரி
பட்டார்கள். அப்படி உயிரைக் கொடுத்தாவது என் பிதா
கட்டளையை நிறைவேற்றவேண்டியிருக்க, பதினான்கு வரு
கள்வரையில் காட்டிலிருப்பது ஒரு பெரிய கஷ்டமா? தன் பி
வின் ஆக்ஞையால் பரசுராமர் தன் தாயான ரேணுகை
கோடரியால் வெட்டிக் கொன்றார். அப்படியிருக்கத் தங்களுக்
சில காலம் துக்கத்தை உண்டுபண்ண வேண்டுமேயென்று
கலாமா? இதைப்போல் தேவதைகளுக்கு ஸமமான இன்
பலர் தங்கள் பிதாவின் வார்த்தையை நிறைவேற்றி இருக்கிறா
நானும் அப்படியே செய்ய விரும்புகிறேன். இது நான் ஒரு
மாத்திரம் அனுஷ்டிக்கும் தர்மமல்ல. பிறரால் அனுஷ்டிக்கப்ப
தல்ல. நான் இப்பொழுது சொன்ன பெரியோர்கள் இப்ப
பிதாவின் வார்த்தையை நிறைவேற்றியிருக்கிறார்கள். நமது
னோர்கள் இதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். பெரியோர் ந

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வழியிலேயே நானும் நடக்கிறேன். லோகத்திலுள்ள எல்லோரும் அனுஷ்டிக்கும் மேலான தர்மம் இதேயன்றி நான் ஸ்வயபுத்தியால் கல்பித்ததல்ல. தங்களுக்கு வருத்தத்தை உண்டாக்கவேண்டும் என்ற எண்ணத்தால் செய்ததுமல்ல. பிதாவின் கட்டளையை நிறைவேற்றுவதால் மாதாவிற்குக் கொஞ்சம் துக்கம் நேர்ந்தாலும் அதனால் கெட்டவன் உலகத்தில் இதுவரையிலுமில்லை'' என்றார்.

நன்றாகப் பேசும் திறமையுள்ளவர்களுக்குள் மேலானவரும் வில்லாளிகளுக்குள் ஒப்பில்லாதவருமான ராமன் லக்ஷ்மணனைப் பார்த்து, "லக்ஷ்மணா, உனக்கு என்னிடத்திலிருக்கும் எல்லையற்ற பிரீதியையும் உனது பராக்கிரமத்தையும் தைரியத்தையும் ஒருவராலும் தாங்கமுடியாத தேஜஸையும் அறிவேன். ஸத்தியத்தின் ரஹஸ்யத்தையும் சாந்தியின் ரஹஸ்யத்தையும் அறியாமல் என் தாய் மிகவும் வருத்தப்படுகிறாள். தர்ம ரஹஸ்யத்தை அறிந்த நீயும் இப்படிச் சொல்வது ஸரியல்ல. ஸத்தியம் தர்மத்திலேயே வேரூன்றியிருக்கிறது. ஆகையால், புருஷார்த்தங்களில் ஸத்தியமே மேலானது. இப்பொழுது என் மாதாவின் வார்த்தையைக் காட்டிலும் பிதாவின் வார்த்தையை நிறைவேற்றுவதால் அந்த தர்மம் கிடைக்கும். தர்மத்தில் ஆசையுள்ளவன் பெற்றோர்களுக்காவது பிராம்மணவர்களுக்காவது ஒரு விஷயத்தைப் பிரதிக்ஞை செய்துவிட்டுப் பிறகு தவறுவானா? இப்பொழுது என் பிதாவின் உத்தரவால் கைகேயி என்னை வனம் போகச் சொன்னாள். அவருடைய ஆக்ஞையை மீறி நடக்க நான் சக்தியற்றவன், ஆகையால், 'நமது தகப்பனாயிருந்தாலும் அவரைக் கொன்றுவிட்டு இந்த ராஜ்யத்தை ஆளுவோம்' என்ற க்ஷத்திரியர்களுக்கு மாத்திரமுள்ள குரூரமான புத்தியை விடு. நாஸ்திகர்களைப்போல் தர்மத்திற்கு ஒவ்வாத நீதியை மாத்திரம் அனுஸரிக்காதே. பிறருக்கு ஹிம்சையை உண்டுபண்ணும் வழியில் செல்லாதே. நான் நடப்பதைப் பார்'' என்று லக்ஷ்மணனிடத்திலுள்ள மிகுந்த வாத்ஸல்யத்தால் இப்படிச் சொல்லி, மறுபடியும் கௌஸல்யையை நமஸ்காரம் செய்து கைகூப்பிக்கொண்டு, "அம்மா தாங்களும் நானும் ஸீதையும் லக்ஷ்மணனும் ஸுமித்திரையும் என் பிதாவின் ஆக்ஞைக்குக் கீழ்ப்படிய வேண்டியது புராதன தர்மம். முதலில் அவர் உத்தரவு செய்தபடியால் அப்படிப் பதினான்கு வருஷங்கள் வரையில் காட்டில் வஸித்துவிட்டுப் பிறகு தங்களுடைய கட்டளைப்படி, தங்களுடைய பக்கத்திலிருந்து சிச்ருஷை செய்வேன். முன்காலத்தில் யயாதி ஸ்வர்க்கத்திலிருந்து பூமியில் விழுந்து, பிறகு ஸ்வர்க்கத்திற்குப் போனதுபோல், நானும் கொஞ்ச காலம் கஷ்டத்தை அனுபவித்து என் பிரதிக்ஞையை நிறைவேற்றி மறுபடியும் தங்களைத் தரிசனம் செய்கிறேன். ஆகையால் தாங்கள் துக்கத்தை அடக்கிக்கொண்டு எனக்கு உத்தரவு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri.V.Hariharan Collection, Sholinganallur, Chennai

கொடுக்கவேண்டும். நான் க்ஷேமமாய்ப் போய் வருவது வேண்டிய மங்கள காரியங்களைச் செய்யவேண்டும். என் பிராண மேல் ஆணை வைத்துக் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழு என் அபிஷேகத்திற்காகச் செய்திருக்கும் ஏற்பாடுகளை நிறு விட்டு, துக்கத்தை வெளியில் காட்டாமல் தர்மத்தைக் காப்பா வதற்காக நான் வனத்திற்குப் போவதை அங்கீகரிக்கவேண்டு என்றார்.

ராமன் இப்படித் தர்மத்தை அனுஸரித்தும் கொஞ்சமும் வருத்தமில்லாமலும் உறுதியாயும் சொன்ன வார்த்தைகளை கேட்டுக் கௌஸல்யை துக்கத்தால் மூர்ச்சையடைந்தாள். பி பிரக்ஞை தெளிந்து, "குழந்தாய், நமக்குள்ள சரீர ஸம்பந் தாலும் உன்னைப் பெற்று வளர்த்ததாலும் உன் பிதாவுக்கு ஸமம நீ என்னைப் பூஜிக்கவேண்டும். சொல்லமுடியாத துக்கத் அனுபவித்துக்கொண்டிருக்கும் என்னைவிட்டு நீ காட்டிற் போகக் கூடாது. அதற்கு ஸம்மதிக்கமாட்டேன். நீ இல்லாம இந்த லோகத்தில் நான் பிழைத்திருந்தென்ன பயன்? பி லோகத்திலாவது ஸ்வர்க்கத்திலாவது ஆனந்தத்தைக் கொடுக் மேல் லோகங்களிலாவது நான் இருந்தாலும் என்ன லா உன்னருகில் ஒரு முகூர்த்தமிருப்பதற்கு இவையெல்லா ஈடாகுமா?" என்றாள்.

யானையைப் பிடிக்கிறவர்கள், தீவட்டிப் பந்தங்களுடன் அ போகும் வழியில் ராத்திரியில் நின்று தடுத்தாலும் அதன் கோப அதிகரிக்குமேயல்லாது தான் குறிவைத்த பாதையிலிருந் திரும்புமோ? அப்படித் தன் தாய் வெகு தீனமாகப் பிரலாபி தைக் கேட்டும் ராமனுடைய மனஉறுதி மறுபடியும் பலமடைந்த அவள் சோகத்தால் பிரக்ஞையற்றிருப்பதையும் லக்ஷ்மண துக்கத்தால் தவிப்பதையும் பார்த்தும், தர்மத்தில் நாடிய மனத் யுடைய ராமன், தர்மத்தை அனுஸரித்து மறுமொழி சொன் இப்படி நான்கு பக்கங்களிலும் தர்மத்தால் நிர்ப்பந்திக்கப்பட அவைகளில் உத்தமமான தர்மம் எது என்று கண்டுபிடித்து அ ஒரே உறுதியாக அனுஷ்டித்தவர்கள் ராமனைத் தவிர இந்த மூன் லோகங்களிலும் வேறு ஒருவர் உண்டோ? இப்படிப் பே தகுந்தவர் அவரே.

"லக்ஷ்மணா, உனக்கு என்னிடத்திலுள்ள பக்தியையும் உ பராக்கிரமத்தையும் நன்றாக அறிவேன். ஆனால் என் அ பிராயத்தைப் பூரணமாக அறியாமல் நீயும் என் தாயும் என வீண் வருத்தத்தை உண்டாக்குகிறீர்கள். தர்மத்தைப் பற் சுருக்கமாக இதுவரையில் சொன்ன வார்த்தைகளை விஸ்த

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மாகச் சொல்லுகிறேன் கேள். ஒருவனுடைய பாரியை அவனுடைய கட்டளைப்படி நடப்பதால் தர்மத்தையும் அவனுடைய பிரீதிக்குப் பாத்திரமாயிருப்பதால் காமத்தையும் நல்ல புத்திரனைப் பெறுவதால் அர்த்தத்தையும் ஸம்பாதிக்கிறாள். ஒரே ஸ்திரீ மூன்று புருஷார்த்தங்களையும் கிடைக்கச் செய்கிறாள். இப்படியே தர்மார்த்தகாமமென்ற புருஷார்த்தங்கள், தர்மத்தால் கிடைக்கும் ஸுகத்திற்கு உபாயங்களாகச் சொல்லப்படுகின்றன. தர்மம் ஒன்றையே நன்றாக அனுஷ்டித்தால் இம்மூன்றும் கிடைக்கும். இதைப்பற்றி எனக்குக் கொஞ்சம்கூட ஸந்தேகமில்லை. மேற் சொன்ன புருஷார்த்தங்கள் எதனால் கிடைக்காதோ அதை ஆரம்பிக்கக்கூடாது. எந்தக் காரியத்திலிருந்து தர்மம் விளையுமோ அதையே செய்யவேண்டும். கேவலம் அர்த்தத்தையே நாடுகிறவனை லோகத்தார் அனைவரும் வெறுக்கிறார்கள். கேவலம் காமத்தையே நாடுவதும் அப்படியே. இப்பொழுது நான் செய்யவேண்டிய தர்மம் என்னவென்று யோசிப்போம். தனுர்வேதம் ராஜநீதி முதலியவைகளை எனக்கு உபதேசித்ததால் மஹாராஜா எனக்கு ஆசாரியர்; என்னைக் காப்பாற்றும் அரசன்; என்னைப் பெற்ற பிதா; வயதால் பெரியவர். அப்படிப்பட்டவர் கோபத்தாலோ ஸந்தோஷத்தாலோ காமத்தாலோ ஏதாவது ஒன்றைக் கட்டளையிட்டால் குரூரமான தன்மையையும் நடத்தையையும் உடையவனைத் தவிர, சொன்ன வார்த்தையை நிறைவேற்றுவதென்ற தர்மத்தை அறிந்த வேறு யாராவது அதை நிறைவேற்றாமலிருப்பானா? நான் குரூர ஸ்வபாவமுள்ளவனல்ல. என் பிதா செய்த பிரதிக்ஞையை என்னால் முடிந்தவரையில் நிறைவேற்றுவேன்.

"அவர் நம்மிருவருக்கும் பிரபு; என் தாய்க்கும் அப்படியே; அவளுக்கு அவரே உத்தம கதி. அவள் புண்ணிய லோகங்களை அடைவதற்கு அவரே ஸாதனம். நமது முன்னோர்களைக் காட்டிலும் அவர் விசேஷமாகத் தர்மத்தை அனுசரித்து நெறி தவறாமல் ராஜ்ய பரிபாலனம் செய்து வரும்பொழுது, என் தாய் திக்கற்ற ஒரு ஸாதாரண ஸ்த்ரீயைப் போலவும் புருஷனை இழந்தவளைப் போலவும் என்னுடன் வனத்திற்கு வருவது உசிதமா?

"அம்மா, நான் வனத்திற்குப் போகிறேன்; உத்தரவு கொடுங்கள். நான் திரும்பி க்ஷேமமாய் வந்து சேருவதற்கு மங்கள காரியங்களைச் செய்யுங்கள். யயாதி மஹாராஜா ஸ்வர்க்கத்திலிருந்து தள்ளப்பட்டு ஸத்தியத்தைச் சொன்னதால் மறுபடியும் ஸ்வர்க்கத்திற்குப் போனதைப்போல், நானும் பதினான்கு வருஷங்கள் முடிந்தவுடன் திரும்பி வருகிறேன். தர்மமாகக் கிடைக்காத இந்த ராஜ்யத்தில் ஆசைப்பட்டு கீர்த்தி என்ற விசேஷப் பிரயோஜனத்தைத் தள்ளிவிட என்னால் முடியாது. நமது ஜீவகாலம் வெகு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்வல்பம்; மின்னல் கொடியைப்போல் நிலையற்றது. அ
அதர்மத்தைச் செய்தாவது இந்தப் பூமியை ஆளவேண்டுமெ
எண்ணம் எனக்கில்லை" என்று புருஷோத்தமரான ராமன்
தாயை ஸமாதானப்படுத்திக் கைகேயியின் சொற்படி அங்கிரு
சீக்கிரமாகப் புறப்பட்டு வனத்திற்குப் போக நிச்சயி
லக்ஷ்மணனுக்குத் தன் தாயை பிரதக்ஷிணம் செய்து உத்
பெற்றுக்கொள்ள உத்தேசித்தார்.

ப்ரஸாத³யந் நரவ்ருஷப⁴ : ஸ்வமாதரம்
பராக்ரமாத் ஜிக³மிஷுரேவ த³ண்ட³காந் ।
அதா²நுஜம் ப்⁴ருஶமநுஶாஸ்ய த³ர்ஶநம்
சகார தாம் ஹ்ருதி³ ஜநநீம் ப்ரத³க்ஷிணம் ॥

ஸர்க்கம் 22

ராமன் லக்ஷ்மணனை ஸமாதானம் செய்த

அத² தம் வ்யத²யா தீ³நம் ஸவிஶேஷ மமர்ஷிதம் ।
ஶ்வஸந்தமிவ நாகே³ந்த்³ரம் க்ரோத⁴ விஸ்ப²ாரிதேக்ஷணம் ॥

ராமனுடைய மனம் அவருக்கு வசப்பட்டது. ஸகலப் பிரா
களிடத்திலும் அவர் செலுத்தும் சக்தி அந்த மையத்
அவருடைய வார்த்தைகளால் வெளிப்பட்டது. லக்ஷ்ம
ராமனுக்கு அந்தரங்கமானவர்களில் மேலானவர்; அ
பொறுமையில்லாதவர். கோபத்தால் அவருடைய கண்கள் பர
இருந்தன. அப்படியிருந்தும் தனக்கு மித்திரனும் தம்பியும் பி
மானவனுமான காரணத்தால் ராமன் எல்லாவற்றையும் மற
அவருக்கெதிரில் நின்றுகொண்டு, "லக்ஷ்மணா! நீ ஸ்பாவத்தில் அ
தைரியசாலியல்லவா? அரசனிடத்திலுள்ள கோபத்தை
என்னைப்பற்றின வருத்தத்தையும் உனக்குள் அடக்கு. 'அபிஷே
திற்காக எல்லாம் தயாராயிற்றே; இப்பொழுது அது நட
விட்டால் நமக்கு அவமானமல்லவா?' என்றால், அது ந
பலஹீனத்தால் ஏற்படவில்லையே. மேலும், நமது பிதா செ
பிரதிக்ஞையை நிறைவேற்றி அவர் உத்தம கதியை அடையும்
செய்கிறோம் என்று மிகவும் ஸந்தோஷப்படவேண்டும். ஆகைய
என் அபிஷேகத்திற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடுகளை நிற

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

விட்டு, நமது பிதாவின் வார்த்தையை நிறைவேற்றுவதற்கு வேண்டிய காரியங்களைச் செய். எனக்கு அபிஷேகம் நடக்க வில்லையே என்று என் தாய்க்கு மிகுந்த வருத்தம். நான் திரும்பி வருவேனோ வரமாட்டேனோ என்ற பெரிய ஸந்தேகம். ராமன் பிதாவின் கட்டளையை வெகு ஸுலபமாக நிறைவேற்றி அதிசீக்கிரத்தில் வனத்திலிருந்து திரும்பி வருவான்; இதைப்பற்றி நீ கவலைப் படவேண்டாமென்று நீ அவளுக்குச் சொல்லி அவள் வருத்தப் படாமல் செய்யவேண்டும். இந்த ஸந்தேகத்தால் அவள் துக்கப் படுவதை ஒரு க்ஷணம்கூட நான் பார்க்கப் பொறுக்கமாட்டேன்.

"நான் இதுவரையில் தெரிந்தாவது தெரியாமலாவது என் தாய்களுக்கும் பிதாவுக்கும் அல்ப விஷயங்களிலும் பிரியமில்லாமல் நடந்ததில்லை. நமது பிதா எப்பொழுதும் நிஜத்தையே பேசுகிறவர்; செய்த பிரதிக்ஞை தவருதவர்; வீணாகாத பராக்கிரம முடையவர். இப்பொழுது தமக்கு உத்தம கதி கிடைக்காதோ என்ற பயம் அவருக்கில்லாமல் நாம் செய்யவேண்டும். இந்த அபிஷேகம் தடுக்கப்படாமலிருந்தால் தான் கொடுத்த வரங்கள் வீணாகுமே என்று அவருடைய மனம் தவிக்கும். அதைப் பார்த்து நானும் தவிப்பேன். ஆகையால் என் அபிஷேகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை நிறுத்தி இப்பொழுதே காட்டுக்குப் போகிறேன்.

"கேகய ராஜருடைய புத்திரி தன் எண்ணம் நிறைவேறித் தன் புத்திரனான பரதனை யாதொரு கவலையுமில்லாமல் அபிஷேகம் செய்யட்டும். நான் மான்தோல், மரவுரி, ஜடை முதலியவைகளைத் தரித்துக்கொண்டு வனத்திற்குப் போனால் கைகேயியின் மனம் ஸந்தோஷப்படும். ராஜ்யத்தைவிட்டு வனத்திற்குச் செல்ல வேண்டுமென்ற புத்தி எனக்கு ஸ்திரமாக ஏற்பட்டிருக்கிறது. அதை மாற்றமுடியாது. ஆகையால் நீ என்னை வருத்தப்படுத்துவது யுக்தமல்ல. நான் வனத்திற்குப் போகிறேன். தாமதம் செய்யாதே.

"நான் இப்படிச் செய்வதற்கு தர்மமே முக்கிய காரணமென்று இதுவரையில் சொன்னேன். ஆனால் அதைவிட மேலான காரணம் ஒன்றுண்டு. நான் காட்டிற்குப் போவதற்கும் பெற்ற ராஜ்யத்தை இழப்பதற்கும் காரணம் ஈசுவரனே; கைகேயி அல்ல. வீணாக அவளைத் தூஷிப்பதில் பிரயோஜனமென்ன? கைகேயிக்கு இவ்விதமான எண்ணமுண்டானதற்குக் காரணமும் ஈசுவரனே. இல்லாவிட்டால் நீ எண்ணுகிறபடி அவளுக்கு என்னை ஹிம்ஸிக்க வேண்டுமென்ற புத்தி ஏன் உண்டாகவேண்டும்? எனக்கு என் தாய்களிடத்தில் தாரதம்யமாவது பேதபுத்தியாவது கொஞ்ச

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மேனும் இல்லை என்று உனக்குத் தெரியாதா? அப்படி கைகேயிக்கு என்னிடத்திலும் பரதனிடத்திலும் பேதபுத்தியி என்று உனக்குத் தெரியுமே. அப்படியிருக்க என் அபிஷேகத்தை நிறுத்தவேண்டுமென்றும், என்னைக் காட்டிற்கனுப்ப வேண் மென்றும் வெகு குரூரமான கொடிய வார்த்தைகளை அவள் சொ வதை யோசித்தால் ஈசுவரனால் அவளுடைய புத்தி மாற்றப் டிருக்கிறதென்ற காரணத்தைத் தவிர வேறு எனக்குத் தோ வில்லை. அவளோ, நல்ல ஸ்வபாவமுள்ளவள்; உத்தமமான ரா குலத்தில் பிறந்தவள். அதற்குத் தகுந்த தயை, பெருந்தன் முதலிய சிரேஷ்டமான குணங்களை உடையவள். அப்படிப்பட் கைகேயி கெட்ட ஸ்பாவத்தைக் கைக்கொண்டு, தாழ்ந்த குலத் பிறந்து நற்குணங்கள் ஏதுமில்லாத அல்ப ஸ்திரீயைப்போ ஏன் நடக்கவேண்டும்? வேறு யாரிடத்திலாவது சொன்னா பாதகமில்லை. தன் கணவனிடத்திலேயே ஏன் சொல்லவேண்டு தோழிகளிடத்தில் சொல்லி அனுப்பினால் பாதகமில்லை. தா ஏன் நேரில் சொல்லவேண்டும்? அந்த க்ஷணம் வரையில் தானு மஹாராஜாவும் எல்லையற்ற பிரீதி வைத்திருந்த எனக்கு மிகு கஷ்டத்தை உண்டாக்கும் வார்த்தைகளைச் சொல்லுவாள ஜாடையாகச் சொல்லவுமில்லை. ஸ்பஷ்டமாகப் பல தட சொல்லியிருக்கிறாள். இந்த விஷயங்களை யோசித்தால் இ வளவும் ஈசுவரனுடைய செயலென்றே நிச்சயமாகிறது. எண் முடியாத சக்தியுள்ள ஈசுவரனுடைய ஸங்கல்பத்தை எந் பிராணியும் தடுக்கமுடியாதென்பதில் ஸந்தேகமில்லை. எ கையில் கிடைத்த ராஜ்யம் தவறிப்போனதும், என்னிடத்தி அவளுக்கு இதுவரையிலிருந்த பிரியம் முற்றிலும் மாறினது இந்தக் காரணத்தாலேயே.

“ஆனால் தெய்வச் செயலை மனுஷ்யப் பிரயத்னத்தால் வெல் கூடாதா என்றால், அது கொடுக்கும் பயன்களால் அத ஸ்வரூபத்தை அறியவேண்டுமே தவிர, அதை நேரில் பார்த்தவ ருண்டா? எவனாவது தெய்வத்தை எதிர்க்கமுடியுமா? ஸுக துக்கம், சாந்தி, கோபம், லாபம், நஷ்டம், உற்பத்தி, நாசம் முதலி காரணம் தெரியாத யாவற்றிற்கும் தெய்வமே காரணம். கடு யான தவம் செய்துகொண்டிருந்த விசுவாமித்திரர் முதலிய ரி களும் தெய்வத்தால் பீடிக்கப்பட்டுக் காமக்குரோதங்களை அடக் முடியாமல் ஸமாதி குலைந்து தங்களுடைய மேன்மையான பதவி விருந்து நழுவியிருக்கிறார்கள். நாம் ஒரு காரியத்தை ஆரம்பி திருக்கும்பொழுது அதைத் தடுத்து நாம் எண்ணாத வேறு காரியத்தை நடத்திவைப்பது தெய்வச் செயலே. இ நிச்சயத்தை உடையவனாய் எனக்கு எது நேர்ந்தாலும் மனம் கல காமலிருப்பதால் இப்பொழுது இந்த அபிஷேகம் தடை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பட்டாலும் அதனால் எனக்குக் கொஞ்சம்கூட வருத்தம் உண்டாகவில்லை.

"நீயும் வருத்தப்படாமல் என்னைப்போல் நடந்துகொண்டு என் அபிஷேகக் காரியங்களை நிறுத்து. அதற்காகக் கொண்டு வந்திருக்கும் குடங்களிலுள்ள ஜலத்தால் நான் தபஸ்வியாவதற்கு முந்திச் செய்யவேண்டிய விரதஸ்நானம் நடக்கட்டும். வேண்டாம்; ஒருவேளை நான் இந்த ராஜ்யத்திற்காக ஆசைபட்டுக் கபடமாக அபிஷேகம் செய்துகொண்டேன் என்று கைகேயிக்குத் தோன்றினாலும் தோன்றலாம். ஆகையால் அபிஷேகத்திற்காகக் கொண்டு வரப்பட்ட ராஜத்திரவியம் எனக்கு அவசியமில்லை. நானே நதியிலிருந்து ஜலத்தைக் கொண்டுவந்து விரத ஸ்நானம் செய்கிறேன்.

"லக்ஷ்மணா, நமக்கு ராஜ்யம் கிடைக்கவில்லையே; ஐசுவரியத்தை இழந்தோமே என்று கொஞ்சம்கூட வருத்தப்படாதே. ராஜ்யத்தை ஆளுவதும் காட்டிலிருப்பதும் எனக்கு ஒன்றே. அப்படியுமல்ல ; யோசித்துப் பார்த்தால் ராஜ்ய பரிபாலனத்தால் உண்டாகும் கவலையும் கஷ்டமும் பாபமும் வனவாஸத்தில் இல்லை. இதுவரையில் பார்க்காத பொருள்களைப் பார்க்கலாம். ஆகையால் அரசாக்ஷியைக் காட்டிலும் வனவாஸமே மேலானது.

"லக்ஷ்மணா, ஒரு வார்த்தை சொல்லுகிறேன் கேள். தெய்வத்தின் சக்தி எல்லையற்றதென்று உனக்குத் தெரியுமே. அந்தத் தெய்வத்தால் ஏவப்பட்டிருப்பதால் கைகேயி நமக்கு ஹிதமில்லாத வார்த்தைகளைச் சொல்லுகிறாள். அப்படியிருக்க என் அபிஷேகத்தை அவள் தடுத்தாளென்று நாம் ஸந்தேகப்படுவது நியாயமில்லை" என்றார்.

ந லக்ஷ்மணாஸ்மிந் க²லு கர்மவிக்⁴நே
மாதா யவீயஸ் யதிஶங்கிதவ்யா।
தை³வாபி⁴பந்நா ஹி வத³த்யநிஷ்டம்
ஜாநாஸி தை³வம் ச ததா²ப்ரப⁴ாவம்॥ (30)

———

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸர்க்கம் 23

லக்ஷ்மணன் ராமனைத் தடுத்தது

இதி ப்³ருவதி ராமே து லக்ஷ்மணோ த⁴ஃ ஶிரா முஹு:।
ஶ்ருத்வா மத்⁴யம் ஜக³ாமேவ மநஸா து³க்க²ஹர்ஷயோ:॥

ராமன் இப்படிச் சொல்ல லக்ஷ்மணன், தான் அதற்கு ஸம்மதிக்காததற்கு அடையாளமாகத் தலையைக் கீழே குனிந்துகொண்டு 'நமது தமையன் தர்மத்தை அனுஷ்டிப்பதில் உறுதியாயிருக்கிறார்' என்று ஸந்தோஷத்தையும், 'ராஜ்யத்தைவிட்டுப் போகிறார்' என்று துக்கத்தையும் அடைந்தார். ஆனால் அந்த அபிப்பிராயத்தை வார்த்தையால் தெரிவிக்கவில்லை. அந்த எண்ணம் அடுத்த க்ஷணத்தில் மாறிவிட்டது. அதிக கோபம் கொண்டு ஸிம்ஹம் புருவத்தை நெறிப்பதுபோல் தன் புருவங்களை நெறித்து பெட்டியில் அகப்பட்ட ஸர்ப்பத்தைப்போல் சீறிக்கொண்டு மனத்திலுள்ள கோபத்திற்கு அடையாளமாகத் தலையை மேலும் கீழும் அசைத்துக்கொண்டு, யானையின் துதிக்கை போன்ற தன் கையை ஆட்டிக்கொண்டு, குறுக்குப் பார்வையாக ராமனைப் பார்த்து, "பிதாவின் வார்த்தையை நிறைவேற்றுவிட்டால் தர்மத்திற்குக் குறைவு நேரும்; நான் தர்மத்தை அனுஷ்டிக்காவிட்டால் பிறரும் அதைக் கைவிடுவார்கள். பிதாவின் கட்டளையை நிறைவேற்றுதவன் நம்மை ரக்ஷிப்பானோ என்று ஜனங்கள் என்னிடத்தில் ஸந்தேகப்படுவார்கள் என்று நினைத்துக் காட்டிற்குப் போவதாய் தாங்கள் இவ்வளவு பரபரப்புடனிருப்பது யுக்தமல்ல. வீரியமில்லாதவர்களும் சித்தப் பிரமையுள்ளவர்களும் க்ஷத்திரியர்களுக்கு கீழ்ப்பட்டவர்களுமே உண்மையில் சக்தியற்ற விதியை அனுஸரித்து அதற்குக் கட்டுப்படுவார்கள். தாங்கள் க்ஷத்திரிய சிரேஷ்டர்; விதியை விலக்கும் சக்தியை இயற்கையாகவே உடையவர்; கலங்காத புத்தியையுடையவர்; இப்படியிருக்க விதியை ஒருவராலும் வெல்லமுடியாதென்று அந்தக் கையாலாகாத பதார்த்தத்தை மெச்சுவது நியாயமல்ல. மனோபலமில்லாதவர்களுக்கு விதி என்பது பிழைப்புக்கு வழியென்று பிருஹஸ்பதி சொல்லியிருக்கிறார்; ஆகையால் கையாலாகாதவர்களே விதியை அனுஸரிக்கவேண்டும். புருஷப் பிரயத்னத்தை விதி வெல்லாது; அதைக் கொண்டாடலாமா?

"பிதாவின் வார்த்தையை நிறைவேற்றுமலிருந்தால் அதர்மம் நேருமென்று பயப்படுகிறீர்கள். தங்களுக்குத் துரோகம் நினைத்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அந்தப் பாபிகளான கைகேயி தசரதர் இவர்களிடத்தில் தங்களுக்கு ஏன் ஸந்தேகமுண்டாகவில்லை? அவர்கள் தர்மத்தை அனுஷ்டிக்கவில்லையா என்ருல், தர்மானுஷ்டானமென்ற வேஷத்தால் தங்களுடைய துர்க்குணங்களையும் கெட்ட நடத்தைகளையும் மறைத்துக்கொள்ளும் ஸாமர்த்தியமுள்ள எவ்வளவோ ஜனங்கள் இவ்வுலகத்திலிருக்கிருர்கள். தாங்கள் தர்மாத்மாவானதால் அவர்களிடத்தில் தங்களுக்கு ஸந்தேகமுண்டாவதில்லை. அவர்களைத் தங்களைப் போல் நினைக்கிறீர்கள். தங்களுடைய அபிஷேகத்தைத் தடுக்க அவர்கள் நன்ருக யோசித்து, அவர்கள் இப்படி நடக்கிருர்களென்று தங்களுக்கு ஏன் தெரியவில்லை? வெகு காலத்திற்கு முன்பாகவே அவர்கள் இப்படிக் கலந்து யோசனை செய்யாவிட்டால் எப்பொழுதோ கொடுத்த வரங்களைக் கைகேயி இது வரையில் மறந்து கேட்காமலிருப்பாளா? ராமன் எனக்கு மூத்த புத்திரன்; இந்த ராஜ்யம் அவனுக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டியது. ஆனுல் எனக்கு உன் புத்திரனுன பரதனுக்குக் கொடுக்க வேண்டுமென்ற விருப்பம். அவன் ராமனுக்கு இளையவனுகையால் அப்படிச் செய்ய ஜனங்கள் ஸம்மதிக்கமாட்டார்கள். ஆகையால் அதற்கு உபாயம் செய்வோம். ராமனுக்கு அபிஷேகம் செய்வதாக எல்லா ஜனங்களுக்கும் எதிரில் நான் பிரதிக்ஞை செய்கிறேன். பிறகு நீ முன்காலத்தில் கொடுத்த வரங்களைப் பூர்த்தி செய்யும்படி என்னைக் கட்டாயப்படுத்து. நான் அதற்கு இஷ்டமில்லாதவன்போல் நிர்ப்பந்தத்தின்மேல் ஒப்புக்கொள்வதாகக் காட்டிக்கொண்டு ஸம்மதிக்கிறேன். அப்பொழுது ராமனைப் பல வருஷங்கள்வரையில் காட்டிற்கு அனுப்பி, நமது குழந்தை பரதனுக்கு அபிஷேகம் செய்வோம்'' என்று நமது பிதா கைகேயியுடன் கலந்து துரோகமாகச் செய்த யோசனை என்று தங்களுக்கு ஏன் இன்னும் தோன்றவில்லை? மூத்த புத்திரனிருக்கையில் இளையவனுக்கு அபிஷேகம் செய்வது இவ்வுலகத்தில் எவனுக்காவது இஷ்டமாகுமா? அதிலும் நான் ஸம்மதிப்பேனு? பொறுத்துக் கொண்டிருக்க மாட்டேன். தாங்கள் என்னை மன்னிக்கவேண்டும்.

“தாங்கள் மஹா புத்திமானல்லவா? தர்மானுஷ்டானமென்ற ஒரு காரணத்தால் ‘அபிஷேகம் செய்துகொள்ளமாட்டேன்; வனத்திற்கே போவேன். அப்படிச் செய்யாவிட்டால் மஹாபாபம் நேரும்’ என்று பிசகான அபிப்பிராயம் கொண்டிருக்கிறீர்கள். அந்தத் தர்மம் எனக்கு விரோதி; கைகேயியின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு தர்ம விரோதமாயும் ஸகல ஜனங்களும் நிந்திக்கும் வார்த்தைகளை நமது பிதா சொல்லவும் ஒருவராலும் தடுக்கக் கூடாத சக்தியையுடைய தாங்கள் அவைகளை நிறைவேற்றுவதாக நிச்சயிப்பதும் எப்பொழுதாவது நேருமா? ஆகையால் தங்களுக்குச் சித்தப்பிரமை தவிர வேறில்லை. அவர்கள் கபடமாகத் தங்களுடைய அபிஷேகத்தை நிறுத்துவதற்காகச் செய்த ஏற்பாட்டை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy.

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உண்மை என்றெண்ணி மோசம் போகிறீர்களென்பதை நி நினைக்க எனக்குத் துக்கம் மேலிடுகிறது. தர்மத்தை இ அனுஷ்டிப்பதில் இவ்வுலகத்தில் ஒருவருக்கும் ஸம்மதமி அவர்கள் பெயருக்கு மாத்திரம் நமக்கு மாதாபிதாக்களே ஒ வேறல்ல; சத்துருக்கள் என்பதே உண்மை. நமக்குக் கெடுதி தேடுகிறவர்கள் காமத்திற்கு அடிமைகள்; ஆகையால் களுடைய கட்டளையை நிறைவேற்ற வேண்டுமென்று எவனு நினைப்பானு?

"அவர்களுக்கு இப்படிப்பட்ட புத்தி தோன்றியது விதி நேர்ந்தது, கைகேயியின் குற்றமல்லவே என்று சொன் அந்த ஸமாதானத்தை ஒப்புக்கொள்ளமுடியுமா? எனக்கும் யாகத் தோன்றவில்லை. பயந்தவர்களும் வீரியமில்லாதவர்க தெய்வத்தைப் பின்பற்றுவார்கள். வீரர்களும் மன உறுதியு வர்களும் அதை லக்ஷ்யம் செய்யமாட்டார்கள். தன் பலத் விதியை வெல்லக்கூடியவனிடத்தில் அதன் ஆட்டம் கொ மேனும் பலிக்காது. அவனுக்கு ஆகவேண்டிய காரியத்தை அது கெடுக்காது; விதியைக் காட்டிலும் புருஷப் பிரயத்தி பலமுள்ளதென்பதைக் காட்ட இன்று பிரயத்க்ஷமாக ஓர் உ ரணத்தைப் பாருங்கள். விதியின் பலமும் புருஷப் பிரயத்தினத் பலமும் இன்று நன்ருக விளங்கும். அவைகளுக்குள்ள பே தையும் தாரதம்யத்தையும் எல்லோரும் தெளிவாய் அறிவார் விதியே தங்களுடைய அபிஷேகத்தைத் தடுத்ததென்று தாங்க இன்னும் பல ஜனங்களும் எண்ணிக்கொண்டிருக்கிறீர்கள். அ தெய்வம் என் பலத்தால் இன்று ஜயிக்கப்பட்டு என்ன படுமென்பதை எல்லோரும் பார்ப்பீர்கள். மதம் பிடித்துச் சங் களை அறுத்துக்கொண்டு மாவெட்டியால் குத்துவதையும் லக்ஷ் செய்யாமல் தன் இஷ்டப்படி ஓடும் யானையைப்போல், த யில்லாமல் செல்லும் தெய்வத்தை, என் புத்தி என்ற பாசத் அடக்கித் திருப்பிக்கொண்டு வருகிறேன். லோகபாலர்கள் ஒ சேர்ந்தாலும், இந்த மூன்று லோகங்களில் உள்ளவர்கள் ஒ சேர்ந்தாலும் தங்களுடைய அபிஷேகத்தைத் தடுக்கமுடியா அப்படியிருக்க, நமது பிதா தடுக்கப்போகிருரோ? தங்களு அபிஷேகத்தைத் தடுத்து, தங்களைக் காட்டிற்கு அனுப்பவே மென்று ரஹஸ்யமாய் யோசனை செய்தவர்களையே இந்த ராஜ் திலிருந்து துரத்தி அந்தக் காட்டில் பதினுன்கு வருஷங்கள் வ கும்படி செய்கிறேன். தங்களுடைய அபிஷேகத்தை நி வேண்டுமென்றும் அவர்களுடைய புத்திரனுக்கு அபிஷே செய்யவேண்டுமென்றும் அவர்கள் கொண்டிருக்கும் ஆசை இன்று வேரறுக்கிறேன். தெய்வத்தடன் விரோதித்துக்கொ ஒருவன் தப்பினுலும் தப்பலாம்; என்னை விரோதித்துக்கொ உயிரோடிருக்கமுடியுமா?

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

"தாங்கள் வனத்திற்கா போகவேண்டும்? போவது நிச்சயமே; ஆனால் இப்பொழுதல்ல; இந்தக் காரணத்தாலல்ல. நமது முன்னோர்களான ராஜரிஷிகள் வெகுகாலம் வரையில் ராஜ்யத்தை ஆண்டு, வயது சென்றபிறகு வானப்பிரஸ்தாசிரமத்தைக் கைக்கொண்டு ராஜ்யத்தைப் புத்திரர்களிடத்தில் ஒப்புவித்து, 'நமது குடிகளை உன் குழந்தையைப்போல் பரிபாலிக்கவேண்டும்' என்று கட்டளையிட்டு, வனத்திற்குப் போய்த் தவம் செய்வது வழக்கம். அப்படியே தாங்களும் அநேக ஆயிரம் வருஷங்கள் வரையில் ராஜ்யபாலனம் செய்துவிட்டுப் பிறகு வனத்திற்குப் போவீர்கள். அப்பொழுது தங்களுடைய புத்திரர்கள் ராஜ்யத்தை ஆள்வார்கள்.

"நமது பிதா ஸ்திரமான சித்தமுள்ளவர் அல்ல. ராஜ்யம் அடிக்கடி மாறுமென்று தங்களுக்கு சந்தேகமுண்டாகி, தங்களுக்கு ராஜ்யம் வேண்டாமென்றால், ஸமுத்திரத்தை அதன் கரை காப்பதுபோல் நான் இந்த ராஜ்யத்தைக் காப்பாற்றுவேன். இப்படியே பிரதிக்ஞை செய்வேன். தவறினால் வீரர்கள் அடையவேண்டிய ஸ்வர்க்கம் எனக்குக் கிடைக்காமல் போகட்டும்.

"ஆகையால் இப்பொழுது தயாராயிருக்கும் பதார்த்தங்களால் அபிஷேகம் செய்துகொள்ளும் விஷயத்தில் தங்கள் மனத்தைச் செலுத்தவேண்டும். அதைத் தடுக்கும் அரசர்களை நெருங்கவிடாமல் துரத்த நான் ஒருவனே போதும். இந்தக் கைகள் வெறும் அழகுக்கோ? என் வில்லும் இடுப்பில் கட்டியிருக்கும் கத்தியும் என் அம்பறையில் நிறைந்திருக்கும் பாணங்களும் வெறும் அலங்காரத்திற்கோ? விளையாடவோ? அல்லது பெருமைக்கோ? இந்த நான்கும் நமது சத்ருக்களை வேரறுக்க ஸாதனங்களல்லவா? எனக்குச் சத்துருவென்று ஒருவன் ஏற்பட்டால் அவன் உயிரோடிருக்கப் பொறுக்கமாட்டேன். அவன் வஜ்ராயுதத்தைத் தரித்த இந்திரனாயிருந்தாலும் ஸரி, மின்னலைப்போல் பிரகாசிக்கும் என் கத்தியால் அவனுடைய பிராணனை வாங்கிவிடுவேன். பாருங்கள், இன்றைக்கு என் கையால் வெட்டப்பட்ட யானைகள், குதிரைகள், மனிதர்களுடைய கைகால்கள், தலைகள் பூமியில் விழுந்து அடர்ந்த காட்டைப்போல் ஸஞ்சரிக்கமுடியாமல் செய்துவிடும். என் கத்தியால் வெட்டித் தள்ளப்பட்ட யானைகள், கொழுந்து விட்டெரியும் மலைகளைப்போலவும், மின்னல்களுடன் கூடிய மேகங்களைப்போலவும், பூமியில் விழும். நான் கையில் வில்லையெடுத்து யுத்தம் செய்ய நின்றால் இந்த லோகத்திலுள்ள புருஷர்களுக்குள் எவனாவது தன்னைச் சூரனென்றும் ஆண்பிள்ளை என்றும் சொல்லிக்கொள்ளத் துணிவானா? எல்லோரும் ஸ்திரீகளைப்போல் ஓடி ஒளிந்துகொள்வார்களல்லவா? ஒரு ஸமயத்தில் ஒரு யுத்த வீரனைப் பல பாணங்களால் அடிப்பேன்; ஒரு ஸமயத்தில் ஒரே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பாணத்தால் அல்ப வீரியமுள்ள பல சத்துருக்களை அடிப்பே இப்படி யானைகளையும் குதிரைகளையும் வீரர்களையும் மர்ம ஸ்தானங்களில் பாணங்களால் துளைப்பேன். 'நீ ஒருவனாய்ப் ப எப்படி ஜயிப்பாய்?' என்று தங்களுக்கு ஸந்தேகம் வேண்ட நான் உபதேசம் பெற்ற அஸ்திரங்களின் மஹிமை இன்று தெ படும். நமது பிதாவின் அதிகாரத்தை அவரிடமிருந்து பிடு தங்களுக்குக் கொடுக்கப்போகிறேன். என் இரண்டு கை சந்தனம் பூசிக்கொள்ளவும், ஆபரணங்களைத் தரிக்கவும், தா களைக் கொடுக்கவும், மித்திரர்களைக் காப்பாற்றவும் இதுவர உபயோகப்பட்டன. அவை இன்றைக்குத் தங்களுடை அபிஷேகத்திற்குத் தடை செய்கிறவர்களை அழிப்பதில் உபயோ படும். ஆகையால் தங்களுடைய விரோதியான எவனு உயிரையும் கீர்த்தியையும் மித்திரர்களையும் நாசம் செய்யவே டும்? நான் தங்களுடைய ஊழியன். தங்களுடைய உத்தர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். இந்தப் பூமண்டலம் த ளுடைய ஆளுகைக்குள் வருவதற்கு நான் என்ன செய்யவே டும்?" என்றார்.

ரகுகுலதிலகன், "குழந்தாய், நமது பெற்றோர்கள் பிழைத் கும்வரையில் அவர்களுடைய கட்டளைப்படி நடக்கவேண் அவர்கள் இறந்தபிறகு ஒவ்வொரு வருஷத்திலும் அதே தி பல ஜனங்களுக்கு அன்னம் போடவேண்டும்; கயா க்ஷேத்திரத் அவர்களை உத்தேசித்துப் பிண்டம் போடவேண்டும்; இம்மூ காரியங்களையும் செய்வதால் ஒருவனுக்குப் புத்திரனென்று பெ கிடைக்கிறது. ஸ்மிருதிகள் இதையே உபதேசிக்கின்றன. ஆ யால் நமது பிதாவின் வார்த்தையை மீறமாட்டேன். எப்படியா லும் அதை நிறைவேற்றப் போகிறேன். லோகத்தில் ஸாது அனுஷ்டிக்கும் மார்க்கம் இதே" என்று தான் முன்பு விஸ்தார உபதேசித்த தர்மத்தை இப்பொழுது சுருக்கமாகச் சொ லக்ஷ்மணனுடைய கண்ணீரைத் துடைத்து, அடிக்கடி ஸமாதா செய்தார்.

விம்ருஜ்ய ப³ாஷ்பம் பரிஸாந்த்வ்ய சாஸக்ருத்
ஸ லக்ஷ்மணம் ராக⁴வ வம்ஶவர்த⁴ந: ।
உவாச பித்ர்யே வசநே வ்யவஸ்தி²தம்
நிபோ³த⁴ மாமேவ ஹி ஸௌம்ய ஸத்பதே² ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸர்க்கம் 24

கௌஸல்யை ஸம்மதித்தது

தம் ஸமீக்ஷ்ய த்வவஹிதம் பிதுர் நிர்தே³ஶ பாலநே।
கௌஸல்யா பா³ஷ்பஸம்ருத்³தா⁴ வசோ த⁴ர்மிஷ்ட²
மப்³ரவீத்॥ (1)

'ராமன் தர்மத்திலிருந்து விலகமாட்டான். அவனுடைய பிதாவின் வார்த்தைப்படி நடப்பான் என்பதில் ஸந்தேகமில்லை' என்று கௌஸல்யை நிச்சயமாகத் தெரிந்துகொண்டு, அந்த ஸமயத்தில் கண்ணீர் விடுவது அபசகுனம் என்றெண்ணி அடக்கிக் கொண்டு "எனக்கும் தசரதருக்கும் அருமைக் குழந்தையாகப் பிறந்த நீ, இது வரையில் துக்கத்தையே அறியாதவன்; காட்டிற் குப்போய் அங்கே உதிர்ந்து கிடக்கும் நெல்லுகளை ஒவ்வொன்ருய்ப் பொறுக்கித் தின்று எப்படிப் பிழைப்பாய்? உன் வேலைக்காரர் களும் பரிசாரகர்களும் நேர்த்தியான அன்னத்தைப் புஜித்து ஸுகமாக இருக்கிருர்களே. அவர்களுக்குப் பிரபுவான நீ, காட்டில் பழங்களையும் கிழங்குகளையும் தின்று எப்படிப் பிழைப்பாய்? 'ராமன் தசரதருக்கு மூத்த புத்திரன்; அவனிடத்தில் அவருக்கு எல்லையற்ற பிரீதி; உத்தம குணங்கள் யாவும் பொருந்தினவன். அப்படியும் அவனை அவர் ராஜ்யத்திலிருந்து துரத்திவிட்டார்' என்று ஒருவன் கேட்டால் அதை அவன் நம்புவாஞ? அப்படி நம்பினுலும், ராமனுக்கே ஆபத்து நேரும்பொழுது நமது கதி என்ன ஆகுமோ என்று திகிலடையமாட்டாஞ? எல்லாப் பிராணி களுக்கும் ஆனந்தத்தை உண்டுபண்ணும் நீயே காட்டிற்குப் போகும்படி நேர்ந்ததை யோசித்தால், எல்லோருக்கும் ஸுக துக்கங்களைக் கொடுக்கும் சக்தி தெய்வமே; அதைவிட மேலானது ஒன்றுமில்லையென்று தோன்றுகிறது. உன்னைவிட்டுப் பிரிவதாலுண் டாகும் சோகமென்ற நெருப்பு கோடை காலத்தில் வனத்திலிருக் கும் புல் பூண்டுகளைக் காட்டுத்தீ எரிப்பதுபோல், என்னை எரிக் கிறது. அதற்கு என் தேகமே இருப்பிடம். உன்னைப் பார்க்காம லிருப்பதென்ற காற்ருல் அது வளர்கிறது. உன்னை நினைத்துப் பிரலாபித்தலால் உண்டாகும் துக்கமே அதைப் போஷிக்கும் ஸமித்துகள். ஆருகப் பெருகும் கண்ணீரே அதில் ஹோமம் செய்யப்படும் ஆஹுதிகள். உன்னைப்பற்றிய கவலையாலுண் டாகும் உஷ்ணமே இதிலிருந்து கிளம்பும் புகை. இவைகளைச் சேர்த்துவைக்கும் புருஷப் பிரயத்தினமே என் பெருமூச்சுகள்; அதை அணைக்கும் ஜலத்தைப் போன்றவனே நீ. அந்த ஜலமில் லாமல் இந்தப் பாழும் நெருப்பு வர வர வளர்ந்து என்னை நாசம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri M Hariharan Collection, Shringeri Mutt Chennai

செய்யப்போகிறது ; தன் கன்றையும் பசு பின் தொடர்வது ஆ
ரியமா? நீ எங்கே போகிருயோ அங்கே நானும்வருவேன்'' என்ரு

ராமன், "அம்மா! தாங்கள் ஒன்றை யோசிக்கவேண்டு
நானும் காட்டிற்குப் போய், தாங்களும் என்னுடன் வந்
கைகேயியால் வஞ்சிக்கப்பட்ட என் பிதாவைக் கைவிட்டால் அ
பிழைக்கமாட்டாரென்பது நிச்சயம். ஸாதாரணமான ஸ்
களுக்கே பர்த்தாவைக் கைவிடுவது வெகுக் குரூரமான செய
தாங்களோ அதை மனத்தால் நினைப்பதும் பிசகு. என் பிதாவா
சக்கரவர்த்தி உயிரோடிருக்கும் வரையில் தாங்கள் அவருக்
சிச்ருஷை செய்யவேண்டியது. இதே நமது முன்னேர்கள்
நித்தியமான தர்மம்'' என்ருர்.

கௌஸல்யை மஹா தர்மசிந்தையுள்ளவள் ; ஆகைய
ராமனுடைய வார்த்தைக்குக் கட்டுப்பட்டு அப்படியே செய்வத
ஒப்புக்கொண்டாள். பிறகு அவர் அவளுடைய மனத்தில்
கொண்ட துக்கத்தை நீக்கி, புத்தியை ஸ்திரப்படுத்துவதற்
"தாங்களும் நானும் மகாராஜாவின் ஆக்ஞைக்குக் கீழ்ப்பட
வேண்டியதல்லவா? அவர் நம்மை ஆளும் அரசன் ; நம்
போஷிக்கும் பிரபு ; நமக்குத் தர்மத்தைஉபதேசிக்கும் குரு ; கு
களால் எல்லோரைக் காட்டிலும் மேலானவர் ; எல்லோருக்
அதிபதி ; பதினுன்கு வருஷங்களை ஒரு க்ஷணத்தைப்போல் காட்
விளையாட்டாகக் கழித்துவிட்டு, மறுபடியும் தங்களுடைய பா
களில் பணிவிடை செய்வேன்'' என்ருர்.

கௌஸல்யை ராமனைக் காட்டிற்கு அனுப்புவதற்கும் தா
அயோத்யையில் இருப்பதற்கும் ஸம்மதித்தாள். ஆனுல் அவரி
தில் தான் வைத்திருக்கும் பிரீதியையும், தன் சக்களத்திகளி
துஷ்ட ஸ்வபாவத்தையும் நினைத்து நினைத்துக் கண்ணீர் பெ
"ராமா! இந்தத் துஷ்ட ஸ்திரிகளின் நடுவில் நான் இருக்கவேமா
டேன் ; காட்டிலிருக்கும் மிருகங்களைப்போல் உன்னுடன் ஆன
மாகக் காலம் கழிப்பேன். என்னுல் உனக்குக் கொஞ்சம்கூ
கஷ்டம் நேராது. உன் பிதாவின் உத்தரவுப்படி காட்டிற்
போகவேண்டுமென்று உனக்கிஷ்டமிருந்தால் என்னையும் கூட்
கொண்டு போ'' என்ருள்.

பிறருக்கு ஏதாவது துக்கம் நேர்ந்தால் ராமனுடைய மன
துக்கத்தால் மிகவும் தபிக்கும். ஆனுல் பிதாவின் கட்டளை
நிறைவேற்றுவதென்ற தர்மத்திற்கு எங்கே குறைவு வரு
என்று பயந்து, கௌஸல்யையின் துக்கத்தைப் பார்த்துத் தா
துக்கப்படாமல், மனேதைரியத்தால் தன் துயரத்தை அடக்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கொண்டார். அப்பொழுது தன் தாய் தான் வனத்திற்குப் போக ஸம்மதித்தவுடன், அவளுடைய துக்கத்தைச் சற்று ஆற்றுவதற்காகத் தன் துக்கத்தை வெளியிட்டு அழுதுகொண்டு, "ஸ்திரீகள் பிழைத்திருக்கும் வரையில் பர்த்தாவே அவர்களுக்குத் தெய்வம்; பர்த்தாவே பிரபு. இப்பொழுது தங்களுக்கும் எனக்கும் மஹாராஜாவே பிரபு; பூமண்டலாதிபதியான அவர் நம்மை ரக்ஷிக்கும்பொழுது நாம் அநாதைகளல்ல. மேலும் சக்களத்திகள் தங்களுக்குக் கொஞ்சமாவது கெடுதி செய்ய நியாயமில்லை. எனக்குப் பதிலாக இந்த ராஜ்யத்தை ஆளப்போகிற பரதன் தர்மாத்மா; தர்மத்தை அனுஷ்டிப்பதிலேயே பிரியமுள்ளவன்; எல்லோரிடத்திலும் பிரியமாகப் பேசுகிறவன். அப்படியிருக்க, தங்களிடத்தில் விசேஷ பக்தியுடன் சிச்ருஷை செய்வான். நான் காட்டிற்குப் போன பிறகு மஹாராஜா என்னை விட்டுப் பிரிந்த துக்கத்தால் கொஞ்சம்கூட வருத்தமடையாமல் இருக்கும்படி தாங்கள் வெகு ஜாக்கிரதையுடன் பார்த்துக்கொள்ளவேண்டும். அவரோ வயது முதிர்ந்தவர்; இந்தக் கொடியசோகத்தால் அவர் இறந்து போகாதபடி எப்பொழுதும் வெகு ஜாக்கிரதையாகத் தாங்கள் நடந்துகொள்ளவேண்டும். ஸ்திரீகள் விரதங்களையும் உபவாஸங்களையும் அனுஷ்டித்து மஹா புண்ணியங்களை ஸம்பாதித்தாலும், கணவனுக்குச் சிச்ருஷை செய்யாவிட்டால் பாபிகளின் கதியை அடைவார்கள். தேவபூஜைகளைச் செய்யாவிட்டாலும் பெரியோர்களை நமஸ்கரிக்காமற் போனாலும் விரதங்களை அனுஷ்டிக்காமலிருந்தாலும் பர்த்தாவிற்குச் சிச்ருஷையைச் செய்துவந்தால் அவர்களுக்கு உத்தம லோகங்கள் கிடைக்கும். தங்களுடைய கணவனுக்கு சிச்ருஷை செய்வதே ஸ்திரீகளுக்கு மேலான தர்மமென்று சுருதிகளும் ஸ்மிருதிகளும் உபதேசிப்பதற்கு இதே காரணம்; முன்னோர்களின் ஆசாரமும் இதே.

"புத்தியைச் செலுத்த வேறு விஷயமில்லாமல் தாங்கள் சும்மா இருந்தால் துக்கம் மேலிடும். ஆகையால் பிராம்மண சிரேஷ்டர்களை முன்னிட்டு நான் க்ஷேமமாய்ப் போய் வருவதற்காகச் சாந்தி ஹோமம், புஷ்டி ஹோமம் இன்னும் மற்ற மங்கள காரியங்களைச் செய்வியுங்கள். சந்தனம், தாம்பூலம், புஷ்பம் முதலியவைகளால் தேவதைகளையும் பிராம்மணர்களையும் ஆராதியுங்கள். ஸ்நானம், ஜபம், உபவாஸம் முதலிய நியமங்களை அனுஷ்டித்துக்கொண்டு சுத்தமான அன்னத்தைப் புஜித்து, தங்களுடைய நாதனுக்குப் பணிவிடை செய்வதில் கவனத்தைச் செலுத்துங்கள். நான் திரும்பி வருங்காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருங்கள். இப்படிச் செய்தால் தர்மாத்மாக்களில் சிரேஷ்டரான என் பிதா பிழைத்திருப்பதையும், நான் இங்கே திரும்பி வருவதையும் பார்க்கும் பாக்கியத்தை அடைவீர்கள்" என்றார்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Hariharan Collection, Sholinganallur, Chennai

புத்திரனை விட்டுப் பிரியவேண்டுமே என்ற துக்கத்
கண்ணீர் பெருகக் கௌஸல்யை, "காட்டிற்குப் போகவே
மென்ற புத்தி உனக்கு உறுதியாக உண்டாகியிருக்கிறது. என்
அதை மாற்றமுடியவில்லை. காலபலத்தை யாரால் ஜ
முடியும்? குழந்தாய், ஸாவதானமாகப் போய்வா. உ
எப்பொழுதும் க்ஷேமமுண்டாகட்டும்; ஜயமுண்டாகட்டும்
திரும்பி வந்தாலன்றி என் சோகம் தீராது. உன் பிதா
வார்த்தையை நிறைவேற்றி, உன் இஷ்டத்தையும் பூர்த்தி செ
மஹா கீர்த்தி அடைந்து நீ திரும்பி வந்தபிறகே நிகர
ஸுகத்தை அனுபவிப்பேன். என் வார்த்தையையும் தள்ளிவி
காட்டிற்குப் போகவேண்டுமென்று நீ ஒரே பிடிவாதமாக இ
கும்படி உன்னைத் தூண்டிவிடும் விதியின் பலத்தை யாரால் அ
முடியும்? மஹாபராக்கிரமசாலியே, க்ஷேமமாகப் போய்
சீக்கிரத்தில் திரும்பிவந்து மதுரமான வார்த்தைகளால்
மனத்தை ஸந்தோஷப்படுத்து. ஒரு நிமிஷம்கூட உன்னைவிட்
பிரிய என் மனம் ஸஹிக்கவில்லையே. நீ காட்டிலிருந்து மான்தே
மரவுரி ஜடைகளுடன் திரும்பி வரும் காலம் இந்த க்ஷணமாக
இருக்கக்கூடாதா?" என்று சொல்லித் துக்கித்தாள். பிறகு ரா
காட்டிற்குப் போகத் தீர்மானித்திருக்கிறார் என்று தெரி
கொண்டு, மிக்கப் பிரீதியுடன் அவருடைய க்ஷேமத்தை உத்தே
துச் செய்யவேண்டிய மங்கள காரியங்களைச் செய்ய ஆரம்பித்தா

தத[2] ஹி ராமம் வநவாஸ நிஶ்சிதம்
ஸமீக்ஷ்ய தே[3]வீ பரமேண சேதஸா ।
உவாச ராமம் ஶுப[4] லக்ஷணம் வசோ
ப[3]பூ[4]வ ச ஸ்வஸ்த்யயநாபி[4] காங்க்ஷிணீ ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸர்க்கம் 25

கௌஸல்யை ராமனுக்கு மங்களாசீர்வாதம் செய்தது

ஸாபநீய தமாயாஸம் உபஸ்ப்ருஶ்ய ஜலம் ஶுசி ।
சகார மாதா ராமஸ்ய மங்களாநி மநஸ்விநீ ॥ (1)

தன் துக்கத்தை அடக்கிக்கொண்டு, தான் அதுவரையில் அழுதுகொண்டிருந்ததாலுண்டான அசுத்தத்தைப் போக்க ஆசமனம் செய்து சுத்தமாக இருந்துகொண்டு கௌஸல்யை, "ரகுகுல திலக, காட்டிற்குப் போகாமல் உன்னைத் தடுக்கமுடியவில்லையே ; ஆகையால் போய் வா. பதினான்கு வருஷங்களுக்குப் பிறகு திரும்பி வந்து முன்னோர்களின் ஆசாரப்படி ராஜ்யாபிஷேகம் செய்துகொள். எந்த தர்மத்தை நீ பிரீதியுடன் பூர்ணமாக அனுஷ்டிக்கிறாயோ, அந்த தர்மமே உன்னைக் காப்பாற்றட்டும். நாற்சந்திகளிலும் தேவாலயங்களிலும் நீ நமஸ்கரிக்கும் தேவதைகளும் மஹரிஷிகளும் காட்டில் உன்னை ரக்ஷிக்கட்டும். விசுவாமித்திர மஹரிஷியால் உனக்கு உபதேசிக்கப்பட்ட அஸ்திரங்கள் யாவும் உத்தம குணங்களுள்ள உன்னை எப்பொழுதும் காப்பாற்றட்டும். நீ பெற்றோர்களுக்குச் செய்யும் சிச்ரூஷையும் நீ பேசும் ஸத்தியமும் உன்னைக் காப்பாற்றட்டும். உனக்குத் தீர்க்காயுளைக் கொடுக்கட்டும். ஸமித்துகள், தர்ப்பங்கள், பவித்திரங்கள், அக்னி குண்டங்கள், தேவபூஜாஸ்தானங்கள், குன்றுகள், மரங்கள், செடிகள், குட்டையான மரங்கள், மடுக்கள், பக்ஷிகள், ஸர்ப்பங்கள், ஸிம்ஹங்கள் உன்னைக் காப்பாற்றட்டும். ஸாத்யர்கள் விச்வே தேவர்கள், மருத்துகள், மஹரிஷிகள், தாதா விதாதா பூஷா பகன் அர்யமா முதலிய பன்னிரண்டு ஆதித்யர்கள், இந்திரன், யமன், வருணன், குபேரன் முதலிய லோகபாலர்கள், பக்ஷங்கள், மாஸங்கள், ருதுக்கள், வருஷங்கள், பகல், ராத்திரி, முகூர்த்தங்கள் முதலியவைகளின் அதிஷ்டான தேவதைகளும் உனக்கு எப்பொழுதும் மங்களங்களைச் செய்யட்டும். தியானமும் யோகமும் வேத சாஸ்திரங்களில் சொல்லப்படும் தர்மமும் உன்னை நான்கு புறங்களிலும் காப்பாற்றட்டும். ஸனத்குமாரரும் ஸோமனும் பிருஹஸ்பதியும் ஸப்த ரிஷிகளும் நாரதரும் உன்னை எப்பொழுதும் காப்பாற்றட்டும். மஹாப்பிரஸித்தியுள்ள திக்பாலர்களும் நான் செய்யும் ஸ்தோத்திரத்தால் ஸந்தோஷித்து உன்னைக் காப்பாற்றட்டும். கடற்கரையிலிருக்கும் மலைகளும் ஸமுத்திரமும் குபேரனும் வருணனும் ஸ்வர்க்கமும் ஆகாசமும் பூமியும் நதிகளும் நக்ஷத்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Harihara Collection, Chengalpattu, Chennai

திரங்களும் கிரஹங்களும் கிரஹதேவதைகளும் ராத்திரி களுக்கு அபிமானி தேவதைகளும் இரண்டு ஸந்தியா தேவதை உன்னைக் காப்பாற்றட்டும் ருதுக்கள், மாதங்கள், வருஷங் கலைகள், காஷ்டைகளின் அதிஷ்டான தேவதைகள் உ க்ஷேமத்தைக் கொடுக்கட்டும். காட்டில் நீ தபஸ்வியாக வஸி பொழுது ஆதித்யர்களும் ஸாத்யர்களும் உனக்குச் சுகத் கொடுக்கட்டும். ராக்ஷஸர்களாலும், பிசாசங்களாலும், நடத்தையுள்ளவர்களாலும் மாம்ஸத்தைப் புஜிக்கும் ஐந்துக் லும் உனக்குப் பயமுண்டாக வேண்டாம். வானரங்கள், கள், காட்டு ஈக்கள், கொசுக்கள், ஊரும் ஐந்துக்கள், புழு காட்டில் உனக்குக் கெடுதி செய்யாமலிருக்கட்டும். யானைகள், ஸிம்ஹங்கள், புலிகள், கரடிகள், பன்றிகள், எருமை பயங்கரமான காட்டுமாடுகள் இவை உனக்குத் தீங்கு வேண்டாம். நரமாம்ஸத்தைத் தின்னும் மற்ற பிராணி நான் செய்யும் பூஜையால் திருப்தியடைந்து உனக்குக் செய்யாமலிருக்கட்டும். நீ போகும் வழிகளில் உனக்கு க்ஷேமமு டாகட்டும். உன் பராக்கிரமம் வீணாகாமல் நீ உத்தே பிரயோஜனத்தை அடைவாய். நீ விரும்பும் ஸகல பொருள்க உனக்கு வனத்தில் கிடைக்கட்டும். பூமியிலும் ஆகாசத்தி உனக்கு விரோதிகளாக இருக்கும் தேவதைகளும் உ க்ஷேமத்தை உண்டாக்கட்டும். பிருஹஸ்பதி, ஸோமன், ஸூரி குபேரன், யமன், அக்னி, வாயு, ஹோமப்புகை, ரிஷிகளிட லிருந்து நீ அப்யஸித்த மந்திரங்கள் இவையெல்லாம் வனத் நீ ஸ்நானம் செய்யும் காலத்தில் உன்னைக் காப்பாற்றட்டும். லோகத்திற்கும் பிரஹ்மாவும், ஸகல பிராணிகளையும் போஷிக் நாராயணனும், மற்ற ரிஷிகளும் வனத்தில் உன்னை ரக்ஷிக்கட் என்று சொன்னபின் மாலைகளாலும் கந்தங்களாலும், அ களுக்குத் தகுந்த ஸ்தோத்திரங்களாலும் தேவதைக பூஜித்தாள்.

பிறகு மஹாத்மாவான ஒரு பிராம்மணனால் அக்னியை மூ ஹோமத்திற்காக நெய், ஸமித்துகள், வெள்ளைக்கடுகு, வெ மாலைகள் முதலியவைகளை ஸம்பாதித்து, ராமனுக்கு க்ஷேமமு டாவதற்காக அதில் விதிப்படி ஹோமம் செய்தாள். உபா யாயரும் ராமனுக்கு ஸகல உபத்திரவங்களும் நீங்கி ஆரோக் உண்டாக வேண்டுமென்று ஹோமம் செய்து, மிகுந்த ஹவி ஹோமகுண்டத்திற்கு வெளியில் லோகபாலர் முதலியவர்களுக் பலி வைத்தார். பிராம்மணர்களுக்குத் தேன், நெய், த அக்ஷதை முதலியவைகளைக் கொடுத்து, ராமனுக்கு வனத் க்ஷேமமுண்டாகும்படி ஸ்வஸ்திவாசனம் செய்வித்தாள். பி உபாத்தியாயருக்கு வேண்டியவரையில் தக்ஷிணையைக் கொடுத்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கௌஸல்யை, "குழந்தாய், தேவேந்திரன் விருத்ராஸுரனைக் கொன்று ஸகல தேவதைகளாலும் வணங்கப்பட்டபொழுது, அவனுக்கு உண்டான க்ஷேமம் உனக்கும் உண்டாகட்டும். கருடன் அமிருதத்தைக் கொண்டுவரப் புறப்பட்டபொழுது அவருடைய தாயான வினதை அவருக்கு எந்த க்ஷேமத்தைப் பிரார்த்தித்தாளோ அது உனக்கும் உண்டாகட்டும். அமிருதத்திற்காக ஸமுத்திரத்தைக் கடையும்பொழுது தைத்தியர்களை நாசம் செய்யும்பொருட்டு இந்திரனுக்கு அதிதி எந்த க்ஷேமத்தை அனுக்ரஹித்தாளோ அது உனக்கும் உண்டாகட்டும். அளவற்ற தேஜஸுள்ள மஹாவிஷ்ணு லோகங்களை மூன்றடியால் அளக்கப் போகையில் அவருக்கு நேர்ந்த க்ஷேமம் உனக்கும் உண்டாகட்டும். ருதுக்களும் ஸமுத்திரங்களும் உனக்குப் பரம மங்களத்தைச் செய்யட்டும்" என்று அவருடைய தலையில் அக்ஷதைகளைப் போட்டு, நேர்த்தியான கந்தத்தை அவருடைய தேகத்தில் பூசி, பிரஸித்தமான வீரியத்துடன் கூடின விசல்யகரணி யென்ற மூலிகையை ரக்ஷையாகக் கையிற் கட்டி, அதற்குத் தகுந்த மந்திரங்களை ஜபித்தாள்.

மனத்தில் மிகுந்த துக்கமிருந்தாலும் ஸந்தோஷித்தவளைப் போல் காட்டிக்கொண்டு, ராமனைத் தன் ஸமீபத்தில் அழைத்து உச்சி முகர்ந்து ஆலிங்கனம் செய்து தழதழத்த வார்த்தைகளால் "நீ உத்தேசித்த காரியத்தை நிறைவேற்ற ஸௌக்கியமாகப் போய் வா. உன் எண்ணங்கள் யாவற்றையும் பூர்த்தி செய்து நோயில்லாமல் மறுபடியும் அயோத்யைக்கு வந்து நீ நமது முன்னோர்கள் அனுஷ்டித்த க்ஷத்திரிய தர்மத்தைக் கைக்கொண்டு நீ ஸுகமாயிருப்பதைப் பார்ப்பேன். காட்டில் என் மகனுக்கு என்ன நேருமோ என்ற கவலை தீர்ந்து, உன்னை மறுபடியும் பார்த்த ஸந்தோஷத்தால் முகம் மலர்ந்தவளாக, உதயமான பூர்ண சந்திரனைக் காண்பதுபோல் உன்னை மறுபடியும் காண்பேன்; பிதாவின் வார்த்தையை நிறைவேற்றி, காட்டிலிருந்து வந்து, ஸிம்ஹாஸனத்தில் உட்கார்ந்து அதிகாரம் செய்வதையும் பார்ப்பேன். வனவாஸம் செய்து திரும்பி வந்து உன் பதவிக்குத் தகுந்த அலங்காரங்களுடன் எனக்கும் ஸீதைக்கும் ஸகல மனோரதங்களையும் பூர்த்தி செய். என்னால் பூஜிக்கப்பட்ட தேவதைகளும் சிவன் முதலியவர்களும், மஹரிஷிகளும் பூதங்களும் அஸுரர்களும் உரகர்களும் திக்குகளும் நீ வனத்திற்குப் போகும் பொழுது உனக்கு ஸகல மங்களங்களையும் கொடுக்கட்டும்" என்று கண்களில் நீர் ததும்ப விதிப்பிரகாரம் ஆசீர்வாதம் செய்து முடித்து, ராமனுக்கு ரக்ஷையாக அவரைப் பிரதக்ஷிணம் செய்து, மிகுந்தப் பிரீதியுடன் அடிக்கடி ஆலிங்கனம் செய்துகொண்டாள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharen Collection, Sholingnallur, Chennai

ராமன் ஸ்வபாவத்திலேயே மஹாதேஜஸ்வி. கௌஸல்ய யின் ஆசீர்வாதத்தாலும் ரக்ஷையினாலும் அவருடைய தேஜ விருத்தியாயிற்று பிறகு எந்த ஆபத்திலும் தர்மம் தவறா நடந்துகொண்டதனால் மஹாகீர்த்தியை அடைந்த ராமன் தாயின் பாதங்களில் அடிக்கடி நமஸ்கரித்து, ஸீதைக்கு அந் ஸமாசாரத்தைத் தெரிவிக்கத் தன் அந்தப்புரத்தை நோக் வந்தார்.

ததா²து தே³வ்யா ஸ க்ருத ப்ரத³க்ஷிணோ
நிபீட்³ய மாதுஸ்சரணௌ புந: புந:।
ஜகா³ம ஸீதாநிலயம் மஹாயஶா:
ஸ ராக⁴வ: ப்ரஜ்வலித: ஸ்வயா ஶ்ரியா ॥ (4



CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ ராமசந்த்ராய நம:

2. செய்தொழிலில் தனலாபம் உண்டாக

(For Prosperity in One's Calling)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்
அயோத்யா காண்டம் : ஸர்க்கம் 32

உமா ஸம்ஹிதா

அர்த²காம : படே²த் ஸர்³கம் யாத்ராத³ாந கத³ாம்ஶகம்
ராமஸ்யாரண்ய க³மந ஸமயே து த்ரிஸந்த்⁴யகம் ॥ கு

தாம் எதிர்பார்த்த பணம் அல்லது பொருள் தனக்குக் வகை கூடாமை, உத்தியோகத்தில் சம்பள உயர்வு ஏற்படாமை, கொடுக்கல் வாங்கல்களில் தகராறு முதலிய பணக்கஷ்டங்கள் நிவ்ருத்தியாவதற்கும் பொதுவாக மேன்மேலும் பணம் விருத்தியாவதற்கும் ஸ்ரீ ராமன் காட்டிற்குப் போகுமுன் செய்த "யாத்ரா தானத்தை" விவரிக்கும் அயோத்யா காண்டம் 32-வது ஸர்க்கத்தைக் காலையில் பாராயணம் செய்யவேண்டும்.

நிவேதனம் : ஐந்து வாழைப்பழங்கள்.

ஸங்கல்பம்

ஸ்ரீ ஸீதாலக்ஷ்மண ப⁴ரத ஶத்ருக்⁴ந ஹநுமத்ஸமேத
ஸ்ரீ ராமசந்த்³ர ப்ரபோ⁴: ப்ரஸாதே³ந, அஸ்ம
து³பாத்தேஷு அர்த்த² பரேஷு கர்மஸு
புஷ்கல த⁴நாவாப்த்யர்த்த²ம் "யாத்ராத³ாநா"
த்மக ஸ்ரீமத்³ ராமாயண க⁴ட்ட பாராயணம்
அஹம் கரிஷ்யே !

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸர்க்கம் 32

யாத்ராதானம்

தத: மாஸநமாஜ்ஞாய ப்ராது: முபகரம் ப்ரியம் ।
க³த்வா ஸ ப்ரவிவேஸாமு ஸுயஜ்ஞஸ்ய நிவேஸநம் ॥

ராமன் பிராம்மணர்களுக்குத் தானம் கொடுக்கிறார் என்ற புண்ணியகரமான வார்த்தையைக் கேட்டு லக்ஷ்மணன், தன்னை அழைத்துப் போக ராமன் ஸம்மதித்ததைப்பற்றி அடங்காத ஆனந்தமடைந்தார். பிறகு அவருடைய உத்தரவுப்படி ஸுயக்ஞருடைய வீட்டிற்குப் போய் அக்னிஹோத்திர சாலையில் அவரைக் கண்டு நமஸ்காரம் செய்து, "மித்திரரே! வாரும். லோகத்தில் ஒருவரும் செய்யத் துணியாத காரியத்தைச் செய்த என் தமையனுடைய வீட்டிற்கு வந்து பாரும்" என்று அழைத்தார். ஸுயக்ஞர் காலையில் செய்யவேண்டிய அக்னிஹோத்திரத்தை முடித்துவிட்டு ஸகல லக்ஷ்மியும் விளங்கும் ராமனுடைய அந்தப்புரத்திற்கு லக்ஷ்மணனுடன் வேகமாகப் போனார்.

மஹாஞானியான ஸுயக்ஞரைக் கண்டு ராமனும் ஸீதையும் பரபரப்புடன் எழுந்து கைகூப்பி, ஹோமாக்னியை உபசரிப்பது போல் பிரதக்ஷிணம் செய்து நமஸ்கரித்தார்கள். உத்தமமான தங்கத் தோள்வளைகளையும், தங்கச் சரட்டில் சேர்க்கப்பட்ட நவரத்தினங்களையும், குண்டலங்களையும், கைவளைகளையும், புஜகீர்த்திகளையும் இன்னும் பல அபூர்வமான ரத்தினங்களையும் ராமன் ஸுயக்ஞருக்குக் கொடுத்து உபசரித்தார். பிறகு ஸீதை நினைவுபடுத்தியபின் "மித்திர, இந்த ஹாரத்தையும் தங்கக் கொடியையும் ஒட்டியாணத்தையும் தங்களுடைய பாரியைக்கு ஸீதை கொடுக்க விரும்புகிறாள்; அதை அங்கீகரிக்கும்படி பிரார்த்திக்கிறேன். மேலும், தான் வனத்திற்குப் போகும் ஸமயத்தில் விசித்திரமாய் வேலை செய்யப்பட்ட இந்தக் கேயூரங்களையும் தோள்வளைகளையும் தங்களுடைய பத்தினிக்குக் கொடுக்கும்படி பிரார்த்திக்கிறாள். பலவித ரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்டு விலையுயர்ந்த மேல் விரிப்புடைய இந்தக் கட்டிலைத் தாங்கள் அங்கீகரிக்கவேண்டும் என்று விரும்புகிறாள். என் மாமா எனக்குக் கொடுத்த சத்ருஞ்ஜயனென்ற யானையையும் இன்னும் ஆயிரம் யானைகளையும் தங்களுக்குக் கொடுக்கிறேன்" என்றார். ஸுயக்ஞர் அவைகளைப் பெற்றுக்கொண்டு ராமலக்ஷ்மணர்களையும் ஸீதையையும் ஆசீர்வதித்தார்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பிறகு பிரஹ்மா தேவராஜனைக் கட்டளையிடுவதுபோல் ராம மிகுந்தப் பிரியத்துடன், "லக்ஷ்மண, அகஸ்தியருடைய புத்திர யும் விச்வாமித்திரருடைய புத்திரரையும் இங்கே வருவி லோகத்தில் பயிர்களை ஜலத்தால் போஷித்து வளர்ப்பதுபோ அந்த பிராம்மணோத்தமர்களுக்கு ரத்தினங்களைக் கொடுத் திருப்தி செய். அநேகமாயிரம் பசுக்களையும், தங்கம், வெள் நவரத்தினங்களையும் வேண்டிய வரையில் கொடு.

"யஜுர்வேத தைத்திரீய சாகையை அத்யயனம் செய்ப களுக்கு ஆசாரியரான ஒரு பிராம்மணோத்தமர் ஒவ்வொரு நா என் தாயின் வீட்டிற்கு வந்து, மிகுந்த பக்தியுடன் அவளுக்கு ஆ வாதம் செய்துகொண்டிருக்கிறார்; அவர் மஹாவித்வான்; வே களின் ரஹஸ்யத்தை அறிந்தவர். வாஹனங்கள், பட்டுகள், பே வைகள், வேலைக்காரர்கள் முதலியவைகளை வேண்டியவரை அவருக்குக் கொடு. நமது வீட்டில் வெகுநாளாகப் பழகிக்கொ டிருக்கும் நமது மந்திரியும் ஸாரதியுமான சித்ரரதரென்பவரு எண்ணிறந்த ஆடுகளையும் ஆயிரம் மாடுகளையும் ரத்தினங்களை வஸ்திரங்களையும் தானியங்களையும் கொடுத்துத் திருப்தி செ வேதத்தில் கடம் காலாபமென்ற பாகங்களை அத்யயனம் செ கொண்டு பலாச தண்டத்தைத் தரிக்கும் பல பிரம்மசாரி என்னால் ஆதரிக்கப்பட்டிருக்கிறார்கள். எப்பொழுதும் வேத யயனம் செய்துகொண்டிருப்பதால் ஆஹாரம்தேட அவர்களுக் பொழுதில்லை; இயற்கையாகவே சுறுசுறுப்பு இல்லாதவர்க ருசியான பதார்த்தங்களில் விருப்பமுள்ளவர்கள்; பெரியோர் மெச்சும் நன்னடத்தை உள்ளவர்கள். ரத்தினங்களால் அலங் கப்பட்ட எண்பது வாஹனங்களையும் தான்யங்களைச் சுமக்க ஆயி எருதுகளையும் நிலங்களை உழுவதற்கு இருநூறு மாடுகளையும் ப தயிர் இவைகளுக்காக ஆயிரம் பசுக்களையும் அவர்களுக்குக் கொ மேகலையென்ற அரை நூல் மாலையைத் தரிக்கும் அநேக பிர சாரிகள் தங்களுக்கு விவாஹம் செய்விக்கவேண்டுமென்று தாயை அண்டியிருக்கிறார்கள். அவர்களில் ஒவ்வொருவருக் ஆயிரம் பசுக்களைக் கொடு. அதனால் கௌஸல்யை திரு யடையட்டும்" என்று கட்டளை இட்டார். ராமனால் குறிப்பி பட்ட தனம் முதலியவைகளை அந்தப் பிராம்மணர்களு லக்ஷ்மணன் குபேரனைப்போல் தானே கொடுத்தார்.

பிறகு தாரைதாரையாய்க் கண்ணீர்ப் பெருக்கிக்கொ நிற்கும் பரிவாரங்களில் ஒவ்வொருவருக்கும் ஸௌக்கியமா பிழைப்பதற்குப் போதுமான தனத்தை ராமன் தானே கொடு "நாங்கள் திரும்பி வரும்வரையில் என் அரண்மனையை லக்ஷ்மணனுடைய வீட்டையும் சூன்யமாய் வைக்காமல் நீங்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அங்கிருந்து பாதுகாக்கவேண்டும்'' என்றார். பிறகு தன் பொக்கிஷத் தலைவனைத் தருவித்து, "என் ஐசுவரியம் முழுவதையும் இங்கே கொண்டுவா'' என்று உத்தரவு செய்தார். அவைகளை வேலைக்காரர்கள் குப்பல்களாகக் குவித்தார்கள். பிறகு ராம லக்ஷ்மணர்கள் அவைகளைப் பிராம்மணச் சிறுவர்களுக்கும் கிழவர் களுக்கும் ஏழைகளுக்கும் போதுமான வரையில் கொடுத்தார்கள்.

அப்போது துகர்க்கரிஷியின் வம்சத்தில் பிறந்த ஒருபிராம்மணன் அங்கே வந்தார்; அவருக்குத் திரிஜடரென்று பெயர். ஏழ்மைத் தனத்தால் தேகம் முழுவதும் மஞ்சள் வர்ணம் படர்ந்திருந்தது; வயல்களில் சிந்திக் கிடக்கும் நெல்லை ஒவ்வொன்றாகப் பொறுக்கி ஜீவனம் செய்கிறவர்; மிகவும் வயது சென்றவர்; தன் மனைவி மக்களுடன் காட்டில் வஸிப்பவர்.

இளம் பெண்ணான அவருடைய பார்யை குழந்தைகளை அவருக்குக் காட்டி, "ஸ்வாமி, நாம் ஏழ்மைத்தனத்தை எவ்வளவு காலம் பொறுக்கமுடியும்? தங்கள் கையிலுள்ள கோடாலி, கலப்பை, மண்வெட்டி முதலியவைகளை எறிந்துவிட்டு நான் சொல்லுகிறபடி கேளுங்கள். தங்களுக்கு ஏதாவது திரவியம் கிடைக்கவேண்டுமென்ற எண்ணமிருந்தால் தர்மமே அவதாரம் எடுத்திருக்கும் ராமனைத் தரிசனம் செய்யுங்கள்'' என்றாள். அவர் தன் பத்தினியின் வார்த்தையை ஒப்புக்கொண்டு தன் கந்தை வஸ்திரத்தை மறைத்துக்கொண்டு ராமனுடைய அந்தப்புரத்திற் குப் போகும் வழியால் அங்கே வந்து சேர்ந்தார். பிறகு அங்கிரஸ் முதலிய மஹரிஷிகளுக்கு ஸமமான தேஜஸுள்ள அந்தப் பிராம்மணரை ஐந்தாவது கட்டு வரையில் ஒருவரும் தடுக்கவில்லை. அவர் ராமனுக்கு அருகில் போய், "ராஜபுத்திர! இந்த உலகம் முழுவதையும் உன் கீர்த்தி வியாபித்திருக்கிறது; நான் பெரிய குடும்பி; அவர்களைப் போஷிக்க என்னிடத்தில் வேண்டிய தனமில்லை. காட்டில் உதிர்ந்த நெல்லுகளைப் பொறுக்கி ஒவ்வொரு நாளும் ஜீவனம் செய்கிறேன். ஆகையால் என்னிடத்தில் கிருபை செய்யவேண்டும்'' என்றார்.

இந்தப் பிராம்மணன் பெரிய குடும்பி; மஹாதரித்திரன்; இவருக்குத் தனத்தில் எவ்வளவு ஆசையிருக்கிறதென்று பரீக்ஷிக்க விரும்பிப் புன்சிரிப்புடன் வேடிக்கையாக, "ஸ்வாமி, எண்ணிறந்த என் பசுக்களில், ஒரு ஆயிரம்கூட இன்னும் தானம் கொடுக்கப்பட வில்லையே. தங்கள் கையிலிருக்கும் கழியைச் சுற்றி எறியுங்கள். அது எங்கே விழுகிறதோ அதுவரையிலிருக்கும் பசுக்கள் தங்களுடையது'' என்றார்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உடனே அந்த பிராம்மணன் வெகு பரபரப்புடன் வஸ்திரத்தை இடுப்பில் வரிந்து கட்டிக்கொண்டு, தன் முழு ப துடன் கழியைச் சுழற்றி எறிந்தார். அது ஸரயூநதிக்கு அக்கரை அநேகமாயிரம் பசுக்களுக்கு நடுவில் விழுந்தது. அப்பொ ராமன் அந்தப் பிராம்மணரை மிகுந்த பிரியத்துடன் ஆலிங்க செய்து, ஸரயூ நதிக்கரையிலிருந்த அந்த மாட்டு மந்தை யாவற்றையும் திரிஜடருடைய வீட்டிற்கு ஓட்டிக்கொண்டுபோ சேர்க்கும்படி இடையர்களுக்கு உத்தரவு செய்து, "ஸ்வா தாங்கள் என்னிடத்தில் கோபிக்காமலிருக்கப் பிரார்த்திக்கிறே தங்களுடைய ஒப்பற்ற பலத்தை அறிய விரும்பியே கழி சுழற்றி எறியும்படி தங்களைச் சொன்னேன். வேடிக்கைய செய்ததே தவிர வேறல்ல. இன்னும் ஏதாவது வேண்டியிருந் கேட்கும்படி பிரார்த்திக்கிறேன். தங்களுக்கு யாதொரு தடை வேண்டியதில்லை. பிராம்மணர்களுடைய உபயோகத்திற்கா என் ஐசுவரியம் முழுவதையும் ஸம்பாதித்திருக்கிறேன். தங்க போன்ற மஹான்களுக்கு அது உபயோகப்பட்டால் அது என அளவற்ற கீர்த்தியையும் ஸந்தோஷத்தையும் கொடுக்கும்" எ அவரை ஸமாதானம் செய்தார். திரிஜடரும் அவருடைய பாரி யும் அந்த மாட்டுமந்தைகளைப் பெற்றுக்கொண்டு அளவ ஆனந்தமடைந்து கீர்த்தி, பலம், பிரீதி, ஸுகம் முதலிய மங்க கள் குறைவில்லாமல் விருத்தியாகவேண்டுமென்று மனப்பூ மாய் ராமனை ஆசீர்வதித்தார்கள்.

பிறகு ராமன் தன் பராக்கிரமத்தால் தர்மமாக ஸம்பாதி பட்ட அளவற்ற ஐசுவரியத்தைத் தன் மித்திரர்களுக்கும் பரிவா களுக்கும் தகுந்த உபசாரத்துடனும் மரியாதையுடனும் கொ தார். அங்கிருந்த பிராம்மணர்களும், மித்திரர்களும்; வே காரர்களும், தரித்திரர்களும், பிச்சைக்காரர்களும் ஆக எல்லோ தங்களுடைய யோக்கியதைக்கும் ஆசைக்கும் தகுந்தபடி ராம கொடுக்கப்பட்ட தானத்தால் திருப்தியடைந்தார்கள். தி யடையாதவர்கள் ஒருவரும் இல்லை.

த்³விஜ: ஸுஹ்ருத் ப்⁴ருத்யஜநோ த²வா ததா³
த³ரித்³ர பி⁴க்ஷாசரணஶ்ச யோ ப⁴வேத் ।
ந தத்ர கஶ்சிந் ந ப³பூ⁴வ தர்பிதோ
யதா²ர்ஹ ஸம்மாநந தா³ந ஸம்ப்⁴ரமை: ॥

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ ராமசந்த்ராய நம:

3. கல்யாணமாகாதவர்களுக்குக் கல்யாணம் நடக்க

(For Marriage of an Unmarried)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

பால காண்டம் : ஸர்க்கம் 73

உமா ஸம்ஹிதா

கந்யார்தி² ச வடு: கந்யாப்யநுரூப வரார்த்தி²நீ।
ஸீதாவிவாஹ ஸர்க³ம் து படே²த் ப்ராத: ப்ரயத்நத:॥
க³வ்யம் நிவேத³யேத் க்ஷீரம் ஸத்³யோ து³க்³த⁴ம் ஶுசிஸ்த²லே।

கலியாணமாகாமலிருப்பது, கலியாணமான தம்பதிகள் மனக் கசப்பினால் பிரிந்திருப்பது, நியாயமான முறையில் வாழ்க்கைக்கு இன்றியமையாத சில சுகங்கள் கிட்டாமற்போவது போன்றவை நீங்கி, தம் கோரிக்கை பூர்த்தியாவதற்கு, "ஸீதாகல்யாண" கட்டமுள்ள பால காண்டம் 73-வது ஸர்க்கத்தைக் காலையில் பாராயணம் செய்யவேண்டும்.

நிவேதனம் : அப்போது கறந்த பசும்பால்.

ஸங்கல்பம்

ஸ்ரீ ஸீதாலக்ஷ்மண ப⁴ரத ஶத்ருக்⁴ந ஹநுமத்ஸமேத
ஸ்ரீ ராமசந்த்³ர ப்ரபோ⁴: ப்ரஸாதே³ந
...நாம்ந்யா : கந்யாயா : ...நாம்ந: வரஸ்ய
சீக்ரமேவ விவாஹஸித்யர்த்த²ம் "ஸ்ரீஸீதா
விவாஹாத்மக" ஸ்ரீமத்³ ராமாயணக⁴ட்ட
பாராயணம் அஹம் கரிஷ்யே।

BOMR : BELL

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸர்க்கம் 73

ஸீதா விவாஹம்

யஸ்மிம்ஸ் து தி³வஸே ராஜா சக்ரே கோ³தா³ந முத்தமம் ।
தஸ்மிம்ஸ்து தி³வஸே ஶூரோ யுதா⁴ஜித் ஸமுபேயிவாந் ॥ (1)

எந்தத் தினத்தில் தசரதர் தன் புத்திரர்களுக்கு விரத ஸமா வர்த்தனம் செய்தாரோ அன்று கேகய ராஜபுத்திரனும் பரதனுக்கு மாமனுமான யுதாஜித் மிதிலைக்கு வந்து தசரதரைக் கண்டு க்ஷேமம் விசாரித்து, "மகாராஜ! தாமும், இன்னும் யாருடைய க்ஷேமத்தைக் கோருகின்றீர்களோ அவர்களும் ஸௌக்கியமென்று கேகயாதிபதி வெகுப்ரீதியுடன் தெரிவிக்கிறார். என் ஸகோதரியின் மகனைப் பார்க்க விரும்பி அயோத்யைக்கு வந்தேன். நீங்களெல்லோரும் விவாஹ காரியமாய் மிதிலைக்குப் போனதாகக் கேள்விப்பட்டு இங்கே மிக வேகமாக வந்தேன்" என்றார். தனக்கு வெகு பிரியமான தன் மைத்துனனைக் கண்டு தசரதர் ஸந்தோஷித்துத் தகுந்தபடி உபசரித்தார்.

மறுநாட் காலையில் அவர் நித்திய கர்மங்களை முடித்துக் கொண்டு பந்து பரிவார மந்திரிவர்க்கங்களுடன் மஹரிஷிகளை முன்னிட்டுக்கொண்டு யாகசாலைக்கு ஸமீபத்திலுள்ள விவாஹ மண்டபத்திற்குப் போனார். அவருடைய குமாரர்கள் விவாஹத்திற்குப் பூர்வாங்கமான வைதிக லௌகிக காரியங்களை முடித்து வஸ்திராபரணங்களால் அலங்கரிக்கப்பட்டு, வஸிஷ்டர் முதலிய மஹரிஷிகளை முன்னிட்டுத் தசரதருடைய ஸமீபத்தில் உட்கார்ந்தார்கள். பிறகு வஸிஷ்டர் ஜனகரிடத்தில் வந்து, "ராஜ சிரேஷ்ட! அயோத்யாதிபதி தன் புத்திரர்களுக்கு ஸகல விவாஹ பூர்வாங்கங்களை முடித்து, கன்யாதானம் செய்யும் உமது ஸௌகரியத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார். கொடுக்கிறவரும் பெற்றுக் கொள்ளுகிறவரும் எவ்விதத்திலும் உத்தமமானவர்களாகையால், ஸகல க்ஷேமங்களுமுண்டாகும். இந்த சிலாக்யமான விவாஹத்தைச் செய்து உமது வார்த்தையை நிறைவேற்றும்" என்றார். உத்தம தர்மங்களை அறிந்தவரும், வெகு கம்பீர ஸ்வபாவமுள்ளவருமான ஜனகர் அதைக் கேட்டு, "என் அரண்மனை வாசலில் தங்களைத் தடுக்கும் காவலாளர் யார்? இங்கே வருவதற்கு யாருடைய உத்தரவைக் கேட்கவேண்டும்? தங்களுடைய கிருஹத்தில் இஷ்டப்படி ஸஞ்சரிக்கத் தடையென்ன? அயோத்யை உங்களுக்கு எவ்வளவு ஸ்வாதீனமோ அவ்வளவு இந்த மிதிலையும் ஸ்வாதீனமல்லவா? விவாஹ ஸம்பந்தமான ஸகல மங்கள காரி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Haridass Collection, Sholinganallur, Chennai

யங்களையும் என் புத்திரிகளுக்குச் செய்து முடித்தேன். கொழு விட்டெரியும் அக்னி ஜ்வாலைகளைப்போல், அவர்கள் ஸகல வ ராபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டு, மங்கள வேஷத்து அக்னி வேதிக்கு ஸமீபத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள். ஸித்தமாக இருக்கிறேன். உங்களுடைய வரவை எதிர்பார் கொண்டிருக்கிறேன். அரண்மனையின் வாசலில் ஏன் வேண்டும்? காலதாமதமில்லாமல் வந்து விவாஹத்தை நட வேண்டும்" என்றார். தசரதர் புத்திரமித்திர பந்து ம புரோஹித மஹரிஷி பரிவாரங்களுடன் விவாஹ மண்டப பிரவேசித்தார்.

ஜனகர் அவர்களுக்குத் தகுந்தபடி மரியாதை செ ஆஸனம் கொடுத்து, "வஸிஷ்ட மஹரிஷே! ஸகல லோகங்களு பரமானந்தத்தைக் கொடுக்கும் ராமனுடைய விவாஹ மஹோ ஸவத்தை தர்மஸ்வரூபியான தாங்களும் மற்ற ரிஷி நடத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்" என்றார். வஸிஷ் அப்படியே ஆகட்டுமென்று, விசுவாமித்திரரையும் சதானந் யும் மற்ற மஹரிஷிகளையும் முன்னிட்டுக்கொண்டு விவா மண்டபத்தின் நடுவில் விதிப்படி வேதியை அமைத்து, அவ ...ந்தனம், புஷ்பம், தங்கப் பாலிகைகள், கிண்டிகள், சங்கு திரங்கள், முளைத்த விதைகளுள்ள மடக்குகள், தூபத் நிறைந்த பாத்திரங்கள், ஸ்ருக், ஸ்ருவம், மஞ்சள் கலந்த அ கள், நெல் பொரிகளும் அர்க்கிய ஜலமும் நிறைந்த பாத்திர முதலியவைகளால் அலங்கரித்தார். பிறகு அதன்மேல் அளவுள்ள தர்ப்பங்களைப் பரப்பி மந்திரங்களுடன் அ பிரதிஷ்டை செய்து தம்பதிகளின் க்ஷேமத்திற்காக ஹோ செய்தார்.

பிறகு ஜனக மஹாராஜா ஸர்வாபரணங்களால் அலங்கரி பட்ட ஸீதையை அக்னிக்கு ஸமீபத்தில் ராமனுக்கெதிரில் நிறு கௌஸல்யையின் ஆனந்தத்தை விருத்தி செய்யும் ரகுவீர பார்த்து, "இவள் பூமியிலிருந்து கிடைத்ததால் ஸீதை என்று ருள்ளவள். நான் வெகுப் பிரீதியுடன் இவளை என் பெண் வளர்த்து, ஸகல தர்மங்களையும் உபதேசித்திருக்கிறேன். நீ தர்மத்தை அனுஷ்டிக்க விரும்புகிறாயோ அதைத் தானும் இருந்து அனுஷ்டிப்பாள். இவளை நான் உனக்குப் பார்யை கொடுக்கிறேன்; பெற்றுக்கொள். உனக்கு ஸகல மங்களங் உண்டாகட்டும். உன் கையால் இவளுடைய கையைப் இவள் மஹா பதிவிரதையாக இருப்பாள். மஹா பாக்கிய உன் நிழலைப்போல் உன்னைவிட்டுப் பிரியாதவள்" என்று மந் களால் பரிசுத்தமான ஜலத்தை அவருடைய கையில் வார்த்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அப்பொழுது தேவர்களும் மஹரிஷிகளும் 'நல்லது, நல்லது' என்று கொண்டாடினார்கள். தேவதுந்துபி முதலிய வாத்தியங்கள் முழங்கின. ஆகாசத்திலிருந்து புஷ்பமாரி பொழிந்தது.

பிறகு ஜனகர், "லக்ஷ்மணா! என்னால் கொடுக்கப்படும் ஊர்மிளையைக் காலதாமதமில்லாமல் பாணிக்கிரஹணம் செய்; உனக்கு ஸகல மங்களங்களும் உண்டாகட்டும்" என்றார். பிறகு பரதனைப் பார்த்து, "ரகுநந்தன! மாண்டவியை பாணிக்கிரஹணம் செய்" என்றார். பிறகு சத்ருக்கனனைப் பார்த்து, "பராக்கிரமசாலியே! சுருதகீர்த்தியைப் பாணிக்கிரஹணம் செய். நீங்களெல்லோரும் பிரஹ்மசரிய விரதத்தைப் பூர்ணமாய் அனுஷ்டித்தவர்கள்; மதுரமான ஸ்வாபவமுள்ளவர்கள். கிருஹஸ்தாசிரமத்தை அனுஷ்டியுங்கள். காலதாமதம் வேண்டாம்" என்றார்.

உடனே அந்த நான்கு ராஜ புத்திரர்களும் வஸிஷ்டருடைய அனுமதியால் அந்த நான்கு ராஜ புத்திரிகளைப் பாணிக்கிரஹணம் செய்தார்கள். பிறகு அவர்கள் அக்னியையும் ஜனகரையும் ரிஷிகளையும் பிரதக்ஷிணம் செய்து தங்களுடைய ஸூத்திரப்படித் தனியாய் அக்னிப் பிரதிஷ்டை செய்து விவாஹ ஹோமத்தை நடத்தினார்கள். அந்த ஸமயத்தில் தேவதைகள் புஷ்பமாரி பெய்தார்கள். துந்துபி முதலிய வாத்தியங்களை முழக்கினார்கள். கந்தர்வர்களும் அப்ஸரஸ்களும் மதுரமாய்ப் பாடினார்கள். மங்கள வாத்தியங்களை வாசித்தார்கள். ஆனந்தமாய் நர்த்தனம் செய்தார்கள். ரகுகுல சிரேஷ்டர்களான அந்த ராஜகுமாரர்களுடைய விவாஹ காலத்தில் இவ்விதமான ஆச்சர்யங்கள் நடந்தன. இப்படி வாத்திய கோஷங்களுடன் ராஜபுத்திரர்கள் அக்கினியை மூன்று தடவை பிரதக்ஷிணம் செய்து விவாஹ ஹோமத்தை முடித்து, பத்னிகளுடன் தங்களுடைய அரண்மனைக்குப் போனார்கள். தசரத மஹாராஜா தன் பந்து பரிவாரங்களோடும் மஹரிஷிகளோடும் அவர்களைப் பார்த்துக்கொண்டே ஆனந்தப் பரவசராய்ப் பின் சென்றார்.

அதோ^{2}பகார்யாம் ஜக்^{3}முஸ் தே ஸபா^{4}ர்யா ரகு^{4}நந்த^{3}நா: ।
ராஜாப்யநுயயௌ பஶ்யந் ஸர்ஷிஸங்க^{4}: ஸபா^{3}ந்த^{4}வ: ॥ (40)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நாரதர் காட்டிய ராமப்ரஹ்மம்

ஸகல குணநித^4ாநம் யோகி^{3}பி^{4}: ஸ்தூயமாநம்
பு^{4}ஜவிஜித ஸமாநம் ராக்ஷஸேந்த்^{3}ராதி^{3}மாநம் ।
மஹிதந்ருப ப^{4}யாநம் ஸீதயா ஶோப^{4}மாநம்
ஸ்மர ஹ்ருத^{3}ய விமாநம் ப்^{3}ரஹ்ம ராமாபி^{4}தா^{4}நம் ॥

"ஏ நெஞ்சே! ஸமஸ்த கல்யாண குணங்களுக்குப் பு மாகவும், யோகிகளால் துதி செய்யப்பட்டவராகவும், ராவண தன் புஜபலத்தால் அடக்கியவராகவும், அரசர்களுக்குள் நடு மாக விளங்குபவராகவும், ஸீதாப் பிராட்டியுடன் கூடித் பவராகவும் இருக்கும் ராமன் என்னும் ப்ரஹ்மத்தை நீ பாயாக."

— ஸநத்குமாரஸம்ஹி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ ராமசந்த்ராய நம:

மோக்ஷபலன் ஸித்திக்க
(For the Attainment of Moksha)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்
ஆரண்ய காண்டம் : ஸர்க்கங்கள்
65 முதல் 68 முடிய

உமா ஸம்ஹிதா

மோக்ஷார்த்தி2பி4ஸ்து பாட்2யா ஸ்யாத் ஜடாயுர்மோக்ஷ தா3நகா।
ராமஸ்ய லக்ஷ்மணஸ்வாஸாத்3யாரப்4ய ப்ரயதை: கதா2॥

அளவுக்கு மீறிய கஷ்டத்தினால் ஸம்ஸாரத்தில் வெறுப்பேற்பட்டோ, ஸகல போகங்களும் சாசுவதமானவை அல்ல, மோட்சமே சாசுவதமானது என்று முடிவு செய்தோ அதை அடைய விரும்பும் மக்கள், "ஜடாயு மோக்ஷ" கட்டமான ஆரண்ய காண்டம் 65-வது ஸர்க்கம் முதல் 68-வது ஸர்க்கம் முடிய காலையில் பாராயணம் செய்யவேண்டும்.

நிவேதனம் : ஐந்து வாழைப்பழங்கள்.

ஸங்கல்பம்

ஸ்ரீ ஸீதாலக்ஷ்மண ப4ரத4ஶத்ருக்4ந ஹநுமத்ஸமேத
ஸ்ரீ ராமசந்3த் ரப்ரபோ4: ப்ரஸாதே3ந ஸகலவித4
புண்யபபாப ப3ந்த4 நிவ்ருத்தி த்3வாரா
மோக்ஷ ஸாம்ராஜ்ய ஸித்4யர்த்தம் "ஜடாயு மோக்ஷா"த்மக
ஸ்ரீமத்3 ராமாயண க4ட்ட பாராயணம்
அஹம் கரிஷ்யே ।

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸர்க்கம் 65

லக்ஷ்மணன் ராமனை ஸமாதானம் செய்தது

தப்யமாநம் ததா² ராமம் ஸீதாஹரண கர்ஶிதம் ।
லோகாநா மஹிதே யுக்தம் ஸம்வர்தக மிவாநலம் ॥ (1)

ஸம்வர்த்தகமென்ற அக்னியைப்போலும் பிரளய காலத்து ருத்ரனைப் போலும் ராமன் ஸகல ஜகத்தையும் அழிக்க முயன்று, வில்லை எடுத்து நாணேற்றிப் பாணத்தைப் பூட்டி அடிக்கடி பெரு மூச்சு விட்டுக்கொண்டு, 'இதை விடுவோமா வேண்டாமா' என்று பார்த்துக்கொண்டிருப்பதை லக்ஷ்மணன் கண்டு, "ஐயோ! இது வரையில் ராமன் இப்படிக் கோபிக்கக் காணேனே. ஸகல லோகங்களும் அழியும்போலிருக்கிறதே, என்ன செய்வேன்?" என்று முகம் வாடி கைகூப்பி வணக்கத்துடன், "அண்ணா! இது வரையில் மிருதுவாகவும் அடக்கத்துடனும் ஸகல பிராணிகளுக்கும் ஹிதத்தையே செய்துகொண்டிருந்தீர்கள். இப்பொழுது அந்த ஸ்வபாவத்தை மாற்றிக் கோபத்திற்கு இடம் கொடுப்பது தங்களுக்குத் தகாது. சந்திரனிடத்தில் பிரகாசமும் ஸூரியனிடத்தில் தேஜஸும் வாயுவிடத்தில் அசைவும் பூமியிடத்தில் பொறுமையும் எப்படி இயற்கையோ அப்படி மேற்சொன்ன குணங்களெல்லாம் தங்களுக்கு ஸ்வபாவம்; மேலும் உத்தமமான கீர்த்தியும் தங்களிடத்தில் குடிகொண்டிருக்கிறது. 'நான் இதுவரையில் அடங்கியிருந்தபடியால் இப்படி நேர்ந்தது. இப்பொழுது நான் கோபிக்காவிட்டால் ஸீதையை அடைவதெப்படி? நம்மைக் கண்டு யார் பயப்படுவார்கள்?' என்று சொல்லவேண்டாம். இங்கே ஒரே ரதமும் ஒருவனுடைய காலடியுமே காணப்படுகிறது. ஆகையால் தங்களுக்கு அபராதம் செய்தவன் ஒருவனே. அப்படியிருக்க, தாங்கள் ஸகல ஜகத்தையும் நாசம் செய்வது நியாயமா?

இதோ ஒடிந்து கிடக்கும் ரதம் எவனுடையதென்று தெரியவில்லை. இங்கே கோவேறு கழுதைகளின் குளம்புகளும் சக்கரங்களும் பதிந்து கிடக்கின்றன. ரத்தத் துளிகள் சிந்தியிருக்கின்றன. இங்கே கோர யுத்தம் செய்தவன் யார்? யாரைக் குறித்தோ இங்கே ஒருவனே யுத்தம் செய்திருக்கவேண்டும். பலர் இங்கே வந்திருந்ததாக யாதொரு அடையாளமும் இல்லை. ஆகையால் ஒருவனுக்காக ஸகல லோகங்களையும் அழிப்பது நியாயமா? அரசர்கள் உசிதமாகத் தண்டிக்கவேண்டும். மிருதுவாகவும் அடக்கமாகவும் இருக்கவேண்டும். மேலும் ஸகல பிராணிகளுக்கும் தாங்களே கதி; தங்களையே சரணமடைந்திருக்கின்றன.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தேவதைகள் தங்களுக்கு அபராதம் செய்திருப்பார்களென்று எண்ணவேண்டாம். தாங்கள் ஸீதையை விட்டுப்பிரிந்து து பதை நல்லதென்று யாராவது எண்ணுவார்களா? ஆறுகளும் களும் கடல்களும் தேவகந்தர்வ தானவர்களும் தங்களுக்கு பிரியமில்லாத காரியத்தைச் செய்யத் துணிவார்களா? யாகத்தை செய்துகொண்டவனுக்கு ரித்விக்குகள் கெடுதி செய்யமுடியு. நாம் ஆயுதபாணிகளாக மஹரிஷிகளின் உதவியால், ஸமுத்திரங் கள் மலைகள் காடுகள் கோரமான குஹைகள் ஆறுகள் தா ஓடைகள் தேவ கந்தர்வ லோகங்கள் இவைகளில் ஜாக்கிர யாகத் தேடுவோம். லோகபாலர்கள் ஸீதையை ஸாதார மாகக் கொண்டுவந்து ஒப்பிக்காவிட்டால் பிறகு அவர்களை தண்டிக்கலாம். நல்ல வார்த்தைகளாலும் விநயத்தா நியாயத்தாலும் சீதையை அடைய முயல்வோம். அவை பலிக் விட்டால் தங்கக் கட்டுகளுள்ள பாணங்களால் உலகை அழி லாம்" என்றூர்.

ஶிலேந ஸாம்நா விநயேந ஸீதாம்
நயேந ந ப்ராப்ஸ்யஸி சேந் நரேந்த்³ர ।
தத: ஸமுத்பாத³ய ஹேமபுங்கை² :
மஹேந்த்³ர வஜ்ர ப்ரதிமை: ஶரௌகை⁴: ॥

ஸர்க்கம் 66

லக்ஷ்மணன் ராமனை ஸமாதானம் செய்தல்

தம் தத²ா ஶோகஸந்தப்தம் விலபந்த மநாத²வத் ।
மோஹேந மஹதாவிஷ்டம் பரித்³யூந மசேதநம் ॥

நான் இவ்வளவு சொன்னபோதிலும் சோகம் தீராமல் கதியற்றவனைப்போல் ராமன் பிரலாபிப்பதையும், மதி மோஹத்தில் ஆழ்ந்து கிடப்பதையும், பிரக்ஞையற்றவரைப்போல் நடப்பதையும் கண்டு, லக்ஷ்மணன் அவரை நமஸ்கரித்து அவ ருடைய பாதங்களைப் பிடித்துக்கொண்டு வணக்கமாகத் தெளிவித் துக் கொண்டார். "முன்காலத்தில் தேவதைகள் யாவரும் சேர்ந்து பாற்கடலைக் கடந்து அமிருதத்தை எடுத்தார்கள். அப்படியே தசரத சக்கரவர்த்தி, உபவாஸங்களாலும் விரதங்களாலும் த தர்மங்களாலும் அசுவமேதம் புத்திரகாமேஷ்டி முதலிய

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

யஜ்ஞங்களாலும் தங்களை அடைந்தார். தேவதைகள் எல்லோரும் செய்த பிரயத்தனத்தை அவர் ஒருவரே செய்தார். மந்த்ரம் திரவ்யம் கிரியை முதலியவைகளில் லோபமில்லாமல் ஸகல உபாயங்களையும் அனுஷ்டித்தார். அமிருதத்தால் ஸகல லோகங்களும் க்ஷேமமடைந்ததைப்போல், தங்களுடைய அவதாரத்தால் ஸகல பிராணிகளும் க்ஷேமமடைந்தன. அவர் தங்களுடைய உத்தம குணங்களில் ஈடுபட்டுத் தங்களைவிட்டுப் பிரிந்த துக்கத்தைப் பொறுக்காமல் ஸ்வர்க்கத்தை அடைந்தாரென்று பரதன் சொல்லியிருக்கிறார். இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்த தங்களுக்குத் தைரியம் இயற்கையல்லவா? இப்படிப்பட்ட கஷ்டங்களைத் தாங்களே பொறுக்காவிட்டால் ஸாதாரணமான அல்ப மனுஷ்யர்கள் எப்படிப் பொறுப்பார்கள்? துக்கம் மேலிட்டுத் தாங்கள் லோகங்களை எரிக்க ஆரம்பித்தால் பிராணிகள் யாரைச் சரணடையும்? ஜனங்களுக்கு மஹாகஷ்டங்கள் நேருவது உலகத்தின் இயல்பே.

நஹுஷ சக்கரவர்த்தி ஒரு ஸமயத்தில் இந்திர பதவியை அடைந்தான். இந்திராணியை அனுபவிக்க விரும்பி ஸப்தரிஷிகளையும் தன் பல்லக்கைச் சுமக்கச் செய்து காமபரவசனாகி அவளுடைய அந்தப்புரத்திற்குப் போகையில், அகஸ்தியரை வேகமாகப் போகும்படி காலால் உதைத்தான்; அவர், 'நீ ஸர்ப்பமாகக் கடவாய்' என்று அவனைச் சபிக்க, அப்படியே வெகுகாலம் அந்தக் கஷ்டத்தை அனுபவித்தான். அவனுடைய புத்திரனை யயாதி, தான் செய்த புண்ணியத்தால் ஸ்வர்க்கத்தை அடைந்தான். இந்திரன் அவனிடத்தில் அஸூயை கொண்டு 'தங்களுடைய ராஜ்யத்தில் சிரேஷ்டமானவர் யார்?' என்று கேட்டான். யயாதி உண்மையையே சொல்லுகிறவனுனதால் 'நானே' என்றான். 'உன்னையே நீ மெச்சிக்கொண்டதால் நீ இங்கே இருக்கத்தகாது' என்று இந்திரன் அவனைத் தலைகீழாகத் தள்ளிவிட்டான். நமது குருகுலமான வஸிஷ்ட மஹரிஷியின் நூறு புத்திரர்கள் ஒரே நிமிஷத்தில் விசுவாமித்திரருடைய கோபாக்னியால் எரிக்கப்பட்டார்கள்; மஹாவிஷ்ணுவின் பத்தினியும் ஜகத்திற்கு மாதாவுமான பூமாதேவியே அடிக்கடி நடுங்குகிறாளென்று தாங்களே எனக்குச் சொல்லியிருக்கிறீர்கள். ஸகல தர்மங்களுக்கு ஸாக்ஷிகளும், காலப் பிரமாணத்தைக் காட்டுகிறபடியால் ஜகத்தை நடத்துகிறவர்களும், ஸகல ஜனங்களுக்கும் ஆயுளையும் ஞானத்தையும் கொடுக்கிறவர்களும் மஹா பலசாலிகளுமான சந்திரஸூரியர்களும் ராஹு கேதுக்களால் பீடிக்கப்படுகிறார்கள். மாந்தாதா, நளன் முதலிய மஹா புருஷர்களும் ஸகலபூதங்களுக்கும் அந்தர்யாமியான பரமாத்மாவின் ஸங்கல்பத்தைத் தாண்டமுடியாது. இந்திரன் முதலிய தேவர்கள் பாப புண்ணியங்களைச் செய்கிறு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Shringanallur, Chennai

ளென்றும் ஸுகதுக்கங்களை அனுபவிக்கிறார்களென்றும் கேட்டி கிறோம். அப்படியிருக்கத் தாங்கள் வருத்தப்படுவது உசிதம ஸீதை பிறரால் எடுத்துப் போகப்பட்டாலும் இறந்தா மஹாவீரனை தாங்கள் சாதாரண மனிதனைப்போல் வ லாமா? விஷயங்களின் உண்மையை அறிந்த தங்களைப் போ மஹானுபாவர்கள் கொடிய கஷ்டங்கள் நேரும்பொழு விவேகத்தை இழக்காமல் நிர்மலமான அந்தக்கரணத்துட இருப்பார்கள். சோகத்தால் மயங்காத புத்தியுடன் நம நேரும் ஸுகதுக்கங்களை யோசித்துப் பார்க்கவேண்டும். ம புத்திமான்கள் அப்படிச் செய்து, வரும் ஸுகதுக்கங்களை அவைகளின் தத்துவத்தையும் அறிகிறார்கள். நாம் முன் ஜன் களில் செய்த கர்மங்களின் ஸ்வரூபம் நமக்குத் தெரியாது. அ களின் குணதோஷங்களை நேரில் பார்க்கமுடியாது. ஆனால் அவைகளைச் செய்திருந்தாலொழிய இப்பொழுது அவைக பயனை அனுபவிக்கமுடியாது. தாங்கள் இப்பொழுது ப துக்கம் பூர்வகர்மங்களின் பயனாக இருக்க, அதைப்பற்றிப் பிர பிப்பது நியாயமா? தாங்களே இப்படி எனக்கு உபதே வில்லையா? பிருஹஸ்பதியாகவே ஒருவன் இருந்தாலும் தங்க குப் புத்தி சொல்லமுடியுமா? தங்களுடைய புத்தியின் எல்லை கண்டுபிடிக்க தேவர்களாலும் முடியுமா? ஸீதையைப் பி சோகத்தால் உங்களுடைய ஞானம் மங்கிற்றென்று தெரி தேனே தவிர, வேறல்ல. கந்தர்வ யக்ஷ கின்னரர்கள் முத தேவகணங்கள் ஸாத்விக ஸ்ருஷ்டியானதால் அவர்களைக் செ வது நியாயமல்ல. பூலோகத்தில் ப்ரஹ்மக்ஞானிகளான பிர மணர்களும் மஹரிஷிகளும் இருக்கிறபடியால் அதை அழிப் தகாது. ஆனால் தாங்கள் ஸகல லோகங்களையும் நினைத்த னேயே நாசம் செய்யக்கூடியவர்கள். தாங்கள் இக்ஷ்வாகு வம் தில் அவதரித்த காரணத்தை ஞாபகத்தில் வைத்துக்கொண் நமது சத்துருவைக் கொல்வதில் பூர்ணமாக முயற்சி செய்யவே டும். தங்களுக்கு ஒருவன் அபராதம் செய்திருக்கையில் லோ கள் யாவற்றையும் நாசம் செய்வதால் லாபமென்ன? அந்த ம பாபியை எப்படியாவது கண்டுபிடித்துக் கொல்வதே உசித என்று வணக்கமாகத் தெரிவித்தார்.

கிம் தே ஸர்வ விநாஶேந க்ருதேந புருஷர்ஷப⁴ ।
தமேவ த்வம் ரிபும் பாபம் விஜ்ஞாயோத்³த⁴ர்து மர்ஹஸி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Harihan Collection, Sholinganallur, Chennai

ஸர்க்கம் 67

ராமன் ஜடாயுவைக் கண்டது

பூர்வஜோப்யுக்த மாத்ரஸது லக்ஷ்மணேந ஸுபா⁴ஷிதம் ।
ஸாரக்³ராஹீ மஹாஸாரம் ப்ரதிஜக்³ராஹ ராக⁴வ : ॥

ராமன் லக்ஷ்மணனுக்கு மூத்தவர் ; எல்லோருக்கும் உபதேசிக்கத் தகுந்தவர்; ஆனாலும் லக்ஷ்மணன் சொன்னது யுக்திக்கு ஒத்தும் மிகுந்த ஸாரத்துடனும் விளங்கிற்று. ராமன் ஸாரத்தைக் கிரஹிப்பவர்; ஆகையால் அவைகளை ஒப்புக்கொண்டு தனக்குள் பொங்கும் கோபத்தை அடக்கி, கோதண்டத்தின்மேல் சாய்ந்துகொண்டு, "லக்ஷ்மண ! இப்பொழுது என்ன செய்வோம்? எங்கே போவோம்? எந்த உபாயத்தால் ஸீதையைக் கண்டுபிடிப்போம்?" என்றார். லக்ஷ்மணன், "அண்ணா ! இந்த ஜனஸ்தானத்திலேயே வெகு ஜாக்கிரதையாகத் தேடவேண்டும். ராக்ஷஸர்கள் இங்கே அதிகமாக ஸஞ்சரிக்கிறார்கள். மரச் சோலைகளும் கொடிகளும் குகைகளும் பிளவுகளும் பள்ளத்தாக்குகளும் கின்னரர்கள் கந்தர்வர்கள் வஸிக்குமிடங்களும் இன்னும் ரஹஸ்யமான பல இடங்களும் இங்கே இருக்கின்றன. அங்கெல்லாம் நாமிருவரும் ஜாக்கிரதையாகத் தேடுவோம். பெரிய மலைகள் பெருங்காற்றிலும் அசையாததுபோல் தங்களைப் போன்ற மஹா புத்திசாலிகள் எந்த ஆபத்து நேர்ந்தாலும் கலங்கமாட்டார்கள்" என்று வணக்கமாகத் தெரிவித்தார்.

பிறகு அவர்கள் அந்த வனம் முழுவதிலும் ஜாக்கிரதையாகப் பரிசோதித்துக் கொண்டு போகையில், அந்த யுத்தகளத்திற்குக் கொஞ்சம் தெற்கில் மலைச் சிகரத்தைப்போல் ஒரு பக்ஷி, ரத்தம் பெருகப் பூமியில் கிடப்பதைக் கண்டார்கள். உடனே ராமன், "லக்ஷ்மண! இந்த ராக்ஷஸப் பதர் ஸீதையைக் கொன்று தின்றுவிட்டு எழுந்திருக்கமுடியாமல் கிடக்கிறான். நம்மைக் கண்டவுடன் கழுகைப்போல் ரூபமெடுத்திருக்கிறான். ஜ்வலிக்கும் என் பாணங்களுக்கு இவனை இப்பொழுதே இரையாக்குகிறேன்" என்று வில்லில் கூர்மையான பாணத்தைப் பூட்டிக் கோபத்தால் பூமி முழுவதையும் நடுங்கச் செய்துகொண்டு அந்தப் பக்ஷியின் மேல் பாய்ந்தார். அப்பொழுது அந்தக் கழுகு நுரையுடன் ரத்தத்தைக் கக்கிக்கொண்டு தீனமாக ராமனைப் பார்த்து, "நீங்கள் இந்த வனத்தில் உயர்ந்த ஔஷதியைப்போல் எவளைத் தேடுகின்றீர்களோ அவளையும் என் உயிரையும் ராவணன் என்ற துஷ்டராக்ஷஸன் கொள்ளை கொண்டு போய்விட்டான். நீயும் லக்ஷ்மணனும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Selaiyur, Chennai

இல்லாத ஸமயத்தில் ராவணன் அவளை எடுத்துப் போன பார்த்தேன். உடனே நான் அவனை மறித்து அவனுடைய யும் பாணங்களையும் ரதத்தையும் ஸாரதியையும் நாசம் செய் நான் சற்றுக் களைத்திருக்கும் ஸமயம் பார்த்து அந்தப் பாபி இறகுகளையும் கத்தியால் வெட்டித் தள்ளி ஸீதையை எடு கொண்டு ஆகாச மார்க்கமாகப் போனான். முன்பே நான் ரா னால் கொல்லப்பட்டிருக்கிறேன்; நீயும் என்னைக் கொல்ல டாம்" என்று பிரார்த்தித்தார்.

ராமன் அதைக் கேட்டு முன்னிருந்த துக்கம் அதிக கோதண்டத்தை விட்டெறிந்து லக்ஷ்மணனுடன் ஜடாயு கட்டிக்கொண்டு பூமியில் விழுந்து புரண்டு அழுதார். வழியாக ஒருவரும் பிரயாணம் செய்வதில்லை; அதற்கப்புறம் வழியுமில்லை; ஒருவனுக்குமேல் போகமுடியாது. அவ்வித இடத்தில் உதவி செய்பவர்களின்றி, கோரமாகக் காயம் அநாதையாகக் கிடக்கும் ஜடாயுவைப் பார்த்து, "லக்ஷ் கையில் கிடைத்த ராஜ்யத்தையும் திடீரென்று இழந்தேன்; யத்தில் பிச்சையெடுத்துக்கொண்டாவது பிழைக்கக்கூட அப்படியும் இல்லை; காட்டிற்குத் துரத்தப்பட்டேன். அ எனக்குப் பிரியமானவர்கள் அருகில் இருந்தால் துக்கங்கள் ய ஒருவாறு மறைந்திருக்கும்; அப்படியும் இல்லை. ஸீதை பறி கொடுத்தேன். பந்துக்களாவது மித்திரர்களாவது ஸமீப இருந்தால் அவர்களைப் பார்த்துத் துக்கத்தை மறக்கலாம்; அ யும் இல்லை. ஜடாயுவும் கொல்லப்பட்டார். இப்படி ஒ கொன்று அதிகமான கஷ்டங்கள் ஸமுத்திரத்தின் அலை போல் ஓயாமல் என்னைத் தாக்குவதைப் பார்த்தால் ஸகல வ களையும் எரிக்கும் அக்னியில் நான் போய் விழுந்தாலும் துரதிருஷ்டம் அதையும் எரித்துவிடுமென்று எண்ணுகி என்னைவிட்டு ஒரு நாளும் பிரியாத உன்னையும் பிரித்துவிடு என் துக்கத்தைத் தணிக்க ஸமுத்திரத்தில் விழுந்தாலும் அ வற்றிப்போகும். என்னைப்போன்ற பாக்கியஹீனன் ஸகல லோ களிலும் ஒருவனும் கிடையாது. கவலையென்ற வ என்னைப்போல் கட்டுப்பட்டுத் தவிப்பவர்கள் வேறுண் இதோ பார்! இந்த ஜடாயு நமது பிதாவிற்கு உயிர்த்தோழர்; வைப்போல் நம்மால் பூஜிக்கத்தகுந்தவர்; மிகுந்த வயது றவர்; எப்பொழுதும் நம்மைப் பாதுகாப்பவர்; என்னுடன் என் துரதிருஷ்டத்தால் கோரமான மரணத்தை அடைந் கிறார்" என்று இப்படிப் பலவிதமாகப் புலம்பிக்கொண்டு ரா ஜடாயுவைத் தடவிக் கொடுத்தார். ராமனுக்குத் தசரதரிட எவ்வளவு பிரீதியோ அவ்வளவு பிரியம் ஜடாயுவிடத்தில் இரு ஆகையால் சிறகு அறுக்கப்பட்டு ரத்தத்தில் தோய்ந்து

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Hariharan Collection, Sholingarallur, Chennai

ஜடாயுவைக் கட்டிக்கொண்டு, 'என் பிராண நாயகியான ஸீதை எங்கே?' என்று கதறி மூர்ச்சையடைந்து பூமியில் விழுந்தார்.

நிக்ருத்த பக்ஷம் ருதி⁴ராவஸிக்தம்
ஸ க்³ருத்⁴ர ராஜம் பரிரப்⁴ய ராம: ।
க்வ மைதி²லீ ப்ராணஸமா மமேதி
விமுச்ய வாசம் நிபபாத பூ⁴மௌ ॥ (29)

———

ஸர்க்கம் 68

ராமன் ஜடாயுவுக்கு மோக்ஷம் கொடுத்தது

ராம: ஸம்ப்ரேக்ஷ்ய தம் க்³ருத்⁴ரம் பு⁴வி ரௌத்³ரேண பாதிதம் ।
ஸௌமித்ரிம் மித்ரஸம்பந்ந மித³ம் வசந மப்³ரவீத் ॥ (1)

பிறகு பிரக்ஞை தெளிந்து எழுந்து தனக்குப் பிரியமித்திரனை லக்ஷ்மணனைப் பார்த்து, "குழந்தாய்! இந்தப் பக்ஷிராஜர் என் பாரியையை ரக்ஷிப்பதற்காக ராவணனுடன் யுத்தம் செய்து உயிரைவிடப் போகிறார். இவருடைய தேகத்தில் பிராணன் சிறிது ஊசலாடிக் கொண்டிருக்கிறது; ஆனாலும் குரல் வரவர பலஹீனமாகிறது. மரணாவஸ்தை ஸமீபித்துவிட்டது. "ஜடாயுவே! உங்களுக்குப் பேச சக்தியிருந்தால் ஸீதையின் வரலாற்றையும் தங்களுக்கு நேர்ந்த கஷ்டத்தையும் விஸ்தாரமாகச் சொல்லப் பிரார்த்திக்கின்றேன். ராவணன் ஸீதையை அபகரிக்கக் காரணமென்ன? நான் அவனுக்கு என்ன அபராதம் செய்தேன்? அப்பொழுது ஸீதையின் முகம் எப்படி இருந்தது? அப்பொழுது ஸீதை என்ன சொன்னாள்? அந்த ராக்ஷஸனுடைய தைரியமும் ரூபமும் செய்கைகளும் எப்படிப்பட்டவை? அவன் இருக்குமிடம் எங்கே?" என்றார். அப்பொழுது ஜடாயு மிகவும் மெலிந்த குரலுடன் தீனமாக, "ராம! அந்த ராக்ஷஸேசுவரன் தன் மாயையால் பெரிய காற்றையும் மேகத்தையும் உண்டாக்கி, ஸீதையை அதில் மறைத்து, ஆகாச மார்க்கமாகக் கொண்டுபோனான். நான் யுத்தம் செய்து களைத்திருக்கும்பொழுது என் இறக்கைகளை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hanumaram Collection, Sholinganallur, Chennai

வெட்டிவிட்டு ஸீதையை எடுத்துக்கொண்டு தெற்கே போ
மரணாவஸ்தையால் எனக்குப் பிராணவாயுக்கள் நெஞ்சில்
டைக்கின்றன ; கண்கள் சுழலுகின்றன ; மரங்கள் தங்கமயமா
விளாமிச்ச வேரைப் போன்ற தலைமயிர்களை உடையவைகளா
தோன்றுகின்றன. விந்தமென்ற முகூர்த்தத்தில் ராவ
ஸீதையை எடுத்துப் போனான்; அதன் மகிமையால் நஷ்ட
பொருள் மறுபடியும் உடையவனுக்குச் சீக்கிரமாகக் கிடை
இது ராவணனுக்குத் தெரியவில்லை. உன் பாரியையான ஜான
எடுத்துப்போய் அந்த ராக்ஷஸன் தூண்டில் முள்ளை விழு
மீனைப்போல் நிச்சயமாக இறப்பான். ஸீதைக்காக வருந்தா
ராவணனைக் கொன்று ஸீதையுடன் வெகுகாலம் ஸுகமாக
பாய்" என்று தெளிவாகப் பேசிக்கொண்டிருந்த ஜடாயுவின்
லிருந்து ரத்தமும் மாம்ஸமும் விழுந்தன. மரணம் ஸமீபித்த
இன்னும் எதையோ சொல்லவேண்டுமென்று விரும்பின ஜட
"விச்ரவஸின் புத்திரன். குபேரனுடைய தம்பி" என்று சொ
கொண்டே பிராணனை விட்டார். 'சொல்லும், சொல்லும்'எ
ராமன் கைகூப்பிப் பலதடவை பிரார்த்திக்கும்பொழுதே அ
பக்ஷியின் பிராணன் தேகத்தைவிட்டுக் கிளம்பிப் போய்
என்ன கஷ்டம்! கால்களைப் பரப்பிக்கொண்டு தலையைத் தரை
போட்டு ஜடாயு மரணமடைந்தார். தலைகீழாக விழுந்ததால்
கள் சிவந்து மலைச் சிகரத்தைப்போல் கிடக்கும் ஜடாயு
பார்த்து ராமன், "லக்ஷ்மண! கோரமான ராக்ஷஸர்கள் வஸி
இந்த தண்டகாரண்யத்தில் இவர் அநேக ஆயிர வருஷங்களா
பயமில்லாமல் ஸுகமாக வஸித்து வந்தார். இங்கேயே ரா
னால் மரணமடைந்தார். இவர் வெகுகாலம் பிழைத்திருந்து
பொழுது இறக்கும்படி நேர்ந்தது. "ஐயோ! காலகதியை யா
தடுக்கமுடியும்? பார், லக்ஷ்மண! ராவணன் ஸீதையை எடு
போகும்பொழுது அவளை மீட்பதற்காக இந்தப் பக்ஷிராஜர் அ
துஷ்டனுடன் தன் உயிருள்ளவரையில் யுத்தம் செய்தார். எ
இவர் செய்த உபகாரத்திற்கு எல்லையுண்டோ? என
கிடைக்கவேண்டிய ராஜ்யத்தை என் பிதாவின் உத்தர
கைவிட்டேன். இவரோ தான் நெடுங்காலம் ஆண்டுவந்த
யத்தைத் தானாகவே விட்டுப்போனார். என் கோஸல ரா
இவருடைய ராஜ்யத்திற்கு ஈடல்ல. என் அதிகாரத்திற்குப்
காளிகள் பலருண்டு. இவர் போட்டியில்லாமல் ராஜ்ய
ஆண்டவர். பக்ஷிகளுக்கெல்லாம் அரசனாகப் பல தலை
யாகக் கிடைத்த ராஜ்யத்தை ஆண்டுவந்து எனக்காகப் பிரா
விட்டார். என் பிதா இறந்த பிறகு இவரை அடைந்து எ
துக்கங்களையும் மறந்து ஸுகத்தை அனுபவிக்கலாமென்று
ணினேன். இவரும் என்னைக் கைவிட்டுப் போனார்.
பிராணிகளிலும் ஸாதுக்களும் தர்மாத்மாக்களும் உபகாரி
இருக்கிறார்கள். ஸீதையை இழந்ததாலுண்டான துக்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இதற்கு ஈடல்ல. நமது பிதா நமக்கு எப்படிப் பூஜிக்கத் தகுந்தவரோ, மரியாதை செய்யத் தகுந்தவரோ, இந்தப் பக்ஷிராஜரும் அப்படியே. ஆகையால் அவருக்குச் செய்யவேண்டிய ஸகல பிரேதக் கிரியைகளையும் இவருக்கும் செய்யவேண்டும். சீக்கிரம் கட்டைகளைக் கொண்டுவா. எனக்காக உயிரை இழந்த இந்த ஜடாயுவை அக்கினியைக் கடைந்தெடுத்து தகனம் செய்ய விரும்புகிறேன்" என்றார்.

லக்ஷ்மணனும் அப்படியே கட்டைகளை அடுக்க, ராமன் ஜடாயுவைப் பார்த்து, "மஹாபலவானான பக்ஷிராஜ! யாகயக்ஞங்களை எப்பொழுதும் செய்யும் கிருஹஸ்தர்களும், பஞ்சாக்னி நடுவில் தவம் செய்யும் வானப்பிரஸ்தர்களும், நிவிருத்தி மார்க்கத்திலிருந்து திரும்பாத ஸந்யாஸிகளும், ஸம்ஸார போகங்களைவிட்ட நைஷ்டிக பிரஹ்மசாரிகளும் அடையும் லோகங்களை, என்னால் ஸம்ஸ்காரம் செய்யப்பட்ட மஹிமையால் நீர் அடையக் கடவீர். என் அனுமதியால் ஸர்வ சிரேஷ்டமான விஷ்ணுலோகங்களையும் அடையக் கடவீர்" என்று கூறி, அவருடைய தேகத்தைச் சிதையில் ஏற்றி அக்னியை மூட்டி, தன் பந்துக்களை ஸம்ஸ்காரம் செய்வது போல், மந்திரங்களுடன் தகனம் செய்து, இறந்தவர்கள் ஸ்வர்க்கத்தை அடைவதற்காகப் பிதிருதேவதைகளைக் குறித்து ஜபிக்க வேண்டிய யாம்யஸூக்தம் முதலிய மந்திரங்களை ஜபித்தார். பிறகு வெகு துக்கத்துடன் ராம லக்ஷ்மணர்கள் காட்டிற்குள் போய், பெரிய மான்களை அடித்துக்கொண்டுவந்து, கோதாவரியில் ஸ்நானம் செய்து, அந்தப் பக்ஷிராஜருக்கு ஜல தர்ப்பணம் செய்தார்கள். பிறகு தர்ப்பைகளைப் பரப்பி மாம்ஸத்தைப் பிண்டங்க்ளாகப் பிடித்து இளம்புல்தரையில் விதிப்படி வைத்தார்கள். அந்தப் பக்ஷிராஜர் சீதையைக் காப்பாற்ற ராவணனுடன் யுத்தம் செய்து உயிரைக் கொடுத்தார். மஹரிஷிகளுக்கு ஸமமான ராமனால் ஸம்ஸ்காரம் செய்யப்பட்டு அந்த க்ஷணத்திலேயே தான் செய்த புண்ணியங்களுக்குப் பலனாக ஸர்வோத்தமமான கதியை அடைந்தார். இப்படி ஜடாயுவுக்கு ஸகல பிரேதக் கிரியைகளையும் விசேஷ சிரத்தையுடன் செய்து முடித்து, 'ஸீதையை அடைவாய்' என்ற அவருடைய வார்த்தையில் பூர்ண நம்பிக்கை வைத்து, அவளைத் தேடிக் கண்டுபிடிப்பதில் ஸகல பிரயத்தனமும் செய்ய நிச்சயித்து, ராம லக்ஷ்மணர்கள் மஹாவிஷ்ணுவையும் இந்திரனையும் போல் அந்த வனத்தில் பிரவேசித்தார்கள்.

க்ருதோத³கௌ தாவபி பக்ஷிஸத்தமே
ஸ்தி²ராம் ச பு³த்³தி⁴ம் ப்ரணிதா⁴ய ஜக்³மது: ।
ப்ரவேஶ்ய ஸீதாதி⁴க³மே ததோ மநோ
வநம் ஸுரேந்த்³ராவிவ விஷ்ணுவாஸவௌ ॥ (38)

CC-0 In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

RAMA NAMA

ஶ்ருதி ஸ்ம்ருதி புராணேஷு ராமநாம ஸமீரிதம் ।
தந்நாம கீர்த்தநம் பூ^{4}ய: தாபத்ரய விநாஶநம் ॥

வேதம், ஸ்ம்ருதி, புராணம் இவைகளிலே ராம நாமத் ப்ரபாவம் நன்கு எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அத் ராமநாமாவை ஸங்கீர்த்தநம் செய்பவர்களுக்கு ஆத்யாத் ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் என்ற மூவகைத் தாபங் அகன்றுவிடும் என்பது திண்ணம்.

—ச்யவநஸ்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீராமசந்த்ராய நம:

5. தீராத வியாதிகள் தீர

(For the Alleviation of Dire Diseases)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

யுத்த காண்டம் : ஸர்க்கம் 59

உமா ஸம்ஹிதா

அபஸ்மார ச்வாஸ க²ாஸ குஷ்ட²ாதி³ க³த³ சாந்தயே ।
ஆத்³யே யுத்³தே⁴ த³சாஸ்யஸ்ய மௌளிப⁴ங்க³ம் தி³நேதி³நே ॥
படே²த் த்³விவாரம் நைவேத்³ய மாதெ³ள மத்⁴வந்தத : பய : ॥

கரும வியாதிகள் எனப்படுகிற காக்காய் வலி, மூர்ச்சை, பெருமூச்சு, பிளட்பிரஷர், காசம், க்ஷயரோகம், பெரு வியாதி, குஷ்டம் போன்ற தீராத நோய்கள் நிவர்த்தியாவதற்கு "ராவண கிரீட பங்கம்" என்ற யுத்த காண்டம் 59-வது ஸர்க்கத்தைத் தினம் ஒன்றுக்கு இரண்டு தடவை பாராயணம் செய்யவேண்டும்.

நிவேதனம் : ஆரம்பத்தில் தேன் ; முடிவில் பால்.

ஸங்கல்பம்

ஸ்ரீ ஸீதாலக்ஷ்மண ப⁴ரதசத்ருக்⁴ந ஹநுமத் ஸமேத
ஸ்ரீராமசந்த்³ர ப்ரபோ⁴: ப்ரஸாதே³ந ஸகலவித⁴
ரோக³சாந்த்யர்த்த²ம் "ராவணகிரீட ப⁴ங்கா"
த்மக ஸ்ரீமத்³ ராமாயண க⁴ட்ட பாராயணம்
அஹம் கரிஷ்யே ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai.



CC-0 In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy.

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸர்க்கம் 59

ராமன் ராவணனுடைய கிரீடத்தை உடைத்தது

தஸ்மிந் ஹதே ராக்ஷஸ ஸைந்யபாலே
ப்லவங்கம³ாநா ம்ருஷபே⁴ண யுத்³தே⁴ ।
பீ⁴மாயுத⁴ம் ஸாக³ரதுல்யவேக³ம்
விது³த்³ருவே ராக்ஷஸராஜஸைந்யம் ॥ (1)

இப்படி வானரத் தலைவனால் ராக்ஷஸ சேனாதிபதி கொல்லப்பட்டவுடன், பயங்கரமான ஆயுதங்களையும் ஸமுத்திரத்தைப் போன்ற வேகத்தையுமுடைய அந்த ராக்ஷஸஸேனை முறிந்தோடி ராவணனிடத்திற்குச் சென்று, அக்னி புத்திரனால் பிரஹஸ்தன் மடிந்ததைத் தெரிவித்தார்கள். அப்படி நடக்குமென்று தசமுகன் ஸ்வப்னத்திலும் நினைத்ததில்லை. ஆகையால் ஆச்சரியமும், சோகமும், கோபமும் மேலிட்டு, தேவேந்திரனைச் சூழ்ந்த அமரயுத்த வீரர்களைப்போல் தன் சமீபத்தில் நிற்கும் ராக்ஷஸ வீரர்களை நோக்கி, "பார்த்தீர்களா? நமது சேனாதிபதியான பிரஹஸ்தன் ஸாமான்யனா? இந்திரனையும் கதறச் செய்கிறவன்; இப்பொழுது அவனும் அளவற்ற ராக்ஷஸ ஸைன்யமும் அல்பக் குரங்குகளால் மடிந்தார்கள். ஆகையால் சத்ருவை நாம் அலக்ஷ்யம் செய்யக் கூடாது. இனி நானே யுத்தத்திற்குச் சென்று ராமலக்ஷ்மணர்களையும் வானரர்களையும் காட்டுத் தீ விருக்ஷங்களை எரிப்பதுபோல் என் பாணாக்னியால் கொளுத்தி ஜயசாலியாய்த் திரும்பி வருகிறேன்" என்று நெருப்புக் கொழுந்தைப்போல் பிரகாசிக்கும் ரதத்திலேறினான். அதில் உத்தம ஜாதி அச்வங்கள் பூட்டியிருந்தன. காந்தியால் திக்குகளைப் பிரகாசிக்கச் செய்தன. அந்த ராக்ஷஸேச்வரன் யுத்தத்திற்குப் புறப்படும்பொழுது சங்கம், பேரிகை, துந்துபி, மிருதங்கம் முதலிய வாத்யங்களின் ஓசையும் யுத்த வீரர்கள் தோள் தட்டும் சப்தமும், வீரவாதங்களும், ஸிம்ஹநாதங்களும், புண்யாஹவாச ஸ்தோத்ரங்களும் எங்கும் நிறைந்தன. பெரியோர்களால் ஆசீர்வதிக்கப்பட்டு, பிரஜைகளால் கொண்டாடப்பட்டு, லங்கேசுவரன் யுத்தத்திற்குப் புறப்பட்டான். பர்வதங்களைப்போல் கடினமான தேகங்களையும் மேகங்களைப்போல் நினைத்த மாத்திரத்தில் மாற்றக் கூடிய ரூபங்களையும் நெருப்புக் கொழுந்தைப்போல் பிரகாசிக்கும் நேத்திரங்களையுமுடைய ராக்ஷஸ வீரர்களால் சூழப்பட்ட தசமுகன், பூதகணங்களால் சூழப்பட்டு அஸுரர்களுக்குத் தலைவனான ருத்திரனைப்போல் விளங்கினான். ["இவருடைய (சிவனுடைய)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தாமஸ அம்சமே ருத்திரனெனப்படும்" என்று மைத்ராய உபநிஷத்தில் சொல்லியபடி, ருத்ரன் அஸுரர்களுக்கு அ யென்றும் தெரிகிறது.]

பிறகு, அந்த மஹாதேஜஸ்வியான தசமுகன் லங் வெளியில் வந்து, வானரஸைன்யம் விருக்ஷங்களையும் மலைக எடுத்துக்கொண்டு, பார்க்கப் பயங்கரமாய் ஸமுத்திரத் போலும் மேகங்களைப்போலும் கர்ஜித்துக் கொண்டிருப்ப கண்டான். ராக்ஷஸ ஸைன்யம் அதிகோபத்துடன் வருவ கண்டு ராமனுக்கு யுத்தாவேசத்தால் புஜங்கள் நீண்டன; லக்ஷ்மி விளங்கிற்று. எல்லையற்ற வானரஸைன்யங்களால் பட்டு நிற்கையில், விபீஷணன் யுத்தவீரர்களின் தாரதம்ய நன்ருக அறிந்தவனுகையால், ராமன் அவனை நோக்கி, அ த்வஜங்களாலும் கொடிகளாலும் வில்லுகளாலும், சூலம், முதலிய ஆயுதங்களாலும், மலைகளைப்போன்ற யானைகளா பயமற்ற வீரர்களாலும் விளங்கும் இந்த ஸைன்யம் யாருடை இது கலக்கமுடியாதது" என்ருர். அதற்கு இந்திரனைப்போ வீரியமுடைய விபீஷணன், ராக்ஷஸ ஸைன்யத்தின் விவரத் ராக்ஷஸ வீரர்களுடைய பெருமைகளையும் வர்ணித்தான். "அ பெரிய சரீரத்துடன் பாலஸூரியனைப்போன்ற சிவந்த முக னும் அந்த மதயானையின் தோளில் உட்கார்ந்துகொண்டு, தேக பாரத்தால் அந்த கஜத்தின் தலையை அதிரச்செய்கி அகம்பனன். அதோ ஸிம்ஹக்கொடியையுடைய ரதத்தில் இ வில்லைப் போன்ற தன் தனுஸைச் சுழற்றிக் கொண்டிருப்ப ராவணனுடைய மூத்தகுமாரனுன இந்திரஜித். தேகபல மதயானையைப் போன்றவன்; பயங்கரமாய் வெளியில் தெ கோரைப்பற்களையுடையவன். ப்ரஹ்மாவால் கொடுக்கப் வரங்களால் நினைத்தபொழுது மறையக்கூடியவன். அ விந்தியம், மஹேந்திரம், அஸ்தகிரி முதலியவைகளைப் எல்லையற்ற தேகத்தையுடையவன் அதிகாயன். அளவிற்கு மி ஒரு வில்லைச் சுற்றிக்கொண்டு, ஆயிரம் குதிரைகளால் இழு பட்ட ரதத்தில் வருகிருன். மாயாபல மில்லாவிட்டாலும் இ ஜித்தைவிட மேலான வீரன். அதோ பாலசூரியனைப்போல் சி நேத்திரங்களுடன் உத்தமமான யானையின் மேலேறிக்கொ அதன் மணியின் சப்தத்தோடு தன் கர்ஜனையையும் சேரு செய்கிறவன் மஹோதரன். அதோ தங்க ஆபரணங்களா ஜேணங்களாலும் அலங்கரிக்கப்பட்ட குதிரைமீது ஏறிக்கொ கிரணங்கள் பாயும் எறியீட்டியைச் சுழற்றிக்கொண்டு வ வன் பிசாசன். ஸந்தியா காலத்தில் மேகங்கள் நிறைந்த மலை போல் பிரகாசிக்கும் அவனுடைய குதிரையையும் இடியைப்போ அவன் வரும் வேகத்தையும் பாருங்கள். அதோ கூர்மைய

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

முனையுடனும் மின்னலைப் போன்ற காந்தியுடனும் வஜ்ராயுதத்தை மிஞ்சின வேகத்துடனும் விளங்கும் சூலத்தையெடுத்துக்கொண்டு மலையைப்போல் பிரகாசிக்கும் காளைமேல் வருகிறவன் திரிசிரஸ் என்று பிரஸித்தி பெற்றவன். அதோ மேகத்தைப் போன்ற ரூபத்துடனும் பருத்த அகன்று உயர்ந்த மார்புடனும் நாகக் கொடியுடனும் யுத்தத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டு வில்லைச் சுழற்றுகிறவன் கும்பன். தங்கத்தாலும் வஜ்ரங்களாலும் அலங்கரிக்கப்பட்டுப் புகைகளுடன் பிரகாசிக்கும் இருப்புக் கட்டுத்தடியை எடுத்துக்கொண்டு ராக்ஷஸ ஸைன்யத்திற்குப் பிரதான புருஷனாய் விளங்குகிறவன், அற்புதமான கோரகிருத்யங் களைச் செய்யும் நிகும்பன். அதோ, வில், கத்தி, பாணங்கள் முதலிய ஆயுதங்களால் நிறைந்து, அழகான கொடியுடன் கொழுந்துவிட் டெரியும் நெருப்பைப்போல், பிரகாசிக்கும் ரதத்திலேறி வருகிற வன் நராந்தகன். இவனுடன் யுத்தம் செய்கிறவர்கள் கிடைக்காத தால் புஜங்களின் தினவு தீர்வதற்காக மலைகளுடன் யுத்தம் செய்து கொண்டிருப்பவன்.

"பலவகைக் கோர ரூபங்களோடும் புலி, ஒட்டகம், பாம்பு, மான், குதிரை முதலிய மிருகங்களைப்போன்ற முகங்களோடும் சுழலும் கண்களோடும் காணப்படும் பூதங்களால் சூழப்பட்டு, அதோ வருகிறவன், தேவர்களுடைய கர்வத்தையும் அடக்கின வன். அதோ வெள்ளைக்குடை சந்திரனைப்போல் அவன் தலைமேல் விளங்குகிறது. மெல்லிய கம்பிகளையுடைய அதன்கீழ் பூதகணங் களால் சூழப்பட்ட ருத்திரனைப்போல் வீற்றிருப்பவன் ராக்ஷ ஸாதிபதி. உத்தமகிரீடத்தாலும் குண்டலங்களாலும் பிரகாசிக் கும் முகத்துடன், ஹிமவான் விந்தியம் முதலிய மலைகளைப்போல் பருத்த தேகத்துடன் தோன்றுகிறவன், இந்திரன் யமன் முதலிய திக்பாலர்களுடைய மதத்தையடக்கின லங்கேச்வரன். சூரியனைப் போல் தேஜஸால் ஜ்வலிப்பதைப் பாருங்கள்" என்றான்.

அதைக் கேட்டு ராமன், "விபீஷண! என்ன காந்தி! ராக்ஷ ஸாதிபதியான ராவணன் மஹாப்ரதாபவானென்று தோன்று கிறது. மத்யாஹ்ன காலத்தில் பூர்ணகிரணங்களுடன் ஜ்வலிக்கும் சூரியனைப் பார்ப்பது எப்படி அஸாத்தியமோ அப்படி இவனைப் பார்க்கக் கண் கூசுகிறது. இவனுடைய தேகம் தேஜஸால் சூழப் பட்டிருப்பது எனக்கு நன்றாகத் தெரிகிறது. தேவதானவ வீரர் களுக்கும் இப்படிப்பட்ட தேக காந்தி கிடையாது. இவனுடைய ஸைன்யத்தில் ஒவ்வொருவனும் மலைபோன்ற தேகத்தையுடைய வன்; மலைகளால் யுத்தம் செய்கிறவன்; தீக்ஷ்ணமான ஆயுதங் களைத் தரித்தவன்; கோர ரூபமுள்ள பூதங்களால் சூழப்பட்ட யமனைப்போல் பராக்கிரமசாலிகளான வீரர்களுடன் வருகிறான்,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இந்தப் பாபி இன்று என் கண்ணில் பட்டது நல்லது. ஸீதையை அபகரித்ததாலுண்டான கோபத்தை இதுவரை அடக்கிவந்தேன். இப்பொழுது அதை இவன்மேல் பிரயோ கிறேன்" என்று சொல்லி ரகுவீரன் பிரசண்ட கோதண்ட வளைத்து நாணேசை செய்து ஒரு சிரேஷ்டமான பாண ஸித்தம் செய்து, லக்ஷ்மணனுடன் ராவணனுக்காகக் கா கொண்டிருந்தார்.

அப்பொழுது தசமுகன் தன்னைச் சுற்றியிருந்த ராக்ஷஸர் பார்த்து, "நீங்கள் ஸகல கவலைகளையும் விட்டு லங்கையின் கோட்டை வாசல்களையும் கோபுரங்களுக்குப் பக்கங்களில் யங்களுக்காகக் கட்டப்பட்டிருக்கும் வீடுகளையும் கோபுரங்க ஜாக்கிரதையாய்க் காத்துக்கொண்டிருங்கள். நீங்கள் என்னு இங்கே வந்திருப்பதாய் நமது சத்ருக்களுக்குத் தெரிந் லங்கையில் நுழைந்து அங்குள்ளவர்களை ஜயித்து அதைப் பிடி கொள்வார்கள்" என்று அவர்களை அனுப்பிவிட்டு, ஒரு திமிங் கொந்தளிக்கும் ஸமுத்திரத்தை அலக்ஷ்யமாய்க் கிழித்துக்கொ செல்வதுபோல், வானர ஸைன்யத்தை இருபுறத்திலும் பி தள்ளிக்கொண்டு சென்றான். ஜ்வலிக்கும் வில்லையும் பாண யம் கையிலெடுத்துக்கொண்டு, வானர ஸைன்யத்தை ந செய்வதற்குக் காலபாசத்தை ஏந்திவரும் யமனைப்போல் தசக்ரீவனைக் கண்டு சுக்ரீவன் ஒரு மலைச் சிகரத்தைப் பெய அவனை நோக்கி ஓடிவந்து அதை அவன்மேல் எறிந்தான். விருக்ஷங்களுடனும் மலையருவிகளுடனும் விளங்கும் அந்தச் சி தன்னை நோக்கி வருவதைக் கண்டு, தன்னுடைய பாணங்க தசக்ரீவன் அதைத் தூளாக்கி, மஹா ஸர்ப்பத்தைப்போல் கொண்டு, மஹேந்திரனுடைய வஜ்ரத்தைப்போல் அதி துடன், அந்தகனைப்போல் ஸகல வஸ்துக்களையும் நாசம் செ கூடியதாய், நெருப்புப் பொறிகள் பறக்கும் அக்னியைப் ஜ்வலிக்கும் பாணத்தை எடுத்து வானர ராஜனைக் கொல் காகப் பிரயோகித்தான். ஸுப்ரஹ்மண்யரால் கிரௌஞ்ச பர் தின்மேல் பிரயோகிக்கப்பட்ட சக்தியைப்போல் அந்தப் பா ஸுக்ரீவனுடைய தேகத்தைப் பிளந்து ஊடுருவிச் சென் அந்த உபத்திரவத்தைப் பொறுக்காமல் வானர ராஜன் சிதறி அலறிக்கொண்டு பூமியில் விழுந்தான். அவன் பிர யற்றுக் கிடந்ததைக் கண்டு ராக்ஷஸர்கள் ஸந்தோஷ கர்ஜித்தார்கள். உடனே கவாக்ஷன், கயவன், ஸுதம்ஷ் ரிஷபன், ஜ்யோதிர்முகன், நளன் என்ற வானர வீரர்கள் களைப் பெயர்த்துக்கொண்டும், தேகங்களைப் பெருக்கிக்கொ தசக்ரீவனை எதிர்த்தார்கள். அவன் கூர்மையான பாணங்க அவர்களுடைய அடிகளை வீணாக்கி, விசித்திரமான தங்கக்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

களையுடைய வேறு பாணங்களால் அவர்களைப் பிளந்தான். அவர்கள் புத்தி சிதறி கைகால்களை உதறிக்கொண்டு பூமியில் விழ, ராவணன் வானர ஸைன்யத்தை அம்பு மாரியால் மறைத்தான். தசக்ரீவனுடைய பாணங்களால் அடிபட்டு உபத்திரவத்தைத் தாங்காமல் சிலரும், பயமென்ற பாணங்களால் அடிபட்டுக் கதறும் சிலரும், ராக்ஷஸாதிபதியின் வேகத்தால் பூமியில் அடிபட்டு விழும் சிலரும், வனத்தில் ஸஞ்சரித்துக்கொண்டு அதுவரையில் அடிபட்ட சத்துருக்களையும் ஆயுதங்களையும் பார்க்காததால் மிரண்டு கூச்சலிடும் சிலரும் ஸர்வ லோகங்களும் சரணமடையும் ராமமூர்த்தியைக் கதியென்று அடைந்தார்கள். (நீக்கமுடியாத துக்கமே சரணகதிக்கு ஹேதுவாகும். தேசம், காலம், அதிகாரி, பலம், நியமம் முதலியவைகளை விசாரிக்கவேண்டியதில்லை.)

சரணுகதியின் தாரதம்யத்தையறிந்த சரண்யன், உடனே வில்லை எடுத்து நாணேற்றி, ராவணனை எதிர்த்துச் சென்ருர். ஆர்த்தப்பிரபத்திக்கு (அபாயத்திலிருந்தாவது கஷ்டத்திலிருந்தாவது தன்னை நீக்கும்படி சரணமடைவது) உடனே பலனைக் கொடுக்கவேண்டியதாகையால், ஒருவேளை லக்ஷ்மணன் தம்மை கேட்காமலேயே யுத்தத்திற்குப் போய்விடுவானே என்று தானே வில்லும் கையுமாகப் போகப் புறப்பட்டார். தன்னை ஆச்ரயிப்பவர்களை ரக்ஷிப்பதற்கு அதிவேகமாய்ச் செல்லும் ராமனை லக்ஷ்மணன் கைகூப்பிப் போகும் வழியில் மறித்துப் பிரார்த்தித்தார். ராமனுக்கு ஸகலவித கைங்கர்யத்தையும் செய்வதாய் பிரதிக்ஞை செய்து, அதனுல் கிடைத்த கைங்கரிய லக்ஷ்மியையுடைய இளையபெருமாள், தன் பிரார்த்தனையை அங்கீகரிப்பதற்காகக் கை கூப்பினுர். (ஸர்வசேஷியான பகவானுடைய கைங்கரியமே சேஷபூதர்களான ஜீவர்களுக்குப் பரமப்பிரயோஜனம்.) "அண்ணு! தங்களுடைய பாரியையே அபகரிக்கத் துணிந்த இந்தத் துராத்மாவைத் தாங்களே கொல்லவேண்டியது. அது தங்களுக்கு ஒரு பொருட்டல்ல. ஆனுல் அளவற்ற பலபராக்கிரமங்களால் விளங்கும் தாங்கள் இந்த அல்பராக்ஷஸனுடன் யுத்தம் செய்வது அழகல்ல. உத்திரவானுல் நான் இவனை வதம் செய்கிறேன்" என்ருர். (உனக்குச் சக்தியிருந்தால் போகக்கூடாதோ என்ருல், சேஷபூதனுன நான் ஸர்வசேஷியான தங்களுடைய உத்திரவில்லாமல் ஒரு காரியத்தைச் செய்வது என் பரதந்த்ரஸ்வரூபத்திற்கு ஹானியை உண்டாக்கும்.) அதற்கு ராமன், "அப்படியானுல் போ. சத்துருவை அலக்ஷ்யம் செய்யாதே. யுத்தம் செய்வதற்கு ஆர்வங் கொண்டிருப்பதைப்போல் வெகு ஜாக்கிரதையாயிரு. ராவணனே மஹாவீரன்; அற்புதமான பராக்கிரமத்தையுடையவன். ஓர் அஸ்திரத்தை எடுப்பவன்போலக் காட்டி வேருென்றை எடுக்கிருன்! அதைத் தொடுப்பவன்போல் காட்டி வேருென்றை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

விடுக்கிருன். இவன் கோபம் சொண்டால் மூன்று லோகத்து ளுள்ளவர்களும் இவனுக்கெதிரில் நிற்கமுடியாது. ஆகையால் அவனுடைய குறைகளை நன்ருய்க் கவனித்தறிந்து உன் குறைகளை நீக்கிக்கொள். உன் வில்லாலும் பார்வையாலும் உன்னை ஜாக்கிரதையாய்க் காப்பாற்றிக்கொள்" என்ருர். லக்ஷ்மணன் ராம வீரனை ஆலிங்கனம் செய்து பிரதக்ஷிண நமஸ்காரங்களுடன் உத்திரவு பெற்றுக்கொண்டு யுத்தத்திற்குச் சென்ருர். அங்கே ராவணன் காந்தியால் ஜ்வலிக்கும் வில்லை வளைத்துச் சரமாரி களால் வானர ஸைன்யத்தை மறைத்துக் கண்டதுண்டம் செய்வதைக் கண்டார்.

அதற்குள் ஆஞ்ஜநேயர் ஓடி வந்து, "இதென்ன அநியாயம்! ஸேவகனுன நானிருக்கத் தாங்கள் இப்படி வரலாமா?" என்று முறையிட்டு, பாணக் கூட்டங்களைத் தடுத்து ராவணன்மேல் பாய்ந்தார். அவனுடைய ரதத்தினருகில் சென்று வலது கையை ஓங்கி ராவணனைப் பயமுறுத்தி, "தேவ தானவ கந்தர்வ யக்ஷர்களை நீயும் உன் ராக்ஷஸர்களும் முறியடித்தீர்கள். ஆனுல் வானரர்களிடத்திலிருந்து உனக்கு மிருத்யுவென்பதை ஏன் அறியாய்? இதுவரையிலும் உன்னைப் பிழைக்கும்படி விட்டதே தவறு. இதோ பார். ஐந்து கிளைகளுள்ள மஹாவிருக்ஷத்தைப் போன்ற என் வலது கை உன் பிராணனை வாங்கப் போகிறது" என்ருர். அதற்கு ராவணன், கோபத்தால் விழிகள் சிவந்து, நிகரற்ற பராக்கிரமத்தால் இடிபோல் சிரித்து, "அடே, குரங்கே! சீக்கிரமாய் அடி; தயங்காதே. ராவணனை எதிர்த்து அடித்தேனென்ற கீர்த்தியை அடைய விரும்புகிருய். அதை ஏன் கெடுக்கவேண்டும்? அதனுல் உன் பலத்தையறிந்து அதற்குத் தகுந்த பலத்தை உபயோகித்து உன்னைக் கொல்வேன்" என்ருன். அதற்கு மாருதி, "அடே துஷ்டா! நீ என்னைக் கொல்வதிருக்கட்டும். உன் புத்திரனுன அக்ஷனை நான் கொன்றது பொய்யல்லவே" என்ருர். அதைக் கேட்டு மஹாதேஜஸ்வியான ராவணன் வாயுபுத்ரனுடைய மார்பில் ஓங்கி அறைந்தான். அதனுல் அநுமான் பலதடவை நடுங்கி ஒரு முகூர்த்தம் அசைவற்று நின்ருர். பிறகு மஹா புத்திமானுன தால் தைரியப்படுத்திக்கொண்டு, கடுங்கோபத்துடன் தசமுகனைக் கையால் அறைந்தார். அதனுல் தசக்ரீவன் மலைகள் பூகம்பத்தால் நடுங்குவதுபோல் நடுங்கினுன். அதைக் கண்டு ரிஷிகளும், வானரர் களும், ஸித்தர்களும், தேவர்களும், அஸுரர்களும் ஸந்தோஷத்தால் கோஷித்தார்கள். பிறகு ராவணன் கொஞ்சம் சிரமம் தீர்ந்து, "அடே, குரங்கே! நல்லது; உன் வீரியத்தை மெச்சினேன். நீ எனக்குத் தகுந்த சத்ருவே" என்ருன். அதற்கு ஆஞ்ஜநேயர் "என் வீரியத்தைச் சுடவேண்டும்; என்னிடம் அடிபட்டும் இன்னும் பிழைத்திருக்கிருயே! நான் கொடுத்த அடி உன்னை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கொல்லாதபொழுது அதைப் புகழ்வது எப்படி? இன்னும் ஒரு தடவை அடி; பார்ப்போம். வீண் பெருமை பேசாதே. பிறகு இந்த முஷ்டியால் உன்னை யமலோகத்திற்கனுப்புகிறேன். துஷ்டா! முன்பு கொஞ்சம் கவனிக்காமலிருந்ததால் நீ பிழைத்தாய். இப்பொழுது தப்பமாட்டாய்" என்றார். அந்த வார்த்தைகளைக் கேட்டு ராவணனுக்குக் கோபம் ஜ்வலித்தது. கண்கள் சிவக்க வலது கையை மடக்கிக்கொண்டு தன் பூர்ண பலத்துடன் மாருதியை மார்பில் குத்தினான். மறுபடியும் மார்பில் அடிக்கப் பட்டு ஹனுமான் கிடுகிடென்று நடுங்கினார். மஹா பலவானான ஆஞ்ஜநேயர் புத்திகலங்கி நிற்பதை ராவணன் கண்டு, நீலனிருக்கு மிடத்திற்கு ரதத்தைச் செலுத்தினான்.

காலஸர்ப்பங்களைப் போன்ற பாணங்களால் அவனுடைய உயிர்நிலைகளைப் பிளந்து, பிரதாபலங்கேசுவரன் வானரஸேனாபதியை எரித்தான். நீலன் மிகவும் வருத்தமடைந்து ஒரு கையால் பாணங்களைத் தடுத்து, மற்றொரு கையால் ஒரு பர்வதசிகரத்தைப் பிடுங்கி ராவணன் மேலெறிந்தான். தேஜஸிலும் புத்தியிலும் தைரியத்திலும் விசேஷித்த ஹனுமான், அதற்குள் சிரமம் தீர்ந்து யுத்தம் செய்ய விரும்பி, நீலனுடன் ராவணன் யுத்தம் செய்து கொண்டிருப்பதைப் பார்த்து ரோஷம் கொண்டு, "அடே ராக்ஷஸ! நீ வேறொருவனுடன் யுத்தம் செய்துகொண்டிருப்பதால் உன்னை இந்தத் தடவை விட்டேன்" என்றார். தசமுகன், தன்மேல் விழும் பாறையை ஏழு கூர்மையான பாணங்களால் தூளாக்கினான். அதைக்கண்டு நீலன் பலவித புஷ்பித்த மரங்களை வேருடன் பிடுங்கித் தசக்ரீவனை அடித்தான். ராக்ஷஸாதிபதி அவைகளைப் பாணங்களால் துண்டித்து நீலனைக் கோரமான சரமாரியால் துளைத்தான். மேகங்கள் பொழியும் பர்வதத்தைப்போல் நீலன் அசைவற்று நின்று, தன் ரூபத்தைச் சுருக்கிக்கொண்டு ராவணனுடைய த்வஜத்தின் நுனியில் குதித்தான். அதைக் கண்டு ராவணன் கோபத்தால் ஜ்வலிக்க, நீலன் கர்ஜித்தான். த்வஜத்தின் நுனியிலும் வில்லின் நுனியிலும் கிரீடத்தின் நுனியிலும் நீலன் அலக்ஷ்யமாய் ஸஞ்சரிப்பதைக் கண்டு, ராம லக்ஷ்மணர்களும் மாருதியும் ஆச்சரியமடைந்தார்கள். ராவணன் அந்த வானர வீரனுடைய லாகவத்தையும் சாதுரியத்தையும் மெச்சி, ஜ்வலிக்கும் ஓர் அற்புதமான ஆக்னேயாஸ்திரத்தை எடுத்தான். நீலனுடைய வேகத்தால் ராவணன் திகைத்திருப்பதைக் கண்டு வானரர்கள் ஸந்தோஷத்தால் கூச்சலிட்டார்கள். அதனால் தசமுகன் இன்னும் புத்தி சிதறி ஒன்றும் தோன்றாமலிருந்தான். பிறகு ஒரு பாணத்தில் ஆக்னேய மந்திரத்தைஜபித்து த்வஜத்தின் நுனியிலிருக்கும் நீலனைப் பார்த்து, "குரங்கே! உன்னுடைய வேகத்தாலும் லாகவத்தாலும் மாயை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

யால் பல ரூபங்களை எடுப்பவன்போல் காட்டுகிறாய். உயிரை காப்பாற்றிக் கொள்ள நீ செய்யும் தந்திரங்கள் வீணாகும். இதோ என் கையிலிருக்கும் பாணம் உன் உயிரை வாங்கப் போகி சக்தியிருந்தால் உன்னைக் காப்பாற்றிக்கொள்" என்று அதட் அந்த ராக்ஷஸ வீர சிகாமணி நீலன்மேல் ஆக்னேயாஸ்திரத்தை பிரயோகித்தான். வானரஸேனாதிபதி அஸ்திரத்தால் மார்பி அடிபட்டு, தேகமெங்கும் எரிக்கப்பட்டுப் பதைபதைத்துப் பூமி சாய்ந்தான். தான் மஹா தேஜஸ்வியானதாலும் தன் பிதாவா அக்னிபகவானுடைய கிருபையாலும் மரணமடையாமல் பூமி முழங்காலை ஊன்றிக்கொண்டு விழுந்தான்.

நீலன் பிரக்ஞையற்றுக் கிடப்பதைக்கண்டு ராவணன் யுத் வேசங்கொண்டு, காளமேகங்களைப்போல் கர்ஜிக்கும் ரதத் லக்ஷ்மணனிருக்குமிடத்திற்குச் செலுத்தினான். ஸுக்ரீவன் முத வானர வீரர்களை விலக்கிக்கொண்டு, சைன்யத்திற்கு நடு ஜ்வலித்துக்கொண்டு, வில்லைச் சுழற்றி வளைத்து நாணேற்றிப் நடுங்கும்படி டங்காரம் செய்தான். அபார ஸத்வமு லக்ஷ்மணன் அதைக் கண்டு, "ராக்ஷஸ ராஜனே! இந்த வானரர் உன்னுடன் யுத்தம் செய்யத் தகாதவர்கள். என்னிடத்தில் வ வேறெங்கும் போகாதே" என்றார். அந்த வார்த்தைகளை அவருடைய ஸிம்ஹநாதத்தையும் உக்ரமான நாணோசையை கேட்டு, தசானனன் லக்ஷ்மணனைக் கிட்டிக் கோபம் தாளா "புத்தி மயங்கி மரணத்தை விரும்பி இன்று என் கண்ண பட்டாய்; நல்லது. இதோ என் பாணங்களால் உன்னை துண்டித்து யமலோகத்திற்கனுப்புகிறேன், பார்" என்று வெண்மையான கோரைப் பற்கள் தெரியும்படி கர்ஜிக்கும் அ ராக்ஷஸ வீரசிரேஷ்டனைப் பார்த்து லக்ஷ்மணன் கொஞ்சமும் கலங்காமல், "ராக்ஷஸ ராஜனே! விசேஷ ப்ரதாபமுள்ளவர் தங்களைப் புகழார்கள். நீ மஹா பாபியானதால் வீண் பெரு பேசிக் கர்ஜிக்கிறாய். உன் வீரியத்தையும் பலத்தையும் பரா கிரமத்தையும் நானறியேனா? ஒருவருமில்லாதபொழுது ஸந்யா வேஷம் பூண்டு ஸீதையை அபகரித்த மஹாவீரனல்லவா! இதோ வில்லும் கையுமாய் எதிரில் வந்திருக்கிறேன். என்ன செய் போகிறாய், பார்ப்போம். வீணாய்ப் பிதற்றாதே" என்ற அதனால் கோபம் கொண்டு தசமுகன் ஏழு கூரான பாணங்களை லக்ஷ்மணனை அடிக்க அவர் அவைகளைத் துண்டித்தார். அதை அதிக கோபங்கொண்டு கூர்மையான வேறு பாணங்களை பிரயோகித்தான். லக்ஷ்மணனும் உக்ரமாய்ச் சரமாரி பொழி அர்த்தசந்திரம், பல்லம், கர்ணி முதலிய பாணங்களா ராவணனுடைய சரங்களை அறுத்தார். அதைக் கண்டு லங்காதி லக்ஷ்மணனுடைய லாகவத்தை மெச்சி வேறு பாணங்க

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Harihran Collection, Sholinganallur, Chennai

பிரயோகித்தான். லக்ஷ்மணன் கூர்மையாயும் வஜ்ராயுதத்தைப் போன்ற வேகமுடையவைகளாயும் நெருப்பைப்போல் காந்தியுடையவைகளாயும் இருக்கும் உத்தமமான பாணங்களை வில்லிற் பூட்டித் தசமுகனைக் கொல்வதற்காக விடுத்தார். ராவணன் அவைகளைத் துண்டித்து, பிரஹ்மா தனக்குக் கொடுத்த ஒரு காலாக்னியைப் போன்ற காந்தியுள்ள பாணத்தால் இளைய பெருமாளை நெற்றியில் அடித்தான். அதனால் லக்ஷ்மணன் வில்லை நழுவவிட்டு நடுங்கினார். பிறகு பிரக்ஞை தெளிந்து, ராவணனுடைய வில்லை ஒடித்து மூன்று பாணங்களால் அவனை அடித்தார். தசமுகன் அந்த வேகத்தால் வருந்தி நடுங்கிப் பிறகு பிரக்ஞையை அடைந்தான். இப்படி வில்லிழந்து, பாணங்களால் துளைக்கப் பட்டு, தேகமெங்கும் கொழுப்பும் ரத்தமும் பெருக திறமை வாய்ந்த லங்கேஶ்வரன், தனக்கு முன்பு பிரஹ்மாவால் கொடுக்கப் பட்ட சக்தியென்ற ஆயுதத்தைக் கையிலெடுத்தான். வானர ஸைன்யம் அதைக் கண்டு நடுங்கிற்று. புகையற்ற நெருப்பைப் போல் ஜ்வலிக்கும் அந்த ஆயுதத்தை ராவணன் லக்ஷ்மணனைக் கொல்ல உத்தேசித்துப் பிரயோகித்தான். ராமாநுஜன் அதைக் கொழுந்துவிட்டெரியும் நெருப்பைப் போன்ற அநேக பாணங்களால் அடித்தார். அப்படியும் அவருடைய விசாலமான மார்பில் அது ஊடுருவிச் சென்றது. அபார சக்தியுள்ள இளைய பெருமாள் ராவணனுடைய சக்தியாயுதத்தால் அடிக்கப்பட்டு, நெருப்பு ஜ்வாலைகளால் சூழப்பட்டு பிரஜ்ஞையற்று அசைந்தார்; உடனே ராவணன் பாய்ந்து இருபது கைகளாலும் அவரைத் தூக்கி எடுக்கப் பார்த்தான்.

லோகத்தில் தைரியத்திற்கு உபமானமாய்ச் சொல்லப்படும் ஹிமயபர்வதத்தைத் தூக்கியெடுக்கலாம்; ராவணன் அதில் ஒரு பாகமான கைலாஸத்தைப் பெயர்த்திருக்கிறானல்லவா? ஸமுத்திரங்களுக்குப் பிரதானமான க்ஷீராப்தியைக் கடைவதற்குத் தகுந்ததென்று நினைக்கப்பட்ட மந்தரபர்வதத்தையும் புஜங்களால் எடுக்கலாம்; அதைக் கடைந்த தேவாஸுரர்களைப் பல தடவை லங்காதிபதி ஜயித்திருக்கிறானல்லவா? ஸகல குலபர்வதங்களுக்கும் நடுநாயகமான மேருவைப் பெயர்த்தெடுக்க முடியும்; வாயுபகவான் அதன் சிகரத்தையடித்து லங்கையைச் சூழ்ந்த ஸமுத்திரத்தில் தள்ளிவிட்டாரல்லவா? அந்த வாயுபகவான் ராவணனுக்குப் பயந்திருந்தார். ஐம்பது கோடி விஸ்தீரணமுள்ள மூன்று லோகத்தையும் பெயர்த்தெடுக்கமுடியும். அதில் ஒரு பாகமான பூமியைக் கும்பகர்ணனுடைய முன்பிறப்பான ஹிரண்யாக்ஷன் புஜத்தின்கீழ் வைத்துக்கொண்டு போகவில்லையா? மூன்று லோகங்களையும் ஆளும் தேவர்களுடன் அவைகளைத் தூக்கவும் முடியும். அவர்களுக்கதிபதியான இந்திரனைத் தன்னுடைய

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

புத்திரனை ஜயித்துச் சிறையில் வைத்திருக்கிறான். ஆனால், ரா
னுடைய தம்பியான பரதனுக்குத் தம்பியாய், விஷ்ணுவின் நா
லொரு அம்சமான இளையபெருமாளைத் தூக்கி எடுக்கவாவ
அசைக்கவாவது ராவணனால் முடியவில்லை. இரண்டு பு
களால் கைலாசத்தை அசைத்த ராவணன் இருபது கைகளா
லட்சுமணனை அசைக்க முடியவில்லை. தசமுகனும் அவனுடை
னுடைய பரிவாரங்களும் ஒன்று சேர்ந்தும் முடியவில்லை.

பிரஹ்மாவால் அனுக்ரஹிக்கப்பட்ட சக்தியால் மார்பி
லக்ஷ்மணன் அடிக்கப்பட்டு, தன் மனத்திற்கெட்டாத விஷ்
வின் அம்சமான ஸ்வரூபத்தை ஞாபகப்படுத்திக் கொண்டார்.

தானவர்களுடைய கொழுப்பையடக்கும் ராமாநுஜ
ராவணன் புஜங்களால் நெடுநேரம் புரட்டிப் பார்த்தும் அசை
முடியவில்லை. மனுஷ்யதேகத்தில் அவதாரம் செய்த விஷ்ணுவி
அம்சமல்லவா? (அவயவமில்லாத விஷ்ணுஸ்வரூபத்திற்கு அ
முண்டோ என்றால், ஸ்வரூபத்திற்கு அப்படியில்லாவிட்டாலு
குணங்கள் வெளிப்படுவதில் விளங்கும் தாரதம்யத்தால் அம்ச
களின் பேதம் இருப்பதுபோல் காணப்படுகிறது.)

பிறகு ஆஞ்ஜநேயர் கோபம் கொண்டு ராவணன்மே
பாய்ந்து வஜ்ரத்தைப் போன்ற முஷ்டியால் தசமுகனுடை
மார்பில் குத்தினார். அந்த வேகத்தால் ராக்ஷஸாதிபதி தேர்
தட்டில் முழங்காலை ஊன்றிக்கொண்டு கிடுகிடென்று நடுங்
விழுந்தான். வாயாலும், நேத்திரங்களாலும், செவிகளாலு
ரத்தம் பெருகிற்று. கொஞ்சகாலம் பிரமித்தாற்போலிருந்
அசைவற்று தேர்த்தட்டில் சாய்ந்தான். பிறகு பிரக்ஞையற்
மூர்ச்சையடைந்தான். சற்றுத் தெளிந்தும் ஸ்திரமாய் நி
முடியவில்லை. பயங்கரமான பராக்ரமமுள்ள ராவணன் யுத்த
தில் பிரக்ஞையற்றதைக் கண்டு ரிஷிகளும், வானரர்களும், தே
களும், இந்திரனும் ஸந்தோஷத்தால் கூச்சலிட்டார்க
ராவணனால் உபத்திரவத்தையடைந்த லக்ஷ்மணனை மஹாதேஜ
வியான ஆஞ்ஜநேயர் புஜங்களால் தூக்கியெடுத்து ராகவனிட
தில் கொண்டுபோய் வைத்தார். ராவணனுக்கும் அவனுடை
பரிவாரங்களுக்கும் அசையாத ராமாநுஜன், ஆஞ்ஜநேயருடை
அநுகூலமான ஹிருதயத்தாலும் எல்லையற்ற பக்தியாலும் ஒ
குரங்கிற்கு வசப்பட்டு அதிக லேசானார். (லக்ஷ்மணன் மூர்ச்ச
யடைந்திருந்தும் அவருக்கு ஞானமும் சக்தியும் குறைவில்லையெ
பதால், ராமலக்ஷ்மணர்கள் அந்தந்த ஸமயங்களில் அக்ஞான
தாலும் அசக்தியாலும் வருந்துகிறவர்கள்போல் காணப்படுவத

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Shelinganallur, Chennai

பேசுவதும் மனுஷ்யபாவனையை அனுஸரித்துச் செய்தவை யென்று நினைக்கவேண்டியது. பகவான் கேவலம் ராக்ஷஸ வதத்திற்காகவே மனுஷ்யாவதாரம் செய்ததல்ல. லோகத்தார்க்கு தர்மங்களை அனுஷ்டித்துக் காட்டுவதற்காகவும் ஏற்பட்டது. இல்லாவிட்டால் ஸர்வக்ஞனும் ஸர்வேச்வரனும் ஆனந்தஸ்வரூபியுமான பகவானுக்கு ஸீதையையும் லக்ஷ்மணனையும் விட்டுப் பிரிந்ததால் துக்கமேது?—சுகர்.) அந்த சக்தியாயுதமும் லக்ஷ்மணன் யுத்தத்தில் ஜயிக்க முடியாதவரென்று கண்டு அவரைவிட்டு ராவணனுடைய ரதத்தில் தானிருக்குமிடத்திற்குப் போய்ச் சேர்ந்தது. ஸகல விரோதிகளையும் இடையூறுகளையும் நாசம் செய்யும் சுபாவமுள்ள விஷ்ணுவின் மனத்திற்கெட்டாத அம்சமான தன் ஸ்வரூபத்தை ஞாபகப்படுத்திக் கொண்டதால் லக்ஷ்மணன் பிரக்ஞை தெளிந்து காயம் ஆறி முன்போலானார்.

மஹாதேஜஸ்வியான ராவணனும், மூர்ச்சை தெளிந்து, வில்லை வளைத்துக் கூர்மையான பாணங்களால் வானரர்களை உபத்திரவித்தான். வானரவீரர்கள் மடிவதையும் ஸைன்யம் மூலைக்கு மூலை ஓடுவதையும் ராகவன் கண்டு ராவணனை நோக்கி ஓடிவந்தார். அப்பொழுது ஹநுமான் அவரை நமஸ்கரித்து, "ஸ்வாமி! என் முதுகின்மேலேறிக்கொண்டு, மஹாவிஷ்ணு எல்லையற்ற பகவானுன கருடன் மேலேறி அஸுரர்களை ஸம்ஹரித்தது போல ராக்ஷஸர்களுடன் யுத்தம் செய்யுங்கள்" என்று பிரார்த்தித்தார். ரகுவீரனும் அப்படியே செய்து, ராவணன் ரதத்தில் இறுமாந்து உட்கார்ந்திருப்பதைக் கண்டு கோபப்பரவசராய், பூர்வத்தில் மகாவிஷ்ணு பலியை ஸம்ஹரிக்க வந்ததுபோல், கோதண்டத்தை வளைத்து இடிபோல் நாணொசை செய்து, லங்கேசுவரனை நெருங்கி வெகு கம்பீரமாய், "ராக்ஷஸ வீர சிரேஷ்டனே! நில், நில், ஓடாதே. என் பிரிய பாரியையான ஸீதையை அபகரித்து என் கோபத்திற்காளான பிறகு எங்கே போய்த் தப்புவாய்? இந்திரன், யமன், சூரியன், ப்ரஹ்மா, அக்னி, சங்கரன் முதலியவர்களை அண்டினுலும் பத்துத் திக்குகளிலும் ஓடி ஒளிந்தாலும் என் கண்ணில்பட்ட பிறகு உன் உயிர் தப்புமா? உனக்கும் உன்னைச் சேர்ந்தவர்களுக்கும் மிருத்யுவைப் போன்ற என் தம்பி இதோ வந்துவிட்டான். நீ அவனைச் சக்தியால் அடித்துக்கொல்லப் பார்த்தாயே? அவனை மூர்ச்சையடையும்படி செய்தோமென்று துள்ளாதே. 'லக்ஷ்மணன் என்னை அடிக்க முடியவில்லையே. உன்னுலாகுமா?' என்றால் இதோவிருக்கும் அற்புதமான பாணங்களால் ஜநஸ்தானத்தில் வஸித்த பதினான்காயிரம் ராக்ஷஸ வீரர்களையும் கரன், தூஷணன், த்ரிசிரஸ் முதலியவர்களையும் ஒரு முகூர்த்தத்தில் ஸம்ஹரித்ததை அறியாயோ?" என்றார். அதைக் கேட்டு லங்கேஸ்வரன் மஹாவீரியவானுன

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆஞ்ஜநேயரைக் காலாக்னியின் கொழுந்துகளைப் போன் கூர்மையான பாணங்களாலடித்தான். தன்னைக் குத்தித் தள் விட்டு ராமனைச் சுமந்து வருகிறானென்று கோபம் கொண் ராவணன் பாணங்களால் மாருதியைத் துளைக்கத் துளைக்க, அ ருடைய ஸ்வபாவமான தேஜஸ் விருத்தியாயிற்று. தசமுகஞ தேகமெங்கும் காயம்பட்ட வாயுபுத்திரனைப் பார்த்து ராமனு அடங்காத கோபமுண்டாயிற்று. உடனே ராவணனுடைய ர தையும், சக்கரங்களையும், த்வஜத்தையும், குடையையும், கொ களையும், ஸாரதியையும் ஆயுதங்களையும் பாணங்களால் நா செய்தார். இந்திரன் வஜ்ராயுதத்தால் மேருபர்வதத் இடிப்பதுபோல், ரகுநாதன் வஜ்ரத்தையும் இடியையும் போன் ஒரு பாணத்தால் ராவணனுடைய அகன்ற அழகான மார் அதிவேகவாய் அடித்தார். முன்பு வஜ்ரத்தாலும் இடியா கலங்காமல் அசையாமலிருந்த தசக்ரீவன், ராம பாணத்தா பட்டு மிகவும் வருந்தி, நடுங்கி, வில்லை நழுவவிட்டான். அ மூர்ச்சையடைவதைக் கண்டு, ராமன் ஓர் அர்த்தசந் பாணத்தைப் பிரயோகித்து, ஸூரியனைப்போல் ஜ்வலி அவனுடைய கிரீடத்தை அறுத்துத் தள்ளினர். (தன் அதுவரையில் ரக்ஷித்து வந்த வில்லையெறிந்து, தானே தன் ரக்ஷிக்க முடியுமென்ற அகம்பாவத்தைவிட்டு, ரகுநாத தன்னை ரக்ஷிக்கவேண்டுமென்றும் தனக்கு வேறு அடைக்கலமி யென்றும் ராவணன் நினைப்பதை அவனுடைய ஸ்திதி பகவான் அறிந்துகொண்டார். அவன் அப்படி வார்த்தைகள சொல்லவில்லை. ஆகையால் பரம தயாளுவான ஜகதீசன் அ உயிரை வாங்காமல் மானபங்கத்தை மாத்திரம் செய்துவிட்டா தலைக்குவந்தது தலைப்பாகையுடன் போயிற்றென்ற வசன ஸரியாயிற்று. ஒருவன் தன்னை ரக்ஷித்துக்கொள்வதற்கு யாதொ பிரயத்தனமும் செய்யாமல் பகவானை நம்பியிருப்பதே அ அவனை ரக்ஷிப்பதற்கு ஹேதுவாகும்.) விஷமற்ற ஸர்ப்பத்தை போலும் அணைந்த நெருப்பைப்போலும் வில்லை விட்டெறி அணைந்த கிரணங்களையுடைய ஸூரியனைப்போல் பிரகாசமற் லக்ஷ்மியின் களையற்று, கிரீடம் அறுபட்டுத் தீனமாய் நிற் ராவணனைப் பார்த்து ராமன், "ராவண! நீ இன்று பிறர செய்யமுடியாத வீரச்செயல்களைச் செய்திருக்கிறாய். பல வா சிரேஷ்டர்களையும் என் தம்பியையும் அடித்துத் தள்ளியிருக்கிறா ஆகையால் ஆயுதங்களைத் தரித்து யுத்தம் செய்வதற்கு முடியா கொஞ்சம் களைத்திருக்கிறாயென்று எண்ணுகிறேன். நெடுநே யுத்தம் செய்து களைத்தவனைக் கொன்றானென்ற அபவாதத்தி இடம் கொடுக்காமலிருப்பதற்கே இப்பொழுது உன்னைக் கொ லாமல் விடுகிறேன். 'சத்துரு எதிரில் நிற்கையில் நான் எப்ப போவேன்' என்றால், நான் ஸம்மதித்து உனக்கு உத்திரவு கொ

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கிறேன். கபட யுத்தம் செய்பவனே! உன் மாயையெல்லாம் தர்ம யுத்தம் செய்யும் என்னிடத்தில் பலிக்கவில்லையே. ராவண! யுத்தம் செய்து களைத்திருக்கிற நீ லங்கையில் போய் இளைப்பாறி, வேறு ரதத்தையும் ஆயுதங்களையும் ஸம்பாதித்துக்கொண்டு நாளைக்கு வா" என்றார். அதைக் கேட்டு ராவணன் கர்வமும் ஸந்தோஷமுமற்று, வில்லொடிந்து, குதிரைகளும் ஸாரதியும் மடிந்து, பாணங்களால் துளைக்கப்பட்டு, கிரீடம் பிளக்கப்பட்டு, அதிவேகமாய் லங்கையில் பிரவேசித்தான்.

தேவாஸுரர்களுக்குப் பயங்கரனும் நிகரற்ற பலவானுமான தசமுகன் போனபிறகு, தேவர்களும் தானவர்களும் ஸந்தோஷித்துக் கொண்டாடினார்கள். பிறகு, ராமன் லக்ஷ்மணன் மேலும் வானரர்கள் மேலும் பாய்ந்திருக்கும் பாணங்களையெடுத்துக் காயங்களை ஆற்றி ஸேனையை வேறிடத்திற்கு நடத்திக் கொண்டு போனார். தேவர்களுக்கு நித்யசத்ருவான தசானனன் முறிபட்டோடுவதைப் பார்த்து, தேவர்கள், பூதங்கள், திக்பாலர்கள், ஜலத்தில் வஸிப்பவர்கள், ரிஷிகள், உரகர்கள், மற்றும் பூமியில் வஸிப்பவர்கள் முதலிய யாவரும் கவலையற்று "மஹாபாபியான ராவணன் ராமனால் தோல்வியடைந்தான். இனி அவனுக்கு மரணமும் நமது கஷ்டங்கள் தீரும் காலமும் ஸமீபித்துவிட்டது" என்று ஆநந்தித்தார்கள்.

தஸ்மிந் ப்ரபி4ந்நே த்ரித3ஶேந்த்3ர ஶத்ரௌ
ஸுராஸுரா பூ4தக3ணா தி3ஶஶ்ச ।
ஸஸாக3ரா: ஸர்ஷி மஹோரகா3ஶ்ச
ததை2வ பூ4ம்யம்பு3சராஶ்ச ஹ்ருஷ்டா: ॥ (157)

TSOMR : BRLX

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

RAMA NAMA

பேயம் பேயம் ஶ்ரவணபுடகே ராமநாமாபிராமம்
த்4யேயம் த்4யேயம் மநஸி ஸததம் தாரகம் ப்3ரஹ்மரூபம்
ஜல்பந் ஜல்பந் ப்ரக்ருதி விக்ருதௌ ப்ராணிநாம் கர்ணமூ
வீத்2யாம் வீத்2யாம் அடதி ஜடில : கோபி காசீநிவாஸீ ||

மிகவும் இனிமையைப் பயக்கும் ராமநாமத்தைக் காதா கேட்டு, நம்மைக் கடைத்தேற்றும் தாரக ப்ரம்மமான அந்த மந்திரத்தை மனங்குளிர த்யானித்து, அம்மந்திரத்தை மரண தருவாயிலிருக்கிற உயிரினங்களின் காதுகளில் ஓதிக்கொண் ஜடைமுடி தரித்த காசிவாசியான ஒருவன் (சிவபெருமா வீதிகள்தோறும் ஸஞ்சரித்து வருகிறான்.

— ஸ்காந்த புராண

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ ராமசந்த்ராய நம :

6. பேய் பிசாசு பில்லிசூனியம் நீங்க

(For Warding off evil influences of Ghosts)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

ஸுந்தர காண்டம் : ஸர்க்கம் 3

உமா ஸம்ஹிதா

பூ4தவேதாள பீடா3 சேத் லங்காவிஜய ஸர்க்3ககம்।
ஆதௌ3 கு3டா3ந்நம் நைவேத்3யம் க்ருத்வா ஸாயம் படே2த்3யத:॥
விமார்க3 ஸர்வத்ரே’தி பத்3யஸ்யாந்தே நீராஜநார்ப்பணம்
க்ருத்வாத2 ப்ரணமேத் பூ4மௌ, ஆஞ்ஜநேயம் ஹ்ருதா3 ஸ்மரந் ॥

வீட்டில் யாருக்காவது பேய், பிசாசு, பில்லிசூனியம் முதலியவைகளால் பீடை உண்டாகில், “ஆஞ்ஜநேயர் லங்கா விஜயம்” செய்த ஸுந்தர காண்டம் 3-வது ஸர்க்கத்தை மாலையில் பாராயணம் செய்யவேண்டும். “விமார்க்க ஸர்வத்ர” என்ற கடைசி ச்லோகம் முடிந்ததும் கற்பூர ஹாரத்தி செய்து, ஆஞ்ஜநேயரைத் தியானம் செய்து நமஸ்கரிக்கவேண்டும்.

நிவேதனம் : ஆரம்பத்தில் மாத்திரம் சர்க்கரைப் பொங்கல்.

ஸங்கல்பம்

ஸ்ரீ ஸீதாலக்ஷ்மண ப4ரதசத்ருக்4ந ஹநுமத் ஸமேத
ஸ்ரீராமசந்த்3ர ப்ரபோ4: ப்ரஸாதே3ந, பூ4ம்யந்தரிக்ஷ
சர பூ4தவேதாளாதி3க்ருத பீடா3நிவ்ருத்யர்த்த2ம்
‘லங்காதே3வதா விஜயா’த்மக ஸ்ரீமத்3 ராமாயண
க4ட்ட பாராயணம் அஹம் கரிஷ்யே ।

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸர்க்கம் 3

மாருதி லங்காதேவதையை ஜயித்தது

ஸ லம்ப[3] ஶிக²ரே லம்பே³ லம்ப³ தோயத³ ஸந்நிபே⁴।
ஸத்வமாஸ்த்²ாய மேத⁴ாவீ ஹநூமாந் மாருதாத்மஜ: ॥ (1)

நீருண்ட மேகம் ஆகாச வீதியில் தொங்குவதுபோலத் தோன்றும் லம்பமென்ற பெயர் பெற்ற ஸுவேல மலையின் மேலிருந்து மஹா புத்திமானான அநுமான், லங்கையில் பிரவேசித்துத் தேடுவதற்கு வேண்டிய திறமையை அடைந்து, ராத்திரி காலத்தில் அந்த நகரத்தில் புகுந்தார். அது அழகிய பூஞ்சோலைகள் சூழ்ந்து நீர்வளம் மிகுந்து, சரத்காலத்து மேகங்களையொத்த வீடுகளால் விளங்கிற்று. ஜனங்களுடைய கோஷம் ஸமுத்திரம் கர்ஜிப்பது போலிருந்தது. சமுத்திரக் காற்று ஸுகமாய் எப்பொழுதும் வீசிக்கொண்டிருந்தது. குபேரனுடைய அளகாபுரியைப் போல் நன்றாய்ப் பாஷிக்கப்பட்ட சதுரங்க பலத்தை உடையது. அழகிய தோரண வாசல்களில் மதயானைகள் கட்டப்பட்டிருந்தன. வெண்மையான தோரண வாசல்கள் அமைக்கப்பட்டிருந்தன. ஸர்ப்பங்களுடைய ராஜதானியான போகவதியைப்போல் நன்றாக ரக்ஷிக்கப்பட்டது. உயர்ந்த வீடுகளின் உச்சியில் மின்னற் கொடிகள் கொண்ட மேகங்கள் இருந்தன. அவை நக்ஷத்திரமண்டலத்தை அளாவியிருந்தனவன்றோ? காற்று மிருதுவாயும் சுகமாயும் வீசிக்கொண்டிருந்தது. இந்திரனுடைய அமராவதியோ என்று மலைக்கும்படியிருந்தது. பொன்னால் செய்த பெரிய மதிள்சுவரால் சூழப்பட்டிருந்தது; கொடிகளிலும் த்வஜங்களிலும் கட்டப்பட்டிருந்த கிங்கிணிகள் மதுரமாய் சப்தித்துக்கொண்டிருந்தன. இவைகளைப் பார்த்து அடங்காத ஆச்சரியம் கொண்டு அநுமான் தங்கப்பிராகாரத்திற்கு ஸமீபத்தில் சென்றார். தங்கமயமான கதவுகளும், வைடூரியங்களிழைத்த மேடைகளும், நவரத்தினங்களாலும் ஸ்படிகத்தாலும் முத்துக்களாலும் விசித்திரமாய் வேலை செய்யப்பட்ட தரைகளும், உருக்கி ஓடவிட்ட தங்கத்தால் அமைக்கப்பட்ட மதயானைகளும், வைடூரியப் படிக்கட்டுகளுடனும், ஸ்படிகத்தினால் அழியற்று பிரகாசிக்கும் வெள்ளியால் செய்யப்பட்ட மேல்மாடங்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Nanganallur, Chennai

களும், ஆகாசத்தையளாவும் அழகிய சபைகளும், கிரௌஞ்ச மயில், ராஜ ஹம்ஸம் முதலிய பக்ஷிகளும், வாத்தியங்க பாட்டும் ஆபரணங்களும் இனிமையாய்ச் சப்திப்பதும், அ வதியோ என்று பார்ப்பவர்கள் மயங்கும்படி ஆகாசத் பறந்துபோவதுபோல் இருப்பதுமான அந்நகரம் ஆஞ்ஜநேய மேலும் ஸந்தோஷத்தையும் ஆச்சரியத்தையும் வி செய்தது.

விரும்பக்கூடிய ஸகல ஐசுவரியத்தாலும் விளங்கும் அ ராக்ஷஸ ராஜதானியைப் பார்த்து, "என்ன ஆச்சரியம்! இ லங்கையை எந்த சத்ருவாவது கண்ணெடுத்துப் பார்க்கக்கூடு எக்காலத்திலும் ஆயுதபாணிகளாக இதை ரக்ஷிக்கும் ரா ஸைன்யங்கள் ஸாமான்யமா? குமுதன், அங்கதன், ஸுஷே மைந்தன், த்விவிதன், இவர்களுக்கே இந்த நகரம் தெரிந்திரு ஆனால் ஸுக்ரீவனும், குசபர்வனும், கேதுமாலனும், நா இதில் பிரவேசிக்கமுடியும்" என்று கவலை கொ[illegible]ார். ராமனுடைய பராக்கிரமத்தையும் லக்ஷ்மணனு[illegible]ய வீரியத் யும் நி[illegible]த்து அளவற்ற சந்தோஷமடைந்தார். லங்கை ஸ்த்ரீக்கு ரத்தினங்களிழைத்த பிராகாரமே வஸ்திரம்; ய குதிரை, பசுக்களிருக்கும் சாலைகளே செவிக்கு ஆபரண மதில்களிலுள்ள ஆயுத சாலைகளே ஸ்தனங்கள்; அந்த நகரத் ரத்தின தீபங்களாலும், ஜ்வலிக்கும் வீடுகளாலும் இருட் பதே தெரியாது.

இப்படி அநேக அற்புதமான காக்ஷிகளைப் பார்த்துக்கொ மாருதி செல்லுகையில், அந்த நகரத்தைக் காக்கும் தே ஹநுமான் அந்த நகரத்தில் பிரவேசிக்க முயலுவதைக் கவ விகாரமான ஸ்திரீ ரூபத்துடன் அவருக்கெதிரே தோன்றிக் மான குரலுடன், "நீ யார்? காட்டில் வஸிக்கும் குரங்கு இ வந்த காரணமென்ன? உன் பிராணன் போவதற்குமுன் உ யைச் சொல், மூடா! குரூர ராக்ஷஸர்கள் இடைவிடாமல் இ காத்து வருகிறார்கள்; ராவணேசுவரன் இதைத் தன்னு போல் ரக்ஷிக்கிறான். நானே இந்த நகரத்தைக் காக்கும் தே நீ இதற்குள் ஸுலபமாகப் பிரவேசிக்கலாமென்று வந்தா

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

என்று அதட்டினாள். அதற்கு மாருதி, "பெண்ணே! நீ கே தற்கு நிஜமான மறுமொழி சொல்கிறேன். ஆனால் நீ யார்? ரூபத்துடன் இந்த நகரத்து வாசலில் நின்றுகொண்டு என் தடுத்து ஏன் அதட்டுகிறாய்?" என்றார். லங்காதேவதை த கேட்டதற்குப் பதில் சொல்லாமல் தன்னை எதிர்த்துக் கேட ஹநுமானிடத்தில் கோபங்கொண்டு, "கேளடா குரங்கே! ராக்ஷ ராஜனான ராவணேசுவரனுடைய கட்டளைப்படி இந்த நகரத்தை ரக்ஷித்துவருகிறேன். என்னை ஒருவரும் எதிர்க்கமுடியாது; என்னை அலக்ஷ்யம் செய்து நீ இந்த நகரத்தில் செல்லமுடியுமோ? இதோ உன் உயிரை வாங்குகிறேன் பார். நானே லங்காபுரி; எந்தத் திக்கிலும் இதைக் காத்து வருகிறேன்" என்றாள். அதைக் கேட்டு, அநுமான் அவளை ஜயிப்பதற்கு வேண்டிய சக்தியை மே கொண்டு மஹாபர்வதத்தைப்போல் அசையாமல் நின்று விகார மான ஸ்திரீ ரூபம் கொண்ட அந்த தேவதையை நோக்கி, "இந்த லங்காபுரியையும் இதிலுள்ள வீடுகளையும் அரண்மனைகளையும் கோட்டைகளையும் வனங்களையும் தோட்டங்களையும் சோலைகளை யும் நன்றாய்ப் பார்க்கவேண்டுமென்று எனக்கு மிக்க ஆசை உண்டு; அப்படியே என் இஷ்டப்படி ஸகல ஆச்சரியங்களையும் பார்க்க வந்திருக்கிறேன்" என்று மறுமொழி சொன்னார். உடனே லங்கா தேவதை, "மூடா! என்னை ஜயித்தாலல்லவா நீ இந்தப் பட்டணத்தில் புகமுடியும்?" என்று கடுமையாய் அதட்டினாள். அதற்கு ஹநுமான், "பெண்ணே! இருக்கட்டும்; இந்த நகரத்தை நன்றாகச் சுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்பிப்போக நிச்சயித்திருக் கிறேன்" என்று சாந்தமாய்ப் பதில் சொன்னார்.

உடனே அந்த நகரதேவதை பயங்கரமாய்க் கர்ஜித்து, ஆஞ்ஜ நேயரை ஓங்கி அறைந்தாள். அந்த வானர வீரன் கோபம் கொண்டு, இடிபோல் சிரித்து, ஸ்திரீயை வலது கையால் அடிப்பது தனக்குக் குறைவாகையால், இடதுகை விரல்களை மடக்கி அவளைக் குத்தினார்; அதே காரணத்தால் அவளிடத்தில் மிகவும் கோபிக்க வில்லை. அந்தக் குத்தைத் தாங்கமுடியாமல் அந்த ராக்ஷஸி தேகம் கலங்கி, விகாரமான முகத்தையும், கண்களையும் உடையவளாய்ப் பூமியில் விழுந்தாள். அதைப் பார்த்து ஹநுமான் அவள் ஸ்த்ரீ என்பதை நினைத்து, இரக்கம் கொண்டார். அப்பொழுது லங்கா

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Hariharan Collection, Sholinganallur, Chennai

தை பயத்தால் நடுங்கி வார்த்தைகள் குளற கர்வமழிந்
களுட ர சிரேஷ்டா! கிருபை செய்யும்; மஹாநுபாவா! என்
மயி பாற்றும். தைரியம் பலம் முதலிய உத்தம குணங்களையுடை
பா ர்கள் ஸ்திரீகளைக் கொல்வதில்லை. நானே இந்த லங்கா
வ து பராக்கிரமத்தால் இன்று ஜயிக்கப்பட்டேன். வேறு
ஷயம் சொல்லுகிறேன் கேளும், இது ஸத்தியம். முன்கா
ல் பிரஹ்மதேவர் என்னைப் பார்த்து, 'எந்த ஸமயத்தில்
னரம் உன்னை பராக்கிரமத்தால் ஜயிப்பானோ அப்பொழு
ராக்ஷஸ குலத்திற்குப் பெரிய பயம் நேரும்' என்று வரம் கொடு
திருக்கிறார். இன்று உம்மைப் பார்த்தால் அந்தச் சமயம் வந்
ட்டதென்று தோன்றுகிறது. பிரஹ்மாவின் வார்த்தைக்கு இர
டுண்டோ? துராத்மாவான ராவணனும், ஸமஸ்த ராக்ஷஸர்களு
ஸீதையின்பொருட்டு மடியும் காலம் ஸமீபத்திலிருக்கிறது. வா
ரோத்தம! ராவணனால் ரக்ஷிக்கப்பட்ட இந்த லங்கையில் உம
இஷ்டப்படிப் பிரவேசித்து, வேண்டிய காரியங்களைச் செய்யு
அநேக சாபங்களால் கொளுத்தப்பட்ட இந்நகரில் பிரவேசியும்
இந்த ராக்ஷஸ ராஜதானியில் உமது இஷ்டப்படி ஸகலவிடங்க
ளும் ஸீதையைத் தேடும்" என்றாள்.

ப்ரவிஶ்ய ஶாபோபஹதாம் ஹரீஶ்வர:
புரீம் ஶுபா⁴ம் ராக்ஷஸ ராஜபாலிதாம்।
யத்³ருச்ச²யா த்வம் ஜநகாத்மஜாம் ஸதீம்
விமார்க³ ஸர்வத்ர க³தோ யதா²ஸுக²ம் ॥



CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ ராமசந்த்ராய நம:

7. வைத்தியம் தெளிய

(For Recovery from Mental Disorders)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

ஸுந்தர காண்டம்: ஸர்க்கம் 13

உமா ஸம்ஹிதா

உந்மாத³தோ³ஷ ஶாந்த்யர்த்த²ம் ஹநூமச்சிந்தநம் படே²த்।
அஶோகவநிகாயாந ஸமயே ஸமுபஸ்தி²தம் ॥
நிவேத³யேத் யத: ப்ராத: மாஷசூர்ணாந்ந மாத்³ருத: ॥

நம்மைச் சேர்ந்தவர்கள் யாருக்காவது, புத்தி சிதறியோ, பைத்தியம் பிடித்தோ இருந்தால், 'அசோகவனத்திற்குப் போகு முன் அநுமாருக்கு ஏற்பட்ட சிந்தை'யை விவரிக்கும் ஸுந்தர காண்டம் 13-வது ஸர்க்கத்தைக் காலையில் பாராயணம் செய்ய வேண்டும்.

நிவேதனம்: உளுந்துப் பொடி கலந்த அன்னம்.

ஸங்கல்பம்

ஸ்ரீ ஸீதாலக்ஷ்மண ப⁴ரதசத்ருக்⁴ந ஹநுமத்ஸமேத
ஸ்ரீராமசந்த்³ரப்ரபோ⁴ : ப்ரஸாதே³ந......
நாம்ந:/நாம்ந்யா:, ப்ராரப்³த⁴வஶாக³த
உந்மாத³தோ³ஷ ஶாந்த்யர்த்த²ம் 'மாருதி
நிர்வேதா'த்மக ஸ்ரீமத்³ ராமாயண க⁴ட்ட
பாராயணம் அஹம் கரிஷ்யே ।

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri Srinivasan Collection, Sholinganallur, Chennai

ஸர்க்கம் 13

சீதையைக் காணாமல் மாருதி துக்கித்தது

விமாநாத்து ஸுஸங்க்ரம்ய ப்ராகாரம் ஹரியூத²ப: ।
ஹநூமாந் வேக³வாநாஸீத்³ யத²ா வித்³யுத்³ க⁴நாந்தரே ॥ (1)

பிறகு மஹா வேகசாலியான ஹநுமான் இந்திர நீலக்கல்லால் அலங்கரிக்கப்பட்ட கோட்டைமதில் மேலேறி நிற்கையில் கருத்த மேகங்களுக்கு நடுவிற் பிரகாசிக்கும் மின்னலைப்போல் தோன்றினார். ராவண கிருஹத்தில் எங்கும் தேடியும் ஸீதையைக் காணாமல் பின்வருமாறு யோசித்தார். "ராமனுடைய ஆக்ஞையை நிறைவேற்ற முயன்ற நான் இந்த லங்கா நகரத்தை வேண்டிய வரையில் தேடினேன். உத்தம லக்ஷணங்கள் பொருந்திய அவயங்களையுடைய ஸீதையை மாத்திரம் காணவில்லை. குட்டைகள், குளங்கள், ஏரிகள், வாய்க்கால்கள், நதிகள், சதுப்பு நிலங்கள் நிறைந்த வனங்கள், புதர்கள், மலைகள் ஒன்றுவிடாமல் தேடிப் பார்த்தேன்; ஜானகி மாத்திரம் காணப்படவில்லையே! ராவண கிருஹத்தில் ஸீதை இருக்கிறாள்; அதோ பாருங்கள்' என்று சொன்ன ஸம்பாதியின் வார்த்தைப்படி இங்கே அவளைக் காணேனே!

"எது எப்படியிருந்தாலும் ஜானகி காம பரவசமாய், துஷ்ட நடத்தையுள்ள ராவணனிடத்தில் மோகித்து அவனுக்கு உட்பட்டிருப்பாளோ? அவள் ஸாமான்ய ஸ்த்ரீயா? யாகயக்ஞங்களுக்கும் பிரஹ்மவித்யைக்கும் வாஸ ஸ்தலமான விதேஹ வம்சத்தில் பிறந்தவளல்லவா? சதானந்தர் யாக்ஞவல்க்யர் முதலிய பிரஹ்ம நிஷ்டர்களால் பரிசுத்தமான மிதிலா நகரத்தில் அவதரித்தவளல்லவா? மஹரிஷிகளும் உபதேசத்திற்காக வந்து அடுக்கும்படியான ஜனகரென்ற பிரஹ்மவித்திற்குப் பிறந்தவளல்லவா? மற்ற ஜீவகோடிகளைப்போல் ஸ்திரீ புருஷ ஸம்பந்தத்தால் பிறக்காமல், யாக காலத்தில் யாக பூமியை உழும்பொழுது கலப்பை நுனியால் வெளிப்படுத்தப்பட்டவளன்றோ?

"ஒருவேளை ராவணன் ஸீதையை எடுத்துக்கொண்டு ஆகாச மார்க்கமாகப் போகையில், 'இதற்குள் ராமன் பர்ணசாலைக்கு வந்து ஸீதையைக் காணாமல் தேடி, ஜடாயு முதலியவர்களால் நான் கொண்டு போகிறேனென்றறிந்து, பாணப் பிரயோகம் செய்தால் என்ன செய்வேன்? அது எங்கிருந்தாலும் விடாதே. மாரீசனைப் படுத்தினபாடு தெரியாதா?' என்று நினைத்து நடுங்கி ஸீதையை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection Sholinganallur, Chennai

நழுவ விட்டிருக்கலாம். அவள் மலைகளைப்போன்ற அலைகள் கொந்தளிக்கும் ஸமுத்திரத்தை ஒரு நாளும் காணுதவள்; தேவகணங்கள் ஸஞ்சரிக்கும் ஆகாச வீதியில் அதிவேகமாய்ச் செல்லும்போது முதலை திமிங்கிலம் நீர்ப் பாம்பு முதலிய ஜல ஜந்துக்களைக் கண்டு பயத்தால் பிரக்ஞையற்றுக் கீழே விழுந்து இறந்தாளோ? மிக்க செல்வமாய் வளர்க்கப்பட்டவளாகையால் மஹா பலவானுன ராவணனுடைய புஜங்களால் பீடிக்கப்பட்டு அவன் போகும் அதிவேகத்தை ஸஹிக்காமல் உயிரை விட்டிருப்பாளோ? அல்லது மஹா பதிவிரதையாகையால் பர புருஷனுல் தொடப்பட்ட தேகத்தைச் சுருக்கிக்கொண்டு ராவணன் ஸமுத்திரத்திற்குமேல் வரவர உயரக் கிளம்பிப் போகையில் ஸமுத்திரத்தில் விழுந்திருப்பாளோ? அல்லது, ராவணன் தன் இஷ்டத்திற்கிணங்கும்படி அவளைப் பலாத்காரம் செய்திருப்பான்; உயிரை விட்டாலும் விடுவாளே அன்றி ஸம்மதிப்பாளா? அதைக் கண்டு ராவணன் கோபப் பரவசனுய் தனியாயும் அனுதையாயும் இருக்கும் ஜானகியைத் தின்றிருப்பான். அல்லது ராவண பத்னிகள் சக்களத்தி துவேஷத்தால் ஸாதுவான ஜானகியைப் பங்கிட்டுத் தின்றுவிட்டார்களோ? அல்லது ராமமூர்த்தியின் திவ்விய மங்கள விக்ரஹத்தையும், கோடி மன்மத ஸௌந்தரியத்தையும், பூர்ண சந்திரனைப் போன்ற முகத்தையும், மலர்ந்த செந்தாமரையைப் போன்ற நேத்திரங்களையும் நினைத்து நினைத்துருகி, 'இனி அவரை நான் பார்க்கப்போகிறதில்லை' என்று மனம் தளர்ந்து உயிரை விட்டாளோ? 'ஹா! ராம! லக்ஷ்மண! ஹா! அயோத்யா!' என்று கதறிக்கொண்டே பிராணனை விட்டாளோ?

"சீ! இப்படி எண்ணுவதெல்லாமல் புத்திஹீனம். ஸீதையைக் கொஞ்சம்கூட அபாயமில்லாமல் லங்கையில் கொண்டுபோய் வைப்பது ராவணனுக்கு ஒரு பெரிய காரியமா? ஹிமய மலையைப் போல் கலங்காத தைரியத்தையுடைய வீர சிரேஷ்டர்களுடைய வம்சத்தில் பிறந்த ஜானகிக்குப் பயமென்பதும் உண்டோ? பதிவிரதா தர்மமென்ற நெருப்புக் கொழுந்தால் சூழப்பட்ட ஜானகியை ராவணன் ஹிம்ஸை செய்யவும் முடியுமோ? தான் ஆசை கொண்டு, ஸகல அபாயங்களையும் லக்ஷியம் செய்யாமல், மஹா பாதகத்தைச் செய்யத் துணிந்த ராவணன் ஸீதையைத் தின்றிருப்பான் என்று எண்ணவும் முடியுமோ? ராக்ஷஸேசுவரனுக்கு மிக்கப் பிரியமான ஸீதையை அவனுடைய பத்னிகள் கண்ணெடுத்துப் பார்க்கவும் துணிவார்களோ? ராமனுடைய நிஜ ஸ்வரூபத்தையும், தேஜஸையும் பராக்கிரமத்தையும் பலத்தையும் வீரியத்தையும் பூர்ணமாக அறிந்த ஸீதை, அவர் தன்னை மறந்து விடுவாரென்றும், அவருக்கு ராவணனை ஜயிப்பது அஸாத்தியமென்றும் எண்ணி நம்பிக்கையற்று உயிரை விடுவாளோ?

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

"ஆகையால் உயிரோடிருக்கிருள்; லங்கையிலேயே இருக்கிருள். ஆனுல் பஞ்சவர்ணக் கிளியைக் கூட்டிலடைத்து வைப்பதைப் போல், எங்கேயோ ரஹஸ்யமான இடத்தில் ராவணனுல் ஒளித்துவைக்கப்பட்டுக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிருளென்பது நிச்சயம். ஸ்த்ரீ புருஷ ஸம்பந்தமில்லாமல் யாக பூமியில் பிறந்து, ஜனக ராஜரிஷியால் வளர்க்கப்பட்டு, ஸகல லோக நாதனுன ராம மூர்த்தியைப் பர்த்தாவாக அடைந்து பிரபஞ்சத்தை மயக்க வந்த மாயையைப்போல் அழகால் ஸமஸ்த பிராணிகளையும் மோகிக்கச் செய்யும் ஜானகி, எவ்விதத்திலும் தனக்குத் தகாத மஹா பாபிக்கு ஸ்வாதீனப்பட்டிருப்பாளோ? ராவணன் அவளை எங்கேயாவது பூமிக்குள் ஒளித்துவைத்திருப்பானே? வரும் வழியில் மயங்கி ஸமுத்திரத்தில் விழுந்தாளோ? ராகவனைப் பிரிந்திருக்க முடியாமல் உயிரை விட்டாளோ? ஸீதையிடத்தில் அபார பிரியமுள்ள ராமனிடத்தில் இதைத் தெரிவிப்பது அயுக்தம். சொன்னுல் பெரும் கெடுதி நேரும்; சொல்லாவிட்டால் ஸ்வாமிக்குந் துரோகம் செய்தவனுவேன்; ஒன்றிற்கொன்று விரோதமாக இருக்கிறது. என்ன செய்யலாம்? இந்த ஸங்கட தசையில் கால தேசத்திற்கு ஒத்தபடி நான் செய்யவேண்டியதென்ன?" என்று ஆஞ்ஜநேயர் சிந்திக்கலானுர். ஸீதையைக் காணுமல் இங்கிருந்து கிஷ்கிந்தைக்குச் செல்வதால் என்ன பிரயோஜனம்? ஸமுத்திரத்தைத் தாண்டினதும் லங்கையில் பிரவேசித்ததும், ராவணனைப் பார்த்ததும் வீணுகும். ஸுக்ரீவ மஹாராஜனும், கிஷ்கிந்தையிலுள்ள வானரர்களும், ராமலக்ஷ்மணர்களும் என்னை என்ன சொல்லமாட்டார்கள்?

" 'எப்படித் தேடியும் ஸீதையைக் காணவில்லை' என்ற கோரமான வார்த்தையை ராமனிடத்தில் சொன்னுல், அந்த க்ஷணத்திலேயே உயிரை விடுவாரே. என் கடுமையான வாக்கியங்கள் நாராசங்களைப்போல் அவருடைய ஹிருதயத்தைக் குரூரமாய்த் துளைத்து, இந்திரியங்களை வேரறுக்கும்; அதற்குப் பிறகும் பிராணன் தரிக்குமோ? ஸஹிக்கமுடியாத துக்கத்தால் ராமன் உயிரைவிட நிச்சயிப்பதைக் கண்டு, தனது உடல் உயிர் ஆவியை அவருக்கு அர்ப்பணம் செய்த லக்ஷ்மணன் பிழைத்து இருப்பாரோ? மஹா புத்திமானல்லவா? ராமலக்ஷ்மணர்கள் இறந்ததைக் கேட்டவுடன் பரதன் உயிரை விடுவார். அவருடைய நிழலைப்போன்ற சத்ருக்னன் ஒரு நிமிஷமாவது அவனை விட்டிருப்பாரோ? லோக பாலர்களைப்போன்ற புத்திரர்களைப் பறிகொடுத்துக் கௌஸல்யை, ஸுமித்திரை, கைகேயி என்ற ராஜபத்தினிகள் பிழைத்தும் இருப்பார்களோ? ஸுக்ரீவ மஹாராஜன் சொன்ன சொல் தவருதவன்; ராமனுலடைந்த பரமோபகாரத்திற்குத் தன்னுல் பிரத்யுபகாரம் செய்ய முடியாமல் அவர் துக்கத்தால் இறப்பதைப் பார்க்க ஸஹிப்பாரோ? வெகுகாலம் கஷ்டங்களை அனுபவித்துப் பலவிதமாய்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அவமானம் செய்யப்பட்டுத் தன் பர்த்தாவிற்குக்ஷேமம் பிறக்குமே என்று தெய்வங்களை வேண்டிய ருமை, ஸுக்ரீவனும் இறந் விதவையாய்க் காலம் கழிக்க நினைப்பாளோ? உத்தம பதிவ யல்லவா? வாலியைப் பறிகொடுத்து நடைப் பிணம் போலிருக் தீக்ஷ்ணபுத்தியுள்ள தாரை ஸுக்ரீவனையும் இழந்து உயிரோடிருப் பாளா? நிகரற்ற மாதாபிதாக்களுமில்லாமல், தகப்பனுக்கு தக பனுயிருந்த ஸுக்ரீவனும் இறந்து, குழந்தை அங்கதன் அகா மரணமடைவானென்பதில் ஸந்தேகமுண்டோ? தங்களுக்கு ஸக விதத்திலும் கதியான அரசர்கள் மடிந்தபிறகு வானரர்கள் கைய லும் முஷ்டிகளாலும் தலைகளில் அறைந்துகொண்டு பிராண விடுவார்கள். மஹாராஜாவால் மிருதுவான வார்த்தைகளாலு வெகுமானங்களாலும் கௌரவத்தாலும் பெருமைபடுத்தப்பட் வாநர சிரேஷ்டர்கள் அவர் இறந்தபிறகும் மானஹீனமா ஜீவனம் செய்வார்களா? வீடுகளிலும் வனங்களிலும் மலைகளிலு கூடி ஸந்தோஷமாய் விளையாடுவார்களோ? ஸுக்ரீவனுக்கு நேர்ந் கஷ்டத்தை நினைத்து மந்திரி பிரதானிகளுடனும் பெண்டு பிள் களுடனும் மலைச்சிகரங்களிலிருந்து விழுந்து மடிவார்கள் விஷத்தைத் தின்றோ, நெருப்பில் விழுந்தோ, தூக்குப்போட் கொண்டோ, உபவாசம் செய்தோ, ஆயுதங்களாலோ எந்தவிதத் லாவது தற்கொலை செய்துகொள்வார்கள். நான் போனவுட பெருங்கூச்சலும் அழுகையும் கிளம்பும்; இக்ஷ்வாகு வம்சம் மடியு வாநரர்களும் நிர்மூலமாவார்கள். இப்படி எல்லோரையும் கொ லும் நான் இங்கிருந்து கிஷ்கிந்தைக்குப் போக நினைப்பேனோ ஸீதையைக் காணுமல் மஹாராஜாவின் முகத்தில் எப்ப விழிப்பேன்?

"நான் போகாமல் இங்கேயே இருந்துவிட்டால், தர்மாத்மா களும் பராக்கிரமசாலிகளுமான ராமலக்ஷ்மணர்களும், ஸமுத்திர கரையில் என்னை எதிர்பார்த்திருக்கும் வாநர வீரர்களும் 'மாரு காரியத்தை எப்படியாவது முடித்துக்கொண்டே வருவான்' என் நம்பிக்கையால் உயிரை வைத்துக்கொண்டிருப்பார்கள். நா பழம், கிழங்கு, ஜலம் நிறைந்த ஸமுத்திரக்கரையோரங்களி வானப்பிரஸ்த விரதத்தை அனுஷ்டித்துக்கொண்டு அகஸ்மா தாய் என் கைகளிலும் வாயிலும் விழும் பதார்த்தங்களைத் தின் காலம் கழிப்பேன்; அல்லது, சிதையை அடுக்கி நெருப்பி விழுந்து இறப்பேன்; ஸமுத்திரத்தில் குதித்து உயிரை விடுவே உபவாஸம் செய்து தேகத்திலிருந்து ஆத்மாவைப் பிரிக்க யத்தன பண்ணிக்கொண்டிருக்கையில் காக்கைகளும் நாற்கால் ஜந்த் களும் என் தேகத்தைத் தின்றுவிடும். இவ்வித மரணம் மஹரி களால் மெச்சப்பட்டதே. இந்த ராத்திரி நன்றாக ஆரம்பித்த முதலில் லங்கா தேவதையை ஜயித்தேன்: சந்திரனும் என

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

விசேஷ உபகாரம் செய்தான்; ஸீதையைத் தேடும் உத்தம காரியத்தில் ஸஹாயம் செய்ததென்றும், ஹநுமான் ஸீதையைக் கண்டுபிடித்த ராத்திரி என்றும் அபாரகீர்த்தியால் அலங்கரிக்கப் படும் என்றும் எண்ணியிருந்தேன்; ஸீதையைக் காணுமல் இதெல்லாம் வீணுயிற்று. தபஸ்வியாக இருந்து மரத்தடிகளில் காலங்கழிப்பேனேயொழிய ஸீதையைக் காணுமல் திரும்பிப் போகமாட்டேன். போனுல் என்னை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் அங்கதனும் மற்ற வாநரர்களும் உடனே பிராணனை விடுவார்கள். நான் இறப்பதில் அனேகம் கெடுதி களுண்டு; உயிரோடிருந்தால் என்றைக்காவது க்ஷேமம் நேரும். ஆகையால் உயிரை வைத்துக்கொள்வதே நலம்.''

இப்படிப் பலவிதமாய் யோசித்தும் ஆஞ்ஜநேயருக்குத் துக்கம் தீரவில்லை. "அல்லது, மஹாபலவானுன லங்காதிபதியைக் சொல்லட்டுமா? அதனுல் வேறு பிரயோஜனமில்லாவிட்டாலும் அந்தப் பாபி செய்த அக்கிரமத்துக்குப் பழிவாங்கின திருப்தி யாவது உண்டாகும். அல்லது யாகப் பசுவை அக்னிதேவதைக்கு வெகுமானமாய்க் கொண்டுபோவதுபோல், ராவணனைக் கட்டி ஆகாசமார்க்கமாய்க் கொண்டுபோய் ராமனுடைய பாதத்தில் போடட்டுமா?'' என்று ஹநுமான் துக்கத்தாலும் கவலையாலும் பீடிக்கப்பட்டு மறுபடியும் ஆலோசித்தார். "ஸீதையைக் காணும் வரையில் இங்கே யிருந்து லங்கையில் அடிக்கடி தேடுவேன், அல்லது, ஸம்பாதி சொன்ன வார்த்தையை நம்பி, 'ஸீதை லங் கையில் இருக்கிருள்' என்று சொல்லி ராமனை அழைத்து வந்தா லென்ன? ஐயோ! ஸீதை இங்கு இல்லாவிட்டால் வாநர குலத் தைச் சாம்பலாக்குவாரே! ஆகையால் இங்கேயே இந்திரியங்களை அடக்கிக்கொண்டு உபவாஸம் செய்வேன்; பாபம், என்னுல் வாநரர்களெல்லாம் நாசமடைய வேண்டுமா?'' என்று நாற்புறங் களிலும் கவனித்துப் பார்த்து, "மோசம் போனேனே! என்ன புத்திஹீனம்! இதோ ஆகாசத்தையளாவும் அசோகமரங்கள் அடர்ந்த சோலையில் நான் இதுவரையில் தேடவில்லையே; ஜானகியை ஏன் இங்கே வைத்திருக்கக்கூடாது? இந்த க்ஷணமே தேடுகிறேன். வஸுக்கள், ருத்திரர்கள், ஆதித்தியர்கள், அச்வினிகள், மருத்துக்கள் முதலிய தேவகணங்களை நமஸ்கரிக் கிறேன். எனக்கு ஸகாயம் செய்து நான் ராக்ஷஸகுல காலனுகும்படி ஆசீர்வதிக்கட்டும். வெகு காலம் கடுந்தவம் செய்தவனுக்கு ஸித்தி யைக் கொடுக்கும் தேவதையைப்போல் ரகுகுல கீர்த்தியை விளங்கச் செய்யும் ஸீதையைக்கொண்டு போய் ராமனிடத்தில் ஒப்புவிப்பேன்'' என்று மஹாதேஜஸ்வியான ஆஞ்ஜநேயர் சற்று நேரம் யோசித்து, கவலையால் இந்திரியங்கள் கலங்கி, இப்பொழு தாவது காரியம் கைகூடுமோ?'' என்று எண்ணிக்கொண்டே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

எழுந்தார். 'ராம லக்ஷ்மணர்களுக்கும் ஜானகிக்கும் ருத்திர இந்திரன், யமன், வாயு, சந்திரன், ஸூரியன், மருத்துக் முதலிய தேவதைகளுக்கும் நமஸ்காரம்' என்று ஸூரிய புத் னும் தன் பிரபுவுமான ஸுக்ரீவனை மனத்தால் வந்தனம் செ ஸகல திக்குகளையும் நன்ருய்ப் பரிசோதித்துப் பார்த்து, ஒருவ இல்லை என்றறிந்து அசோகவனத்தை உற்றுப் பார்த்தார். அ போய்த் தேட நிச்சயித்து மேலே செய்யவேண்டிய காரியங் ஆலோசித்தார். "அசோகவனத்தில் ஜலம் நிறைந்திருக் கணக்கில்லாத ராக்ஷஸர்கள் ஸஞ்சரித்துக்கொண்டிருப்பார்க சகலவித சாதனங்களாலும் பரிஷ்காரமாக இருக்கும். மரங்க பாதுகாக்க அனேகம் பேர்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பார்க ஸர்வ ஜகத்திற்கும் பிராணுதாரமான என் பிதாவும் கடு யாக வீசக் காணேன். ராவணனைச் சேர்ந்தவர்கள் காணுமல் பதற்கும் ராமகாரியம் ஸித்திக்கும்பொருட்டும் என் தேகத் சுருக்கியிருக்கிறேன். மஹரிஷிகளும் தேவதைகளும் நான் ஸீ யைப் பார்க்கும்படி ஆசீர்வதிக்கட்டும். ஸ்வயம்புவான பிர தேவரும் அக்னி, வாயு, வருணன், மஹேந்திரன், ஸூ சந்திரர்கள், அச்வினிகள், மருத்துக்கள், ருத்திரன் முதலிய களும் என் காரியம் ஸித்திக்கும்படி அநுக்கிரகிக்கட்டும். ஸ பூதங்களும் அவைகளுக்கு நாதனுன விஷ்ணுவும் நான் போ வழியில் என் கண்ணில் படுகிறவர்களும் படாதவர்களும் எ காரியம் கைகூடும்படி ஆசீர்வதிக்கட்டும். சிறந்த மூக்கை வெண்மையான பற்களையும், நிலவுபோன்ற சிரிப்பையும், செ தாமரை இதழ்போன்ற கண்களையும் உடையதாய்ப் பூர்ண சந் னைப்போல் ஸகல பிரபஞ்சத்திற்கும் ஆனந்தத்தைக் கொடுக் ஸீதாதேவியின் திருமுகமண்டலத்தை இந்தத் தேவதைகளுடை கிருபையால் எப்பொழுது பார்ப்பேன்? மஹாநீசன், பாபத்தி அஞ்சாதவன், ஸகல லோகங்களும் நடுங்கும்படியான குரூரகா தியங்களைச் செய்கிறவன், கோரரூபியானுலும் எல்லோ மோகிக்கும்படியான வேஷத்தைத் தரிக்கிறவன்; தன் ஜனங்க விட்டுத் தனியாய்த் தவிக்கும் மஹாபதிவிரதையான ஜானகியை பலாத்காரம் செய்து கொண்டுவந்திருக்கிருனே! அவளை இ பொழுது பார்ப்பது எப்படி?" என்று சிந்தித்தார்.

க்ஷுத்³ரேண பாபேந ந்ருஶம்ஸ கர்மணு
ஸுத³ாருணுலங்க்ருத வேஷத⁴ாரிணு ।
ப³லாபி⁴பூ⁴தா ஹயப³லா தபஸ்விநீ
கத²ம் நு மே த்³ருஷ்டி பதே²த்³ய ஸா ப⁴வேத்॥ (

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ ராமசந்த்ராய நம:

8. தரித்திர நிலை நீங்க

(For Improvement in Financial Condition)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

ஸுந்தர காண்டம் : ஸர்க்கம் 15

உமா ஸம்ஹிதா

த³ாரித்³ர்ய த்⁴வம்ஸ காமஸ்து லங்காயாம் து ஹநூமதா!
மைதி²லீத³ர்சநம் ப்ராப்தம் படே²த் பாபவிமோசநம்॥

பல கலைகளைக் கற்றிருந்து, பற்பலவிதமாகப் பிரயத்தனம் செய்தபோதிலும், வேலை கிடைக்காமலும், வேலை கிடைத்தும் குடும்பத்தை நடத்தப் போதிய வருமானமில்லாமலும், தரித்திரத்தால் தவிக்கும் மக்கள், தாம் சுகமடைய "சீதா தேவியை ஹநுமான் தரிசித்த" ஸுந்தர காண்டம் 15-வது ஸர்க்கத்தைக் காலையில் பாராயணம் செய்யவேண்டும்.

நிவேதனம் : ஐந்து வாழைப்பழங்கள்.

ஸங்கல்பம்

ஸ்ரீ ஸீதாலக்ஷ்மண பரதஶத்ருக்ந ஹநுமத் ஸமேத
ஸ்ரீராமசந்த்ர ப்ரபோ: ப்ரஸாதேந,
வர்தமானதா³ரித்³ர்ய நிவ்ருத்தி பூர்வக
கமலா கடாக்ஷஸித்⁴யர்த்த²ம் "ஹநூமத்
க்ருத ஸீதாத³ர்ஶநா"த்மக ஸ்ரீமத்³ ராமாயண
க⁴ட்ட பாராயணம் அஹம் கரிஷ்யே |

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸர்க்கம் 15

ஹநுமான் ஸீதையைக் கண்டது

ஸ வீக்ஷமாணஸ் தத்ரஸ்தே²ா மார்க்க³மாணஸ்ச மைதிலீம்।
அவேக்ஷமாணஸ்ச மஹீம் ஸர்வாம் தாமந்வவைக்ஷத॥ (1)

ஹநுமான் அந்த மரத்தின் மேலிருந்து நான்கு பக்கங்களிலும் ஸீதையைத் தேடிக்கொண்டு, பூமியையும் மரச் சோலைகளையும் உற்றுப் பார்த்தார். கல்பகம் முதலிய தேவ விருக்ஷங்களின் ஜோதியால் திக்குகள் பிரகாசித்தன; குயில்கள் மதுரமாய்க் கூவின ; அசோக மரங்கள் புஷ்பங்களாலும் பழங்களாலும் பால ஸூரியனைப் போலும், நெருப்பைப்போலும் ஜ்வலித்தன ; ஸகல ருதுக்களில் உண்டாகும் புஷ்பங்களும் அங்கே காணப்பட்டன. விசித்திர ரூபமுள்ள புஷ்பங்கள் ஆபரணங்களைப்போல் காணப்பட்டன. பழங்களாலும் புஷ்பங்களாலும் இலைகளாலும் அடிமுதல் நுனிவரையில் மறைக்கப்பட்டு, பாரம் தாங்காமல் பூமியில் புரளும் அசோகம் முதலிய அநேகம் விருக்ஷங்களைக் கண்டார். பக்ஷிக் கூட்டங்கள் கணக்கில்லாமல் வந்து விழுந்து, கிளைகளில் இலைகளே இல்லாமல் செய்துவிடுவன போலிருந்தன. நடவாவிகளில் தங்க மயமான தாமரை முதலிய புஷ்பங்கள் பிரகாசித்தன. திவ்வியமான வாஸனையாலும் ரசத்தாலும் அந்த வனம் மனத்தை அபகரித்தது. மனிதர் பார்த்து ஸந்தோஷிக்கும் சகலவிதமான பக்ஷிகளும், மிருகங்களும் அங்கே காணப்பட்டன. உப்பரிகைகளாலும், அரசர்களின் அரண்மனைகளாலும், பலவகை ஆசனங்களாலும் கம்பளங்களாலும் அலங்கரிக்கப்பட்ட அநேகம் சுரங்கங்களாலும் நெருக்கமாக இருந்தது. எவ்விடமும் அழகாக அலங்கரிக்கப்பட்டு, இந்திரனுடைய நந்தனமென்ற வனத்தை ஒத்திருந்தது. அந்த விருக்ஷங்களின் காந்தியால் அந்தப் பிரதேசம் முழுவதும் நெருப்புப் பிடித்து எரிவதுபோல் தோன்றிற்று. ஆழமாய் வேரூன்றிச் செழிக்கும் புன்னை, ஏழிலைப்பாலை, சம்பகம் முதலிய மரங்களும், தங்கம் நெருப்பு மை முதலியவைகளைப் போல் வர்ணமுள்ள அசோக மரங்களும் அங்கே காணப்பட்டன. அதி மனோஹரமாய் வர்ணிக்க முடியாததாய் விசேஷ சோபையுடன் இந்திரனுடைய நந்தனத்தை ஒத்து, குபேரனுடைய சைத்ரரதத்தைப் பரிகாசம் செய்வதுபோலிருந்தது. புஷ்பங்களாகிற நக்ஷத்திரங்களால் ஆகாசத்தைப்போலவும், புஷ்பங்களாகிற ரத்தினங்களால் ஐந்தாவது சமுத்திரத்தைப்போலவும், ஸகல ருதுக்களிலும் புஷ்பிக்கும் மரங்களாலும் தேன் மணம் வீசும் மரங்களாலும் பலவகைப் பக்ஷிகளாலும் மிருகங்களாலும் அவ்வு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

களின் விசித்திரமான த்வனிகளாலும் வாசனைகளாலும் அந்த அசோக வனம் பரிசுத்தமான கந்தமாதன பர்வதத்தைப்போலு தோன்றியது.

அந்த வனத்தில் சற்று தூரத்திற்கப்பால் யாக சாலைபோ கட்டப்பட்ட ஒரு மாளிகையைக் கண்டார். அது வெகு உயரமா ஆயிரம் ஸ்தம்பங்களுடன் வெண்மையாகக் கைலாஸ பர்வத் தைப் போலிருந்தது. அதன் பவழப் படிகளும் தங்கமேடைகளு கண்ணைப் பறித்தன. பிறகு அந்தச் சிம்சுபா விருக்ஷத்திற் அருகிலுள்ள மாளிகையின் அருகில் ஒரு ஸ்த்ரீ இருப்பதை கண்டார். அவளைச் சுற்றிலும் ராக்ஷஸிகள் கண்கொட்டாம காத்துக்கொண்டிருந்தார்கள். நெடுநாளாய் ஆகாரமில்லாம துரும்புபோல் இளைத்திருந்தாள்; புழுதிபடிந்த தேகத்தி அழுக்குப் படிந்து கிழிந்த தங்கமயமான ஒற்றை வஸ்திரம் சுற்ற பட்டிருந்தது; தாமரை மலர் அற்ற தடாகம்போல் யுவதிகளுக் உசிதமான ஆபரணங்களின்றி அவள் காணப்பட்டாள்; கண்ண தாரை தாரையாய்ப் பெருகிக்கொண்டிருந்தது. சரத்காலத்தி கருத்து வன வரிசைகளால் விளங்கும் பூமியைப்போன்ற சுருண் நீண்ட தலைமயிர் கருநாகத்தைப்போல் ஒற்றைப் பின்னலா இடுப்பிற்குக் கீழ்வரையில் தொங்கிக்கொண்டிருந்தது. தைரி மற்று அடிக்கடி பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தாள்; மிகுந் லஜ்ஜையுடன் தன் பர்த்தாவை விட்டுப் பிரிந்த துக்கத்தா வாடித் தவித்துக்கொண்டிருந்தாள். ஆனால் சகலப் பிரபஞ்சத் தையும் பதிவிரதாக்கினியால் கொளுத்தக்கூடியவள்; அவ படும்பாட்டைப் பார்த்துக் கருங்கல்லும் உருகும்; ராமத் தியானத் தாலும் அவரைப் பிரிந்த சோகத்தாலும் மெய்ம்மறந்தவள் மனம் குன்றித் துக்கத்தைத் தவிர வேறு கதியில்லாதவள்; தன் பிரிய ஜனங்களைவிட்டு ராக்ஷஸிகளின் நடுவில் அவள் இருப்பத தன் இனத்தை விட்டுப் பிரிந்த பெண்மான் நாய்களால் சூழப் பட்டதுபோல் இருந்தது; கஷ்டத்தையே அறியாதவள்; பரம ஸுகத்தையே அநுபவிக்கத் தகுந்தவள்; சொல்லமுடியாத் துக்கத்தால் வாட்டப்படுகிறவள்; அவளுடைய ரூபத்தையும் அழகையும் சற்று யோசித்துப் பார்த்த பிறகுதான் இவள் ஜானகி என்று அறியமுடியும்; சுக்கில பக்ஷத்தின் ஆரம்பத்தில் நிர்மல மான சந்திர ரேகையைப்போலும், புகையால் மூடப்பட்ட அக்னி ஜ்வாலையைப் போலும், பிரிய நாயகனான சந்திரனை அடைய வேண்டிய ரோஹிணியை அங்காரகனென்ற குரூரக் கிரஹம் பிடித்ததுபோலும் தோன்றினாள்.

அழுக்கடைந்து இளைத்த தேகத்தையும் விசாலமான நேத் திரங்களையுமுடைய அந்தப் பெண்ணை, நன்றாய்க் கவனித்துப் பார்க்கையில் தகுந்த காரணங்களால் இவளே ஸீதை என்ற

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri Hariharan Collection, Sholinganallur, Chennai

மாருதி நிச்சயித்தார். "இஷ்டமான ரூபத்தை எடுக்கக்கூடிய ராவணன் எடுத்துக்கொண்டு போகையில் எவளைக் கண்டேனோ அவளுக்கும் இவளுக்கும் ரூபத்தில் பேதமில்லை. பூர்ண சந்திரனைப் போன்ற முக மண்டலத்தையும், மன்மதனுடைய வில்லைப் போன்ற புருவங்களையும், தாமரை இதழ்களைப்போல் மலர்ந்து செவ்வரி படர்ந்து மான் குட்டியைப்போல் மிரண்டிருக்கும் நேத்திரங்களையும், கருத்த தலைமயிரையும், கருத்து வளைந்திருக்கும் இமைகளையும் கோவைக் கனிபோன்ற உதடுகளையும், சிறுத்த இடையையும் கவனிக்கையில் அவளென்றே தோன்றுகிறது. தேக காந்தியால் சகல திக்குகளும் இருள் நீங்கிப் பிரகாசிக்கின்றன; அங்கங்கள் பொருத்தமாக அமைக்கப்பட்டிருக்கின்றன; மன்மதனின் பத்தினியான ரதியைப்போல் அழகுள்ளவள், பூர்ணிமா சந்திரனைப்போல் சகலப் பிராணிகளும் பார்க்க விரும்பக் கூடியவள்; அவயவங்கள் உத்தம லக்ஷணங்கள் பொருந்தி இருக்கின்றன; பூமியில் உட்கார்ந்து பெருமூச்சு விடுவதால் தவம் செய்பவளைப்போல் தோன்றுகிறாள்; ஆனால் நாகராஜனுடைய பத்தினியைப்போல் நெருங்கமுடியாதவள்; புகைக் கூட்டத்தால் மறைக்கப்பட்ட அக்னி ஜ்வாலையைப்போல் பெரும் துக்கத்தால் மறைந்த பிரகாசத்தை உடையவள்; சந்தேகமான அர்த்தங்களையுடைய மநு முதலிய மஹரிஷிகளின் ஸ்மிருதி வாக்கியங்களைப் போலும், க்ஷீணமான சம்பத்தைப்போலும், அவநம்பிக்கையால் தடையுற்ற சிரத்தையைப் போலும், நிறைவேறாத ஆசையைப் போலவும், விக்கினங்களால் தடைபட்ட காரிய ஸித்தியைப் போலும், கலங்கின புத்தியைப் போலும், அநியாயமான அபவாதத்தால் கெடுக்கப்பட்ட கீர்த்தியைப்போலும், நீருண்ட மேகங்களால் மறைக்கப்பட்ட சந்திர காந்தியைப்போலும், வேத சுருதிகளின் ஆதாரமில்லாமையால் பிரஸித்தியற்ற வேத விரோதமான வித்தையைப்போலும் (அடிக்கடி வேதாத்யயனம் செய்யாததால் மறைந்துபோன வித்தையைப்போலும் காணப்படுகிறாள் இந்த ...ழைத் பிரிய நாயகனான ராமனைப் பிரிந்து அவரை அடைவேனோ ஏக்கம் பிடித்து, ராவணன் தொட்டு எடுத்ததால் தேகப்பிரபு; அனாதையாய் என்ன ஆபத்து நேருமோ என்று நான் யுத்தம் களிலும் பயத்துடன் பார்த்துக்கொண்டிருக்கிறாள். கல் ... தியைக் முகம் கருத்து, உத்தம பூஷணங்களை அணிந்துகொள்ள ... இல்லாமலிருக்கிறாள்" ...தனக்குக் வளானாலும், ஆபரணங்கள் யோசித்தார். ஹநுமான் அவளை அடிக்கடி பார்த்தும் அறிந்தும் சந்தேகம் தீரவில்லை. வியாகரணமும் சாஸ்திர பரிசயமுப்...புவும் தவன் ஒரு வாக்கியத்திற்கு விபரீதமான அர்த்தத்தை...டய வாக்கியத்தைக் கஷ்டப்பட்டு அறிவதுபோல் யாதொரு அல...ு மும் இல்லாத ஸ்திதியில், இவள்தான் ஜானகி என்று கஷ்டப்ட்...ு அறிந்தார்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பிறகு, விசாலமான நேத்திரங்களையும் சுத்தமான நடத்தை யும் உடைய ஸீதையை வேறு சில காரணங்களால் அடையாள கண்டுபிடித்தார். அவள் இருக்குமிடத்தைச் சுற்றிலும் கவனித்து பார்க்கையில் அவள் எந்த ஆபரணங்களை அணிந்திருந்ததா ராமன் தனக்குச் சொல்லியிருந்தாரோ அவையெல்லாம் மர கிளைகளில் தொங்கவிடப்பட்டிருந்தன; விசித்திரமாய்ச் செய்ய பட்ட கம்மல், கர்ணப்பூ முதலிய கர்ணுபரணங்களும், பவள தாலும் நவமணிகளாலும் பிரகாசிக்கும் கடகம் சங்கிலி மோதிர முதலிய பூஷணங்களும் பர்த்தாவைப் பிரிந்த விரஹாக்கினியா கருத்திருக்கின்றன. வெகுகாலம் அணிந்தபடியால் அவைகளை கயற்றின பிறகும் அந்த அடையாளங்கள் இருக்கின்றன. ஆகை யால், ராமன் எனக்குச் சொன்ன பூஷணங்கள் இவைகளே என்று நிச்சயித்தார். "ஜானகியினுடைய தேகத்திலிருந்து எந்த ஆபரணங்கள் கழன்று விழுந்தனவோ, அவை இங்கே இல்லை; எவை விழவில்லையோ அவை இங்கே இருக்கின்றன. ஸீதையை அபகரித்துக்கொண்டு போகையில் ரிசிய மூக பர்வதத்தில் விழுந்த தங்கமயமான பச்சை உத்தரீயத்தையும் மதுரமாய் சப்திக்கும் ஆபரணங்களையும் விட்டெறிந்தவள் இவளே. இப்பொழுது தரித்திருக்கும் வஸ்திரம் வெகுநாளானதால் அழுக்கடைந்து கிழிந்திருக்கிறது; ஆனாலும் என்னால் ரிசியமூகபர்வதத்தில் பார்க்கப்பட்ட வஸ்திரத்தின் வர்ணத்திலும் காந்தியிலும் பேத மில்லை. ராகவனுடைய பிரியமான மஹிஷியும் பதிவிரதையும் ஸுவர்ண காந்தியுடையவளுமான இவள் மறைந்தாளாயினும் பிரிய [illegible]டைய மனத்தில் எப்போதும் குடியிருக்கிறாள். அவளே தன் [illegible] என்பதில் சந்தேகமில்லை. எவளைக் குறித்து ராமன் வெகு பட்ட[illegible]களால் பரிதவிக்கிறாரோ, அவள் இவளே. "ஒவ்வொரு ஸுகத்[illegible] துக்கத்[illegible]ன்னைச் சேர்ந்த ஸ்திரீகளுக்கு ஆபத்து நேரும்பொழுது அழுகை[illegible] ரக்ஷிப்பது ஸஹஜம்; நான் அப்படிச் செய்யமுடியாமல் என்று [illegible]ற" என்று இரக்கத்தாலும், "அண்டினவர்களைக் கைவிடு மான [illegible] என்பது நமது பிரதிக்ஞையன்றோ? எல்லோரும் ஜ்வா[illegible] வேண்டும்போது என்னையே ரக்ஷகனாய் ஆசிரயித்து வனத்துக்கு பிடி என்னுடன் சகல கஷ்டங்களையும் அனுபவித்தவளைக் கை -டேனே" என்ற உருக்கத்தாலும் "புருஷனில் பாதி பாரியை என்ற சுருதிப்படி அக்னிசாக்ஷியாய் நம்மைப் பர்த்தாவாக

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Harihara Collection, Sholinganallur, Chennai

அடைந்தவளை இழந்தேனே" என்ற சோகத்தாலும்; 'என் அன்பிற்குரிய நாயகியைப் பிரிந்தும் இன்னும் இந்தப் பாழும் பிராணன் போகவில்லையே' என்ற விரஹாக்கினியாலும் ராமர் தவிக்கிறார். இவ்விருவர்களுடைய சரீரமும், கரசரணாதி அவயவங்களுடைய மேன்மையும் ஓரே விதமாக இருக்கின்றன.

ஆகையால் இந்தப் பெண்மணி அவருக்குத் தகுந்தவளே. இவளுடைய மனம் அவரிடத்திலேயே வேரூன்றி இருக்கிறது; அவருடைய மனமும் இவரிடத்திலேயே நாடியிருக்கிறது; அதனால் தான் இவ்விருவரும் உயிரை வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். மால்யவானென்ற பர்வதத்தில் ராகவன் ஸீதையின் பிரிவை சஹிக்காமல் புலம்பினபொழுது, "இதென்ன விபரீதம்! வஸிஷ்ட மஹரிஷியின் சிஷ்யராம்; வேதவேதாந்தங்களைக் கரைகடந்தவராம்; ஸகல கஷ்டங்களையும் சஹிக்க வல்ல க்ஷத்திரிய வீரராம்; யாரோ ஒரு ஸ்த்ரீயை விட்டுப் பிரிந்ததற்காக இவ்வளவு பாடுபடுகிறாரே!" என்று நான் நித்தியப் பிரஹ்மசாரியானதாலும் விஷயங்களில் விரக்தனானதாலும் பரிஹாசம் செய்தேன். இப்போது இவளுடைய ஸௌந்தரியத்தையும் தீன ஸ்திதியையும் கண்டபிறகு எனக்குப் புத்திவந்தது. இந்த சமுத்திரத்தைத் தாண்டினது ஒரு பெரிய காரியம் என்று எண்ணியிருந்தேன். இவளைப் பிரிந்தும் இன்னும் ராமன் தேகத்தை வைத்துக் கொண்டிருப்பதால் ஒரு பெரிய செய்யமுடியாததைச் செய்து வருகிறார் என்று நினைக்க வேண்டும். அவருடைய சோகத்தால் அவர் அழியவில்லை. இந்த உத்தம ஸ்த்ரீயைப் பிரிந்து ஒரு முகூர்த்தமாவது அவர் பிழைத்திருப்பது அசாத்தியமான காரியம். அவருக்கென்ன? மஹாப்பிரபு; ராஜ்யத்தை ஆளவும் யானை குதிரைகளைப் பழக்கவும் யுத்தம் செய்யவும் மாத்திரம் தெரியுமே ஒழிய ஸ்திரீயின் பிரீதியைக் கொஞ்சமாவது அநுபவித்தவரல்ல. என்ன பிரபு! தனக்குக் கீர்த்தியையும் தேஜஸ்ஸையும் விருத்தி செய்யும் இவளைப் பிரிந்தும் பிரபுத்வமுண்டோ? தன்னை அண்டினவர்களைக் கைவிடும் பிரபுவும் உண்டோ? ஸீதையோ பர்த்தாவிற்கு உட்பட்டவள்; அவருடைய ஆக்ஞையில்லாமல் தன் தேகத்தைவிடக் கூடாது; ராமனோ ஸ்வதந்திரர்; இந்தத்தேகம் தானல்லவே; ஒரு காரியத்திற்காக எடுத்துக்கொண்டது தானே. போகங்களை அனுபவிப்பதற்காகத்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தேகத்தை வைத்துக்கொள்கிறதோ, துக்கத்தை அநுபவிப்பதற்காக வைத்துக்கொள்ளுகிறதோ? பலவந்தமாய்ப் பிராணனை விடலாமோ என்றால், பிராணனைப் போக்க சோகம் ஒன்றே போதாதோ?" என்று எண்ணி, அழுக்கடைந்த வஸ்திரத்துடன் உபவாஸத்தால் இளைத்து நாயகனையே தியானித்துக் கொண்டிருக்கும் ஸீதையைப் பார்த்து ஹநுமான் ஸந்தோஷமடைந்தார். தன் புத்தியில் குடிகொண்டிருக்கும் ராமமூர்த்தியை தியானித்து, "உம்மைத் திரும்பி அடையும்படி தன் பதிவிரத தர்மத்தைக் காப்பாற்றிக்கொண்டிருக்கும் உத்தமியைப் பத்தினியாக அடைந்த நீரன்றோ பாக்கியசாலி" என்று ஸ்தோத்திரம் செய்தார்.

ஏவம் ஸீதாம் ததா³ த்³ருஷ்ட்வா ஹ்ருஷ்ட: பவநஸம்ப⁴வ:।
ஜகா³ம மநஸா ராமம் ப்ரஶஶம்ஸ ச தம் ப்ரபு⁴ம் ॥ (5)



CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ ராமசந்த்ராய நம:

9. அடுத்தடுத்துவரும் துக்கம் நீங்க

(For the Prevention of Sorrowful Events)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

யுத்த காண்டம் : ஸர்க்கம் 116

உமா ஸம்ஹிதா

துக்க த்வம்ஸந காமஸ்து ராவணஸ்ய வதோத்தரம் ।
ஸீதாஞ்ஜநேய ஸம்வாதஸர்க்கம் து ப்ரயத: படேத் ॥

தான் செய்யும் தொழிலுக்கு மற்றொருவன் குறுக்கே வந்து போட்டியிடுவது, தேகத்தில் அடிக்கடி வியாதி யுண்டாவது, வீட்டில் சிறிய பெரிய சச்சரவுகள் உண்டாவது, பட்டணங்களில் வாழ வசதியான இடம் கிடைக்காமை, படிக்க விரும்பும் மாணவருக்குப் பள்ளியிலோ கல்லூரியிலே இடம் கிடைக்காமை, உழைப்புக்குத் தக்க ஊதியம் கிடைக்காமை, மற்றவரால் மான பங்க மேற்படுமென்ற பயம் இவை போன்ற கஷ்டங்கள் அடுத் தடுத்து வந்தால் அவை நீங்க ராவண வதமான பின் "ஸீதாஞ்ஜநேய ஸம்வாத"முள்ள யுத்த காண்டம் 116-வது ஸர்க்கத்தைக் காலையில் பாராயணம் செய்யவேண்டும்.

.. நிவேதனம்: ஐந்து வாழைப்பழங்கள்.

ஸங்கல்பம்

ஸ்ரீ ஸீதாலக்ஷ்மண பரதஶத்ருக்ந ஹநுமத்ஸமேத ஸ்ரீ ராமசந்த்ர ப்ரபோ: ப்ரஸாதேந, உத்தரோத்தரமநுபூயமாந ஸர்வவித துக்க நிவாரணார்த்தம் "ஸீதாஞ்ஜநேய ஸம்வாதா" த்மக ஸ்ரீமத் ராமாயண கட்ட பாராயணம் அஹம் கரிஷ்யே ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit S.V Harihan Collection, Sholinganallur, Chennai

ஸர்க்கம் 116

ஹநுமானுக்கும் ஸீதைக்கும் ஸம்வாதம்

இதி ப்ரதிஸமாதி'ஷ்டோ ஹநுமாந் மாருதாத்மஜ: ।
ப்ரவிவேஶ புரீம் லங்காம் பூஜ்யமாநோ நிஶாசரை: ॥ (1)

ராமன் இப்படி உத்திரவு செய்தவுடன் ஆஞ்ஜநேயர், ஸகல ராக்ஷஸர்களும் வழிகாட்ட லங்கையில் பிரவேசித்தார். ராவணனுடைய அந்தப்புரத்திற்குள் சென்று பார்க்கையில், தேகமெங்கும் புழுதி படிந்து ஸ்நானமில்லாமல் ஸந்தோஷமற்று, அசோக வனத்தில் விருக்ஷத்தினடியில், கோர ராக்ஷஸிகளுக்கு நடுவில் ஏக்கம் பிடித்து, ரோஹிணி புதனுல் பீடிக்கப்பட்டதுபோல், ஸீதை உட்கார்ந்திருக்கக் கண்டார். ஸமீபத்தில் போய், தன் பெயரைச் சொல்லி நமஸ்கரித்து, அவயவங்களை ஒடுக்கிக்கொண்டு, மனோ வாக்குக் காயங்கள் அசைவற்று, ஹநுமான் பக்தியுடன் கைகூப்பி வாய்பொத்தி நின்றார். மஹாபலவானன அஞ்ஜனா புத்ரன் தனக்கெதிரில் நிற்பதைக் கண்டு, ஸீதை ஆச்சரியமடைந்து, ஒன்றும் தோன்றாமல் அசைவற்றிருந்தாள். பிறகு அவரை உற்றுப் பார்த்து, முகத்தில் விளங்கின காந்தியாலும் ஸந்தோஷத்தாலும் தானும் ஸந்தோஷமடைந்தாள். அவளுடைய முகம் ஆனந்தத்தாலும் தன்னைப் பார்த்ததாலும் மலர்ந்ததைக் கண்டு, அந்த வானர சிரேஷ்டன், ராமன் சொன்ன வார்த்தைகளை விஸ்தாரமாய்ச் சொல்ல ஆரம்பித்தார்.

"தேவி! ரகுவீரனும், லக்ஷ்மணனும் ஸுக்ரீவனும், விபீஷணனும் வானர ஸைன்யங்களும் க்ஷேமமாயிருக்கிறார்கள். பரம சத்ருவான ராவணன் மரணமடைந்தான். வந்த காரியம் நிறைவேறிற்று. அவர்களுடைய க்ஷேமத்தைத் தங்களுக்கு தெரிவிக்கச் சொன்னார்கள். விபீஷணனுடைய ஸஹாயத்தாலும், வானரர்களுடைய பிரயத்னத்தாலும், லக்ஷ்மணனுடைய யுக்தியாலும் ராமன் ராவணனை யுத்தத்தில் ஜயித்துக் கொன்றார். தன் உத்தேசம் கைகூடி ஸந்தோஷமடைந்திருக்கிறார். தங்களுடைய க்ஷேமத்தை விசாரித்துப் பின்வருமாறு சொல்லச் சொன்னார்: 'ஜானகி! உனக்குப் பிரியமான ஸமாசாரத்தைச் சொல்லுகிறேன். உன்னை ஹிம்ஸித்த ராவணன் மடிந்தான். உனக்கு விசேஷ பிரியமுள்ள காரியத்தைச் செய்யப்போகிறேன். இவ்வளவு காலமாய் என்னைவிட்டுப் பிரிந்திருந்த உன்னை என்னுடன் சேர்த்துக் கொண்டு, அயோத்யைக்குத் திரும்பப் போகிறேன். பதிவிரதா தர்மத்தின் ரஹஸ்யத்தைப் பூர்ணமாயறிந்தவளே! நான்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri Vasudevan Collection, Chennai

ராவணனை இவ்வளவு கஷ்டப்பட்டு ஜயித்தும், நீ இதுவரையி பிழைத்திராவிட்டால் வீணுகுமல்லவா?' ஆகையால் இவ்வள மாதங்களாகச் சொல்லமுடியாத கஷ்டத்தையும் பயத்தை அநுபவித்துக்கொண்டு, நான் மறுபடியும் உன்னை மீட்க வரு னென்ற நம்பிக்கையில்லாமல், ராவணன் பலவிதமாய்ப் பிரா தித்தும் வஞ்சித்தும் ஸ்தோத்ரம் செய்தும் என்னை இகழ்வா பேசியும் உன்னைப் பயமுறுத்தியும் அவனுடைய இஷ்டத்திற் படாமல், என்னிடத்தில் நம்பிக்கையையும் பிரீதியையும் வைத் ஒரே மனதாயிருந்து உயிரைக் காப்பாற்றினது, நான் செய் பாக்யத்தின் பிரயோஜனந்தான். ஸகல கவலையும், துக்கமு விசாரமும் ஒழிந்தன. நமக்குப் பூர்ண ஜயம் கிடைத்திருக்கிற ராவணன் இறந்தான்; நமக்குச் சத்ருவில்லை; இந்த லங் நமது வசத்திலிருக்கிறது. உன்னை சத்ருவிடத்திலிருந்து மீட் னென்று பிரதிக்ஞை செய்து, அதை நிறைவேற்ற வேண்டுமென் கவலை கொண்டு, ஆகார நித்திரையில்லாமல், இன்று என் வார் த்தையை நிஜமாக்கினேன். மஹாஸமுத்திரத்தில் அணையை கட்டினேன். 'ராவணனுடைய கிருஹத்தில் இன்னுமிருக்கிறோே என்று கவலைப்படாதே லங்கையும் அதிலுள்ள ஸகல ஐச்வரியமு இப்பொழுது விபீஷணனுடையவை. ஆகையால் விசாரப்பட வேண்டாம். நீ உன் வீட்டிலிருப்பதாக எண்ணு. விபீஷண அதிசீக்கிரத்தில் உன்னை தரிசிக்க ஆவல் கொண்டு வருகிறா என்று தங்களிடத்தில் சொல்லச் சொன்னுர்" என்று மாரு தெரிவித்தார்.

அதைக் கேட்டு ஸீதை ஆனந்தத்தால் பூர்ண சந்திரனை போல் முகமண்டலம் விளங்கப் பரபரப்புடன் எழுந்திருந் ஒன்றும் தோன்ருமல் அசைவற்றுச் சும்மாவிருந்தாள். அதை கண்டு வாயுபுத்ரன், "தாயே! ஏன் என்னிடத்தில் பேசவில்லை என்ன மனக்கவலை கொண்டிருக்கிறீர்கள்?" என்ருர். பதிவிரத தர்மத்தை அனுஷ்டிப்பவர்களுக்குள் உத்தமியான ஸீதை அளவற்ற ஸந்தோஷமடைந்து, ஆனந்தத்தால் குரல் தழதழத் "என் பர்த்தா ஜயமடைந்த ஸந்தோஷ சமாசாரத்தைக் கேட் ஆனந்தம் மேலிட்டு, கொஞ்சநேரம் வார்த்தை சொல்லமுடி யாமல் மெய்ம்மறந்தேன். என் புண்பட்ட ஹிருதயத்தில் அமிரு தாரை பொழிந்ததுபோல் இந்த ஸந்தோஷ சமாசாரத்தை சொன்ன உனக்கு, என்ன பதில் சொல்லுகிறதென்று நான் எவ்வளவு யோசித்துப் பார்த்தும் தெரியவில்லை. குழந்தாய் உன்னுல் நான் அடைந்த உபகாரத்திற்கும் ஆனந்தத்திற்கு தகுந்த வெகுமானம் செய்வதற்கு இந்தப் பூமியில் யாதொரு வஸ்துவையும் காணேன். தங்கம் வெள்ளி பொன் பலவகை ரத்னங்கள் இந்த மூன்று லோகங்களிலுமுள்ள மற்ற வஸ்துக்கள் யாவும் அதற்குப் போதாது" என்ருள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அப்பொழுது ஹநுமான் தலைமேல் கைகூப்பி, விநயமாய் அவளுக்கெதிரில் நின்று, "பர்த்தாவின் க்ஷேமத்தையும் ஹிதத்தையும் ஜயத்தையும் பிரார்த்திக்கும் உத்தமியே! விசேஷப் பிரேமையுடன் கூடின இந்த வார்த்தையைத் தாங்கள் சொன்னதே எனக்குத் தகுந்த பதில் சொன்னதாயிற்று. என் யோக்யதைக்கு மிஞ்சின வெகுமானமாயிற்று. தங்களைத் தவிர இப்படி யார் சொல்லக்கூடும்? தாங்கள் சொன்ன வார்த்தை விசேஷ ஸார முள்ளது. 'நீ சொன்ன வார்த்தைக்குத் தகுந்த பதிலைக் காணேன்' என்ற வார்த்தை, தங்களுக்கு எல்லையற்ற பிரியமுண்டாயிற் றென்ற மஹாதாத்பரியத்தையுடையது. என்னிடத்தில் தங்களுக் குள்ள பிரீதியைத் தெரிவிக்கிறது. இதைக் கேட்டவுடனே ஸர்வோத்தமமான வஸ்துவை எனக்கு வெகுமானம் செய்ததா லுண்டாகும் ஆனந்தத்தை அடைந்தேன். பலவகை ரத்னங் களைக் குவியல்களாகக் கொடுத்தாலும், மூன்று லோகங்களின் அதிகாரத்தை எனக்குக் கொடுத்தாலும் இதற்கு ஈடாகுமா? தாங்கள் சொன்னதெல்லாம் எனக்கு இதுவரையிலுமே கிடைத் திருக்கின்றன. ரகுவீரன் ராவணனை ஸம்ஹரித்து, ஜயலக்ஷ்மியுடன் விளங்குவதை நான் பார்ப்பதாலுண்டான ஆனந்தத்திற்கு இவை சமமாகுமா?" என்றார்.

அதைக் கேட்டு ஜனகராஜ புத்திரி, மிகவும் சுபமான வார்த் தைகளைச் சொன்னாள்: "ஆஞ்ஜநேய! வாக்யங்களுக்கேற்பட்ட தோஷங்கள் ஒன்றுமில்லாமல், ஸகல குணங்களும் பொருந்தின தாய், கேட்டவுடனே ஆனந்தத்தைக் கொடுப்பதாய், எட்டு அங்கங்களுடன் கூடின புத்தியை வெளிப்படுத்தக்கூடிய வார்த் தையை உன்னைத் தவிர வேறு எவன் பேசமுடியும்? (பிறர் சொன்ன அர்த்தத்தை மனத்தில் வாங்கிக்கொள்வது, அதை ஞாபகத்தில் வைத்துக்கொள்வது, வேண்டிய சமயத்தில் வருவித்துக்கொள்வது, யுக்தமான வார்த்தைகளால் பிறர்க்குச் சொல்வது, பிறருடைய அபிப்பிராயத்தை ஊஹித்தறிவது, அதற்கு உடனே பதில் சொல்வது, வார்த்தைகளின் உட்கருத்தை அறிவது, பதார்த்தங்களின் நிஜ ஸ்வரூபத்தை க்ரஹிப்பது, இந்த எட்டும் உத்தம புத்தியின் லக்ஷணங்கள்.) கேவலம் பேசுந்திறமை யால் மாத்திரமல்ல, உத்தம குணங்களாலும் நீ மேன்மையடைந் திருக்கிறாய். வாயுபகவானுக்குப் பிறந்த புத்திரனாயிருந்தும், பிராணிகளுக்கு உயிரைக் கொடுத்து ஆனந்தப்படுத்துவதில் அவரை மிஞ்சியிருக்கிறாய். எல்லோரிடத்திலும் அபார கருணையை வைப்பதென்ற உத்தம தர்மத்திற்கு நீ இருப்பிடம். பிரயாஸங் களைப் பொறுப்பது, யுத்தத்தில் உத்ஸாஹம், சாஸ்த்ரஞானம், தேகவலிமை, பராக்ரமம், ஸாமர்த்யம், பிறரை ஜயிக்கும் சக்தி, அபராதங்களைப் பொறுப்பது, பிரபாவம், ஒன்றாலும் கலங்காத

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தைரியம், விநயம், இன்னும் அநேக உத்தம குணங்கள் உன் அசிரயித்து விசேஷமாய் விளங்குகின்றன. உன்னிடத்தில் இல்லாத குணங்களைக் கல்பித்து, ஸ்தோத்ரம் செய்வதா எண்ணக்கூடாது" என்றாள்.

அதைக் கேட்டு ஹநுமான் சற்றும் கர்வம் கொள்ளாமல் வெகு வணக்கமாய்த் தலைமேல் கைகூப்பி, ஸீதைக்கெதிரே நின்று "தாயே! இதோ இருக்கும் ராக்ஷஸிகள் கோரரூபிகள்; குரூர ஸ்வபாவத்தையுடையவர்கள்; கடுமையான பார்வையையு இரக்கமில்லாத நடத்தையையுமுடையவர்கள்; பிறர் கேட் நடுங்கும்படி பேசுகிறவர்கள். தாங்கள் பர்த்தாவையே தெய் மாய்ப் பாவித்து, அவரை விட்டுப் பிரிந்து, அசோகவனத்தில் ராவணனால் காவலில் வைக்கப்பட்டுச் சொல்லமுடியாத கஷ்ட களை அநுபவித்துக்கொண்டிருக்கும்பொழுது இவர்கள் தங்க நிந்தித்தார்கள்; அதட்டினார்கள்; பயமுறுத்தினார்கள்; அவமான செய்தார்கள்; சொல்லத்தகாத வார்த்தைகளைச் சொன்னார்க கொல்ல ஓடிவந்தார்கள்; நான் எல்லாவற்றையும் ப்ரத்யக்ஷமாய் பார்த்துக்கொண்டிருந்தேன். அப்படிப் பார்க்காத ராமல மணர்களுக்காவது, ஸுக்ரீவன் மற்ற வானரர்களுக்காவது விபீஷணனுக்காவது, என்னைப்போல் இவர்களிடத்தில் கோப கொள்வதற்கு நியாயமில்லை. ஆகையால் உங்களை மிரட்டிய இந் ராக்ஷஸிகள் எல்லோரையும் கொல்லவேண்டுமென்ற அளவற் ஆசை கொண்டிருக்கிறேன். உத்திரவு கொடுங்கள். நான் கேட்கும் வரமும் தாங்கள் எனக்குச் செய்யக்கூடிய வெகு மானமும் இதுதான். இவர்களைக் கைகொண்ட மட்டும் அறை கிறேன்; முழங்கால்களால் இடிக்கிறேன்; கடிக்கிறேன்; காதுகளை யும் மூக்குகளையும் கிழிக்கிறேன்; தலைமயிர்களைப் பற்றி இழுத்து விடுகிறேன்; நகங்களால் கிழிக்கிறேன்; கன்னத்தில் அடிக்கிறேன்; உயரக்கிளம்பி, அவர்களின்மேல் குதிக்கிறேன்; கைகளால் இடித்துப் பூமியில் தள்ளி, முஷ்டிகளால் குத்திக் கொல்லுகிறேன். இவர்கள் தங்களுக்குப் பரம அபகாரம் செய்த துஷ்டைகளல்லவா? இவர்களைப் பலவிதமாய் ஹிம்ஸித்துக்கொல்லுகிறேன்; இப்படிச் செய்வது மிகவும் அவசியம்; தங்களுக்கு இவர்கள் ஸஹிக்க முடியாத அபராதிகளல்லவா?" என்றார்.

பொறுமை, கருணை முதலிய உத்தம குணங்களால் நிகரில்லாத கீர்த்தியடைந்த ஜகன்மாதாவான ஸீதை அதைக் கேட்டு உத்தம தர்மத்திற்கு அநுகுணமான வார்த்தைகளைச் சொன்னாள்: "வாநர சிரேஷ்ட! இவர்கள் அரசனுடைய வேலைக்காரிகள். ஆகையால் ஸ்வாதீனமற்றவர்கள்; அரசனால் ஏவப்பட்ட கார்யங் களையே செய்கிறவர்கள்; அப்படிச் செய்யாவிட்டால் தண்டிக்கப்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri N Hariharan Collection, Sholinganallur, Chennai

படக்கூடியவர்கள் ; ராவணனுடைய வேலைக்காரிகளிடத்தில் எவனாவது கோபங்கொள்வானா? இவர்களைச் சொல்லிப் பிரயோஜனமென்ன? நான் பூர்வஜன்மங்களில் செய்த பாபங்களின் பலனாக இந்த ஜன்மத்தில் இவ்விதமான கஷ்டங்களை அநுபவிக்கும்படி நேர்ந்தது. நான் செய்த கர்மங்களை நானே அநுபவிக்க வேண்டுமல்லாமல் பிறர் அநுபவிப்பார்களா? இப்படிக் கஷ்ட தசையை நான் அடையவேண்டுமென்றும், அந்தக் கஷ்டங்களை இவர்களால் நான் அநுபவிக்கவேண்டுமென்றும் என் விதி. இப்படி இதற்கு முன்பே நான் நிச்சயித்து என் மனத்தை ஸமாதானப்படுத்திக் கொண்டிருக்கிறேன். இப்படிப்பட்ட ஆபத்தைத் தடுக்க எனக்கு அப்பொழுது சக்தியில்லை. பிறருடைய துக்கங்களைப் பார்த்து ஸஹிக்காத நான், இவர்கள் கஷ்டப்படுவதைப் பார்க்கமுடியுமா? ஆகையால் இவர்களிடத்தில் எனக்குள்ள கிருபையே என்னை அப்பொழுதும் தடுத்தது ; இப்பொழுதும் தடுக்கிறது. இவர்களை நாசம் செய்ய எனக்கு எண்ணமிருந்தால் அப்பொழுதே இவர்களை எரித்திருக்கமாட்டேனா? ராவணனால் ஏவப்பட்டு இந்த ராக்ஷஸிகள் என்னை ஹிம்ஸித்தார்கள் ; அவன் இறந்தபிறகு அப்படிச் செய்யவில்லையே? ஒருவேளை இவர்கள் ஸ்வதந்திரமுடையவர்களாய் வேண்டுமென்றே இப்படி அபகாரம் செய்திருந்தாலும், நாம் அதைப் பொறுக்க வேண்டியதுதான்.

"முன்னொரு காலத்தில் ஒரு வேடன் புலியால் துரத்தப்பட்டு ஒரு மரத்தில் ஏறிக்கொண்டான். அங்கே ஒரு கரடி உட்கார்ந்திருக்கக் கண்டு, அதைச் சரணமடைய, அது, 'பயப்படாதே! உன்னை ரக்ஷிக்கிறேன்' என்று பிரதிக்ஞை செய்தது. சற்று நேரம் கழித்து வேடனுக்குத் தூக்கம் வர, கரடியின் மடியில் தலையை வைத்துக்கொண்டு தன்னை மறந்து நித்திரை செய்தான். அப்பொழுது மரத்தடியிலிருக்கும் புலி, மரத்தின்மேலிருக்கும் கரடியைப் பார்த்து, 'தோழா! நாமிருவரும் மிருகங்கள் ; ஒரே ஜாதி; ஒரேவிடத்தில் வஸிப்பவர்கள் ; கஷ்ட ஸுகங்களில் ஸம்பந்தப்பட்டவர்கள் ; இவனோ மனுஷ்யன் ; அதிலும் வேடன் ; நமக்கு ஜன்மசத்ரு ; நம்மைக் கொல்வதே இவனுக்கு ஜீவனம் ; நமது ஜாதியானல்ல; நமது தேசத்தானல்ல; இவனை நீ இப்பொழுது காப்பாற்றினாலும், அதை மறந்து, நாளை உன்னைக் கொல்ல யத்தனிப்பான். ஆகையால் அவனை என்னிடத்தில் தள்ளிவிடு. நமக்கு ஒரு பெரிய ஆபத்து நீங்கும்' என்று பிரார்த்தித்தது. அதற்குக் கரடி, 'இதென்ன அநியாயம்? நானிருக்குமிடத்தைத் தேடி வந்து, என்னைச் சரணமடைந்தவனை நான் கைவிட்டால், எனக்கு இந்த லோகத்தில் 'மித்ரத்ரோஹி' என்று ஜனங்களின் நிந்தையும், பரலோகத்தில் கோரமான நரகமும் கிடைக்கும். ஆகையால் நீ சொல்லும் வார்த்தைகள் என் செவியில் நுழையா'

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

என்றது. பிறகு வேடன் விழித்துக்கொண்டான். கரடிக்குத் தூக்கம் பிடித்து வேடனுடைய மடியில் தலையை வைத்துத் தூங்கிற்று. அப்பொழுது மரத்தடியிலிருந்த புலி, வேடனைப் பார்த்து 'முட்டாளே! என்னிடத்திலிருந்து தப்புவதற்காகக் கரடியை சரணமடைந்தாயோ? அது உன் ஜாதியா? மித்ரனா? உன் சத்... நான் இந்த மரத்தைவிட்டு எப்பொழுது போவேனென்று காத்துக் கொண்டிருக்கிறது; உடனே உன்னைக் கொன்றுவிடும். அது விழித்துக் கொள்வதற்குமுன் அதை என்னிடத்தில் தள்ளிவிட்டால் நான் உனக்குப் பதிலாக அதைத் தின்றுவிட்டுப் போகிறேன். நம்மிருவருடைய காரியமும் நிறைவேறும்' என்றது. வேடன் புலியின் வார்த்தையால் மயங்கி, கரடியிடத்தில் நம்பிக்கையில்லாமல் அதைக் கீழே தள்ளிவிட்டான். அது விழும்பொழுது விழித்துக்கொண்டு, தன் ஜாதிஸ்வபாவத்தால் ஒரு கிளையைப் பிடித்துத் திரும்பவும் மரத்திலேறி உட்கார்ந்தது. அப்பொழுது வேடன் தான் செய்த துரோகத்திற்காகத் தன்னைக் கரடி கொன்றுவிடுமென்று பயந்து நடுங்க, கரடி, 'வேடா! பயப்படாதே. நீ செய்த அபகாரத்தை நான் நினைக்கமாட்டேன். நான் சொன்ன வார்த்தையையும் தவறமாட்டேன்' என்றது.

"அப்பொழுது புலி, 'தோழா! என் பேச்சு நிஜமாயிற்று. இவன், செய்த நன்றி மறந்த மித்ரத்துரோகியென்று இப்பொழுதாவது தெரிந்ததா? கொஞ்சம்கூட இரக்கம் வைக்காமல் இவனை என்னிடத்தில் தள்ளிவிடு' என்றது. அதற்குக் கரடி, 'துஷ்ட ஸ்வபாவமுள்ளவர்கள் பிறர்க்கு அபகாரம் செய்தால், விவேகி அவர்களிடத்தில் கோபிப்பானா? அவர்களுக்குப் பதில் அபகாரம் செய்ய நினைப்பானா? நான் செய்த பிரதிக்ஞையைக் காப்பாற்றுவது பெரிதேயல்லாமல் உன் உயிர் பெரிதல்ல. பிராணிகளுக்கு ஸத்தியமல்லவா பூஷணம்?' என்று மறுமொழி சொல்லி, தன்... புலி எவ்வளவு பிரார்த்தித்தும் அதற்குட்படாமல், அன்று ராத்திரி முழுவதும் வேடனைக் காப்பாற்றிற்று.

(ஸுக்ரீவனைப் பார்த்து ராமன் புருவின் விருத்தாந்தத்தைச் சொன்னபடி, ஸீதையும் கரடியின் விருத்தாந்தத்தை உதாஹரணமாய்க் காட்டுகிறாள். **ஸீதையின் அபயப்ரதான ச்லோகம் இது**...)

"உன் எண்ணப்படி இந்த ராக்ஷஸிகள் பாபிகளாயிருக்கட்டும். என் எண்ணப்படி நல்லவர்களாயிருக்கட்டும். அதை நா... விசாரிக்க வேண்டியதென்ன?

"ராக்ஷஸர்கள் நினைத்த ரூபங்களை எடுக்கக்கூடியவர்கள். ஆயினும் நீ அவர்களிடம் இரக்கம் கொள்ளவேண்டும். குற்றம் செய்யாதவர் உலகில் யார்? க்ரூரமாயிருப்பதே அவர்களுக்கு...

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஜாதி ஸ்வபாவம்; ப்ராணிகளை ஹிம்ஸிப்பதே அவர்களுடைய ஆனந்தம்; அவர்கள் பாபங்களைச் செய்வது ஆச்சரியமல்ல. ஆனாலும் அவர்களுக்கு யாதொரு கெடுதியையும் செய்யக் கூடாது" என்றாள்.

மஹாபுத்திமானான ஹநுமான் ஸீதையின் வார்த்தைகளால் அவளுடைய அபிப்பிராயத்தை அறிந்துகொண்டு, அபார கருணை யால் நிகரற்ற கீர்த்தியைப் பெற்ற ஜகன்மாதாவும், பரம புருஷ னுக்கேற்ற பத்தினியுமான ஸீதையைப் பார்த்து, "தாயே! ரகுநாத னுக்குத் தாங்களே தர்ம பத்னி; அவர் அநுஷ்டிக்கும் சரணாகத ரக்ஷண தர்மம் தங்களால் விசேஷமாய்ப் பிரகாசிக்கிறது. அவருக்கு ஏற்பட்ட கீர்த்தியெல்லாம் தங்களாலல்லவா? தாங்கள் அவருட னிருக்கத் தகுந்தவர்களேயல்லது என்னைப்போன்ற மூர்க்க னுக்கு அந்த யோக்யதையில்லை. ஆகையால் எனக்கு உத்தரவு கொடுங்கள். ராகவனுக்குப் பதில் சொல்லி அனுப்புங்கள். நான் ரகுவீரனிருக்குமிடத்திற்குப் போகிறேன்" என்றார். அதற்கு ஜானகி, "வாநரோத்தம! என் பார்த்தாவைத் தரிசிக்க விரும்பு கிறேன்" என்றாள். அந்த வார்த்தையைக் கேட்டவுடன் ஆஞ்ஜ நேயருக்குத் தேஜஸூம் காந்தியும் விருத்தியாய், "தாயே! பூர்ண சந்திரனைப்போல் பார்ப்பவர்களுடைய ஹிருதயத்தை அமிருத தாரைகளால் குளிரச்செய்யும் ராமனுடைய திருமுகமண்டலத்தை லக்ஷ்மண ஸமேதராய்ப் பார்க்கப் போகிறீர்கள். அவர் சத்ருக்களை ஜயித்து ஸுக்ரீவன் விபீஷணனென்ற மித்திர ரத்னங்களுடன் பிரகாசிக்கிறார். இந்திராணி இந்திரனைப் பார்த்ததுபோல், தாங்கள் ராமசந்திரனைத் தர்சிக்கலாம்" என்றார். உடனே ஸீதையி னுடைய ரூபம் ஸாக்ஷாத் மஹாலக்ஷ்மியைப்போல் தேஜஸால் ஜ்வலித்தது; ஆஞ்ஜநேயரும் அதிவேகமாய் ராமனிருக்குமிடத் திற்குத் திரும்பி வந்தார்.

தாமேவமுக்த்வா ராஜந்தீம் ஸீதாம் ஸாக்ஷாதி³வ ஶ்ரியம்।
ஆஜகா³ம மஹாவேகே³ா ஹநுமாந் யத்ர ராக⁴வ:॥ (56)

———

TBOMR : BRLX
CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



பார்வத்யுவாச :—

கேநோபாயேந லகு⁴நா விஷ்ணோர் நாம ஸஹஸ்ரகம் ।
பட்²யதே பண்டி³தைர் நித்யம் ஶ்ரோதுமிச்சாம்யஹம் ப்ரபோ⁴

"ஸ்வாமீ! பகவானுடைய ஆயிரம் நாமாக்களையும் எவ்வா எளிதான முறையிலே வித்துவான்கள் சொல்லுகின்றார்களே அத்தகைய வழியினைக் கேட்க விரும்புகிறேன்" எனப் பார்வ தேவி பரமேசுவரனைக் கேட்கிறாள்.

பகவானுவாச :—

ஶ்ரீராம ராம ராமேதி ரமே ராமே மநோரமே ।
ஸஹஸ்ரநாம தத்துல்யம் ராமநாம வராநநே ॥

பார்வதி கேட்டதற்குப் பரமசிவன், "அழகிய வதநமுடை பார்வதியே! ராமா, ராமா, ராமா என்று மூன்றுமுறை சொன்னாலே ஸ்ரீ விஷ்ணுவின் ஆயிரம் நாமாக்களைச் சொன்னதா ஆகும்" என எடுத்துக் கூறினார்.

—ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ ராமசந்த்ராய நம:

10. எதிர்பாராமல் வந்த ஆபத்து ஒழிய

(For Overcoming Unexpected Danger)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

யுத்த காண்டம்: ஸர்க்கங்கள் 18-19

உமா ஸம்ஹிதா

அதர்க்கிதாபது³த்³த⁴ார காமஶசே த³ப⁴யார்ப்பணம் ।
வீபீ⁴ஷணய ராமஸ்ய படே²தர்த்த²ம் விசிந்தயந் ॥
ஆத³ாவந்தே ச³ஸம்ஸ்ப்பே²ாட்ய நாலிகேரம் நிவேத³யேத் ॥

உத்யோகத்தில் கண்ணியமாகவும் கௌரவத்துடனும் பல வருஷங்களாக வேலை பார்த்து வருபவருக்குத் தம் உத்யோகமே போய்விடுவதுடன் ஜெயில் வாசமும் கிடைக்குமோ என்ற பயம் திடீரென்று உண்டாதல்; சகஜமாக மிக நம்பிக்கையுடன் நடக்கும் வியாபாரிகள் இருவருக்குள் திடீரெனத் தகராறுகள் ஏற்படல்; இயந்திரங்களிலோ, ஆராய்ச்சிச்சாலையிலோ வேலை செய்பவருக்குத் திடீரெனக் காயங்கள் ஏற்பட்டு, உயிருக்கே ஆபத்தாக அமைதல்; தன் சொத்து முழுவதும் கடனுக்கே பறிபோய்விடுமோ என்ற பயம் ஏற்படல்; இவைபோன்ற ஆபத்துக்கள் நிவர்த்தியடைவதற்காக "ஸ்ரீ ராமர் விபீஷணனுக்கு அபயமளித்த" யுத்த காண்டம் 18, 19-வது ஸர்க்கங்களைக் காலையில் பாராயணம் செய்ய வேண்டும்,

நிவேதனம்: ஆரம்பத்திலும் முடிவிலும் தேங்காய்,

ஸங்கல்பம்

ஸ்ரீ ஸீதாலக்ஷ்மண ப⁴ரதஶத்ருக்⁴ந ஹநுமத்ஸமேத
ஸ்ரீ ராமசந்த்³ரப்ரபே⁴ா: ப்ரஸாதே³ந அதர்க்கிதாக³த
மஹாவிபது³த்³த⁴ாரார்த்த²ம் விபீ⁴ஷண ஸங்க்³ரஹா
த்மக ஸ்ரீமத்³ ராமாயண க⁴ட்ட பாராயணம்
அஹம் கரிஷ்யே ।

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



CC-0 In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸர்க்கம் 68

ராமனுடைய அபிப்பிராயம்

அத² ராம: ப்ரஸந்நாத்மா ஶ்ருத்வா வாயுஸூதஸ்ய ஹ ।
ப்ரத்யபா⁴ஷத து³ர்த்த⁴ர்ஷ: ஶ்ருதவாநாத்மநி ஸ்தி²தம் ॥ (1)

புரு, கண்டுமஹர்ஷி முதலிய புண்யவான்களின் விருத்தாந்தங்களை வஸிஷ்டர் முதலிய பெரியோர்களிடத்திலிருந்து கேட்டவரானபடியால், ராமன் வாநர சிரேஷ்டர்கள் சொன்ன ஆக்ஷேபங்களால் புத்தி கலங்காமல், ஹநுமானுடைய வார்த்தைகளால் மனம் தெளிந்து, தன் அபிப்பிராயத்தை வெளியிட்டார்.

"விபீஷணனைப்பற்றி நானும் சில வார்த்தைகள் சொல்ல வேண்டியிருக்கிறது. என் நன்மையைக் கோருகிற நீங்கள் அவைகளை ஸாவதானமாய்க் கேட்டு உங்களுடைய முடிவைச் சொல்ல வேண்டும்.

"மித்திரனென்று என்னை வந்து அடைந்தவனை நான் ஒருபொழுதும் கைவிடுகிறதில்லை. அவனிடத்தில் தோஷங்களிருந்தாலும், அவனை அங்கீகரிப்பதை சாதுக்கள் நிந்திக்க மாட்டார்கள்."

அதைக் கேட்டு ஸுக்ரீவன் ராமனுடைய ஸ்வபாவத்தைப் பூர்ணமாக அறிந்து, இது மிகவும் துணிவான காரியமென்று பயந்து நடுங்கி, ரகுவீரனிடத்தில் தான் வைத்த அளவற்ற பிரீதியால் "ஸ்வாமி! இவன் யோக்கியனாக இருந்தாலும் சரி, அயோக்கியனாக இருந்தாலும் சரி, இந்த ராக்ஷஸன் நன்றியற்றவன். தன் தமையன் இப்படிப்பட்ட ஆபத்தில் இருக்கையில் அவனைக் கைவிட்டவன் எவனைக் கைவிடமாட்டான்? லங்கை எரிந்து, புத்திரர்கள் மடிந்து, தன் சத்துரு ஸமுத்திரத்தைத் தாண்டி, தன் நகரத்தை முற்றுகையிடத் தயாராயிருப்பதைக் காட்டிலும் வேறு கஷ்டம் உண்டோ?" என்றான்.

அதற்கு ராமன், "ஸுக்ரீவன் தர்மத்தினுடைய ரஹஸ்யத்தையும் என் அபார சக்தியையும் சரணமடைந்தவர்களைக் காப்பாற்றுவேனென்று என் பிரதிக்ஞையையும் நன்றாக அறியாமல் இப்படிச் சொல்லுகிறான்" என்று நினைத்து புன்சிரிப்புடன் ராஜ நீதிப்படி அவனுக்குப் பதில் சொன்னார். ஸகல வாநரர்களையும் ஒரு தடவை பார்த்து, புண்யவானான லக்ஷ்மணனை நோக்கி, "சாஸ்திரப்யாஸமில்லாமல், பெரியோர்களிடத்தில் சிச்ருஷை செய்யாமல், ஒருவனும் இப்படிப் பேசமுடியாது. ஆனால் இந்த விஷயத்தில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri Mahalingam Collection, Shenganallur, Chennai

ஸூக்ஷ்மமான விஷயத்தைக் கவனிக்கவேண்டியது. அது ஸ ராஜாக்களிடத்திலும் காணப்படும்; லோகானுபவத்தால் அறி படும். அதாவது ஓர் அரசனுடைய தாயாதிகளும் அடுத் தேசங்களிலுள்ள அரசர்களும் சத்ருக்களென்று சொல்லப் கிறார்கள். அவர்கள் கஷ்டம் நேர்ந்த ஸமயங்களை எதிர்பார்த் கொண்டு கெடுதி செய்கிறார்கள். ஆனால் புண்யவான்களான அரசர்கள் தங்களுடைய தாயாதிகள் எப்பொழுதும் ஹிதகாரி என்று எண்ணிக் கௌரவம் செய்கிறார்கள். அப்படிப்பட் அரசர்களும் உத்தம குணங்களுடைய இந்த விபீஷணனிடத் ஸந்தேகிப்பார்கள். பாபிகள் நிறைந்த இந்த லோகத்தில் ந வனிடத்திலும் ஸந்தேகமுண்டாகிறது. மஹாபாபியா ராவணன் மஹாபுண்யவானான இந்த விபீஷணனிடத் ஸந்தேகப்படுவது ஆச்சரியமல்ல; ஆகையால் அவனுட விரோதித்துக்கொண்டே இங்கே வந்திருக்கிறான். இப்படி இ ராவணனைவிட்டு வந்ததற்குக் காரணம் சொன்னேன். இ நான் கைவிடக்கூடாதென்பதற்குக் காரணம் சொல்லுகிறேன்.

"சத்ருவிடத்திருந்து வந்தவனைச் சேர்த்துக்கொள் கூடாதென்று சொன்னீர்கள். நீதி சாஸ்த்ரப்படி அ விசாரித்துப் பார்ப்போம். நான் ராவணனுக்குத் தாயாதியா அவனுடைய ராஜ்யத்தில் எனக்குக் கொஞ்சம்கூட அபே யில்லை. ராவணன் இவனைச் சத்ருவாக எண்ணுகிறானேயன் இவனிடத்தில் எனக்கு அப்படிப்பட்ட எண்ணமில்லை. ஆகை இவன் என்னைக் கைவிடமாட்டான். இவன் என்னால் ராவண நாசம் செய்வித்து அவனுடைய ராஜ்யத்தை அடைய வி கிறான். தன் காரியம் கெடுமென்ற பயத்தாலாவது என கெடுதி செய்யாமலிருப்பான். ராக்ஷஸர்களுக்கு இவ் ஆலோசனை ஏதென்றால் அவர்களிலும் விவேகிகளி மாட்டார்களா? ஆகையால் இவனைச் சேர்த்துக்கொள்ள ஞாதிகள் ஒருவருக்கொருவர் கல்மஷமில்லாமல் சந்தோஷமா பழகுவதில்லை; ஆகையால் அவர்களுக்குள் கலகம் நேரு ஸுலபம். இவன் பலவானான ராவணனிடத்திலிருந்து வி ஆபத்து நேரும் என்று அறிந்து, பயந்து, தன் காப்பாற்றிக்கொள்ள இங்கே வந்திருக்கிறான் என இவனுடைய குரலினாலும் வார்த்தைகளாலும் தெ படுகிறது. ஆ கை யா ல் இவனை ஒப்புக் கொள் கெடுதலில்லை. தனக்கு மூத்தவன் துஷ்டனாக இருந்தா அவனுக்குக் கீழ்ப்படிந்தே நடக்கவேண்டுமென்ற தர்ம எல்லோரும் அனுசரிக்கமாட்டார்கள். உடன் பிறந் களெல்லோரும் பரதனைப் போலாவார்களா? பிதாவி பிறக்கும் புத்திரர்களெல்லாம் என்னைப் போலாவார்க

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மித்திரர்களெல்லாம் உங்களைப்போலாவார்களா? கைகேயி தசரதரிடத்திலிருந்து பெற்ற வரங்களால் பரதனுக்கு ராஜ்யம் நியாயமாகக் கிடைக்கிறது; அதை வேண்டாமென்று மறுத்து, காட்டிற்குச் சென்ற என்னைக் கண்டுபிடித்து, பரமபக்தியுடன் நமஸ்கரித்து 'அண்ணு, ராஜ்யம் தங்களுடையது. தாங்கள் வந்து அதை ஒப்புக்கொண்டு ஆளவேண்டியது. நான் தங்களுக்கு ஸகல கைங்கரியங்களும் செய்கிறேன்' என்று பரதனைத்தவிர வேறொருவன் சொல்லமுடியுமா? (லக்ஷ்மணனுக்கு அவ்விதமாய் நடந்துகொள்ள அவகாசம் நேராததால் அவனைப்பற்றி பிரஸ்தாபிக்கவில்லை, என்னைப்போல பாக்கியசாலியான புத்திரன் வேறொருவரும் இல்லை. என்னைப் பிரிந்த துக்கத்தை ஸஹிக்காமல் என் பிதா உயிரை விட்டார். இப்படிப் பிரியமுள்ள பிதாவையுடைய புத்திரனும் உண்டோ? அப்படியிருந்தாலும் பரதனைப்போன்ற ஸஹோதரனும் உங்களைப்போன்ற மித்திரர்களும் கிடைப்பது அரிது. வர்ஷகாலத்தில் ஸுக்ரீவன் அலக்ஷ்யமாக இருக்கிறானென்று நான் கடுமையாய்க் கோபிக்க, அதைக் கண்டு லக்ஷ்மணன் குரூரமான வார்த்தைகளால் அவனைத் துளைக்க, எங்களிடத்தில் கொஞ்சம்கூட வருத்தப்படாமல் எல்லையற்ற பிரேமையையும் விசுவாசத்தையும் பாராட்டி, எங்களுக்கு சகல உதவியையும் செய்துவரும் உன்னைப்போன்ற மித்திரர்களும் உண்டோ?"

அதைக் கேட்டு ஸுக்ரீவன், நீதிசாஸ்திரப்படி விபீஷணனைத் தள்ளிவிடவேண்டும் என்பதை நிரூபிக்கமுடியாமல், இவனைச் சேர்த்துக்கொண்டால் இவனுடைய அந்தரங்கம் நமக்குத் தெரியாததால் ராமனுக்கு எந்தக் காலத்தில் என்ன கெடுதி செய்வானோ என்று, ரகுவீரனிடத்தில் வைத்த அளவற்ற பிரேமையால் மனம் கலங்கி, தானும் லக்ஷ்மணனும் செய்யும் சரணகதியையே சிரேஷ்டமாக எண்ணிச் சரணமடைவதற்கு முன்னமே விபீஷணனை விலக்கிவிட வேண்டியதென்று நினைத்து, "ஸ்வாமி! தாங்கள் இந்த விஷயத்தில் பொறுமைக்கு இடம் கொடுக்கக் கூடாது. இவன் ராவணனால் அனுப்பப்பட்டு இங்கு வந்தவனே; சந்தேகமில்லை. ஆகையால் இவனைச் சேர்த்துக்கொள்ளக்கூடாது. இப்பொழுதே நீக்கிவிடவேண்டும். கபட புத்தியுள்ள ராவணன் இவனை அனுப்பி நமது ரஹஸ்யங்களை அறிந்துகொண்டு சமயம் பார்த்து நமக்குக் கெடுதி செய்ய யோசித்திருக்கிறான். தாங்கள் இவனை நம்பினவுடன் தங்களுக்காவது எனக்காவது கெடுதி செய்யாமல் போகமாட்டான்; அல்லது லக்ஷ்மணனுக்கு என்ன கெடுதி செய்வானோ? ஆகையால் இவனையும் இவனுடன் வந்த நான்கு மந்திரிகளையும் இப்பொழுதே பிடித்துக் கொல்லவேண்டியது. இதில் தோஷமில்லை. இவன் மஹாகுரூரனான ராவணனுடைய தம்பி; இதைத்தவிர வேறு விசாரிக்கவேண்டியதென்ன?"

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

என்று சொல்லி, தான் இவ்வளவு சொல்லியும் ராமனுக்கு மன தில் படவில்லை என்று நினைத்து அவரிடத்திலுள்ள பிரேமையா கோபம் கொண்டான்.

அதைக் கேட்டு ராமன், "ஐயோ! இவன் நம்மிடத்தில் வைத் அதிகப் பிரேமையாலல்லவா இப்படிச் சொல்லுகிறான். நா சர்வ சக்தனென்றும், நமக்குக் கெடுதி செய்யக்கூடியவ ஒருவனுமில்லையென்றும், சரணாகதர்களை ரக்ஷிப்பது நம்முடை விரதமென்றும், சாஸ்திரத்தால் விதிக்கப்பட்டபடியால் அவசிய அநுஷ்டிக்கப்படவேண்டுமென்றும் இதனை இவனுக்கு எடுத் சொல்லவேண்டும்" என்றும் நினைத்து, "இந்த ராக்ஷஸன் மிக துஷ்டனாக இருக்கட்டும்; அல்லது ஸாதுவாக இருக்கட்டு இவனால் என்ன செய்யமுடியும்? எனக்கும் என்னை ஆசிரி தவர்களுக்கும் என்னைச் சேர்ந்தவர்களுக்கும் அணுவளவா கெடுதி செய்ய இவனால் முடியுமென்று எண்ணுகிறாயா? வா ராதிபதே! நீயும் உன் ஸைன்யங்களும் ஏதோ என்னை ஆபத் லிருந்து காப்பாற்றிக்கொண்டிருப்பதாக எண்ணுகிறீர்கள். உ களைக் கொஞ்சம்கூட சிரமப்படுத்தாமல் பூமியிலுள்ள ராக்ஷ களையும் இதர லோகங்களிலுள்ள தானவர்கள், யக்ஷர்கள், பி சர்கள் முதலிய பிராணிகளையும் நினைத்த மாத்திரத்திலே விரலின் நுனியால், நாசம் செய்வேனென்று அறி. அஸ்த்ரச ரங்கள் வேண்டாம்; கையிலுள்ள மற்ற விரல்களின் உதவி வேண்டாம்; விரலில் மற்ற கணுக்களும் வேண்டாம்; நுனி ஒன் போதும். லங்கையில் வசிக்கும் இந்த அல்ப ராக்ஷஸர்களைப் பற் சொல்ல வேண்டியதென்ன? இவர்களைக் கொல்லவேண்டுமெ எண்ணமுண்டாகவில்லையேயன்றி, நினைத்துவிட்டால் அடுத் நிமிஷத்தில் இவர்களைப் பார்க்கமுடியுமா? ஆகையால் இவனிடத் லிருந்து எனக்குக் கெடுதி நேருமென்ற ஸ்வப்னம்கூட வேண்டா அப்படி இவன் கெடுதி செய்யக்கூடியவனாயிருக்கட்டும்; அத என் உயிர் போகட்டும்; அப்பொழுதும் இவனை விடக்கூடா அவசியம் ரக்ஷிக்க வேண்டியதே. இந்த விஷயமாய் ஒரு பிரஸி மான கதையைச் சொல்கிறேன் கேள்:

"ஒரு காட்டில் ஒரு புறா இருந்தது. ஒரு நாள் ஒரு வேடன் அ வஸிக்குமிடத்திற்கு வந்து அதன் பாரியையை வலை போட் பிடித்துவிட்டான்; பிறகு அஸ்தமித்தது; இருள் சூழ்ந்தது; பெ காற்றும் மழையும் பிடித்துக்கொண்டது. அதனால் வேடன் அ பட்டு நடந்து, பசியால் வருந்தி, கண்டவிடமெல்லாம் திரிந் ஆண் புறாவிருந்த மரத்தடியில் வந்து சேர்ந்தான். அப்பொழு அந்தப் புறா வேடன் படும் அவஸ்தையைக் கண்டு, அவனு உதவி செய்ய நினைத்து, ஆனாலும் தன் ஜாதிக்கு ஸ்வபாவ ச

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri Harihuran Collection, Sholinganallur, Chennai

வானதால் தயங்கி நின்றது. அப்பொழுது வலையில் அகப்பட்டுக் கொண்டிருந்த பெண் புறா தன் கணவனைப் பார்த்து, 'நாதா! என்னைக் குறித்துத் தாங்கள் வருத்தப்படவேண்டாம். நான் இந்த வேடனுடைய வலையிலிருக்கிறேன். தாங்கள் கவனிக்க வேண்டியது ஒரு விஷயமே. இந்த வேடன் நாம் இருக்கும் இடத்தைத் தேடிவருகிறான்; நமது அதிதி; மழையாலும் குளிராலும், இருட்டாலும் பசியாலும் வருந்துகிறான். இவனுக்கு நம்மால் கூடிய வரையில் அதிதிபூஜை செய்யாவிட்டால் நாம் இதுவரையில் அநுஷ்டித்து வந்த தர்மம் வீணாகும்' என்றது. அந்த ஆண்புறா பிரஹ்ம க்ஷத்திரிய வைசிய ஜாதிகளில் பிறந்ததும் அன்று; ஆசிரம தர்மங்களை அனுஷ்டிக்கக்கூடிய மனுஷ்யனும் அல்ல. கேவலம் ஒரு பக்ஷி. புறாவிற்கு வேடன் ஸஹஜசத்ரு. அதன் பார்யையை அபகரித்துக் கட்டிக்கொண்டு வந்திருக்கிறான்; கொஞ்ச நேரத்தில் அதைக் கொன்று தின்பான். தான் அவனுக்கு ஒத்தாசை செய்யப் போனால் தன்னையும் கொன்று தின்பான். மேலும் அவன் புறாவைச் சரணமடையவில்லை. அதன் வீட்டைத் தேடி வரவுமில்லை. மரத்தடியில் அகஸ்மாத்தாய் வந்து, 'இந்த மரத்தடியில் வஸிக்கும் தேவதையே! உன்னைச் சரணமடைந்தேன்' என்று தலைமேல் கைகூப்பிச் சொன்னான். அப்படியிருந்தும் அந்தப் புறா வேடனைத் தேவதையாக எண்ணி ஆராதித்தது; காட்டில் அங்கங்கே போய்ச் சருகுகளையும் சுள்ளிகளையும் கொண்டுவந்து நெருப்பு மூட்டி, வேடனைக் குளிர் காயச் செய்து, தனக்கு அப்பொழுது கிடைக்கக்கூடிய பழம் முதலிய ஆகாரங்களைக் கொண்டுவந்து கொடுத்தது. அதனாலும் அவனுடைய பசி தீராததைக் கண்டு, அக்னியில் செய்யும் ஆகுதிகளால் தேவதைகளைத் திருப்தி செய்வது வழக்கமாகையால், அவனுக்கு வேறு மாம்ஸத்தை ஸம்பாதித்துக் கொடுக்க முடியாமல் தன் தேகமிருக்கும் பொழுது இதரப் பிராணிகளை ஹிம்ஸிப்பது ஸரியல்லவென்று, தான் மூட்டிய தீயில் தன் தேகத்தை அர்ப்பணம் செய்து, வேடனைப் பசி தீர்த்துக்கொள்ளும்படி பிரார்த்தித்து, உயிரை விட்டு உத்தம லோகங்களை அடைந்தது.

"என்னைப்போல் ஸகல தர்மங்களையும் அநுஷ்டிக்க யோக்கியதையுடைய ஜாதியில் அந்தப் புறா பிறக்கவில்லை. சரணமடைந்தவர்களைக் காப்பாற்றுவதையே விரதமாக உடைய இக்ஷ்வாகு குலத்தில் என்னைப்போல் பிறக்கவுமில்லை. வேடனோ ஜாதியாலும் ஸ்வபாவத்தாலும் அல்பன்; வேறு கதியற்றவன்; இரக்கமில்லாதவன்; நல்ல வார்த்தை சொல்லி அறியாதவன்; அவனையும் அந்தப் புறா பிராணனைக் கொடுத்து உபசரித்ததல்லவா? முன்பு சிபிச் சக்கரவர்த்தியைப் பரீக்ஷிக்க வந்த பக்ஷிகளைப்போல் அது மாறுரூபமெடுத்து வந்த தேவதையல்ல; ஸாதாரணமான புறாவே.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கஜேந்திரனைப்போல் பூர்வபுண்ய விசேஷத்தால் இந்த உத்த தர்மத்தை அநுஷ்டிக்கப்பெற்றது. இது இருக்கட்டும்.

"ஒரு நாள் ஒரு வேடன் புலியால் துரத்தப்பட்டு ஒரு மரத்த யில் வந்து, அதிலிருந்த குரங்கைச் சரணமடைய, அதனால் காப் பாற்றப்பட்டு அந்த மரத்தில் ஏறிக்கொண்டான். பிறகு அந் மரத்தடியில் வந்த புலி, குரங்கு தூங்கிக்கொண்டிருப்பதை கண்டு, வேடனைப் பார்த்து, 'அதோ தூங்கிக்கொண்டிருக்கு குரங்கைக் கீழே தள்ளிவிடு. அதைத் தின்றுவிட்டு உனக் யாதொரு கெடுதலும் செய்யாமல் போகிறேன்' என்றது. துரோ புத்தியுள்ள வேடன் அதன் வார்த்தையை நம்பி, தன் உயிரை காப்பாற்றிக்கொள்ள நினைத்துக் குரங்கைக் கீழே தள்ளிவிட்டா விழுந்த குரங்கைப் பிடித்துக்கொண்டு, புலி 'உனக்குத் துரோ செய்த அந்த வேடனைக் கொல்' என்று தூண்டிவிட்டது. தர்ம களை அறிந்த குரங்கு தன் பிராணனைத் தப்பித்துக் கொள்வத காக அதற்கு ஸம்மதிப்பதுபோல் பாவித்து மரத்தில் ஏற கொண்ட பிறகு, தனக்கு அபராதம் செய்த வேடனைத் தைரிய படுத்தி, பொழுது விடியும் வரையில் வைத்துக் காப்பாற்றி அனு பிற்று. ஒரு சாதாரணக் குரங்கு செய்த சரணாகத ரக்ஷ தர்மத்தை, வானராதிபதியாயும் ஸூர்ய புத்திரனாயுமிருக்கும் அநுஷ்டிக்காமலிருப்பது என்ன ஆச்சரியம்!

"நான் மனுஷ்யன்; ரகுவம்சத்தில் பிறந்தவன்; அறுபதாயிர வருஷங்களாய்ப் பிரஜைகளைத் தர்மமாய்ப் பரிபாலனம் செய் நரைத்துப்போன தசரத சக்கரவர்த்தியின் புத்திரன்; வஸிஷ்ட விசுவாமித்திரர் முதலிய மஹரிஷிகளால் உபதேசிக்கப்பட்ட தர்ம ரஹஸ்யங்களை அறிந்தவன்; மஹா யோகியான ஜனகருட ஸம்பந்தம் பெற்றவன்; தர்மமே அவதரித்து வந்த ராமனென் பெயருடையவன்; ஜனங்கள் அனுஷ்டிக்க வேண்டிய தர்மங்க ஏற்படுத்தினவன்; அவைகளை ஸரிவர நடத்தி வைப்பவன் அவைகளை நடத்திக் காட்டுகிறவன். நானே சரணமடைந்தவ ஹிம்ஸித்தால் பிறகு லோகம் எதைத்தான் செய்யாது? கொல்ல தகாதவர்களைக் கொல்லும். இது ராவணன் செய்யவேண்டி காரியமேயன்றி என்னைப் போன்றவனுக்கு இது அழகல்ல. சரண மடைந்தவனைக் கைவிடுகிறவன் எந்தப் பிறப்பைச் சேர்ந்தவனே தெரியவில்லை.

"ஆனால், 'சாஸ்திராப்யாஸம் செய்வதற்கு அதிகாரமில்லா ஒரு புரு அநுஷ்டித்த ஒரு காரணத்தால் மாத்திரம் நாமும் அப்ப செய்வது நியாயமல்ல' என்று ஆக்ஷேபித்தால்,

"கண்வமஹர்ஷியின் புத்ரனான கண்டு என்பவர் பின்வரு தர்மவாக்கியங்களைச் சொல்லியிருக்கிறார், அவர் மஹாகுலத்தி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பிறந்தவர். விஷயங்களின் யதார்த்தத்தை அறியக்கூடியவர்: அப்படி அறிந்தவைகளை உள்ளபடி சொல்லுகிறவர். ஆகையால் அவருடைய வார்த்தைகள் ஆப்தவாக்கியம்; வேத வசனங்களும் இதற்கு ஆதாரமாக இருக்கின்றன.

"இது அவர் கல்பித்த வாக்கியமல்ல. ரிக்வேதத்திலுள்ள மந்திரங்களையே ஸ்வரபேதத்தால் ஸாமவேதமாய்ச் சொல்வது போல், அனுதியாய் வழங்கிவரும் தர்மத்தையே அவரும் வெளியிட்டிருக்கிறார். வேதத்தில் சொல்லியிருக்கும் தர்மங்களை அநுஷ்டித்தால் எந்தப் பரமப்பிரயோஜனமுண்டாகுமோ அதைக் கொடுக்கக்கூடியது. அநேக அர்த்தங்களடங்கியதாய் ஸுலபமாய் ஞாபகத்தில் வைக்கக்கூடியதாய்ச் சுருக்கமாயிருக்கிறது. இதை நீ இதுவரையிலும் கேட்டிராததால் இப்படி மயங்குகிறாய்.

"நம்மைக் காப்பாற்றுகிறவனிடத்தில் அநுகூல புத்தியும் வார்த்தையும் நடத்தையும் இல்லாவிட்டாலும், பூர்ணப்ரபத்திக்குரிய லக்ஷணங்களில்லாவிட்டாலும் வேறு கதியில்லாததால் தன்னுடைய பாரத்தை ரக்ஷகனிடத்தில் ஒப்புவிக்கிறதென்ற கருத்தைக் குறிக்கும் அடையாளமாயும் சரணாகதியின் ஓர் அங்கமாயும் இருக்கும் கைகூப்புதல் இருந்தால் போதும்; ஸகல துக்கமும் தீரும்; அநுக்ரஹத்திற்குக் காரணமாகும். பகவானுடைய கிருபையைப் பெறுவதற்குச் சீக்கிரமான உபாயம், கைகூப்புவதென்ற யோக முத்திரையே. ஸ்வதந்திரமாயிருப்பவனையும் ஸுலபமாய் வசப்படுத்தும்; பக்தர்களுக்குப் பரதந்திரனாக இருக்கும் பகவானை வசப்படுத்துவதில் ஸந்தேகமென்ன? கைகூப்பாவிட்டாலும், தான் தீனனென்று பிறருக்குத் தெரிவிப்பதே போதும்; அப்படி இல்லாவிட்டாலும், ப்ரார்த்திப்பதுபோல் தோன்றும் வார்த்தைகளைச் சொன்னாலும் போதும். இம்மூன்றும் இல்லாவிட்டாலும், ரக்ஷகன் இருக்குமிடத்தை நோக்கி வருவதே போதும். அவன் பரமசத்ருவாக இருந்தாலும் அவனைக் கொல்லக் கூடாது.

"சரணமடைந்தவர்களிடத்தில் நமது பௌருஷத்தைக் காட்டுவதில் பிரயோஜனமென்ன? சத்ருக்களிடத்திலல்லவா காட்ட வேண்டும்?

"மேலும் நம்மைச் சரணமடைந்தவன் சரணாகதி செய்யும் ஸமயத்தில் தான் செய்த அபராதங்களை நினைத்துப் பயங்கொண்டவனாக இருந்தாலும் சரி; அல்லது சீக்கிரம் தாமஸம் என்பதைக் கவனியாமல் கார்யம் நிறைவேறுவதிலேயே நோக்கமுள்ளவனாக இருந்தாலும் சரி; அல்லது சரணாகதி செய்யும் ஸமயத்தில் விநய

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Chengalpattu, Chennai

மில்லாமலிருந்தாலும், தான் செய்த அபராதங்களை நினைத்து பயமில்லாமலிருந்தாலும் சரி; ஸம்ஸாரத்தில் வெறுப்படைந்து அந்த க்ஷணத்திலேயே தேகத்திலிருந்து விடுபட ஆசைப்பட்டவனா யிருந்தாலும் சரி; பிராரப்த கர்மத்தின் முடிவில் முக்தியை விரும் பினாலும் சரி; 'நான் ஒன்றும் முடியாதவன்; வேறு கதியற்றவன்' என்று வந்து சரணமடைந்தவனானாலும் சரி; கபடமாகவாவது பரிஹாஸமாகவாவது 'சரணமடைந்தேன்' என்ற வார்த்தைகளை சொன்னாலும் சரி; மனத்தில் விரோதத்துடன் 'சரணமடைந்தேன்' என்ற வார்த்தையைச் சொன்னாலும் சரி; தர்மசாஸ்திரத்தில் நம்பிக்கை வைத்து நிச்சயமான புத்தியையுடைய புருஷன் ஸ்திர மில்லாத பிராணனைக்கொடுத்தாவது ஸ்திரமான சரணாகத ரக்ஷண மென்ற தர்மத்தை ஸம்பாதிக்க வேண்டியது. செய்யத் தவறினால் ஸாதாரண மனுஷ்யனைக் காட்டிலும் வித்வானுக்கு விசேஷ பாபம் நேரும். தன்னால் கூடியமட்டும் தன்னுடைய தேகம் திரவியம் பிராணன் முதலியவைகளைக் கொடுத்தாவது தீனனைக் காப்பாற்ற வேண்டும்; தன்னைச் சரணமடைந்தவனாவது அவனைச் சேர்ந்தவர் களாவது தனக்குக் கெடுதி செய்வார்களோ என்ற பயத்திலாவது சாஸ்திரங்களை அறியாமையாலாவது சரணமடைந்தவனுடைய சத்ருவிடத்திலிருந்து ஒரு பிரயோஜனத்தை அபேக்ஷித்தாவது அப்படிச் செய்யாவிட்டால் இஹலோகத்தில் எல்லோரும் நிந்திப் பார்கள்; பரகதி கிடைக்காது. இது மாத்திரமல்ல. ஒருவன் தன்னைச் சரணமடைந்தவனை ரக்ஷிக்கச் சக்தியிருந்தும் அப்படிச் செய்யாமல் சத்துருக்களால் நாசமடைவதைப் பார்த்துக் கொண் டிருந்தால், அவன் அதுவரையில் செய்த ஸகல புண்யகர்மங் களும் நசிக்கின்றன; அந்த கர்ம பலன்கள் சரணாகதி செய்தவன் அடைகின்றன; சரணமடைந்தவர்களை ரக்ஷிக்காவிட்டால் மஹா தோஷமுண்டாகும்; நரகத்திற்கு ஹேதுவாகும்; இஹத்தில் அப கீர்த்தியைத் தரும்; பலம் வீரியம் முதலிய குணங்களை நாசம் செய்யும். கண்டு மஹரிஷியின் அபிப்பிராயப்படி நான் நடப்பேன். தர்மத்தை ஸ்தாபிக்க விரதம் பூண்ட நான் இப்படி அவசியம் செய்யவேண்டியது. இதை ஸகலப் பிராணிகளும் கொண்டாடும்; இது பாபத்தைப் போக்கும்; ஸ்வர்க்க பலனை கொடுக்கும்.

"உத்தம கதியை அடைவதற்குச் சாஸ்திரங்களில் சொல்லி யிருக்கும் இதர உபாயங்களைப் பல தடவை அநுஷ்டித்தால் மாத்திரம் பிரயோஜனப்படும்; சரணாகதியோ அப்படியல்ல. என்னை ஒருவன் ஒரே தடவை வந்து சரணமடைந்தாலும் போதும். அதை யும் வார்த்தைகளால் சொல்வதும் தேகத்தால் செய்வதும் அவசிய மில்லை; மனஸால் சரணமடைவதே போதும். 'நான் உன்னை சேர்ந்தவன்; உனக்குக் கைங்கரியம் செய்வதே நான் அபேக்ஷிக்கும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பலன்' என்று பிரார்த்தித்தால், அவனுக்கு பயம் நேரக்கூடிய ஸகல பூதங்களிடத்திலிருந்தும் பயமில்லாமல் செய்வேன். சரண மடைந்தவர்களைச் சேர்ந்தவர்களுக்கும் அபயதானம் செய்கிறேன்; இது என் விரதம். எக்காலத்திலும் எந்தச் சமயத்திலும் இதைக் கைவிட மாட்டேன்'' என்றார்.

அப்படிச் சொன்னவுடன் ஸுக்ரீவனுடைய சந்தேகம் தீர்ந்து முகம் தெளிந்தது. விபீஷணனிடத்தில் நம்பிக்கையும் விச்வாஸமும் உண்டாயிற்று.

பிறகு ராமன், "ஸுக்ரீவ! விபீஷணன் உங்களைப் புருஷாகார மாய் வைத்து, என்னிடத்தில் தங்களைப்பற்றி விக்ஞாபனம் செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தான். இப்பொழுது நீயே போய் அவனை அழைத்துவந்தால் இதுவரையிலும் அபயதானம் செய்யா மல் அவனைக் காக்கவைத்த துக்கம் நீங்கும். என்னிடத்தில் பிரிய முள்ள வானரர்களுக்குள் நீயே எனக்குப் பிரியமாவாய். இவன் தன் பந்துக்களைவிட்டு, தன் தீனஸ்திதியை வெளியிட்டு என்னை வந்தடைந்திருக்கிறான். மித்திரனென்று பாவனை செய்தாலே போதும் என்ற அபிப்பிராயத்தையுடைய நான், அவன், 'சரண மடைந்தேன்' என்ற க்ஷணத்திலேயே அபயதானம் செய்து விட்டேன். 'நான் எப்படிப் போய் அழைத்து வருவேன்' என்று தயங்குகிறாயோ? தர்மவானான விபீஷணனை ரக்ஷிப்பதில் பெருமை இல்லை. குரூரஸ்வபாவமுள்ள ராவணனை அபயதானம் செய்து ரக்ஷித்தாலல்லவா பெருமை? விபீஷணனை ரக்ஷித்தால் அவனைச் சேர்ந்த நான்கு ராக்ஷஸர்களை மாத்திரம் ரக்ஷித்ததாகும்; ராவணனை ரக்ஷித்தால் ராக்ஷஸ வம்சம் முழுவதும் ரக்ஷிக்கப்படும். அது பெரிய லாபம். எனக்கு நேரும் கீர்த்தியும் க்ஷேமமும் உங்க ளுக்குமல்லவா? விபீஷணனிடத்தில் இவ்வளவு சந்தேகப்படு கிறாயே! ராவணனே ஸீதையைத் திருப்பிக் கொடுக்காமல் நேரே வந்து என்னை ரக்ஷிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தாலும் நான் ஸித்தமாக இருக்கிறேன். இவன் விபீஷணனாக இல்லாமல் ராவணனே இந்த ரூபத்தைத் தரித்துவந்தாலும் அபயம் கொடுப் பேன். 'இவன் விபீஷணனல்ல, ராவணன்' என்று என்னிடத்தில் சொல்ல வரக்கூடாது; உடனே அழைத்து வா'' என்றார்.

அதைக் கேட்டு சுக்ரீவன், அவரைச் சரணமடைந்த விபீஷண னிடத்திலும், தன்னிடத்திலும் அவருக்குள்ள அத்யந்த ஸ்நேஹ பாவத்தை ஆலோசித்து ஆச்சரியம் கொண்டு, ஸகல தோஷங் களையும் கவனிக்காமல் தனக்கு விரோதமாய்ப் பேசின பழைய மித்திரர்களைப் பலவிதமாகச் சமாதானம் செய்து, 'ராவணன் வந்தாலும் சரி' என்று கூறிய இவருடைய வாத்ஸல்யத்திற்கு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

எல்லை உண்டோ என்று பிரமித்து, "ராம! தங்களுடைய ஸஹஜ
மான அநந்த கல்யாண குணங்களை யோசித்தால், தாங்கள் இ
படிச் செய்வது ஆச்சரியமா? தர்மரஹஸ்யத்தை அறிந்த தாங்
சகல தாஸகோடிகளையும் ரக்ஷிக்கிற பிரபு. எவ்வித ஆசையுமில்
மல் பிறருக்கு சகல சுகத்தையும் கொடுப்பதிலேயே நோக்கமுள்
வர்கள். இப்படிச் சொல்வது தங்களுக்கே தகும்; சொன்
வார்த்தையை நிறைவேற்றும்படியான அபார சக்தியுள்ளவர்க
தர்மத்தை ஸ்தாபிப்பதற்காகவே அவதாரம் செய்தவர்கள். சர
மடைந்தவர்களை ரக்ஷிப்பதற்கு மேற்சொன்ன குணங்க
ஒன்றே போதும்; எல்லாம் பொருந்தியிருக்கும்பொழுது ஆச்ச
மென்ன? 'என்னைப் புகழ்வதால் பிரயோஜனமில்லை. உன் ம
திற்குத் திருப்தியாக இருந்தாலல்லவா விபீஷணனை அங்கீக
கலாம்' என்ருல், இவனைக் கடுமையாகச் சிக்ஷிக்கவேண்டுமென்
நான் சொன்னாலும் என் அந்தக்கரணத்தில் இவன் சுத்தனென்
நன்ருகத் தெரியும். இதை தவிர வேறு பிராமணங்க
உண்டு. தாங்களும் மாருதியும் சொல்லிவந்த காரணங்களா
மனத்திலுள்ள அபிப்பிராயத்தை வெளிப்படுத்தக்கூடிய ந
உடை பேச்சு முகக்குறி முதலியவைகளாலும் இவனுடைய ஸா
தன்மையை அறிந்தேன். இதுவரையில் அஞ்ஞானத்த
இவனை நம்பாமல் பெரும் பாபத்தைக் கட்டிக்கொண்டே
நிஜத்தை அறிந்தபிறகு இவனை ரக்ஷிப்பதில் தாங்கள் ஒரு க்ஷண
கூடத் தாமஸிக்கக்கூடாது. 'ராமனிடத்தில் என்னைப்பற்
தெரிவியுங்கள்' என்று குரூரஸ்வபாவமுள்ள எங்களைப் புருஷ
மாய் வைத்துப் பிரார்த்தித்தான். அந்த யோக்கியதை எங்களு
ஸித்திக்கவேண்டுமென்றே தாங்கள் இவ்வளவு சிரமப்பட்டீர்க
அதிசீக்கிரத்தில் இவனும் எங்களைப்போன்றவனுகத் தங்களுடை
பக்தகோடியில் சேரும்படி அநுக்ரஹிக்கவேண்டும்" என்
விபீஷணனுக்குப் பரம புருஷார்த்தம் கிடைக்கவேண்டுமென்
பிரார்த்தித்து, அந்தப் பரமபக்தனுடைய தோழமை என்
புருஷார்த்தம் தங்களுக்கு கிடைக்கவேண்டுமென்று, "பிரபே
உத்தமகதியை அடைவதற்கு ஸாதனங்களையும் நன்ருக அறி
இந்தப் பரம பாகவதன், எங்களுக்குத் தோழனுகும்படி அநு
கிரஹிக்க வேண்டும்" என்று சுக்ரீவன் பிரார்த்தித்தான்.

பிறகு அந்த வாநர ராஜன் விபீஷணனிடத்தில் சென்
"மஹாபாக்கியவானே! இதுவரையில் தாமதப்பட்டதை மன்னி
வேண்டும். ரகுவீரன் உனக்கு அபயம் கொடுத்தார். உன்
அழைத்துவரச் சொன்னார்" என்ருன். ராமன் அதைக் கேட்
வாநர வீரர்களுடைய ஆக்ஷேபங்களாகிற ஆச்ரித விரோதி
விலக்கி, இவனை அங்கீகரிக்கவேண்டுமென்று பிரதிக்ஞை செய்
சுக்ரீவன் முதலியவர்களுடைய வார்த்தைகளால் நேர்ந்த தாம

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஷதைப் பொறுக்காமல் ஒருவேளை சுக்ரீவனுடைய புத்தி மறுபடியும் விபரீதமாகுமென்று, அதிசீக்கிரமாய்த் தேவேந்திரன் கருட பகவானைச் சேர்வதுபோல், தானே விபீஷணனை எதிர்சென்று அங்கீகரித்தார்.

ததஸ்து ஸு॒க்³ரீவ வசோ நிஶம்ய தத்
ஹரீஶ்வரேணாபி⁴ஹிதம் நரேஶ்வர:।
விபீஷணேநாஶு ஜக³ாம ஸங்க³மம்
பதத்ரி ராஜேந யதா² புரந்த³ர:॥ (39)

ஸர்க்கம் 19

விபீஷண கைங்கர்யம்

ராக⁴வேணாப⁴யே த³த்தே ஸந்நதோ ராவணாநுஜ:।
விபீ⁴ஷணோ மஹாப்ராஜ்ஞோ பூ⁴மிம் ஸமவலோகயத்॥ (1)

விபீஷணன் அபேக்ஷித்தபடி ஸகலப் பிராணிகளிடத்திலிருந்தும் தமக்குப் பயமில்லை என்று ராமனுடைய அபயதானத்திற்குப் பாத்திரமானான். அவருடைய கல்யாண குணங்களைக் கேட்டே அவருக்குத் தாஸனான அந்த ராக்ஷஸன் தான்கேட்டதைக் காட்டிலும் கோடிமடங்கு அதிகமான ராமனுடைய கல்யாண குணங்களைப் பிரத்தியக்ஷமாய்ப் பார்த்து பக்தியால் வணங்கினான். அபாயமற்ற உபாயத்தை ஆரம்பித்ததால் பரம புருஷார்த்தத்தை அடைந்தான். வேதசாஸ்திரங்களை விசேஷமாய் அப்யஸித்து ஞானம் முதிர்ந்ததற்கு இப்பொழுது பலன் கிடைத்தது. ராமனுடைய அந்தரங்க மந்திரிகள் கொஞ்சமும் இடைவெளியில்லாமல் அவரைச் சூழ்ந்து நின்றார்கள். ராமனுக்கெதிரே நின்ற முக்கிய மந்திரிகள் தங்களில் ஒருவனான விபீஷணனுக்கு ராமனுக்கருகில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இடம் கொடுத்தார்கள். அதை நன்றாய்க் கவனித்த விபீஷண் தூரத்திலிருந்தே ரகுவீரனை நமஸ்கரித்து ஸாஷ்டாங்கமா வந்தனம் செய்வதற்கு ஆகாச வீதியில் இடமில்லாமல் பூமியி குதித்தான். தான் அபேக்ஷித்த அபயதானம் கிடைத்த பிறகு ராமனைப் பிரார்த்திக்கவேண்டியது என்னவென்றால், ராமனுடை ஸ்வரூபம், ரூபம், குணம் முதலியவைகளை அநுபவித்தாலுண்டா ஆநந்தம் மேலிட்டு, பிரக்ஞையற்ற சரீரமே வணங்கிற்று. வே பிரயோஜனத்தை உத்தேசித்துச் செய்ததன்று. ராமனைச் சர மடைந்தவன் விபீஷணனே; ஆனால் அவனுடைய பக்தி விசே தால் அவனைச் சேர்ந்தவர்களும், ராமனுக்குக் கைங்கரியம் செ லாபத்தைப் பெற்றார்கள். (விஷ்ணு பக்தனை ஆசிரயித்த ப பக்ஷி, மனுஷ்யர்களும் அவனுடன் விஷ்ணுவின் பரமபதத் அடைகிறார்கள்:—பெரியோர்) இதுவரையில் வாக்கால் ப்ரப செய்து இனி தேகத்தால் ப்ரபத்தி செய்ய ஆரம்பித்து, ஸம்ச விபர்யயம் முதலிய தோஷங்கள் நீங்கி, தனக்கு அநுகூலமா விஷயத்தை நிச்சயமாக அறிந்த விபீஷணன், பூர்வ ஸ்வரூ மாறி எந்த அவஸ்தையிலும் சரணாகதி தர்மநிஷ்டை கைவிடாதவனாய் "இவனைக் கொல்லவேண்டும்; நம்பக்கூடா என்று வாநரர்கள் சொன்னபொழுதும், "இவனைக் கைவிட டேன்; இவனை அழைத்து வா" என்று ரகுநாதன் சொன்னபொ தும், "எங்களைப்போல் இவனும் ஆகட்டும்" என்று சுக்ரீ சொன்னபொழுதும் கொஞ்சமும் கவலையில்லாமல் ராமனிடத் எல்லையற்ற விசுவாஸம் வைத்து, அவரையே ரக்ஷகனாகக் சே அவருக்குத் தன்னிடத்திலுள்ள பக்ஷபாதத்தைக் காட்டும் தி மங்கள விக்ரஹத்தையுடைய ஸ்ரீராமப் பிரஹ்மத்தின் ஸ்ரீபா களே தனக்குக் கடையேற ஸாதனமென்று, கைக்குழந்தை தா நோக்கித் தாவுவதுபோல் ராமனுடைய சரணகமலங்களில் சிர வைத்து நமஸ்கரித்தான். அவனுடன் வந்த நான்கு ராக்ஷஸர்க அப்படியே அவனுடைய அங்கங்களைப்போல் பரதந்திரர்கள நமஸ்கரித்தார்கள்.

இப்படித் தேகத்தால் சரணாகதி செய்து பிறகு வார்த்தைய சரணமடைந்தான். சுக்ரீவன் முதலியவர்கள் தன்னிடத்தில் ஸ மனதாய் அதிகப் பிரேமை வைத்திருந்தார்கள். முன்பு வா வீரர்களைப் புருஷாகாரமாய் வைத்துப் பிரார்த்தித்த விஷ தையே இப்பொழுது ரக்ஷகனிடத்தில் நேரில் பிரார்த்தித்தா அவனுடைய வார்த்தைகளில் சரணாகதியின் சகல அங்கங்க அடங்கியிருந்தன. தன்னைக் காப்பாற்றச் சக்தியும் அ கிருபையுமுள்ள ரகுவீரனைக் குறித்துச் சொல்லப்பட்டதால் வித்த்திலும் சுக்ரீவன் முதலியவர்களுக்கு மிகுந்த வெறுப் உண்டுபண்ணின; இப்பொழுதோ எல்லாரையும் ஆனந்தத் மெய்மறக்கும்படிச் செய்தன.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Hariharan Collection, Sholinganallur, Chennai

"நான் ராவணனுடைய தம்பி; அவனுல் அவமதிக்கப்பட்டேன். (தன் தீனத்தன்மையை விக்ஞாபனம் செய்கிருன்.) ராவண்ணனும் என் வாத்ஸல்யத்திற்குப் பாத்திரனென்றதால், தாங்கள் ஸகல பூதங்களுக்கும் ரக்ஷகன். ஞானம் சக்தி முதலிய அநந்த கல்யாண குண பரிபூரணன்; ஆகையால் தங்களையே சரணமடைந்தேன். என் வாஸஸ்தானமான லங்கையையும் மித்திரர்களையும் அவர்களால் கிடைத்த தனங்களையும் விட்டு, எனக்கு ராஜ்யம் முதலிய ஸகல விரும்பக்கூடிய வஸ்துக்களும் என் பிராணனும் இஹபரலோகங்களில் அநுபவிக்கும் சுகங்களும் எல்லாம் தங்களுடைய கைங்கரியமே. அதைத் தவிர நான் வேறென்றையும் அபேக்ஷிக்கவில்லை" என்று தெரிவித்தான்.

இப்படி ஸகலப் பிரயோஜனங்களையும் விட்டு ராமனிடத்தில் ஸகல பாரத்தையும் வைத்து, அவருடைய கைங்கரியத்தையே பரமப்பிரயோஜனமாய் அபேக்ஷித்த விபீஷணனை ராமன், "மித்ரா! சரணமடைந்தேனென்று சொன்னவுடனே உன்னை அங்கீகரிக்க வேண்டியது; இதுவரையில் தாமதித்ததை மன்னிக்கவேண்டும்" என்று அவனைச் சமாதானம் செய்து, அவனுடைய மனத்தைக் குளிரச் செய்து, அவனைக் கண்கொட்டாமல் பார்த்துப் பார்த்துப் பரமானந்தமடைந்தார். பிறகு விபீஷணன், "ஸ்வாமி! நான் தங்களுக்கு என் தேகத்தால் கைங்கரியம் செய்யும்படி ஆக்ஞாபிக்க வேண்டும்" என்று பிரார்த்திக்க, ராமன், "பிறகு அதைப்பற்றி யோசிப்போம். இப்பொழுது வார்த்தையால் கைங்கரியம் செய். ராக்ஷஸர்களுடைய பலாபலத்தை எனக்கு வாஸ்தவமாய்த் தெரிவி" என்ருர். ('ராக்ஷஸர்களுடைய' என்றதாலும் 'உன்னைச் சேர்ந்தவர்களுடைய' என்று சொல்லாததாலும், "இவன் ராக்ஷஸ ஜாதியல்ல. இக்ஷ்வாகு வம்சத்தில் என்னைப்போல் பிறந்தவன்." என்று எண்ணினதாகத் தெரிகிறது. பகவானை ஆச்ரயித்தால் அவருக்குச் சமமான பதவியை அவர் உடனே கொடுப்பார்.) அதற்கு விபீஷணன், "ஸ்வாமி! ராஜசிரேஷ்டரே! கந்தர்வ உரக ராக்ஷஸர்கள் முதலிய சகல பூதங்களாலும் தனக்கு மரணமில்லை என்று ராவணன், பிரஹ்மாவால் வரம் கொடுக்கப்பட்டவன். எனக்கு மூத்தவனும் ராவணனுக்குத் தம்பியுமான கும்பகர்ணன் மஹா தேஜஸ்வி; மஹா வீரியவான்; யுத்தத்தில் இந்திரனுக்கு ஸமானன். ராவணனுடைய சேனாதிபதியான பிரஹஸ்தன் யுத்தத்தில் பெயர் பெற்றவன்; கைலாஸத்தில் குபேரனுடன் நடந்த யுத்தத்தில் மாணிபத்ரனென்ற அவனுடைய ஸேனாதிபதியைத் தோற்கடித்தவன். ராவண புத்திரனான இந்திரஜித் இடைவிடாமல் பாணங்களை வர்ஷிப்பான்; அவனுடைய கவசத்தை எவரும் பிளக்க முடியாது. ஹோமங்களால் அக்னிபகவானைத் திருப்தி

RLOMR : BRLX
CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

செய்து, யுத்தகளத்தில் வில்லைக் கையிலெடுத்து நின்று, ஸேனை அணிவகுத்தவுடன் ஒருவர் கண்ணிலும் படாமல் மறைந்திருந்து சத்ருக்களைக் கொல்வான். மஹோதரன், மஹா பார்சுவன், அகம்பனன் முதலிய ஸேனாதிபதிகள் யுத்தத்தில் லோக பால களுக்கு ஸமானர்கள். நினைத்த ரூபமெடுக்கக் கூடியவர்களாய் மாம்ஸம் ரத்தம் முதலியவைகளையே ஆஹாரமாக உடை ராக்ஷஸர்கள் லங்கையில் பதினாயிரம் கோடி இருக்கிறார்கள். அவர் களுடன் சென்று ராவணன் லோக பாலர்களை எதிர்த்து யுத்தத்தில் ஜயித்தான். அவர்களுக்கு ஸஹாயமாக இருந்த தேவகணங்களை யும் இருந்த இடம் தெரியாமல் துரத்தியடித்தான்'' என்றான்.

கலங்காத பராக்கிரமமுள்ள ராமன், விபீஷணன் சொன்னதைக் கேட்டு, செய்யவேண்டிய காரியங்களை நன்றாய் ஆலோசித்து "ராக்ஷஸர்களுடைய வீரியத்தையும் பராக்கிரமத்தையும் கிருத்யங் களையும் பற்றி நீ சொன்னதை நன்றாய்க் கவனித்தேன். ராவணனை யும் அவனுடைய மந்திரிகளையும் பந்துக்களையும் ஸைன்யங்களை யும் யுத்தத்தில் நாசம் செய்து உன்னை லங்காதிபதியாய் அபிஷேகம் செய்கிறேன்; நான் சொல்வது ஸத்தியமென்று நம்பு; ராவணன் ரஸாதலம் பாதாளம் முதலிய கீழ் லோகங்களில் ஒளிந்து கொள்ளட்டும்; தனக்கு வரம் கொடுத்த பிரஹ்மாவைச் சரண மடையட்டும்; எங்கிருந்தாலும் அவனை உயிரோடு விடமாட்டேன். ராவணனையும் அவனுடைய புத்திர, மித்திர, பந்து, ஸைன்யங் களையும் யுத்தத்தில் கொல்லாமல் அயோத்யையில் பிரவேசிக்க மாட்டேன். இப்படி என் ஸஹோதரர்களான லக்ஷ்மண ப சத்துருக்னர்களின் பேரில் ஆணையிட்டுச் சொல்லுகிறேன்'' என்றார்.

தான் வெறுப்படைந்து பிரயோஜனமற்றதென்று விட்டு வந்த ராஜ்யத்தைத் தனக்குக் கொடுக்கிறேனென்று ராமன் பிரதிக்ஞை செய்ததைக் கேட்டு, தான் அபேக்ஷித்த பரமப் பிரயோஜனமா ராம கைங்கரியத்தையே வேண்டி, விபீஷணன் அவரை நமஸ் கரித்து, அவர் ஸகல பூதங்களுக்கும் மங்களத்தைச் செய்கி றென்றதாலும் தான் சரணாகதி தர்மத்தையும் கைங்கரிய மஹிமை யையும் பூரணமாக அறிந்தவனாகையாலும், "ஸ்வாமி! ராக்ஷஸர் களை நாசம் செய்வதிலும் லங்கையைப் பிடித்து இடிப்பதிலும் என்னால் கூடியவரையில் என் உயிருள்ளமட்டும் ஒத்தாசை செய் கிறேன், தங்களுடைய ஸைன்யத்தில் சேரும்படி எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும்'' என்றான். ராம கைங்கரியத்தைத் தவிர வேறு பலனை விரும்பாத விபீஷணனை ராமன் பிரியத்துடன் ஆலிங்கனம் செய்துகொண்டு, "எதிர்பாராமல் நடுவில் கிடைக்கும் பலனையும் நீ பெறவேண்டும். என் ஆக்ஞையைத் தட்டா

CC-0. In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V.Hariharan Collection, Sholinganallur, Chennai

என்றுசொல்லி, லக்ஷ்மணனைப் பார்த்து, "குழந்தாய்! ஸமுத்திரத்திலிருந்து ஜலத்தைக் கொண்டு வா! இவன் தன் தாஸபாவத்தை நன்ருக அறிந்த மஹாஞானி. ராஜ்யாபிஷேகத்தைக் கொஞ்சமாவது அபேக்ஷித்தவனல்ல. என் அன்பைப் பெற்ற இவனிடத்தில் நான் வைத்த பிரீதியால் இவனுக்குக் கொடுக்கும் வரன் பலனைக் கொடுக்கச் செய்யவேண்டியது உன் கடமையல்லவா? ஆகையால் அதிசீக்கிரத்தில் இவனை ராக்ஷஸர்களுக்கு அரசனாக, லங்காதிபதியாக அபிஷேகம் செய்" என்ருர்.

அதைக் கேட்டு லக்ஷ்மணன் ராமனுடைய ஆக்ஞைப்படி ஸமுத்திர ஜலத்தை எடுத்துவந்து, வாநர சிரேஷ்டர்கள் சூழ்ந்திருக்க, வாநர ஸைன்யங்களுக்கெதிரில் விபீஷணனென்ற பரம பாகவதனை லங்கா ராஜ்யத்திற்கு அதிபதியாய் அபிஷேகம் செய்தார்; வாநர ஸைன்யங்கள், ராமனுடைய அபார கிருபையையும் பக்தவாத்ஸல்யத்தையும் பார்த்து, "நல்லது நல்லது" என்று கொண்டாடி ஆரவாரித்தன.

பிறகு வேருெரு ஸமயத்தில் ஹநுமானும் ஸுக்ரீவனும் விபீஷணனை ஏகாந்தத்தில் அழைத்து, "மித்ர! வருணனுக்கு இருப்பிடமாயும் ஒருவரும் நெருங்கக்கூடாததாகவும் இருக்கும் இந்த ஸமுத்திரத்தை எப்படித் தாண்டுவோம்? நாம் மாத்திரமிருந்தாலும் பாதகமில்லை. கணக்கில்லாத இந்த வானர ஸைன்யங்களை அக்கரையில் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டும்" என்ருர்கள். அதற்கு விபீஷணன், "ரகுவீரன் ஸமுத்திர ராஜனைச் சரணமடையட்டும்; அதைக் காரணமாய்க் கொண்டு அவன் தகுந்த உபாயத்தைச் சொல்லுவான். எல்லையற்ற இந்த சமுத்திரம் இக்ஷ்வாகு வம்சஸ்தனுன ஸகர சக்ரவர்த்தியின் புத்திரர்களால் வெட்டப்பட்டது. ஆகையால் தன் பந்துவான ராமனுக்கு அவன் அவசியம் ஸஹாயம் செய்வான். செய்த உபகாரத்தை மறப்பவனல்ல" என்ருன். ஸமயோசித புத்தியுடைய விபீஷணன் இப்படிச் சொல்ல, ஸுக்ரீவனும் ஹநுமானும் ராமனிடத்தில் வந்து யோசனையைத் தெரிவித்தார்கள். ஸ்வபாவமாய் தர்மசீலனுன ரகுவீரனுக்கு அது பிரியமாக இருந்தது. தான் தனியாக உத்தேசித்த காரியத்தை முடிக்கக் கூடுமானாலும், விபீஷணனுடைய ஸமயோசித யோசனையையும் மதிக்கக் கருதி, வாநர ராஜனுன ஸுக்ரீவனைப் பார்த்துப் புன்சிரிப்புடன், "சுக்ரீவ! லக்ஷ்மண! விபீஷணனுடைய யோசனை எனக்கு இஷ்டமாய் இருக்கிறது. ஸுக்ரீவன் மஹா புத்திமான்; நீங்கள் யோசனையில் ஸமர்த்தர்கள்; நீங்களிருவரும் கலந்து ஆலோசித்து எது செய்வது யுக்தமென்று உங்களுக்குத் தோன்றுகிறதோ அதைச் சொல்லுங்கள்" என்ருர். அவர்கள் கைகூப்பி, "இப்பொழுது நமக்கு வேறு வழியில்லை. விபீஷணன் சொல்லும் உபாயம் அதிக

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சுலபமாயும் சுகத்தைக் கொடுக்கக்கூடிதாயும் இருக்கிறது. ஆகையால் எங்களுக்கு இஷ்டமே. கோரமான இந்த ஸமுத்திரத்தில் அணை கட்டாமல் ஸுராஸுரர்களும் லங்கையை நெருங்க முடியாது.

ஆலோசனையில் சூரனான விபீஷணனுடைய வார்த்தைகள் நிஜமாயும் ஹிதமாயும் இருக்கின்றன. தாமதிக்காமல் அப்படியே செய்து ஸமுத்திர ராஜனைப் பிரார்த்தியுங்கள். ராவணனால் ஆளப் பட்ட லங்கைக்கு நமது ஸைன்யங்களுடன் போவதற்கு வேறு உபாயமில்லை" என்றார்கள்.

பிறகு ஸமுத்திரக்கரையில் தர்ப்பைகளைப் பரப்பி ஹோம குண்டத்தில் ஜ்வலிக்கும் அக்னியைப்போல், ராமன் அவைகளின் மீது படுத்தார்.

ஏவமுக்த: குஶாஸ்தீர்ணே தீரே நத³நதீ³பதே: ।
ஸம்விவேஶ ததா³ ராமோ வேத்³யாமிவ ஹுதாஶந: ॥ (41)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ ராமசந்த்ராய நம:

11. விட்டுப் பிரிந்தவர் வந்துசேர

(For Re-union of Separated Relatives)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

ஸுந்தர காண்டம் : ஸர்க்கம் 36

உமா ஸம்ஹிதா

விஶ்லிஷ்ட ப[3]ந்து[4] ஸம்யோக[3] காமநாசேத் ஹநூமத: ।
ராமாங்கு[3]லியார்ப்பணம் து ஸீதாயை ஸந்த்[4]யயோ: படே[2]த் ॥

குடும்பத்தில் ஏற்பட்ட சிறிய பூசல்களாலோ அல்லது வினைப் பயனுகவோ தூர தேசம் சென்ற உறவினர், மறுபடியும் சுற்றத்தாருடன் சுகமாக வந்து சேருவதற்கு "ஹநுமான் சீதைக்குக் கணையாழி கொடுத்த" ஸுந்தர காண்டம் 36-வது ஸர்க்கத்தைக் காலையிலும் மாலையிலும் பாராயணம் செய்யவேண்டும்.

நிவேதனம் : ஆரம்பத்திலோ முடிவிலோ பலாப்பழமும் மாம்பழமும்.

ஸங்கல்பம்

ஸ்ரீ ஸீதாலக்ஷ்மண ப[4]ரதசத்ருக்[4]ந ஹநுமத்ஸமேத
ஸ்ரீராமசந்த்ரப்ரபோ : ப்ரஸாதே[3]ந,
மம விஶ்லிஷ்ட ப[3]ந்து[4]ஜந ஸம்யோக[3]ஸித்[4]யர்த்தம்
"அங்கு[3]லீயக ப்ரத[3]ாநா"த்மக ஸ்ரீமத்[3]ராமாயண
க[4]ட்ட பாராயணம் அஹம் கரிஷ்யே ।

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Chollinganallur, Chennai

ஸர்க்கம் 36

ஹநுமான் கணையாழியைக் கொடுத்தது

பூ⁴ய ஏவ மஹாதேஜா ஹநூமாந் மாருதாத்மஜ: ।
அப்ர³வீத் ப்ரஶ்ரிதம் வாக்யம் ஸீதாப்ரத்யய காரணாத் ॥ (1)

மஹாதேஜஸ்வியான மாருதி ஸீதைக்கு நம்பிக்கையுண்டாகும்படி மிகவும் வணக்கமாய், "அம்மா! அளவற்ற பாக்கியசாலியே! நான் மஹா புத்திமானான ராமமூர்த்தியால் தங்களிடத்தில் அனுப்பப்பட்ட தூதன். அவருடைய திருநாமத்தால் அலங்கரிக்கப்பட்ட இந்தக் கணையாழியைப் பாருங்கள். தங்களுக்கு நம்பிக்கையுண்டாகும்பொருட்டு இதை ராமன் என்னிடத்தில் ஒப்புவித்துத் தங்களுக்குக் கொடுக்கச் சொன்னார். கவலையை விடுங்கள். தங்களுக்கு ஸகல மங்களங்களும் உண்டாகட்டும். அதி சீக்கிரத்தில் தங்களுடைய துக்கங்களெல்லாம் இருந்த இடம் தெரியாமல் போகும்" என்று சொல்லி அந்த மோதிரத்தைக் கொடுத்தார்.

ஸீதை ராமனுடைய கையில் விளங்கும் அந்த ஆபரணத்தை வாங்கிப் பார்த்துப் பர்த்தாவை மறுபடியும் கண்டவளைப்போல் அளவற்ற ஸந்தோஷம் அடைந்தாள். அதைப் பார்த்துப் பார்த்து ஆசை தீராமல் அதிலிருந்து கண்களை எடுக்க முடியவில்லை. முதலில் ராவணன் மாறுவேஷம் பூண்டு வந்தானோ என்று பயந்தவள், பிறகு அநேக காரணங்களால் அவன் தனது பர்த்தாவிடமிருந்து வந்த பிரிய தூதனென்று நம்பிக்கை பிறந்து ஆஞ்ஜநேயரைப் பார்த்து ஸந்தோஷித்தாள். பிறகு ராமனுடைய மோதிரத்தைக் கண்டு ராமனையே கண்டதுபோல் பரவசமானாள். (தன்னை ரகுநாதன் பாணிக்ரஹணம் செய்த காலத்தில் அவருடைய கையிலணிந்த ஆபரணமாகையால், அந்த மஹோத்ஸவமும் அதற்குப் பிறகு அவரும் தானும் அநுபவித்த ஏகாந்த ஸுகங்களும் ஞாபகத்திற்கு வந்தன. ரதி காலத்தில் இருவரும் வேடிக்கையாகக் கோபித்துக் கொண்டிருக்கையில் ஒருவர்க்கொருவர் பேசாமலும் பார்க்காமலும் இருக்கும்பொழுது, பிரிந்திருக்க ஸஹிக்காமையாலும் வேறு மத்தியஸ்தர்கள் இல்லாமையாலும் ராமன் தன் மோதிரத்தை மெள்ளக் கழற்றி அகஸ்மாத்தாய் நழுவினதுபோல் கீழே போடுவார். அப்பொழுது ஸீதை, 'மோதிரம் கழன்று கீழே விழுந்து விட்டதே' என்று சொல்லி அதை எடுத்துக் கொடுப்பாள். உடனே கலஹம் தீர்ந்து மறுபடியும் ஆனந்தமாய்ப் பேசிக் கொண்டிருப்பார்கள். அப்படிப்பட்ட மோதிரமல்லவா என்று

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri Harihar Collection, Sholinganallur, Chennai

நினைத்தாள். வெகு நாளாகப் பிரிந்திருந்த தங்களைச் சேர்த்து வைத்த மோதிரமல்லவா என்று நினைத்தாள். அந்த மோதி மணிந்த விரலையும் கிரமமாய்க் கையையும் புஜங்களையும் திருமே யையும் தன்னெதிரில் நிற்பது போல் பார்த்து ஆலிங்கன செய்துகொண்டாள்.) சிவந்து நீண்டு ஸந்தோஷத்தால் மலர்ந் கண்களையுடைய ஸீதையின் முகம் ராகுவால் விடப்பட்ட சந்திர போல் பிரகாசித்தது.

பிறகு, "ஐயோ! இவனை நமக்குப் பிராணதானம் செய்த னென்று கொண்டாடாமல் ராவணனென்று ஸந்தேஹித்தோமே என்று வெட்கப்பட்டு, ராமனுடைய விருத்தாந்தத்தைக் கேட்ட தால் பரமானந்தமடைந்து, அந்த ஸமாசாரத்தைக் கொண் வந்த ஆஞ்ஜநேயரை வெகு பிரியத்துடன் குளிரக் கடாக்ஷித்து "வாநர சிரேஷ்ட! நீ தனியாக இந்த ராக்ஷஸராஜதானியி அலக்ஷ்யமாய் வந்தாயே; உன் பலத்தையும் சக்தியையும் புத்தியை யும் என்னவென்று சொல்லுவேன்; பயங்கரமான ஜலஜந்துக்கள் வஸிக்கும் நூறு யோஜனை விஸ்தீர்ணமுள்ள இந்த ஸமுத்திரத்தை ஒப்பற்ற பராக்கிரமசாலியான நீ பசுவின் குளப்படியைப்போ அலக்ஷ்யமாய்த் தாண்டினையே! ஸர்வலோக கண்டகனு ராவணனைக் கண்டு உனக்குக் கொஞ்சமாவது பயமும் கலக்கமு மில்லை; ஆகையால், ஸாதாரணமான வாநரனென்று உன் நினைக்கவும் முடியுமோ? மஹா புத்திமானான ராமனே உன் என்னிடத்தில் நம்பிக்கையாக அனுப்பியிருக்கிறார்; ஆகையா என்னுடன் நீ தடையில்லாமல் பேசத் தகுந்தவன். பிறரா நெருங்கமுடியாத சக்தியையுடைய ராகவன் ஒருவனுடை பராக்கிரமத்தைப் பூர்ணமாக அறிந்து அவன் நன்றாகப் பரீக் காமல் என்னிடத்தில் அனுப்பமாட்டாரல்லவா?

"தர்மாத்மாவும் வீணாகாத பிரதிக்ஞையுடையவருமா ராகவன் என் பாக்கிய விசேஷத்தாலும் தெய்வானுக்கிரஹ தாலும் க்ஷேமமாக இருக்கிறாரா? மஹா தேஜஸ்வியான லக்ஷ்மண க்ஷேமமாயிருக்கிறாரா? ராகவன் க்ஷேமமாயிருந்தால் கட சூழ்ந்த பூமியை பிரளய காலாக்னியைப்போல் கோபத்தால் ஏ கொளுத்தாமல் இருக்கின்றார்?

"தேவாஸுரர்களை ஒரு க்ஷணத்தில் நாசம் செய்ய ராமலக் ணர்களுக்குச் சக்தியில்லையா? ஆகையால், என் துக்கம் முடி தற்குக் காலம் வரவில்லை என்று எண்ணுகிறேன். அந் புருஷோத்தமன் வருத்தத்தால் இளைக்காதிருக்கிறாரா? பரிதவிக்க மலிருக்கிறாரா? தைரியத்தை இழக்காமலிருக்கிறாரா? துக்கத்தா மெய்ம்மறந்து காரியங்களில் மயங்காமலிருக்கிறாரா? ஸகல புருஷ

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Harihara Collection, Chengalpattu, Chennai

பிரயத்தனங்களையும் செய்துகொண்டிருக்கிறாரா? ஸ்நேஹிதர்களி டத்தில் கிருபையுடன் ஸாம தான உபாயங்களையும் பகைவர்களை ஜயிப்பதற்காக பேதம் தண்டமென்று உபாயங்களையும் கிரம மாய் அநுஸரித்து வருகிறாரா? சுத்தமான மனத்தையுடைய ஸ்நேஹிதர்களை ஸம்பாதிக்கிறாரா? அப்படிப்பட்டவர்கள் அவரைத் தேடி அடைகிறார்களா? அவர்களால் கௌரவிக்கப்படுகிறாரா? என்னை அடையும்பொருட்டு தேவதைகளுடைய அநுக்கிரஹத் தைப் பிரார்த்தித்து வருகிறாரா? அவருடைய வீரிய சௌரிய பராக்கிரமங்களுக்குத் தகுந்தபடி ஸகலப் புருஷப் பிரயத்தனங் களையும் குறைவில்லாமல் செய்து வருகிறாரா? குலதெய்வமான நாராயணனுடைய கிருபைக்குத் தன்னைப் பாத்திரனாகச் செய்து கொண்டு வருகிறாரா? அவரை விட்டுப் பிரிந்து வெகு காலமாய்க் கண்ணுக்கெட்டாத தேசத்தில் நான் இருக்கிறேன் என்று என்னை மறக்கவில்லையல்லவா? என்னிடத்திலுள்ள பூர்வ ஸ்நே ஹத்திற்குக் கொஞ்சமேனும் குறைவில்லையல்லவா? இந்த ஸங்க டத்திலிருந்து என்னைச் சீக்கிரத்தில் விடுவிப்பாரா? உத்தம ஸுகங்களை அநுபவிக்கத் தகுந்தவர்; கஷ்டத்தை அநுபவிக்கவே தகாதவர். அதிக துக்கத்தால் தேகம் நொந்து வருந்தாமல் க்ஷேமமாக இருக்கிறாரா? கௌஸல்யை, ஸுமித்திரை, பரதன் முதலியவர்கள் க்ஷேமமாக இருப்பதாக ஸமாசாரம் கிடைத்துக் கொண்டிருக்கிறதா? என்னைப் பிரிந்த சோகத்தால் தாபத்தை யடையாமலிருக்கிறாரா? வேறு விஷயங்களில் மனத்தைச் செலுத் தாமல் என்னை இந்தக் கஷ்டத்திலிருந்து கரையேற்றுவாரா? ராமனிடத்தில் பரமபக்தியுள்ள பரதன் தன் மந்திரிகளையும் கணக் கில்லாத வீரர்களடங்கிய சதுரங்க பலத்தையும் என் நிமித்தமாக அனுப்புவாரா? பற்களையும் நகங்களையும் ஆயுதமாக உடைய வாநர வீரர்களால் சூழப்பட்டு ஸுக்ரீவ மஹாராஜா இங்கே அதி சீக்கிரத் தில் வருவாரா? சூரரும் அஸ்திர ரஹஸ்யங்களைப் பூரணமாக அறிந்தவருமான லக்ஷ்மணன் பாண வர்ஷத்தால் ராக்ஷஸர்களை நாசம் செய்வாரா? நெருப்பு ஜ்வாலைகளைக் கக்கும் பாணங்களால் ராவணனும் அவனுடைய பந்துக்களும் யுத்தத்தில் அதிசீக்கிரத் தில் அடிபட்டுக் கிடப்பதைக் காண்பேனா? தங்க நிறமுள்ளதும் தாமரைப் புஷ்பத்தின் வாஸனையுடையதுமான ராகவனுடைய முகம் வெயிலால் ஜலம் வற்றின ஓடையில் வாடும் தாமரைப் புஷ்பத்தைப் போல், என்னைப் பிரிந்த துக்கத்தால் உலர்ந்து வாடாமலிருக்கிறதா?"

"தர்மாநுஷ்டானத்தைக் காரணமாய் வைத்துக்கொண்டு, தன் ராஜ்யத்தைவிட்டு, ஸகல ஸுகங்களையும் அநுபவித்துக் கொண்டிருந்த என்னையும் வனத்தில் கால்நடையாய் அழைத்துக் கொண்டு வந்த ராமனுக்கு வருத்தமும் பயமும் சோகமும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கொஞ்சம் கூட இல்லை. அப்படிப்பட்டவர் என்னைப் பிரி தைரியத்தை இழக்காதிருக்கிறாரா? தன்னிடத்தில் பரமப் பி வைத்த கௌஸல்யையும், தன்னைப் பிரிந்து உயிரோடி ஸஹிக்காமல் மரணமடைந்த தசரதரும், இதர பந்துக்க ராமனுடைய மனத்தில் எனக்கு ஸமமாவார்களோ? ரகுநா என்னை அழைத்துப் போவாரென்ற வார்த்தையைக் கேட் வரையில் மாத்திரம் பிராணனை வைத்துக்கொண்டிருப்பேன்."

இந்தப் பிரகாரம் அநேக அர்த்தங்களடங்கிய மதுரமா வார்த்தைகளைச் சொல்லி, "இந்த வாநரேந்திரன் என்னுடை கேள்விகளுக்கு என்ன பதில் சொல்வான் ; பார்ப்போம்" என் பேசாமலிருந்தாள்.

மஹா பராக்கிரமசாலியான மாருதி, தலைமேல் கைகூ வணக்கமாய்ப் பின்வருமாறு பதில் சொன்னார்: "பூர்வம் அநு லாதனென்னும் அஸுரன் இந்திரனுடைய பாரியையான தேவியை ஒளித்தான். அவ்விடத்தை வெகுகாலம் அறியா இந்திரன் பிறகு தேடிக் கண்டுபிடித்ததுபோல், ராமனுக் தாங்கள் இருக்குமிடம் இதுவரையில் தெரியவில்லை. செந்தாம யைப் பழிக்கும் நேத்திரங்களையுடையவரே! தங்களை இதுவ யிலும் அழைத்துப் போகாததற்கு இதுவே காரணம். நா தங்களுடைய விருத்தாந்தத்தைத் தெரிவித்த அடுத்த க்ஷணத் லேயே வாநர ஸைன்யங்களைக் கூட்டிக்கொண்டு இங்கு வருவா அவை நூறு யோஜனை விஸ்தீர்ணமுள்ள இந்த ஸமுத்திரத் எப்படித் தாண்ட முடியுமென்று ஸந்தேகிக்கவேண்டாம். ராகவ இந்தப் பயங்கரமான கடலைத் தன் பாணங்களால் கட்டித் ஸைன்யங்களுடன் இங்கே வந்து ராக்ஷஸ குலத்தை வேரறுப்பா மிருத்யு தேவதையாவது தேவர்களாவது அஸுரர்களாவ அதைத் தடுக்கப் பார்த்தால் அந்த க்ஷணமே நாசமடையவா ளென்பதில் ஸந்தேகமுண்டோ? ஸிம்ஹத்தால் பீடிக்கப்பட் யானையைப்போல் ராகவன் தங்களைக் காணமல் துக்கத்தா தவிக்கிறார். இது ஸத்தியம். நான் வஸிக்கும் இடங்களா மலயம், விந்தியம், மேரு, மந்த்ரம், தர்த்துரம் முதலிய பர்வத களின் மேலும் நான் புஜிக்கும் பழம், கிழங்கு, ஜலம் முதலி பதார்த்தங்களின் மேலும் ஆணை வைத்துச் சொல்லுகிறேன் அழகான கண்களாலும் கோவைக்கனி போன்ற உதடுகளாலு ஜ்வலிக்கும் குண்டலங்களாலும் பூர்ண சந்திரனைப் போ விளங்கும் ராமமூர்த்தியின் திருமுக மண்டலத்தைக் காண்பீர்க

"ராமன் மதுமாம்ஸங்களை விட்டார். வானப்ரஸ்தருக் தகுந்த பழம், கிழங்கு முதலியவைகளை ஸாயங்காலத்தில் புசி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கிறார்; தங்களிடத்திலேயே மனத்தைச் செலுத்தி தேகத்தையும் மறந்து, காட்டு ஈக்கள், கொசுக்கள், புழுக்கள், ஊரும் ஜந்துக்கள் முதலியவைகளால் நேரும் உபத்திரவத்தைக் கவனிக்கிறதுமில்லை; அவைகளை ஓட்டுகிறதுமில்லை; தங்களிடத்தில் வைத்த ஆசையால் எப்பொழுதும் தங்களையே நினைத்துக்கொண்டு சோகம் மேலிட்டு வேறு ஞாபகமில்லாமல் இருக்கிறார். அவருக்குத் தூக்கமே கிடையாது. எப்பொழுதாவது தன்னை அறியாமல் தேகம் அலுத்துத் தூங்கினாலும், 'ஸீதே!' என்று மதுரமான வார்த்தையைச் சொல்லிக்கொண்டே விழித்துக்கொள்ளுகிறார். பழங்கள், புஷ்பங்கள் முதலிய மனோஹரமான பதார்த்தங்களைக் கண்டாலும், 'ஹா! ஸீதே!' என்று அடிக்கடி பெருமூச்சுவிட்டுத் தாங்கள் பேசுவது போல் தங்களுக்குப் பதில் சொல்லுகிறார். தாங்கள் எப்பொழுதும் எதிரில் இருப்பதாக அவருடைய பாவனை. தங்களைப் பிரிந்ததால் எப்பொழுதும் பரிதவித்துக் கொண்டிருக்கிறார். தங்களை அடைவதற்கு வேண்டிய ஸகலப் பிரயத்தினங்களையும் குறைவில்லாமல் செய்துகொண்டிருக்கிறார். அவர் கலங்காத தைரியமுடையவரென்றும் செய்த பிரதிக்ஞையைத் தவறாதவரென்றும் க்ஷத்திரிய வீரரென்றும் தங்களுக்குத் தெரியாதா?" என்றார்.

ராமனுடைய விருத்தாந்தத்தைக் கேட்டதால் ஸீதைக்கு ஒருவாறு கவலை நீங்கிற்று. ஆனால், தன்னைப் பிரிந்து ராமன் படும் கஷ்டத்தைக் கேட்டு, அதைப்போல் தானும் சோகமடைந்து, சரத்ருதுவின் ஆரம்பத்தில் கொஞ்சம் மேகத்தால் மறைந்து மாறி மாறிப் பிரகாசிக்கும் சந்திரமண்டலத்தைப்போல் தோன்றினாள்.

ஸா ராமஸங்கீர்தந வீதஶோகா।
ராமஸ்ய ஶோகேந ஸமாநஶோகா।
ஶரந்முகே^{2} ஸாம்பு^{3}த^{3} ஶேஷசந்த்^{3}ரா
நிஶேவ வைதே^{3}ஹஸுதா ப^{3}பூ^{4}வ॥ (47)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

RAMA NAMA

ராம நாம ஜபதாம் குதோ ப4யம்
ஸர்வதாப ஶமநைக பே4ஷஜம் ।
பஶ்ய தாத மம கா3த்ர ஸந்நிதௌ4
பாவகோபி ஸலிலாயதே து4நா ॥

ராமநாமத்தை ஜபிக்கின்றவர்களுக்குப் பயமே வரா எல்லாத் தாபங்களையும் நிவர்த்தி செய்யக்கூடிய மருந்தாக நாமா ஆகிறது. பாருங்கள் : அந்த ராமநாம ஜபத்தின் மகி யால் என் உடலருகிலிருக்கும் தீயும் நீராகி என்னைக் காக்கி

—பிரஹ்லா

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ ராமசந்த்ராய நம:

12. துர்சொப்பன தோஷம் நீங்க

(For Eradicating Evil Effects Of Bad Dreams)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

ஸுந்தர காண்டம்: ஸர்க்கம் 27

உமா ஸம்ஹிதா

து³ஸ்வப்ந தோ³ஷஶாந்த்யர்த்த²ம் த்ரிஜடாஸ்வப்ந த³ர்ஶநம் ।
படே²த் த்ர்யஹம் ப்ராதரேவ ஶர்க்கராம் விநிவேத³யேத் ॥

மலையிலிருந்து கீழே விழுதல், ஆற்றில் அடித்துக்கொண்டு போதல், பேயோ பிசாசோ துரத்துதல், துஷ்ட மிருகங்கள் கடிக்க வருதல், தன்னை யாரோ வெட்டியது போலிருத்தல் இவை போன்ற துர்சொப்பனங்கள் அடிக்கடி வந்தால், அவை நீங்கிச் சுக நித்திரையடைவதற்கு "திரிசடையின் சொப்பனத்தை" விவரிக்கும் ஸுந்தர காண்டம் 27-வது ஸர்க்கத்தைக் காலை வேளையில் மூன்று தினங்கள் பாராயணம் செய்யவேண்டும்.

நிவேதனம்: சர்க்கரை.

ஸங்கல்பம்

ஸ்ரீ ஸீதாலக்ஷ்மண ப⁴ரதசத்ருக்⁴ந ஹநுமத்ஸமேத
ஸ்ரீராமசந்த்ரப்ரபோ: ப்ரஸாதே³ந துஸ்வப்ந
தோஷஶாந்த்யர்த்த²ம் 'த்ரிஜடா ஸ்வப்நா'
த்மக ஸ்ரீமத்³ராமாயணக⁴ட்ட பாராயணம்
அஹம் கரிஷ்யே ।

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸர்க்கம் 27

திரிஜடை கண்ட ஸ்வப்னம்

இத்யுக்தா: ஸீதயா கோ⁴ரா ராக்ஷஸ்ய: க்ரோத⁴மூர்ச்சி²தா: ।
காஸ்சித் ஜக்³முஸ்³ தத³ாக்²யாதும் ராவணஸ்ய தரஸ்விந:॥ (1)

ஸீதை இப்படிச் சொல்லக் கேட்டு சில ராக்ஷஸிகள் கோபம் மேலிட்டு அந்த ஸமாசாரத்தை ராவணனிடத்தில் சொல்ல ஓடினுர்கள். பிறகு மற்றவர்கள் கோரமான வேஷங்களுடன் ஸீதையைச் சூழ்ந்து, அவளுக்குக் கெடுதி நேருமென்ற ஒரே விஷயத்தைப் பல விதமாய்க் கொடும் வார்த்தைகளால் சொல்லிப் பயமுறுத்தினுர்கள். "ஸீதே! நீ தற்கொலை செய்துகொண்டு எங்களிடத்திலிருந்து தப்பப் பார்க்கிருயோ? உன்னை இப்பொழுதே கொன்று உன் மாம்ஸத்தை நாங்கள் பங்கிட்டுத் தின்னப் போகிருேம்" என்ருர்கள்.

இப்படி அந்தத் துஷ்ட ராக்ஷஸிகள் ஸீதையை மிரட்டுவதைத் திரிஜடை என்பவள் பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் விபீஷணனுடைய பெண்; வயதிலும் ஞானத்திலும் அநுபவத்திலும் முதிர்ந்தவள். அதுவரையில் தூங்கிக்கொண்டிருந்து, திடீரென்று விழித்துக்கொண்டு, அந்த ராக்ஷஸிகளைப் பார்த்து, "துஷ்டைகளே! ஜனகருக்குப் புத்திரியும் தசரத சக்கரவர்த்திக்கு நாட்டுப் பெண்ணுமான இவளைத் தொடவேண்டாம். உங்களுக்குப் பசித்தால் உங்களுடைய தேகங்களையே பிடுங்கித் தின்னுங்கள்; இப்பொழுதுதான் ஒரு பயங்கரமான ஸ்வப்னத்தைக் கண்டேன். அதை நினைக்க எனக்கு மயிர்கூச்சலெடுக்கிறது. ஸீதையின் பர்த்தாவிற்கு ஸகல மங்களங்களும் ராக்ஷஸர்களுக்கு நாசமும் ஸமீபித்திருக்கின்றன" என்ருள். அதைக் கேட்டு முன்பு கோபப் பரவசர்களான ராக்ஷஸிகளுக்குப் பயம் பிடித்து எல்லோரும் திரிஜடையைச் சூழ்ந்துகொண்டு, "விடியற்காலத்தில் கண்ட ஸ்வப்னம் வீண்போகாது. ஆகையால் அதை எங்களுக்கு விஸ்தாரமாய்ச் சொல்" என்ருர்கள்.

அந்த ராக்ஷஸிகள் சொல்லிய வார்த்தையைக் கேட்டு, திரிஜடை, தான் ஸ்வப்னத்தில் கண்டதைச் சொல்லுகிருள். "கேளுங்கள், ராகவன் லக்ஷ்மணனுடன் வெண்மையான வஸ்திரங்களையும் மாலைகளையும் தரித்துக்கொண்டு கணக்கில்லாத ஹம்ஸங்களால் தாங்கப்பட்ட ஒரு தந்தப் பல்லக்கில் ஆகாசமார்க்கமாய் இந்த லங்கைக்கு வந்தார்; பிறகு ஸீதை வெண்மையான வஸ்திரத்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Harihara Collection, Sholinganallur, Chennai

தால் அலங்கரிக்கப்பட்டு க்ஷீரஸமுத்திர மத்தியிலுள்ள ஒரு வெண்மையான பர்வதத்தில் உட்கார்ந்திருந்தாள். பிறகு ஸூரிய காந்தி ஸூர்யனுடன் சேர்வதைப்போல் இந்தப் பாக்கியசாலி ரகுநாதனுடன் சேர்ந்திருக்கக் கண்டேன். பிறகு ராமலக்ஷ்மணர்கள் அந்தப் பல்லக்கைவிட்டு நான்கு தந்தங்களையுடையதும் மஹா பர்வதத்தைப் போன்றதுமான ஒரு பெரிய யானையின் மேலேறி ஸீதையை நோக்கி வந்தார்கள். (பசு, காளை, யானை, அரண்மனை, பர்வதம், விருக்ஷங்கள் முதலியவைகளில் ஏறுவதாயும், அழுவதாயும், தான் மரணமடைவதாயும், சேரக்கூடாதவர்களுடன் சேருவதாயும் ஸ்வப்னத்தில் காண்பது மங்களகரம்—ஸ்வப்னாத்தியாயம்.) அந்த ராஜபுத்திரர்கள் தேஜஸால் ஜ்வலித்துக்கொண்டு வெண்மையான வஸ்திராபரணங்களுடன் ஸீதை இருக்கும் பர்வத சிகரத்திற்கு வந்தார்கள். ராமன் ஸீதையை எடுத்து யானையின் கழுத்தில் உட்காரவைப்பதைக் கண்டேன். பிறகு சந்தோஷத்தால் மலர்ந்த கண்களுடன் ஸீதை ராமனுடைய மடியிலிருந்து கிளம்பி சந்திர ஸூரியர்களைக் கையால் தொட்டாள். (ஸூரிய மண்டலத்தையாவது சந்திரமண்டலத்தையாவது ஸ்வப்னத்தில் கைகளால் தொடுகிறவன் ராஜ்யத்தை ஆள்வான்—ஸ்வப்னாத்தியாயம்.) பிறகு அந்த யானை ராமலக்ஷ்மணர்களுடனும் ஸீதையுடனும் லங்கைக்குப் போய் நின்றது. பிறகு ராமன் ஸீதையுடன் எட்டு வெள்ளைக் காளைகள் பூட்டின திவ்விய ரதத்தில் இங்கு வந்தார். பிறகு ஸீதையோடும் லக்ஷ்மணனோடும் ஸூரியனைப் போல் ஜ்வலிக்கும் புஷ்பக விமானத்தில் ஏறி வடக்கு நோக்கிச் சென்றார். பராக்கிரமத்தில் விஷ்ணுவிற்கு ஸமமான ராமனையும் லக்ஷ்மணனையும், ஸீதையையும் ஸ்வப்னத்தில் காணும் பாக்கியம் பெற்றேன். முட்டாள்களே! மஹாபாபிகளுக்கு மோக்ஷம் கிடைக்குமோ? அப்படித் தேவர்கள், அஸுரர்கள், ராக்ஷஸர்கள் மற்றும் இந்தப் பிரபஞ்சத்திலுள்ள ஸகலப் பிராணிகளும் சேர்ந்தாலும் மஹாதேஜஸ்வியான ரகுவீரனை ஜயிக்கமுடியுமா?

"ராவணன் தைலத்தைத் தேகமெங்கும் பூசிக்கொண்டு சிவப்பு வஸ்திரத்தை உடுத்து, மதுபானத்தால் கொழுப்படைந்து அலரிப்பூமாலையைத் தரித்துக்கொண்டு பூமியில் சஞ்சரிப்பதைக் கண்டேன். பிறகு, மொட்டைத்தலையுடன் கருப்பு வஸ்திரத்தை உடுத்துக்கொண்டு புஷ்பக விமானத்திலிருந்து கீழே விழுந்தான். ஒரு ஸ்திரீ அவனை இழுத்தாள். பிறகு, சிவந்த மாலையாலும் சந்தனத்தாலும் அலங்கரிக்கப்பட்டுத் தைலத்தைக் குடித்துக் கொண்டு சித்தப்பிரமையுடையவனாய் இந்திரிய ஸ்வாதீனமற்று சிரித்துக்கொண்டும் கூத்தாடிக்கொண்டும் கழுதைகள் பூட்டிய தேரிலேறி அதிவேகமாகத் தெற்கே போவதைக் கண்டேன். பிறகு கழுதையின்மேலிருந்து ராவணன் பயத்தால் நடுங்கிப் பூமியில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தலைகீழாக விழுவதைக் கண்டேன். பிறகு சீக்கிரமாக எழுந்து பயத்தால் கலங்கிப் பைத்தியம் பிடித்ததுபோலும் குடிவெறிக் கொண்டதுபோலும் வஸ்திரமே இல்லாமல் பலவிதமாய்க் கெட்ட வார்த்தைகளைப் பிதற்றிக்கொண்டு, அழுக்குப் படிந்த சேற்றில் திடீரென்று முழுகி மறைந்தான். ஸஹிக்கமுடியாததும் கெட்ட நாற்றமுடையதும் இருள் மூடியதுமான நகரத்தைப்போல் பயங்கரமாயும் இருந்தது. பிறகு, கருப்பு நிறமுள்ள ஒரு ஸ்திரீ தேகமெங்கும் அழுக்கடைந்து சிவப்பு வஸ்திரம் தரித்து ராவணனுடைய கழுத்தில் கையைப் போட்டுத் தெற்கே இழுத்துக் கொண்டு போனாள்.

இப்படியே கும்பகர்ணனும் இருக்கக் கண்டேன். ராவணனுடைய புத்திரர்கள் எல்லோரும் தைலத்தைப் பூசிக்கொண்டு நின்றார்கள். ராவணன் பன்றியின்மேலும், இந்திரஜித் முதலை மேலும், கும்பகர்ணன் ஒட்டகத்தின்மேலும், அதிவேகமாய்த் தெற்கே சென்றார்கள்.

பிறகு, விபீஷணன் வெண்மையான மாலைகளையும் வஸ்திரங்களையும் சந்தனப் பூச்சுகளையும் தரித்துக்கொண்டு சங்கம், துந்துபி முதலிய வாத்திய கோஷங்களாலும் பாட்டு, நாட்டியம் முதலியவைகளாலும் உபசரிக்கப்பட்டுப் பர்வதத்தைப் போன்ற சரீரத்துடன் மேகங்களைப்போல் கர்ஜிக்கும் நான்கு தந்தங்களுள்ள ஒரு யானையின் மேலேறி நான்கு மந்திரிகளுடன் ஆகாச மார்க்கத்தில் நிற்கக் கண்டேன்.

பிறகு, ராக்ஷஸர்கள் சிவப்பு வஸ்திரங்களையும் மாலைகளையும் தரித்து மதுபானம் செய்து கோர வாத்தியங்களைச் சப்தித்துக் கொண்டு கூட்டம்கூட்டமாய் நிற்பதைக் கண்டேன். பிறகு இந்த அழகிய லங்காபுரி, ரதகஜதுரகபதாதிகளுடன் உப்பரிகைகளும் கோபுரங்களும் வாசற்படிகளும் இடிந்து ஸமுத்திரத்தில் விழக் கண்டேன். ராவணன் அதிக ஜாக்கிரதையுடன் காப்பாற்றிவரும் இந்தப் பட்டணத்தை ராமதூதனை ஒரு வானரவீரன் கொளுத்தக் கண்டேன். சாம்பலாய்க் கிடந்த இந்த நகரத்தில் ராக்ஷஸிகள் தைலத்தைக் குடித்துப் பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் பெருங்கூச்சலுடன் பிரவேசிக்கக் கண்டேன். கும்பகர்ணன் முதலான ராக்ஷஸ சிரேஷ்டர்கள் சிவப்பு வஸ்திரங்களை உடுத்திக் கொண்டு சாணத்தால் நிறைந்த மடுவில் முழுகினார்கள்.

ரகுவீரன் அதிசீக்கிரத்தில் இங்கே வந்து ஸீதையை அழைத்துக் கொண்டு போவார். அவருடைய கோபாக்னியால் நீங்களும் ராவணனும் இதர ராக்ஷஸர்களும் சாம்பலாவீர்கள்; ஓடிப்

RTOMR : BRLX
CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

போங்கள் ; எங்கேயாவது ஒளிந்துகொள்ளுங்கள். இவள் ராமனுக்கு
மிகவும் பிரியமானவள் ; இவளிடத்தில் அவருக்கு விசேஷ மதிப்பும்
கௌரவமும் உண்டு. தான் எவ்வளவு தடுத்தும் கேளாமல்
தன்னுடன் வனத்திற்கு வந்தவள் ; இப்படிப்பட்டவளை நீங்கள்
பயமுறுத்தி ஹிம்ஸிப்பதைப் பார்த்து ஸஹிப்பாரோ? ஆகையால்
இனி கொடிய வார்த்தைகளைச் சொல்லவேண்டாம். அவளைச் சமா
தானம் செய்து கோபத்தைத் தணியுங்கள். 'ராமனுடைய கோபத்
திலிருந்து எங்களைக் காப்பாற்றவேண்டும்' என்று இவளைப் பிரார்த்
திப்பதே நமக்குப் பரமஹிதமென்று எனக்குத் தோன்றுகிறது;
மிகுந்த துக்கத்தை அநுபவித்துக்கொண்டிருக்கும் இந்த ஸீதை
ஸகல கஷ்டங்களும் தீர்ந்து உத்தமமான பர்த்தாவுடன் கூடி
சந்தோஷிக்கப் போகிறுளென்று நான் கண்ட ஸ்வப்னத்தால்
விளங்கவில்லையா? நீங்கள் இவளை விசேஷமாகப் பயமுறுத்தி
ஹிம்ஸித்திருக்கிறீர்கள் ; ஆனாலும் 'எங்களைக்காப்பாற்றவேண்டும்'
என்று பிரார்த்தியுங்கள் ; 'நாம் இவ்வளவு உபத்திரவித்திருக்
நம்மிடத்தில் இவளுக்குத் தயை உண்டாகுமா?' என்று ஸந்தேகப்
படவேண்டாம். ராக்ஷஸர்களுக்கு ராமனால் உண்டாகப்போகி
நாசத்தை நினைக்கும்பொழுது எந்த உபாயத்தாலாவது நாம் தப்
வேண்டியது அவசியமென்று தெரிகிறது. இவளுடைய ஸ்வபாவ
உங்களுக்குத் தெரியாது. இவளை ஒருவன் சரணமடைந்தாலே
போதும் ; அவன் செய்த ஸகல அபராதங்களையும் மறந்து அவனுக்
குப் பரம உபகாரத்தைச் செய்வாள் ; ஆகையால் நம்மை இந்த
கோரமான ஆபத்திலிருந்து தப்புவிக்க இவளுக்கே உரிமை
யுண்டு.

"மேலும், இவளுடைய அவயவங்களில் விகாரமான அடை
யாளங்கள் கொஞ்சமாவது காணப்படவில்லை. காந்தி மாத்திர
கொஞ்சம் குறைந்திருக்கிறது. ஆகையால், துக்கத்தை அநு
விக்கவே தகாதவளும், தேவபோகங்களை அநுபவிக்கத் தகுந்த
வளுமான இந்த ராஜகுமாரிக்கு இந்தச் சோகம் நேர்ந்திருக்கிறது
இவளுடைய காரியம் ஸித்தியாகுமென்றும் ரகுநாதன் ஜயமடை
வாரென்றும் ராவணன் அழிவானென்றும் எனக்கு நன்றாகத் தெரி
கிறது. இவளுக்கு அதிசீக்கிரத்தில் பிரியமான ஸமாசாரம் கிடைக்
கப்போகிறதென்பதற்கு அநேக அடையாளங்கள் தோன்று
கின்றன. தாமரை இதழ் போன்ற இவளுடைய விசாலமான
இடது கண் மிகுந்த காந்தி பெற்று விளங்குகிறது. இடது புஜமும்
யானைத் துதிக்கை போன்ற இடது தொடையும் கொஞ்சம் மயிர்க்
கூச்சமடைந்து துடிக்கின்றன. இந்தச் சகுனங்களால் இவள்
அதிசீக்கிரத்தில் ராமனைச் சேர்ந்து ஸுகமடைவாள் என்பது
நிச்சயம். இதோ பாருங்கள். அந்த மரக்கிளையில் ஒரு பக்ஷி
விஸ்தாரமான இறக்கைகளை விரித்துக்கொண்டு, பிரதக்ஷிணமா

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வந்து மேலே கிளம்பிக் கீழே இறங்கி, மலர்ந்த புஷ்பங்களாலும் தளிர்களாலும் விளங்கும் கிளையின்மேல் நன்றாக உட்கார்ந்திருக்கிறது. இது ஒரு சுபசகுனம். அது அங்குள்ள அதிமதுரமான பழங்களைப் புஜித்துத் தென்றலை அநுபவித்து ஆனந்தத்தால், மெய்ம்மறந்திருக்கிறது. அது அடிக்கடி இனிமையாய்க் கூவுவதைப் பார்த்தால், 'ஸீதே! நீ ஏன் வருத்தப்படுகிறாய்? உன் பர்த்தா அதி சீக்கிரத்தில் இங்கே வந்து உன் கஷ்டங்களைத் தீர்த்து அயோத்யைக்கு அழைத்துக்கொண்டு போவார். நீ படும் துக்கம் அதிகமென்று தோன்றினாலும் அவருடைய வருத்தத்திற்கு ஈடாமோ? ஆகையால் உன் நாயகனை எதிர்கொண்டழைக்க நீ தகுந்தபடி ஸ்நானம் செய்து அலங்கரித்துக் கொள்ளாமல் கண்ணும் கண்ணீருமாக இருப்பது அழகல்ல; எழுந்திரு. உன் பிரிய நாயகன் வரப்போகிறானென்ற ஸந்தோஷ ஸமாசாரத்தை நினைக்க எனக்கும் ஆனந்தத்தால் மயிர்க் கூச்சமிடுகிறது' என்று ஸீதையின் துக்கத்தைத் தணிப்பது போலிருக்கின்றது."

(அநாதி காலமாய்ப் பகவானுடைய ஸம்பந்தம் பெற்ற ஜீவனைக் கடைத்தேற்றுவதற்கு ஆசாரியன் செய்யும் பிரயத்தனங்கள் இந்தக் காண்டத்தில் கதாரூபமாய் வர்ணிக்கப்படுகின்றன. லங்கையே சரீரம்; ஸீதையைக் காக்கும் ராக்ஷஸிகளே இந்திரியங்கள்; ராவணனும் கும்பகர்ணனும் நான், என்னுடையது என்ற அஹங்கார மமகாரங்கள்; இந்திரஜித் முதலியவர்கள் காமக்குரோத லோப மோஹ மத மாத்ஸர்ய தம்பம் முதலியவை. ஜீவனுக்கு பகவத் ஸ்வரூபத்தை உபதேசிக்க வந்த ஆசாரியனே ஹநுமான். ஆசாரிய லக்ஷணங்களாவன: உத்தம கதிக்கு ஸாதனங்களான ஞான கர்மங்களைப் பூர்ணமாய் அநுஷ்டித்தவர்; யக்ஞத்தாலும் தானத்தாலும் அழிவற்ற தவத்தாலும் அடைய விரும்பும் பிரஹ்மஞானிகள், சாஸ்திரங்களின் அர்த்தங்களைத் தாம் பரிசோதித்தறிவதாலும் பிறர் அவைகளை அநுஷ்டிக்கும்படி செய்வதாலும் தாமே அநுஷ்டித்துக் காட்டுவதாலும், ஆசாரிய பதவியை அடைந்தவர்; வேத சாகைகளை இடைவிடாமல் அத்யயனம் செய்து, அவைகளின் அர்த்தங்களை சிரவண மனன நிதித்யாஸனமென்ற அநுஷ்டானத்திற்குக் கொண்டுவந்தவர்; வேதங்களைக் கரைகண்டவர்; பகவானிடத்தில் எல்லையற்ற பக்தியுள்ளவர்; பொறாமையில்லாதவர்; மந்திரங்களின் ரஹஸ்யத்தை அறிந்து

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அவைகளில் பக்திவைத்து எப்பொழுதும் அவைகளையே கதியென்று ஆசிரயிப்பவர் ; சுத்தமான ஆசாரமுள்ளவர் ; புராணங்களின் தத்வார்த்தங்களை அறிந்தவர் ; குருபக்தியுள்ளவர் ; ஆனந்தத்தால் கண்ணீர் பெருகத் தேகமெங்கும் மயிர்க் கூச்சலுடன் பரமாத்மாவின் கல்யாண குணங்களிலேயே ஈடுபட்டிருப்பவர் ; புருஷோத்தமனுடைய குணங்களையும் மஹிமையையும் அடிக்கடி சிஷ்யனுக்கு உபதேசிப்பவர். ஆசாரியன் அலுத்துப்போகாமல் சிஷ்யன் போனவழியே விட்டு அவனைச் சீர்திருத்தத் திருமந்திரத்தை உபதேசித்து அவனைப் பகவானிடத்தில் சேர்ப்பிக்கிறார்.)

பக்ஷி சஶா கா³நிலய: ப்ரருஹ்ஷ்ட:
புந: புநஸ்சோத்தம ஸாந்த்வவாதீ³ ।
ஸுஸ்வாக³தாம் வாசமுதீ³ரயாண:
புந: புநஸ்சோத³யதீவ ஹ்ருஷ்ட: ॥ (51)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீராமசந்த்ராய நம :

13. பரஸ்த்ரீகமன தோஷம் நீங்க

(For Expiation of sin by illicit intercourse)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

ஸுந்தர காண்டம் : ஸர்க்கங்கள் 7 முதல் 11 முடிய

உமா ஸம்ஹிதா :

பாரத[3]ாரிகதா தோ[3]ஷ ஶாந்தயே ஹநுமத் க்ருதம் ।
நிர்விகாரமநா பூ[4]த்வா ஶுத்[3]த[4]ாந்தே ராவணஸ்ய ச ॥
ஜாநக்யந்வேஷணகத[2]ா ஸர்க்க[3]பஞ்சக மாத[3]ராத் ।
ஸக்ருத் படே[2]த் ப்ராதரேவ நிவேத்[3]யாபூப விம்ஶதிம் ॥

சூழ்நிலையின் கோளாற்றினாலோ சந்தர்ப்பத்தின் சதியினாலோ, நன்னடத்தையுள்ளவருக்கு இப்பாவச் செயல் புரிய வேண்டிய நிலை ஏற்பட்டால், அப்பாவம் நீங்குவதற்கு, "ஹநுமான் ராவணனுடைய அந்தப்புரத்தில் ஸீதா தேவியைத் தேடிய வரலாறு" அடங்கிய ஸுந்தர காண்டம் 7 முதல் 11 முடியவுள்ள ஸர்க்கங்களை விடியற்காலையில் ஒரு தடவை பாராயணம் செய்ய வேண்டும்.

நிவேதனம் : இருபது அப்பங்கள்.

ஸங்கல்பம்

ஸ்ரீ ஸீதாலக்ஷ்மண ப[4]ரதசத்ருக்[4]ந ஹநுமத்ஸமேத ஸ்ரீராமசந்த்ர
ப்ரபோ : ப்ரஸாதே[3]ந, பாரத[3]ாரிகதா தோஷஶாந்
த்யர்த்தம் 'ஹநுமத் க்ருத ஸீதாவிசயா' த்மக
ஸ்ரீமத்[3]ராமாயண க[4]ட்ட பாராயணம்
அஹம் கரிஷ்யே ।

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸர்க்கம் 7

ராவணனுடைய அரண்மனை

ஸ வேஶ்ம ஜாலம் ப³லவாந் த³த³ர்ஶ
வ்யாஸக்த வைடூ³ர்ய ஸுவர்ணஜாலம்
யதா²மஹத் ப்ராவ்ருஷி மேக⁴ஜாலம்
வித்³யுத் பிநத்³த⁴ம் ஸவிஹங்க³ ஜாலம் ॥ (1)

பிறகு பலவானான ஹநுமான், மின்னற் கொடிகளோடும் பக்ஷிக் கூட்டங்களோடும் கூடின மழைக் காலத்து மேகங்களைப் போல், நவரத்தினங்களிழைத்த தங்க ஜன்னல்களுடன் விளங்கும் கிருஹ வரிசைகளைப் பார்த்தார். உத்தமமான சங்கம், வில் முதலிய ஆயுதங்களால் பிரகாசிக்கும் அநேக கட்டடங்களையும், வீடுகளின் மேல் அமைக்கப்பட்டிருக்கும் உப்பரிகைகளையும் கண்டார். ராவணனுடைய அரண்மனை சில்ப சாஸ்திர விதிகளின் படி யாதொரு தோஷமும் இல்லாமல் கட்டப்பட்டது; அதிலுள்ள பலவித ஐசுவரியங்களால் ஜ்வலித்துக்கொண்டிருந்தது; தேவர் களும் அஸுரர்களும் ராவணனிடத்திலுள்ள பயத்தால் அதைக் கண்டு தேவாலயத்தைப்போல் நமஸ்கரித்தார்கள். அதைக் குபேரனிடத்திலிருந்து ராவணன் தன் பலத்தால் அபகரித்தான். லங்கையிலுள்ள மற்ற வீடுகளை விசுவகர்மா நிர்மித்தான். இவை களை மயன் அமைத்தானென்ற பெயரே தவிர ஸகலவித யுக்திகளை யும் யோசனைகளையும் சொல்லிக் கட்டுவித்தவன் ராவணனே; அதுவும் ஸுலபமான காரியமல்ல. பூமியிலுள்ள அரண்மனைக்குள் இவைகளுக்கே ஸகல குணங்களும் விசேஷமாய்ப் பொருந்தி யிருந்தன.

மாருதி அங்கே ஸீதையைத் தேடிக்கொண்டு போகையில் ராவணனுடைய புஷ்பக விமானத்தைக் கண்டார். அது வேகமாய் ஆகாசத்தில் கிளம்பும் மேகத்தைப்போல் விஸ்தாரமாக, சுத்த மான ஸுவர்ணத்தால் செய்யப்பட்டுப் பார்ப்பவர்களை மயக்கும் படியான அழகுடன், ராவணனுடைய பலத்திற்கும் பிரதாபத்திற் கும் தகுந்த வாகனமாக இருந்தது. ஸ்வர்க்கமே ஸகல வைபவங் களுடன் அகஸ்மாத்தாய் பூலோகத்திற்கு வந்ததோ என்று சொல்லும்படி இருந்தது. உத்தமமான ரத்தினங்கள் இழைக்கப் பட்டு, காந்தியால் ஜ்வலித்தது. மலைச்சிகரத்தைப்போல் நானு விருக்ஷங்களின் புஷ்பங்களாலும், புஷ்பத் தூளிகளாலும் மூடப் பட்டிருந்தது. (புஷ்பகம் என்ற பெயர் கிடைத்ததற்கு இதுவே காரணம்.) மேகங்களுக்கு நடுவில் மின்னற்கொடிகள் பாய்வது

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri Harihara Collection, Sholinganallur, Chennai

போல் உத்தம ஸ்திரீகள் அங்குமிங்கும் ஸஞ்சரித்துக்கொண்டிருந்தார்கள். ராஜ ஹம்ஸங்களால் சுமக்கப்பட்டு ஸகல ஐசுவரியங்களும் நிறைந்திருக்கும் புண்ணிய புருஷர்களுடைய தேவ விமானங்களை ஒத்திருந்தது. அநேக தாதுக்களால் விளங்கும் பர்வத சிகரம் போலும் நவக்ரஹங்களாலும் நக்ஷத்திரங்களாலும் சந்திரனாலும் நானு வர்ணமுள்ள மேகக் கூட்டங்களாலும் பிரகாசிக்கும் ஆகாசத்தைப் போலும் கணக்கில்லாத ரத்தினங்களால் ஜ்வலித்தது. அதில் மலைகள் நிறைந்த தேசங்களும், மரங்கள் நிறைந்த மலைகளும், புஷ்பங்கள் நிறைந்த மரங்களும், சிறுஇதழ்கள் நிறைந்த புஷ்பங்களும் விசித்திரமாக எழுதப்பட்டிருந்தன. வெண்மையான கிருஹங்களும் அழகான புஷ்பங்களால் விளங்கும் தடாகங்களும், மெல்லிய தாதுக்களுடன் கூடின தாமரைகளும் சிரேஷ்டமான நானு வனங்களும் அங்கே எழுதப்பட்டிருந்தன. ரத்தினங்களுடைய காந்தியால் ஜ்வலித்துக்கொண்டு, லங்கையிலுள்ள உத்தம கிருஹங்களைக் காட்டிலும் மிகவும் பெரிதாய் விளங்கிற்று.

அங்கே ஹம்ஸம், மயில் முதலிய பக்ஷிகள், பவழங்களால் செய்யப்பட்ட மூக்குகளோடும் கால்களோடும் வெள்ளியால் அமைக்கப்பட்டு வைடூரியம் முதலிய ரத்தினங்களால் இழைக்கப்பட்டிருந்தன. இன்னும் அநேக பக்ஷிகள் புஷ்பம்போல் மெல்லிய சிறகுகளுடனும், விளையாடும்பொழுது தொங்கியும் வளைந்தும் இருக்கிற இறக்கைகளுடனும், பார்க்கையிலேயே காம விகாரத்தை உண்டுபண்ணக்கூடிய அழகுடனும் ஸுவர்ணத்தாலும் பவழத்தாலும் செய்யப்பட்டிருந்தன. பலவகை ஸர்ப்பங்கள் தங்கத்தாலும் வெள்ளியாலும் ரத்தினங்களாலும் செய்யப்பட்டிருந்தன. அழகான துதிக்கைகளையுடைய யானைகள் நீரோடைகளில் இறங்கித் தாமரை மலர்த் துளிகள் படிந்த தேகங்களுடன், கருநெய்தல் இலைகளைத் துதிக்கைகளால் தாமே வர்ஷிக்கும்படி செய்யப்பட்ட பிரதிமைகளும், அவைகளால் அபிஷேகம் செய்யப்பட்டு, மங்களகரமான திருக்கைகளுடன், ஒரு ஹஸ்தத்தில் தாமரை மலரைத் தரித்துக் கொண்டிருக்கும் ஜகன்மாதாவான மஹாலக்ஷ்மியின் விக்கிரகமும் வெகு சாதுர்யமாக அமைக்கப்பட்டிருந்தது. அழகிய புஷ்பங்களாலும் தளிர்களாலும் தழைத்துப் பரிமளம் வீசும் மலர் விருக்ஷத்தைப் போலும், மனோகரமான குகைகளால் விளங்கும் மஹா பர்வதமானது பனியும் குளிரும் நீங்கி வஸந்த காலத்தில் புஷ்பங்களாலும் பழங்களாலும் தளிர்களாலும் பிரகாசிப்பது போலும் இருக்கும் அந்த மங்களகரமான விமானத்தை ஆஞ்சநேயர் அடிக்கடிச் சுற்றிப் பார்த்து அடங்காத ஆச்சரியமடைந்தார்.

எல்லோராலும் பூஜிக்கப்பட்டு ராவணேசுவரனால் பரிபாலிக்கப்பட்ட அந்த லங்காபுரியை நன்ருகத் தேடியும், ராமச்சந்திர

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

னுடைய அநந்த கல்யாண குணங்களில் ஈடுபட்டு எப்பொழுதும் அவரையே தியானித்துக்கொண்டு ஸகல லோகங்களாலும் கொண்டாடப்படும் ஜானகியைக் காணுமல் மாருதி மிகுந்த துக்க மடைந்தார். அவர் ஆத்ம ஸ்வரூபத்தை நன்ருக அறிந்தவர்; ஸன்மார்க்கத்தில் நிலைபெற்றவர்; மஹாநுபாவர்; பிறர் அறிய முடியாத விஷயங்களையும் ப்ரத்யக்ஷமாய்ப் பார்க்கக்கூடிய சக்தியையுடையவர்; லங்கை முழுவதையும் வெகு ஜாக்கிரதையாகச் சுற்றிப் பார்த்தும் ஸீதையைக் காணுமல் பலபல யோசனை செய்து விசேஷ மனோவியாகுலத்தை அடைந்தார்.

ததஸ்ததா³ ப³ஹு᳚வித⁴ பா⁴விதாத்மந:
க்ருதாத்மநோ ஜநகஸு᳚தாம் ஸு᳚வர்த்மந:
அபஸ்யதோ ப⁴வத³தி து³க்கி²தம் மந:
ஸு᳚சக்ஷு᳚ஷ: ப்ரவிசரதோ மஹாத்மந: ॥ (17)

ஸர்க்கம் 8

புஷ்பக விமானம்

ஸ தஸ்ய மத்⁴யே ப⁴வநஸ்ய ஸம்ஸ்தி²தம்
மஹத்³ விமாநம் மணிவஜ்ர சித்ரிதம் ।
ப்ரதப்த ஜாம்பூ³நத³ ஜால க்ருத்ரிமம்
த³த³ர்ஶ வீர: பவநாத்மஜ: கபி: ॥ (17)

ராவண கிருஹங்களுக்கு நடுவில் நவமணிகள் இழைத்து உருக்கியோடவிட்ட தங்கத்தால் செய்யப்பட்ட பக்ஷிகளுடன் விளங்கும் ஒரு பெரிய விமானத்தை ஹநுமான் கண்டார். அது அளவுக்கு அடங்காதது; ஒப்பில்லாதது; விசுவகர்மா அதை நிர்மித்து 'நான் செய்த வஸ்துக்களுள் இதே மிகவும் சிலாக்கியமானது' என்று மெச்சினான். ஸகல திக்குகளிலும் தடையில்லாமல் செல்லக் கூடியது; தேவ விமானமானதால் பூமியில் படாமல் ஆகாச மார்க்கத்தில் நின்றுகொண்டிருந்தது; காந்தியால் சூரிய மார்க்கத்தைக் குறிக்கும் அடையாளம் போலிருந்தது. அதில் ஒவ்வொரு வேலையும் மிகுந்த பிரயத்தனத்தால் செய்யப்பட்டது; அதில் இழைக்கப்பட்ட ரத்தினங்கள் ஸகல விதத்திலும் ஒப்பில்லாதவை; அதிலுள்ள விசித்திர விசேஷங்கள் தேவர்களுடைய விமானங்களிலும் இல்லை; அதைப்பற்றிய ஒவ்வொரு விஷயமும் அபூர்வமானது. பூர்வ காலத்தில் ராவணன் கோகர்ண க்ஷேத்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Hariharan Collection, Sholinganallur, Chennai

திரத்தில் பிரஹ்மாவை குறித்துப் பதிஞயிர வருஷகாலம் கோ
மான தவம் செய்து தன் பராக்கிரமத்தால் குபேரனை ஜயித்து இந்
விமானத்தை அடைந்தான். அது பிரபுவின் அபிப்பிராயத்தை
அறிந்து, போகவேண்டிய இடத்திற்கு வாயுவேகமாய்ச் செல்லும்
அதில் பல விசித்திரமான மாளிகைகள் அமைக்கப்பட்டிருந்தன.
லோகத்தில் அழகான பதார்த்தங்கள் யாவற்றிற்கும் உபமா
மாக இருந்தன. பிறரால் தடுக்கமுடியாத வேகத்தை உடைய
மஹாத்மாக்களான பெரியோர்களுடைய ஆசிரமம்போல் பரிசுத்
மாயும், புண்ணிய கர்மங்களால் ஸம்பாதிக்கப்பட்ட ஸ்வர்க்க
தைப்போல் ஸகல போகங்களுக்கும் இருப்பிடமாகவும், லக்ஷ்
கடாக்ஷம் பெற்ற பாக்கியவான்களுடைய கிருஹங்களைப்போ
ஸகலஸம்பத்துக்களுடனும் கூடினதாகவும் ; அபூர்வமான செய்
களால் அழிவற்ற கீர்த்தியை ஸம்பாதித்த புண்ணியசா
களுடைய இருப்பிடங்களைப்போல் ஸகல லோகங்களும் கொ
டாடும்படியாகவும் மதுரமான கானம், நர்த்தனம், ரூபவதிகளா
ஸ்திரீகள், திவ்விய போகங்கள், அழகிய வாஸஸ்தலங்கள் முதலி
வைகளால் தேவேந்திரனுடைய அமராவதியைப் போலும் விள
கிற்று. ஒப்பற்ற வேகத்துடன் ஆகாசத்தில் தங்கியிருந்த
விசித்திரமான கொடுமுடிகளையுடைய மலைச் சிகரத்தைப்போ
விசித்திரமான பதார்த்தங்களுக்கு இருப்பிடமாகவும் விஸ்தா
மான கட்டுக்களுடையதாயும் மனோஹரமாயும் சரத் காலத்
சந்திரனைப்போல் நிர்மலமாயும் இருந்தது. குண்டலங்களா
அலங்கரிக்கப்பட்ட முகங்களுடனும் பருத்த சரீரங்களுடனு
ஆகாசத்தில் அதிவேகமாய் ஸஞ்சரிக்கும் ராக்ஷஸர்களைப்போலு
வட்டமாயும் கோணலாயும் அகலமாயும் இருக்கின்ற கண்க
யுடைய பூத கணங்களைப் போலும் அநேகமாயிரம் பொம்மைக
மஹா சாதுர்யமாய் அதில் செய்து வைக்கப்பட்டிருந்தன. ம
விருக்ஷங்களடர்ந்த வனத்தில் நாஞ வர்ணமுள்ள புஷ்பங்களா
பழங்களாலும் துளிர்களாலும் விளங்கும் வஸந்த காலத்திற்கு
நதிகள், நீரோடைகள், தென்றல், வண்டுகள், மயில்கள், குயில்க
மான் முதலிய மிருகங்கள், அழகிய ஸ்திரீ புருஷர்கள் முதலிய
களால் வஸந்தருதுவைக் காட்டிலும் விசேஷ அழகா
பிரகாசிக்கும் அந்தப் புஷ்பக விமானத்தை வாநர சிரேஷ்டரா
ஹநுமார் கண்டு ஆச்சரியமடைந்தார்.

வஸந்த புஷ்போத்கர சாரு த^{3}ர்ஶநம்
வஸந்த மாஸாத^{3}பி காந்த த^{3}ர்ஶநம்।
ஸ புஷ்பகம் தத்ர விமாந முத்தமம்
த^{3}த^{3}ர்ஶ தத்^{3} வாநர வீர ஸத்தம:॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸர்க்கம் 9

ராவணனுடைய அந்தப்புரம்

தஸ்யாலய வரிஷ்ட²ஸ்ய மத்⁴யே விபுல மாயதம் ।
த³த³ர்ஶ ப⁴வநஸ்ரேஷ்ட²ம் ஹநூமாந் மாருதாத்மஜ: ॥ (1)

அந்த உத்தமமான விமானத்தின் நடுவில் மாருதி ஒரு சிறந்த மாளிகையைக் கண்டார். அது ராவணன் வசிக்குமிடம். ஒரு யோஜனை நீளம், அரையோஜனை அகலம் விஸ்தீர்ணமுள்ள தாய் அநேக உப்பரிகைகளுடன் விளங்கிற்று அங்கெல்லாம் ஒப்பில்லாத அழகையுடைய ஜனக புத்திரியைத் தேடிக்கொண்டு மாருதி திரிந்து, பிறகு ராக்ஷஸர்களுடைய நேர்த்தியான கிருஹங்களைப் பார்த்துக்கொண்டே ராவணனுடைய கிருஹத்திற்கு வந்து சேர்ந்தார். மூன்று நான்கு தந்தங்களையுடைய உத்தமமான யானைகள் அங்கங்கே கட்டப்பட்டிருந்தன. ஆயுதபாணிகளான ஸேவகர்கள், நெருங்கியிராமல், நான்கு புறத்திலும் அதைச் சூழ்ந்து காத்துக் கொண்டிருந்தார்கள். அங்கே ராவணனுடைய பத்தினிகளான ராக்ஷஸ ஸ்த்ரீகளும், திக்விஜயம் செய்தபோது ஜயித்த அரசர்களுடைய கிருஹங்களிலிருந்து பலாத்காரமாய்க் கொண்டுவரப்பட்ட ராஜ கன்யைகளும் தூங்கிக்கொண்டிருந் தார்கள். இப்படித் திமிங்கிலம், முதலை, மீன் முதலிய ஜலஜந்துக் களால் நிறைந்து, மலைகளைப் போன்ற அலைகள் பெருங்காற்றால் அடிக்கப்பட்டுக் கொந்தளிக்க, நீருண்ட மேகங்களைப்போல் கர்ஜித்துப் பொங்கிக் கொதிக்கும் மஹா ஸமுத்திரத்தைப் போலி ருக்கும் அந்த ராவண கிருஹம், கோரரூபிகளாய் ஸஹிக்கமுடியாத தேஜஸையுடைய ராக்ஷஸர்களால் நிறைந்திருப்பதை ஆஞ்ஜ நேயர் கண்டார். ஸகல ஐசுவரியங்களுக்கும் அதிபதியான குபேர னுடைய செல்வமும், தேவராஜனை மஹேந்திரனுடைய வைப வமும், பகவானுக்கு நித்யவாஹனமாக இருக்கப்பெற்ற கருட னுடைய அபார தேஜஸும் எல்லாம் சேர்ந்து எப்பொழுதும் ராவணனுடைய மாளிகையில் குறையாமலிருந்தன. லங்கையில் வசிக்கும் ராக்ஷஸர்களின் கிருஹங்களில், குபேரன், யமன், வருணன் முதலியவர்கள் அநுபவிக்கும் செல்வமும் ஐசுவரியமும் போகங்களும் அவைகளுக்கு மேலானவைகளும் காணப்பட்டன. பூர்வத்தில் விசுவகர்மா பிரஹ்மாவிற்காக அந்த விமானத்தைத் தெய்வ லோகத்தில் ஸிருஷ்டித்தான். பிறகு குபேரன் பிரஹ்மா வைக் கோரமான தவத்தால் ஸந்தோஷப்படுத்தி அதை அடைந் தான். ஸகல ரத்தினங்களாலும் அலங்கரிக்கப்பட்ட அந்த விமானத்தை ராவணன், குபேரனைத் தன் பராக்கிரமத்தால்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஜயித்து அவனிடத்திலிருந்து அபகரித்தான். தங்கத்தாலு வெள்ளியாலும் விசித்திரமாய்ச் செய்யப்பட்ட ஸ்தம்பங்களி செந்நாய்களைப் போன்ற பிரதிமைகள் அமைக்கப்பட்டிருந்தன அந்த விமானம் காந்தியால் ஜ்வலிப்பதுபோல், மேருமந்தரம் முதலிய பர்வதங்களுக்கு ஸமானமாய் ஆகாசத்தை அளாவிற் சிறு கட்டடங்கள் மங்களகரமான ரூபங்களுடன் மறைவா கட்டப்பட்டிருந்தன. ஸூரியன், அக்னி முதலியவர்களுடை காந்தியும் இதன் காந்திக்கு ஈடல்ல. விசுவகர்மா செய்த அ வஸ்துக்களில் இதே ஸகல விதத்திலும் சிரேஷ்டமானது. தங் படிக்கட்டுகளையுடைய அநேக அழகான மேடைகளாலும், தங் ஸ்படிகம் முதலிய அபூர்வ வஸ்துக்களால் நிர்மிக்கப்பட்ட ஜன்ன களாலும், இலைக்கதவு ஜன்னல்களாலும், இந்திரநீலம் மஹாநீ முதலிய அபூர்வமான மணிகளால் இழைக்கப்பட்ட திண் களாலும், பவழம் ஒப்பில்லாத முத்துக்கள் விலையற்ற ரத்தினங் முதலியவைகளால் அலங்கரிக்கப்பட்ட தரைகளாலும், நேர்த் யான பரிமளத்துடன் பால ஸூரியனைப்போல் சிவந்த சந்தன தாலும், உதய பர்வதத்திலிருந்து கிளம்பும் ஆதித்தியனைப்போ ஜ்வலிக்கும் அந்தப் புஷ்பக விமானத்தில் ஆஞ்ஜநேயர் ஸீ யைத் தேட உத்தேசித்து ஏறினார். (மஹா நீலமென்பது ஸிம்ஹ த்வீபத்தில் உண்டாகும் என்று ரத்தின சாஸ்திரம் கூறுகிறது.)

அங்குள்ள பலவித பானங்களிலிருந்தும் பக்ஷயங்களிலிருந் அன்னங்களிலிருந்தும் கிளம்பும் வாஸனை நான்கு பக்கத்தி பரவிற்று. அதை வாயு பகவான் மனுஷ்ய ரூபமெடுத்து வந் போல் ஆஞ்ஜநேயர் முகர்ந்தார். தூர தேசத்திலிருந்து வந்தவ அவனுடைய பிரியமான பந்துக்கள் அன்புடன் அழைப்பதுபோ ராவணனுடைய போஜன கிருஹத்திலிருந்து வீசும் பரிமளமா ஆஞ்ஜநேயரை 'ராவணன் இருக்குமிடத்திற்கு வா' என் அழைப்பது போலிருந்தது. அந்த வழியாகவே சென்று ராக்ஷஸே வரனுடைய பாணசாலையைக் கண்டார். அது அதிகப் பிரியமா உத்தம ஸ்த்ரீயைப் போல் ராவணனுக்கு ஸந்தோஷத்தை கொடுத்தது. நவரத்தினங்களிழைத்த படிக்கட்டுகள் இருந் சிலவிடங்கள் ஸ்படிகத்தாலும் தந்தத்தாலும் அமைக்கப் டிருந்தன. சிலவிடங்களில் பொன் வெள்ளி முதலிய வஸ் களால் அலங்கரிக்கப்பட்ட ரத்தின ஸ்தம்பங்கள் அமைக்கப் டிருந்தன. மேடுபள்ளமில்லாமல் இழைக்கப்பட்டுச் சித்திர வே களால் அலங்கரிக்கப்பட்ட மிகவும் உயரமான இன்னும் அ ஸ்தம்பங்களால் அந்த விமானம் இறக்கைகளை விரித்துக்கொண் ஆகாசத்தில் பறப்பதுபோலிருந்தது. தரையில் விரிக்கப்பட் கம்பளத்தில் மலை, ஸமுத்திரம், நதி, பள்ளத்தாக்கு, மைதான விருக்ஷம், வநம், நகரம், கிராமம் முதலியவைகளுடன் பூலோ

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Harihan Collection, Sholinganallur, Chennai

சித்திரரூபமாய் வேலை செய்யப்பட்டிருந்தது. அதைப் பார்க்கையில் அநேக ராஜாக்களாலும் சக்கரவர்த்திகளாலும் ஆளப்பட்ட ராஜ்யங்களெல்லாம் அந்த விமானத்தில் இருப்பதுபோல் தோன்றிற்று. அநேக உத்தம ஜாதி பக்ஷிகள் கொழுப்படைந்து கூவிக் கொண்டிருந்தன. சந்தனம், அகல், பன்னீர், புனுகு, ஜவ்வாது, குங்குமம், அத்தர் முதலியவைகளின் பரிமளம் வீசிக் கொண்டிருந்தது. விலையற்ற ஆஸனங்களும் விரிப்புகளும் நிறைந்திருந்தன. சிலவிடங்கள் அகிற்கட்டையின் தூபத்தால் கருத்திருந்தன. சிலவிடங்கள் ராஜ ஹம்ஸங்களைப்போல் வெண்மையாக இருந்தன. பலவித புஷ்பங்கள் எங்கும் வாரி இறைக்கப்பட்டிருந்தன. வஸிஷ்ட மஹரிஷியிடத்திலிருக்கும் தோஷமற்ற காமதேனுவைப்போல் அந்த விமானம் ஸகல மனோரதங்களையும் பூர்த்தி செய்தது. மனத்துக்கு அளவற்ற சந்தோஷத்தைக் கொடுத்து துக்கத்தை நாசம் செய்து ஸகல ஸம்பத்தையும் தேககாந்தியையும் உண்டு பண்ணிற்று. பஞ்சேந்திரியங்களுக்கும் அவைகளுக்கும் பிரியமான விஷய போகங்களைக் கொடுத்துப் பெற்ற தாயைப்போல் திருப்தி செய்யும் அந்த விமானத்தைக் கண்டு ஹநுமான் பிரமித்து, "இது யாக யக்ஞங்களை ஸம்பூர்ணமாய் நடத்திய புண்யவான்கள் அடையும் ஸ்வர்க்க லோகமோ! தேவகணங்கள் வசிக்கும் தேவலோகமோ! தேவ ராஜாவான மஹேந்திரனுடைய ராஜதானியான அமராவதியோ! கடின தபஸால் மஹாத்மாக்கள் அடையும் பிரஹ்மலோகமோ!" என்று திகைத்து நின்றார். அங்கே தங்க ஸ்தம்பங்களில் பிரகாசிக்கும் ரத்தின தீபங்கள் சுத்தமான வத்திகளுடனும் தெளிவான தைலங்களுடனும் அசையாமல் கொழுந்துவிட்டெரிந்தன. அதைப் பார்க்கையில், கேதேர்ந்த சூதர்களால் ஜயிக்கப்பட்ட ஸாமான்ய சூதர்கள், அவர்களை மறுபடியும் ஜயித்துத் தாங்களிழந்த திரவியங்களை அடைவதற்கு ஆழ்ந்த யோசனை செய்து கொண்டிருப்பதைப்போல் தோன்றிற்று. கணக்கில்லாத, தீபங்களுடைய பிரகாசத்தையும் பிறரால் அஸாத்தியமான தவத்தைச் செய்து வேதவேதாங்கங்களைக் கரைகடந்து நித்திய நைமித்திக கர்மங்களைக் குறைவில்லாமல் நடத்திவந்து ஸகல லோகங்களும் பெயரைக் கேட்டவுடனே நடுங்கும் பிரதாபத்தையுடைய ராவணேசுவரனுடைய ஸஹஜமான தேஜஸையும், அவனுடைய பத்தினிகள் அணிந்திருக்கும் ஆபரணங்களுடைய காந்தியையும் கண்டு, ஹநுமான், இந்த விமானம் நெருப்புப்பற்றி எரிகிறதோ!" என்று சந்தேகித்தார்.

அங்கே விரிந்திருக்கும் கம்பளங்களில் அநேக உத்தம ஸ்த்ரீகள் நானாவர்ணமுள்ள வஸ்திரங்களையும் மாலைகளையும் தரித்துக் கொண்டு பற்பல வேஷங்களால் அலங்கரிக்கப்பட்டு, கிரீடை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V.Hariharan Collection, Sholinganallur, Chennai

செய்கதாலும் மதுபானத்தாலும் அர்த்தராத்திரியில் அயர்ந்
நித்திரை செய்வதைக் கண்டார். பகற்காலங்களில் அந்தப்புர
தில் சப்திக்கும் ஆபரணங்கள், அர்த்த ராத்திரியில் சகல ஸ்த்
களும் சோர்ந்து தூங்குவதால் கொஞ்சம்கூட சப்தமற்றிருப்
தைக் கண்டு, மாருதி, 'இது ராத்திரி காலத்தில் தூங்கும் ஹம்ஸ
களாலும் அவைகளின் மேலிருக்கும் வண்டுகளாலும் பிரகாசிக்கு
தாமரையோடையோ!" என்று நினைத்தார். அந்த ஸ்த்ரீக
தாமரை மலரின் பரிமளத்தைப்போல் ஸுகந்தம் வீசும் முக
களுடனும், மறைக்கப்பட்ட பற்களுடனும், மூடின கண்
ளுடனும் நித்திரை செய்துகொண்டிருந்தார்கள். (நான்கு ஜா
ஸத்ரீகளில் இவர்கள் உத்தமமான பத்மினீ ஜாதியைச் சேர்ந்
வர்கள். தூங்கும்போது பற்கள் வெளிப்படுவதும், கண்கள் பா
திறந்திருப்பதும், குறட்டை விடுவதும், வாயிலிருந்து துர்க்கந்
மான காற்று வீசுவதும் தாழ்ந்த ஜாதி ஸ்த்ரீகளின் லக்ஷண
தூங்கும்பொழுது அங்கங்கள் அசையாமலிருப்பதும், வாய்மூ
யிருப்பதும், முகம் பிரஸன்னமாயிருப்பதும், மிருதுவாய் மூச்சு மூ
வதும், சுவாசம் ஸுகந்தமாயிருப்பதும், ஸ்வப்னவஸ்தையி
பிதற்றுமலிருப்பதும், உத்தம ஸ்த்ரீகளின் லக்ஷணங்கள்.) உத
காலத்தில் தாமரைப் புஷ்பங்கள். ஸூரியக் கிரணங்களால் எழு
பப்பட்டு மலர்ந்து எல்லோருக்கும் ஆநந்தத்தைக் கொடுத்
ஸூரியன் அஸ்தமித்தவுடன் இதழ்கள் மூடி நித்திரை செய்வ
போல, அந்த ஸ்த்ரீகள் தங்கள் நாயகனுடைய கடாக்ஷம் த
ளுக்குக் கிடைக்கவேண்டுமென்று காலையில் அவனுக்கு முன்
எழுந்திருந்து காத்துக்கொண்டிருந்து, பகலெல்லாம் அவனுட
ஆநந்தமாய்க் காலத்தைக் கழித்து, ராத்திரியில் அவன் நித்தி
செய்தபிறகு களைப்பால் தாங்களும் அயர்ந்து நித்திரை செய்த
கள். சிரமத்தால் வஸ்திரங்கள் நழுவ, ஸ்வேச்சையாய் நித்தி
செய்யும் அந்த ரூபவதிகளைக் கண்டும், ஆஞ்ஜநேயருடை
இந்திரியங்கள் கொஞ்சம்கூடக் கலங்காமல் விசேஷ காந்தியுட
விளங்கினார். "அழகிலும் நிறத்திலும் பரிமளத்திலும், ஆநந்த
தைக் கொடுப்பதிலும் இந்த ஸ்த்ரீகளுடைய முகங்கள் கம
களைப் போலிருக்கின்றன. தேனைக் குடித்து மதங்கொண்
வண்டுகள் இவைகளைப் புஷ்பமென்றெண்ணி அடிக்கடி வ
மொய்க்கும் என்பதற்கு ஸந்தேகமில்லை" என்று மாருதி எண்
ணார். கருத்துச் சுருண்ட மயிர்களுடனும் மின்னற்கொடிபோ
விளங்கும் அங்கங்களுடனும் நித்திரை செய்யும் ஸ்த்ரீகளா
நிறைந்த ராவணனுடைய அந்தப்புரம், சரத்காலத்தில் நக்ஷ
திரங்கள் நுறைந்த நிர்மலமான ஆகாசம்போல் பிரகாசித்த
அவர்களுக்கு நடுவில் நித்திரை செய்யும் ராவணன் நக்ஷத்
மண்டலங்களுக்கு நடுவில் பௌர்ணமியில் பூர்ண கலைகளுட
விளங்கும் சந்திரனைப் போல் தோன்றினான். ஒப்பில்லா

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

புண்ணிய கர்மங்களால் நக்ஷத்திரங்களாய்ப் பிரகாசித்து, தாங்கள் செய்த புண்ணியம் முடியும்போது மிகுதியுள்ள ஸ்வல்ப புண்ணி யத்தால் பூமியில் நழுவி விழுந்த பாக்கியசாலிகளோ என்று ஆஞ்ஜநேயர் அந்த ஸ்த்ரீகளைக்கண்டு பிரமித்தார். மங்களகர மான பிரகாசத்தையுடைய பெரிய நக்ஷத்திரங்களைப்போல் அந்த ஸ்த்ரீகளுடைய தேக காந்தியும் ரூபமும் தெளிவும் ஸ்பஷ்டமாய் விளங்கின. மதுபானத்தாலும விளையாட்டுகளாலும் ரதிக்ரீடை யாலும் பருத்த புஷ்பமாலைகளும் ஹாரங்களும் கலைந்து நழுவி ஆபரணங்கள் சிதறி, சிரமத்தால் களைத்து முகம் வாடி அயர்ந்து தூங்கினார்கள்.

சில உத்தம ஸ்த்ரீகளுடைய நெற்றிகளில் திலகங்கள் அழிந் திருந்தன. சில ஸ்த்ரீகளின் சிலம்புகள் கழன்றிருந்தன. சில ருடைய முத்துஹாரங்கள் பக்கங்களில் நழுவிக் கிடந்தன. முத்து ஹாரங்களும், அரைநூல் மாலைகளும் அறுந்து, வஸ்திரங்கள் நழுவி, ரதிசிரமத்தால் பிரக்ஞையற்று நித்திரைசெய்யும் அந்தப் பெண்கள் வெகுதூரம் ஓடிக் களைத்து சிரம நிவிருத்திக்காகப் பூமியில் மணலில் விழுந்து புரளும் பெண்குதிரைகளைப்போல் காணப்பட்டார்கள். சிலர் நேர்த்தியான குண்டலங்களைத் தரித்திருந்தார்கள்; சிலரு டைய மாலைகள் வாடி அறுந்திருந்தன. மஹாபலவானான ராவண னால் அநுபவிக்கப்பட்டு, வனத்திலுள்ள புஷ்பக்கொடிகள் மத யானையால் மிதிக்கப்பட்டதுபோல் அவர்கள் காணப்பட்டார்கள். சிலருடைய ஸ்தனங்களுக்கு நடுவில் ஸூரிய சந்திரர்களைப்போல் ஜ்வலிக்கும் முத்துஹாரங்கள் தாமரையோடையில் இரண்டு புஷ் பங்களுக்கு நடுவில் நித்திரை செய்யும் ராஜ ஹம்ஸத்தைப்போல் பிரகாசித்தன. சிலருடைய மார்பில் விளங்கும் வைடூரியமாலை கள் ஹம்ஸங்களைப்போலும் தங்கச்சரடுகள் சக்ரவாக பக்ஷிகள் போலும் தோன்றின. சரத்காலத்தில் தெளிவாக ஓடும் நதிகளைப் போன்ற அந்த ஸ்திரீகளுடைய பின்பாகங்களே மணற்குன்றுகள்; ஹாரங்களே ஹம்ஸங்கள்; ஸ்தனங்களே சக்ர வாகங்கள்; நேத்தி ரங்களே கருநெய்தல் புஷ்பங்கள்; உதடுகளே இளந்தளிர்கள்; பாதங்களே தாமரைகள்; கழுத்துகளே சங்குகள்; கண்களே மீன் கள்; நாபிகளே சுழல்கள்; கீர்த்திக்குக் காரணமான தேக காந்தியே இரு கரைகள்; சிருங்கார சேஷ்டைகளே முதலைகள்; ஆபரணங்களே மலர்ந்த தாமரைகள்; சதங்கைகளே மொட்டு கள். சிலருடைய மிருதுவான அங்கங்களிலும் ஸ்தனங்களுடைய நுனிகளிலும் உள்ள சுபமான ஆபரணங்கள், அவர்களிடத்தில் ஆசை கொண்ட காமுகர்களைப்போல் தோன்றின. சிலருடைய முகங்களிலிருந்து வீசும் சுவாஸக் காற்றால் அசைக்கப்பட்ட வஸ்திரங்களின் நுனிகள் அடிக்கடி முகங்களில் தாக்கின. அவை மேலே எழும்பி விழும்பொழுது விசித்திர வர்ணங்களுடைய கொடி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

களைப்போல் காணப்பட்டன. அங்கே நித்திரை செய்துகொண்டிருந்த சில காந்திமதிகளின் மூச்சுக் காற்றின் வேகத்தால் அவர்கள் தரித்த குண்டலங்கள் மெள்ள மெள்ள அசைந்தன. ஸ்வபாவமாகவே அவர்களுடைய சுவாஸம் ஸுகந்தமாக இருக்கும்; சர்க்கரை கலந்த மதுவின் வாசனையால் அது இன்னும் பரிமளமாகவும் சுகமாகவும் ராவணன்மேல் வீசிற்று. சிலர் பான மயக்கத்தாலும், நித்திரையாலும் தேக ஸ்வாதீனமற்றுத் தூங்கும் பொழுது, தங்களுக்கருகில் படுத்திருக்கும் சக்களத்திகளுடைய முகங்களைத் தங்கள் பிரிய நாயகனான ராவணனுடைய முகமென்றெண்ணிக் காம பரவசர்களாய் அடிக்கடி முத்தமிட்டார்கள். அந்த ஸ்த்ரீகளும் ராவணனிடத்திலுள்ள ஆசையால் அவன் முத்தமிடுகிறானென்றெண்ணி மறுபடியும் முத்தம் கொடுத்தார்கள். இப்படி நாயகனிடத்திலுள்ள ஆசையால் சக்களத்திகள் ஒருவருக்கொருவர் தெரியாமல் தங்களிஷ்டத்தையே பூர்த்தி செய்து கொண்டார்கள். சிலர் ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட வஸ்த்ரங்களையும், சிலர் பீதாம்பரங்களையும் தலையணையாக வைத்துக் கொண்டு தூங்கினார்கள். பான மயக்கத்தாலும் ஒருவருக்கொருவர் ஸ்நேஹ விசேஷத்தாலும் ஒரு ஸ்த்ரீ மற்றொரு ஸ்த்ரீயின் மார்பில் தலைவைத்து நித்திரை செய்தாள். அவளுடைய தோளில் தலை வைத்து மற்றொருத்தி நித்திரை செய்தாள். ஒருத்தி தன் தோழியின் மடியில் தலை வைத்து நித்திரை செய்தாள். அவளுடைய புஜங்களில் தலை வைத்து இரண்டு ஸ்த்ரீகள் நித்திரை செய்தார்கள். தொடைப்பக்கம் இடுப்புப் பின்பாகம் முதலிய அங்கங்கள் ஒன்றோடொன்று பற்றி, இப்படி நித்திரை செய்யும் அந்தப் பெண்கள், புஜங்களாகிற நூலால் தொடுக்கப்பட்டு, மதுவின் பரிமளத்துடன் சுருண்ட தலைமயிரென்ற வண்டுகள் மொய்க்கும் புஷ்பமாலையைப்போல் விளங்கினார்கள். ராவணனுடைய பத்தினிகளால் நிறைந்த அந்தப்புரம் வசந்த ருதுவில் ஒரு புஷ்பவனத்தைப்போல் தோன்றிற்று. அவர்களுடைய கைகளே கொடிகள்; தோள்களே தண்டுகள்; விரல்களே தளிர்கள்; இடுப்பில் வஸ்திரத்தின் முடிகளே புஷ்பக் கொத்துகள்; கருத்துச் சுருண்ட தலைமயிரே வண்டுகள்; மூச்சுக்காற்றே தென்றல்; இப்படித் தூக்கக் கலக்கத்தால் ஒருவர் மேலொருவர் கைகால்களைப் போட்டுக்கொண்டு காற்றால் ஒன்று சேர்க்கப்பட்ட புஷ்பக் கொடிகள்போல் விளங்கினார்கள். அந்தக் கூட்டத்தில் ஒவ்வொருத்தியின் ஆபரணங்களையும் அவயவங்களையும் தனித்தனியாய் அறிவது அசாத்தியம்.

ராவணன் விழித்துக்கொண்டிருக்கையில் அவர்களைப் பிரித்துப் பார்ப்பது அஸாத்தியமாகையால், அங்குள்ள ரத்தின ஸதம்பங்களில் வைக்கப்பட்ட நானா வர்ணமுள்ள ரத்தின தீபங்களும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அவன் தூங்கின பிறகு, மதுபானத்தாலும் சிரமத்தாலும் நித்திரையாலும் வஸ்திரங்கள் ஆபரணங்கள் நழுவினதை அறியாமல் தூங்கும் ராவணபத்தினிகளை இமைகொட்டாமல் ஆசையுடன் பார்ப்பதுபோல், அசைவற்றுக் கொழுந்துவிட்டெரிந்தன. ராஜ ரிஷிகள், பிதிருக்கள், தைத்தியர்கள், கந்தர்வர்கள், ராக்ஷஸர்கள் முதலியவர்களுடைய கன்யைகள் ராவணனிடத்தில் ஆசை வைத்து வந்தவர்களே. யுத்தத்தில் பிரியமுள்ள ராவணனுல் சிலர் தங்களுடைய பந்துக்களை ஜயித்துக்கொண்டு வரப்பட்டவர்கள். சிலர் அவனுடைய அழகிலும் தேஜஸிலும் ஐசுவரியத்திலும் பராக்கிரமத்திலும் ஈடுபட்டு வலுவில் ஆசை மீறி அவனை வந்தடைந்தவர்கள். அவர்களில் ராவணனுடைய பராக்கிரமத்தால் மாத்திரம் கட்டுப்பட்டிருந்தவர்கள் ஒருவருமில்லை. எல்லோரும் அவனிடத்தில் மோஹித்தவர்களே. ஸ்த்ரீ ரத்தினமான ஜானகியைத் தவிர மற்ற யாவரும் ராவணனை விரும்பி வந்தவர்கள். வேறொருவனுல் விவாஹம் செய்யப்பட்டவர்களுமல்லர்; உத்தம குலத்தில் பிறந்து உத்தமமான பத்மினி ஜாதி ஸ்திரீகளல்லாதவர்கள் அங்கில்லை; ஸகல சுப லக்ஷணங்களாலும் அமைந்திராதவர்கள் அங்கில்லை; ஸர்வாபரணங்களாலும் அலங்கரிக்கப்படாதவர்கள் அங்கில்லை; ராவணனுக்கு ஸமஸ்த உபசாரங்களையும் பரம ப்ரீதியுடன் செய்யாதவர்கள் அங்கில்லை; அவனுக்குத் தகுந்த தேகபலம் இல்லாதவர்கள் அங்கில்லை; அவனுடைய அன்பிற்குப் பாத்திரமில்லாதவர்கள் அங்கில்லை.

ஹநுமான் மஹா புத்திமானுக இருந்தாலும் அவர்களைப் பார்த்து ஜாதி ஸ்வபாவத்திற்குத் தகுந்த விபரீத புத்தியை அடைந்து "இந்த ஸ்த்ரீகளையெல்லாம் கன்யைகளாக இருக்கும்பொழுதே ராவணன் கொண்டுவந்து விவாஹம் செய்ததுபோல், ஸீதையையும் ராகவன் பாணிக்கிரஹணம் செய்வதற்குமுன் கொண்டுவந்து விவாஹம் செய்திருந்தால் அவனுக்கு க்ஷேமமுண்டாகியிருக்குமே" என்று அகஸ்மாத்தாக எண்ணினர்.

பிறகு அந்த ஹநுமான், "ஸீதையைப்போன்ற பதிவிரதை இந்த லோகத்திலுமுண்டோ! இந்த ராவணன் பிரம்ம தேவருடைய குலத்தில் பிறந்தும் அவளை அபகரித்து மஹா பாபத்தை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சம்பாதித்தான்” என்று மிகவும் துக்கத்தை அடைந்து, “அக்னியையும் கொளுத்தும்படியான ஸீதையின் பதிவிரதா தர்மத்திற்கு என்றைக்காவது பங்கம் வருமோ? வீணான அபவாதத்தைச் சுமத்தினதே தவிர வேறென்ன?” என்று எண்ணினார்.

புநஶ்ச ஸோசிந்தய த³ார்த ரூபோ
த்⁴ருவம் விஶிஷ்டா கு³ணதோ ஹி ஸீதா ।
அத²ாயமஸ்யாம் க்ருதவாந் மஹாத்மா
லங்கேஶ்வர: கஷ்ட மநார்ய கர்ம ॥

ஸர்க்கம் 10

ராவணனுடைய அந்தப்புரம்

தத்ர தி³வ்யோபமம் முக்²யம் ஸ்ப²டிகம் ரத்நபூ⁴ஷிதம் ।
அவேக்ஷமாணோ ஹநுமாந் த³த³ர்ஶ ஶயநாஸநம் ॥

அவ்விடத்தில் ஸ்படிகத்தால் செய்யப்பட்டு ரத்தினங்கள் இழைத்துத் தேவேந்திரனுடைய சயனம் போன்ற ஒரு மஞ்சத்தைக் கண்டார். அதற்கு நான்கு புறத்திலும் தந்தத்தாலும் தங்கத்தாலும் அலங்கரிக்கப்பட்ட கால்களுடன் வைடூரியங்கள் பதித்து விலையற்ற விரிப்புகளால் மூடப்பட்ட அநேக ஆசனங்கள் போடப்பட்டிருந்தன. அங்கே ஒரு பக்கத்தில் முத்து ஹாரங்களாலும் ரத்தின மாலைகளாலும் அலங்கரிக்கப்பட்டுப் பூர்ண சந்திரனைப் போல் வெண்மையான ஒரு குடையைக் கண்டார். உள்ளே ஓடவிட்ட ஆயிரத்தெட்டு மாற்று அபரஞ்சித் தங்கத்தால் செய்யப்பட்ட அந்த மஞ்சம் ஸூரியனைப்போல் ஜ்வலித்தது. அசோகம் முதலிய மாலைகள் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தன. மெல்லிய ரோமங்களையுடைய ஆடு முதலிய மிருகங்களின் தோல்களும், விலையுயர்ந்த சால்வைகளும், விரிப்புகளும், பஞ்சு மெத்தைகளும் பரப்பப்பட்டிருந்தன; நானா வர்ணமுள்ள புஷ்பங்கள் வாரி இறைக்கப்பட்டிருந்தன; குங்குமம், கஸ்தூரி, ஜவ்வாது, புனுகு, அத்தர், அகில், சந்தனக்கட்டை முதலிய வாசனைத் திரவியங்களின் பரிமளம் நிறைந்திருந்தது. வெண்சாமரங்கள்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit SV Ramanan Collection, Sholinganallur, Chennai

கையிலேந்தி வீசிக்கொண்டிருக்கும் பெண் பிரதிமைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

அதில் மழைக்காலத்தில் நீருண்ட மேகம்போல் கருத்த தேகத்துடனும், யானைத் துதிக்கைகளைப்போல் பருத்த நீண்டு உருண்ட கைகளுடனும், நெருப்புப் பொறிபோல் சிவந்த நேத்திரங்களுடனும், ஸூரியனைப்போல் ஜ்வலிக்கின்ற குண்டலங்களால் விளங்கும் முகத்துடனும், பிரதாப லங்கேசுவரன் நித்திரை செய்து கொண்டிருந்தான். அவன் தரித்த ஒப்பற்ற பீதாம்பரம் கருத்த மேகங்களுக்கு நடுவில் பாயும் மின்னற்கொடிபோல் பிரகாசித்தது. மார்பிலும் கைகளிலும் பூசப்பட்ட உத்தமமான சிவப்புச் சந்தனம் ஸந்தியாகாலத்தில் மின்னற் கொடிகளுடன் விளங்கும் சிவந்த மேகம்போல் காணப்பட்டது. சிரேஷ்டமான ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தான். இஷ்டமான ரூபத்தை எடுக்கக்கூடியவனானதால் தன் பத்தினிகள் கண்டு மோகிக்கும்படி மன்மதனைப்போல் ரூபம் தரித்திருந்தான். ராத்திரியில் நெடுநேரம் க்ரீடித்ததாலும் மதுபானத்தாலும் களைத்து அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். ராக்ஷஸ ஸ்த்ரீகளுக்குப் பிரியநாயகனும் ராக்ஷஸர்களுக்கு சகல க்ஷேமங்களையும் கொடுப்பவனுமிருக்கும் ராவணனைப் பார்த்து, "மரங்கள், புதர்கள், காடுகள் நிறைந்த மந்தரபர்வதம் அசைவற்று நித்திரை செய்கிறதோ!" என்று மாருதி நினைத்தார். இப்படி சூரியனைப்போலும் அக்கினியைப் போலும் பிரகாசிக்கும் இந்த மஞ்சத்தில் மஹா ஸர்ப்பத்தைப் போல் பெருமூச்சு விட்டுக்கொண்டு நித்திரை செய்யும் ராவணனைப் பார்த்து, "ராமபத்தினியைத் தேடிவந்த நான் அவளைப் பார்ப்பதற்குமுன் அவளை அபகரித்த மஹா பாபியைப் பார்க்கும்படி நேரிட்டதே" என்று துக்கமடைந்தார். பயம் கொண்டவன் பிசாசம் முதலிய துஷ்ட ஜந்துக்களுக்கெதிரில் நிற்கமுடியாமல் ஒதுங்குவதுபோல், "இந்த மஹா பாபியின் சமீபத்திலிருப்பது தகாது" என்று சற்றுப் பின்வாங்கினார். பிறகு படிக்கட்டுகளின் வழியாய் வேறொரு பக்கத்திலுள்ள ஒரு மேடையின்மேலேறி அந்த ராக்ஷஸேசுவரனை உற்றுப் பார்த்தார். யானைத் துதிக்கைகளைப் போன்ற புஜங்களுடனும் பரிமளம் வீசுகிற சந்தனப் பூச்சுகளுடனும் விளங்கும் அந்த தசமுகன் படுத்திருக்கும் மஞ்சமானது மதஜலத்தைப் பெருக விட்டுக்கொண்டிருக்கும் யானையுடன் கூடின மலையருவிபோல் தோன்றிற்று. அவனுடைய புஜங்கள் முழுங்கால்வரையில் நீண்டு தெய்வலோகத்தில் நாட்டிய இந்திரத்வஜங்கள் போல் விளங்கின; உருக்கி அடித்த இருப்புலக்கைகள் போல் கடினமாய் யானைகளின் துதிக்கைகளைப்போல் அடி பெருத்து வரவரச் சிறுத்திருந்தன; ஒன்றிற்கொன்று பேதமில்லாமல் மஹா பலமுள்ளவைகளாய், கெட்டியாய்ப் பொருத்தப்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பட்ட இடைவெளிகளுடன், உத்தமலக்ஷணங்களமைந்த நகங்களாலும் கட்டை விரல்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன; விலையற்ற மோதிரங்கள் அணிந்த விரல்களுடன், இரண்டு ஐந்து தலை மஹா நாகங்கள் படுத்திருப்பது போல் காணப்பட்டன. தங்கத் தோள்வளைகள் அணிந்த புஜங்களில் இந்திரனுடன் யுத்தம் செய்யும் காலத்தில் ஐராவதத்தின் தந்தங்களாலும், விஷ்ணுவுடன் யுத்தம் செய்யும் காலத்தில் சக்ராயுதத்தாலும் உண்டான காயங்களின் வடுக்கள் கருத்த ஆகாசத்தில் சந்திரர்களைப்போல் பிரகாசித்தன ; முயலின் ரத்தத்தைப்போல் சிவந்து சிரேஷ்டமான பரிமளமும் மிகுந்து குளிர்ச்சியுமுள்ள சந்தனத்தால் நன்ருய்ப் பூசப்பட்டு, விசித்திரமாக அலங்கரிக்கப்பட்டிருந்தன. அவை நேர்த்தியான கந்தங்களால் வாசனையேறினவை ; உத்தம ஸ்த்ரீகளால் பிடிக்கப்பட்டவை ; யக்ஷர், பன்னகர், கந்தர்வர், தேவர், அசுரர் முதலியவர்களைக் கதற அடித்தவை. மிருகங்களையும் பக்ஷிகளையும் தின்று மயங்கிக் கோபத்தால் சீறிக்கொண்டு மந்தரகிரியின் நடுவில் தூங்கும் மலைப்பாம்புகளைப்போல் அந்த புஜங்கள் படுக்கையில் கிடப்பதைக் கண்டார். பர்வதத்தை போன்ற சரீரத்தையுடைய ராவணனுக்கு உத்தம லக்ஷணங்கள் பொருந்திய இரண்டு புஜங்களும் மந்திரகிரியின் இரண்டு சிகரங்களைப்போல் விளங்கின. அவனுடைய மூச்சுக்காற்று மாங்க புன்னை, மகிழம்பூ முதலியவைகளிலிருந்து இறக்கின மதுவின் வாஸனையாலும், ஷட்ரஸங்களுடன் புஜித்த அன்னத்தின் வாஸனையாலும், சிரேஷ்டமான பானங்களின் வாஸனையாலும் அந்த சயன கிருஹம் முழுவதையும் மணக்கும்படி செய்தது. நவரத்னங்களாலும் முத்துக்களாலும் அலங்கரிக்கப்பட்ட தங்கக்கிரீடம் கொஞ்சம் நழுவி இருந்தது. குண்டலங்களுடைய காந்தி முகமெங்கும் பரவியது. பருத்து நீண்டு அகன்ற மார்பில் சிவந்த சந்தனம் பூசப்பட்டிருந்தது ; ஹாரங்கள் ஜ்வலித்தன ; சிரேஷ்டமான பட்டு உத்தரீயங்கள் கொஞ்சம் நழுவி இருந்தன. இடுப்பில் பீதாம்பரத்தைத் தரித்திருந்தான். சிவந்த கண்களுடனும் உளுந்து மலையைப்போன்ற தேகத்துடனும் மஹா சர்ப்பத்தைப் போல் மூச்சுவிட்டுக்கொண்டு, கங்காப் பிரவாஹத்தின் மத்தியில் அயர்ந்து தூங்கும் மதயானையைப்போல் தோன்றினன். நான்கு பக்கங்களிலுமுள்ள தங்க ஸ்தம்பங்களில் ஏற்றிய தீபகாந்தியால் சகல திக்குகளும் பிரகாசித்தன.

ஆகையால் சகல பாகங்களையும் நன்ருகத் தெரியச் செய்த மின்னற்கொடிகள் பாயும் மேகத்தைப்போல் மஹா சரீரத்தையுடைய ராவணனையும், அவனிடத்தில் பரமப் பிரீதியுள்ள ஸ்த்ரீகள் அவனுடைய பாதத்தடியில் தூங்குவதையும் ஹநுமான் கண்டார். பூர்ண சந்திரனுக்கு சமமான காந்திபொருந்திய மு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri. V Hariharan Collection, Sholinganallur, Chennai

களுடன், அழகிய குண்டலங்களாலும் வாடாத மாலைகளாலும் அலங்கரிக்கப்பட்ட அநேக ஸ்திரீகளைக் கண்டார். சிலர் நாட்டியத் தாலும் வாத்தியங்களாலும் ராவணனைச் சந்தோஷப்படுத்தி அவனால் சிரேஷ்டமான ஆபரணங்களை வெகுமதியாகக் கொடுக்கப் பட்டு, அவனுடைய புஜங்களிலும் மடியிலும் கொஞ்சி விளையாடி, அப்படியே தூங்கிவிட்டார்கள். சிலர் வஜ்ர வைடூரியங்களால் இழைக்கப்பட்ட தோள்வளைகள் அணிந்த புஜங்களையே தலையணை யாய் வைத்துத் தூங்கினதால், தோள்வளைகளும் காதில் தரித்த குண்டலங்களும் கலந்து பிரகாசித்தன. சந்திரனையொத்த முகங் களாலும் நக்ஷத்திரங்களைப் போன்ற குண்டலங்களாலும் அந்த விமானம் ஆகாசத்தைப்போல் விளங்கிற்று. யௌவனக் கொழுப் பால் ராவணனுடன் வெகுநேரம் கிரீடித்துக் களைத்து, அவர்கள் இருந்தவிடத்திலேயே தூங்கிவிட்டார்கள். ஒரு சுந்தரி பரத சாஸ்திரத்தில் மிகவும் திறமையுள்ளவள்; நர்த்தனத்தாலும் அபிநயத்தாலும் ராவணனைச் சந்தோஷப்படுத்தி அயர்ந்து தூங்குகையிலும் அவயவங்களை நாட்டிய லக்ஷணங்களுக்கு இசைந்தபடியே வைத்துக்கொண்டு தூங்கிவிட்டாள் ஒரு பெண்மணி அற்புதமாய் வீணை வாசித்து ராவணனை மகிழச்செய்து அந்த வீணையை அணைத்துக்கொண்டே தூங்குகையில், புஷ்பங் களாலும் இலைகளாலும் விளங்கும் தாமரைக்கொடி நதிப்பிரவா கத்தில் அடித்துக்கொண்டு போகப்படும்பொழுது அகஸ்மாத்தாய் சந்தித்த ஒரு ஓடத்தைப் பற்றிக்கொண்டு நிற்பதுபோல் தோன்றினாள். கைக்குழந்தையை மிக்க பிரேமையுடன் இடுப்பில் வைத்துக்கொண்டிருப்பவளைப்போல், ஒருத்தி மட்டுகமென்ற வாத்தியத்தை அணைத்துக்கொண்டே தூங்கிவிட்டாள். நெடு நாளாகக் காணாத நாயகனைச் சேர்ந்து ஆசையுடன் அணைவது போல், ஒருத்தி படஹமென்ற வாத்தியத்தை அணைத்துக் கொண்டே நித்திரை செய்தாள். தன் பிரிய நாயகனை அணைவ தற்குச் சமயம் நேராமல், தவித்துக்கொண்டிருந்த காமினி, அகஸ்மாத்தாய் நாதனை ஏகாந்தத்தில் சந்தித்து, ஆசை மீறி இறுகத் தழுவுவதுபோல், ஒருத்தி புல்லாங்குழலை இறுகத் தழுவிக் கொண்டே உறங்கினாள். நாயகனுடன் ஸ்வேச்சையாய்ப் படுத்திருக்கும் கமலாக்ஷியைப்போல், நாட்டியத்தில் தேர்ந்தவளும மிருதுபாஷிணியுமான ஒரு ஸ்திரீரத்னம் விபஞ்சியை அணைத்துக் கொண்டே தூங்கினாள். ஒருத்தி மதத்தால் கண்கள் சுழல, பருத்த மிருதுவான தங்கக்கொடி போன்ற அவயங்களால் மிருதங் கத்தை ஆலிங்கனம் செய்துகொண்டே தூங்கிவிட்டாள். சிறுத்த இடையுள்ள ஒருத்தி மதுபானத்தால் களைத்து பணவத்தைப் புஜங் களுக்கும் விலாவிற்கும் நடுவில் அணைத்துக்கொண்டே தூங்கினாள். ஒருத்தி ஒரு டிண்டிமத்தை மார்பிலும் வேறொரு டிண்டிமத்தைப் புஜத்திலும் அணைத்துக்கொண்டு தூங்கும்பொழுது, பிரிய நாயகனை மார்புடன் ஆலிங்கனம் செய்துகொண்டு, குழந்தையையும் கட்டி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

யணைப்பவளைப்போல் தோன்றினாள். ஒருத்தி ஆடம்பரத்தை புஜங்களால் இறுகத் தழுவிக்கொண்டே தூங்கிவிட்டாள். ஒருத்தி கலசத்தைக் கவிழ்த்துத் தலையணையாய் வைத்துக்கொண்டு தூங்கு கையில் அதில் மிகுந்திருந்த குங்குமம் சந்தனம் கலந்த ஜலம் அவளுடைய தேகத்தில் பெருக, கோடை காலத்தில் வாடாமல் இருப்பதற்காக ஜலம் தெளித்து வைக்கப்பட்ட புஷ்ப மாலையைப் போல் காணப்பட்டாள். ஒருத்தி தூக்கம் தாங்கமுடியாமல், தங்கக் கலசங்களைப் போன்ற ஸ்தனங்களைக் கைகளால் மறைத் துக்கொண்டே தூங்கிவிட்டாள். ஒருத்தி மதத்தால் மெய்ம்மறந்து தன் சமீபத்தில் படுத்திருந்த சகியை நாயகன் என்றெண்ணி இறுகத் தழுவிக்கொண்டே தூங்கினாள். காமினிகள் நாயகர்களை இறுகத் தழுவுதல்போல் உத்தம ஸ்த்ரீகள் அநேகர் விசித்திரமான வாத்தியங்களைப் புஜங்களாலும் ஸ்தனங்களாலும் அணைத்துக் கொண்டே தூங்கினார்கள். அவர்களைப் பார்த்துக்கொண்டு போகையில், ஹநுமான் ஓரிடத்தில் தனியாய் திவ்யாலங்காரங் களுடன் ஒரு சயனத்தையும் அதில் அழகே உருவெடுத்து வந்தது போலிருக்கும் ஒரு ஸ்த்ரீ நித்திரை செய்வதையும் கண்டார். முத்துக்களாலும் நவமணிகளாலும் இழைக்கப்பட்ட ஆபரணங் களை அணிந்துகொண்டு, உருக்கியோடவிட்ட ஆயிரத்தெட்டு மாற்றுத் தங்கத்தைப்போல் ஜ்வலிக்கும் தேக காந்தியுடன், தன் தேஜஸாலும் கலைகளாலும் அந்த விமானத்திற்கு ஒரு சிரேஷ்ட மான ஆபரணம்போல் விளங்கும் அந்தப் பெண்மணி மந்தோதரி என்று கீர்த்தி பெற்ற ராவணனுடைய பட்டமஹிஷி; அவனுக் உயிருக்குயிரானவள்; அந்தப்புரத்திற்கு அதிபதி. ஆஞ்ஜநேயர் அவளுடைய அபூர்வமான ரூபத்தையும் யௌவனத்தையும் கவனித்து, இவள் ஸீதையாக இருக்கலாமென்று நினைத்து ஸ தோஷம் தாங்காமல், தோள்தட்டி வாலை முத்தமிட்டு ஆனந் மடைந்தார்; குதித்து விளையாடினார்; பாடினார்; ஆடினார்; உல வினார்; ஸ்தம்பங்களில் ஏறிக் குதித்தார்; இப்படி வானரர்களுக் ஸ்வபாவமான சேஷ்டைகளை எல்லாம் செய்தார்.

ஆஸ்போ2டயாமாஸ சுசும்ப3 புச்ச2ம்
நநந்த3சிக்ரீட3 ஜகௌ3 ஜகா3ம ।
ஸ்தம்பா4 நரோஹந் நிபபாத பூ4மௌ
நித3ர்ஶயந் ஸ்வாம் ப்ரக்ருதிம் கபீநாம் ।

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸர்க்கம் 11

பானசாலை

அவதூ⁴ய ச தாம் பு³த்³தி⁴ம் ப³பூ⁴வா வஸ்தி²தஸ் தத³ா ।
ஜக³ாம சாபராம் சிந்தாம் ஸீதாம் ப்ரதி மஹாகபி: ॥ (1)

பிறகு கொஞ்சம் யோசித்து அவள் ஸீதையல்ல என்று தெளிந்து, ஜானகி எங்கே இருக்கக்கூடுமென்று மறுபடியும் கவலை கொண்டார். "ராமனை விட்டுப்பிரிந்து அவர் படும் கஷ்டங்களை அறிந்தும் ஜானகிக்குத் தூக்கம் வருமோ? அன்னம் வேண்டியிருக்குமோ? அலங்காரம் செய்துகொள்ளவும் தோன்றுமோ? பானங்களையும் பக்ஷயங்களையும் அநுபவிக்கப் புத்தியுண்டாகுமோ? தேவேந்திரனுயிருந்தாலும் ராமனைத் தவிர வேறு புருஷனை ஸ்வப்பனத்திலும் நினைப்பாளோ? சகல லோகங்களிலும் ராமனைப் போன்ற வேறொருவருமுண்டோ? ஆகையால் இவள் ஸீதை யல்ல; வேறுயாரோ" என்று முடிவு செய்து பானசாலையில் மறுபடியும் தேடினார். அங்கே சிலர் சொக்கட்டான், சோழி, அம்மானை, சூது, சதுரங்கம் முதலிய விளையாட்டுகளால் களைத்தும், சிலர் பாட்டினுல் சிரமமடைந்தும், சிலர் நாட்டியத்தால் அலுத்தும், சிலர் மதுபானம் செய்து மயங்கியும், சிலர் முரவம், மிருதங்கம் முதலிய வாத்தியங்களைத் தலையணையாய் வைத்துக்கொண்டும், சிலர் பீடங்களின் மேலும், சிலர் நேர்த்தியான விரிப்புகளின் மேலும், பிரக்ஞையற்றுத் தூங்கினுர்கள். அவர்களிலும் ஸீதையைக் காணுமல் மறுபடியும் ராவணன் படுத்திருக்கும் இடத்திற்கு வந்தார். அவனுடைய ஸ்திரீகளெல்லாம் மஹா பக்தியுடன் தங்களுடைய பர்த்தாவின் ரூபத்தையும் குணங்களையும் எப்பொழுதும் புகழ்பவர்கள்; யுக்தமாய்ப் பாடவும் அதன் தாத்பரியத்தைத் தெளிவாக எடுத்துச் சொல்லவும் சாமர்த்திய முடையவர்கள்; தேச காலங்களை அறிந்து நடப்பவர்கள்; சமயோசிதமாய்ப் பேசுகிறவர்கள். ராவணன் அவர்களுடன் காம சாஸ்திரப்படி சகல போகங்களையும் அநுபவித்து அயர்ந்து தூங்குவதைக் கண்டார். அவர்களுக்கு நடுவில் அந்த ராக்ஷஸேசுவரன் சிரேஷ்டமான பசுக்களுக்குநடுவில் விளங்கும் காளையைப்போலும்,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வனத்தில் பெண் யானைகளால் சூழப்பட்ட மதயானையைப் போலும் விளங்கினர்.

பிறகு விரும்பக்கூடிய சகல பதார்த்தங்களாலும் நிறைந்த பான பூமிக்கு மாருதி வந்தார். அங்கே மான், எருமை, பன்றி முதலிய மிருகங்களின் மாம்ஸங்கள் குப்பல் குப்பல்களாய் வைக்கப்பட்டிருந்தன. விசாலமான தங்கத் தட்டுகளில் தின்று மிகுந்த மயில், கோழி, மான், பன்றி, சல்யம், வார்த்ராணஸம் முதலிய பறவை மிருகங்களின் மாம்ஸங்கள் தயிரிலும் ருசகமென்ற உப்பிலும் பக்குவம் செய்து வைத்திருந்ததைக் கண்டார். வெகு சாதுரியமாய்ப் பக்குவம் செய்யப்பட்ட க்ரிகரம் சகோரமென்ற பக்ஷிகள், எருமைகள், ஆடுகள், ஏகசல்யமென்ற மீன் முதலியவைகளின் மாம்ஸங்களும் நானுவிதமான துவையல்களும் பானங்களும் தின்பண்டங்களும் புஜிக்கப்பட்டு மிகுந்திருப்பதைக் கண்டார். உப்புப் புளிப்பேற்றிய அனேக வ்யஞ்ஜனங்களாலும் வெள்ளைக்கடுகு கலந்த ஆறு வகை ரஸங்கள் பொருந்திய பக்ஷ்யங்களாலும், ஸ்திரீ புருஷர்கள் குடிமயக்கத்தில் கழற்றியெறிந்த ஹாரம், சிலம்பு முதலிய பூஷணங்களாலும், பான பாத்திரங்கள் ஊறும் பலவகைப் பழங்களாலும், அந்தப் பானசாலை புஷ்பங்களால் பூமிதேவியை அர்ச்சிப்பதுபோல் விளங்கிற்று. அங்கங்கு போட்டிருக்கும் படுக்கைகளாலும் ஆஸனங்களாலும் அந்த கிருஹம் நெருப்பில்லாமலேயே கொழுந்துவிட்டெரிவது போலிருந்தது. அதி ஸமர்த்தர்களான சமையற்காரர்களால் விதம்விதமாய்ப் பக்குவம் செய்து தனித்தனியாய் வைக்கப்பட்ட மாம்ஸங்களைக் கண்டார்; சமுத்திர மதன காலத்தில் உண்டான வாருணி என்ற பானத்தின் வகைகளும் சர்க்கரை, தேன், புஷ்பங்கள், பழங்கள் முதலியவைகளிலிருந்து இறக்கின பானங்களும், சாதுரியமாய்ச் செய்யப்பட்ட பானங்களும், வாஸனைப் பொடிகளும் ஏராளமாய் வைக்கப்பட்டிருந்தன. (திராக்ஷை, இலுப்பை, பேரீச்சை, பனை, கரும்பு, கொம்புத்தேன், அடைத்தேன், வெல்லம், தென்னை முதலியவைகளிலிருந்து பலவித பானங்கள் செய்யப்படும்.) தங்கத்தாலும் ஸ்படிகத்தாலும் செய்யப்பட்ட போஜன பாத்திரங்களாலும், தங்கக் கூஜாக்களாலும் அந்தப் பானபூமி நிறைந்திருந்தது. தங்கக் குடங்களிலும் வெள்ளிக் குடங்களிலும் சிரேஷ்ட

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Chromepet, Chennai

மான பானங்கள் ஊற்றி வைக்கப்பட்டிருந்தன. தங்கத்தாலும் வெள்ளியாலும் செய்யப்பட்டு ரத்தினங்கள் இழைத்த அனேக பான பாத்திரங்கள் சாராயம் குடிப்பதற்காக ஸித்தமாக இருந்தன. சில இடங்களில் பாத்திரங்களில் வைக்கப்பட்ட பானங்கள் குடிக்கப்படாமலேயே இருந்தன; சிலவிடங்களில் பாதி குடிக்கப்பட்டிருந்தன; சிலவிடங்களில் முழுவதும் குடிக்கப்பட்டிருந்தன; ஓரிடத்தில் பலவித பக்ஷ்யங்களும் ஓரிடத்தில் பானங்களின் மிகுதியும் ஓரிடத்தில் புஜித்த அன்னத்தின் மிகுதியும் காணப்பட்டது; ஓரிடத்தில் கிண்டிகள் உடைந்து கிடந்தன; ஓரிடத்தில் கடங்கள் உருண்டு கிடந்தன; ஓரிடத்தில் மாலைகளும் பழங்களும் ஜலத்தில் கிடந்தன; ஓரிடத்தில் ஸ்திரீகளுக்காக அனேகம் படுக்கைகள் போடப்பட்டிருந்தன.

சில ஸ்திரீகள் ஒருவரையொருவர் இறுகத் தழுவிக்கொண்டும் சிலர் தூங்குகிறவர்களுடைய வஸ்திரங்களை உடுத்துக்கொண்டும் நித்திரை மேலிட்டுத் தூங்கினார்கள். மிருதுவான தென்றலைப் போல் அவர்களுடைய சுவாஸக் காற்று அவர்கள் அணிந்த வஸ்திரங்களையும் மாலைகளையும் சற்று அசைத்தது. அந்தப் பானசாலையில் வீசும் காற்று, குளிர்ந்த சந்தனம், தேனின் ரஸம், சாராயம், நானாவித புஷ்ப மாலைகள், பலவகைத் தூபங்கள் முதலியவைகளில் தாக்கி அவைகளின் குளிர்ச்சியையும் பரிமளத்தையும் ராவணன் படுத்திருந்த புஷ்பக விமானத்தில் வீசிற்று. அங்கேயிருந்த சில ஸ்திரீகள் கருப்பும் வெளுப்பும் கலந்த வர்ணமுடையவர்கள்; சிலர் கருத்தவர்கள்; சிலர் தங்கக்கொடி போன்ற அவயவங்களையுடையவர்கள். ரதி சிரமத்தாலும் தூக்கத்தாலும் பிரக்ஞையற்றிருக்கும் அந்தப் பெண்கள் ஸூரியாஸ்தமன காலத்தில் மூடியிருக்கும் தாமரைகளைப்போல் விளங்கினார்கள். மஹா தேஜஸ்வியான ஹநுமான் இப்படி ராவணனுடைய அந்தப்புரம் முழுவதையும் வெகு ஜாக்கிரதையாகத் தேடியும் ஜானகியைக் காணவில்லை. அவர் "பரஸ்திரீகள் பர்த்தாவுடன் ஸ்வேச்சையாய்த் தூங்கும்போது பார்த்துவிட்டேனே. என்னுடைய பிரஹ்மசரிய தர்மத்திற்குக் குறைவு நேருமே. இவர்களைக் கண்டதால் என் மனத்தில் யாதொரு விகாரமும் இல்லாவிட்டாலும் பரஸ்திரீகளைப் பார்ப்பது பாபமல்லவா" என்று சற்று நேரம் நினைத்து,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பிறகு "இந்தக் கவலை நமது காரியத்தைக் கெடுத்துவிடும்" என்று அதையொழித்து, தனக்கு ஸ்வபாவமான தைரியத்தையும் புத்தி கூர்மையையும் கைக்கொண்டு நடக்கவேண்டிய காரியத்தின் குண தோஷங்களை யோசித்தார். "ராவண பத்தினிகள் ஸ்வேச்சை யாய்த் தூங்கும்போது என்னால் நன்றாகப் பார்க்கப்பட்டார்கள்; ஆனால் என் மனத்தில் யாதொரு காமவிகாரமும் உண்டாகவில்லை; ஸகல புண்ணிய பாப கர்மங்களைச் செய்வதிலும் இந்திரியங்களை ஏவுகிறது மனமல்லவா? என் மனத்திலோ கொஞ்சமாவது களங்க மில்லை. இவர்களைப் பார்க்காமலேயே இருக்கலாமே என்றால், ஜானகியை ஸ்திரீகள் இருக்கும் இடத்தில் தேடாமல் வேறு எங்கே தேடமுடியும்? ஒவ்வொரு வஸ்துவையும் அந்த ஜாதி வஸ்துக்கள் இருக்குமிடத்தில் தேடினால் கண்டுபிடிக்கலாமே தவிர மான் களுக்கு நடுவில் ஸ்திரீயைத் தேடுவார்களுண்டோ? சுத்தமான மனத்துடன் ராவணனுடைய அந்தப்புரம் முழுவதிலும் தேடிப் பார்த்தும் ஜானகியைக் காணவில்லையே. தேவ கன்யைகளையும் கந்தர்வ கன்யைகளையும் நாக கன்யைகளையுமல்லவா கண்டேன். ராகவ பத்னியான ஜானகியைக் காணக் கிடைக்கவில்லையே!" என்று சற்று நேரம் கவலை கொண்டார். மறுபடியும் தைரிய மடைந்து அந்தப் பானசாலையை விட்டு ராவணனுடைய சயன கிருஹத்தில் தேட ஆரம்பித்தார்.

ஸ பூ⁴யஸ்து பரம் ஸ்ரீமாந் மாருதிர் யத்ந மாஸ்தி²த: ।
ஆபாநபூ⁴மி முத்ஸ்ருஜ்ய தாம் விசேதும் ப்ரசக்ரமே ॥ (4

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ ராமசந்த்ராய நம:

14. ஸ்ரீராமனுக்குச் செய்த அபசார தோஷம் நீங்க

(For the expiation of disparagement of Sri Rama)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

ஸுந்தர காண்டம் : ஸர்க்கம் 38

உமா ஸம்ஹிதா

பு³த்³த்⁴யாபு³த்³த்⁴யா ராமவிபே⁴ா: விஹிதாக³: ப்ரஶாந்தயே ।
காகாநுக்³ரஹ வ்ருத்தாந்த ஸர்க்க³ம் நத்வா படேத் ப்ரபு⁴ம் ॥

ஸ்ரீராமனுடைய சரித்திரத்தைக் கண்டிப்பது, ஸ்ரீராமமூர்த்தியையோ படத்தையோ அலட்சியம் செய்வது, ஸ்ரீராம பக்தர்களைத் தூஷிப்பது போன்ற ராமனுக்குச் செய்த அபராதங்களை, ராமன் க்ஷமிக்க வேண்டுமென்று விரும்பினால், "காகாஸுரனுக்கு இராமன் செய்த அனுக்ரஹத்தை"ச் சொல்லும் ஸுந்தர காண்டம் 38-வது ஸர்க்கத்தைக் காலையில் பாராயணம் செய்ய வேண்டும்.

நிவேதனம் : ஐந்து வாழைப்பழங்கள்.

ஸங்கல்பம்

ஸ்ரீ ஸீதாலக்ஷ்மண பரதஶத்ருக்ந ஹநுமத் ஸமேத ஸ்ரீராமசந்த்ர ப்ரபோ : ப்ரஸாதேந, பு³த்³தி⁴பூர்வகம் அபு³த்³தி⁴பூர்வகம் வா
ஸ்ரீராம ஸந்நிதெ⁴ள தத்³ப⁴க³வத ஸந்நிதெ⁴ள வா
க்ருதாநாம் மஹாபசாராணும் ஶாந்த்யர்த்த²ம்
"காகாநுக்³ரஹா" த்மக ஸ்ரீமத்³ராமாயண
க⁴ட்ட பாராயணம் அஹம் கரிஷ்யே ।

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Chengalpattu, Chennai

ஸர்க்கம் 38

காகாஸுர விருத்தாந்தம்

தத: ஸ கபிஶார்தூ³ல: தேந வாக்யேந ஹர்ஷித: ।
ஸீதா முவாச தச்ச்²ருத்வா வாக்யம் வாக்யவிஶாரத³: ॥ (1)

மஹா புத்திமானான அந்த வானர சிரேஷ்டன் ஸீதையின் வார்த்தையைக் கேட்டு மிகுந்த ஸந்தோஷமடைந்து, "அம்மா! தாங்கள் சொன்ன வார்த்தைகள் ஸ்த்ரீகளின் ஸ்வபாவத்திற்கும் பதிவிரதைகளுடைய விநயத்திற்கும் தகுந்தவையே. நூறுயோஜனை விஸ்தீர்ணமுள்ள இந்தப் பெருங்கடலை என் முதுகிலேறித் தாண்டு வதுஸ்த்ரீயான தங்களுக்கு முடியாதல்லவா? ராமனைத் தவிர வேறு புருஷனைத் தொடமாட்டேனென்ற இரண்டாவது காரணம் அந்த மஹாத்மாவின் பத்தினியாகிய தங்களுக்கே தகும்; இப்படிப்பட்ட வார்த்தையை வேறொருவரும் சொல்லமாட்டார்கள். தங்களுடைய ஸகல விருத்தாந்தங்களையும் வார்த்தைகளையும் ஒன்று விடாமல் ராகவனிடத்தில் சொல்வேன். அவருக்குப் பிரியமான காரியத்தைச் செய்யவேண்டுமென்ற இச்சையாலும் வேறு அனேக காரணங்களாலும் தங்களிடத்திலுள்ள ஸ்நேகத்தாலும் களங்கமில்லாத மனத்துடன் இப்படிச் சொன்னேனே தவிர வேறல்ல. இந்தப் பெருங்கடலைத் தாண்டுவது கஷ்டம்; கோர ராக்ஷஸர்களால் இரவும் பகலும் காக்கப்பட்ட இந்த லங்கையில் பிரவேசிப்பது அதிலும் கஷ்டம்; நான் சொன்னபடி செய்ய எனக்குச் சக்தியுண்டு; மற்றவர்களுக்கு ஸுலபமல்ல; ஆகையால் இப்படிச் சொன்னேன். ராகவனிடத்தில் எனக்குள்ள ஸ்நேகத்தாலும் தங்களிடத்தில் வைத்த பக்தியாலும், இப்பொழுதே தங்களை ராமனோடு சேர்த்து வைக்க வேண்டுமென்று அளவற்ற ஆசை கொண்டிருக்கிறேன்; இல்லாவிட்டால் இப்படிச் சொல்வேனா? என்னுடன் ராமனிருக்குமிடத்திற்கு வருவதற்குத் தாங்கள் இஷ்டப்படாவிட்டால் நான் தங்களைப் பார்த்தேனென்று அவர் நம்பும்படி அடையாளங்களைக் கொடுங்கள்" என்று பிரார்த்தித்தார்.

அதைக் கேட்டு ஸீதை தனக்கும் ராகவனுக்கும் ஏகாந்தத்தில் நடந்தவிருத்தாந்தங்களைச் சொல்ல ஆரம்பிக்கையில், தான் முன்பு அனுபவித்த ஸுகங்களையும் இப்பொழுது படும் கஷ்டத்தையும் நினைத்துக் கண்ணீர் நெஞ்சடைக்க மெதுவாய், "ஆஞ்ஜநேயா! சித்திரகூட பர்வதத்தினடியில் வடகிழக்கு மூலையில் மந்தாகினீ நதிக்கு ஸமீபத்தில் ஒரு புண்ணிய ஸ்தலமுண்டு. அங்கே ஸித்தர்களும் தபஸ்விகளும் ஆனந்தமாய் வஸிப்பார்கள். பழம், கிழங்கு,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Hariharan Collection, Sholinganallur, Chennai.

ஜலம் குறைவில்லாமல் கிடைக்கும். நாங்கள் அங்கே இருக்கையில் நடந்த ஒரு விருத்தாந்தத்தைச் சொல்லுகிறேன். இந்த அடையாளத்தை என் பர்த்தாவிடத்தில் சொல். 'ஒரு சமயத்தில் பலவித புஷ்பங்களால் வாஸனையுள்ள மரச்சோலைகளில் நான் வெகு நேரம் விளையாடி வியர்த்துக் களைத்துத் தங்களுடைய மடியில் உட்கார்ந்தேன். அப்பொழுது ஒரு காக்கை மாம்ஸத்தில் ஆசைகொண்டு என் மார்பின் மத்தியில் கொத்திற்று. நான் அதன்மேல் ஒரு சிறு கல்லை எடுத்தெறிந்து துரத்தினேன். மாம்ஸத்தில் ஆசைவைத்த அந்த துஷ்டக் காக்கை நான் எவ்வளவு துரத்தியும் மறுபடியும் என்னை அடிக்கடி ஹிம்ஸித்ததேயல்லாமல் அவ்விடத்தைவிட்டு போகவே இல்லை. அந்த ஹிம்ஸையைத் தீர்க்கவேண்டுமென்று பரபரப்புடன் எழுந்தேன்; என் உத்தரியம் நழுவ அதை ஒட்டியாணத்துடன் சேர்த்துப் பிடித்துக்கொண்டு அந்தக் காக்கையின் மேல் மிகுந்த கோபத்துடன் நின்றேன். அப்பொழுது என்னை பார்த்தீர்கள். பிறகு நான் அந்தக் காக்கையை எவ்வளவு அடித்துத் துரத்தியும் அது என்னைக் கொத்திக்கொண்டே இருந்தது. அதைக் கண்டு, ஒரு காக்கையை ஓட்ட எனக்குச் சக்தியில்லாததைப் பற்றித் தாங்கள் பரிகாஸம் செய்தீர்கள். அப்பொழுது எனக்குண்டான வெட்கமும் அந்தக் காக்கையிடத்திலுள்ள கோபமும் சொல்லி முடியாது அதைக் கண்டு தாங்கள் என்னை ஸமாதானம் செய்தீர்கள். நான் மிகவும் களைத்துத் தங்களுடைய மடியில் மறுபடியும் வந்து படுத்தேன். ஒரு காக்கை நம்மை இவ்வளவு பாடுபடுத்திற்றல்லவா என்று நினைக்க எனக்குத் துக்கம் தாங்காமல் கண்ணீரால் முகம் நனைந்து பிறகு மெள்ளமெள்ளத் துடைத்துக் கொண்டேன். அப்பொழுது தாங்கள் என்னைப் பார்க்கவில்லையோ?' பிறகு களைப்பால் வெகுநேரம் அவருடைய மடியில் படுத்துத் தூங்கினேன்; அவரும் களைத்து என் மடியில் படுத்துத் தூங்கிவிட்டார். நான் அப்பொழுது அந்தக் காக்கை என் ஸமீபத்தில் வந்து விழித்துக்கொண்டு ராகவனுடைய மடியிலிருந்து எழுந்தவுடன் சீக்கிரமாய் என்மேல் பாய்ந்து மார்பின் நடுவில் கொத்திற்று. அடிக்கடி கிளம்பிக் கிளம்பி என்னை கொந்திக் கிழிக்கையில் ரத்தத் துளிகள் ரகுநாதன்மேல் விழ அவர் விழித்துக்கொண்டார். அந்தக் காக்கையின் ஹிம்ஸையை பொறுக்கமுடியாமல் நான் அவரை எழுப்பினேன்.

"அந்த மஹாவீரன் நான் படும் அவஸ்தையையும் அந்தக் காக்கை என் மார்பின் நடுவில் செய்த காயத்தையும் பார்த்துக் கொண்டு காலஸர்ப்பத்தைப்போல் பெருமூச்சுவிட்டு, 'ஸீதே! இப்படி உன்னை மார்பில் கொத்திக் காயப்படுத்தினவன் யார்? வாயைத் திறந்துகொண்டு கோபத்துடனிருக்கும் பாம்புடன் விளையாடுபவன் யார்?' என்று சொல்லி நான்கு புறத்திலும் பார்க்க

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

யில் அந்தக் காக்கை குரூரமான நகங்களுடன் என் ரத்தத்தால் பூசப்பட்டு எனக்கெதிரே உட்கார்ந்திருப்பதைக் கண்டார். அது இந்திரனுடைய புத்திரனான ஜயந்தன்; ராகவன் கோபத்துடன் தன்னைப் பார்த்தபொழுது 'ஓஹோ! மோசம் வந்ததே' என்று வாயு வேகமாய்ப் பூமிக்குள் மறைந்தான். அதைக் கண்டு மஹா புத்திமானான ரகுவீரன் அந்தக் காக்கையின் நிஜஸ்வரூபத்தையும் எண்ணத்தையுமறிந்து, கோபத்தால் கண்கள் ஜ்வலிக்க, அதைக் குரூரமாக சிக்ஷிக்கவேண்டுமென்று நினைத்தார். ஆனால், அங்கே அவருடைய கோதண்டமும் பாணங்களும் இல்லை. உடனே தான் உட்கார்ந்திருந்த ஆஸனத்திலிருந்து ராமன் ஒரு தர்ப்பத்தைக் கிள்ளி அதில் பிரஹ்மாஸ்திர மந்திரத்தை ஜபித்து அந்தக் காக்கையை உத்தேசித்துப் பிரயோசித்தார். உடனே அது காலாக்னிபோல் ஜ்வலித்துக்கொண்டு அந்தக் காக்கையை ஆகாச மார்க்கமாய்த் துரத்த ஆரம்பித்தது.

"அதைக் கண்டு அந்தக் காக்கை ஓடிற்று; தாவிற்று; பறந்தது; மறைந்தது; தனக்குத் தெரிந்த ஸகல தந்திரங்களையும் உபாயங்களையும் செய்தது. ஒன்றும் பலிக்காததைக் கண்டு என்னைக் காப்பாற்றுவாருண்டோ என்று வாய்விட்டலறிக் கொண்டு இந்த லோகமெங்கும் அலைந்து திரிந்தது; என்ன கஷ்டம்! பிறகு தன் பிதாவான தேவேந்திரனிடத்தில் சென்றால் தன்னைக் காப்பாற்றுவாரென்று அங்கே ஓடிற்று. தேவேந்திரன் அஸுர ரூபத்தையும் துக்கத்தையும் கண்டு, நடந்த விருத்தாந்தத்தை விசாரித்துத் தெரிந்து கொண்டு அவனைத் துரத்திவரும் பிரஹ்மாஸ்திரத்தையும் பார்த்தான். 'ராமன், ஒருவனைக் கொல்ல வேண்டுமென்று நிச்சயித்த பிறகு நாம் அதில் தலையிட்டுக் கொண்டால் பிழைப்பதேது? மேலும், இவன் செய்த துஷ்ட காரியத்திற்கு இந்தத் தண்டனை தகுந்ததே; மேலும் நான் ராஜ்யத்தையும் தேஜஸையும் பாரியையும் கீர்த்தியையும் இழந்து, ஓடி ஒளிந்து தவிக்கும்பொழுது எனக்கு ஸகலத்தையும் கொடுத்து ரக்ஷித்த லோகமாதாவிற்கு அபராதம் செய்தவனை நான் திரும்பிப் பார்க்கலாமோ? ஸகல லோகங்களுக்கும் பிதாவான ஹரியே அவனைக் கைவிட்டபின் எனக்கென்ன? அவர் என் உடன் பிறந்தவரன்றோ? அவருக்கு அபராதம் செய்தாலென்ன? எனக்கு அபராதம் செய்தாலென்ன? என்னையும் தேவர்களையும் கதறவடிக்கும் ராவணனை வதம் செய்யப் பகவான் அவதரித்திருக்க, இவன் அந்தக் காரியத்திற்கு விரோதம் செய்து எங்களுடைய க்ஷேமத்தையும் கெடுக்க வந்த துஷ்டன்; ஆகையால் ஒரு குலத்திற்கு நாசம் வராதபடி அதில் ஒருவனைத் தள்ளி விடுவது நியாயம்' என்று புத்தி பூர்வமாக ஜயந்தனை அங்கிருந்து துரத்திவிட்டான். பிறகு தன்னைப் பெற்றெடுத்த தாய் தன்னிடத்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தில் இரங்காமலிருப்பாளோ என்று ஜயந்தன் இந்திராணியிடத்தில் சென்று அடைக்கலம் வேண்டினான். அவளும், 'ஸகலப் பிராணிகளுக்கும் மங்களத்தைச் செய்யவேண்டி, சொல்லமுடியாத கஷ்டங்களை ஸஹித்துக்கொண்டிருக்கும் ஜானகிக்குத் தீராத அபராதம் செய்த இவன் நமக்குப் புத்திரனல்ல' என்று துரத்தி விட்டாள். பிறகு தன்னைப்போன்ற தேவதைகளிடத்தில் சென்று அடைக்கலம் புகுந்தான்; அவர்களும் 'எவருடைய கிருபையால் நாம் ஸமுத்திர மதன காலத்தில் அமிருதத்தைப் பெற்றுச் சிரஞ்சீவிகளாய் வாழ்கிறோமோ; எவருடைய பராக்கிரமத்தால் அஸுரர்களை ஜயித்து ஸ்வர்க்கலோக ராஜ்யத்தை ஆளுகிறோமோ அந்த நமது குலதெய்வமான ராமனுடைய கண் சிவந்தால் நாமெங்கே' என்று துரத்திவிட்டார்கள். பிறகு ஜயந்தன் தன்னைப் போன்ற பக்ஷிகளிடத்தில் போய் சரணமடைந்தான். அவைகள், 'நமக்குப் பிரபுவான கருடன் யாருக்கு வாஹனமோ அந்த மஹாப்பிரபுவுக்குக் கோபமூட்டினவன் நம்மிடத்திற்கு ஏன் வந்தான்?' என்று அடித்துத் துரத்திவிட்டன. பிறகு மஹரிஷிகளிடத்தில் சென்று தன்னைக் காப்பாற்றவேண்டுமென்று பிரார்த்தித்தான். அவர்களும் மூன்று காலங்களையும் அறிந்தவர்களாகையால், 'நாம் இவனுக்கு இடம் கொடுத்தால் நமக்கும் ஆபத்து நேரும். ராமனே இவனைக் காப்பாற்றுவார். பக்ஷிகளுக்குள் காக்கை சண்டாளன்; நாம் இவனைப் பார்ப்பதும் பிசகு; ஸகல ஜீவகோடிகளுக்கும் புருஷாகாரமாய் நின்று உத்தம கதியை அடைவிக்கும் லோகரக்ஷகிக்கு அபராதம் செய்த இவனுக்குக் கதியுண்டோ?' என்று கைவிட்டார்கள். இப்படிப் பூமி புவர்லோகம் ஸ்வர்க்கமென்ற மூன்று லோகங்களிலும் சுற்றி அலைந்தான். பூமியுள் மஹரிஷிகளும் புவர்லோகத்தில் பக்ஷிகளும் ஸ்வர்க்கத்தில் தேவர்களும் மாதாபிதாக்களும் கைவிட்டார்கள். இன்னும் ஆசைவிடாமல் கண்டபேர்களைக் கேட்டுக் கண்டவிடங்களில் வெட்கமில்லாமல் நுழைந்தும் அடித்துத் துரத்தப்பட்டான்.

"ஆகையால், முடிவில் ஸர்வலோக சரண்யனான ரகுவீரனையே சரணடைந்தான். மஹாலக்ஷ்மியே ஒருவன்மேல் குற்றம் சொன்னாலும், 'என்னடியார் குற்றம் செய்யார்; அப்படிச் செய்தாலும் அது குற்றமாயிராது' என்று பக்தர்களைக் காப்பாற்றும் கருணாமூர்த்தியைச் சரணமடைந்தான். பூர்வத்தில் இந்திரனுக்கு ஸஹாயமாய் அஸுரர்களை ஜயித்த ககுத்ஸ்தருடைய வம்சத்தில் பிறந்த ராமன் இந்திரனுடைய புத்திரனிடத்தில் இரக்கம் வைத்தான். அவன் செய்த அபராதத்திற்கு அவனைக் கொல்லவேண்டியது. ஆனாலும், அதுவரையில் வெகு கஷ்டங்களை அனுபவித்திருக்கிறான். இப்பொழுது வேறு கதியற்று நம்மைச் சரணமடைந்திருக்கிறான். ரக்ஷிப்பது நமது விரதமல்லவா என்று அவனிடத்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தில் கிருபை செய்தார்; ஸகல ஜீவகோடிகளுக்கும் அவரைத் தவிர வேறு சரணமுண்டோ? ஸகல லோகங்களிலும் அலைந்து திரிந்து யாதொரு பிரயோஜனமும் இல்லாமல், தன்னையே சரணமடைந்த அந்தக் காக்கையின் துக்கத்தையும் பரிதாபத்தையும் அவன் தன்னையே கதி என்று வந்தடைந்ததையும் கண்டு, 'இந்த பிரஹ்மாஸ்திரம் வீண் போகாதே; ஆகையால், தங்களுடைய அஸ்திரத்திற்கு என் வலது கண்ணைப் பலியாகக் கொடுக்கிறேன் என்று சொல்' என்றார். ஜயந்தனும் அப்படியே செய்ய, அவனது வலது கண்ணைப் பிடுங்கினார். இப்படித் தனது வலது கண்ணைக் கொடுத்து ராமனுடைய கடாக்ஷத்தால் உயிர் பிழைத்தான். பிறகு அவன் ரக்ஷகனான ரகுநாதனையும் அந்த மஹானுபாவரைப் பெற்ற தசரத சக்கரவர்த்தியையும் நமஸ்கரித்து ராமசந்திரனிடத்தில் உத்திரவு பெற்றுக்கொண்டு ஸ்வர்க்கலோகம் சென்றான்.

"லோகநாத! எனக்காக ஒரு காக்கையின்மேல் பிரஹ்மாஸ்திரத்தைப் பிரயோகிக்கவில்லையா? இப்பொழுது என்னைத் தங்களிடத்திலிருந்து அபகரித்துத் தங்களை அவமானம் செய்து என்னை இப்படி உபத்திரவிக்கும் ஒரு அல்ப ராக்ஷஸனைப் பொறுத்திருப்பதற்குக் காரணமேதோ? அளவற்ற உற்சாகத்தையுடைய தாங்கள் என்னிடத்தில் தயவு செய்யக்கூடாதா? பிறர் துக்கப்படுவதைக் கண்டு ஸஹிக்கமாட்டேனென்ற தாங்கள் அந்த வார்த்தையை நடத்தையில் காட்டித் தங்களைச் சேர்ந்த நான் படும் துக்கத்தைத் தீர்க்கக் கூடாதா? இப்படிச் செய்யாவிட்டால் புருஷோத்தமனென்ற பெயர் தங்களுக்கு எப்படித் தகும்? அதைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். நான் தங்களை நாதனாக அடைந்தும் அனாதையைப் போல் இருக்கிறேனே. ஓடத்திலேறிய பிறகு கூலி கேட்பது போல், தங்களுடன் ஏகாந்தமாக இருக்கையில், 'தங்களுக்கு மிகவும் பிரியமான தர்மம் எது?' என்று நான் கேட்டிருக்கிறேன். 'பிறர் துக்கப்படுவதைப் பார்த்தால் ஸஹிக்காமலிருப்பதே உத்தமமான தர்மம்; அதே எனக்கும் பிரியம்; அதுவே என் ஸ்வபாவம்' என்று தாங்களே சொல்லக் கேட்டேன். வேறு தூதன் முதலியவர்கள் மூலம் சொன்னதில்லை. 'இது வார்த்தையே தவிர, அனுஷ்டானத்திற்கு வரவில்லையே' என்று ஆஞ்ஜனேய! உன் பிரபுவைக் கேள்.

"தாங்கள் அளவற்ற வீரியம் உத்ஸாஹம் பலம் முதலிய அனந்த கல்யாண குணபரிபூர்ணரென்றும், கம்பீரத் தன்மையில் ஸமுத்திரத்தைப் போன்றவரென்றும், பிறரால் அசைக்கமுடியாதவரென்றும், இந்திரன் எப்படி ஸ்வர்க்கத்திற்கு அதிபதியோ அப்படி இந்தக் கடல்சூழ்ந்த பூமிக்கு நாதனென்றும் நான் அறிவேன்" என்று அவரிடத்தில் சொல்லவேண்டும். ஆஞ்ஜனேய!

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri Y Harihara Collection, Sholinganallur, Chennai

"ரகுவீரன் சொன்ன வார்த்தையைத் தவறுகிறதுண்டோ? அஸ்திரவித்தையில் அவருக்கு நிகருண்டோ? அவருடைய பலத்திற்கு எல்லையுண்டோ? இப்படியிருந்தும் வீண்போகாத அஸ்திரங்களை ராக்ஷஸர்களிடத்தில் ஏன் பிரயோகிக்கக்கூடாது? யுத்தகளத்தில் நாகர்களாவது கந்தர்வர்களாவது அஸுரர்களாவது தேவர்களாவது ராமனுடைய பாணவேகத்தைத் தடுக்கமுடியுமா? அந்த வீரருக்கு என்னிடத்தில் நிஜமான பிரேமையும் என்னை சீக்கிரத்தில் மீட்கவேண்டுமென்ற இச்சையும் இருந்தால் கூர்மையான பாணங்களால் ராக்ஷஸர்களை ஏன் நாசம் செய்யவில்லை? அவ்வளவென்ன? லக்ஷ்மணன் பலவானல்லவா? வீரனல்லவா? சத்துருக்களுக்குக் காலனல்லவா? ராமனிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு என்னை ரக்ஷிக்கக்கூடாதா? வாயுவிற்கும் அக்னிக்கும் ஸமமான வேகத்தையும் தேஜஸையும் உடைய அவ்விருவர்களும் தேவர்களாலும் எதிர்க்கப்படுவார்களா? அவர்கள் சேர்ந்திருந்தால் என்னை ஏன் கவனிக்கவில்லை? சத்துருவர்க்கங்களை வேரறுத்து என்னை ரக்ஷிக்க அவர்களுக்குச் சக்தியில்லையோ? இதுவரையில் அப்படிச் செய்யவில்லையோ? இப்பொழுது நான் படும் அவஸ்தைகளைப் பார்த்தால் தங்களுடைய பிராணனைக் கொடுத்தாவது என்னை ரக்ஷிப்பதற்கு நான் தகாதவளோ?

"ஆகையால் அவர்களிடத்திலாவது என்னிடத்திலாவது ஏதோ குற்றமிருக்கவேண்டும். அவர்கள் இப்படிச் செய்ய ஸமர்த்தர்களென்று எவரும் ஒப்புக்கொள்வார்கள். ஆகையால் என்னிடத்தில் பெரிய குற்றம் ஏதோ இருக்கிறது; ஸந்தேகமில்லை. நான் ஸர்வமும் தெரிந்தவளா? எனக்குத் தெரியாமல் நான் பாபத்தைச் செய்திருக்கலாம். அதை அனுபவித்தாலொழியத் தீருமோ? காரணமிருக்கையில் காரியம் உண்டென்பதில் சந்தேகமேது? ஒரு வேளை அவர் என்னை வனத்திற்கு அழைத்துப் போகமாட்டேனென்று சொன்னபொழுது, 'தாங்கள் புருஷ வேஷம் தரித்த ஸ்த்ரீ என்பதை அறியாமல் அநியாயமாய் என் தகப்பனுர் மோசம் போய் என்னைத் தங்களுக்கு விவாஹம் செய்துவிட்டாரே' என்று சொல்லி மஹாபராதத்தைச் செய்திருக்கிறேனல்லவா? அந்தப் பாவம் போதாதா?" என்ருள்.

ஸீதை இப்படித் தீனமாய்க் கண்ணீர் பெருகப் பிரலாபிப்பதைக் கேட்டு ஆஞ்ஜநேயர் மனம் கலங்கி, "தாயே! தங்களைப் பிரிந்த துக்கத்தால் ராமன் இதர விஷயங்களில் ஆசையற்றுச் சோக ஸமுத்திரத்தில் முழுகி இருக்கிருர். லக்ஷ்மணன் பரிதபிக்கிருர். ஸத்தியத்தின்மேல் ஆணையிட்டுச் சொல்கிறேன். இவ்வளவு கஷ்டப்பட்டுத் தங்களைக் கண்டுபிடித்தேன். மேலும் தாங்கள் கிலேசப்படவேண்டிய நியாயமென்ன?

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

முகூர்த்தத்தில் தங்களுடைய துக்கங்களெல்லாம் நாசமடைந்தன. மஹா பலவான்களான அந்தப் புருஷ சிரேஷ்டர்கள் தங்களைப் பார்க்க ஆவல் கொண்டு லங்கையைச் சாம்பலாக அழிக்கப் போகிறார்கள். துஷ்டனான ராவணனையும் அவனுடைய பந்துக்களையும் யுத்தத்தில் மடித்துத் தங்களை அயோத்யைக்கு அழைத்துக் கொண்டு போவார்கள். ஆகையால் ராகவனுக்கும் லக்ஷ்மணனுக்கும் தேஜஸ்வியான ஸுக்ரீவனுக்கும் வானரர்களுக்கும் நான் சொல்லவேண்டிய சமாசாரமென்ன?" என்றார்.

அதற்கு ஸீதை, சோகத்தால் குரல் தழுதழுக்க, "மாருதே! லோகத்தில் ஸ்த்ரீகள் இஹபர ஸாதகத்திற்காகவும் தங்களை ரக்ஷிப்பதற்காகவும் புத்திரர்களைப் பெறுகிறார்கள். என் மாமியாரான கௌஸல்யையோ அப்படிச் செய்யவில்லை. பெருந்தன்மையான ஸ்வபாவமுடையவராகையால், ஸகல லோகங்களையும் ரக்ஷிக்கும் புத்திரன் பிறக்கவேண்டுமென்று விரதங்களை அனுஷ்டித்து லோகோபகாரத்திற்காக ரகுவீரனைப் பெற்றாள். அவருடைய உத்தேசம் வீணாகுமோ? அவர் ரக்ஷிக்கவேண்டிய லோகத்தில் நானும் சேரவில்லையா? என்னை ரக்ஷிக்கவேண்டுமென்று நான் பிரார்த்திப்பதும் பிசகு; அந்தக் கவலை அவருக்கல்லவா? காலதாமதத்தை ஸஹிக்கமுடியாமல் நான் சீக்கிரப்படுவதே தவிர வேறல்ல. அவருக்கு என்னை ரக்ஷிக்கச் சக்தியிருந்தால் போதும். அப்பொழுது எனக்குக் குறை என்ன? அவருக்கு எப்பொழுதும் பக்தர்களை ரக்ஷிக்கும் சக்தியும் கருணையும் குறையாமலிருக்க வேண்டுமென்று நாம் பிரார்த்திக்க வேண்டியது மாத்திரமே. ஆகையால் ரகுவீரன் க்ஷேமமாக இருக்கிறாரா என்று நான் விசாரித்ததாகச் சொல். அவரை நான் சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்தேன் என்று சொல். ஏனென்றால் லோகத்தார்களைப்போல் அவரிடத்தில் நான் பிரார்த்திக்க வேண்டியது ஏதாவது இருந்தால் இந்த நமஸ்காரத்தைத் தவிர நான் செய்ய வேண்டியது வேறென்ன?

"மாலைகள், ரத்தினங்கள், பிரியமான பாரியைகள் இவைகளையும் இன்னும் இந்த விசாலமான பூமியில் அடையமுடியாத ஸம்பத்துக்களையும் விட்டு லக்ஷ்மணன் மாதாபிதாக்களிடத்தில் வணக்கமாய் உத்திரவு பெற்றுக்கொண்டு, தமையனிடத்தில் வைத்த ஸ்நேஹத்தாலும் பக்தியாலும் அவரைப் பின்தொடர்ந்து, அவருக்கு ஸகல கைங்கரியங்களையும் செய்து அரண்யத்தில் ரக்ஷித்து வருகிறானல்லவா? ஸிம்ஹத்தைப்போல், பலமுள்ள புஜங்களையும் நீண்டகைகளையுமுடையவன்; பெருந்தன்மையான ஸ்வபாவத்தையுடையவன்; பார்க்கப் பிரியமானவன்; தன் தாயைப்போல் என்னையும், பிதாவைப்போல் ராமனையும் பாவித்துச் சிசுருஷை செய்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V.Hariharan Collection - Sholinganallur, Chennai

பவன்; பெரியோர்களைப் பணிகிறவன்; ராமனுக்கு ஸகலவி... கைங்கரியத்தையும் செய்யும் பாக்கியம் பெற்றவன்; ஸகல காரிய... களையும் செய்ய ஸமர்த்தன்; அதிகமாகப் பேசாதவன்; என் மா... ஞரான தசரதருக்கு ஸமமானவன்; அவருக்குப் பிரியமான புத்... ரன்; என் பிரீதிக்கு எப்பொழுதும் பாத்திரன்; சிரேஷ்டன்; தைரி... வான்; ராமனுக்குத் தம்பி; கட்டளையிட்ட காரியங்களை நிர்வஹி... துச் செய்யக்கூடியவன்; அவனுடைய முகத்தைப் பார்த்து ராமன் தசரதர் காலம் சென்றதையும் நினைக்காதிருக்கிறார். எப்பொழு... பரிசுத்தன்; சமர்த்தன்; மிருதுவான ஸ்வபாவமுள்ளவன்; ராம... னுக்குப் பிரியன். என் விஷயத்தைக் கவனிக்கவேண்டுமென்... அவனை நான் க்ஷேமம் விசாரித்ததாகச் சொல். என்னை ராவண... அபகரித்துக்கொண்டு போனானென்று அவனுக்குத் தெரியா... இல்லாவிட்டால் இவ்வளவு காலம் நான் கஷ்டப்படவேண்டுமா...

"ஆஞ்ஜநேய! ராகவன் என் துக்கத்தை நாசம் செய்யும்ப... நீயே அவருக்குச் சொல்லவேண்டியது. வாநர சிரேஷ்ட! இந்... காரியத்தை நீயே முடித்து வைக்கவேண்டியது. உன் சாமர்த்திய... தால் ராகவன் என்னை மீட்க சகலப் பிரயத்தனங்களையும் செ... வேண்டியது. மஹாசூரனாகவும் என் நாதனாகவும் இருக்கும் ரா... னிடத்தில் 'தாசரதே! நான் ஒரு மாதத்திற்குமேல் பிழைத்திரு... மாட்டேன். இது சத்தியம். பூர்வத்தில் இந்திரன் விருத்திராஸ... னென்ற பிராஹ்மணனைக் கொன்று அந்த பிரஹ்மஹத்யையா... ஸ்வர்க்கத்தையும் ராஜ்யலக்ஷ்மியையும் இழந்து தரித்திரனு... கஷ்டப்பட்டான். அப்பொழுது நாராயணன் மற்ற தேவ... களுடன் அசுவமேதமென்ற வைஷ்ணவ யாகத்தைச் செய்து அ... னுடைய பாவத்தைப் போக்கிப் பூர்வ ஸ்திதியில் வைத்தா... அவனை விட்டு விலகின கௌசிகி என்ற ராஜ்யலக்ஷ்மி கவா... மென்ற புண்ணிய தீர்த்தத்தில் வஸித்துக் கொண்டிருந்தா... தேவர்கள் அங்கே சென்றவுடன் பாதாளத்தில் மறைந்தாள்; அ... பொழுது அவளை அழைத்து வரக்கூடியவர்கள் யாரென்று தே... கள் கவலை கொள்ள, ஆகாசவாணி, "அவளைக் கொண்டுவ... கூடியவர் உத்தம புருஷ லக்ஷணங்கள் பொருந்தின நாராயண... என்று சொன்னாள். அதைக் கேட்டுத் தேவர்கள் பகவா... பிரார்த்திக்க அவரும் லக்ஷ்மியை அழைப்பித்து ஸ்வர்க்கத்... வைத்தார். அப்படிப் பாபியான ராவணனால் வஞ்சிக்கப்ப... இங்கே சிறையில் வைக்கப்பட்டிருக்கும் என்னைத் தாங்க... ரக்ஷிக்கத் தகுந்தவர்கள் என்று அடிக்கடி சொல்லவேண்டிய... என்று சமாசாரத்தைத் தெரிவித்து ஸீதை தன் வஸ்திரத்திலி... மங்களகரமான சூடாமணியை எடுத்து ராகவனுக்கு அடைய... மாகக் காட்டும்படி ஆஞ்ஜநேயரிடத்தில் கொடுத்தாள். அ... அதை வணக்கமாய்ப் பெற்றுக்கொண்டு விரலில் தரித்...

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri Hariharan Collection, Sholinganallur, Chennai

பார்த்தார். ஆனுல், தான் விசுவரூபத்தை மாற்றி முன்பெடுத்த ஸூக்ஷ்மமான ரூபத்துடன் இருந்தபடியால் அது அந்த ஆபரணத்திற்கு ஸரியாகவில்லை.

பிறகு, ஹநுமான் ஸீதையை நமஸ்கரித்து பிரதக்ஷிணம் செய்து வணக்கமாய்ப் பக்கத்தில் நின்று ஜானகியைக் கண்ட ஸந்தோஷத்தால் பூரித்த தேகம் ஙங்கையில் இருந்தபோதிலும் மனத்தால் ராகவனுடைய திருவடிகளையடைந்து நமஸ்கரித்தார். பெருங்காற்றுல் கொஞ்சம் அசைந்து, பிறகு முன்போல் ஸ்திரமாயிருக்கும் மலையைப்போல், ஆஞ்ஜநேயர் ஸீதையைத் தேடியும் காணுமல் கலங்கிப் பிராணனை விட நிச்சயித்து, அவளைக் கண்ட பிறகு ஆனந்தப் பரவசராய், அவளிடத்திலிருந்து சூடாமணியைப் பெற்றுக்கொண்டு ராமனுடைய ஸன்னிதிக்குத் திரும்பிப்போக யத்தனித்தார்.

மணிவர முபக்[3]ருஹ்ய தம் மஹார்ஹம்
ஜநக ந்ருபாத்மஜயா த்[4]ருதம் ப்ரபா[4]வாத் ।
கி[3]ரிரிவ பவநாவது[4]த முக்த:
ஸுகி[2] தமநா: ப்ரதிஸங்க்ரமம் ப்ரபேதே[3] ॥ (73)



CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



கல்யாணுநாம் நித^{3}ாநம் கலிமல மத^{2}நம் பாவநம் பாவநாநாம்
பாதே^{3}யம் யந்முமுக்ஷோ: ஸபதி^{3}பரபத^{3} ப்ராப்தயே ப்ரஸ்தி^{2}தஸ்ய
விஶ்ராமஸ்த^{2}ாநமேகம் கவிவரவசஸாம் ஜீவநம் ஸஜ்ஜநாநாம்
பீ^{3}ஜம் த^{4}ர்மத்^{3}ருமஸ்ய ப்ரப^{4}வது ப^{4}வதாம் பூ^{4}தயே ராமநாம।

எல்லாவகை நன்மைகளுக்கும் இருப்பிடமானதும், கலி தோஷத்தை நீக்குவதும், தூயவற்றுள் தூயதும், பரமபதத்தை நாடிச் செல்லவேண்டி புறப்படும் முமுக்ஷுக்களுக்கு வழியுணவும், கவிகளுடைய வாக்கிற்கு இளைப்பாறுமிடமும், வணங்கி வழிபடும் நல்லோர்களுக்கு வாழ்வொளியும், அறநெறியாகிய மரத்திற்கு விதையுமான 'ராம' என்ற சொல் உங்களுக்கு நிறைந்த செல்வத்தைக் கொடுக்கட்டும்.

—முராரி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ ராமசந்த்ராய நம:

15. மறு பிறவியில் ஸகல சுகங்களும் பெற

(For Comforts in the Next Birth)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

யுத்த காண்டம் : ஸர்க்கம் 131

உமா ஸம்ஹிதா

ஸர்வ ஸௌக்²யாஸ்பதம் ப⁴ாவி ஜந்மகாங்க்ஷத்³பி⁴ராத³ராத் ।
அயோத்⁴யாயாம் ரகூ⁴த்தம்ஸ ராஜ்யபட்டாபி⁴ஷேசநம் ।
பட²நீயம் மாஸமாத்ரம் முத்³க³ாந்நம் விநிவேத³யேத் ॥

முன்வினைப்பயனுக இப்பிறப்பில் யாதொரு சுகமும் இன்றி அல்லல்பட்டு, மறுபிறப்பிலாவது ஸகல சுகமும் உண்டாக வேண்டுமென்று கோருபவரும், இப்பிறப்பில் ஸகல சுகங்களையும் அநுபவித்து மறுபிறப்பும் இத்தகையதாக இருக்கவேண்டுமென்று விரும்புபவரும் "ஸ்ரீராம பட்டாபிஷேகம்" அமைந்த யுத்த காண்டம் 131-வது ஸர்க்கத்தை ஒரு மாத காலம் பாராயணம் செய்யவேண்டும்.

நிவேதனம்: சிறு பயறு கலந்த வெண்பொங்கல்.

ஸங்கல்பம்

ஸ்ரீ ஸீதாலக்ஷ்மண ப⁴ரதசத்ருக்⁴ந ஹநுமத்ஸமேத
ஸ்ரீராமசந்த்ரப்ரபோ: ப்ரஸாதே³ந
ஸகல ஸுகோ²பேத ஜந்மாந்தர
ஸித்த்யர்த்தம், "ஸ்ரீராம பட்டாபிஷேகா"
த்மக ஸ்ரீமத்³-ராமாயண க⁴ட்ட பாராயணம்
அஹம் கரிஷ்யே ।

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸர்க்கம் 131

ராமமூர்த்தியின் பட்டாபிஷேக மஹோத்ஸவம்

ஶிரஸ்யஞ்ஜலி மாதா⁴ய கைகேய்யாநந்த³வர்த⁴ந: ।
ப³ப⁴ாஷே ப⁴ரதோ ஜ்யேஷ்ட²ம் ராமம் ஸத்யபராக்ரமம் ॥ (1)

அவதாரிகை

இப்படிப் புஷ்பகவிமானத்தைக் குபேரனுக்கு அனுப்பிவிட்டு, பரதனுடைய அனுமதியில்லாமல் அயோத்யையில் பிரவேசிக்கக் கூடாதென்று நினைத்து, நந்திக்கிராமத்தில் ராமன் தங்கியிருந்தார். அயோத்யா நகரத்து ஜனங்களும் அவரைவிட்டுப் பிரிய மனமில்லாமல் அங்கே இருந்தார்கள். கௌஸல்யை முதலிய ராஜஸ்த்ரீகளும் ராமனைச் சூழ்ந்திருந்தார்கள். பரதன் அவருடைய முக ஜாடைகளாலும் இங்கிதங்களாலும் உட்கருத்தையறிந்து தன் அபிப்பிராயத்தை வெளியிடுகிறார்.

பரதன் தலைமேல் கைகூப்பி, மஹாநுபாவரான தன் தமையனைப் பார்த்துப் பின்வருமாறு சொன்னார். கைகேயி அந்த வார்த்தைகளைக் கேட்டு முகம் மலர்ந்து பரமானந்தத்தை யடைந்தாள். ('கைகூப்பி' என்றதால் வனவாஸ காலத்தில் சித்ர கூடத்தில் செய்த ப்ரபத்தியை ஞாபகப்படுத்துகிறார். தனக்கு வேறு கதியில்லையென்று தெரிவிப்பதற்காகக் கைகூப்பினார்.)

"ஸ்வாமி! தாங்கள் இந்த ராஜ்யத்தை வேண்டாமென்று ஒப்புக்கொள்ளாமல் வனவாஸம் செய்ததால், என் மாதாவின் மனத்தை ஸந்தோஷப்படுத்தினீர்கள். பிறகு சித்ரகூடத்தில் இதை என்னிடத்தில் ஒப்புவித்தீர்கள். ஆகையால் தாங்கள் என்னிடத்தில் அடைக்கலமாய் வைத்த கோஸல ராஜ்யத்தை இப்பொழுது தங்களிடத்தில் மறுபடியும் கொடுத்துவிட்டேன். ஆனால், "நான் கேட்டபொழுது நீ கொடுக்கலாம்; அதுவரையில் வைத்துக் கொண்டிரு. நான் அயோத்யையில் ஸகல போகங்களையும் அனுபவித்துக்கொண்டு ஸுகமாய் வஸிக்கிறேன். நீயே ராஜ்யத்தை ஆண்டு வா" என்று சொல்வீர்கள். பூர்ண பலமுள்ள ஓர் எருது தனியாக ஸஹாயமில்லாமல் சுமந்து வந்த வாகனத்தைச் சிறு கன்றுக்குட்டி சுமக்குமா? அப்படியானால் இதுவரையில் எப்படி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆண்டு வந்தாயென்று கேட்பீர்கள்; ஆற்றில் ஜலத்தின் வேகத்தைத் தடுப்பதற்கு மரக்கிளைகள், வைக்கோல், மரம் முதலிய பதார்த்தங்களால் உறுதியாய் அணை கட்டாவிட்டால், அங்கங்கே சிறு துவாரங்கள் ஏற்பட்டு அவைகளின் வழியாய் ஜலம் பிரவாஹித்து முடிவில் அணையை அடித்துக்கொண்டு போவதுபோல், இந்த ராஜ்ய பாலனம் ஸுலபமல்ல. ஆளுகிறவனுக்கு உத்தம குணங்களென்ற பலமான அணையில்லாவிட்டால் ராஜ்ய ரஹஸ்யங்கள் சீக்கிரத்தில் வெளிப்படும். ஆனால், 'என்னைப்போல் நீயும் பிரஜைகளை உத்தமகுணங்களால் வசப்படுத்தக்கூடாதா?' என்பீர்கள். உத்தம அச்வத்தின் நடைக்கும் கழுதையின் நடைக்கும் உவமையுண்டோ? காக்கை ராஜஹம்ஸத்தைப் போலாகுமோ? தாங்கள் போகும் வழியில் வேறொருவர் அடிவைக்க முடியுமோ? ஆனால் 'நானும் உனக்கு ஸஹாயமாயிருக்கிறேன். நீயே ராஜ்யத்தை ஆண்டு வா' என்பீர்கள். ஒரு குடும்பி தன் வீட்டில் ஓர் உத்தமஜாதி விருக்ஷத்தை வைத்துப் பயிராக்குகிறான். அது காலக்கிரமத்தில் விசாலமான கிளைகளுடன் அழகான புஷ்பங்களால் நிறைந்து விளங்கிற்று ஆனால் ஒரு பழமாவது கிடையாது. அப்படியிருந்தால் அதை வளர்த்தவனுக்கு என்ன பிரயோஜனம்? நமது பிதா அறுபதாயிரம் வர்ஷங்கள் வரையில் புத்திரனில்லாமல் அச்வமேதம் புத்ரகாமேஷ்டி முதலிய யாகங்களைச் செய்து தங்களைப் பெற்றார். தாங்கள் லோகோத்தமமான அனந்த கல்யாண குணங்களுடன் வளர்ந்து வந்தீர்கள். இந்த ராஜ்யத்தைத் தங்களிடத்தில் ஒப்புவித்துத் தான் செய்த பிரயத்தனங்களின் பலனை அனுபவிக்கலாமென்று அவர் நினைத்தார். இப்பொழுது ஸகல பூமண்டலத்தையும் தர்மமாய்ப் பரிபாலனம் செய்யத் தகுந்த உத்தம குணங்கள் தங்களிடத்திலிருந்து, வம்ச பரம்பரையாய் ஜ்யேஷ்ட புத்திரர்களால் ஆளப்பட்டு வந்த இந்த ராஜ்யத்தைத் தாங்கள் ஆளாவிட்டால் தங்களைப் பெற்று வளர்த்ததன் பிரயோஜனமென்ன? ஸூரியன் மத்யான்ன காலத்தில் ஆகாசவீதியில் பூர்ணகிரணங்களுடன் ஸகல ஜகத்திற்கும் பிரகாசத்தையும் ஆயுளையும் கொடுத்துக்கொண்டு விளங்குவதுபோல், தாங்கள் பட்டாபிஷேக மஹோத்ஸவம் பெற்று ஸிம்ஹாஸனத்திலிருந்து எங்களெல்லோருக்கும் க்ஷேமத்தைக் கொடுப்பதை நாங்கள் பார்த்து மகிழ்கிறோம். விடியற்காலத்தில் மதுரமான கானங்களாலும், வாத்ய சப்தங்களாலும், தண்டை சலங்கைகளால், அலங்கரிக்கப்பட்ட உத்தம ஸ்த்ரீகளின் நாட்டியங்களாலும், தாங்கள் எழுப்பப்படுவதை நாங்கள் கண்டு மகிழ்கிறோம். ஸகல போகங்களையும் அநுபவிக்கத் தகுந்தவர் தாங்களே. ஆனால், 'நீங்களும் என்னுடன் பிறந்தவர்களல்லவா? உங்களுக்கும் ராஜ்யபாலனம் செய்யவேண்டுமென்ற ஆசையில்லையோ?' என்று கேட்பீர்கள், ஸூரிய சந்திரகிரஹங்கள்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உள்ள வரையிலும், இந்தப் பூமியுள்ள வரையிலும் தாங்கள் எங்களைப் பரிபாலனம்செய்துவரவேண்டுமென்பதே எங்களுடைய பிரார்த்தனை" என்றார்.

ராமன் பரதனுடைய சரணாகதியை அங்கீகரித்து உத்தமமான ஆஸனத்தில் உட்கார்ந்தார். பிறகு ஸுகமாயும் சீக்கிரமாயும் சாதுர்யமாயும் க்ஷவரம் செய்யக்கூடியவர்களைச் சத்ருக்னர் தருவிக்க, அவர்கள் ராமலக்ஷ்மண பரதசத்ருக்னர்களுடைய ஜடைகளை நீக்கினார்கள். பரதன், லக்ஷ்மணன், ஸுக்ரீவன், விபீஷணன் முதலியவர்கள் ஸ்நானம் செய்தபிறகு விசித்திரமான மாலைகளாலும் பரிமளங்களாலும், வஸ்திரங்களாலும், ஆபரணங்களாலும் ராமலக்ஷ்மணர்களைச் சத்ருக்னன் அலங்காரம் செய்வித்தார். தசரதருடைய பத்தினிகள் ஸீதைக்கு ஸகல அலங்காரங்களையும் தாங்களே செய்தார்கள். தாரை முதலிய வானர ஸ்த்ரீகளுக்கு ஸகல அலங்காரங்களையும் ராமனிடத்தில் எல்லையற்ற வாத்ஸல்யத்தை வைத்த கௌஸல்யை செய்வித்தாள். பிறகு சத்ருக்னனுடைய உத்தரவால் இக்ஷ்வாகு குல ஸாரதியான ஸுமந்திரர், உத்தம அச்வங்கள் பூட்டின ராஜ ரதத்தைக் கொண்டு வந்து நிறுத்தினார். ஸூரிய மண்டலத்தைப்போல் பிரகாசிக்கும் அந்த ரதத்தைப் பார்த்து ராமன் ஸந்தோஸமடைந்து அதில் ஏறினார். ஸுக்ரீவனும் ஹநுமானும் மஹேந்திரனைப்போல் தேஜஸால் ஜ்வலித்துக்கொண்டு, நேர்த்தியான வஸ்திராபரணங்களால் அலங்கரிக்கப்பட்டு ராமனுடன் போனார்கள். ஸுக்ரீவனுடைய பார்யைகளும் ஸீதையும் திவ்யாலங்காரங்களுடன் அயோத்யையைப் பார்க்க ஆசை கொண்டு, அவர்களுடன் போனார்கள்.

பிறகு அயோத்யையில் தசரதருடைய மந்திரிகளும் வஸிஷ்டரும் ராமனுடைய பட்டாபிஷேகத்திற்கு வேண்டிய மங்களத் திரவியங்களை ஸம்பாதித்தார்கள். அசோகன், விஜயன், ஸுமந்திரன் முதலியவர்கள், "ராமனுக்கு க்ஷேமமும் ஸுகமும் ஐச்வரியமும் விருத்தியாவதற்கும், இந்த நகரமும் ராஜ்யமும் எப்பொழுதும் மங்களத்தை அடைவதற்கும் வேண்டிய ஸகல சுபக்ரியைகளையும் குறைவில்லாமல் செய்யவேண்டியது" என்று வஸிஷ்டரைப் பிரார்த்தித்து, ராமனைப் பார்ப்பதற்காகத் திரும்பி வந்தார்கள். திவ்ய அச்வங்கள் பூட்டின ரதத்தில் மாதலி ஸாரத்யம் செய்ய, தேவகணங்கள் புடைசூழ இந்திரன் வருவதுபோல், திவ்யமான ரதத்தில் ஸுமந்திரர் ஸாரத்யம் செய்ய, சகோதரர்களும், வானரர்களும், ராக்ஷஸர்களும், பிரஜைகளும் புடைசூழ ராமசந்திரன் விளங்குவதைக் கண்டார்கள். பரதன் கடிவாளங்களைப் பிடித்துக்கொண்டு சுமந்திரருக்குப் பக்கத்திலிருந்து ஸாரத்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

யம் செய்துவந்தார். சத்ருக்னன் இக்ஷ்வாகு சக்கரவர்த்திகளுடைய வெண்குடையைப் பிடித்தார். லக்ஷ்மணன் ராமனுக்கு முன் நின்று வெண்சாமரத்தை விசிறினர். ராக்ஷஸாதிபதியான விபீஷணன் மற்றொரு வெண்சாமரத்தை விசிறினன். அப்பொழுது ஆகாச வீதியில் தேவ, கந்தர்வ, யக்ஷ, கின்னர, வித்யாதர, உரக, கருட, பன்னக, ஸித்த, ஸாத்ய, நாக, மருத்கணங்கள், ராவணுடைய ராக்ஷஸர்களை நாசம் செய்து தங்களுக்கு எல்லையற்ற சுகத்தையும் க்ஷேமத்தையும் கொடுத்ததைப்பற்றி, ராமனைக் கொண்டாடும் மதுரமான த்வனி கேட்கப்பட்டது. மஹாபர்வதத்தைப்போல் மதஜலத்தைப் பெருகவிட்டுக்கொண்டிருக்கும் சத்ருஞ்ஜயனென்ற பட்டத்து யானையின் மேல் சுக்ரீவன் ஏறி, ஐராவதத்தின்மேல் விளங்கும் இந்திரனைப்போல் பிரகாசித்தான். இதர வானரர்கள் மனுஷ்ய ரூபத்துடன் ஸர்வாபரண பூஷிதர்களாய் ஒன்பதாயிரம் மதயானைகளின்மேல் ஏறி வந்தார்கள். இப்படிச் சங்கம், பேரி, துந்துபி, வீணை, மிருதங்கம் முதலிய வாத்யகோஷங்களுடன் ரகு வீரன் அயோத்யையை நோக்கிப் போனர். மந்திரிகள் அவரை 'ஜய விஜயீபவ' என்று வாழ்த்தி, அவரால் உபசரிக்கப்பட்டு, அவரைப் பின்தொடர்ந்து வந்தார்கள். பிரஜைகளாலும், பிராம்மணர்களாலும் மந்திரிகளாலும் சூழப்பட்டு, ராகவன், ஆகாசவீதியில் நக்ஷத்திரங்களால் சூழப்பட்ட சந்திரனைப்போல் பிரகாசித்தார். அவருக்குமுன் அநேகர் மங்களவாத்யங்களைக் கோஷித்துக் கொண்டு சென்றார்கள். ஸ்வஸ்திகம் முதலிய மதுரமான வாத்யங்களை அநேகர் வாசித்துக்கொண்டு போனர்கள். கன்யைகளும் பிராம்மணர்களும், மஞ்சள் கலந்த அக்ஷதைகளை எடுத்துக் கொண்டு போனர்கள். உத்தம லக்ஷணங்களுள்ள பசுக்கள் சென்றன. ராமனுக்கும் சுக்ரீவனுக்கும் நேர்ந்த ஸ்நேஹத்தையும், வாயு புத்திரனுடைய பிரபாவத்தையும், வானரர்களுடைய பராக்கிரமத்தையும், ராக்ஷஸர்களுடைய பலத்தையும், விபீஷணனுடைய ஸஹாயத்தையும் ராமன் மந்திரிகளுக்கு விஸ்தாரமாக எடுத்துச் சொன்னர். அதைக் கேட்டு நகரத்து ஜனங்கள் ஆச்சரியமடைந்தார்கள்.

இப்படிப் பேசிக்கொண்டே ஸகல ஸௌக்யங்களும் பொருந்தின ஜனங்களால் அலங்கரிக்கப்பட்ட அயோத்யையில் ராமன் பிரவேசித்தார். ஒவ்வொரு வீட்டிலும் மாலைகளாலும் ஹாரங்களாலும், தோரணங்களாலும், கொடிகளாலும், த்வஜங்களாலும் விசித்திரமாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ராமன் பிரஜைகளால் வாழ்த்தப்பட்டு இக்ஷ்வாகு வம்சத்தார்கள் வசிக்கும் அரண்மனையில் பிரவேசித்தார். கௌஸல்யை, சுமித்திரை, கைகேயி முதலிய ராஜபத்னிகளை நமஸ்கரித்து, பரதனை நோக்கி, 'அழகான அசோக தோட்டத்துடன் விளங்கும் என் உத்தமமான அரண்மனையை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சுக்ரீவன் தங்கட்டும்' என்றார் அவருடைய அபிப்பிராயத்தை பரதன் அந்த வார்த்தைகளால் அறிந்துகொண்டு சுக்ரீவனுடைய கையைப் பிடித்து, அந்த அரண்மனைக்கு அழைத்துக்கொண்டு போனார். பிறகு பரிசாரகர்கள் சத்ருக்னனுடைய உத்திரவால் தீபங்களையும், ஆசனங்களையும், விரிப்புகளையும், படுக்கைகளையும் அந்த அரண்மனையில் கொண்டுபோய் வைத்தார்கள். பிறகு சத்ருக்னன் சுக்ரீவனைப் பார்த்து, "ப்ரபோ! ராமனுடைய அபிஷேகத்திற்காக வானரர்களை அனுப்புங்கள்" என்றார். உடனே ஸுக்ரீவன் நான்கு வானர ச்ரேஷ்டர்களை அழைத்து ரத்னங் களிழைத்த நான்கு ஸ்வர்ண குடங்களைக் கொடுத்து, "வானரர் களே! பொழுது விடியுமுன் நான்கு திக்குகளிலுள்ள ஸாகரங் களிலிருந்தும், புண்ய தீர்த்தங்களிலிருந்தும் பரிசுத்தமான ஜலத் தைக் கொண்டுவந்து ஸித்தமாயிருக்கவேண்டும்" என்று ஆக்ஞாபித்தான் உடனே மதயானைகளைப்போன்ற வானரவீரர்கள் ஆகாசத்தில் கிளம்பிக் கருடனைப்போல் அதிவேகமாய்ப் போனார் கள். ஜாம்பவான், ஹநுமான், வேகதர்சீ, ரிஷபன் முதலியவர்கள் தங்கக் கலசங்களில் ஐந்நூறு நதிகளிலிருந்து புண்யதீர்த்தங்களைக் கொண்டுவந்தாாகள். சுஷேணன் கிழக்கு ஸமுத்திரத்திலிருந்தும், ரிஷபன் தெற்கு ஸமுத்திரத்திலிருந்தும், கயவன் மேற்கு ஸமுத் திரத்திலிருந்தும், நளன் வடக்குஸமுத்திரத்திலிருந்தும் ஜலத்தைக் கொண்டுவந்தார்கள். வானரர்கள் ராமனுடைய அபிஷேகத்திற் காகப் புண்யஜலங்களைக் கொண்டுவந்தார்களென்றறிந்து, சத்ருக்னனும் மந்திரிகளும் வஸிஷ்டருக்கும் இதர ஸ்நேஹிதர் களுக்கும் தெரிவித்தனர்.

ஸ்ரீ ராம பட்டாபிஷேக மஹோத்ஸவம்

த்த : ஸ ப்ரயதோ வ்ருத்³:தோ⁴ வஸிஷ்டே²ா ப்³ராஹ்மணை: ஸஹ ।
ராமம் ரத்நமயே பீடே² ஸஹஸீதம் ந்யவேஶயத் ॥
வஸிஷ்டே²ா வாமதே³வஶ்ச ஜாபா³லிரத²² காஶ்யப: ।
காத்யாயந: ஸுயஜ்ஞஶ்ச கௌ³தமோ விஜயஸ்தத²ா ॥
அப்⁴யஷிஞ்சந் நரவ்யாக்⁴ரம் ப்ரஸந்நேந ஸுக³ந்தி⁴நா ।
ஸலிலேந ஸஹஸ்ராக்ஷம் வஸவோ வாஸவம் யத²ா ॥
ரித்விக்³பி⁴: ப்³ராஹ்மணை: பூர்வம் கந்யாபி⁴ர் மந்த்ரிபி⁴ஸ் தத²ா ।
யோதை⁴ஶ்சைவாப்⁴யஷிஞ்சம்ஸ்தே ஸம்ப்ர ஹ்ருஷ்டா: ஸநை²கமை: ।

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Nanganallur, Chennai

பிறகு, இக்ஷ்வாகு குல சக்கரவர்த்திகளுக்குக் குருவும், தீர்க்காயுஸுள்ளவருமான வஸிஷ்ட மஹர்ஷி, இந்திரியங்களையும் மனத்தையும் ஸமாதானம் செய்து ஸகல பிராம்மணர்களுடைய அனுமதியைப் பெற்றுக்கொண்டு, ஸ்ரீராமனை ஸீதா தேவியுடன் ரத்னமயமான ஸிம்ஹாஸனத்தில் உட்காரச் செய்தார். தேவேந்திரனை அஷ்டவஸுக்கள் அபிஷேகம் செய்வதுபோல், வஸிஷ்டர், வாமதேவர், ஜாபாலி, காச்யபர், காத்யாயனர், ஸுயக்ஞர், கௌதமர், விஜயரென்ற எட்டு மஹாத்மாக்களும், வேதோக்த மந்திரங்களை ஜபித்து, ராமசந்திரனைப் பரிமளத் திரவியங்கள் கலந்த புண்ய தீர்த்தத்தால் விதிப்படி பட்டாபிஷேகம் செய்தார்கள். பிறகு ஸகல ஔஷதிகளும் ரஸங்களும் கலந்த புண்ய ஜலத்தால் ரித்விக்குகளும், பிராஹ்மணர்களும், கன்னிகைகளும், மந்திரிகளும், யுத்த வீரர்களும் வர்த்தகத் தலைவர்களும் ரகுவீரனை அபிஷேகம் செய்தார்கள்.

ஆகாச வீதியில் லோகபாலர்களும் தேவகணங்களும் நின்று ஆனந்தமாய்க் கொண்டாடினார்கள். சத்ருக்னன் வெண்குடை பிடித்தார். ஸுக்ரீவன் வெண்சாமரம் போட்டார். இந்திரனால் அனுப்பப்பட்ட வாயுபகவான் எண்ணிறந்த தங்கத் தாமரைப் புஷ்பங்களால் அமைக்கப்பட்ட ஒரு பிரகாசமான மாலையையும் நவரத்தினங்கள் கலந்த ஒரு முத்துஹாரத்தையும் கொண்டு வந்தார். தேவகந்தர்வர்கள் அந்த மஹோத்ஸவ ஸமயத்தில் மதுரமாய்ப் பாடினார்கள். அப்ஸரஸ்கணங்கள் சாதுரியமாய் நாட்டியம் செய்தார்கள். ஸமஸ்த பயிர்களால் பூமி செழித்தது. விருக்ஷங்கள் பழங்களால் நிறைந்தன. புஷ்பங்களிலிருந்து நேர்த்தியான பரிமளம் வீசிற்று. எண்ணிறந்த பசுக்களையும் கன்றுகளையும், காளைகளையும், குதிரைகளையும், முப்பது கோடி தங்க நாணயங்களையும் பலவித ஆபரணங்களையும் வஸ்திரங்களையும் ரகுநாதன் பிராஹ்மணர்களுக்கும் மற்ற ஜாதியார்களுக்கும் கொடுத்தார். நவரத்தினங்களிழைத்து, ஸூரியனைப்போல் பிரகாசிக்கும் ஒரு தங்க ஹாரத்தை ராகவன் ஸூரிய புத்திரனான ஸுக்ரீவனுக்குக் கொடுத்தார். வாலி புத்திரனான அங்கதனுக்கு நவரத்னங்களிழைத்த இரண்டு அங்கதங்களைக் (அதாவது, தோள் வளைகளை) கொடுத்தார். சந்திர கிரணங்களைப்போல் ஒளி வீசும் ரத்தினங்கள் கலந்த ஒரு முத்துஹாரத்தை ஸீதைக்குக் கொடுத்தார். அவள் இரண்டு உத்தமமான வஸ்திரங்களையும் அநேக ஆபரணங்களையும் பர்த்தாவின் அனுமதியைக் கண்ஜாடையால் அறிந்து ஆஞ்ஜநேயருக்குக் கொடுத்தாள். பிறகு தன் கழுத்திலிருந்து அந்த ஹாரத்தைக் கழற்றி, ஸகல வானரர்களையும் திரும்பப் பர்த்தாவையும் ஸீதை அடிக்கடி பார்த்தாள். ராமன் அவளுடைய கருத்தை அறிந்து, "ஸீதே! எவனிடத்தில் உனக்கு விசேஷ திருப்தி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

யிருக்கிறதோ, எவனிடத்தில் ஆண்மையும் பராக்கிரமும் புத்தியும் எல்லையற்று விளங்குகின்றனவோ அவனுக்கு இதை வெகுமானமாகக் கொடு" என்றார். உடனே ஸீதை அந்த ஹாரத்தை ஆஞ்ஜநேயருக்குக் கொடுத்தாள். அதனால் ஹநுமான் சந்திர கிரணங்கள் சூழ்ந்த வெண்மையான மேகங்களால் விளங்கும் பர்வதத்தைப் போல் பிரகாசித்தார். மைந்தன், த்விவிதன், நீலன் முதலிய ஸகல வானரர்களுக்கும் அவரவர்களுடைய உத்தம குணங்களுக்குத் தகுந்தபடி வஸ்திரங்களையும் பூஷணங்களையும் அபரிமிதமாய்க் கொடுத்தார். விபீஷணன், ஸுக்ரீவன், ஹநுமான், ஜாம்பவான் முதலிய வானர வீரர்கள் ரத்னங்களாலும், வஸ்திரங்களாலும், ஆபரணங்களாலும், பூஷணங்களாலும் வெகுமதி செய்யப்பட்டு தங்களிருப்பிடம் போனார்கள். வானரர்கள் அந்த பட்டாபிஷேக மஹோத்ஸவத்தைக் கண்டு களித்து, ராமனிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு கிஷ்கிந்தைக்குச் சென்றார்கள். ராக்ஷஸாதிபதியான விபீஷணன் இக்ஷ்வாகு வம்சத்தரசர்களுக்குக் குலதனமான ஸ்ரீரங்கவிமானத்தை ராமனிடத்திலிருந்து பெற்று லங்கைக்குப் போனான். விபீஷணன் ஸகல சத்ருக்களையும் ஜயித்து, மஹாகீர்த்திசாலியாய்த் தர்மராஜ்யம் செய்து வந்தான்.

ராமன் பிரஜைகளைத் தன் குழந்தைகளைப்போல் பாதுகாத்து துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனம் செய்து வந்தார். பிறகு, "லக்ஷ்மண! தர்ம ரஹஸ்யங்களை அறிந்த புத்திமானே! நமது முன்னோர்களால் ஆளப்பட்டு வந்த இந்த ராஜ்யத்தை என்னுடன் நீயும் பரிபாலனம் செய். உன்னை யுவராஜாவாக நியமிக்கிறேன்" என்றார். அவர் எவ்வளவு சொல்லியும் லக்ஷ்மணன் கொஞ்சமாவது ஸம்மதிக்கவில்லை. பகவானுக்குப் பரதந்திரனாயிருக்கும் தர்மத்தையே அனுஷ்டித்த பரதனுக்கு ராமன் யௌவராஜ்ய பட்டாபிஷேகம் செய்வித்தார். பௌண்டரீகம், அச்வமேதம், வாஜபேயம் முதலிய யாகங்களைக் கணக்கில்லாமல் செய்தார். பதினோராயிரம் வர்ஷங்கள் வரையில் ராஜ்யத்தை ஆண்டார். அபரிமிதமான தக்ஷிணைகளுடன் எண்ணிறந்த அச்வமேதயாகங்களைச் செய்தார். முழங்கால் வரையில் நீண்ட திருக்கைகளுடனும், மேருமலையைப் போன்ற திருமார்புடனும், மஹாப் பிரதாபசாலியாய், லக்ஷ்மணனால் எப்பொழுதும் உபசரிக்கப்பட்டு லோகத்தை ஆண்டார். பந்துக்களுடனும் மித்திரர்களுடனும் பலவகையக்ஞங்களைச் செய்து முடித்தார். அவருடைய ராஜ்யத்தில் ஸ்த்ரீகள் புருஷனை இழந்து வருத்தப்பட்டதில்லை; துஷ்ட மிருகங்களால் உபத்திரவமுமில்லை; வியாதியால் பீடிக்கப்பட்டவர்களில்லை; திருடர்களால் பயமில்லை; ஒருவனுக்கும் கஷ்டமென்பது நேரவில்லை; அகாலத்தில் ஒருவரும் மரணமடையவில்லை; எல்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

லோரும் ஸந்தோஷமாய்க் காலம் கழித்தார்கள்; எல்லோரு தர்மத்திலேயே நாடின மனமுடையவர்களாயிருந்தார்கள். தர் ஸ்வருபியான ராமனுடைய ஆசாரத்தையே பிரஜைகளும் அ சரித்து ஒருவரையொருவர் உபத்திரவிக்கவில்லை. அநேக வர்ஷ கள் ஜீவித்திருந்து, அநேக ஆயிர புத்திரர்களுடன், வியாதியில் மலும் சோகமில்லாமலும் வாழ்ந்தார்கள். ராமன் ராஜ்யத் ஆளும்பொழுது எங்கே பார்த்தாலும் 'ராமன் ராமன்' என் எல்லோரும் அவருடைய சரித்திரங்களை வர்ணித்து அவரை கொண்டாடினார்கள். ஜகத் முழுவதும் ராமமயமாயிற்று. எந் ருதுவிலும் விருக்ஷங்கள் விசாலமான கிளைகளுடனும் புஷ் களுடனும் பழங்களுடனும் செழித்தன. மேகங்கள் அந்தந் காலத்தில் மழை பெய்தன. காற்று ஸுகமாய் வீசிற்று. பிரா மணர்களும், க்ஷத்திரியர்களும், வைச்யர்களும், நான்காம் வர்ண தவர்களும் பேராசையற்றவர்களாய், தங்களுடைய வர்ணசிர தர்மங்களைத் திருப்தியாயும் ஸந்தோஷமாயும் நடத்தி வந்தார்க சகல பிரஜைகளும் தர்மத்தில் பிரியமுள்ளவர்களாயும், தர் தில் எப்பொழுதும் நோக்கமுள்ளவர்களாயும், ஸத்யவா களாயும், சுபலக்ஷணங்கள் பொருந்தியவர்களாயுமிருந்தார்க ஸ்ரீ ராமன் ஸஹோதரர்களால் உபசரிக்கப்பட்டு, பதினோராயிர வர்ஷங்கள் வரையில் நிகரற்ற காந்தியுடன், ராஜ்யபாலன செய்தார்.

வால்மீகி மஹர்ஷியால் ஆதியில் செய்யப்பட்ட இந் காவியம் தனத்தையும், கீர்த்தியையும், ஆயுளையும், ஜயத்தை அரசர்களுக்குக் கொடுக்கும். இதைப் படித்தவனும் கேட்டவ பாபத்திலிருந்து விடுபடுகிறான் ராமனுடைய பட்டாபிஷே மஹோத்ஸவக் கதையைக் கேட்பவன் புத்திரர்களை விரும்பி புத்திரர்களை அடைகிறான்; தனத்தை விரும்பினால் தனத்தை அ கிறான். அரசனாயிருந்தால் சத்துருக்களை ஜயித்து லோகத்தை ஆ கிறான். ஸ்த்ரீகளாயிருந்தால் கௌஸல்யை ராமனை அடைந் போலும், ஸுமித்திரை லக்ஷ்மணனை அடைந்ததுபோலும், கைகே பரதனைஅடைந்ததுபோலும், தீர்க்காயுளுள்ள உத்தமபுத்திரர் அடைகிறார்கள். இந்த ராமாயணத்தையும் ராமனுடைய விஜ தையும்கேட்கிறவன் தீர்க்காயுளைப் பெறுகிறான். வேதார்த்தங் விளக்கும் பொருட்டு வால்மீகி மஹர்ஷியால் செய்யப்பட் இந்த உத்தம காவியத்தை, காமக்குரோதங்களை அடக்கி சிரத் யுடன் கேட்கிறவன் ஸகல கஷ்டங்களையும், ஸகலக் கிலே களையும் தாண்டுகிறான். தூரதேசத்திற்குப் போயிருந்தால் புத்திரமித்திர பந்துக்களுடன் சேருகிறான். ரகுநாதனிட லிருந்து வேண்டிய வரங்களைப் பெறுகிறான். இந்த ராமாயண ணதைக் கேட்பவனிடத்தில் ஸகல தேவதைகளும் ப்ரீதி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Chengalpattu, Chennai

றுர்கள். அவனுடைய கிருஹத்திலிருக்கும் விநாயகர்களென்ற தேவதைகள் பிரஸன்னமாகின்றன. அரசனுயிருந்தால் இந்தப் பூமியை ஜயிப்பான். தேசாந்திரம் போனவனுயிருந்தால் க்ஷேமமாய் வந்து சேருவான். யௌவன ஸ்த்ரீகள் இதைக் கேட்டால் உத்தமமான புத்திரர்களைப் பெறுவார்கள். இந்தப் புராதனமான இதிஹாஸத்தைப் பிரதி தினமும் பூஜித்துப் படித்தால் ஸகல பாபங்களிலிருந்தும் விடுபட்டும் தீர்க்காயுளை அடைவார்கள். க்ஷத்ரியர்கள் எப்பொழுதும் இந்தப் புண்ய சரித்திரத்தை நமஸ்கரித்து பிராஹ்மணர்களிடத்திலிருந்து கேட்கவேண்டியது. அவர்களுக்குஅளவற்ற ஐச்வரியமும் புத்திர லாபமும் கிடைக்கும். இந்த ராமாயணம் முழுவதையும் எப்பொழுதும் ஒருவன் கேட்டாலும் படித்தாலும் ஸ்ரீராமமூர்த்தி அவனிடத்தில் அழிவற்ற ப்ரீதியை வைக்கிறுர். அவர் அனுதியான மஹாவிஷ்ணு வல்லவா? ஆதிதேவனும் மஹானுபாவரும் ஸர்வேச்வரனுமான ஆதிசேஷனே லக்ஷ்மணனுயும் அவதரித்தார்கள். இந்த மங்களகரமான காவியத்தைக் கேட்கிறவர்களுக்குக் குடும்ப விருத்தியும் தனதான்ய விருத்தியும் உத்தமமான ஸுகமும் கிடைக்கும். ஸகல புருஷார்த்தங்களும் கைகூடும். ஸகல மனேரதங்களும் நிறைவறும். உத்தமமான ஸத்ரீகளை அடைவார்கள். தீர்க்காயுளும் தேஹாரோக்கியமும் கீர்த்தியும் ஸகோதரர்களின் ஒற்றுமையும் தீக்ஷ்ணமான புத்தியும், அழிவற்ற ஸுகமும் கிடைக்கும். தேஜஸ், பலம், வீரியம் முதலியவைகளைக் கொடுக்கும். இந்தக் கிரந்தத்தை, ஐச்வரியத்தை விரும்பும் ஒவ்வொருவரும் நியமத்துடன் கேட்கவேண்டியது.

வெகு காலத்திற்குமுன் நடந்த இந்தச் சரித்திரம் இவ்விதமாய்ச் சொல்லப்பட்டது. உங்களுக்கு ஸகல மங்களங்களும் உண்டாகட்டும். விஷ்ணுவினுடைய மனே வாக்கிற்கெட்டாத சக்தி, லோகங்களில் விருத்தியடையட்டுமென்று ஸந்தேஹமில்லாமல் வெட்கப்படாமல் நிச்சயமாய்ச் சொல்லுங்கள். ராமாயணத்தைப் படிப்பதாலும் கேட்பதாலும் ஸகலதேவர்களும் சந்தோஷமடைகிறுர்கள். ராமாயணத்தைக் கேட்பதால் பித்ருக்களும் ஸந்தோஷமடைகிறுர்கள். வேத ஸம்ஹிதைக்கு ஸமமான இந்த வால்மீகி ராமாயணத்தைப் பக்தியுடன் எழுதுகிறவர்கள் எந்நாளும் ஸ்வர்க்கத்தில் வஸிப்பார்கள்.

ப⁴க்த்யா ராமஸ்ய யே சேமாம் ஸம்ஹிதாம் ரிஷிணு க்ருதாம்।
லேக²யந்தீஹ ச நார: தேஷாம் வாஸஸ் த்ரிவிஷ்டபே ॥ (121)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



ஸ்ரீ ராமாயண மகிமை

ஸ்ரீராமாயண மாதி3காவ்யம்ருஷிணா வால்மீகிநா நிர்மிதம்
வேத3ாந்தார்த்த2 விஶாரதை3 ரநுதி3நம் ஸ்துத்யம்
ஸுரைரர்சிதம்।
ஶ்ரோத்ருணா மக4நாஶநம் ஸுரதரோஸ் துல்யம் து முக்திப்ரத3ம்
யே ஶ்ருண்வந்தி பட2ந்தி ராமசரிதம் தே யாந்தி விஷ்ணோ:
பத3ம்।

—ஸ்ரீராம கர்ணாம்ருதம் 1-106.

வேதாந்திகளால் கொண்டாடப்படுவதும், தேவதைகள் வணங்குவதும், கேட்பவர்களின் பாவங்களை அழிப்பதும், கற்பக விருக்ஷம் போன்றதும், முக்தியளிக்கவல்லதும், வால்மீகி பகவானால் இயற்றப்பட்ட ஆதி காவியமுமான ஸ்ரீ ராமாயணத்தைக் கேட்பவர் அனைவரும் ஸகல சுகங்களும் பெற்று, முடிவில் மோக்ஷமடைவார்கள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ ராமசந்த்ராய நம:

16. பிள்ளையில்லாதவர்களுக்குப் பிள்ளையுண்டாக

(For the Begetting of Children)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

பால காண்டம் : ஸர்க்கங்கள் 15, 16

உமா ஸம்ஹிதா

புத்ரகாமஸ்து புத்ரீயாமிஷ்டிம் த[3]ஶரத[2]ஸ்ய தாம்[1]।
ஆக[3]ர்ப்ப[4]த[4]ாரணம் ஸ்த்ரீணும் பாயஸேந படே[2]ச்சு[2]சி: ॥
நிவேத[3]யேத் ப்ரதிதி[3]நம் க்[4]ருதமிஶ்ரம்து பாயஸம் ।
ஶ்ராவயேச்சாபி பத்நீம்ஸவாம் குல்யாம் விம்ஶதி வாஸராந் ॥

முன்வினைப் பயனுகப் புத்திரபாக்கியம் இல்லாதவர்கள் 'தசரதரின் புத்ரகாமேஷ்டி, பாயஸதானம், கர்ப்பதாரணம்' வரையிலுள்ள வரலாற்றை அறிவிக்கும் பால காண்டம் 15, 16-வது ஸர்க்கங்களை இருபது நாட்கள் பாராயணம் செய்யவேண்டும். இந்தக் கதையைப் பத்தினியும் கேட்கவேண்டும். பாராயணம் செய்யும்பொழுது சுத்தமாக இருக்கவேண்டும்.

நிவேதனம்: நெய் பாயஸம்.

ஸங்கல்பம்

ஸ்ரீ ஸீதா லக்ஷ்மண பரதசத்ருக்ன ஹநுமத்ஸமேத
ஸ்ரீராமசந்த்ர ப்ரபோ: ப்ரஸாதேந
புத்ர ஜந்மப்ரதி ப[3]ந்த[4]காநாம் ஸர்வவித[4]
பாபாநாம் ஸத்[3]யோ விநாஶத்[3]வாரா புத்ரலாபார்த்த[2]ம்
'புத்ரகாமேஷ்டி, பாயஸத[3]ாநாத்மக' ஸ்ரீமத்[3] ராமாயண
க[4]ட்ட பாராயணம் அஹம் கரிஷ்யே ।

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit SriV Hariharan Collection, Sholinganallur, Chennai



CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸர்க்கம் 15

தேவர்கள் மஹா விஷ்ணுவைப் பிரார்த்தித்தது

மேதா⁴வீ து ததோ த்⁴யாத்வா ஸ கிஞ்சித்³த³ முத்தரம் ।
லப்³த⁴ ஸம்ஜ்ஞஸ் ததஸ் தம் து வேத³ஜ்ஞோ ந்ருப
மப்³ரவீத் ॥ (1)

ஸகல வேதசாகைகளையும் தரிக்கக்கூடிய புத்தியுள்ளவரும் வேதாத்யயனம் செய்து உட்கருத்தையும் ரஹஸ்யங்களையும் நன்ருயறிந்தவருமான ரிஸ்யசிருங்கர், அரசனுடைய கோரிக்கையை நிறைவேற்ற எந்தக் கிரியையைச் செய்யலாமென்று சற்று ஆலோசித்தார். பிறகு அதை நிச்சயித்துக்கொண்டு, "பூபதே! புத்திரபாக்யத்தைக் கொடுக்கும் ஓர் இஷ்டி அதர்வ வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. உமக்காக அதைச் செய்விக்கிறேன்" என்று புத்திர காமேஷ்டியை ஆரம்பித்து, வேத விதிப்படி அக்னியில் ஓர் ஆஹுதி செய்தார்.

தசரதருடைய அசுவமேதத்தில் யாக பாகங்களைப் பெற வந்த ஸகல தேவர்களும் யாக ஸதஸில் கிரமப்படி வீற்றிருந்து தங்களுக்குத் தலைவரான பிரஹ்மாவை, "ஸ்வாமி! ராவணனென்ற ராக்ஷஸன் கடுந்தவத்தால் தங்களைச் சந்தோஷப்படுத்தி அபூர்வமான வரங்களைப் பெற்று, அந்தப் பலத்தால் எங்களை உபத்திரவிக்கிருன். தேவர்களால் மரணமில்லை என்று அவனுக்கு வரம் கொடுத்திருக்கிறீர்கள். தங்களுடைய வார்த்தைக்குக் கௌரவம் வைத்து அவனை சிக்ஷிக்காமல் அவனுடைய அக்கிரமங்களைப் பொறுக்கிறோம். துர்ப்புத்தியுள்ள அந்த ராக்ஷஸன் மூன்று லோகத்துப் பிராணிகளையும் நடுங்கச் செய்கிருன். மேலும் லோக பாலர்களை எதிர்த்து, இந்திரனைத் துரத்திவிட்டு, தானே ஸ்வர்க்கத்தை ஆள நினைக்கிருன். வரங்களால் மோகமடைந்து எவரிடத்திலும் பயமற்று ரிஷிகளையும் வேதியர்களையும் யக்ஷர்களையும் கந்தர்வர்களையும் அஸுரர்களையும் மற்றவர்களையும் வாட்டுகிருன். அவனைக் கண்டவுடன் ஸூரியன் கிரணங்களைச் சுருக்கிக்கொள்ளுகிருன்; அவன் குன்றுகளில் விளையாடும்பொழுது செடி கொடிகளிலுள்ள மலர்கள் உதிருமென்ற பயத்தால் வாயு இஷ்டப்படி வீசுவதில்லை. மலைபோன்ற அலைகளால் பயங்கரமாய்க் கர்ஜிக்கும் ஸமுத்திரமும் அவனைக் கண்டால் அசைவதில்லை. கோர ரூபமுள்ள ராவணனிடத்தில் நாங்கள் எப்பொழுதும் பயந்து, படும் உபத்திரவங்களைச் சொல்லமுடியாது. ஆகையால் அவனைக் கொல்ல ஏதாவது உபாயம் செய்ய வேண்டும்" என்று வணக்கமாய் அந்தப் பெரியோரைத் தேவர்கள் வேண்டினார்கள்.

CC-0. In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பிரஹ்மா, "தேவர்களே! அவன் தேவ கந்தர்வ ராக்ஷஸ முதலிய யாவராலும் மரணம் நேரக்கூடாதென்று என்னை கேட்டான். அப்படியே வரம் கொடுத்தேன். ஆனால் மனிதர்களை அலக்ஷ்யம் செய்து அவர்களால் மரணம் கூடாதென்று கேட்கவில்லை. ஆகையால் அவனுக்கு மனிதனாலேயே மரணம் நேரும். கவலை வேண்டாம்" என்று ஸமாதானம் செய்தார். அமிருதாரையைப்போல் இனிமையான அந்த வார்த்தையால் தேவர்களும் மஹர்ஷிகளும் அளவற்ற சந்தோஷமடைந்தார்கள்.

அப்பொழுது ஸகல தேவர்களுக்கும் பிரபுவாய், ஸகல பிராணிகளிடத்திலும் அந்தர்யாமியாய் விளங்கும் மஹாவிஷ்ணு அவர்களுக்குத் தர்சனம் கொடுத்தார். துஷ்டர்களை அழித்து சாதுக்களை ரக்ஷிக்கத் தகுந்த காலத்தை எதிர்பார்த்திருப்பவராகையால் அந்த ஸமயம் வந்ததென்று அளவற்ற ஸந்தோஷமடைந்து அபார தேஜஸுடன் விளங்கினார். அண்டினவர்களை ரக்ஷிக்க, சங்க சக்கர கதை கட்கம் சார்ங்கமென்ற திவ்யாயுதங்களை எப்பொழுதும் தரிக்கிறவரும், பீதாம்பரதாரியும், உலகத்தைக் காப்பாற்றுவதான தன் காரியத்தில் கண்ணுயிருப்பவருமான அவர் பிரஹ்மாவின் அருகில் சென்றார்.

அப்பொழுது தேவர்களும் அவரை வணங்கிக் கைகூப்பி வினயத்துடன் துதித்து, "லோகநாத! ராவணனென்ற துஷ்ட ராக்ஷஸன். மூவுலகங்களையும் வருத்துகிறான். தேவர்களால் கொல்லமுடியாதவன். ஸ்வபாவத்தாலும் பிரஹ்மா கொடுத்த வரங்களாலும் வெகு கர்வம் கொண்டிருக்கிறான். தேவ கந்தர்வ யக்ஷ கின்னர மஹரிஷிகளை ஹிம்ஸிப்பதுமல்லாமல் எங்கள் நந்தன வனத்தில் விளையாடிக் கொண்டிருக்கும் அப்ஸரஸ்களைக் கதற அடிக்கிறான். அவனைக் கொல்லவேண்டும் என்று நாங்களும் ரிஷிகளும் கந்தர்வர்களும் யக்ஷர்களும் மற்றவர்களும் தங்களை சரணமடைகிறோம். தேவ சத்துருக்களை அழிக்கத் தாங்களே தயைசெய்து பூமியில் பிறக்கவேண்டும். தர்மங்களைப் பூரணமாயறிந்து, யாசகர்களுக்கு வேண்டிய வரையில் கொடுக்கும் அயோத்யாதிபதியான தசரதர் மஹரிஷிகளைப் போன்றவர். ஹரீ, ஸ்ரீ, கீர்த்தி தேவிகளைப்போன்ற அவருடைய மூன்று பத்தினிகளிடத்தில் தாங்கள் நான்கு அம்சங்களாய் அவதரித்து மனுஷ்ய ரூபத்துடன் துஷ்ட ராக்ஷஸர்களைக் கொல்லவேண்டும். தங்களைத் தவிர வேறு கதி எங்களுக்கில்லை" என்றார்கள்.

ஸகலப் பிராணிகளாலும் நமஸ்கரிக்கப்பட்ட தேவதேவனான விஷ்ணு, தன்னைச் சரணமடைந்த பிரஹ்மாதி தேவர்களை நோக்கி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

"நீங்கள் பயப்பட வேண்டாம். உங்களுக்கு க்ஷேமமுண்டாகட்டும்; நான் பூமியில் தசரத புத்திரனுகப் பிறந்து, தேவ கந்தர்வ ரிஷிகளையும் ஸகல லோகங்களையும் வாட்டும் துஷ்டனை ராவணனை, புத்திரமித்திர பந்துபரிவார ஸைன்யங்களுடன் யுத்தத்தில் கொன்று பதினேராயிர வருஷங்கள் வரையில் பூமியை ஆளுவேன்" என்று அருளிச் செய்தார்.

இப்படித் தேவர்களுக்கு அபயம் கொடுத்து, அவர்கள் வேண்டியபடி நான்கு அம்சங்களாய், தாம் தசரதருக்குப் புத்திரர்களாகப் பூமியில் அவதரிக்க உத்தேசித்தார். அவருடைய நல்ல குணங்களை நினைத்து நினைத்து ஸந்தோஷத்தால் மலர்ந்த கண்களுடன் மஹாவிஷ்ணு, தேசகால வஸ்துக்களால் எல்லையற்றவரும், பிறப்பிறப்பற்றவரும், யாவரும் விரும்பக்கூடியவருமாக இருந்தாலும் தசரதரைப் பிதாவாக அடைய நிச்சயித்தார்.

பிறகு தேவ கந்தர்வ ருத்ர யக்ஷ அப்ஸர கணங்கள் திவ்யமான ஸ்துதிகளால் அவரைக் கொண்டாடி, "பகவானே! ராவணன் பராக்கிரமசாலி; இயற்கையாய் எல்லையற்ற கர்வமுள்ளவன்; பிரஹ்மாவின் வரத்தால் மிகுந்த கொழுப்புள்ளவன்; லோகங்களைக் கதறச் செய்கிறவன்; ஸாதுக்களையும் ரிஷிகளையும் வருத்தி, சொல்ல முடியாத பயத்தை உண்டாக்குகிறவன்; வெகுப் பிரஸித்தன்; அவனைப் பந்து பரிவார ஸைன்யங்களுடன் அழித்து, தங்களை அண்டின எங்களை ரக்ஷிக்கவேண்டும். எங்களுடைய கவலையை நீக்கின பிறகு, நாங்கள் அடைய முடியாததும் அழிவில்லாததும் காமக்குரோதங்கள் அற்றதுமான தங்களுடைய ஸ்ரீவைகுண்டத்திற்கு மறுபடியும் எழுந்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள்.

தமேவ ஹத்வா ஸப³லம் ஸபா³ந்த⁴வம்
விராவணம் ராவண முக்³ர பௌருஷம் ।
ஸ்வர்லோக மாக³ச்ச² க³தஜ்வரஸ்சிரம்
ஸுரேந்த்³ர கு³ப்தம் க³ததோ³ஷ கல்மஷம் ॥ (34)

—

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸர்க்கம் 16

புத்திரகாமேஷ்டி

தததோ நாராயணோ விஷ்ணு: நியுக்த: ஸுரஸத்தமை: ।
ஜாநந்நபி ஸுராநேவம் சைவம் ஶ்லக்ஷ்ணம் வசந மப்ரவீத் ॥ (1)

பிறகு விஷ்ணு, மேலே செய்யவேண்டிய காரியத்தை நன்கு யறிந்தும் அறியாதவரைப்போல், "தேவர்களே! ராவணனைக் கொல்ல உபாயமென்ன? என் நிஜஸ்வருபத்தோடு அவதாரம் செய்யவேண்டுமோ? வேறு வழியுண்டா?" என்று கேட்டார். பிறப்பிறப்பற்ற பகவான் அப்படிச் சொல்லத் தேவர்கள், "லோக நாதா! அவன் வெகுகாலமாய்க் கடுந்தவம் செய்து தேவசிரேஷ்ட ரான பிரஹ்மாவை ஸந்தோஷப்படுத்தித் தனக்கு ஒருவராலும் மரணம் நேரக்கூடாதென்று வரம் கேட்டான். ஆனால் மனுஷ்யர் களை அலக்ஷ்யம் செய்து வரத்தில் சேர்த்துக் கேட்கவில்லை. ஆகை யால் அவர்களைத் தவிர மற்றவர்களால் மரணமில்லையென்று வர மடைந்து வெகு கொழுப்புடன் ஸகல லோகங்களையும் வருத்தி, பரஸ்த்ரீகளைப் பலவந்தம் செய்கிறான். மனுஷ்யனால் அவனுக்கு மரணமென்று விதித்திருக்கிறபடியால் தாங்கள் நரரூபத்துடன் அவனை யுத்தம் செய்து கொல்லுங்கள்" என்றார்கள்.

அந்த ஸமயத்தில் புத்திரகாமேஷ்டி செய்துகொண்டிருந்த தசரதருக்குக் குமாரனாய்ப் பிறக்க நிச்சயித்து, மஹாவிஷ்ணு பிரஹ்மாவிடத்தில் சொல்லிக்கொண்டு, தேவர்கள் பூஜிக்க, அங்கேயே மறைந்தார்.

அந்த இஷ்டியில் ரிஶ்யசிருங்கர் பிரதான ஆஹுதி செய்த வுடன், ஆஹவனீய அக்கினியிலிருந்து பூதம்போன்ற ஒரு புருஷன் ஒப்பற்ற காந்தியுடன் ஜ்வலிக்கும் பெரிய சரீரத்துடன் கிளம் பினான். கருப்பும் சிவப்பும் கலந்த நிறமுள்ள வஸ்திரத்தால் அலங் கரிக்கப்பட்டு, சிவந்த முகமும், துந்துபியைப் போன்ற கம்பீரமான த்வனியும், ஸிம்ஹத்தின் மயிரைப்போன்ற மீசை தாடியும், பர்வ தத்தைப் போன்ற உருவமும், கொழுத்த புலியின் பராக்ரமமும், ஸூரிய மண்டலத்தையும் அக்னி ஜ்வாலையையும் போன்ற சுகம் படியான பிரகாசத்தையும் உடையனாக, உத்தம லக்ஷணங்கள் பொருந்தி, திவ்யாபரணங்களால் விளங்கி, அந்த மஹா புருஷன், வெள்ளி மூடியுடன் பக்கங்களில் விசித்திர வேலைகளால் அலங் கரிக்கப்பட்டு திவ்விய பாயஸம் நிறைந்த ஒரு தங்கப் பாத்திரத்தை இருகைகளால் பார்யையைப் போல் பிடித்து அணைத்துக்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கொண்டு, "மஹாராஜ ! நான் ப்ரஹ்மாவால் உம்மிடம் அனுப்பப் பட்ட நரனென்று அறியும்" என்றார்.

தசரதர் கைகூப்பி வணங்கி, "ஸ்வாமி ! நல்வரவு. என்னால் ஆகவேண்டியதென்ன?" என்றார். அந்தப் பிரஹ்ம தூதன், "அசுவமேதத்தாலும் புத்திரகாமேஷ்டியாலும் தேவதைகளை நீர் பூஜித்தபடியால் இந்த திவ்விய பாயஸம் உமக்குக் கிடைத்தது. பெருமையையும் ஆரோக்கியத்தையும், நீர் நெடுநாளாய் வேண்டும் புத்திர பாக்கியத்தையும் இது கொடுக்கும். ஆகையால், இதை வாங்கி உமது பத்தினிகளுக்குப் புஜிக்கக் கொடும். நீர் செய்யும் முயற்சிகளின் பயனை இதனால் அடையலாம்" என்றார்.

அரசர், "உத்தரவுப்படி செய்கிறேன்" என்று தேவர்களால் அனுப்பட்ட திவ்விய பாயஸம் நிறைந்த தங்கப் பாத்திரத்தை வெகுப் பிரியத்துடன் வாங்கித் தலைமேல் வைத்து, ஆச்சரியமான ரூபமுள்ள அந்தப் பூதத்தை நமஸ்கரித்துப் பிரதக்ஷிணம் செய்தார். மஹா தரித்திரனுக்கு நவநிதி கிடைத்ததுபோல் அவருக்கு அது கிடைத்தவுடன் பரமானந்தமுண்டாயிற்று. தன் காரியத்தை நிறைவேற்றி பிரஹ்மதூதனும் அக்னியில் மறைந்தார்.

தசரதர் புத்திரகாமேஷ்டியை முடித்து, அந்தப்புரத்திற்குப் போய்க் கௌஸல்யை முதலிய பார்யைகளை அழைத்து, "இந்தப் பாயஸம் தேவர்களால் அனுப்பப்பட்டது. புத்திர பாக்கியத்தைக் கொடுக்கும் இதைப் புஜியுங்கள்" என்றார். சரத்கால சந்திர கிரணங்களால் ஆகாசம் விளங்குவதுபோல், சந்தோஷ ஸமாசாரத்தைக் கேட்ட ராஜஸ்த்ரீகளின் காந்தியால் அந்தப்புரம் விளங்கிற்று. மஹாராஜா, தனக்கு நான்கு புத்திரர்கள் பிறக்கவேண்டுமென்று, அந்தப் பாயஸத்தில் பாதியைக் கௌஸல்யைக்கும் நாலிலொரு பாகத்தை ஸுமித்திரைக்கும் எட்டிலொரு பாகத்தை கைகேயிக்கும் கொடுத்தார். மிகுந்த எட்டிலொன்றை, யோசித்து ஸுமித்திரைக்கே கொடுத்தார். இப்படி அவர் விபாகம் செய்ததை மஹிஷிகள் மெச்சி, பாயஸத்தை வெகுப் பிரீதியுடன் பெற்றுக் கொண்டு புஜித்து, அக்னியையும் சூரியனையும்போல் காந்தியுள்ள கர்ப்பங்களைத் தரித்தார்கள். அதைக் கண்டு அரசன் கவலை தீர்ந்து தேவலோகத்தில் ஸித்தர்களாலும் ரிஷிகளாலும் பூஜிக்கப் பட்ட மஹேந்திரனைப்போல் எல்லையற்ற ஆனந்தமடைந்தார்.

ததஸ்து ராஜா ப்ரஸமீக்ஷ்ய தா: ஸ்த்ரிய:
ப்ரரூட⁴ கர்³பா⁴ : ப்ரதிலப்³த⁴ மானஸ: ।
ப³பூ⁴வ ஹ்ருஷ்டஸ த்ரிதி³வே யதா² ஹரி:
ஸுரேந்த்³ர ஸித்³த⁴ர்ஷி க³ணாபி⁴பூஜித: ॥ (34)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

"ஸ்ரீராம : ஶரணம் மம"

கிம் மந்த்ரை: ப3ஹுபி4ஶ்ச து3ஷ்கரப2லை:ஆயாஸதை3ஸ் தத்' வித4ாம்
கிஞ்சில் லோபவித4ாந மாத்ரவிப2வை: ஸம்ஸார து3க்கா2வஹை:
ஏகஸ்ஸந்நபி ஸர்வமந்த்ர ப2லதே3ா தே3ாஷோஜ்ஜி4தஸ் ஸர்வத4ா
'ஸ்ரீராம: ஶரணம் மமே'தி பரமோமந்த்ரோய மஷ்டாக்ஷர :॥

—ஸ்ரீராம கர்ணாம்ருதம் 4-74.

'ஸ்ரீராம : ஶரணம் மம' என்ற ஒரு அஷ்டாக்ஷர மந்திரத்தை ஜபித்தாலே ஸகல மந்திர பலனும் கிட்டும்பொழுது, கஷ்டப்பட்டு பலனை அளிப்பனவும், சற்றுப் பிசகினல் பலனற்றுப்போவனவும், ஸம்ஸார துக்கங்களைக் கொடுக்கக்கூடியனவுமான பல மந்திரங்களை ஜபிப்பதால் என்ன பயன்?

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ ராமசந்த்ராய நம :

17. சுகப்பிரஸவம் உண்டாக

(For Safe Delivery)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

பால காண்டம் : ஸர்க்கம் 18

உமா ஸம்ஹிதா

ஸுக2ப்ரஸவகாமஸ்து க3ர்ப்பி4ணீநாம் து த்ச்ச2ரவே ।
அவதார கத2ாஸர்க3ம ராமஸ்ய ப்ரயத: படே2த் ॥
யத2ா லப்3த4ம் து நைவேத்3யம் கார்யம் த்3ரவ்யேண சால்பஶ: ॥

கர்ப்பிணியான ஸ்த்ரீ பிரஸவமாகாமல் சிரமப்படும்போது, தாயையும் தாயின் வயிற்றுக்குள்ளிருக்கும் சேயையும் ரட்சிக்கும் பரந்தாமன்மீது பக்தியுள்ளவர்கள் "ஸ்ரீராமவதார" வரலாற்றுடன் கூடிய பால காண்டம் 18-வது ஸர்க்கத்தைக் கர்ப்பிணி காது கேட்கப் பாராயணம் செய்தால், எவ்வித சிரமமுமின்றி சுகப் பிரஸவம் உண்டாகும் என்பது திண்ணம்.

நிவேதனம் : கிடைத்த பொருளைச் செய்யலாம்.

ஸங்கல்பம்

ஸ்ரீ ஸீதாலக்ஷ்மண பரதசத்ருக்ந ஹநுமத்ஸமேத
ஸ்ரீராமசந்த்ரப்ரபோ: ப்ரஸாதேந
......நாம்ந்யா: கர்ப்பி4ண்யா: ஸுக2ப்ரஸவ
ஸித்3த்4யர்த்த2ம் 'ஸ்ரீராமாவதாரகத2ா'த்மக
ஸ்ரீமத்3ராமாயண க4ட்ட பாராயணம்
அஹம் கரிஷ்யே ।

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸர்க்கம் 18

ஸ்ரீராம ஜனனம்

நிர்வ்ருத்தே து க்ரதௌ தஸ்மிந் ஹயமேதே⁴ மஹாத்மந: ।
ப்ரதிக்³ருஹ்ய ஸுரா பா⁴கா³ந் ப்ரதி ஜக்³முர் யதா²க³தம் ॥ (1)

தசரத சக்கரவர்த்தி செய்த அசுவமேதம் புத்திரகாமேஷ்டியுடன் முடிந்தது. தேவர்கள் பாகங்களைப் பெற்றுக்கொண்டு ஸ்வர்க்கம் சென்றார்கள். அரசன் பாரியைகளுடன் யாகதீக்ஷை நீக்கி, வந்திருந்த அரசர்களுக்குத் தகுந்தபடி மரியாதை செய்து அனுப்பினார். அவர்கள் வஸிஷ்டர் முதலிய மஹரிஷிகளை வணங்கி விடை பெற்றுக்கொண்டு, அரசன் கொடுத்த வஸ்திராபரணங்களால் விளங்கும் ஸைன்யத்துடன் ஸந்தோஷமாய்த் தங்களுடைய தேசங்களுக்குச் சென்றார்கள். பிறகு தசரதர் ஸைன்ய பரிவார வாகனங்களோடும் பத்தினிகளோடும் வஸிஷ்டர் முதலிய பெரியோர்களை முன்னிட்டுக் கொண்டு அயோத்யைக்கு வந்தார். ரிஸ்யசிருங்கரும் சாந்தையும் ரோமபாதரும் அங்கதேசத்திற்குப் போனார்கள். இப்படி அனைவர்க்கும் விடை கொடுத்தனுப்பி, தன் எண்ணங்கள் யாவும் நிறைவேறி, தனக்குக் கிடைக்கும் புத்திரபாக்கியத்தைப்பற்றி யோசித்துக்கொண்டு சக்கரவர்த்தி அயோத்யையில் ஸுகமாய் வஸித்து வந்தார்.

இப்படி யக்ஞம் முடிந்து, ஆறு ருதுக்கள் கடந்து, பன்னிரண்டாவதான சித்திரை மாதம் நவமி திதி, அதிதியை தேவதையாக உடைய புனர்வஸு நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில், கடக லக்கினத்தில், கௌஸல்யா தேவி, ஸகல லோகங்களுக்கும் நாதனும், ஸகல சுப லக்ஷணங்களும் பொருந்தினவரும், ஸர்வ லோகங்களாலும் நமஸ்கரிக்கப்படுகிறவரும், மஹாவிஷ்ணுவின் பாதி அம்சமுள்ளவரும், இக்ஷ்வாகு குலத்தைப் பெருமைப்படுத்தப் போகிறவருமான ராமனென்ற புத்திர ரத்தினத்தைப் பெற்றாள்.

அப்பொழுது ஸூரியனும் அங்காரகனும் குருவும் சுக்கிரனும் சனியும் முறையே தங்களுடைய உச்சஸ்தானமாகிய மேஷம், மகரம், கடகம், மீனம், துலாமென்ற ராசிகளில் இருந்தார்கள். குருவும் சந்திரனும் கூடிப் பிரகாசித்தார்கள்; வஜ்ரபாணியான தேவேந்திரனைப் பெற்ற அதிதி தேவியைப்போல், கௌஸல்யையும், எல்லையற்ற தேஜஸுள்ள அந்தப் புத்திரனைப் பெற்று மிகவும் அழகுடன் விளங்கினாள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

 Vaidika Pandit Sri V [illegible] Collection, [illegible]vallur, Chennai

புஷ்ய நக்ஷத்திரத்தில் மீன லக்கினத்தில், வீண்போகாத பராக்
கிரமமுள்ளவரும் தெளிந்த புத்தியுள்ளவரும் ஸகல நற்குணங்
களும் பொருந்தினவரும் விஷ்ணுவின் எட்டிலொரு அம்சமுமான
பரதன் கைகேயியிடத்தில் பிறந்தார்.

பிறகு ஆயில்ய நக்ஷத்திரத்தில் சூரியோதயத்திற்குப் பின்,
மஹா வீரர்களாய், ஸகல அஸ்திரசஸ்திர வித்யைகளில் நிபுணர்
களாய் விளங்கும் லக்ஷ்மணனும் சத்ருக்னனும் சுமித்திரையிடத்
தில் பிறந்தார்கள். விஷ்ணுவின் நாலிலொரு அம்சம் லக்ஷ்மண
னிடத்திலும் எட்டிலொரு அம்சம் சத்ருக்னனிடத்திலும் விளங்
கிற்று ; அவர்கள் இரட்டைப் பிள்ளைகள்.

நற்குணங்கள் பொருந்தி, ஒருவர்க்கொருவர் சமானமாய்ப்
பூரட்டாதி உத்திரட்டாதி நக்ஷத்திரங்களைப்போல் காந்தியை
யுடைய அந்த நான்கு புத்திரர்கள் அவதாரம் செய்தபொழுது
கந்தர்வர்கள் மதுரமாய்ப் பாடினார்கள்; அப்ஸரஸ்கள் ஆடினார்கள்;
தேவதுந்துபி முழங்கிற்று; ஆகாசத்திலிருந்து புஷ்பமாரி பொழிந்
தது. அயோத்யா வாஸிகள் மஹோத்ஸவம் கொண்டாடினார்கள்.
ஜனங்களாலும் நாட்டியமாடுகிறவர்களாலும் ஆட்டுவிப்பவர்
களாலும் பாட்டாலும் வாத்ய கோஷங்களாலும் ஸூத மாகத
வந்திகளாலும் ராஜவீதிகள் நிறைந்தன.

அப்பொழுது தசரதர் பிராம்மணர்களுக்குக் கணக்கில்லாமல்
பசுக்களையும் திரவியங்களையும் தானம் கொடுத்தார். ஸூத மாகத
வந்திகளுக்கு விசேஷ வெகுமானம் செய்தார்.

திருக்குமாரர்கள் பிறந்த பதின்மூன்றாவது நாளில், வஸிஷ்ட
மஹரிஷி வெகு ஸந்தோஷத்துடன், கௌஸல்யையின் புத்திர
னுக்கு ராமனென்றும், கைகேயியின் புத்திரனுக்குப் பரதனென்
றும், சுமித்திரையின் புத்திரர்களுக்கு லக்ஷ்மணனென்றும் சத்ருக்ன
னென்றும் பெயர் வைத்தார். அப்பொழுது தசரதர் நகரத்திலும்
நாட்டிலுமுள்ள பிராம்மணர்களுக்குத் திருப்தியாய் அன்னமிட்டு
அளவற்ற ரத்தினங்களைத் தக்ஷிணையாகக் கொடுத்தார்.

அந்த ராஜ குமாரர்களுக்கு அன்னப் பிராசனம், சௌளம்,
உபநயனம் முதலிய ஸம்ஸ்காரங்கள் காலம் தவறாமல் விதிப்படி
செய்யப்பட்டன.

அவர்களுக்குள் த்வஜத்தைப்போல் விளங்கும் மூத்தவரான
ஸ்ரீராமன், தன் பிதாவுக்கு அளவற்ற ஸந்தோஷத்தை உண்டு
பண்ணுகிறவராய், பிரஹ்மாவைப்போல் எல்லாப் பிராணிகளுக்
கும் இஷ்டமுள்ளவராயிருந்தார். அந்தக் குமாரர்கள் வேத
வேதாங்கங்களையும் பூர்ணமாகக் கற்றார்கள். சூரர்களாகவும்
ஞானவான்களாகவும், ஸகல நற்குணங்களும் பொருந்தினவர்
களாகவும், ஜனங்களுக்கு அநுகூலத்தைச் செய்வதிலேயே நோக்க

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

முள்ளவர்களாகவும் வளர்ந்தார்கள். அவர்களில் ஸ்ரீராமன் அபாரமான காந்தியும் வீணாகாத பராக்கிரமமுமுள்ளவர்; சந்திரனைப் போல் ஸகல லோகங்களுக்கும் பிரியமானவர்; யானையேற்றம், குதிரையேற்றம், ரதம் ஓட்டுதல், வில்வித்யை முதலியவைகளில் நிபுணர். பெற்றோர்களுக்குப் பணிவிடை செய்வதில் மிகவும் முயற்சியுள்ளவர்.

விசேஷ லக்ஷ்மி பொருந்திய லக்ஷ்மணன், குழந்தைப் பருவம் முதல் அனைவர்க்கும் பிரியமானவர்; தன் தமயனான ராமனிடத்தில் மனோவாக்குக் காயங்களால் அளவற்ற பிரியம் வைத்தவர். லக்ஷ்மணன் ஸமீபத்திலில்லாவிட்டால் புருஷோத்தமனான ராமனுக்குத் தூக்கம் வராது; ருசியுள்ள அன்னத்தையும் அவரின்றிப் புஜிப்பதில்லை; தன் வலது கையாகவும் வெளியில் ஸஞ்சரிக்கும் பிராணனாகவும் அவரை நினைத்திருந்தார். ராகவன் குதிரை மேலேறி வேட்டைக்குப் போகும்பொழுது, இளையாழ்வார் வில்லும் கையுமாய் அவரை ரக்ஷித்துக்கொண்டு பின்தொடர்வார்.

அவருக்குத் தம்பியான சத்ருக்னன் அப்படியே பரதனிடத்தில் எல்லையற்ற பிரியம் வைத்தான். தன் பிராணனைக் காட்டிலும் அவனிடத்தில் பரதனுக்கு அதிகப் பிரேமையுண்டு.

மிகுந்த அதிருஷ்டசாலிகளும் பிரீதி வைக்கத் தகுந்தவர்களுமான நான்கு குமாரர்களையுடைய தசரதர், தேவர்களால் சூழப்பட்ட பிரஹ்மாவைப்போல் வெகுப் பிரீதியடைந்தார். அவர்கள் சாஸ்திரங்களைக் கற்று ஞானத்தையடைந்ததால் நற்குணங்கள் பொருந்தி, ஒரு வேளை அஜாக்கிரதையால் கெட்ட காரியங்களில் மனம் சென்றாலும் அதனால் வெட்கமடைந்து, எல்லா விஷயங்களையும் அறிந்தவர்களென்ற கீர்த்தியையும், லௌகிக காரியங்களில் திறமையையும், வருங்காலத்தை அறியும் சக்தியையும், கண்ணைப் பறிக்கும் தேஜஸையும் உடையவர்களாயிருந்ததால், தசரதர் லோகாதிபதியான சதுர்முகனைப்போல் பரம ஸந்தோஷமடைந்தார். அவர்களும் மஹாராஜா தங்களிடத்தில் வைத்திருக்கும் பிரீதியைப் பார்த்து, வேதம் ஓதுவதிலும் வில்வித்தையிலும் பிதிரு சிச்ருஷையிலும் கவலை வைத்து வெகு திறமையடைந்தார்கள்.

பிறகு தசரதர் ஒரு நாள் உபாத்தியாயரையும் பந்துக்களையும் மந்திரிகளையும் வருவித்துத் தன் புத்திரர்களுக்கு மணம் செய்ய வேண்டியதைப்பற்றி ஆலோசித்துக் கொண்டிருக்கையில், மஹா தேஜஸ்வியான விசுவாமித்திர மஹாமுனி, அவரைப் பார்க்க விரும்பி அங்கே வந்து "காதியின் புத்திரனான விசுவாமித்திரன் தங்களைப் பார்க்க வந்திருக்கிறானென்று அரசனிடத்தில் சீக்கிர

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மாய்த் தெரிவியுங்கள்" என்று காவலாளிகளுக்குச் சொன்னார். அவர்கள் பயபக்தியுடன் பரபரப்படைந்து அரண்மனைக்குள் ஓடி விசுவாமித்திரர் வந்திருப்பதை ராஜாவுக்குத் தெரிவித்தார்கள். அவர் பரமானந்தமடைந்து வெகு ஜாக்கிரதையுடன் புரோஹிதரை முன்னிட்டுக் கொண்டு, இந்திரன் பிரஹ்மாவை உபசரிப்பதுபோல் மஹரிஷியை எதிர்கொண்டழைத்தார். கடுமையான விரதங்களை அனுஷ்டிக்கும் அந்த முனிவர் தேஜஸால் ஜ்வலிப்பதைக் கண்டு அரசன் முகமலர்ந்து, புரோஹிதர் மூலம் அவருக்கு அர்க்கிய பாத்திரங்களைக் கொடுத்தார்.

விதிப்படி செய்யப்பட்ட அந்தப் பூஜையைக் கௌசிகர் அங்கீகரித்து, அரசனை, நகரத்தையும் பொக்கிஷத்தையும் தேசங்களையும் பந்துக்களையும் மித்திரர்களையும் பற்றி க்ஷேமம் விசாரித்தார். "மஹாராஜ! உம்மால் ஜயிக்கப்பட்டவர்கள் கீழ்ப்படிந்து நடக்கிறார்களா? யாகங்களால் தேவர்களையும், அதிதிபூஜை ராஜநீதி நான்கு வித உபாயம் முதலியவைகளால் மனிதர்களையும் நன்றாய்த் திருப்தி செய்கிறீரா?" என்று கேட்டு, வஸிஷ்ட வாமதேவ ஜாபாலி முதலியவர்களையும் விதிப்படி உபசரித்து க்ஷேமம் விசாரித்தார். அதனால் அவர்கள் வெகு ஸந்தோஷமடைந்து, ராஜஸபைக்கு வந்து பூஜிக்கப்பட்டு உசிதமான ஆஸனங்களில் அமர்ந்தார்கள்.

பிறகு எல்லையற்ற உதார ஸ்வபாவமுள்ள தசரதர் ஸந்தோஷத்தால் தேகம் புளகித்து, கௌசிகரைத் துதித்து "ஜனன மரணங்களால் பீடிக்கப்படும் மனிதர்களுக்கு அவைகளைப் போக்கும் அமிருதம் கிடைத்தால் எப்படியோ (அல்லது, மரணமடைந்தவன் பிழைத்து வந்தால் எப்படியோ); பல வருஷங்களாய் மழையில்லாமல் வாடின இடத்தில் மேகங்கள் ஓயாமல் மழை பெய்தால் ஜனங்களுக்கு எப்படியிருக்குமோ; எவ்விதத்திலும் தனக்குப் பத்தினியிடத்தில் வெகுகாலமாய்ப் புத்திரன் பிறக்காமல், அந்த ஆசையை விட்டவனுக்குத் திடீரென்று அந்தப் பாக்கியம் கிடைத்தால் எப்படியோ; கெட்டுப்போன நிதிகள் தானாய்க் கிடைத்தால் எப்படியோ; பிரியமான புத்திரன் முதலியவர்களுக்கு விவாஹ மஹோத்ஸவம் நேர்ந்தால் நமக்கு எப்படியோ; அவ்விதமான ஸந்தோஷத்தை, ஒருநாளும் எதிர்பாராத தங்களுடைய வரவால் அடைந்திருக்கிறேன்.

"க்ஷேமமாய் வந்தீர்களா? என் ஸந்தோஷத்திற்கோ எல்லையில்லை. தங்களுடைய இஷ்டத்தை எப்படி நிறைவேற்றவேண்டும்! தங்களைவிட உத்தமமான பாத்திரம் எனக்குக் கிடைக்குமோ! என் யத்னமில்லாமல் நான் எதிர்பாராமல் என்னைத் தேடி வந்தீர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

களே! என் ஜன்மம் இன்றுதான் கடைத்தேறிற்று; என் வாழ்நாள் இன்றுதான் பயனடைந்தது. தாங்கள் முதலில் அரசராய் ஸகல போகங்களையும் அனுபவித்தீர்கள். பிறகு கடுந்தவத்தால் ராஜரிஷியாகி பிரஹ்மரிஷி பதவியை அடைந்தீர்கள். எவ்விதத்திலும் தங்களை நான் பூஜிக்கவேண்டியவன்; யாதொன்றிலும் தங்களுக்கு ஆசையில்லை. தாங்கள் இங்கே வந்ததை நினைத்து நினைத்து எனக்கு ஆச்சரியம் பொங்குகிறது. தங்களுடைய வரவால் நான் மிகவும் பரிசுத்தனானேன்; தங்களைத் தரிசித்ததால் புண்ணிய க்ஷேத்திரங்களை அடைந்தவனானேன்; தாங்கள் எதையும் கொடுக்கக்கூடிய பிரபுவல்லவா? என்னை உத்தேசித்து இங்கே வந்த காரியத்தைச் சொல்லவேண்டும். தங்களுடைய ஆக்ஞையை நிறைவேற்றித் தங்களால் அனுக்கிரஹம் பெற விரும்புகிறேன். தாங்கள் எண்ணி வந்த காரியம் எதுவானாலும் யோசிக்கக்கூடாது; குறைவில்லாமல் முடிக்கிறேன். தாங்கள் எனக்குத் தெய்வமல்லவா? தங்களுடைய வரவால் எனக்கு விசேஷ க்ஷேமமும் நிகரற்ற தர்மமும் கிடைத்திருக்கின்றன" என்றார்.

பெருந்தன்மையுள்ள தசரதர் வணக்கமாய்ச் சொன்ன வார்த்தைகள், உத்தம குணங்களால் அலங்கரிக்கப்பட்டு ஒப்பில்லாத கீர்த்தியடைந்த கௌசிகருடைய மனத்திற்கும் காதிற்கும் மிக்க சுகத்தைக் கொடுத்தன.

இதி ஹ்ருத³யஸுக²ம் நிஶம்ய வாக்யம்
ஶ்ருதிஸுக² மாத்மவதா விநீதமுக்தம் ।
ப்ரதி²த கு³ணயஶா கு³ணைர் விஶிஷ்ட:
பரமரிஷி: பரமம் ஜகா³ம ஹர்ஷம் ॥ (58)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

RAMA NAMA

ராமமந்த்ரம்

'ராமே'தி வர்ணத்³வய மாத³ரேண
ஸதா³ ஸ்மரந் முக்திமுபைதி ஜந்து: ।
கலௌ யுகே³ கல்மஷ மாநுஷாணும்
அந்யத்ர த⁴ர்மே க²லு நாதி⁴கார: ॥

—ஸ்ரீராமகர்ணும்ருதம் 1.

'ராம' என்ற இரண்டு எழுத்துக்களைச் சிரத்தையுட
எப்பொழுதும் நினைத்தால் முக்தி கிட்டும். கலியுகத்தி
குற்றங்கள் நிறைந்த மனிதர்களுக்கு ராமநாம ஜபத்
தவிர்த்து வேருெரு கர்மாவிலும் அதிகாரமில்லையன்ருே?

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ ராமசந்த்ராய நம :

18. சிறைவாஸ பயம் நீங்க

(For Escaping Danger of Imprisonment)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்
யுத்த காண்டம் : ஸர்க்கம் 117

உமா ஸம்ஹிதா

காராக்³ருஹ ப்ரவேஶ: ஸ்யாதி³தி யஸ்யாஸ்திவை பயம் ।
விபீ⁴ஷணேந ஸீதாயா நயநம் ராமஸந்நிதௌ⁴ ॥
ஸபடே²ந் மது⁴ரைர்த்ரவ்யை : தோஷயித்வா ரகூத்⁴தமம் ॥

வினைப்பயனால் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மனிதருக்குச் சிறைவாஸ பயம் ஏற்படும் நிலையில் மனம் கலங்கியிருக்கும் பொழுது "விபீஷணன் ஸீதையை ஸ்ரீ ராமரிடம் அழைத்துச் சென்ற" யுத்த காண்டம் 117-வது ஸர்க்கத்தைப் பாராயணம் செய்ய வேண்டும்.

நிவேதனம் : ஏதாவது இனிப்பான பொருள்.

ஸங்கல்பம்

ஸ்ரீ ஸீதாலக்ஷ்மண பரதசத்ருக்ன ஹநுமத் ஸமேத
ஸ்ரீராமசந்த்ர ப்ரபோ : ப்ரஸாதேந
......நாம்ந : காராக்³ருஹ ப்ரவேஶப⁴ய
நிவ்ருத்யர்த்த²ம் 'ஸீதாநயநா'த்மக
ஸ்ரீமத்³ ராமாயண க⁴ட்ட பாராயணம்
அஹம் கரிஷ்யே ।

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸர்க்கம் 117

ஸீதையை அழைத்து வந்தது

ஸ உவாச மஹாப்ராஜ்ஞ மபி⁴க³ம்ய ப்லவங்க³ம:।
ராமம் வசநமர்த²ஜ்ஞோ வாரம் ஸர்வ த⁴நுஷ்மதாம்॥ (1)

மஹா புத்திமானும் யுத்த வீரர்களுக்குள் சிரேஷ்டருமான ஆஞ்ஜநேயர் ராமனிடத்திற்குச் சென்று, "பிரபோ! நாம் எதற்காக இந்தப் பிரயத்னத்தைச் செய்தோமோ, எதற்காக ஸமுத்திரத்தில் அணையைக் கட்டி, லங்கையை முற்றுகையிட்டு, ராக்ஷஸ ஸைன்யத்தை அழித்து, ராவணனைக் கொன்றோமோ, அந்தப் பிரயோஜன ரூபமான ஸீதாதேவிக்குத் தாங்கள் தரிசனம் கொடுக்கவேண்டியது. அவள் சோகத்தால் மனம் வாடி, கண்களிலிருந்து நீர் தாரைதாரையாய்ப் பெருக, அசோகவனத்தில் உட்கார்ந்திருக்கையில், நான் சென்று, தாங்கள் ராவணனை ஸம்ஹரித்ததை விக்ஞாபனம் செய்தேன். அதைக் கேட்டுப் பரமானந்தமடைந்தாள். என்னிடத்தில் முன்பு வைத்த விச்வாஸத்தால், 'ஆஞ்ஜநேய! ஒருவராலும் வெல்லக்கூடாத ராக்ஷஸர்களை ஸம்ஹரித்து ஜயலக்ஷ்மியுடன் விளங்கும் என் நாதனையும் லக்ஷ்மணனையும் தரிசனம் செய்ய விரும்புகிறேன்' என்று விக்ஞாபனம் செய்தாள்" என்றார்.

தர்மாத்மாக்களில் சிரேஷ்டரான ரகுநாதன் அதைக் கேட்டு கண்களில் நீர் ததும்ப யோசனையில் ஆழ்ந்தார். "ராவணனுடைய கிருஹத்தில் இவ்வளவு காலம் வஸித்த ஸீதையை நான் சேர்த்துக்கொண்டால், எல்லையற்ற லோகாபவாதத்திற்காளாவேன். தோஷமற்ற ஜானகியைத் தள்ளிவிட்டால் மஹாபாபத்திற்காளாவேன். இந்த சங்கடத்திற்கு என்ன செய்யலாம்? இதுவரையில் சொல்லமுடியாத கஷ்டங்களை அநுபவித்த ஸீதையின் மனத்தை மறுபடியும் புண்படுத்தவேண்டியிருக்கிறதே" என்று தீக்ஷ்ணமாய்ப் பெருமூச்சு விட்டுக்கொண்டு, பூமியைப் பார்த்த வண்ணமேயிருந்தார். பிறகு ஸீதையை அழைத்து வரத் துடி-துடித்துக்கொண்டிருந்த விபீஷணனைப் பார்த்து, "ஸீதைக்கு மங்கள ஸ்நானம் செய்வித்து உத்தமமான பரிமளத் திரவியங்களாலும் ஆபரணங்களாலும் அலங்கரித்துச் சீக்கிரம் அழைத்துவா" என்றார்.

உடனே விபீஷணன் பரபரப்புடன் ஓடி, அந்தப்புரத்தில் பிரவேசித்து, தன் வேலைக்காரிகளின் மூலமாய், "அம்மணி! தாங்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கள் மங்கள ஸ்நானம் செய்து உத்தமமான பரிமளத்திரவி களாலும் ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டு இந்த வாஹ தில் ஏறுங்கள், தங்களுடைய பர்த்தா தங்களைப் பார்க்கவே மென்று விரும்புகிறார்" என்று தெரிவித்தான். ஸீதை, " தாய்! அப்படியல்ல. இப்பொழுது இருக்கிறபடியே என் தாவைப் பார்ப்பது நலம்" என, விபீஷணன், "தங்களு பர்த்தாவும் அரசனுமான ரகுநந்தனுடைய உத்திரவுப்படி பதே உசிதமென்று எனக்குத் தோன்றுகிறது" என்றான். பர் வையே தெய்வமாய்ப் பாவித்து, அவரிடத்திலுள்ள பக்தி விரதமாய்க் கொண்டு,மஹா உத்தமியென்று புகழ்பெற்ற ஜா "அப்படியே செய்கிறேன்" என்றாள்.

பிறகு ஸீதைக்கு மங்களஸ்நானம் செய்வித்து, விலையு ஆபரணங்களாலும் ஆடைகளாலும் ராக்ஷஸ கன்யைகளால் அ கரித்து, விபீஷணன் ஸூரியனைப்போல் ஜ்வலிக்கும் பல்ல ஸீதையை ஏற்றுவித்து, அதற்கு வெளியில் நேர்த்தியாய்த் போடுவித்து ராக்ஷஸ வீரர்கள் ஆயுதபாணிகளாய் நான்கு களிலும் காத்துவர, ராமன் இருக்குமிடத்திற்கு அழைத்து தான். அவன் வந்ததை அறிந்தும், ஆழ்ந்த யோசனையிலிரு ராமனை ஸமீபித்து நமஸ்கரித்து, "பிரபோ! உத்திரவுப்படி ளுடைய தேவியை அழைத்து வந்திருக்கிறேன்" என்று தெ தான். அதைக் கேட்டு ரகுநந்தனனுக்கு, "இவ்வளவு சிரமப் ராவணனைக் கொன்று ஸீதையை மறுபடியும் பார்த்தோமல் என்று ஆனந்தமுண்டாயிற்று; "ராவணனுடைய கிருஹ இவ்வளவு காலம் இருந்ததைப் பற்றி லோகத்தார்கள் என் சொல்லுவார்களோ" என்று முகம் வாடிற்று. இனி அவளிட கடும் வார்த்தைகளைச் சொல்வதற்கு வேண்டிய ரோஷத்தை வருவித்துக்கொண்டார். பிறகு மேல் நடக்கவேண்டிய காரிய யோசித்துக்கொண்டு, ஸந்தோஷமற்றவரைப்போல் அபிநய ஸமீபத்திலிருந்த விபீஷணனைப் பார்த்து, "ராக்ஷஸபதே! தாய்! நீ எப்பொழுதும் என் ஜயத்தையும் க்ஷேமத்தையும் கிறவன்; வைதேஹி சீக்கிரமாய் என் சமீபத்தில் வர என்றார். உடனே விபீஷணன் அங்கிருந்த ஜனங்களை அப் விலகச் செய்தான். அந்தப்புர உத்யோகஸ்தர்கள் பிரம்புக அங்கிருந்தராக்ஷஸர்களையும், கரடிகளையும், வாநரர்களையும் தில் ஒதுக்கினார்கள். அப்பொழுது சமுத்திரத்தில் பெருங்கா கிளம்புவதுபோல் பெருங்கூச்சலுண்டாயிற்று.

அதைக் கண்டு ராமன், வாநரர்களிடத்திலுள்ள ஸ்நேஹத்தால் அதைப் பொறுக்காமல், அவர்களைத் த மஹா புத்திமானான விபீஷணனை நெருப்புப் பொறி பறக்கும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

களால் எரித்துவிடுகிறவரைப்போல் கோபத்துடன் பார்த்து, நான் இருப்பதைக் கொஞ்சம்கூட லக்ஷ்யம் செய்யாமல் இவர்களை இப்படி உபத்திரவிக்கத் துணிந்தாயல்லவா? போதும், நிறுத்து; இவர்களை யாரென்று நினைத்தாய்? என்னைச் சேர்ந்தவர்கள்; என் உயிருக்கு ஸமானர்கள். வீடுகளும், வஸ்திரங்களும் திரைகளும், பரிவாரங்களும் ஜனங்களை அப்புறம் துரத்துவதும் இன்னும் மற்ற ராஜோபசாரங்களும் ஸ்த்ரீகளுக்குக் காவல் என்று நினைத்தாயோ? அவர்களுடைய நல்ல நடத்தையே அவர்களுக்குக் காவல். மனம் காவலோ? மதிள் காவலோ? விசேஷ கஷ்டங்கள் நேர்ந்த பொழுதும், இஷ்ட ஜனங்கள் இறந்தபொழுதும், ராஜ்யத்திற்கு அபாயங்கள் நேர்ந்தபொழுதும், யுத்த பூமியிலும், ஸ்வயம்வர காலத்திலும், யாகசாலையிலும், விவாஹ ஸமயத்திலும் ஸ்த்ரீகளை எல்லோரும் பார்க்கலாம்; அதனால் தோஷமில்லை. இவள் இப்பொழுது யுத்த பூமியில் வந்திருக்கிறாள்; சமீபத்தில் விசேஷ நஷ்டத்தை அநுபவிக்கப்போகிறாள்; மேலும் என் சமீபத்திலிருக்கிறாள்; இவளை எல்லோரும் பார்ப்பதால் தோஷமில்லை; சீக்கிரமாய் இங்கே அழைத்து வா. எனக்காக உயிரைக் கொடுத்த என் ஸ்நேஹிதர்களுக்கு நடுவில் நானிருக்கும்பொழுதே ஸீதை என்னைப் பார்க்கட்டும். இவர்களெல்லோரும் இவ்வளவு கஷ்டப்பட்டதும், வீடு வாசல்களை விட்டு இங்கே வந்ததும், கோரமான ராக்ஷஸர்களால் அடிபட்டு மடிந்ததும் எதற்காக? இவளுடைய கஷ்டத்தை நிவர்த்தி செய்து இவளுக்குப் பிராணதானம் செய்வதற்கல்லவா? அப்படிப்பட்டவர்கள் இவளுக்குப் பிதாக்களல்லவா? தகப்பன் பெண்ணைப் பார்ப்பதில் தோஷமென்ன?" என்றார்.

விபீஷணன் அதைக் கேட்டுப் பயந்து நடுநடுங்கி, மிகவும் வணக்கமாய் ஸீதையை ராமனுடைய சமீபத்தில் அழைத்து வந்தான். லக்ஷ்மணனும் ஆஞ்ஜநேயரும் அவருடைய வார்த்தைகளைக் கேட்டு, "இதென்ன விபரீதம்! ரகுநாதன் ஸீதையை விட்டுப் பிரிந்து சோகத்தால் தபித்துப் பிரலாபிப்பதைப் பிரத்யக்ஷமாய்ப் பார்த்தோம். அவளுக்காக ஸகல லோகங்களையும் ஸம்ஹரிக்க முயன்ற ரகுவீரன், இப்பொழுது பேசும் வார்த்தைகளைக் கேட்டால் ஸீதையிடத்தில் வெறுப்படைந்து அவள் தனக்கு வேண்டியதில்லையென்று நிச்சயம் செய்தவர் போலிருக்கிறதே" என்று மிகவும் வருத்தப்பட்டார்கள்.

அப்பொழுது ஸீதை வெட்கத்தால் எண்சாணுடம்பும் ஒடுங்கி, "ஐயோ! இவ்வளவு காலம் கழித்து, இவ்வளவு கஷ்டப்பட்டு, என் நாதனைப் பார்க்கக் கிடைத்ததே என்று ஸந்தோஷப்பட்டு, பார்த்ததும் பார்க்காததுமாயிருக்க, ஆரம்பத்திலேயே இடி விழுந்ததுபோல் இந்தக் கோபவார்த்தைகளைக் கேட்கலாயிற்றே" என்று

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Nanganallur, Chennai

வருந்தி, புருஷர்களுக்கெதிரில் வர வெட்கப்பட்டு, வஸ்திரத்தால் முகத்தை மறைத்துக்கொண்டு மெள்ளமெள்ள ராமனுடைய பக்கத்தில் வந்து, "ஆர்யபுத்ர!" என்று கூறி, சோகத்தால் நெஞ் சடைத்து, பேசமுடியாமல் கண்களிலிருந்து நீர் தாரைதாரை யாய்ப் பெருக அழுதாள். இப்படிப்பட்ட கோர யுத்தத்தில் மஹாப் பிரஸித்தி பெற்று, ஜயலக்ஷ்மி விளங்க, வீரலக்ஷ்மி ஜ்வலிக்க தன் பர்த்தாவை அதுவரையிலும் பார்த்ததில்லை. ஆகையால் அள வற்ற ஆச்சரியத்துடன், "நமக்கு மானமும் பிராணனும் பர்த்தா வும் பந்துக்களும் கீர்த்தியும் போயினவென்று கைவிட்டிருக்க, ஸகல ஆபத்துகளும் அபாயங்களும், ஸூரியனைக்கண்ட பனிபோல் நீங்கினவல்லவா" என்று பரமானந்தத்துடனும், தன் பதியையே தெய்வமென்று எண்ணினவளாகையால் அவரிடத்தில் வைத்த கரையில்லாத ஸ்நேஹத்துடனும், அவருடைய திவ்ய ஸௌந்தரியம் பொருந்தின முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். உதித்த பூர்ணசந் திரனைப்போல் அவருடைய முகமண்டலம் சிவந்திருந்தது. களங்க மற்ற சந்திரனைப்போல் அடுத்த க்ஷணத்தில் கோபத்தால் விகா ரத்தை அடையும். வெகுகாலமாய் விட்டுப்பிரிந்த தன் பிராண நாயகனுடைய முகத்தை ஏறிட்டுப் பார்த்து, ஸீதை ஸகல துக்கங் களையும் ஸகலக் கிலேசங்களையும் ஸகல சோகத்தையும் ஸகல தாபத்தையும் மறந்தாள்.

அத² ஸமபநுத³ந் மந: க்லமம் ஸா
ஸுசிர மத்³ருஷ்ட முதீ³க்ஷ்ய வை ப்ரியஸ்ய ।
வத⁴ந முதி³த பூர்ண சந்த்³ர காந்தம்
விமல ஶஶாங்க நிப⁴ாநநா தத³ாஸீத் ॥ (37)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீராமசந்த்ராய நம:

19. துர்நடத்தையுள்ள பிள்ளை நல்லவனாக

(For Better Character of Children)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

அயோத்யா காண்டம்: ஸர்க்கங்கள் 1, 2

உமா ஸம்ஹிதா

அயோத்[4]யா காண்ட ப்ராரம்பே[4] ஸ்ரீராம கு[3]ண ஸந்ததே: ।
பட[2]நாத்[3] கு[3]ணவாந் புத்ரோ நிர்கு[3]ணோபி ப[4]வேத்[3] த்[4]ருவம் ॥

சொன்ன சொல் கேட்காமல், தக்கபடி கல்வி பயிலாமல், தீய வருடன் சேர்ந்து தீய செயல்களைப் புரிந்து, பெற்றோருக்கும் குலத்திற்கும் இழுக்கு ஏற்படுத்தும் மகன் விஷயமாகக் கலங்கி இருக்கும் தந்தை, 'ஸ்ரீ ராமரின் குண கணங்களை வருணிக்கும்' அயோத்யா காண்டம் 1, 2-வது ஸர்க்கங்களைப் பாராயணம் செய்தால் தனயன் திருந்தி நல்வழியில் நடப்பான்.

நிவேதனம்: ஐந்து வாழைப்பழங்கள்.

ஸங்கல்பம்

ஸ்ரீ ஸீதாலக்ஷ்மண பரத சத்ருக்ன ஹநுமத் ஸமேத
ஸ்ரீ ராமசந்த்ர ப்ரபோ: ப்ரஸாதேந
............நாம்ந: । நாம்ந்யா : புத்ரஸ்ய । புத்ரிகாயா:
ஸகல ஸ[3]த்கு[3]ணாவாப்த்யர்த்தம்
"ஸ்ரீராமகு[3]ண வர்ணநா"த்மக
ஸ்ரீமத்[3] ராமாயண க[4]ட்ட பாராயணம்
அஹம் கரிஷ்யே ।

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Hariharan Collection, Sholinganallur, Chennai



CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸர்க்கம் 1

ஸ்ரீராம பட்டாபிஷேக நிச்சயம்

க³ச்ச²தா மாதுலகுலம் ப⁴ரதேந ததா³நக⁴: ।
ஶத்ருக்⁴நோ நித்ய ஶத்ருக்⁴நோ நீத: ப்ரீதி புரஸ்க்ருத: ॥ (1)

குற்றமற்றவரும் நித்திய சத்துருக்களான காமம் குரோதம் முதலியவைகளை ஜயித்தவருமான சத்துருக்னன், மாமன் வீட்டிற்குப் போகும்பரதனுல் பிரீதியுடன் அழைத்துப் போகப்பட்டார். பரதன் தன் மாமனுன யுதாஜித்தால், உத்தமமான குதிரைகள், ஆபரணங்கள், போர்வைகள், போஜனம் முதலிய உபசாரங்களால் புத்திரனைப்போல் பிரீதியுடன் ஆதரிக்கப்பட்டாலும், சத்துருக்னனிடத்திலுள்ள ஸ்நேஹத்தால் மாத்திரம் அங்கே வஸித்துக் கொண்டிருந்தார்.

இப்படி இஷ்டமான வஸ்துக்களால் விசேஷப் பிரியமடைந்து ஸுகமாக அங்கே வஸிக்கும்பொழுது, சூரர்களான அவ்விருவரும், "நமது பிதா வயது சென்றவராயிற்றே; இனி ராஜ்யபாலனம் செய்ய அவரால் முடியாதே; ராமனுக்கு ஒரு வேளை பட்டாபிஷேகம் செய்வாரோ தெரியவில்லையே; இந்த ஸமயத்தில் ஸமீபத்திலிருந்து பிதாவிற்குப் பணிவிடை செய்ய வேண்டியிருக்க, அந்தக் காலம் நமக்குத் தவறிப் போகிறதே" என்று தசரதரை அடிக்கடி நினைத்துக் கொள்வார்கள். உத்தமமான புத்திரர்களை அடைந்ததால் அளவற்ற தேஜஸுள்ள அவ்வரசனும், "இந்திரன், வருணன் முதலியவர்களைப்போல் குறைவில்லாத ஸ்நேஹமுள்ள பரத சத்ருக்னர்களை விட்டுப் பிரிந்திருக்கிறோமே. பலவகையான ஸம்பத்துக்கள் நிறைந்திருந்தாலும் என் அருமைக் குழந்தைகள் ஸமீபத்தில் இல்லாதது ஒரு பெரிய குறையே" என்று, அவர்களை அடிக்கடி நினைப்பது வழக்கம்.

நான்கு குமாரர்களிடத்திலும் அரசனுக்குத் தன் சரீரத்திலிருந்துண்டான நான்கு கைகளிடத்திலும்போல் பிரீதி ஸமமே. ஆனாலும் பிராணிகளுக்குள் பிரஹ்மதேவர் எப்படியோ, அப்படி அந்த நால்வருக்குள் ராமன் உத்தம குணங்களுடன் கூடியிருந்ததால் தசரதருக்கு அவரிடத்தில் அதிகப் பிரீதி.

நித்தியரான மஹாவிஷ்ணு, கர்வமடைந்த ராவணனைக் கொல்லத் தேவர்களால் வேண்டப்பட்டு, ராமனுகப் பூமியில் வந்தார். இந்திரனைப் புத்திரனுக அடைந்த அதிதியைப் போல் கௌஸல்யையும் வெகு தேஜஸுள்ள ராமனுல் விளங்கினுள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இம்மாதிரியான புத்திரனை அடைந்தவர்கள் கௌஸல்யையைத் தவிர பூமியில் வேறொருவரும் இல்லை. ராமன் மிக்க அழகுள்ளவர்; பராக்கிரமமுள்ளவர்; அஸூயையில்லாதவர்; இங்கிதம், ஸ்வபாவம், நடை முதலியவைகளில் தசரதரை ஒத்தவர் ஒருவரும் கடுமையான வார்த்தையை அவரிடத்தில் சொல்லமாட்டார்கள்; அப்படிச் சொன்னாலும் அவர் பதில் சொல்வதில்லை. பேசும் போதெல்லாம் மிருதுவாகவே பேசுவார். எப்பொழுதும் சாந்த ஸ்வபாவமுள்ளவர்; ஆகையால் ஒருவன் தனக்கு எப்பொழு தாவது எக்காரணத்தாலாவது ஸ்வல்ப உபகாரம் செய்திருந் தாலும் அதைப் பெரிதாக எண்ணி மிகவும் ஸந்தோஷிப்பார். ஆனால் ஸகல ஜகத்திற்கும் அவரே ஆத்மாவாகையாலும் மனத்தை வசப்படுத்தினதாலும், பிறர் தனக்கு எண்ணமுடியாத அபகாரங்களைச் செய்தாலும் அவைகளை நினைப்பதே இல்லை.

ஒவ்வொரு நாளும் அஸ்திர வித்யையைக் கற்ற ஸமயம் போக மிகுந்த காலத்தில், அனுஷ்டானம், நல்லறிவு, வயது இம்மூன்றிலும் முதிர்ந்து நல்லோராயிருக்கும் பெரியோர்களுடன் பேசிக்கொண் டிருப்பார். அவர் எப்பொழுதும், எல்லா ஜனங்களும் எப்படி ஸுகமாக வஸிப்பார்களென்ற யோசனையுள்ளவர்; இன்பமாகப் பேசுகிறவர்; மிகவும் தாழ்ந்தவர்களிடத்திலும் தானே முந்திப் பேசுவார். அண்டினவர்களுடைய சத்துருக்களை நாசம் செய்யும் பராக்கிரமமுள்ளவர்; அப்படியிருந்தும் கர்வமில்லாதவர். உண்மை யல்லாத கதைகளை ஒருபொழுதும் சொல்வதில்லை. பெரியோர்களை எதிர் கொண்டழைத்து நன்றாகப் பூஜிப்பார். ஸகல ஜனங்களிடத் திலும் அதிகப் பிரீதியுள்ளவர். அவர்களும் அவரிடத்தில் அப்படியே பிரீதி வைத்திருந்தார்கள். எல்லோரிடத்திலும் தயையுள்ளவர்; பிறருடைய துக்கத்தைப் பொறுக்காதவர். கோபத்தை ஜயித்தவர். வேதத்தின் உட்கருத்தை அறிந்தவர்களைப் பூஜிப்பவர். தீனர் களிடத்தில் தயையுள்ளவர். தர்மத்தைப் பொதுவாகவும் விசேஷ மாகவும் அறிந்தவர். எல்லாப் பிராணிகளுக்கும் அபயம் கொடுக் கிறேன் என்ற விரதமுள்ளவர். பிறருடைய பொருளை விரும்பாத வர். தன் வம்சத்திற்குத் தகுந்த தயை, தாக்ஷிண்யம், அண்டின வர்களைக் காப்பாற்றுவது, துஷ்டர்களைச் சிக்ஷிப்பது முதலிய க்ஷத்திரிய தர்மத்தை அனுஷ்டிப்பதே பெரிதென்றும், அதுவே கீர்த்தியையும் ஸ்வர்க்காதி புண்ய லோகங்களையும் கொடுக்கு மென்றும் நினைப்பவர். யாவற்றையும் அறிந்தவராகையால், சூது, சொக்கட்டான் முதலிய வீணான விளையாட்டுகளில் காலத்தைக் கழிப்பதில்லை. தர்மவிரோதமான வீண் பேச்சில் ஆசையற்றவர். லௌகிக வியவஹாரத்திலும் வைதிக வியவஹாரத்திலும் தடை யில்லாமல் பிருஹஸ்பதியைப்போல் மேன்மேலும் கக்ஷி சொல்லக் கூடியவர். மனோ வியாதி தேக வியாதி இல்லாதவர். யௌவன

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

புருஷன்; எல்லோரும் புகழும் பேசும் திறமையுள்ளவர்; அதிக சரீர பலமுடையவர்; அத்யயனம் செய்யும் தேச காலங்களை நன்றாயறிந்தவர். ஒரு தடவை பார்த்தவுடன் ஒருவனுடைய பலம் இவ்வளவென்றும் நன்றாக அறியக்கூடியவர். தனக்கு அபகாரம் செய்தவனிடத்திலும் விரோத புத்தியில்லாதவர். ஆசாரியரிடத்தில் வித்யையைக் கற்று, விரதங்களை அநுஷ்டித்து ஸமாவர்த்தனம் செய்தவர். வேதங்களின் அர்த்தத்தை விதிப்படி நன்றாகக் கற்றுணர்ந்தவர்; அஸ்திர சஸ்திர வித்யையில் தன் பிதாவைக் காட்டிலும் மிகுந்த திறமையுடையவர். இவருடைய வம்சம் மிகவும் பரிசுத்தமானது.

இவர் ஸகல க்ஷேமங்களுக்கும் இருப்பிடம். குற்றமற்றவர். வேதத்தில் சிரத்தையுள்ளவர். எந்நாளும் கலங்காத புத்தியுள்ளவர். மிகவும் கஷ்டமான நிலைமையிலும் உண்மையையே பேசுகிறவர். எண்ணமும் பேச்சும் செய்கையும் ஒத்திருப்பவர். தர்மங்களைப் பூர்ணமாக அறிந்த பெரியோர்களான பிராம்மணோத்தமர்களால் நல்ல மார்க்கத்தில் நன்றாகப் பழக்கப்பட்டவர். பகலின் முன்பாகத்தில் அநுஷ்டிக்கவேண்டிய தர்மார்த்த காமங்களை நன்றாக அறிந்தவர். அறிந்த விஷயத்தை ஒருபொழுதும் மறக்காதவர். மேன்மேலும் தோற்றமுள்ள புத்தியுள்ளவர். லௌகிக காரியங்களில் மிகவும் சமர்த்தர். வணக்கமுள்ளவர். பிறரால் அறியமுடியாத எண்ணத்தையுடையவர். ஆலோசித்த காரியம் முடியும்வரையில் பிறர் அறியமுடியாதபடி மறைத்து வைத்துக்கொள்பவர். சிறந்த மந்திரிகளுடையவர். அவருடைய கோபமாவது சந்தோஷமாவது வீண்போகாது. நல்ல பாத்திரமறிந்து தானம் செய்வதற்கும் நியாயமாய்ச் சம்பாதிப்பதற்கும் தகுந்த காலத்தை நன்றாயறிந்தவர். தேவதைகளிடத்திலும் ஆசாரியரிடத்திலும் மிகுந்த பக்தியுள்ளவர். அண்டினவர்களிடத்தில் மிகுந்த பிரீதியுள்ளவர்; கலக்கமில்லாத நிச்சயமான தத்வஞ்ஞானமுள்ளவர்; மூடர்களுடன் சேராதவர்; கடுமையாகப் பேசாதவர்; சோம்பலில்லாமல் எப்பொழுதும் சாஸ்திர விசாரம் செய்துகொண்டிருப்பவர்; சாஸ்திரங்களின் உண்மையை அறிவதில் ஜாக்கிரதையுள்ளவர்.

பிறருடைய குற்றங்களையும் தன் ராஜ்யத்திலும் சத்துரு ராஜ்யத்திலுமுள்ள தோஷங்களையும் நன்றாயறிந்தவர். வேதவேதாங்கங்களையும் சகல வித்யைகளையும் அப்யஸித்தவர். எல்லா விஷயங்களின் முடிவான கருத்தை அறிந்தவர். பார்த்தவுடன் அவரவர்களின் ஸ்வபாவ தாரதம்யத்தை நன்றாயறிந்தவர். நீதி சாஸ்திரப்படி மித்திரர்களையும் ஸாதுக்களையும், சேர்ப்பதிலும், அவர்களைக் காப்பாற்றுவதிலும் வெகு சாமர்த்தியமுள்ளவர். கெட்ட

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Paripalana Sri Hariharan Collection, Sholinganallur, Chennai

வர்களை சிக்ஷிக்கும் சமயமறிந்தவர். தேனீக்கள் புஷ்பங்களைக் கசக்காமல் எப்படி ரசத்தை எடுக்குமோ, அப்படி ஜனங்களுக்குக் கஷ்டமில்லாமல் அவர்களிடத்திலிருந்து தனத்தை ஸம்பாதிக்கும் வகையை அறிந்தவர். தன் வரவில் பாதியையாவது, கால்பாகத்தையாவது, முக்கால் பாகத்தையாவது செலவழிக்கலாமே ஒழிய வரவிற்கு அதிகமாகச் செலவு செய்யக்கூடாதென்ற ராஜநீதியை அறிந்தவர். பலவகையான சாஸ்திர ஆராய்ச்சியிலும் ஸம்ஸ்கிருத பிராகிருத பாஷைகளில் காவ்யம், நாடகம் முதலியவைகளிலும் மிகவும் தேர்ந்தவர். தர்மார்த்தங்களுக்கு விரோதமில்லாத காம ஸுகத்தை அநுபவிப்பவர். செய்யவேண்டிய காரியங்களில் உத்ஸாகக் குறைவில்லாதவர். இன்பமாகக் காலம் கழிப்பதையே பிரயோஜனமாகவுடைய சித்திரவேலையிலும் ஸங்கீதத்திலும் பல வாத்தியங்களை வாசிப்பதிலும் திறமையுள்ளவர். தன் செல்வத்தை ஐந்து வகையாகப் பிரிக்கவேண்டுமென்ற நீதியை அறிந்தவர். யானை, குதிரை முதலியவைகளை ஏறிப் பழக்குவதில் திறமையுள்ளவர். வில்வித்யையின் ரஹஸ்யத்தை அறிந்தவர்களுக்குள் சிறந்தவர். லோகத்திலுள்ள அதிரதர்களால் பூஜிக்கப்பட்டவர். சத்துருக்களை நோக்கித் தானே பயமில்லாமல் போய், ஸைன்யத்தின் முன்னின்று, தன் பலங்களைக் காப்பாற்றி, சத்துருக்களுடைய வ்யூஹங்களைப் பிளந்து, தன் ஸைன்யத்தை அதற்குள் செலுத்தி, பகைவர்களை முறியடிப்பதில் மிகுந்த ஸாமர்த்தியமுள்ளவர். ஸைன்யங்களைப் பல வ்யூஹங்களாகப் பிரிப்பதில் நிபுணர். தேவாஸுரர்களும் அவரை ஒருபொழுதும் ஜயிக்கமுடியாது.

அஸூயையை விலக்கினவர். கோபத்தை ஜயித்தவர். கர்வமில்லாதவர். பிறர்க்குக் கிடைக்கும் லாபத்தைப் பற்றிப் பொறுமையில்லாதவர். பிராணிகளை அவமதிக்கும் ஸ்வபாவமில்லாதவர். இவ்வளவு உத்தம குணங்களால் அலங்கரிக்கப்பட்டு, பூமிதேவியைப்போல் பொறுமை வாய்ந்த ராமன், மூவுலகத்தாருக்கும் பிரியமானவர். புத்தியில் பிருஹஸ்பதியை ஒத்தவர்; பராக்கிரமத்தில் மஹேந்திரனைப் போன்றவர். இம்மாதிரி ராமன் எல்லா ஜனங்களுக்கும், தன் பிதாவான தசரதருக்கும், ஸந்தோஷத்தைக் கொடுக்கும் உத்தம குணங்களால் ஸூரியன் ஆயிரம் கிரணங்களுடன் விளங்குவதுபோல் பிரகாசித்தார். ஆகையால், அண்டினவர்களைக் காப்பாற்றுகிறதென்ற விரதத்தையும் வீண்போகாத பராக்கிரமத்தையும் உடையவரும், லோகபாலர்களைப் போன்றவருமான ராகவன், தங்களுக்கு அரசனாக வேண்டுமென்று ஜனங்கள் ஆசை கொண்டார்கள்.

அப்பொழுது தசரத சக்கரவர்த்தி, தன் புத்திரன் உத்தம குணங்களால் நிகரற்றவனென்று நினைத்து, "வயது முதிர்ந்த

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri Harikaran Collection, Sholinganallur, Chennai

நமக்கு இனி ஆகவேண்டியதென்ன? நாம் உயிரோடிருக்கையில் ராமன் அரசனாக வேண்டியதே நமக்கு மிகுந்தப் பிரீதியைக் கொடுக்கும். ஆகையால் அவனுக்கு அபிஷேகம் செய்து, அவனை அரசனாக எப்பொழுது பார்ப்பேன்? நமது குழந்தை ராமன், தனவான்களுக்கு மேன்மேலும் ஐசுவரியம் பெருக வேண்டுமென்று விரும்புகிறவன். செல்வம் குறைந்தவர்களிடத்தில் மிகுந்த தயை வைத்து உதவி செய்கிறவன். தாபத்தைப் போக்கி ஜலத்தைப் பொழிவதால் மேகத்தினிடத்தில் ஜனங்கள் எப்படிப் பிரியம் வைக்கிறார்களோ அப்படி, நம்மைவிட ராமனிடத்தில் விசேஷப் பிரியம் வைத்திருக்கிறார்கள். மேலும், பராக்கிரமத்தில் யமனையும் இந்திரனையும், புத்தியில் பிருஹஸ்பதியையும், தைரியத்தில் ஹிமய மலையையும் ஒத்திருப்பதால் என்னைவிட மிகுந்த குணசாலி. நமது குழந்தை ராமனுக்கு அபிஷேகம் செய்து இந்த முதிர்ந்த வயதில் அதனாலுண்டாகும் ஆனந்தத்தை அனுபவித்துப் பிறகு ஸ்வர்க்க மடையவேண்டும்'' என்று தன் மனதில் தீர்மானித்துக் கொண்டார்.

அரசர்களிடத்திலில்லாத மேற்சொன்ன அளவற்ற லோகோத் தமமான நற்குணங்கள் யாவும் ராமனிடத்தில் இருப்பதைப்பற்றி தன் மந்திரிகளுடன்யோசித்து, ராமனுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க நிச்சயித்தார்.

மேலும், அரசருக்கு வரும் கெடுதியைக் காண்பிக்கும் மூன்று வகையான அபசகுனங்களையும், தனக்குக் கிழத்தனத்தால் நேர்ந் திருக்கும் சக்திக் குறைவையும் ராமனுக்குச் சீக்கிரமாக அபிஷேகம் செய்யவேண்டும் என்பதற்குக் காரணமாக மந்திரிகளிடத்தில் சொன்னார். பூர்ண சந்திரனைப்போன்ற ராமனுடைய முகத்தைப் பார்த்தவுடனே எல்லா ஜனங்களும், தானும் துக்கம் நீங்கி மிகுந்த ஸந்தோஷத்தை அடைவதால், பிரஜைகள் க்ஷேமமாயிருக்க வேண்டிய காலம் வந்துவிட்டதென்றெண்ணி ராமாபிஷேகத்தைச் சீக்கிரப்படுத்தினார். தூதர்களை அனுப்பி அநேக பட்டணங்களிலும் தேசங்களிலும் வசிக்கும் ஜனங்களையும் முக்கியமான அரசர் களையும் சீக்கிரமாக வருவித்தார். ஆனால் கேகய தேசத்தரசனும் ஜனகரும் வெகுதூரத்திலிருந்ததால் பிறகு கேட்டு சந்தோஷமடை யட்டுமென்று அவர்களுக்குச் சமாச்சாரம் அனுப்பவில்லை. தசரதர் வந்த அரசர்களுக்குத் தகுந்த விடுதிகளை ஏற்படுத்தி உத்தமமான போஜனம் விலையற்ற ஆபரணங்கள் முதலியவைகளால் உபசரித் தார். தான் சபையில் வந்திருந்து, அவர்களைப் பார்க்கத் தயாரா யிருக்க, கேகய ராஜனையும் ஜனகரையும் தவிர மற்ற அரசர்கள், பிரஹ்ம சபைக்கு வரும் தேவர்களைப்போல் அந்த சபாமண்ட பத்தில் புகுந்து. அரசனுக்கெதிரில் வணக்கத்துடன் தகுந்த ஆஸ

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V.Hariharan Collection, Sholinganallur, Chennai

னங்களில் உட்கார்ந்தார்கள். அப்பொழுது அவரால் வெகுமதிக் கப்பட்ட நகரவாசிகள் அவர் என்ன சொல்லப் போகிருரென்று, அவருடைய வார்த்தையைக் கேட்பதில் மிகுந்த ஆவலுடன் சமீபத்தில் நெருங்கி உட்கார்ந்தார்கள். தேவர்களால் சூழப்பட்ட மஹா பராக்கிரமமுள்ள தேவேந்திரனைப்போல் அவர்களுக்கு நடுவில் தசரதர் பிரவேசித்தார்.

ஸ லப்[3]த[4] மாநைர் விநயாந்விதைர் ந்ருபை:
புராலயைர் ஜாநபதை[3]ஸ்ச மாநவை:।
உபோபவிஷ்டைர் ந்ருபதிர் வ்ருதோ ப[3]பௌ[6]
ஸஹஸ்ர சக்ஷுர்ப[4]க[3]வாநிவா மரை:॥ (51)

ஸர்க்கம் 2

மந்திராலோசனை

தத: பரிஷத[3]ம் ஸர்வாம் ஆமந்த்ர்ய வஸுதா[6]தி[4]ப:।
ஹித முத்[3]த[4]ர்ஷணம் சைவம் உவாச ப்ரதி[2]தம் வச:॥ (1)

பின்பு ஸபையிலிருக்கும் எல்லோரையும் அழைத்து, தான் பேசுவதைக் கவனித்துக் கேட்கும்படி அவர்களைச் செய்து, எல்லோருக்கும் அனுகூலமாயும் அதிக ஸந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியதாயும் தெளிவாயும் பின்வருமாறு சொன்னர். அவருடைய குரல் பேரி வாத்தியத்தின் சப்தத்தைப்போல் கம்பீரமாயும், திக்குகளில் எதிரொலி உண்டாக்கக் கூடியதாயும் மேக கர்ஜனையைப் போலும் ராஜ லக்ஷணங்கள் பொருந்தினதாயும், கேட்க மிருதுவாயும், இனிமையாகவும் இருந்தது. "அரசர்களே, ஜனங்களே! என் முன்னேர்களான ரகு முதலிய கீர்த்தி பெற்ற அரசர்கள், இந்தக் கோஸல ராஜ்யத்தைத் தங்கள் புத்திரனைப் போல் மிகுந்த அன்புடன் காப்பாற்றிவந்த விஷயம் உங்களுக்கு நன்ருகத் தெரியுமே. அந்த வம்சத்தில் பிறந்த நான், விசேஷ ஸுகத்தை அனுபவிக்கத் தகுந்த என் ராஜ்யத்திற்கு க்ஷேமத்தைச்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

செய்ய விரும்புகிறேன். ஏதோ என் புத்திக்கும் சக்திக்கும் தகுந்தபடி நீதிநெறி தவருமல், சோம்பலில்லாமல், முன்னோர்களின் மார்க்கத்தை விடாமல் ஜனங்களை இவ்வளவு காலமாகக் காப்பாற்றி வந்தேன். நீங்களும் வெகு ஸந்தோஷமடைந்திருக்கிறீர்கள்.

"ஆனாலும் வெண்குடையின்கீழிருந்து ஜனங்களுக்கு நன்மையையே செய்துவந்து அரசாண்ட எனக்கு வயது முதிர்ந்துவிட்டது. யயாதி முதலியவர்களைப்போல் எனக்கு விஷயசுகத்தில் ஆசையில்லை. அறுபதாயிரம் வருஷங்கள் ஜீவித்திருந்து தளர்ந்துபோன இந்தத் தேகத்திற்கு ஓய்வு வேண்டுமென்று விரும்புகிறேன். சௌரியம் முதலிய குணங்களால் நிறைந்தவர்கள் நிர்வஹிக்கக்கூடியதும், இந்திரியங்களை ஜயிக்காமல் விஷயத்தையே நாடினவர்களால் வஹிக்கமுடியாததும், பலவகையான ஒத்தாசைகளை அபேக்ஷித்ததும், தர்மத்தை நிலைபெறச் செய்வதுமான இந்தப் பெரிய பாரத்தை வெகுகாலமாகத் தாங்கிவந்ததால் மிகவும் களைத்திருக்கிறேன். இப்பொழுது இங்கிருக்கும் பிராமண சிரேஷ்டர்கள் முதலிய எல்லோருடைய ஸம்மதமுமிருந்தால், என் புத்திரனை அரசனாகச் செய்து ஸுகமாயிருக்கலாமென்று நினைக்கிறேன். யுவராஜாவாக இருக்கத் தகுந்தவனென்று நான் குறிப்பிடும் என் மூத்த குமாரனான ராமன், சத்துருக்களை ஜயித்தவன்; அவர்களுடைய நகரங்களைப் பிடித்தவன்; பராக்கிரமத்தில் இந்திரனை ஒத்தவன்; எல்லாக் குணங்களிலும் என்னைப் போன்றவன்; தர்மசிந்தையுள்ளவர்களுக்குள் உத்தமன்; புருஷ சிரேஷ்டன்; புஷ்ய நக்ஷத்திரத்துடன் சேர்ந்த சந்திரனைப்போல் மிகுந்த தேஜஸுள்ளவன். அவனுக்குப் புஷ்ய நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் யௌவராஜ்ய பட்டாபிஷேகம் செய்ய ஆசைகொண்டிருக்கிறேன். லக்ஷ்மணனுக்கு மூத்தவனும் அளவற்ற தேஜஸுள்ளவனுமான ராமன் பூமிக்கு தகுந்த அரசன். இவனை அரசனாக அடைந்தால் மூன்று லோகங்களும் நன்முக ரக்ஷிக்கப்படும். ராமனை அரசனாகச் செய்து, இந்தப் பாரத்தை அவனிடத்தில் ஒப்புவித்து, அதனுல் பூமிக்கு க்ஷேமத்தை உண்டுபண்ணி, நானும் கவலையற்றிருக்க விரும்புகிறேன். நன்முக யோசித்து இதை ஆரம்பித்தேனென்றும் இது தகுந்த பிரயோஜனத்தைக் கொடுக்குமென்றும் உங்களுக்கு தோன்றினுல் அனுமதி கொடுக்கலாம். இது உசிதமல்லவென்முல், வேறு என்ன செய்யலாமென்று அதையும் சொல்லுங்கள். இப்படிச் செய்வதே உசிதமென்று எனக்குத் தோன்றினுலும் மத்யஸ்தர்களான உங்களுடன் நன்முய் யோசித்துச் செய்வது இன்னும் அதிக பலத்தைக் கொடுக்கும்" என்முர்.

இதைக் கேட்டு மற்ற அரசர்கள், மழை பெய்யப்போகும் மேகத்தைப் பார்த்து மயில்கள் களிப்பதுபோல் அவரைப் புகழ்ந்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தார்கள். ஜனங்களுடைய ஸந்தோஷத்தாலுண்டான பெரிய சப்தம் எதிரொலியால் அந்த ஸபையின் விமானத்தை அசைப்பது போல் பரவிற்று.

பிறகு வஸிஷ்டர் முதலிய பிராம்மணர்களும் அரசர்களும் நகரத்து ஜனங்களுடனும் நாட்டுப்புறத்து ஜனங்களுடனும் நன்ருய் ஆலோசித்து, தனக்குக் கிழத்தனம் நேர்ந்தபோது யுவ ராஜாவை நியமிப்பதே தர்மமென்று நினைத்திருக்கும் தசரத ருடைய எண்ணத்தை தேசகால சேஷ்டைகளால் நன்ருக அறிந்து தமக்குள் ஒவ்வொருவரும் யோசித்து, பிறகு எல்லோரும் ஒரே எண்ணத்துடன், "மஹாராஜ! தாங்கள் அநேக ஆயிர வருஷங் களாக இந்த ராஜ்யத்தைக் காப்பாற்றி வந்து வயது முதிர்ந்திருக் கிறீர்கள். ஆகையால் தங்களுடைய புத்திரஞன ராமனை யுவ ராஜாவாக அபிஷேகம் செய்யுங்கள். ராஜ்யத்தைக் காப்பாற்று வதில் தாங்கள் இந்தத் தளர்ந்த வயதிலும் வெகு ஜாக்கிரதை யுடையவர்கள். ஆனாலும் மலைபோன்ற பட்டத்து யானைமேல், வெண்குடையால் சற்று மறைக்கப்பட்ட முககாந்தியுடன், மஹா பலசாலியாய், முழங்கால் வரையில் நீண்ட திருக்கைகளுடன், ரகுவீரன் பவனி வரும் காக்ஷியைப் பார்க்க ஆவல் கொண்டிருக் கிறோம். எங்களுக்கு ஆசை இருந்தாலும் அதைப் பூர்த்தி செய்வது தங்களைச் சேர்ந்தது" என்று தெரிவித்தார்கள்.

அவர்களுடைய எண்ணத்தைத் தசரதர் நன்ருக அறிந்தும் அறியாதவரைப்போல், "அரசர்களே! நான் சக்கரவர்த்தியாக உங்களைக் காப்பாற்றிக் கொண்டிருக்கும்பொழுதும், ராமனை யுவ ராஜாவாக அபிஷேகம் செய்து பார்க்கவேண்டுமென்று ஆசைப் படுவதற்குக் காரணம் தெரியவில்லை. உண்மையாகச் சொல் லுங்கள்" என்ருர்.

அப்பொழுது அவ்வரசர்களும் பட்டணத்து ஜனங்களும், "மஹாராஜ! மற்றவர்களிடத்திலில்லாத பல உத்தம குணங்கள் தங்கள் புத்திரஞன ராமனிடத்தில் இருக்கின்றன. தேவர்களை போன்றவரும் புத்திமானும் கேட்பவர்களுக்கும் நினைப்பவர் களுக்கும் சொல்லுகிறவர்களுக்கும் ஆனந்தத்தையும் பிரீதியையும் கொடுக்கக்கூடியவருமான ராகவனுடைய கல்யாண குணங்களை சொல்லுகிறோம், கேளுங்கள் :

"ராமன் வீண்போகாத பராக்கிரமமுள்ளவர்; உத்தம குணங் களால் மஹேந்திரனைப் போன்றவர்; இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்த அரசர்களை விட மேலானவர்; உத்தம புருஷர்; ஸத்தியத்திலும் தர்மத்திலும் நோக்கமுள்ளவர்; தர்மத்தையும் அதன் பயனை

CC-0. In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸம்பத்தையும் பிறரை எதிர்பார்க்காமல் கொடுப்பவர்; சந்தி ரனைப்போல் ஜனங்களுக்கு ஸுகத்தைத் தருபவர்; பொறுமையில் பூமிதேவியைப் போன்றவர்; புத்தியில் பிருஹஸ்பதியையும், பராக் கிரமத்தில் இந்திராணியின் பர்த்தாவான மஹேந்திரனையும் ஒத்தவர்; ஸாமான்ய தர்மத்தையும் விசேஷ தர்மத்தையும் அறிந்தவர். அவருடைய பிரதிக்ஞை வீணாவதில்லை. தான் மஹானாயிருந்தும் தனக்குக் குறைந்த புத்தியுள்ளவர்களுடன் இடைவிடாமல் நெருங்கிப் பழகும் ஸ்வபாவமுள்ளவர். பிறரிடத் தில் காரணமில்லாமல் தோஷங்களை ஏற்படுத்தும் அஸூயையை விலக்கினவர்; அண்டினவர்களின் குற்றத்தைப் பொறுப்பவர்; குற்றம் செய்யாதவர்கள் கோபித்தாலும் துக்கமடைந்தாலும் அவர்களை ஸமாதானம் செய்பவர்; பிரியமாகப் பேசும் ஸ்வபாவ முள்ளவர்; பிறர் செய்த உபகாரம் கொஞ்சமானாலும் அதை அதிகமாய் நினைப்பவர்; கெட்ட விஷயங்களில் ஆசையற்றவர்; அண்டினவரை விட்டுப் பிரிய மனமில்லாதவர்; மிகவும் கஷ்ட மான நிலைமையிலும் முன் ஒப்புக் கொண்ட காரியத்தை விடாமல் செய்துகொடுப்பவர்; அண்டினவர்களுக்கு வசப்பட்டவர்; பிறர் தன்னிடத்தில் அஸூயை வைத்தாலும் அதை லக்ஷ்யம் செய்யாதவர்; பொய்யைச் சொல்லாமல் எல்லோரிடத்திலும் பிரியமாகப் பேசுகிறவர்; ஞானம், வயது, ஆசாரம் என்றவை களில் முதிர்ந்த பிராம்மணர்களை எப்பொழுதும் வணங்குகிறவர். ஆகையால் ஔதார்யம், பராக்கிரமம், சத்ருக்களை ஜயிக்கும் திறமை முதலிய குணங்கள் மேன்மேலும் அவரிடத்தில் வளர் கின்றன.

“தேவர்கள், அஸுரர்கள், மனிதர்கள் முதலியவர்களுக்குத் தெரிந்த அஸ்திர சாஸ்திரங்கள் யாவையும் அறிந்தவர். சாஸ்திரப் படி குருவிடத்தில் வேத வேதாங்கங்களைப் படித்து, விரதங்களை அநுஷ்டித்து ஸமாவர்த்தனம் செய்தவர். ஸாமகானத்திற்கு உபயோகமான ஸங்கீதத்தில் மிகுந்த தேர்ச்சி அடைந்தவர். இவருடைய குலம் மிகவும் பரிசுத்தமானது; தானும் மஹா சுத்தர்; எக்காலத்திலும் கலங்காத மனமுள்ளவராகையால் சிறந்த புத்திமான். நல்ல குலத்தில் பிறந்தவர்களும், மிகுந்த படிப்பாளிகளும், வணக்கமுள்ளவர்களும், தர்மத்தின் கருத்தை நன்றாக எடுத்துச் சொல்வதில் திறமையுள்ளவர்களுமான பிராம்மண சிரேஷ்டர்களால் பழக்கப்பட்டவர். கிராமங்கள் நகரங்களைப்பற்றிச் சத்துருக்களுடன் போராட வேண்டியிருந் தால் லக்ஷ்மணனை அழைத்துக்கொண்டு, யுத்தத்திற்குப் போய், பகைவரை ஜயிக்காமல் திரும்புவதில்லை. யுத்தம் முடிந்த பிறகு, யானை ரதம் முதலிய வாஹனங்களிலேறிப் பட்டணத்திற்கு வந்து ஜனங்களை அழைத்து, “உங்கள் குழந்தைகள், பார்யைகள்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Bhongiri and Chennai

சிஷ்யர்கள் முதலியவர்கள் ஸௌக்கியமாக இருக்கிறார்களா? அக்னி காரியங்கள் விதிப்படி நடக்கின்றனவா? உங்கள் வேலைக்காரர்களும் சிஷ்யர்களும் உங்களுக்கு வேண்டிய பணிவிடைகளைக் காலத்தில் சோம்பலில்லாமல் செய்கிறார்களா?" என்று தகப்பன் குழந்தைகளை விசாரிப்பதுபோல் பலவிதமாக க்ஷேமம் விசாரிப்பார். தனிகனோ, ஏழையோ யாராயிருந்தாலும், ஏதாவது துக்கம் நேர்ந்தால், ராமன் நமது ஆளுகைக்குட்பட்ட இவர் கஷ்டப்படுவதற்கு 'நமது தவறே காரணம்' என்றெண்ணி மிகவும் வருத்தமடைந்து, அதை மறக்கமாட்டார். அப்படியே யாருக்காவது புத்திரோத்ஸவம் முதலிய சுபங்கள் நேர்ந்தால், மகனுக்கு வாய்ந்த க்ஷேமத்தைப் பார்த்துத் தகப்பன் எப்படி ஸந்தோஷமடைவானோ அப்படி மகிழ்வார்.

" மிகவும் கஷ்டமான நிலைமையிலும் பொய் சொல்லாதவர்; வில்லாளிகளில் சிரேஷ்டர்; பெரியோர்களை ஸேவிப்பவர்; இந்திரியங்களை அடக்கினவர்; புன்சிரிப்புடன் பேசுகிறவர்; எந்த ஆபத்திலும் தர்மத்தை விடாதவர்; ஜனங்களுக்கு க்ஷேமத்தை நன்றாகச் செய்கிறவர்; ஸாதுக்கள் வெறுக்கும் வீண்பேச்சில் ஆசையில்லாதவர்; மேன்மேலும் யுக்தியாய்ப் பேசுவதில் தேவகுருவைப் போன்றவர். அழகான புருவங்களும், சிவந்து நீண்ட திருக்கண்களும் உடையவர்; மஹாவிஷ்ணுவின் அவதாரம் போன்றவர்; யுத்தத்தில் மரணம் நேருவதில் பயமற்றிருப்பது சௌரியம்; தான் கலங்காமல் பிறரைப் பயந்து ஓடச்செய்வது வீரியம்; சத்துருக்கள் எவ்வளவு பலமுள்ளவர்களாயிருந்தாலும் அவர்களுடைய ஸைன்யங்களில் புகுந்து வ்யூஹங்களைத் துளைத்து தேவாஸுரர்களையும் ஜயிக்கக்கூடிய மிகுந்த உத்ஸாஹமுள்ளவராயிருப்பது பராக்கிரமம்; இம்மூன்று குணங்களால் லோகத்தில் பிரகாசிப்பவர்; ஜனங்களைக் காபாற்றும் வழிகளை நன்றாக அறிந்தவர்; விஷய ஸுகங்களில் சபலமில்லாதவர்; மூவுலகத்தையும் ரக்ஷிப்பதில் ஸமர்த்தர். அப்படியிருக்க இந்தப் பூமியை ரக்ஷிப்பது அவருக்குப் பெரிதல்ல.

"அவருடைய கோபமும் ஸந்தோஷமும் வீணாகாது. தண்டிக்க வேண்டியவர்களைத் தவறாமல் தண்டிப்பார். குற்றமில்லாதவரிடத்தில் கோபிக்கமாட்டார். எவனிடத்தில் ஸந்தோஷப்படுகிறாரோ அவனுடைய எண்ணங்களை நிறைவேற்றுகிறவர்; பொறுமையை முக்கியமாக உடையவைகளும், எல்லா ஜனங்களாலும் விரும்பக்கூடியவைகளும், பிரியத்தை உண்டாககக் கூடியவைகளுமான குணங்களால் அநேகமாயிரம் கிரணங்களால் ஸூரியன் விளங்குவதுபோல் பிரகாசிக்கிறார். அரசே! தங்களுக்கு மிகுந்த க்ஷேமத்தை உண்டாக்கும்பொருட்டு, மரீசிக்குக் காசியபர் பி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Shringeri, Chennai

ததுபோல் புத்திரனுக்கு இருக்கவேண்டிய உத்தம குணங்களுடன் இவர் தெய்வானுக்ரஹத்தால் அவதரித்திருக்கிறார். தேவாஸுர கந்தர்வ உரக மஹர்ஷி கணங்களும் நகரவாஸிகளும் வேறு தேசத்து ஜனங்களும் அந்தப்புரத்திலிருப்பவர்களும், யாவரும், பிரஸித்தி பெற்ற நன்னடத்தையுள்ள ராமன், மிகவும் பலவானுக வியாதியில்லாமல் வெகுகாலம் ஜீவித்திருக்க வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கிறார்கள். யௌவன மதத்தால் விவேகமற்ற சிறு பெண்களும், யௌவன ஸ்திரீகளும், வயது சென்றவர்களும், காலை மத்யாஹ்னம் மாலையென்ற மூன்று காலங்களிலும் தவருமல், ஸாவதானமாக, 'கீர்த்திசாலியான ராமனுக்கு யௌவராஜ்யம் கிடைக்கவேண்டும்' என்று எல்லா தேவதைகளையும் நமஸ்கரிக்கிறார்கள். எந்த அல்ப தேவதையையாவது மறந்து விட்டால் அது எங்கே கெடுத்துவிடுமோ என்ற பயத்தால், ஒன்றையாவது பூஜிக்காமல் விடுவதில்லை. பிரபுவே! அவர்களுடைய பிரார்த்தனையைத் தாங்கள் தயவுசெய்து முடித்துக் கொடுக்கவேண்டும். கருநெய்தல், நீலோத்பல புஷ்பத்தைப் போல் கருத்த திருமேனியுள்ளவரும் சத்துருக்களை ஜயிக்கும் வல்லமையுள்ளவருமான தங்கள் புத்திரரத்தினம், யுவராஜாவாக ஸிம்ஹாஸனத்தில் உட்காருவதைப் பார்த்து ஆனந்திக்க விரும்புகிறோம். கேட்டதைக் கொடுப்பவரே! எல்லா ஜனங்களுக்கும் அனுகூலத்தையே செய்பவரும், பெரியோர்களும் ஆசிரயிக்கத் தக்கவரும், மஹா விஷ்ணுவைப் போன்றவருமான தங்கள் புத்திரனை ராகவனுக்கு ராஜ்யாபிஷேகம் செய்து எங்களனைவருக்கும் அநுகூலத்தை அருளவேண்டும்; தாமதிக்க வேண்டாம்" என்று கேட்டுக்கொண்டார்கள்.

தம் தே³வ தே³வோபம மாத்மஜம் தே
ஸர்வஸ்ய லோகஸ்ய ஹிதே நிவிஷ்டம் ।
ஹிதாய ந: க்ஷிப்ர முத³ார ஜுஷ்டம்
முதா³பி⁴ஷேக்தும் வரத³ த்வமர்ஹஸி ॥ (54)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



குசலவர்கள் ராமாயணம் பாடியது

அம்பொனெடு மணிமாட அயோத்தி யெய்தி
அரசெய்தி அகத்தியன் வாய்த்தான் முன்கொன்றான்
தன், பெருந்தொல் கதைகேட்டு மிதிலைச் செல்வி
உலகுய்யத் திருவயிறு வாய்த்தமக்கள்,
செமபவளத்திரள் வாய்த்தன் சரிதை கேட்டான்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந்தன்னுள்,
எம்பெருமான் றன்சரிதை செவியால் கண்ணால்
பருகுவோ மின்னமுதை மதியோமின்றே.

—பெருமாள் திருமொழி—10

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ ராமசந்த்ராய நம:

20. நினைத்த காரியம் நிறைவேற (For Success in Cherished Desires)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்
பால காண்டம்: ஸர்க்கங்கள் 75, 76

உமா ஸம்ஹிதா

அத்ராநிர்தி³ஷ்ட காமாஸ்து யே ஸ்யுர் நாநாவிதே⁴ப்ஸிதா:।
தை: பாட்²யம் ப⁴ார்க³வஜயகத²ா ஸர்க³த்³வயம் யதை:॥
பாயஸாபூப நைவேத்³யம் பட²நாந்தே து காரயேத்॥

மேற்கண்ட பலன்களைத் தவிர அவரவர் தொழிலுக்கும், சக்திக்கும், தேவைக்கும் ஏற்ப மற்ற எந்தப் பலனையாவது வேண்டுபவர்கள் 'ஸ்ரீ ராகவன் பரசுராமனை ஜயித்த' பால காண்டம் 75, 76-வது ஸர்க்கங்களைப் பாராயணம் செய்யவேண்டும்.

நிவேதனம்: பாயஸமும், அப்பமும்.

ஸங்கல்பம்

ஸ்ரீ ஸீதாலக்ஷ்மண பரதஶத்ருக்ந ஹநுமத் ஸமேத ஸ்ரீராமசந்த்ர ப்ரபோ: ப்ரஸாதேந, அஸ்மச்சிந்தித ஸகலாபீ⁴ஷ்ட ஸித்³த்⁴யர்த்த²ம் 'ப⁴ார்க³வ விஜயாத்மக' ஸ்ரீமத்³ராமாயண க⁴ட்ட பாராயணம் அஹம் கரிஷ்யே।

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Harinathan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸர்க்கம் 75

ராமராம ஸம்வாதம்

ராம தா³ஶரதே² ராம வீர்யம் தேஶ்ருயதேத்³பு⁴தம் ।
த⁴நுஷோ பே⁴த³நம் சைவ நிகி²லேந மயா ஶ்ருதம் ॥ (1)

“தசரத புத்திரனான ராம! தாடகை, ஸுபாஹு, மாரீசன் முதலிய ராக்ஷஸர்களை நீ ஸம்ஹரித்தாயென்றும், அஹல்யையின் சாபத்தைத் தீர்த்தாயென்றும், சிவதனுஸை எடுத்து வளைத்து முறித்தாயென்றும், உன் வீரியமும், பலமும் அதிகமாகக் கொண்டாடப்படுவதைக் கேட்டேன். சிவதனுஸை முறித்தது வெகு ஆச்சரியமான காரியமே. அப்படி நடக்குமென்று மனத்தாலும் நினைக்கமுடியாது. ஆகையால் அதன் உண்மையை அறிய நான் இந்த வில்லுடன் வந்திருக்கிறேன். இந்த சிரேஷ்டமான ஆயுதம் ஜமதக்னி என்ற என் பிதாவால் எனக்குக் கிடைத்தது. நீ சிவதனுஸை முறித்தது உண்மையானால், இதை எடுத்து வளைத்து நாணேற்றி, இந்த சிரேஷ்டமான பாணத்தைப் பூட்டு. அதனால் உன் பலத்தை அறிந்து உன் வீரியத்தை மெச்சி, உன்னுடன் யுத்தம் செய்வேன்” என்றார்.

ராமனுடைய ஆச்சரியமான செய்கைகளையும் பராக்கிரமத்தையும் நன்றாயறிந்தும், அவரிடத்தில் தான் வைத்த பிரீதியால் தசரதர் முகம் வாடித் தீனமாகக் கைகூப்பி, “ஸ்வாமி! தாங்கள் பிராம்மணோத்தமரல்லவா? அபாரமான கருணையென்பது தங்களுக்கு ஸ்வபாவ குணமல்லவா? க்ஷத்ரிய வம்சங்களைப் பல தடவை வேரறுத்து ஒப்பற்ற கீர்த்திபெற்ற தங்களுக்கு இந்தக் குழந்தையை ஜயிப்பதால் அதிக கீர்த்தியுண்டோ? க்ஷத்ரியர்களிடத்திலுள்ள கோபத்தை விட்டீர்களல்லவா? ஒன்றும் தெரியாத இந்தச் சிறுவனுடன் தங்களுக்கு விரோதம் எதற்கு? இவர்கள் தங்களுக்கு ஒரு பொருளா? மேலும், அறுபதாயிரம் வருஷங்கள் வரையில் புத்திரனில்லாமல் எண்ணிறந்த விரதங்களையும் நியமங்களையும் அனுஷ்டானங்களையும் செய்து இவர்களை அடைந்திருக்கிறேன். இவர்களுக்கு அபயதானம் செய்ய வேண்டும். வேதாத்யயனத்திலும் விரதானுஷ்டானத்திலும் நோக்கமுள்ள பார்க்கவ குலத்தில் பிறந்து, ஸ்வபாவ குணங்களால் முன்னோர்களை மிஞ்சிய தங்களுக்கு, யுத்தம் முதலிய க்ஷத்திரிய தர்மங்கள் தகுமா? இருபத்தொரு தடவை அரசர்களை நிர்மூலம் செய்து, இந்தப் பூமியைக் காச்யபருக்கு தானம் செய்தீர்கள். இனி நான் ஆயுதமெடுப்பதில்லை என்று இந்திரனிடத்தில் பிரதிக்ஞை செய்தீர்களல்லவா? ‘இதுவரையில் என் ஜாதிக்கு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri Harihar Collection, Sholinganallur, Chennai

விரோதமான தர்மத்தைக் கைக்கொண்டு, கோபத்திற்கு இடம் கொடுத்து, மிகுந்த ஜீவஹிம்ஸை செய்தேன். இனி என் ஸ்வதர்மத்தை அனுஷ்டிக்கவேண்டும்' என்று பச்சாத்தாப மடைந்தீர்கள். தாங்கள் செய்த ஜீவஹிம்ஸைக்குப் பிராயச் சித்தமாக ஒரு பெரிய யாகத்தை நடத்தி, அதில் அத்வர்யுவான காச்யபருக்குத் தங்களால் ஜயிக்கப்பட்ட இந்தப் பூமி முழுவதை யும் தக்ஷிணையாகக் கொடுத்து, மஹேந்திர பர்வதத்தில் கடுந்தவம் செய்து கொண்டிருக்கிறீர்களல்லவா? ஐயோ! என் துரதிருஷ்டத் தால் என் வம்சத்தையும் நாசம் செய்ய வந்திருக்கிறீர்களே. 'ஒரு புத்திரன் இறந்தால் எல்லாம் போய் விடுமா' என்ற எண்ணம் வேண்டாம். எனக்கும் என் பந்துமித்திர பரிவாரங்களுக்கும் இந்த மஹரிஷிகளுக்கும் ராமனே ஜீவாதாரமென்பது ஸத்தியம். அவனுக்கு ஏதாவது கெடுதி நேர்ந்தால் நாங்களெல்லோரும் மடிவோம் என்பதில் ஸந்தேகமில்லை" என்றார்.

அவருடைய வார்த்தையைக் கொஞ்சமும் லக்ஷ்யம் செய் யாமல் பரசுராமர் ராமனைப் பார்த்து, "பூர்வகாலத்தில் விச்வகர்மா உத்தமமான இரண்டு விற்களைச் செய்தான். அவை தெய்வத் தன்மையுள்ளவை; ஸகல லோகங்களிலும் பிரஸித்தி பெற்றவை; வெகு உறுதியானவை; அளவற்ற பலமுடையவை; ஒப்பற்றவை; வெகு சிரமத்துடன் செய்யப்பட்டவை. த்ரிபுரா ஸுரர்களுடன் யுத்தம் செய்யச் சிவபெருமானிடத்தில் தேவதை கள் அவைகளில் ஒன்றைக் கொடுத்தார்கள். ஜனகருடைய ஸதஸில் நீ வளைத்து முறித்த வில் அஃதே; என் கையிலிருக்கும் வில் இரண்டாவது. இதைத் தேவர்கள் மஹாவிஷ்ணுவிடத்தில் கொடுத்தார்கள். வெகு தேஜஸுடன் விளங்கும் இந்த வில், ருத்திரனுடைய வில்லிற்கு ஸமமான பலமுடையது. 'இதை என்னிடத்தில் கொடுப்பதில் என்ன விசேஷம்' என்றால் சொல்லு கிறேன் கேள்:

"திரிபுர ஸம்ஹாரமான பிறகு தேவர்களுக்கு ஒரு பெரிய ஸந்தேகமுண்டாயிற்று. அதைத் தீர்க்க அவர்கள் பிரஹ்மா விடத்திற்குப் போய் 'ஸ்வாமி! மஹாவிஷ்ணுவே விசேஷ வீரிய முள்ளவர். வராஹாவதாரமெடுத்துப் பாதாளத்திலிருந்து பூமியைக் கொண்டு வந்தது முதலிய பல அற்புதமான காரியங் களே இதற்குப் பிரமாணமென்று தாங்கள் இதுவரையில் பல தடவை கொண்டாடக் கேட்டிருக்கிறோம். ஆனால் அப்பொழுது ருத்ரன் அந்த விஷ்ணுவையே பாணமாய் வைத்துக்கொண்டு ஒருவரும் ஜெயிக்கமுடியாத திரிபுராஸுரர்களை ஜயித்திருக்கிறார். விஷ்ணுவின் வீரியம் அதிகமா, சிவனுடைய வீரியம் அதிகமா! என்றார்கள். பிரஹ்மா, 'நான் எவ்வளவு தடவை உபதேசித்தும் விஷ்ணு இந்த விஷயம் இவர்களுடைய புத்தியில் படவில்லை,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ருத்ரர்களின் வீர்யத்தைப் பிரத்யக்ஷமாய் வெளிப்படுத்துவது நல்லது என்றெண்ணி, மஹாவிஷ்ணுவிடத்திற்குப் போய் 'ஸ்வாமி! திரிபுர ஸம்ஹார காலத்தில் நானே பிரதானமாக இருந்தேன். நானல்லவா வில்லாளி? இந்த விஷ்ணு கேவலம் எனக்குப் பாணமாயிருந்தாரல்லவா' என்று பரமசிவன் தங்களைப் பற்றி வெகு குறைவாகப் பேசுகிறார்' என்றார். பிறகு மஹா தேவரிடத்திற்குப் போய், "ஸ்வாமி! த்ரிபுர ஸம்ஹார காலத்தில் நான் பாணத்தின் முனையாக இருந்து அவருக்கு ஒத்தாசை செய்யாவிட்டால் ஜயம் கிடைத்திருக்குமா? அவ்வஸுரர்களைக் கொன்றது நானல்லவா" என்று 'மஹாவிஷ்ணு தங்களைப்பற்றி வெகு இகழ்வாகப் பேசிக் கொண்டிருக்கிறார்' என்றார். இப்படி இருவருக்கும் வெளிப்படையாக விரோதத்தை மூட்டிவிட்டார்.

"அவர்களும் சதுர்முகருடைய அபிப்பிராயத்தை அறிந்து, அதை நிறைவேற்ற, ஒருவரையொருவர் ஜயிக்கவேண்டுமென்று மஹாகோபத்துடன் ஸகலப் பிராணிகளும் பயத்தால் மயிர்க் கூச்சலடையும்படி யுத்தம் செய்தார்கள். அப்பொழுது மஹா விஷ்ணு ஆயுதத்தைத் தொடாமலேயே 'ஹூம்' என்று ஒரு சப்தம் செய்தார்; உடனே பரமசிவனுடைய வில் பலமிழந்தது. மூன்று நேத்திரங்களையுடைய பரமசிவனும், திரிபுரங்களையெரித்த நெற்றிக்கண் பயன்படாமல், அந்தச் சப்தத்தால் பிரமித்து நின்றார். உடனே தேவர்களும் ரிஷிகளும் தேவகணங்களும் அவ்விரு மஹா புருஷர்களையும் நமஸ்கரித்து, யுத்தத்தை நிறுத் தும்படி பிரார்த்திக்க, அவர்கள் அப்படியே சாந்தமடைந்தார் கள். பிறகு தேவர்களும் ரிஷிகளும் 'நமக்கு இனி ஸந்தேகமில்லை. நமது உத்தேசம் நிறைவேறிற்று. நமக்குப் பூஜ்யரான பிரஹ் மாவின் வார்த்தையைக் காட்டிலும் நாம் நேரில் பார்த்ததே விசேஷம். திரிபுர ஸம்ஹார காலத்தில் பரமசிவனுடைய வில்லில் மஹாவிஷ்ணுவின் வீரியம் நிறைந்திருந்ததால் ஜயம் கிடைத்தது. இப்பொழுது அது விலகினதால் அவருடைய சக்தியால் பல மிழந்தது. ஆகையால் ருத்ரனைக் காட்டிலும் விஷ்ணுவே மேலானவர்' என்று முடிவு செய்தார்கள்.

"ருத்திரன் கோபமடங்காமல் தன் வில்லையும் பாணத்தையும் விதேஹ வம்சத்தில் பிறந்த தேவராதனென்ற ராஜரிஷிக்குக் கொடுத்தார். மஹாவிஷ்ணு தன் உத்தமமான வில்லைப் பிருகு வம்சத்தில் பிறந்த ரிசீகரிடத்தில் ஒப்புவித்தார். அவர் அதைத் தம் புத்திரரான ஜமதக்னிக்குக் கொடுத்தார். மஹாதேஜஸ்வியும் தபோநிதியும் ஒப்பற்ற மஹிமையுள்ளவருமான என் பிதாவை, இந்த ஆயுதமில்லாதபொழுது ஒரு நாள், கார்த்தவீர்யார்ஜுனன் ஸாதாரணமாக நினைத்துக் குரூரமாகக் கொன்றான். அதுவரையில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri Harihara Collection, Sholinganallur, Chennai

ஒருவரும் கேட்டிராத அந்த மஹா பாபத்தால் நான் அடங்காக் கோபம் கொண்டு க்ஷத்திரியர்களைப் பிறக்கப் பிறக்க இருபத்தொரு தடவை வேரறுத்து, பூமியை ஜயித்து, ஒரு பெரிய யாகம் செய்து அதில் காசியப மஹரிஷிக்கு அதைத் தக்ஷிணையாகக் கொடுத்துவிட்டு, மஹேந்திர பர்வதத்தில் தவம் செய்துகொண்டிருக்கிறேன். நீ பரமசிவனுடைய வில்லை முறித்ததை அங்கே கேள்வியுற்று உடனே அதி வேகமாய்ப் புறப்பட்டு வந்தேன். இந்த விஷ்ணு தனுசு பரம்பரையாய் என் பாட்டனிடத்திலிருந்து எனக்குக் கிடைத்திருக்கிறது. இதை எடுத்து வளைத்து நாணேற்றி இந்த சிரேஷ்டமான பாணத்தைப் பூட்டு. என்னால் முடியாதென்று பிராம்மணனைப்போல் சொல்லாதே. மஹா வீரியமுள்ள க்ஷத்திரிய வம்சத்தில் பிறந்தவனென்பதை மறக்காதே. நான் சொன்னபடி நீ செய்தாலும் உன்னை விடுவதில்லை. உன் வீரியத்தைப் பரீக்ஷிக்க உன்னுடன் யுத்தம் செய்வேன்" என்றார்.

யோஜயஸ்வ த⁴நு: ஶ்ரேஷ்டே² ஶராம் பர புரஞ்ஜயம் ।
யதி³ ஶக்நோஷி காகுத்ஸ்த² த்³வந்த்³வம் த³ாஸ்யாமி தே தத: ॥(18)

ஸர்க்கம் 76

பரசுராம கர்வபங்கம்

ஶ்ருத்வா தஜ்ஜாமத³க்³ந்யஸ்ய வாக்யம் தாஶரதிஸ்தத³ா ।
கௌ³ரவாத்³யந்த்ரித கத²: பீ⁴து ராம மத³ாப்³ரவீத் ॥ (1)

ராமன் தன் பிதாவிற்கெதிரில் உரக்கப் பேசக் கூடாதென்ற மரியாதையை அனுஸரித்துப் பரசுராமரைப் பார்த்து மெதுவாய், "பிருகுகுல திலக! தங்களுடைய வீரச் செயல்களைக் கேள்விப்பட்டிருக்கிறேன். தகப்பனைக் கொன்றவர்களைக் கொன்று பழி தீர்க்கவேண்டியது சூரனான புத்திரனுடைய கடமை; அதை ஒப்புக்கொண்டேன். இதுவரையில் தங்களை எதிர்த்த க்ஷத்திரியர்களைப்போல் பராக்கிரமமற்ற அசக்தனென்று என்னையும் எண்ணி அவமதிக்கிறீர்கள்; பிறர் செய்யும் அவமானத்தைப் பொறுக்க மாட்டேன். பிறரை அடக்கும் சக்தி எனக்குண்டு. அதை இப்பொழுது பார்ப்பீர்கள்" என்று அதிகக் கோபத்துடன் பரசுராமருடைய கையிலிருந்து வில்லையும் பாணத்தையும் வெகு லாகவமாக வாங்கி, வில்லை வளைத்து நாணேற்றிப் பாணத்தைப் பூட்டி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri. V. Hariharan Collection, Sholinganallur, Chennai

"தாங்கள் சொன்னபடி செய்தேன். தாங்கள் பிருகு வம்சத்தில் பிறந்த பிராம்மண சிரேஷ்டர்; என் குருவான விசுவாமித்திருடைய சஹோதரி தங்களுடைய பிதாவைப் பெற்றவள்; ஆகையால் தங்களுடைய உயிரை வாங்கும் இந்தப் பாணத்தை பிரயோகிக்க முடியாமலிருக்கிறேன். இந்தப் பாணமோ விஷ்ணுவைச் சேர்ந்தது; சத்ருவை ஜயிக்காமல் திரும்பாது; பலத்தையும் கர்வத்தையும் அழிக்கும். வீண் போகாதது; தங்களுடைய தபோபலத்தால் ஸம்பாதித்த உத்தம லோகங்களை அடையாமல் செய்யட்டுமா? அந்தத் தவத்தின் பயனை இதற்குப் பலி கொடுக்கிறீர்களா? அல்லது நினைத்த லோகங்களுக்குப் போகும் தங்களுடைய சக்தியை அழிக்கட்டுமா?" என்றார்.

தன் பூர்வாவதாரமான பரசுராமரிடத்திலிருந்து தன் வில்லையும் பாணத்தையும் வாங்குவதாய் வெளிக்குக் காட்டி, ராமன் அவரிடத்தில் முன்பு வைத்த சக்தியைத் தானே மறுபடியும் தன் விடத்தில் வருவித்துக் கொண்டார். அந்த ஆச்சரியத்தைப் பார்க்க பிரஹ்மாதி தேவர்களும் மஹரிஷி கந்தர்வ அப்ஸரஸ் ஸித்த சாரண கின்னர யக்ஷ நாக ராக்ஷஸ கணங்களும் கூட்டம் கூட்டமாக வந்தார்கள். ஸகலப் பிராணிகளும் அசைவற்று நின்றன. பரசுராமரிடத்திலிருந்த விஷ்ணு தேஜஸ் அவரை விட்டு விலகிற்று. ஒன்றும் தோன்றாமல் இதென்ன ஆச்சரியமென்று அவர் ராமனை உற்றுப் பார்த்தார்.

தன் சக்தி குறைவதற்கு அவருடைய தேஜஸே காரணமென்று உணர்ந்த பரசுராமர் மலர்ந்த செந்தாமரை இதழ்களைப் போன்ற நேத்திரங்களை உடைய ராமனை மஹாவிஷ்ணு என்றறிந்து மெதுவாய், "காசியபருக்கு இந்தப் பூமியை நான் தானம் செய்தபொழுது அவர் 'என் ராஜ்யத்தில் வஸிக்கக்கூடாது' என்றார். அவருடைய வார்த்தைக்குக் கட்டுப்பட்டு இந்தப் பூமியில் ஒரு ராத்திரிகூடத் தங்குவதில்லையென்று பிரதிக்ஞை செய்தேன். ஆகையால், நான், நினைத்த இடங்களுக்குப் போகும் சக்தியை அழிக்கவேண்டாம். மனோவேகமாய் மஹேந்திர பர்வதத்திற்குப் போய்விடுகிறேன். என் தவத்தால் ஸம்பாதித்த உத்தமலோகங்களை நான் அடையாமல் செய்; தாமதம் வேண்டாம்; நீ தேவாதி தேவனென்றும் அழிவற்றவனென்றும் மதுகைடபர்களை ஸம்ஹரித்த மஹாவிஷ்ணுவென்றும் அறிந்தேன். இந்த வில்லை வேறொருவர் எடுத்து வளைக்கமுடியுமோ? உனக்குப் பரமமங்களமுண்டாகட்டும். இதோ பார். தேவகணங்களும் பராபரவஸ்துவான உன்னை ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். லோகநாதனான உன்னால் ஜயிக்கப்படுவதில் எனக்குக் கொஞ்சமும் அவமானமில்லை. நீ பாணத்தைப் பிரயோகித்த

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வுடன் மஹேந்திர பர்வதத்திற்குப் போகிறேன்" என்றார். ராமன் அப்படிச் செய்ய, உத்தம லோகங்களை அடைய அனுஷ்டித்த பரசு ராமருடைய புண்ணிய பலம் அழிந்தது. அதைக் கண்டபின் அந்த ஜமதக்னியின் குமாரர் அதிவேகமாய் மஹேந்திர பர்வதத்திற்குப் போய்விட்டார்.

உடனே திக்குகள் இருள் நீங்கிப் பிரகாசித்தன. பிரஹ்மாதி தேவகணங்களும் ரிஷிகளும் கோதண்டபாணியான ராமனைக் கொண்டாடினார்கள். இப்படிப் பரசுராமன் தசரத ராமனைப் புகழ்ந்து பிரதக்ஷிணம் செய்து தன்னிடத்திற்குச் சென்றார்.

ராமம் த³ாஶரதி²ம் ராமோ ஜாமத³க்³ந்ய : ப்ரஶஸ்ய ச ।
ததத : ப்ரத³க்ஷிணம் க்ருத்வா ஜக³மாத்ம க³திம் ப்ரபு⁴ : ॥ (25)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ ராமசந்த்ராய நம :

21. ராஜாங்க காரியங்களில் வெற்றி பெற

(For Success in Government Affairs)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

அயோத்யா காண்டம் : ஸர்க்கம் 100

முடியரசானாலும் குடியரசானாலும் ராஜாங்கத்தோடு எல்லாருக்கும் ஏதோ ஒரு வழியில் சம்பந்தம் இருக்கும். ஆகவே, ராஜாங்கத்தில் தமக்கு ஒரு காரியம் நிறைவேறுவதற்கு நியாயரீதியாக, தாம் செய்யவேண்டிய சகல முயற்சிகளையும் செய்தபின்பு, தம் காரியங்கள் விரைவில் அனுகூலமாக நிறைவேறவேண்டுமென்பதற்காக, ஸ்ரீ ராமன் பரதனுக்கு ராஜ தர்மங்களை உபதேசம் செய்யும் அயோத்யா காண்டம் 100-வது ஸர்க்கத்தைப் பாராயணம் செய்யவேண்டும்.

நிவேதனம் : ஐந்து வாழைப்பழங்கள்.

ஸங்கல்பம்

ஸ்ரீ ஸிதாலக்ஷ்மண ப⁴ரதசத்ருக்⁴ந ஹநுமத்ஸமேத
ஸ்ரீராமசந்த்ரப்ரபோ: ப்ரஸாதே³ந
ராஜத்³வாரே ஸர்வாநுகூல்யஸித்³த்⁴யர்த்த²ம்
'ப⁴ரதம் ப்ரதி ஸ்ரீராமக்ருத குஶல
ப்ரஶ்நா'த்மக ஸ்ரீமத்³ ராமாயண க⁴ட்ட பாராயணம்
அஹம் கரிஷ்யே ।

*இந்த 21-வது முறை உமாஸம்ஹிதையில் இல்லை. ஆயினும் பெரியவர்களின் ஸம்மதத்தைப் பெற்று இந்த முறை சேர்க்கப்பட்டிருக்கிறது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



CC-0 In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸர்க்கம் 100

ராமன் பரதனுக்கு ராஜநீதியை உபதேசித்தது

ஜடிலம் சீரவஸநம் ப்ராஞ்ஜலிம் பதிதம் பு'வி।
த³த³ர்ஶ ராமோ து³ர்த³ர்ஶம் யுகா³ந்தே பா⁴ஸ்கரம்
யதா²॥ (1)

பார்த்தவுடனேயே பரதன் ராஜ்யத்தை ஆளுகிறுனென்று எண்ணிக்கொண்டு, கேள்விகளைக் கேட்பதுபோல் ராஜ்யபாலனத்திற்கு வேண்டிய நீதிகளை ராமன் உபதேசித்தார். தசரதர் மரணமடைந்தாரென்றும், பரதன் அதுமுதல் ராஜ்யத்தை விலக்கித் தபஸ்வி தர்மத்தையும் விரதத்தையும் அனுஷ்டித்துவருகிறுரென்றும் கேள்விப்பட்டபிறகு அந்த உபதேசத்தைச் செய்ய ஸமயம் வாய்க்காதல்லவா?

"தசரதர் எப்பொழுதாவது உத்தமமான புஷ்பங்களைப் பார்த்தால், 'குழந்தை பரதனுடைய தலையில் இதை வைத்தாலல்லவா அழகாயிருக்கும்' என்று சொல்வார். அந்தப் பரதன் சடையும் தலையுமாய் வந்திருக்கிறுனே. நேர்த்தியான வஸ்திரங்களைக் கண்டால் 'நமது குழந்தை பரதன் இவைகளைத் தரித்தாலல்லவா அழகாயிருக்கும்' என்று சொல்வார்; அப்படிப்பட்ட பரதன் இப்பொழுது மான்தோல் மரவுரிகளைத் தரித்துக்கொண்டிருக்கிறுனே! 'ஒரு பதார்த்தத்தை வாங்கிக்கொள்' என்று தசரதர் வேண்டினாலும் பரதன் வாங்கிக்கொள்வது அரிது. இப்பொழுது அவனே தனக்கு வேண்டிய காரியத்தைத் தானே கைகூப்பி நமஸ்கரித்துப் பிறரைப் பிரார்த்திக்கும்படி நேர்ந்ததே! மிருதுவான புஷ்பசயனத்தில் உட்கார்ந்தாலும் பரதனுடைய தேகம் தாங்காதென்று தசரதர் எப்பொழுதும் இவனைத் தன் மடியிலேயே வைத்துக்கொண்டிருப்பார். அப்படிப்பட்டவன் இப்பொழுது வெறும் தரையில் கிடந்து புரளும்படி நேர்ந்ததே!" என்று ராமன் ஆச்சரியப்பட்டார். எண்ணிறந்த கிரணங்களால் பிரபஞ்சத்தை விளங்கச் செய்துகொண்டிருக்கும் ஸூரியன் பிரம்மதினத்தின் முடிவில் ஸகல தேஜஸும் குறைந்து பூமியில் விழுந்து கிடப்பதைப் போல், மஹாதேஜஸ்வியான பரதன் அவ்வளவு தேஜஸும் குன்றிப் பூமியில் விழுந்து கிடப்பதைக் கண்டு, ராமனும் அங்கிருந்தவர்கள் எல்லோரும் மிக்க துக்கத்தை அடைந்தார்கள். தேகம் மெலிந்து நிறம் மாறிப் பரதன் இவனே என்று அடையாளம் கண்டுபிடிக்கமுடியவில்லை. தன்னுடன் பிறந்தவனுகையால் ராமன் அவனை வாரி எடுத்துப் பிரியத்துடன் அணைத்து உச்சி

RSOMR : BRLX

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

முகர்ந்து, தன் துக்கத்தை அடக்கிக்கொண்டு பரதனை ஸமாதானம் செய்ய, 'குழந்தாய்! நீ இந்தக் காட்டிற்கு எப்படி வந்தாய்? நமது பிதாவுக்கு ஸமீபத்திலிருந்து ஸகல பணிவிடையும் நீயே செய்யவேண்டியதல்லவா? அவர் எங்கே போய்விட்டார்? அவர் உன்னை விட்டுப் பிரியப் பொறுக்கமாட்டாரே. அவர் உயிரோடிருந்தால் நீ இந்தக் காட்டிற்கு வர நியாயமில்லையே. கேகய ராஜ்யத்திலிருந்து இவ்வளவு தூரம் நீ வந்ததைப் பார்க்க எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. தேகம் இளைத்து நிறம் மாறி அடையாளம் தெரியாமல் இருப்பதேன்? இந்தக் கோரமான காட்டிற்கு நீ வந்த காரணமென்ன? மஹாராஜா பிழைத்திருக்கிறாரா? அப்படியிருந்தால் நீ அவருடைய அனுமதியைப் பெற்று இங்கே என்னைப் பார்க்க வந்திருக்கவேண்டும். உன்னை விட்டு அவர் ஒரு நிமிஷம்கூடப் பிரிந்திருக்கமாட்டாரே. ஆகையால் துக்கம் மேலிட்டு ஸ்வர்க்கத்தை அடைந்தாரா? அந்தக் கஷ்டம் நேர்ந்து, பாலனான உன்னிடத்திலிருந்து பலசாலிகளான சத்ருக்கள் இதே ஸமயம் பார்த்து ராஜ்யத்தைப் பிடுங்கிக்கொண்டார்களா? அல்லது பிரஜைகளுக்கு உன்னிடத்தில் விசுவாஸம் குறைந்து, கைகேயி என்னைக் காட்டிற்குப் போகச் சொன்னதற்காக உன்னை நகரத்திலிருந்து துரத்திவிட்டார்களா? ஆதிமுதல் இதுவரையில் இந்த ராஜ்யம் நமது வசத்திலேயே இருந்ததல்லவா? அல்லது பிதாவிற்குப் பணிவிடை செய்வதில் உனக்கு அசிரத்தை பிறந்து மஹா பராக்கிரமசாலியான அவரை விட்டு வந்திருக்கிறாயா?

(1) சிரேஷ்டமான குலத்தில் பிறந்தவரும் ஸத்தியம் தவறாதவரும் எண்ணிறந்த அசுவமேதங்களையும் ராஜஸூயங்களையும் செய்தவரும் தர்மத்திலிருந்து விலகாதவருமான தசரத சக்ரவர்த்தி ஸுகமாக இருக்கிறாரா? தன் பிரதிக்ஞையைத் தவற முடியாததால் நேர்ந்த கஷ்டங்களைப் பார்த்துப் பச்சாத்தாபமடைந்த அவருக்கு ஏதாவது வியாதி உண்டாயிற்றா? அதை எனக்குத் தெரிவிக்க வந்திருக்கிறாயா?

(2) கொடிய துக்கங்களை அனுபவித்த என் தாய் கௌஸல்யை இப்பொழுது ஸுகமாக இருக்கிறாளா? அவளைக் காட்டிலும் என் பக்திக்கும் பிரியத்திற்கும் பாத்திரமான உன் தாய் கைகேயி, தன் எண்ணப்படி காரியம் முடிந்து ஸுகமாக இருக்கிறாளா?

(3) பிரஹ்மஞானியும் ஸகல வித்தைகளிலும் நிபுணரும் ஞானத்திற்கொத்த தர்மானுஷ்டானமுள்ளவரும், அதனால் அபார தேஜஸை அடைந்தவரும் இக்ஷ்வாகுகுல மன்னர்களுக்குக் குலகுருவுமான வஸிஷ்ட பகவானை நமது முன்னோர்கள் பூஜித்தபடி நீயும் பூஜித்து வருகிறாயா? அக்னிஹோத்திரம் முதல் அசுவமேதம் வரையிலுள்ள யாகவிதிகள் யாவையும் நன்றாய் அறிந்தவரும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அக்னி காரியங்களில் வெகு ஜாக்கிரதையுள்ளவரும் மஹாபுத்தி மானும் இஹபரலோக தர்மங்களை ஒரே விதமாக அனுஷ்டிப்பவரு மான உன் புரோஹிதர் அந்தந்தக் காலங்களில் ஹோமம் செய்த தையும் செய்யவேண்டியதையும் உனக்கு ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கிறாரா?

(4) தேவதைகளை யாகயக்ஞாதிகளாலும், மாதாபிதாக்களை அவர்களுடைய சொற்படி நடந்து அவர்களுக்குச் சிச்ருஷை செய்வ தாலும், குருக்களைப் பூசித்து அவர்களுடைய கட்டளையை நிறை வேற்றுவதாலும், ஞாதிகளை அவர்களுக்கு வேண்டிய செல்வத்தைக் கொடுப்பதாலும், வயதாலும் ஞானத்தாலும் ஆசாரத்தாலும் பெரியோர்களை நமஸ்காரம் செய்வதாலும், வித்வான்களையும் பிராம்மணர்களையும் வெகுமானம் செய்வதாலும் திருப்தி செய் கிறாயா?

(5) தனுர் வேதத்திலும் ராஜநீதியிலும் நிபுணரான சுதன்வா என்ற நமது உபாத்தியாயரைப் பூஜித்து வருகிறாயா?

(6) உன் மந்திரிகள் புத்திமான்களாகவும் நீதிசாஸ்திர நிபுணர் களாகவும், உத்தம குலத்தில் பிறந்தவர்களாகவும், பிறருடைய எண்ணங்களை ஸூக்ஷ்மமாகத் தெரிந்துகொள்கிறவர்களாகவும், உன்னைப்போல் நம்பத் தகுந்தவர்களாகவும் இருக்கிறார்களா? நீதி சாஸ்திரத்தில் கரைகண்ட மந்திரிகளால் நன்றாக ஆலோசிக்கப் பட்டு ஜாக்கிரதையாகக் காப்பாற்றப்படும் மந்திராலோசனை அரசர்களுக்கு ஜயத்தைக் கொடுக்கும்.

(7) தகுந்த காலத்தில் படுக்கிறாயா? தகுந்த காலத்தில் விழிக்கிறாயா?

(8) விடியற்காலத்தில் ஐசுவரியத்தை ஸம்பாதிக்கும் வழிகளை ஆலோசிக்கிறாயா?

(9) ஒருவனாகவாவது பலருடனாவது ராஜ்ய காரியங்களை ஆலோசிக்காமல் இருக்கிறாயா? ஒருவனாக யோசித்தால் தனக்கு அந்த விஷயத்திலுள்ள விருப்பத்தாலோ வெறுப்பாலோ அதன் குணதோஷங்களைப் பக்ஷபாதமில்லாமல் அறியமுடியாது. பல ருடன் யோசித்தால் ஒருமை ஏற்படாது. அந்த யோசனை சீக்கிரம் வெளியாகிவிடும்.

(10) நீ செய்யும் ஆலோசனை அந்தக் காரியம் முடிவதற்குமுன் ஜயத்தில் தெரியாமலிருக்கிறதா?

(11) ஸுலபமான ஸாதனங்களால் விசேஷப் பயன் கிடைக்கக் கூடிய காரியத்தை நன்றாக ஆலோசித்துத் தாமதமில்லாமல்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Cholinganallur, Chennai

செய்து முடிக்கிருயா ? சீக்கிரத்தில் செய்து முடிக்காத காரியத்தின் பயனைக் காலம் கொள்ளையிடுகிறது.

(12) நீ செய்யும் ஆலோசனைகள் அந்தக் காரியம் முடிந்து கொண்டிருக்கும் பொழுதாவது ஆரம்பத்திற்கு முந்தியாவது உன் சிற்றரசர்களுக்குத் தெரியாமல் முடிந்த மாத்திரம் தெரிகின்றனவா ?

(13) நீயும் மந்திரிகளும் ஆலோசனை செய்யாத காரியங்களைப் பிறர் ஊஹத்தாலாவது அனுமானத்தாலாவது இங்கிதங்களாலாவது அறியமுடியாமல் ஜாக்கிரதையாகக் காப்பாற்றி வருகிருயா?

(14) அநேக ஆயிரம் மூர்க்கர்கள் இருந்தாலும் அவர்களை விட்டு, நன்ருகப் பரிசோதித்துக் காரியத்தைச் செய்யும் புத்திமானைச் சேர்க்கிருயா ? ராஜ்ய காரியங்களில் ஸங்கடம் நேரும் பொழுது அந்த வித்வான் அரசர்களுக்கு மிகுந்த கீர்த்தியையும், மேன்மையையும் உண்டாக்கும் உபாயங்களை உபதேசிப்பார். மூர்க்கர்களை ஆயிரக்கணக்காயும் கோடி கோடியாயும் அரசன் சேர்த்துக்கொண்டாலும் காரியங்களை ஆலோசிக்கும்பொழுது அவர்கள் கொஞ்சமாவது உபயோகப்படுவார்களா ? பிறர் ஆரம்பித்த காரியத்தை உடனே அறியும் சக்தியுடையவனும் ஸ்திரமான புத்தியுடையவனும் காரியங்களை விசாரித்துச் செய்கிறவனும் நீதி சாஸ்திரங்களில் நிபுணனுமான ஒரு மந்திரியிருந்தாலும் அவன் அந்த அரசனுக்கும் சிற்றரசர்களுக்கும் மிகுந்த கீர்த்தியை ஸம்பாதிப்பான்.

(15) முக்கியமான ஸேவகர்கள், சமையல் பரிமாறுதல் முதலிய காரியங்களில் மாத்திரமும், ஜாதி முதலியவைகளால் நடுத்திறத்தார்கள் படுக்கை ஆஸனம் வாஹனம் முதலியவைகளைக் கொண்டு வருவது முதலிய காரியங்களில் மாத்திரமும், கீழ்த்தரமான ஸேவகர்கள் கால்கழுவுவது மரவடிகளைக்கொண்டு வருவது கால் பிடிப்பது முதலிய வேலைகளில் மாத்திரமும் உபயோகிக்கப் படுகிருர்களா? இல்லாவிட்டால் அதிகப் பொருமையும் மனஸ்தாபமும் உண்டாகும்.

(16) உத்தமமான வஸ்திரங்கள் ஆபரணங்கள் வாகனங்கள் முதலியவைகளை மந்திரிகளிடத்தில் வேறு மனுஷ்யர்களின் ரஹஸ்யமாக அனுப்பி, அரசனுடைய அந்தப்புரத்திலிருந்து உங்களுக்கு அனுப்பப்பட்டதென்றும் சொல்லி, அவர்கள் ஆசையுடன் அவைகளைப் பெற்றுக் கொள்ளுகிருர்களா என்று பரீக்ஷிப்பது அரசர்களுக்கு வழக்கம். அந்தப் பரீக்ஷையில் தேறியவர்களும் பல தலைமுறைகளாக வேலை பார்க்கிறவர்களுமான மனோவாக்குக் காயங்களில் சுத்தர்களுமான உத்தம மந்திரிகளைப் பெரிய காரியங்களிலேயே உபயோகிக்கிருயா ?

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

(17) கைகேயி புத்திர! வெகு கடுமையாகப் பிரஜைகளைத் தண்டித்து அதனால் அவர்கள் கஷ்டப்பட்டு மந்திரிகளிடத்தில் முறையிட்டு அவர்கள் உன்னைத் தடுக்கும்படி வைத்துக்கொள்ளாமல் இருக்கிறாயா? கெட்ட தானங்களை வாங்கி அளவற்ற திரவியத்தைச் சேர்த்து அதனால் யாகம் செய்ய விரும்புகிறவனை ரித்விக்குகள் எப்படி அவமதிப்பார்களோ, தங்களைப் பலாத்காரம் செய்து ஸ்வாதீனப்படுத்திக்கொள்ள விரும்பும் புருஷனை ஸ்த்ரீகள் எப்படி அவமதிப்பார்களோ, அப்படித் தண்டிக்கத்தகாதவர்களைக் கடுமையாகத் தண்டித்து அவர்களிடத்திலிருந்து தனத்தைப் பறித்து ஹிம்ஸை செய்வதால் பிரஜைகள் உன்னை அவமதிக்காமல் இருக்கிறார்களா?

(18) ஸாம தான பேத தண்டமென்ற உபாயங்களைப் பிரயோகிப்பதில் நிபுணனும், மஹரிஷிகளால் உபதேசிக்கப்பட்ட பிறரை வஞ்சிக்கும் நீதிகளை நன்றாகக் கற்றவனும், அரசனுக்கு அந்தரங்கமான ஸேவகர்களின்மேல் தோஷங்களை ஏற்படுத்தி அவர்களைக் கலக்கிறவனும், அரசனை ஹிம்ஸை செய்வதில் பயமற்றவனும், காலக்கிரமத்தில் அரசனுடைய ஐசுவரியத்தைக் கைப்பற்றிக் கொள்ளுகிறவனுமான புருஷனை எந்த அரசன் கொல்லாமல் விடுகிறானோ, அவனால் ராஜ்யத்தை விட்டு அவ்வரசன் துரத்தப்படுவான்; அல்லது கொல்லப்படுவான். இவ்விதமானவனை வைத்துக்கொள்ளாமல் இருக்கிறாயா?

(19) அரசன் செய்யும் மரியாதையால் ஸந்தோஷிக்கிறனும், பிறரை ஜயிக்கும் சக்தியுடையவனும், அந்தந்த ஸமயத்திற்குத் தகுந்தபடி தன் ஸைன்யங்களை அணிவகுப்பதிலும் சத்ருவின் அணிவகுப்பைப் பிளப்பதிலும் ஸைன்யத்தை நடத்துவதிலும் நுட்பமான புத்தியுள்ளவனும், ஆபத்காலத்தில் கலங்காத தைரியமுடையவனும், யஜமானனிடத்தில் விசுவாஸமுள்ளவனும், உள்ளும் புறமும் சுத்தமாக இருப்பவனும், உத்தம குலத்தில் பிறந்தவனும் காரியங்களை நடத்துவதில் திறமையுள்ளவனுமான மனிதனை ஸேனாபதியாக நியமித்திருக்கிறாயா?

(20) மஹா பலசாலிகளும், உத்தம குணங்கள் பொருந்தினவர்களும், யுத்தத்தில் ஸமர்த்தர்களும், சூரர்களுமான யுத்தவீரர்களை அவர்களுடைய பூர்வ வரலாற்றையும் தைரியத்தையும் நன்றாகப் பரீக்ஷித்து விசேஷமான வெகுமதிகளைச் செய்து மேன்மைப்படுத்தியிருக்கிறாயா?

(21) ஸைன்யங்களுக்கு அந்தந்தக் காலத்தில் கொடுக்க வேண்டிய சம்பளத்தையும் ஆகாரத்தையும் அவர்கள் செய்யும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வேலைக்குத் தகுந்தபடி தாமதமில்லாமல் கொடுத்து வருகிறாயா? இல்லாவிட்டால் சம்பளக்காரர்கள் யஜமானனிடத்தில் கோபித்து விசுவாஸமற்றுப் போவார்கள். அது பெரிய அனர்த்தத்தை விளைவிக்கும்.

(22) க்ஷத்திரிய குலத்தில் பிறந்த முக்கியமானவர்களெல்லோரும் உன்னிடத்தில் மிகுந்த பிரீதி வைத்து எந்தச் சமயத்திலும் உனக்காக உயிரைவிடத் தயாராக இருக்கிறார்களா?

(23) உன் தூதர்கள் உன் தேசத்தில் பிறந்தவர்களாகவும், பிறருடைய எண்ணங்களை அறியக் கூடியவர்களாகவும், காரியங்களை நடத்துவதில் ஸமர்த்தர்களாகவும், ஸமயோசிதமாகவும் தயங்காமலும் பதில் சொல்லுகிறவர்களாகவும், நீ சொல்லி அனுப்பிய ஸமாசாரத்தையும் பதிலையும் பிசகாமல் சொல்லுகிறவர்களாகவும், காரியத்தை முடிப்பதில் பல முக்கியமான விஷயங்களைப் பேசிக்கொண்டிருந்தாலும் யஜமானனுடைய கட்டளையை மறக்காமலே வியவஹாரத்தை நடத்துகிறவர்களாகவும், விஷயங்களைப் பகுத்தறியும் சக்தியுள்ளவர்களாகவும் இருக்கிறார்களா?

(24) மந்திரி, புரோஹிதன், யுவராஜா, ஸேனாபதி, வாசல்காப்பவர்களுக்குத் தலைவன், அந்தப்புரத்தின் காரியங்களுக்குத் தலைவன், சிறைச்சாலைத் தலைவன், தனத்தை வசூல் செய்கிறவர்களுக்குத் தலைவன், அரசனது உத்தரவைப் பலர் அறியும்படி வெளியிடுபவர்கள், நியாயவாதிகள், நியாயாதிபதிகள், ஸைன்யங்களுக்குச் சம்பளத்தையும் உணவையும் கொடுப்பவன், ராத்திரியில் நகர சோதனை செய்து கோட்டை வாசல்கள் பிராகாரம் முதலியவைகளை ரக்ஷிப்பவர்களுக்குத் தலைவன், அரசனிடத்திலிருந்து ஒரே தடவையாகத் திரவியத்தை வாங்கிக்கொண்டு கூலிக்காக வேலை செய்யும் மற்றவர்களுக்குப் பிரித்துக் கொடுப்பவன், ஒவ்வொரு நாளும் ராஜஸபையை அலங்கரிப்பது, அரசன் மந்திரி முதலியவர்களுக்குத் தகுந்த ஆஸனங்களை அவர்களுக்காக ஏற்பட்ட இடங்களில் போடுவது, ஸபைக்கு வரவேண்டியவர்களை அழைத்துவந்து அவர்களுடைய அந்தஸ்திற்குத் தகுந்தபடி ஏற்பட்ட ஆஸனங்களில் உட்காரச் செய்வது, ஸபையில் வரத்தகாதவர்களை விலக்குவது, ஸபையில் சப்தமில்லாமல் பார்த்துக் கொள்வது, ஸபையைப் பாதுகாப்பது முதலிய வேலைகளைச் செய்பவர்களுக்குத் தலைவன், பிறருடைய திரவியங்களைத் திருடுவது முதலிய குற்றங்களைச் செய்தவர்களை அரசனுடைய உத்தரவுப்படி தண்டிக்கிறவர்களுக்குத் தலைவன், கோட்டைகளை ரக்ஷிப்பவர்களுக்குத் தலைவன், ராஜ்யத்தின் எல்லைகளில் நான்கு திக்குகளிலும் அன்னிய அரசர்கள் வராமல் பாதுகாப்பவர்களுக்குத் தலைவன், இந்த

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பதினெட்டு மனிதர்களில் தன் ராஜ்யத்தில் மந்திரியையும் புரோஹிதரையும் யுவராஜாவையும் அரசன் பரீக்ஷிக்கவேண்டிய தில்லை. அவர்கள் எப்பொழுதும் தன் ஸமீபத்திலிருப்பதால் அவர்களுடைய ஸ்வபாவத்தைத் தானே நேரில் தெரிந்துகொள்ள லாம். தன் ராஜ்யத்தில் மற்றப் பதினைந்து பேர்களையும் சத்ரு பக்ஷத்தில் முன் சொன்ன பதினெட்டுப் பேர்களையும் மாறுவேடம் பூண்ட தூதர்களை ஒவ்வொருவருக்கு மும்மூவர் வீதம் ஏற்படுத்தி, ஒருவர்க்கொருவர் தெரியாமல், மேற்சொன்னவர்கள் தங்க ளுடைய வேலைகளை ஒழுங்காகச் செய்கிறார்களா இல்லையா என்று பரிசோதித்து வருகிறாயா ?

(25) உன் ராஜ்யத்திலிருந்து துரத்தப்பட்டுத் திரும்பி வந்திருக்கும் சத்ருக்களைப் பலமற்றவர்களென்று அலக்ஷ்யம் செய்யாமலிருக்கிறாயா ? ஏதாவது ஆதாரமில்லாமல் அவர்கள் திரும்பி வரமாட்டார்களல்லவா ? அவர்களை ஜாக்கிரதையுடன் கவனித்துக்கொண்டிருக்கவேண்டும்.

(26) பௌத்தன் சார்வாகன் முதலிய நாஸ்திக பிராம்மணர் களுடன் பழகாமலிருக்கிறாயா? சாஸ்திரங்களுக்கு விபரீதமான அர்த்தங்களை உபயோகிப்பதில் இவர்களுக்கு அதிகத் திறமை யுண்டு. உண்மையான ஞானத்திற்கு விரோதமான ஞானத்தை உடையவர்கள் ; பாலர்களைப்போல் ஒன்றும் தெரியாதவர்கள் ; ஆனால் தங்களைப் பெரிய பண்டிதர்களென்று எண்ணுகிறவர்கள் ; வேதமார்க்கத்திற்கு விபரீதமான புத்தியையுடையவர்கள் ; தாமஸ ஸ்மிருதிகளையும் தாமஸ புராணங்களையும் நீக்கி மஹரிஷி களால் செய்யப்பட்டு ஸாதுக்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட புராணங்களையும் தர்மசாஸ்திரங்களையும் பெரியோர்களுடைய ஸம்பிரதாய பரம்பரைப்படி அர்த்தம் செய்யாமல், கேவல தர்க்கத்தைப் பிரயோகித்து, அவை இஹத்திலும் பரத்திலும் பயனற்றவை என்று வாதிப்பவர்கள்.

(27) நமது ராஜதானியான அயோத்யை மஹாவீரர்கள் இருக்குமிடம் ; நமது முன்னோர்களால் ஆதிகாலம் முதல் ஆளப் பட்டு வருகிறது. அதிலுள்ள நான்கு வர்ணத்தாரும் வர்ணாசிரம தர்மங்களைக் குறைவின்றி நடத்திவருகிறார்கள் ; இந்திரியர்களை அடக்கினவர்கள் ; அதிக உத்ஸாஹமுள்ளவர்கள் ; உத்தம குணங் களால் அலங்கரிக்கப்பட்டவர்கள் ; மேலும் அந்த நகரம் எல்லா வித்யைகளிலும் தேர்ந்தவர்கள் பிரியத்துடன் வஸிக்கும் ஸ்தலம் ; அதிலுள்ள ஜனங்கள் யாதொரு குறையுமில்லாமல் ஆனந்தமாக இருக்கிறார்கள் ; ஸகல ஸௌக்கியங்களும் பொருந்தி, சத்துருக்கள் நெருங்கமுடியாத அரண்களுடன், விசித்திரமான ஆலயங்களாலும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Jnanasambandan Collection, Sholinganallur, Chennai

அரண்மனைகளாலும் உப்பரிகைகளாலும் அலங்கரிக்கப்பட்டு, உத்தமமான யானைகள் குதிரைகள் ஒட்டகங்கள் இவைகளால் நிறைந்து, பிறரால் ஜயிக்கமுடியாததென்ற பெயருக்குத் தகுந்த யோக்கியதை வாய்த்திருக்கிறது. இவ்விதமான நமது ராஜதானியை ஜாக்கிரதையாக ரக்ஷித்துவருகிறாயா ?

(28) நமது ராஜ்யத்திலுள்ள நாடுகளில் அசுவமேதம், சயனம் முதலிய மஹா யாகங்கள் செய்யப்படும் சாலைகள் பல உண்டு. அங்கே வஸிக்கும் ஜனங்கள், தங்களுக்குத் தகுந்த அரசன் கிடைத்திருப்பதால், காலத்தில் மழைபெய்து நீர்வளம் நிலவளம் முதலியவை பொருந்திய தேசத்திலேயே வஸிக்க விரும்புகிறார்கள். இதர தேசங்களுக்குப் போக மனம் வராது. நமது தேசத்தில் நேர்த்தியான தேவாலாயங்களும், அழகான சாலைகளும் அவைகளின் பக்கத்தில் அமைக்கப்பட்டிருக்கும் ஓடைகளும், தண்ணீர்ப் பந்தல்களும், பயிரிடுவதற்காக வெட்டப்பட்ட பெரிய ஏரிகளும் விளங்குகின்றன. உழுது பயிரிடப்படாத பாகம் நமது தேசத்தில் அதிகமாகக் கிடையாது ; ஆடுமாடுகளுக்கோ கணக்கில்லை ; அதிக மழை பெய்வது, மழை பெய்யாமலிருப்பது, எலிகள், வெட்டுப் பூச்சிகள், பக்ஷிகள், அரசர்கள் ஸமீபத்தில் வஸிப்பதென்ற ஆறு உபத்திரவங்களுமில்லை. மானம் பார்த்த நிலமுடையதல்ல. எங்கும் ஆற்றுப் பாய்ச்சலுள்ளது ; சோலைகளும் தோப்புகளும் எங்கும் நிறைந்து பார்க்க அழகாக இருக்கும். புலி முதலிய துஷ்ட மிருகங்களின் ஸஞ்சாரமில்லை ; திருட்டுப் பயமில்லை ; ரத்தினம் பொன் வெள்ளி முதலியவை கிடைக்கும் சுரங்கங்கள் பல உண்டு. பாபிகள் நமது ராஜ்யத்தில் வஸிக்கமாட்டார்கள். அங்குள்ள ஸ்த்ரீ புருஷர்கள் எப்பொழுதும் ஆனந்தத்துடன் காலம் கழிக்கிறார்கள். ஆறு குளம் முதலியவைகளில் கரையிலுள்ள வனங்களில் ஸகல பண்டங்களையும் விற்க ஏற்பாடு செய்யப்பட்டு, எல்லோருக்கும் தெரியும்படி குறிப்பிட்ட நாட்களில் வர்த்தகர்கள் கூடும் சந்தைகள் பல உண்டு. இவ்விதமான நமது ராஜ்யத்திலுள்ள தேசங்கள் ஸுகத்தை அடைந்திருக்கின்றனவா?

(29) பயிரிடுகிறவர்களும், பசுக்களை மேய்க்கிறவர்களும் உன் ஆளுகையில் எல்லையற்ற ஐசுவரியத்தை அடைந்து, உன்னிடத்தில் பிரீதி வைத்திருக்கிறார்களா ? கொடுக்கல் வாங்கல் ஏற்றுமதி இறக்குமதி முதலிய வியாபாரங்களைச் செய்து வர்த்தகர்கள் உன்னை அண்டி ஸுகமாகப் பிழைக்கிறார்களா ? அரசன் தன் ராஜ்யத்தில் வஸிக்கும் ஜனங்களெல்லோரையும் தர்மமாக ஆள வேண்டும். ஆகையால் மேற்சொன்னவர்களுக்கு வேண்டிய ஸௌகரியங்களைச் செய்து அஸௌகரியங்களை விலக்கிக் காப்பாற்றிவருகிறாயா ?

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

(30) உன்னைச் சேர்ந்த ஸ்த்ரீகளிடத்தில் அனுகூலமாக நடந்துவருகிறாயா ?

(31) அவர்கள் பிற புருஷர்களுடன் கலந்து பேசாமல் இருக்கும்படி ஜாக்கிரதையாகப் பாதுகாக்கிறாயா ?

(32) அவர்கள் சொல்வதை நிஜமென்று நம்பாமலிருக்கிறாயா?

(33) மிகவும் சஞ்சலமான தன்மையுள்ளவர்களாகையால் அவர்கள் ரஹஸ்யங்களைக் காப்பாற்ற முடியாதவர்கள். ஆகையால் அவர்களிடத்தில் ரஹஸ்யங்களைச் சொல்லாமலிருக்கிறாயா ?

(34) உன் ராஜ்யத்தில் யானைகள் உண்டாக்குமிடத்தைப் பிறர் அறியாமல் மறைத்து வைத்திருக்கிறாயா ? இல்லாவிட்டால் பிறர் அவைகளைப் பிடித்துக்கொண்டு போவார்கள்.

(35) ஆண் யானைகளைப் பிடிப்பதில் உபயோகப்படும் பெண் யானைகள் விருத்தியாகின்றனவா ?

(36) குதிரைகளையும் ஆண் யானைகளையும் பெண் யானைகளையும் மேன்மேலும் ஸம்பாதிக்கிறாயா ?

(37) ஒவ்வொரு நாளும் காலையில் நன்றாக அலங்கரித்துக்கொண்டு ராஜஸபையில் வந்து பிரஜைகளுக்குத் தரிசனம் கொடுக்கிறாயா ? இல்லாவிட்டால் அரசனுக்குத் தேகஸௌக்கியமில்லை என்றும் ஏதோ அபாயம் நேர்ந்ததென்றும் ஸந்தேகப்படுவார்கள்.

(38) உன் வேலைக்காரர்கள் எந்தச் சமயத்திலும் உன்னை ஸுலபமாகப் பார்க்கும்படி இடம் கொடுக்கக்கூடாது ; கர்வமடைந்து உன்னிடத்தில் மரியாதை வைக்கமாட்டார்கள், எப்பொழுதும் உன்னைப் பார்க்காமலும் வைத்துக்கொள்ளக்கூடாது ; அவர்களுக்கு வேண்டியவைகளைத் தெரிந்துகொள்ள முடியாமற்போய்விடும் ; இவனால் நமக்கென்ன பிரயோஜனமென்று கோபமுண்டாகும் ; அதனால் ராஜ்யத்திற்கும் கெடுதி நேரும். ஆகையால் எல்லோருக்கும் எப்பொழுதும் தரிசனம் கொடுக்கவும் கூடாது ; கொடுக்காமலிருக்கவும் கூடாது ; நடுவுநிலைமையாக நடந்து கொள்ள வேண்டும்.

(39) உன் கோட்டைகளில் தனங்களும், தான்யங்களும், ஆயுதங்களும், யந்திரங்களும் வேண்டியவரையில் இருக்கின்றனவா ? சில்பிகளும வில்லாளிகளும் நிறைந்திருக்கிறார்களா ? ஜலத்தட்டு இல்லையல்லவா ?

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Hariharan Collection, Sholinganallur, Chennai

(40) உன் வரவு அதிகமாகவும் செலவு குறைவாகவும் இருக்கிறதா? நட்டுவன், விடன், பாடகன், கூத்தாடி முதலிய தகாதவர்களுக்கு உன் திரவியத்தை ஏராளமாகக் கொடுக்காமலிருக்கிருயா?

(41) பிராம்மணர்கள், தேவதைகள், யாசகர்கள், வீரர்கள், மித்திரர்கள் இவர்களுக்கு உன் ஐசுவரியத்தை அதிகமாகச் செலவு செய்கிருயா?

(42) உன் ராஜ்யத்தில் சுத்தமான ஸ்வபாவமுள்ளவனும் மனோவாக்குகாயம் ஒத்தவனுமான ஸாது, எவனுவது பிறரால் திடீரென்று திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டு, சாஸ்திரங்களில் நிபுணர்களால் விசாரிக்கப்படாமல் அவனுடைய தனத்திற்காக ஆசைப்பட்டுக் கொல்லப்படாமலிருக்கிருனு?

(43) எந்தத் திருடனுவது, திருடும்பொழுது தடையத்துடன் கண்டுபிடிக்கப்பட்டு, நன்ருக விசாரித்தபின், அவன் திருடின சொத்தைக் கொடுத்துவிட ஒப்புக்கொண்டால், அதை அநியாயமாக வாங்கிக்கொண்டு தண்டனை இல்லாமல் விடப்பட்டிருக்கிருனு?

(44) தனவான்களுக்கும் ஏழைகளுக்கும் வியாஜ்யம் நேர்ந்தால் உன் நியாயாதிகாரிகள் தனவானிடத்திலிருந்து லாபத்தை அடைய உத்தேசிக்காமல் தீர்ப்புச் செய்கிருர்களா? அரசன் தன் ராஜ்யத்தில்நடக்கும் நியாயாநியாயங்களை விசாரிக்காமல் கேவலம் தன் ஸௌக்கியத்தையே நாடி ஆண்டுவந்தால், சரியாக விசாரிக்காமல் குற்றம் சாட்டப்பட்டவர்கள் கண்ணீர் விட்டால் அது அவனுடைய மனைவி மக்களையும் பசுக்களையும் நாசம் செய்யும்.

(45) வயது சென்றவர்களையும், பாலர்களையும், உத்தமமான வைத்யர்களையும் வெகுமானங்களாலும் ஸ்நேஹத்தாலும் இனிமையான வார்த்தைகளாலும் வசப்படுத்துகிருயா?

(46) தேவதைகள் வஸிக்கும் பெரிய மரங்களையும், யோக மஹிமையால் இவ்வுலகத்து ஸுகங்களில் ஆசையில்லாதவர்களையும், குருமார்களையும், பெரியோர்களையும், தபஸ்விகளையும், தேவதைகளையும், அதிதிகளையும், பிராம்மணர்களையும் வணங்குகிருயா?

(47) முற்பகலில் தர்மத்தை ஸம்பாதிக்கவேண்டும்; அப்படிச் செய்யாமல் அந்த வேளையில் அர்த்தத்தை ஸம்பாதித்து, பிற்பகலில் அர்த்தத்தை ஸம்பாதிக்க வேண்டியிருக்க, அப்படிச் செய்யாமல் தர்மத்தை ஸம்பாதித்தும், ஸாயங்காலத்தில் காமத்தை அனுஷ்டிக்க வேண்டியிருக்க அப்படிச் செய்யாமல் தர்மத்தையும் அர்த்தத்தையும் அனுஷ்டித்தும், இம்மூன்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Sharma Collection, Sholinganallur, Chennai

புருஷார்த்தங்களையும் கெடுக்காமலிருக்கிறாயா? (தர்மத்தை விட்டுத் தனத்தை மாத்திரம் ஸம்பாதிக்காமலிருக்கிறாயா? குடும்ப போஷணத்திற்கு வேண்டிய தனத்தை ஸம்பாதிப்பதை விட்டுத் தர்மத்தை மாத்திரம் ஸம்பாதிக்காமலிருக்கிறாயா? தர்மத்தையும் அர்த்தத்தையும் விட்டு வேசிகளிடத்தில் அகப்பட்டு இம்மூன்றையும் கெடுத்துக் கொள்ளாமலிருக்கிறாயா? காலையில் தானம் முதலிய கர்மங்களையும் பிறகு ராஜ்யங்களையும், ராத்திரியில் காமத்தையும் ஒன்றிற்கொன்று விரோதமில்லாமல் பிரித்து அனுஷ்டிக்கிறாயா? அவைகளை அளவுக்கு மிஞ்சாமல் தடுக்கும் சக்தி உனக்கு இருக்கிறதல்லவா?)

(48) உன் ராஜ்யத்திலுள்ள ஸர்வ சாஸ்திர நிபுணர்களான பிராம்மணர்களும் பட்டணத்து ஜனங்களும் நாட்டுப்புறத்தாரும், நீ ஸௌக்கியமாக இருக்கவேண்டுமென்று எப்பொழுதும் பிரார்த்திருக்கிறார்களா?

(49) பரலோகமில்லை என்று வாதிப்பது, பொய் சொல்வது, பெற்றோர்கள் ஆசிரியர்கள் பிராம்மணர்கள் பலஹீனர்கள் குற்றம் செய்தாலும் அவர்களிடத்தில் கோபிப்பது, அஜாக்கிரதை, காரியங்களை நிதானமாகச் செய்வது, எல்லா மேன்மைக்கும் காரணமான ஸாதுக்களைத் தரிசிக்காமலிருப்பது, சோம்பல், இந்திரியங்களை அடக்காமலிருப்பது, மந்திரிகளின் உதவியில்லாமல் ராஜ்ய காரியங்களைத் தானே ஆலோசிப்பது, விபரீதமான அர்த்தங்களைச் சொல்கிறவர்களுடன் ஆலோசிப்பது, நிச்சயித்த காரியங்களை ஆரம்பிக்காமலிருப்பது, தன் ஆலோசனைகளை முன்னாடியாகவே வெளியிடுவது, காலையில் எழுந்தவுடன் கண்ணாடி முதலியவைகளைப் பார்ப்பதென்ற மங்களகாரியங்களை அனுஷ்டிக்காமலிருப்பது, யாரைப் பார்த்தாலும் எழுந்து மரியாதை செய்வது என்ற இந்தப் பதினான்கும் அரசன் விலக்கவேண்டிய தோஷங்களில் முக்கியமானவை. நீ அவைகளை விலக்குகிறாயா?

(50) வேட்டை, சூதாட்டம், பகலில் தூங்குவது, பிறரைத் தூஷிப்பது, பெண்களுடனே காலம் கழிப்பது, மதுபானம், பாட்டு, கூத்து, வாத்தியமென்றவைகளில் காலத்தைக் கழிப்பது, காரியமில்லாமல் அலைவதென்ற இந்தப் பத்தையும் விலக்கிவருகிறாயா?

(51) நீர்அரண் மலையரண் மரவரண் பாலையரண் படையரண் என்ற இவ்வைந்தையும், ஸாமம் தானம் பேதம் தண்டமென்ற இந்த நான்கையும், அரசன் மந்திரி ராஜ்யம் கோட்டை பொக்கிஷம் ஸைன்யம் மித்திரர்களென்ற இவ்வேழு ராஜ்யத்தின் அங்கங்களையும், பயிர்த்தொழில் வியாபாரம் கோட்டை அணைகள்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நிலத்தைப் பயிரிடுவது, சுரங்கம் வெட்டுவது, கப்பம் வாங்குவது, தரிசு யானை பிடிப்பது ஆகிய இந்த எட்டையும், தர்மம் அர்த்தம் காமமென்ற இந்த மூன்றையும், த்ரயீ வார்த்தா தண்டநீதி என்ற இம்மூன்று வித்யைகளையும், இந்திரியங்களை ஜயிக்கும் உபாயத்தையும் ஸந்தி விக்ரஹம் யானம் ஆஸனம் த்வைதீபாவம் ஸமாச்ரயமென்ற இந்த ஆறு உபாயங்களையும், நெருப்பு, ஜலம், வியாதி, பஞ்சம், மரணம் என தெய்வ கோபத்தால் வரும் ஐந்து கஷ்டங்களையும், அதிகாரி, திருடன், சத்ரு, அரசனுக்குப் பிரியமானவன் அரசனுடைய பேராசை என மனிதனால் நேரும் ஐந்து கஷ்டங்களையும், சத்ருவினால் கோபிக்கப்பட்டாவது, பயமுறுத்தப்பட்டாவது, அவமதிக்கப்பட்டாவது ஸரியாகச் சம்பளம் கொடுக்கப்படாமலாவது இருக்கும் மனிதனை அவன் விரும்புவதைக் கொடுத்து அவனுடைய எஜமானனை விட்டுப் பிரிப்பது, பாலன், வயது சென்றவன், தீரா நோயுள்ளவன், பந்துக்களால் ஒதுக்கப்பட்டவன், பயந்தவன், பயந்த ஜனங்களையுடையவன், பேராசையுடையவன், பேராசையுள்ள ஜனங்களை ஆளுகிறவன், குடிகளின் ப்ரீதியை இழந்தவன், இந்திரிய ஸுகங்களில் மிகுந்த ஆசையை வைத்தவன், பலருடன் ஆலோசிக்கிறவன், தேவர்களையும் பிராம்மணர்களையும் நிந்திக்கிறவன், மஹரிஷிகளின் சாபம் கோபம் முதலியவைகளால் பீடிக்கப்பட்டவன், தெய்வமே யாவற்றையும் செய்யுமென்று சும்மா இருக்கிறவன், ஸைன்யம் நஷ்டமாவதால் துக்கப்படுகிறவன், ராஜ்யத்திலேயே வஸிக்காதவன், குரூரமான கிரஹங்கள் குரூரமான தசைகள் இவைகளால் பீடிக்கப்பட்டவன், பஞ்சம் முதலிய கஷ்டங்களை அனுபவிக்கிறவன், பல சத்துருக்களை உடையவன், ஸத்தியமும் தர்மமும் அற்றவன், என வகுக்கப்பட்டு, ஒரு பொழுதும் ஸ்நேஹம் செய்யத்தகாத இந்த இருபது விதமான அரசர்களையும், மந்திரி ராஜ்யம் கோட்டை பொக்கிஷம் தண்டனை என்ற ஐந்து பிரகிருதிகளையும் (அங்கங்கள்), நடுவில் விஜிகீஷு என்ற அரசன், அவனுக்கு முன்புறத்திலுள்ள அவனுடைய சத்ரு, அவனுடைய மித்திரன், அந்தச் சத்ருவின் மித்திரன், அந்த மித்திரனுடைய மித்திரன், சத்துருவின் மித்திரனுக்கு மித்திரன், விஜிகீஷுவுக்குப் பின் பக்கத்திலுள்ள பார்ஷ்ணிக்ராஹன், ஆக்ரந்தன், பார்ஷ்ணிக்ராஹஸாரன், ஆக்ரந்தஸாரன், பக்கத்தில் மத்யமன், இவர்களுக்கு வெளியில் உதாஸீனனென்ற பன்னிரண்டு அரசர்கள் அடங்கிய ராஜமண்டலத்தையும், படை எடுப்பது ஸைன்யங்களை அணிவகுப்பது படை எடுத்துச் செல்வது ஸைன்யங்களுடன் தங்குவதென்ற யுத்தமுறையையும், கலைப்பது பிறரை அண்டுவதென்ற ஸமாதானத்தையும் பரீக்ஷித்தறிந்து, இவைகளில் விலக்கவேண்டியவைகளை விலக்கி, கொள்ள வேண்டியவைகளை ஏற்றுக்கொண்டு வருகிறாயா ?

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

(52) சாஸ்திரங்களில் சொல்லப்படும் லக்ஷணங்கள் பொருந்திய நான்கு அல்லது மூன்று மந்திரிகளுடன் முதலில் கலந்து யோசித்துப் பிறகு அவர்களுடன் தனித்தனியாக ஆலோசிக்கிருயா?

(53) நீ அத்யயனம் செய்யும் தேவர்களும் அக்னிஹோத்திரம் முதலியவைகளும் அனுஷ்டிப்பதால் பயனைக் கொடுக்கின்றனவா?

(54) நீ ஸம்பாதித்த தனம், அதைப் பிறருக்குக் கொடுப்பதாலும் நீ அனுபவிப்பதாலும் பயன் பெறுகின்றதா?

(55) உன் பாரியை உனக்கு அனுகூலமாக இருக்கிருளா?

(56) நீ சாஸ்திரங்களைக் கேட்டதற்கு அடையாளமாக நல்ல ஆசாரமுள்ளவனுகவும் நல்ல நடத்தையுள்ளவனுகவும் இருக்கிருயா ?

(57) நான் இதுவரையில் சொல்லி வந்த நீதி, தீர்க்காயுஸையும் கீர்த்தியையும் தர்மம் காமம் அர்த்தமென்ற புருஷார்த்தங்களையும் கொடுக்கக்கூடியது. உன் புத்தி அந்த வழியில் செல்கின்றதா ?

(58) ஸன்மார்க்கத்தை அனுஸரித்துப் பெரியோர்களால் நிந்திக்கப்படாத இந்த ஆசாரம் நமது பிதாவால் அனுஷ்டிக்கப்படுகிறது. நமது பிரபிதாமஹர் முதலிய முன்னேர்கள் இதையே அனுஷ்டித்து வந்தார்கள். நீயும் இதையே அனுஷ்டித்து வருகிருயா ?

(59) மதுரமாகப் பக்குவம் செய்யப்பட்ட ஆகாரத்தைப் பிறருக்குக் கொடுக்காமல் நீ மாத்திரம் புஜிக்காமலிருக்கிருயா ?

(60) உன்னிடத்திலிருந்து உதவியை எதிர்பார்க்கும் நண்பர்களுக்கு உதவி செய்கிருயா ?

மேற்சொன்ன நீதிகளை அறிந்து உசிதமாகத் தண்டித்து நமது முன்னேர்களையும் போலக் குடிகளைத் தர்மமாக ஆண்டு வந்தால் நீ இவ்வுலகத்தில் பூமண்டலாதிபதியாக இருப்பாய். உன் பிராரப்த கர்மம் முடியும்பொழுது இந்த தேகத்தை விட்டு ஞானியாக உத்தம லோகங்களை அடைவாய் என்று ஸகல ராஜதர்மங்களின் ரஹஸ்யத்தை ராமன் உபதேசித்தார்.

ராஜா து த4ர்மேண ஹி பாலயித்வா
மஹாமதிர் த3ண்ட3த4ர: ப்ரஜாநாம் ।
அவாப்ய க்ருத்ஸ்நாம் வஸுதா4ம் யதா2வத்
இதஶ்ச்யுத: ஸ்வர்க்க3 முபைதி வித்3வாந் ॥ (76)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வீடுதோறும் ஒளிரவேண்டிய பக்திச் சுவை [illegible] பதிப்பு

கீர்த்தனாசார்ய

ஸ்ரீ C. R. ஸ்ரீநிவாஸய்யங்கார், B.A. அவர்களின்

ஸுந்தர காண்டம்

பல திவ்ய மங்கள ஸ்தோத்ரங்களுடன் புது மணமும் பொலிவும் பெற்ற
லிப்கோ வெளியீடு

★

★

1. ஸுந்தர காண்டத்தைப் பாராயணம் செய்பவர்கள் கோரிக்கைகள் நிறைவேறுவதற்காகவும், தசாபுக்திகளுக்காகவும் எந்த முறையில் எவ்வளவு நாட்கள், என்னென்ன நிவேதனங்கள் செய்யவேண்டும் என்னும் விவரங்கள் யாவும் வாயு புராணத்தைச் சேர்ந்த உமா ஸம்ஹிதை, ஸ்காந்தோப புராணம் ஆகியவைகளின் பிரமாண ஃலோகங்களுடனும் அட்டவணைகளுடனும் தெளிவாகத் தரப்பட்டுள்ளன.

2. பல திவ்ய க்ஷேத்ரங்களில் எழுந்தருளியுள்ள ஸ்ரீராமபிரானின் படங்கள் 'ஆர்ட்' காகிதத்தில் அச்சிடப்பட்டு இப்பதிப்பை அலங்கரிக்கின்றன.

3. ஸுந்தர காண்டத் தமிழ்ப் பெயர்ப்பு மயிர்க் கூச்சமெடுக்கும் வகையில் (பல அழகிய படங்களுடன்) தரப்பட்டுள்ளது.

4. மேலும், பல்வேறு இன்றியமையாத ஆன்மிக விஷயங்களும் ஃலோகங்களும் இப்பதிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

இலவசம்

இப்பதிப்பின் ஒவ்வொரு பிரதியுடனும் கோரக்பூர் கீதா பிரஸ் ஸம்ஸ்க்ருத ஸுந்தர காண்டம் — மூலம் ஒரு பிரதி இலவசமாகத் தரப்படுகிறது.

'கல்கி' ஸைஸில் 520 பக்கங்கள் — முழு காலிகோ பைண்டிங்
நான்கு வண்ண அழகிய மேலட்டை — உயர்ந்த வெளியீடு

விலை ரூ. 12·50; தபால் மூலம் ரூ. 15-60 (முன் பணம் தேவை)

பதிப்பகத்தார் : தி லிட்டில் ப்ளவர் கம்பெனி (லிப்கோ), சென்னை-17.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸகலகார்ய ஸித்தி ஸ்வரூபிணியான ஸர்வலோக மாதா

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



திருப்பதி க்ஷேத்திரத்தில் திவ்ய ஸேவை தந்தருளும்
தீராத வினைகள் தீர்க்கும் ஸ்ரீ திருவேங்கடமுடையான்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ:

ஸகலகாரிய ஸித்தியும் திராவிட வேதங்களும்

இக்கலி காலத்தில் பரம்பொருளின் கருணையைப் பெறுதல் வெகு சுலபம். அவன் கருணை கஷ்டங்களைப் போக்கும்; கவலைகளைத் துரத்தும்; நன்மைகளை உண்டாக்கும்; எடுத்த காரியம் யாவினும் வெற்றி தரும்; அக்கருணையே நமக்குத் துணை. இத்தகைய கருணையை எளிதில் பெறுவதற்கு வழி ஆண்டவனை அடிபணிந்து, சொல் மலர்கொண்டு அன்பால் கட்டிப் பாமாலை சார்த்தி நெஞ்சம் நெகிழ்ந்து, உடல் புளகித்துப் பிரார்த்தனை செய்வதே ஆகும். எல்லாம் வல்ல இறைவனை ஏத்திப் பெருங் கருணையைப் பெறப் பல வழிகள் உள. அவைகளில் முக்கியமானவை:

1. ஸந்த்யாவந்தனம் முதலிய அவரவர்கட்கு ஏற்பட்டுள்ள நித்ய கர்மாக்களை ஒழுங்காகச் செய்துவருதல்;
2. முறை தவறாமல் ஆன்றோர்களும் மூதாதையரும் செய்தபடி தினமும் தேவ பூஜை செய்தல்;
3. தினமும் தவறாமல் ஸ்ரீமத் ராமாயண பாராயணம் செய்தல்;
4. புராண ப்ரவசனங்களை ச்ரவணம் செய்தல்;
5. பாகவதாளைத் தரிசனம் செய்தல்;
6. கோயில்களுக்குச் சென்று அவன் அடிபணிதல்;
7. பகவான் திருவடிகளை நம் மனக்கண்ணில் அமர்த்தி மஹான்கள் பலர் அருளியுள்ள ஸ்தோத்திரங்களை அனுஸந்தித்தல்.

இவ்வேழு வழிகளிலும் எளிதான ஏழாம் வழியைப் பார்ப்போம்:

அரவணையில் அறிதுயில் கொண்ட அமலனாகிய திருமாலிடத்தே அகத்தை ஆழ்த்தி அன்பு கனிந்து நெஞ்சம் நெக்குருகிப் பாடியவர்கள் ஆழ்வார்கள் எனப்படுவர்.

கண்ணுதற் கடவுளிடத்தே கருத்தை இருத்திக் காதல் கொண்டு கசிந்து கண்ணீர் மல்கி, உவந்து உவந்து பாடியவர்கள் நாயன்மார் எனப்படுவர்.

தமிழ் மக்களுக்கு உறுதிப் பொருள்களை உரைத்த பெரியார்களுள் முன்னணியில் நிற்பவர் பட்டினத்து அடிகள்.

கடவுள், உயிர், உள்ளம், தத்வம் முதலிவைகளைப்பற்றி அரிய கருத்துக்களை அழகாகப் பாடியவர் தாயுமானவர்.

 RBOMR : BRLX

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri Vellaharan Collection, Sholinganallur, Chennai

அஞ்சு வயது ஊமைப் பாலகனாய்ச் செந்திற் பதியடைந்து செவ்வேளின் கருணைத் திறத்தால் கவிமழை பொழிந்து சகலாகம தெய்வச் சைவம் தழைக்க வந்து அவதரித்தவர் குமரகுருபரர்.

ஆண்டவனிடத்தே ஈடுபட்டு அன்பு வழியைக் காட்டி அருட் பண்பைப் பரப்பி வாழ்ந்த பெரியார்களுள் பெரியார் திருவருட் பிரகாச வள்ளலாராகிய இராமலிங்க அடிகள்.

கலியுக வரதனாகிய முருகக் கடவுளிடத்தே காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி நமக்கு திருப்புகழ் தந்தருளியவர் அருணகிரிநாதர்.

இப்பெரியார்கள் வேதம், ஆகமம், ஸ்மிருதி, புராணம், சாஸ்திரம் ஆகியவைகளின் கருத்துக்கள் யாவருக்கும் எளிதில் விளங்கும் வண்ணம் பகவானைப் பாமாலைகளால் போற்றிப் புனைந் தனர். சொல்வளமும் பொருள் வளமும் செழித்துத் தோன்றாத் துணையின் திருவருளைப் பெரிதும் கூட்டுவிப்பன அப்பாடல்கள்.

மேலும், இப்பெரியார்கள் இக்கலிகாலத்தில் நம் மக்கள் கடைத்தேறவும், கஷ்டங்கள் குறைந்து சுலபமாகக் கார்ய ஸித்திகள் பெறவும் பகவானைக் குறித்து துதிப்பாடல்கள் பல திருவாய்மலர்ந்தருளியுள்ளனர். அப்பெரியார்களைத் துதித்துப் போற்றி அவர்கள் அருளிய அப்பாடல்களை மனம் ஒருமித்துப் பாடிப்போற்றும் பக்தர்கள் இறைவன் அருளை எளிதில் அடைவர்; இது சத்தியமே.

எனவே, கீழ்க்கண்ட தலைப்புக்களில், ஆழ்வார்கள் தந்தருளிய ப்ரபந்தங்களிலிருந்தும் நாயன்மார்கள் நம்மனோர்க்கீந்த தேவார திருவாசகங்களிலிருந்தும் மற்றும் அநேக மகான்களின் வாக்கி னின்றும் வரப்ரஸாதமாக வந்த பொன்போன்ற பாக்களில் சில வற்றைப் பக்தர்முன் ஸமர்ப்பித்துள்ளோம்.

1. எடுத்த காரியம் எதுவும் வெற்றி பெற ;
2. மாணவர் கல்வி நலம் பெற ;
3. க்ஷேமமா ?
4. ஆபத்தா ? அஞ்சவேண்டா ;
5. மானம காக்க ;
6. வளமெலாம் நிறைந்து வாழ விருப்பமா ?
7. மணமாக வேண்டுமா ? மணமாகி மணமாக வாழ விருப்பமா ?
8. ஆண்டவனே அருமருந்து ;
9. நம் அங்கங்களால் காரியஸித்தி ;
10. வீட்டைவிட்டுக் கிளம்பும்போது ;
11. கடிதங்கள் மூலம் காரியஸித்தி.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இப்பாடல்கள் யாவும் நம் நாட்டு ஞானிகள், துரிய நிலையையும் கடந்து சென்று துவாதசாந்தத் தலம் கண்ட ஜீவன் முக்தர்கள் அன்புப் பெருக்கினுல் அருளியவை. அவற்றைப் படிப்போர் உள்ளம் உருகும்; கேட்போர் மனம் கரையும்; அவர்ளுக்கு எம்பெருமான் கருணை தானே பெருகும்; இடர்கள் நீங்கும்; ஸகல காரியங்களிலும் ஸித்தி கிடைக்கும்.

ஆழ்வார்கள் திருவடிகளே சரணம்
வேலும் மயிலும் துணை
திருச்சிற்றம்பலம்

ஆழ்வார்கள் திருவடிகளே சரணம்

நாலாயிர திவ்ய ப்ரபந்தத் தனியன்கள்

நாலாயிர திவ்ய ப்ரபந்தத்தையேனும் அதன் ஒரு பகுதியையேனும் பாராயணம் செய்பவர்கள் பாராயணம் தொடங்குமுன் பொதுத் தனியன்களை அனுஸந்தித்துப் பிறகு அவ்வப்பகுதிக்குரிய தனியன்களை அனுசந்திக்கவேண்டும். அதன் பிறகே பாராயணத்தைத் தொடங்கவேண்டும். இது ஸம்ப்ரதாயம். ஆகவே, பொதுத் தனியன்களையும் இப்புத்தகத்தில் வந்துள்ள பகுதிகளின் தனியன்களையும் தனியாக இங்குத் தந்துள்ளோம். அவைகளை முறையாக அனுஸந்தித்து, பக்தர்கள், ஸகல காரியங்களிலும் ஸித்தி பெறுமாறு ஆண்டவனை அனவரதமும் வேண்டுகிறோம்.

பொதுத் தனியன்கள்

(வடகலையார்)

ஸ்ரீ வேதாந்த தேசிகர் தனியன்

ராமாநுஜதயாபாத்ரம் ஜ்ஞாநவைராக்யபூஷணம் ।
ஸ்ரீமத் வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்ததேஶிகம் ॥

(தென்கலையார்)

ஸ்ரீ மணவாள மாமுனிகள் தனியன்

ஸ்ரீஶைலேஶதயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம் ।
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம் ॥

குருபரம்பரையின் தனியன்

(இருகலையாருக்கும் பொது)

லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம் ।
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தே குருபரம்பராம் ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ உடையவர் தனியன்

யோ நித்யமச்யுதபதாம்புஜயுக்மருக்ம
வ்யாமோஹதஸ்ததிதராணி த்ரணாய மேநே ।
அஸ்மத்குரோர்பகவதோஸ்ய தயைகஸிந்தோ:
ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே ॥

ஸ்ரீ நம்மாழ்வார் தனியன்

மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதிஸ்-
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்
ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத் ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா ॥

ஆழ்வார்கள் உடையவர் தனியன்

பூதம் ஸரஸ்ச மஹதாஹ்வயபட்டநாத
ஸ்ரீபக்திஸாரகுலசேகரயோகிவாஹாந் ।
பக்தாங்க்ரிரேணுபரகாலயதீந்த்ரமிச்ராந்
ஸ்ரீமத்பராங்குசமுநிம் ப்ரணதோஸ்மி நித்யம் ।

ஆழ்வார்கள் திருவடிகளே சரணம்

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்

பெரியாழ்வார் திருமொழித் தனியன்கள்

குருமுகமநதீத்ய ப்ராஹ வேதாநசேஷாந்
நரபதிபரிக்லுப்தம் சுல்கமாதாதுகாம: ।
ச்வசுரமமரவந்த்யம் ரங்கநாதஸ்ய ஸாக்ஷாத்
த்விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ।

மின்னார் தடமதில்சூழ் வில்லிபுத்தூரென்று ஒருகால்
சொன்னார்கழற்கமலம் சூடினோம்—முன்னாள்
கிழியறுத்தானென்றுரைத்தோம் கீழ்மையினிற்சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே! வந்து.

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று
ஈண்டியசங்கம் எடுத்தூத—வேண்டிய
வேதங்களோதி விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்

ஆண்டாள் திருவடிகளே சரணம்

நாச்சியார் திருமொழித் தனியன்கள்

அல்லிநாட் டாமரைமே லாரணங்கி னின்துணைவி
மல்லிநா டாண்ட மடமயில்—மெல்லியலாள்,
ஆயர் குலவேந்த னாகத்தாள் தென்புதுவை
வேயர் பயந்த விளக்கு.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri Haridran Collection, Sholinganallur, Chennai

கோலச் சுரிசங்கை மாயன்செவ் வாயின்குணம்வினவும்
சீலத் தனள்,தென் திருமல்லி நாடி, செழுங்குழல்மேல்
மாலைத் தொடைதென் னரங்கருக் கீயும் மதிப்புடைய
சோலைக் கிளி, அவள் தூயநற் பாதம் துணைநமக்கே.

ஆண்டாள் திருவடிகளே சரணம்

குலசேகராழ்வார் திருவடிகளே சரணம்

பெருமாள் திருமொழித் தனியன்கள்

இன்னமுதம் ஊட்டுகேன் இங்கேவா பைங்கிளியே !
தென்னரங்கம் பாடவல்ல சீர்ப்பெருமாள்,—பொன்னஞ்
சிலைசேர் நுதலியர்வேள் சேரலர்கோன் எங்கள்
குலசே கரனென்றே கூறு.

ஆரம் கெடப்பரன் அன்பர்கொள் ளாரென்று அவர்களுக்கே
வாரங் கொடுகுடப் பாம்பில்கை யிட்டவன் மாற்றலரை
வீரங் கெடுத்தசெங் கோல்கொல்லி காவலன் வில்லவர்கோன்
சேரன் குலசே கரன்முடி வேந்தர் சிகாமணியே.

குலசேகராழ்வார் திருவடிகளே சரணம்

திருமழிசைப்பிரான் திருவடிகளே சரணம்

திருச்சந்த விருத்தத் தனியன்கள்

தருச்சந்தப் பொழில்தழுவு தாரணியின் துயர்தீர
திருச்சந்த விருத்தம்செய் திருமழிசைப் பரன்வருமூர்
கருச்சந்தும் காரகிலும் கமழ்கோங்கும் மணநாறும்
திருச்சந்தத் துடன்மருவு திருமழிசை வளம்பதியே.

உலகு மழிசையு முள்ளுணர்ந்து, தம்மில்
புலவர் புகழ்க்கோலால் தூக்க—உலகுதன்னை
வைத்தெடுத்த பக்கத்தும், மாநீர் மழிசையே
வைத்தெடுத்த பக்கம் வலிது.

திருமழிசைப்பிரான் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

பெரிய திருமொழித் தனியன்கள்

கலயாமி கலித்த்வம்ஸம் கவிம் லோக திவாகரம் ।
யஸ்ய கோபி꞉ ப்ரகாஸாபி꞉ ஆவித்யம் நிஹதம்தம꞉ ॥

வாழி பரகாலன் வாழி கலிகன்றி
வாழி குறையலூர் வாழ்வேந்தன்—வாழியரோ
மாயோனை வாள்வலியால் மந்திரங்கொள் மங்கையர்கோன்
தூயோன் சுடர்மான வேல்,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நெஞ்சுக் கிருள்கடி தீபம் அடங்கா நெடும்பிறவி
நஞ்சுக்கு நல்ல வமுதம் தமிழ்நன் னூல்துறைகள்
அஞ்சுக் கிலக்கியம் ஆரண சாரம் பரசமயப்
பஞ்சுக் கனலின் பொறிபர காலன் பனுவல்களே.

எங்கள் கதியே! இராமா நுசமுனியே!
சங்கைகெடுத் தாண்ட தவ்ராசா!—பொங்குபுகழ்
மங்கையர்கோ னீந்த மறையா யிரமனைத்தும்
தங்குமனம் நீயெனக்குத் தா.

மாலைத் தனியே வழிபறிக்க வேணுமென்று
கோலிப் பதிவிருந்த கொற்றவனே—வேலை
அணைத்தருளும் கையா லடியேன் வினையை
துணித்தருள் வேணும் துணிந்து.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

பொய்கையாழ்வார் திருவடிகளே சரணம்

முதல் திருவந்தாதித் தனியன்

கைதைசேர் பூம்பொழில்சூழ் கச்சிநகர் வந்துதித்த
பொய்கைப் பிரான்கவிஞர் போரேறு—வையத்
தடியவர்கள் வாழ அருந்தமிழ்நூற் றந்தாதி
படிவிளங்கச் செய்தான் பரிந்து.

பொய்கையாழ்வார் திருவடிகளே சரணம்

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்

திருவாய்மொழித் தனியன்கள்

மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதி:
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம் ।
ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத் ததங்க்ரி யுகளம் ப்ரணமாமி மூர்த்நா ॥

பக்தாம்ருதம் விஶ்வஜநாநுமோதநம்
ஸர்வார்த்ததம் ஸ்ரீஶடகோப வாங்மயம் ।
ஸஹஸ்ரஶாகோப நிஷத்ஸமாகமம்
நமாம்யஹம் த்ராவிடவேத ஸாகரம் ॥

திருவழுதி நாடென்றும் தென்குருகூ ரென்றும்
மருவினிய வண்பொருந லென்றும்—அருமறைகள்
அந்தாதி செய்தான் அடியிணையே யெப்பொழுதும்
சிந்தியாய் நெஞ்சே தெளிந்து.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri Harikaran Collection, Sholinganallur, Chennai

மனத்தாலும் வாயாலும் வண்குருகூர் பேணும்
இனத்தாரை யல்லா திறைஞ்சேன்—தனத்தாலும்
ஏதுங் குறைவிலேன் எந்தை சடகோபன்
பாதங்கள் யாமுடைய பற்று.

ஏய்ந்தபெருங் கீர்த்தி யிராமா நுசமுனிதன்
வாய்ந்தமலர்ப் பாதம் வணங்குகின்றேன்—ஆய்ந்தபெரும்
சீரார் சடகோபன் செந்தமிழ்வே தந்தரிக்கும்
பேராத உள்ளம் பெற.

வான்திகழும் சோலை மதிளரங்கர் வண்புகழ்மேல்
ஆன்ற தமிழ்மறைக ளாயிரமும்—ஈன்ற
முதல்தாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த
இதத்தா யிராமா நுசன்.

மிக்க விறைநிலையும் மெய்யா முயிர் நிலையும்
தக்க நெறியும் தடையாகித்—தொக்கியலும்
ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும் குருகையர்கோன்
யாழினிசை வேதத் தியல்.

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

தேசிக ப்ரபந்தத் தனியன்

ராமானுஜ தயாபாத்ரம் ஞானவைராக்ய பூஷணம்
ஸ்ரீமத் வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்த தேசிகம் ॥

சீரொன்று தூப்புல் திருவேங் கடமுடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள்—ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு.

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

---

1. எடுத்த காரியம் எதுவும் வெற்றி பெற

**"எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்."**

நல்ல காரியத்தை ஸங்கல்பித்துக்கொண்டு நேர் வழியில் ஆண்டவனைத் துதித்து அவனருள் கோரிச் செய்யத் தொடங்கினால் அது முட்டின்றி நிறைவேறும் என்பது ஆன்றோர்கள் அனுபவத்தில் உணர்ந்தது. நல்ல காரியங்களுக்கென்று தடைகள் எத்தனையோ காத்துக்கொண்டிருக்கலாம்; செய்ய விடாது. அவைகளையெல்லாம் பொருட்டாகக் கருதாமல் ஈசுவரன்மேல் பாரம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

போட்டு மனத்தோடு செய்தால் யாராலும் அதைத் தடுக்க முடியாது. ஈசுவரன் கைகொடுப்பான்; எடுத்த காரியம் இனிது நிறைவேறும்; கஷ்டங்கள், கவலைகள் அனைத்தும் சட்டென ஓடி மறையும்; சிந்தித்த செயல்கள் எல்லாம் சிறப்புடன் சித்திக்கும். ஆகவே, பரம புருஷனது வீரப்பிரதாபங்களையெல்லாம் தொடுத்துக் கூறும் கீழ்வரும் பாசுரங்களைப் பாராயணம் செய்பவர்களுக்கு எம்பெருமான் அருள் எளிதில் கிடைத்துப் பெரியதோர் லாபம் கிடைக்கும்.

ஆழ்வார்கள் திருவடிகளே சரணம்

நாலாயிர திவ்ய ப்ரபந்தம்

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்

திருவாய்மொழி [7—4]

ஆழியெழ

ஆழியெழச் சங்கும் வில்லு மெழத் திசை
வாழியெழத் தண்டும் வாளுமெழ அண்டம்
மோழை யெழமுடி பாதமெழ அப்பன்
ஊழியெழ வுலகங் கொண்ட வாறே. (1)

ஆறுமலைக் கெதிர்ந்தோடுமொலி அர
வூறுசுலாய் மலை தேய்க்குமொலி கடல்
மாறுசுழன் றழைக்கின்றவொலி அப்பன்
சாறுபட்டவமுதங்கொண்டநான்றே. (2)

நான்றில வேழ்மண்ணும் தானத்தவே பின்னும்
நான்றில வேழ்மலை தானத்தவே பின்னும்
நான்றில வேழ்கடல் தானத்தவே அப்பன்
ஊன்றி யிடந்தெயிற்றில் கொண்ட நாளே. (3)

நாளுமெழ நிலநீருமெழ விண்ணும்
கோளுமெழ எரிகாலுமெழ மலை
தாளுமெழச் சுடர்தானுமெழ அப்பன்
ஊளியெழ வுலக முண்ட வூணே. (4)

ஊணுடை மல்லர் ததர்ந்தவொலி மன்னர்
ஆணுடைச் சேனை நடுங்குமொலி விண்ணுள்
ஏணுடைத் தேவர் வெளிப்பட்ட வொலி அப்பன்
காணுடைப் பாரதம் கையறை போழ்தே. (5)

போழ்து மெலிந்த புன்செக்கரில் வான்திசை
சூழுமெழுந் துதிரப்புனலாமலை
கீழ்து பிளந்த சிங்கமொத்தால் அப்பன்
ஆழ்துயர்செய் தசுரரைக் கொல்லுமாறே. (6)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மாறுநிரைத் திரைக்கும் சரங்கள்இன
நூறுபிணம் மலைபோல் புரளக் கடல்
ஆறுமடுத்துதிரப் புனலா அப்பன்
நீறுபட இலங்கை செற்ற நேரே. (7)

நேர்சரிந்தான் கொடிக்கோழி கொண்டான் பின்னும்
நேர் சரிந்தா னெரியு மனலோன் பின்னும்
நேர்சரிந்தான் முக்கண்மூர்த்தி கண்டீர் அப்பன்
நேர்சரிவாணன் திண்டோள் கொண்ட வன்றே. (8)

அன்றுமண் நீரெரி கால்விண் மலைமுதல்
அன்று சுடரிரண்டும் பிறவும் பின்னும்
அன்று மழையுயிர் தேவும்மற்றும் அப்பன்
அன்று முதலுலகம் செய்ததுமே. (9)

மேய்நிரை கீழ்புக மாபுரளச் சுனை
வாய்நிறை நீர்பிளிறிச் சொரிய இன
ஆநிறை பாடியங்கே யொடுங்க அப்பன்
தீமழை காத்துக் குன்ற மெடுத்தானே. (10)

குன்ற மெடுத்த பிரானடி யாரொடும்
ஒன்றி நின்ற சடகோப னுரைசெயல்
நன்றி புனைந்த ஓராயிரத் துள்ளிவை
வென்றி தரும்பத்தும் மேவிக் கற்பார்க்கே. (11)

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்

2. மாணவர் கல்வி நலன் பெற

மக்களுக்குக் கல்வி நலனே நலன். இதைப் பெறுவதால் ஏழேழு ஜன்மங்களிலும் உய்யும் வழி கிடைக்கும். தற்காலத்தில் மாணவர்கள் கல்வியைக் கற்கவேண்டும் என்று பெரிதும் ஆவ லுடன் கஷ்டப்பட்டுப் படித்தபோதிலும் இவர்களிற் பலர் நிறைவு பெறாமல் வருந்துகின்றனர். இதற்குக் காரணம் என்ன? திருவருள் குறைவுதான்! ஆகையால் அத்திருவருளைப் பெற்று மனத்தை வேறு எதிலும் செலுத்தாமல் படிப்பார்களேயாயின் கல்வி நன்கு வாய்க்கும். பிறவியில் ஊமையாய் இருந்த குமரகுரு பரர் செந்தூர் ஆண்டவன் அருளால் அருங்கவியாய் விளங்க வில்லையா? ஏதுமறியாத மூன்று வயதுப் பாலகன் "தோடுடைய செவியன்" என்றெடுத்து அருமையாய்ப் பாடி 'ஞானசம்பந்தன்' என்று பெயர் பெறவில்லையா? ஆகையால் தெய்வத்திருவருள் கூட்டுவிக்காததொன்றில்லை. இத்தகைய பெருநம்பிக்கையுடன், மாணவர்களே! கீழ்வரும் பாசுரங்களை நாள்தோறும் நியமத் துடன் பாராயணம் செய்யுங்கள். தெய்வம் இரங்கும்; அருள் கொடுக்கும்; கற்ற கல்வி பெருகித் தக்க சமயத்தில் கைகொடுத்து உதவும். பரீட்சைகளிலும் நல்ல மார்க்குகள் கிடைக்கும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri Harihar Collection, Sholinganallur, Chennai

ஆழ்வார்கள் திருவடிகளே சரணம்

நாலாயிர திவ்ய ப்ரபந்தம்

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்

திருவாய்மொழி [1—10]

பொருமா நீள்படை யாழிசங் கத்தொடு
திருமா நீள்கழ லேழுல குந்தொழ
ஒருமா ணிக்குற ளாகிநி மிர்ந்தஅக்
கருமா ணிக்கமென் கண்ணுள தாகுமே.

கண்ணுள்ளே நிற்கும் காதன்மை யால்தொழில்
எண்ணி லும்வரும் என்னினி வேண்டுவம்
மண்ணும் நீரும் எரியும்நல் வாயுவும்
விண்ணுமாய் விரியும் எம்பி ரானையே

எம்பிரானை எந்தை தந்தை தந்தைக்கும்
தம்பிரானை, தண்டாமரைக் கண்ணனை
கொம்ப ராவுநுண் ணேரிடை மார்வனை
எம்பி ரானைத் தொழாய்மட நெஞ்சமே.

நெஞ்சமே நல்லை நல்லை உன்னைப் பெற்றால்
என்செய்யோம், இனியென்ன குறைவினம்
மைந்தனை மலராள் மணவாளனை
துஞ்சும் போதும் விடாது தொடர்கண்டாய்.

கண்டாயே நெஞ்சே கருமங்கள் வாய்க்கின்றுஓர்
எண்டானும் இன்றியே வந்தியலு மாறு
உண்டானை உலகேழும் ஓர்மூவடி
கொண்டானை, கண்டு கொண்டனை நீயுமே.

நீயும் நானுமிந் நேர்நிற்கில் மேல்மற்றோர்
நோயும் சார்கொடான் நெஞ்சமே சொன்னேன்
தாயும் தந்தையு மாயிவ் வுலகினில்
வாயும் ஈசன் மணிவண்ணன் எந்தையே.

எந்தையே என்றும் எம்பெருமான் என்றும்
சிந்தையுள் வைப்பன் சொல்லுவன பாவியேன்
எந்தையெம் பெருமா னென்று வானவர்
சிந்தையுள் வைத்துச் சொல்லும் செல்வனையே.

செல்வ நாரணன் என்ற சொல் கேட்டலும்
மல்கும் கண்பனி நாடுவன் மாயமே
அல்லும் நன்பகலும் இடைவீ டின்றி
நல்கி யென்னை விடான் நம்பி நம்பியே.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நம்பி யைத்தென் குறுங்குடி நின்ற அச்
செம்பொ னேதிக ழுந்திரு மூர்த்தியை
உம்பர் வானவர் ஆதியஞ் சோதியை
எம்பி ரானை என்சொல்லி மறப்பனோ. (9)

மறப்பும் ஞானமும் நானொன் றுணர்ந்திலன்
மறக்குமென்றுசெந் தாமரைக் கண்ணொடு
மறப்பற வென்னுள்ளே மன்னி னான்தனை
மறப்ப னோவினி யானென் மணியையே. (10)

மணியை வானவர் கண்ணனைத் தன்னதோர்
அணியை, தென்குரு கூர்ச்சட கோபன்சொல்
பணிசெய் ஆயிரத் துள்ளிவை பத்துடன்
தணிவிலர் கற்பரேல் கல்வி வாயுமே. (11)

திருவாய்மொழி [5—6—2]

கற்கும் கல்விக் கெல்லை யிலனே யென்னும்
கற்கும் கல்வி யாவேனும் யானே யென்னும்
கற்கும் கல்வி செய்வேனும் யானே யென்னும்
கற்கும் கல்வி தீர்ப்பேனும் யானே யென்னும்
கற்கும் கல்விச் சாரமும் யானே யென்னும்
கற்கும் கல்வி நாதன் வந்தே றக்கொலோ
கற்கும் கல்வியீர்க்கிவை யென்சொல்லுகேன்
கற்கும் கல்வி என்மகள் காண்கின்றவே.

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசர் தேவாரம்

நமச்சி வாயவே ஞானமும் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறிக் காட்டுமே.

திருச்சிற்றம்பலம்

வேலுமயிலும் துணை

அருணகிரிநாதர் கந்தரனுபூதி

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

வேலுமயிலுந் துணை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

செந்திலாண்டவன் துணை

குமரகுருபரர் சகலகலாவல்லி மாலை

வெண்தாமரைக்கன்றி நின்பதம்தாங்க என்வெள்ளை உள்ளத்
தண்தாமரைக்குத் தகாதுகொலோ சகம்ஏழும் அளித்து
உண்டான் உறங்க ஒழித்தான் பித்தாக உண்டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே. (1)

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய் பங்கயாசனத்தில்
கூடும் பசும்பொற்கொடியே கனதனக் குன்றும்ஐம்பால்
காடும் சுமக்கும் கரும்பே சகல கலாவல்லியே. (2)

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமுதார்ந்துன் அருட்கடலில்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ உளம்கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவல் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே சகல கலாவல்லியே. (3)

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய் வடநூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச்செல்வமும் தொண்டர் செந்நாவினின்று
காக்கும் கருணைக் கடலே சகல கலாவல்லியே. (4)

பஞ்சப்பிதந்தரு செய்யபொற்பாத பங்கேருகம்என்
நெஞ்சத் தடத்து அலராததென்னே நெடுந்தாட்கமலத்து
அஞ்சத் துவசம் உயர்த்தோன் செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசு ஒத்து இருந்தாய் சகல கலாவல்லியே. (5)

பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுது எளிதெய்த நல்காய் எழுதாமறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும் வெங்காலும் அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய் சகல கலாவல்லியே. (6)

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும்படி நின்கடைக்கண் நல்காய் உளங்கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பால் அமுதம் தெளிக்கும்வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே சகல கலாவல்லியே.

சொல்விற்பனமும் அவதானமும் கவிசொல்லவல்ல
நல்வித்தையும் தந்து அடிமைகொள்வாய் நளினாசனஞ்சேர்
செல்விக்கு அரிதென்று ஒருகாலமும் சிதையாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கும் உயிராம் மெய்ஞ்ஞானத்தின் தோற்ற மென்ன

நிற்கின்ற நின்னை நினைப்பவர்யார் நிலந்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு அரசன்னம் நாண நடை
கற்கும் பதாம்புயத்தாயே சகல கலாவல்லியே.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Paridu Sri V. Hariharan Collection, Sholinganallur, Chennai

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும்என்
பண்கண்டளவில் பணியச் செய்வாய் படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி உண்டேனும் விளம்பில்உன்போல்
ஒண்கண்ட தெய்வம் உளதோ சகல கலாவல்லியே. (10)

செந்திலாண்டவன் துணை

---

3. க்ஷேமமா ?

பக்த கோடிகளே ! நாம் யாவரும் நல்ல உடலும் மனத்திடமும் பெற்று நீண்ட நாள் க்ஷேமமாக வாழவேண்டும். நாம் அப்படித்தானே விரும்புவோம் ! நோயற்ற, வேறு வகைகளிலும் தொல்லையற்ற, வாழ்வுதானே குறைவற்ற செல்வம் ! ஆகையால் கவலை இன்றி க்ஷேமமாக வாழ ஆண்டவன் அருள் அவசியம் வேண்டும். அவனன்றி யார் நமக்குப் பெரிய லாபத்தைக் கொடுக்கமுடியும் ? ஆகையால் க்ஷேமத்தைக் கொடுக்கவேண்டும் என்று பகவானை முழுமனத்துடன் தினமும் பிரார்த்தனை செய்ய வேண்டும். அதன் பலன் மகத்தானது. அதையும் இப்போதே செய்யவேண்டும். ஏனெனில், நாம் பசி வந்தபிறகு ஆகாரம் சமைக்கத் தொடங்கமாட்டோம். முன்னமேயே 'பசி வந்துவிடுமே' என்ற கவலையுடன் தயார் செய்து வைத்துக்கொண்டு பசி வேளைக்கு உண்போம். அதுபோலவே க்ஷேமமாயும் சுகமாயும் இருக்கும்போதே பரமகாருண்யமூர்த்தியான பரமன் அடிதாழ்ந்து தாழ்ந்து மனங்கசிந்து துதிக்கவேண்டும். முடையில்லாத காலங்களில் சிறுகச்சிறுகப் பணத்தைப் பாங்கியில் சேர்த்துவைப்பது போல் பரந்தாமன் திருநாமங்களை அடிக்கடிச் சொல்லிச் சொல்லி அதனால் உண்டாகும் புண்ணியத்தைச் சேர்த்துவைக்கவேண்டும். அதுதான் சோர்விடத்தில் துணையாகும்; எய்ப்பிடத்தில் வைப்பாகும். ஆண்டவனை எவ்வாறு போற்றித் துதிப்பது ? அவனருள் பெற்ற அடியார்களுக்குத்தான் அது சுலபம். ஆனால் அறியாத பாமரரும் அத்தகைய பலனை அடைவதற்காகவே ஆழ்வார்களும் சிவனடியார்களும் சிறந்த துதிப்பாடல்களை அருளியிருக்கின்றனர். சிந்திக்கத் தித்திக்கும் திகட்டாத அமிர்தமாகிய அத்தகைய துதிகளில் சிலவற்றைக் கீழே காண்க. ' இவற்றைத் தினமும் அநுஸந்திப்பவர்கள் க்ஷேமத்தை அடைவார்கள் என்பது நிச்சயம்.

ஆழ்வார்கள் திருவடிகளே சரணம்

நாலாயிர திவ்ய ப்ரபந்தம்

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்

பெரியாழ்வார் திருமொழி [4-10-1]

துப்புடையாரை அடைவதெல்லாம்
  சோர்விடத் துத்துணை யாவரென்றே
ஒப்பிலே னாகிலும் நின்னடைந்தேன்
  ஆனைக்கு நீயருள் செய்தமையால்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

எய்ப்பென்னை வந்து நலியும்போ(து)
அங்கேதும் நானுன்னை நினைக்கமாட்டேன்
அப்போதைக் கிப்போதே சொல்லி வைத்தேன்
அரங்கத் தரவணைப் பள்ளியானே.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

பெரிய திருமொழி [1—3]

முற்றமூத்துக் கோல்துணையாமுன் னடிநோக் கிவளைந்து
இற்றகால்போல் தள்ளிமெள்ள விருந்தங் கிளையாமுன்
பெற்றதாய்போல் வந்தபேய்ச்சி பெருமுலை யூடுயிரை
வற்றவாங்கி யுண்டவாயான் வதரி வணங்குதுமே. (1)

முதுகுபற்றிக் கைத்தலத்தால் முன்னொரு கோலூன்றி
விதிர்விதிர்த்துக் கண்சுழன்று மேற்கிளை கொண்டிருமி
இதுவென்னப்பர் மூத்தவாறென் றிளையவ ரேசாமுன்
மதுவுண்வண்டு பண்கள்பாடும் வதரி வணங்குதுமே. (2)

உறிகள்போல்மெய்ந் நரம்பெழுந்தூன் தளர்ந்து உள்ளமெள்கி
நெறியைநோக்கிக் கண்சுழன்று நின்று நடுங்காமுன்
அறிதியாகில் நெஞ்சமன்பாய் ஆயிரநா மஞ்சொல்லி
வெறிகொள்வண்டு பண்கள்பாடும் வதரி வணங்குதுமே. (3)

பீளைசோரக் கண்ணிடுங்கிப் பித்தெழ மூத்திருமி
தாள்கள்நோவத் தம்மில்முட்டித் தள்ளி நடவாமுன்
காளையாகிக் கன்றுமேய்த்துக் குன்றெடுத் தன்றுநின்றான்
வாளைபாயும் தண்டடஞ்சூழ் வதரி வணங்குதுமே. (4)

பண்டுகாம ரானவாறும் பாவையர் வாயமுதம்
உண்டவாறும் வாழ்ந்தவாறும் ஒக்க வுரைத்திருமி
தண்டுகாலா வூன்றியூன்றித் தள்ளி நடவாமுன்
வண்டுபாடும் தண்டுழாயான் வதரி வணங்குதுமே. (5)

எய்த்தசொல்லோ டீளையேங்கி யிருமியிளைத்துடலம்
பித்தர்போலச் சித்தம்வேறாய்ப் பேசி யயராமுன்
அத்தனெந்தை யாதிமூர்த்தி யாழ்கட லைக்கடைந்த
மைத்தசோதி யெம்பெருமான் வதரி வணங்குதுமே. (6)

பப்பஅப்பர் மூத்தவாறு பாழ்ப்பது சீத்திரளை
ஒப்பஐக்கள் போதவுந்த வுன் தமர் காண்மினென்று
செப்புநேர்மென் கொங்கை நல்லார் தாம்சிரி யாதமுன்னம்
வைப்புநங்கள் வாழ்வுமானான் வதரி வணங்குதுமே. (7)

ஈசிபோமின் ஈங்கிரேன்மின் இருமி இளைத்தீர்உள்ளம்
கூசியிட்டீ ரென்றுபேசும் குவளையங் கண்ணியர்பால்
நாசமான பாசம்விட்டு நன்னெறி நோக்கலுறில்
வாசம்மல்கு தண்டுழாயான் வதரி வணங்குதுமே. (8)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri Hariharan Collection, Sholinganallur, Chennai

புலன்கள்நைய மெய்யில்மூத்துப் போந்திருந் துள்ளமெள்கி
கலங்கஐக்கள் போதவுந்திக் கண்ட பிதற்றுமுன்
அலங்கலாய தண்டுழாய்கொண் டாயிர நாமஞ் சொல்லி
வலங்கொள்தொண்டர் பாடியாடும் வதரி வணங்குதுமே. (9)
வண்டுதண்டே னுண்டுவாழும் வதரி நெடுமாலை
கண்டல்வேலி மங்கைவேந்தன் கலிய னொலிமாலை
கொண்டுதொண்டர் பாடியாடக் கூடிடில் நீள்விசும்பில்
அண்டமல்லால் மற்றவர்க்கோர் ஆட்சி அறியோமே. (10)
திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமழிசைப்பிரான் திருவடிகளே சரணம்

திருச்சந்த விருத்தம் [101]

இரந்துரைப்ப துண்டுவாழி ஏமநீர்நி றத்தமா
வரந்தருந் திருக்குறிப்பில் வைத்ததாகிவ் மன்னுசீர்
பரந்தசிந்தை ஒன்றிநின்று நின்னபாத பங்கயம்
நிரந்தரம் நினைப்பதாக நீநினைக்க வேண்டுமே.
திருமழிசைப்பிரான் திருவடிகளே சரணம்

...ரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

தேசிக ப்ரபந்தம்

நவமணிமாலை

மையுமா கடலும் மயிலுமா மழையும்
மணிகளுங் குவளையுங் கொண்ட
மெய்யனே அடியார் மெய்யனே விண்ணோர்
ஈசனே நீசனே னடைந்தேன்
கையும்ஆ ழியுமாய்க் களிறுகாத் தவனே
காலனார் தமரெனைக் கவரா(து)
ஐயனே வந்தன் றஞ்சலென் றருள்தென்
அயிந்தமா நகரமர்ந் தானே. (7)
மஞ்சுலாவு சோலைசூழ யிந்தைமன்னு மன்னுசீர்
வரையெடுத்து நிரையளித்த மாசில்வாசு தேவனே
செஞ்சொலன்பர் சிந்தைகொண்டு தீதிலாத தூதனாய்த்
தேருமூர்ந்து தேசுயர்ந்த செல்வதெய்வ நாயக
வெஞ்சொலாளர் காலதூதர் வீசுபாசம் வந்தென்மேல்
விழுந்தழுந்தி யானயர்ந்து வீழ்வதற்கு முன்னம் நீ
அஞ்சல்அஞ்சல் அஞ்சலென்ற ளிக்கவேண்டும் அச்சுதா
அடியவர்க்கு மருளியக்கும் அடியவர்க்கு மெய்யனே. (8)
...சார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Muralidharan Collection, Sholinganallur, Chennai

திருச்சிற்றம்பலம்

மாணிக்கவாசகர் திருவாசகம்

உணர்ந்தமா முனிவ ரும்பரோ டொழிந்தார்
உணர்வுக்கும் தெரிவரும் பொருளே
இணங்கிலி யெல்லா உயிர்கட்கும் உயிரே
எனைப்பிறப் பறுக்குமெம் மருந்தே
திணிந்ததோர் இருளில் தெளிந்ததூ வெளியே
திருப்பெருந் துறையுறை சிவனே
குணங்கள் தாம் இல்லா இன்பமே உன்னைக்
குறுகினேற் கினியென்ன குறையே.

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

பட்டினத்தார் பாடல்

கிழவருமாய் நோய்மூப்புக் கீழ்ப்பட்டுக் காமத்து
உழவரும்போய் ஓயுமா கண்டோம்—மொழிதெரிய
வாயினால் இப்போதே மன்றில் நடமாடும்
நாயனார் என்றுரைப்போம் நாம்.

திருச்சிற்றம்பலம்

செந்திலாண்டவன் துணை

குமரகுருபரர் அருளிய முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்

வருகைப் பருவம்

உலகு குளிர எமது மதியில் ஒழுகும் அமுத கிரணமே
உருகும் அடியர் இதயம் நெகிழ உணர்வில் எழுநல் உதயமே
கலையும் நிறையும் அறிவும் முதிர முதிரும் மதுர நறவமே
கழுவு துகளர் முழுக நெடிய கருணை பெருகு சலதியே
அலகில் புவன முடியும் வெளியில் அளியும் ஒளியின் நிலயமே
அறிவுள் அறிவை அறியும் அவரும் அறிய அரிய பிரமமே
மலையின் மகள்கண் மணியை யனை ॥ மதலை வருக வருகவே.
வளமை தழுவு பருதி புரியின் மருவு குமரன் வருகவே.

இழுமென் அருவி சொரியும் இமய முதல்வி புதல்வன் வருகவே
இயலும் நடையும் வடிவும் அழகும் எழுத அரியன் வருகவே
ஒழுகு கருணை முழுகு கமல வதனன் வருக வருகவே
ஒருவன் இருவ ரொடுகை தொழுநல் உபய சரணன் வருகவே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Harihasan Collection, Sholinganallur, Chennai

விழுது விடுவெ ணிலவு பொழியும் நகையன் வருக வருகவே
விளரி பயிலும் அளியும் ஞிமிறும் விரவு குரவன் வருகவே
மழலை முதிர முதிரும் மதுர வசனன் வருக வருகவே
வளமை தழுவு பருதி புரியின் மருவு குமரன் வருகவே.

செந்திலாண்டவன் துணை

---

4. ஆபத்தா ? அஞ்சவேண்டா !

இயந்திர மயமாகிக்கொண்டிருக்கும் நவீன உலகில் ஆபத்துக்களும் விபத்துக்களும் ஸாதாரணமாகிவிட்டன. வெகு வேகமாக முன்னேறிக்கொண்டிருக்கும் விஞ்ஞானம் தந்த மிக நுண்ணிய, அதிசயமான கருவிகளாலும் வேறு எவற்றாலும் விபத்துக்களையோ ஆபத்தையோ தடுக்கமுடியவில்லை. ஜன நெருக்கடி மிக்க பெரு நகரங்களிலோ கேட்கவேண்டாம். எதிர்பாராத விபத்துக்களும் ஆபத்துக்களும் ஏற்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன. இப்படிப் பட்ட விபத்துக்களினின்றும் தப்ப ஒரே வழிதான் உண்டு. அது அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய், எங்கும் நிறைந்து நிற்கும் பரம்பொருளின் பாதகமலம் பணிந்து பாதகமலம் போற்றி அவனே கதி என்று சரணமடைதலேயாகும். 'ஆதிமூலமே' என் றலறிய யானைக்கு அருள்புரிய விரைந்தோடி வந்தான் பரமமூர்த்தி; வாகனத்தை எதிர்பார்க்கவும் இல்லை; தான் வரும் வேகமும்போதா வென்று சுதரிசனத்தை முன்னே செலுத்திக் களிற்றைக் காத்தான். ஆகவே தெய்வம் நமக்குத் துணையென்பதில் முழு நம்பிக்கை வைத்து ஆபத்துக் காலத்தில் அவனடியே சரணென்று சார்ந்தால் மலையத்தனை துன்பமும் தினையத்தனையாய் ஒழியும்.

> " சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்கு
> அபாயம் ஒரு நாளும் இல்லை."

என்ற ஔவையின் வாக்கு ஆண்டவன் வாக்கன்றோ! ஆகவே, பக்தர்களே! எத்தகைய இடுக்கண் வந்தாலும் மனங்கலங்க வேண்டா. எதற்கும் அஞ்சவேண்டா. ஆண்டவன் அருளில் ஆழ்ந்த நம்பிக்கை வைத்து அவனடியை மனத்தில் இருத்தி நெஞ் சங்கனிய "ஆண்டவனே! அபயம், பரம புருஷா! சரணம்" என் றெல்லாம் கதறி அடைக்கலம் புகுந்தால் அருவினையால் வந்த ஆபத்தெல்லாம் அழியும். ஆழ்வார்களும் சிவனடியார்களும் இவ்வாறு ஶரணாகதியடைவதே சுலபமான வழியென்று பலபடி யாக எடுத்துக் காட்டியுள்ளார்கள். அவர்கள், கல்லும் புல்லும் கேட்டு உருகப் பண்ணுடன் பாடிய பாசுரங்களை நாமும் பாடியும் நினைத்தும் தொழுதும் வந்தால் ஆபத்தெல்லாம் அகலும். அத் தகைய சில பாசுரங்கள் இதோ:

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆழ்வார்கள் திருவடிகளே சரணம்

நாலாயிர திவ்ய ப்ரபந்தம்

குலசேகராழ்வார் திருவடிகளே சரணம்

[திருவித்துவக்கோடு என்ற திவ்யதேசம் மலைநாட்டில் சோரனூர் - எர்ணுகுளம் கிளை ரயில் பாதையில் பட்டாம்பி என்ற ஸ்டேஷனிலிருந்து சுமார் ஒரு மைலில் உள்ளது. எம்பெருமான் திருநாமம் : உய்யவந்த பெருமாள், தாயார் வித்துவக்கோட்டு வல்லி. விமானம் : தத்வகாஞ்சன விமானம். தீர்த்தம் : சக்ர தீர்த்தம். எம்பெருமான் இங்கு அம்பரீஷனுக்கு ப்ரத்யக்ஷம். இப்பெருமானின் திருவடிகளை நினைந்து குலசேகர ஆழ்வார் அத்யத்புதமாக மங்களாசாஸனம் செய்துள்ளார்.]

பெருமாள் திருமொழி [5]

தருதுயரம் தடாயேல்உன் சரணல்லாற் சரணில்லை
விரைகுழுவு மலர்ப்பொழிற்சூழ் வித்துவக்கோட் டம்மானே
அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவள்தன்
அருள்நினைந்தே அழும்குழவி அதுவேபோன் றிருந்தேனே. (1)

கண்டார் இகழ்வனவே காதலன்றான் செய்திடினும்
கொண்டானை யல்லால் அறியாக் குலமகள்போல்
விண்டோய் மதிள்புடைசூழ் வித்துவக்கோட் டம்மாநீ
கொண்டாளாய் ஆகிலுமுன் குரைகழலே கூறுவனே. (2)

மீன்நோக்கும் நீள்வயல்சூழ் வித்துவக்கோட் டம்மாவென்
பால்நோக்கா யாகிலுமுன் பற்றல்லால் பற்றிலேன்
தான்நோக்கா தெத்துயரம் செய்திடினும் தார்வேந்தன்
கோல்நோக்கி வாழும் குடிபோன் றிருந்தேனே. (3)

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல்நோ யாளன்போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக்கோட் டம்மாநீ
ஆளா வுனதருளே பார்த்திருப்ப னடியேனே. (4)

வெங்கண் திண் களிறடர்த்தாய் வித்துவக்கோட் டம்மானே
எங்குப்போய் உய்கேன்உன் இணையடியே யடையலல்லால்
எங்கும்போய்க் கரைகாணா தெறிகடல்வாய மீண்டேயும்
வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன்றேனே. (5)

செந்தழலே தழலைச் செய்திடினும் செங்கமலம்
அந்தரஞ்சேர் வெங்கதிரோற் கல்லால் அலராவால்
வெந்துயர்வீடாவிடினும் வித்துக்கோட் டம்மாவுன்
அந்தமில்சீர்க் கல்லால் அகங்குழைய மாட்டேனே. (6)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Shri Harikesan Collection, Sholinganallur, Chennai

எத்தனையும் வான்மறந்த காலத்தும் பைங்கூழ்கள்
மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும் மற்றவைபோல்
மெய்த்துயர்வீட் டாவிடினும் வித்துவக்கோட் டம்மாவென்
சித்தமிக வுன்பாலே வைப்பன் அடியேனே. (7)

தொக்கிலங்கி யாறெல்லாம் பரந்தோடித் தொடுகடலே
புக்கன்றிப் புறம்நிற்க மாட்டாத மற்றவைபோல்
மிக்கிலங்கு முகில்நிறத்தாய் வித்துவக்கோட் டம்மாவுன்
புக்கிலங்கு சீரல்லால் புக்கிலன்காண் புண்ணியனே. (8)

நின்னையே தான்வேண்டி நீள்செல்வம் வேண்டாதான்
தன்னையே தான்வேண்டும் செல்வம்போல் மாயத்தால்
மின்னையே சேர்திகிரி வித்துவக்கோட் டம்மா
நின்னையே தான்வேண்டி நிற்பன் அடியேனே. (9)

வித்துவக்கோட் டம்மாநீ வேண்டாயே ஆயிடினும்
மற்றாரும் பற்றிலேன் என்றவனைத் தாள்நயந்த
கொற்றவேல் தானைக் குலசே கரன்சொன்ன
நற்றமிழ் பத்தும்வல்லார் நண்ணார் நரகமே. (10)

குலசேகராழ்வார் திருவடிகளே சரணம்

திருவேங்கடம்

[வேங்கடம் என்றால் பாபம் நீங்கிப் பரமனருள் கிடைக்கும் ஸ்தலம் என்று பொருள். இத்தலம் திருப்பதி, திருமலை என்ற பெயர்களாலும் வழங்கும். பெருமாள் திருவேங்கடமுடையான். ஸ்ரீநிவாஸப் பெருமான் கிழக்கு நின்ற திருக்கோலத்துடன் காட்சி தருகின்றார். இங்குக் கோனேரி முதலிய பல புண்ய தீர்த்தங்கள் உண்டு. இது மிகப் பிரபலமான பிரார்த்தனை ஸ்தலம் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?]

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

பெரிய திருமொழி [1-10]

கண்ணார் கடல்சூ ழிலங்கைக் கிறைவன்தன்
திண்ணாகம் பிளக்கச் சரஞ்செல வுய்த்தாய்
விண்ணோர் தொழும்வேங் கடமா மலைமேய
அண்ணா அடியே னிடரைக் களையாயே. (1)

இலங்கைப் பதிக்கன் றிறையாய அரக்கர்
குலங்கெட் டவர்மாளக் கொடிப்புள் திரித்தாய்
விலங்கல் குடுமித் திருவேங் கடம்மேய
அலங்கல் துளப முடியாய் அருளாயே. (2)

நீரார் கடலும் நிலனும் முழுதுண்டு
ஏரால மிளந்தளிர் மேல்துயி லெந்தாய்
சீரார் திருவேங் கடமா மலைமேய
ஆரா அமுதே அடியேற் கருளாயே. (3)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உண்டா யுறிமேல் நறுநெய் யமுதாகக்
கொண்டாய் குறளாய் நிலமீ ரடியாலே
விண்டோய் சிகரத் திருவேங் கடம்மேய
அண்டா அடியே னுக்கருள் புரியாயே. (4)

தூணா யனூய டரியாய் வந்துதோன்றி
பேணு அவுண னுடலம் பிளந்திட்டாய்
சேணுர் திருவேங் கடமா மலைமேய
கோணு கணையாய் குறிக்கொள் ளெனைநீயே. (5)

மன்னுஇம் மனிசப் பிறவியை நீக்கித்
தன்னுக்கித் தன்னின்னருள் செய்யும் தலைவன்
மின்னுர் முகில்சேர் திருவேங் கடம்மேய
என்னுனை யென்னப்ப னென்நெஞ்சி லுளானே. (6)

மானேய் மடநோக்கி திறத்தெதிர் வந்த
ஆனேய் விடைசெற்ற அணிவரைத் தோளா
தேனே திருவேங் கடமா மலைமேய
கோனே என்மனம் குடிகொண் டிருந்தாயே. (7)

சேய னணியனென் சிந்தையுள் நின்ற
மாயன் மணிவா ளொளிவெண் தரளங்கள்
வேய்விண் டுதிர்வேங் கடமா மலைமேய
ஆய னடியல் லதுமற் றறியேனே. (8)

வந்தா யென்மனம் புகுந்தாய் மன்னிநின்ருய்
நந்தாத கொழுஞ்சுடரே எங்கள் நம்பீ
சிந்தா மணியே திருவேங் கடம்மேய
எந்தாய் இனி யானுன்னை யென்றும் விட்டேனே. (9)

வில்லார் மலிவேங் கடமா மலைமேய
மல்லார் திரடோள் மணிவண்ண னம்மானை
கல்லார் திரடோள் கலியன் சொன்னமாலை
வல்லாரவர் வானவ ராகுவர் தாமே. (10)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

திருவெள்ளக்குளம்

[தஞ்சை ஜில்லாவிலுள்ள சீகாழிக்கு அருகில் 4 மைல் தூர-
தில் திரு வெள்ளக்குளம் என்ற திவ்ய தேசம் உள்ளது; அண்ண-
ங்காயில் என்று ப்ரஸித்தி பெற்றது; மிகவும் புனிதமான தி-
தேசம். ஸ்ரீமந் நாராயணன் கிழக்கு நின்ற திருக்கோலத்து-
காட்சியளிக்கின்ருர். தாயார் பெயர் பூவார் திருமாம-
நாச்சியார். இந்த திவ்ய தேசத்தில் செலுத்தப்படும் ப்ரார்-
தனைகள் திருப்பதியில் செலுத்துவதற்கு ஸமம் என்பது ப்ரஸித்-
எனவே, திருப்பதி ப்ரார்த்தனைகளை இங்குச் செய்விக்கலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பக்தர்கள் இந்த எம்பெருமானை "ஸ்ரீநிவாஸன்" என்றும், தாயாரை "அலர்மேல் மங்கை" என்றும், இவரை திருப்பதிப் பெருமாளுக்கு "அண்ணா" என்றும் போற்றுகிறார்கள்.]

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

பெரிய திருமொழி [4-7]

கண்ணார் கடல்போல் திருமேனி கரியாய்
நண்ணார்முனை வென்றிகொள் வார்மன்னு நாங்கூர்
திண்ணார் மதிள்சூழ்திரு வெள்ளக் குளத்துள்
அண்ணா அடியே னிடரைக் களையாயே. (1)

கொந்தார் துளவமலர் கொண்டணி வானே
நந்தாத பெரும்புகழ் வேதியர் நாங்கூர்
செந்தாமரை நீர்த்திரு வெள்ளக் குளத்துள்
எந்தாய் அடியே னிடரைக் களையாயே. (2)

குன்றால் குளிர்மாரி தடுத்துகந் தானே
நன்றாய பெரும்புகழ் வேதியர் நாங்கூர்
சென்றார் வணங்கும் திருவெள்ளக் குளத்துள்
நின்றாய் நெடியா யடியே னிடர்நீக்கே. (3)

கானார் கரிகொம்ப தொசித்த களிறே
நானாவகை நல்லவர் மன்னிய நாங்கூர்
தேனார் பொழில்சூழ் திருவெள்ளக் குளத்து
ளானாய்அடி யேனுக் கருள்புரி யாயே. (4)

வேடார்திரு வேங்கடம் மேய விளக்கே
நாடார் புகழ்வேதியர் மன்னிய நாங்கூர்
சேடார் பொழில்சூழ் திருவெள்ளக் குளத்தாய்
பாடா வருவேன் வினையாயின பாற்றே. (5)

கல்லால் கடலை யணைகட்டி யுகந்தாய்
நல்லார்பலர் வேதியர் மன்னிய நாங்கூர்ச்
செல்வா திருவெள்ளக் குளத்துறை வானே
எல்லா விடரும் கெடுமா றருளாயே. (6)

கோலால் நிரைமேய்த்த எங்கோ வலர்கோவே
நாலாகிய வேதியர் மன்னிய நாங்கூர்
சேலார் வயல்சூழ் திருவெள்ளக் குளத்துள்
மாலேஎன வல்வினை தீர்த்தருளாயே. (7)

வாராகம தாகியும் மண்ணை யிடந்தாய்
நாராயண னேநல்ல வேதியர் நாங்கூர்
சீரார் பொழில்சூழ் திருவெள்ளக் குளத்துள்
ஆரா வமுதே அடியேற் கருளாயே. (8)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பூவார்திரு மாமகள் பல்கிய மார்பா
நாவார்புகழ் வேதியர் மன்னிய நாங்கூர்த்
தேவா திருவெள்ளக் குளத்துறை வானே
ஆவா அடியானிவ னென்றரு ளாயே. (9)

நல்லன்புடை வேதியர் மன்னிய நாங்கூர்ச்
செல்வன் திருவெள்ளக் குளத்துறை வானை
கல்லின்மலி தோள்கலியன் சொன்ன மாலை
வல்லரென வல்லவர் வானவர் தாமே. (10)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

தேசிக ப்ரபந்தம்

அடைக்கலப்பத்து

பத்திமுதலாமவற்றில் பதியெனக்குக்கூடாமல்
எத்திசையும்உழன்றோடி இளைத்துவிழுங்காகம்போல்
முத்திதருநகரேழில் முக்கியமாங்கச்சிதனில்
அத்திகிரிஅருளாளர்க்கு அடைக்கலம்நான்புகுந்தேனே. (1)

உமதடிகள்அடைகின்றேன் என்றொருகால் உரைத்தவரை
அமையுமினிஎன்பவர்போல் அஞ்சலெனக்கரம்வைத்துத்
தமதனைத்தும்அவர்தமக்கு வழங்கியும்தாம்மிகவிளங்கும்
அமைவுடையஅருளாளர் அடியிணையைஅடைந்தேனே. (7)

அமிருதரஞ்சனி

திருமாலடியிணைசேர்ந்து திகழ்ந்தஅடிமைபெறத்
திருநாரணன்சரண் திண்சரணுகத்துணிந்தடைவோர்
ஒருநாளுரைக்க உயிர்தருமந்திரமோதியநாம்
வருநாள்பழுதற்று வாழும்வகையதில்மன்னுவமே. (35)

அமிருதாசுவாதினி

நின்னருளாங்கதியன்றிமற்றொன்றில்லேன்
நெடுங்காலம்பிழைசெய்தநிலைகழிந்தேன்
உன்னருளுக்கினிதானநிலையுகந்தேன்
உன்சரணேசரணென்னுந்துணிவுபூண்டேன்
மன்னிருளாய்நின்றநிலைஎனக்குத்தீர்த்து
வானவர்தம்வாழ்ச்சிதரவரித்தேனுன்னை
இன்னருளால் இனியெனக்கோர்பரமேற்றாமல்
என்திருமால்அடைக்கலங்கொள்என்னையே (31)

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri / Hariharan Collection, Sholinganallur, Chennai

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசர் தேவாரம்

ஆடல் புரிந்த நிலையும் அரையில் அசைத்த அரவும்
பாடல் பயின்றபல் பூதம் பல்லா யிரங்கொள் கருவி
நாடற் கரியா தார் கூத்தும் நன்குயர் வீரட்டஞ் சூழ்ந்து
ஓடும் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்றுமில்லை அஞ்ச வருவதுமில்லை.

சோற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சி வாயவே.

இடுக்கண்பட் டிருக்கினும் இரந்தி யாரையும்
விடுக்கிற்பிரானென்று வினவுவோ மல்லோம்
அடுக்கற்கீழ் கிடக்கினும் அருளின் நாமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே.

உடல்தனைக் கழிக்க லுற்ற உலகத்துள் உயிர்கட்கெல்லாம்
இடர்தனைக் கழிக்க வேண்டில் இறைவனை யேத்து மின்னே
கடல்தனில் நஞ்ச முண்டு காண்பரி தாகி நின்ற
சுடர்தனைத்துருத்தி யானைத் தொண்டனேன் கண்டவாறே.

நிறைபுன லணிந்த சென்னி நீணிலா அரவஞ் சூடி
மறையொலி பாடல் மயானத்து மகிழ்ந்த மைந்தன்
கறைம கடல்சூழ் நாகைக் கரோணம் கோயில் கொண்ட
இறைவனை நாளும் ஏத்த இடும்பைபோய் இன்ப மாமே.

மண்பா தலம்புக்கு மால்கடல் மூடிமற்றேழுலகும்
விண்பால் திசைகெட் டிருசுடர் வீழினும் அஞ்சல்நெஞ்சே
திண்பால் நமக்கொன்று கண்டோம் திருப்பா திரிப்புலியூர்க்
கண்பர்வு நெற்றிக் கடவுட் சுடரான் கழலிணையே.

வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலைநஞ்சுண்
டுனமொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே.

திருச்சிற்றம்பலம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Shotinganallur, Chennai

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தர் தேவாரம்

கோளறுபதிகம்

ஸ்ரீ ஜகத்குரு ஆசார்யாள் வாக்கு

[1962 ஷு பிப்ரவரி மீ 5உ எட்டுக் கிரஹங்கள் ஒரே ராசியில் கூடின. அப்போது பிரளயமே ஏற்பட்டு உலகம் அழிந்துவிடும் என்று யாவரும் நடுங்கினர். அவ்வமயம் நடமாடும் தெய்வமாக விளங்குகின்ற ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீமத் சங்கர பகவத்பாத ப்ரதிஷ்டித ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீமத் சந்த்ரசேகரேந்திர சரஸ்வதி ஸ்ரீ பாதர்கள் "அஞ்சேல் அஞ்சேல்" என்று அபயம் தந்தார்கள். "மங்கை பாகனை மனத்துள் வைத்துச் சைவ நாயன்மாரில் முதல்வரான திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் திருவாய்மலர்ந்தருளிய கோளறு பதிகத்தைப் பாராயணம் செய்யுங்கள். எந்தக் கிரஹமும் ஒரு துன்பமும் செய்யாது; எட்டுக்கிரஹங்கள் அல்ல; இதுபோன்ற எண்ணாயிரம் கிரஹங்கள் ஒன்றுசேர்ந்தாலும் அவை நல்லவாய் நல்லனவே செய்யும். ஒருவருக்கும் ஒரு துன்பமும் உண்டாகாது." என்று திருவாய்மலர்ந்தருளினர்கள். ஆகவே, இப்பதிகத்தைப் பாராயணம் செய்வதால் உண்டாகும் பெரும்பயனை எடுத்துக் கூறவும் வேண்டுமோ?]

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனல்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழம் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (1)

என்பொடு கொம்பொடாமை இவ் வமார் பிலங்க
எருதேறி யேழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனல்
ஒன்பதொ டொன்றொடேழு பதினெட்டொ டாறும்
உடனய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (2)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Hariharan Collection, Sholinganallur, Chennai

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெதி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (3)

மதிநுதல் மங்கையோடு வடவா லிருந்து
மறையோது மெங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலன் அங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (4)

நஞ்சணி கண்டனெந்தை மடவாள் தனோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியும் மின்னும்
மிகையான பூதமவையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (5)

வாள்வரி அதளதாடை வரிகோ வணத்தர்
மடவாள் தனோடும் உடனாய்
நாள்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (6)

செப்பிள முலைநன்மங்கை ஒருபாக மாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியும்அப்பும் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாத மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (7)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Harihara Collection, Sholinganallur, Chennai

வேள்பட விழிசெய்தன்று விடைமே லிருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாள்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த வதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன் றனோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (8)

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனுமாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (9)

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியும்நாக முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரொ டமணைவாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (10)

தேனமர் பொழில்கொள்ஆலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொன் எங்கும் திகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும்நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே. (11)

திருச்சிற்றம்பலம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri Vaidyanathan Collection, Sholinganallur, Chennai

திருச்சிற்றம்பலம்

மாணிக்கவாசகர் திருவாசகம்

அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்
குன்றே யனையாய் என்னையாட் கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோ ரிடையூ றெனக்குண்டோ எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே.

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

பட்டினத்தார் பாடல்கள்

கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும்நின் அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி ஏகம்பனே.

என்செய லாவதி யாதொன்றும் இல்லை இனித்தெய்வமே
உன்செய லேஎன்று உணரப்பெற் றேன்இந்த ஊன்எடுத்த
பின்செய்த தீவினை யாதொன்றும் இல்லை பிறப்பதற்கு
முன்செய்த தீவினை யோஇங்ங னேவந்து மூண்டதுவே.

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

தாயுமானவர் பாடல்கள்

அரும்பொனே மணியேஎன் அன்பேஎன் அன்பான
  அறிவேஎன் அறிவிலூறும்
ஆனந்த வெள்ளமே என்றென்று பாடினேன்
  ஆடினேன் ஆடிநாடி
விரும்பியே கூவினேன் உலறினேன் அலறினேன்
  மெய்சிலிர்த் திருகைகூப்பி
விண்மாரி எனஎனிரு கண்மாரி பெய்யவே
  வேசற் றயர்ந்தேனியான்
இரும்புநேர் நெஞ்சகக் கள்வனு னுலுமுனை
  இடைவிட்டு நின்றதுண்டோ?
என்றுநீ அன்றுநான் உன்னடிமை அல்லவோ?
  யாதேனும் அறியாவெறும்
துரும்பனே என்னினும் கைவிடுதல் நீதியோ?
  தொண்டரொடு கூட்டுகண்டாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
  சோதியே சுகவாரியே.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தந்தை தாயும்நீ என்னுயிர்த் துணையும்நீ சஞ்சல மதுதீர்க்க
வந்த தேசிக வடிவுநீ உனையலால் மற்றொரு துணைகாணேன்
அந்த மாதியும் அளப்பெருஞ் சோதியே ஆதியே அடியார்தம்
சிந்தை மேவிய தாயுமா னவனெனும் சிரகிரிப் பெருமானே.

தாயினும் இனிய நின்னைச் சரணென அடைந்த நாயேன்
பேயினும் கடைய னாகிப் பிதற்றுதல் செய்தல் நன்றோ?
தீயிடை மெழுகாய் நொந்தேன் தெளிவிலேன் வீணே காலம்
போயின தாற்று கில்லேன் பூரணா னந்த வாழ்வே.

ஓயாதோ என்கவலை உள்ளேயா னந்தவெள்ளம்
பாயாதோ ஐயா பகராய் பராபரமே.

எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியெண்ணி ஏழைநெஞ்சம்
புண்ணாகச் செய்ததினிப் போதும் பராபரமே.

எத்தால் பிழைப்பேனோ எந்தையே நின்னருட்கே
பித்தானேன் மெத்தவும்நான் பேதை பராபரமே.

நின்னைச் சரண்புகுந்தால் நீகாத்தல் வேண்டுமல்லால்
என்னைப் புறம்விடுதல் என்னே பராபரமே.

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

இராமலிங்க சுவாமிகள் திருவருட்பா

முன்னவனே யானை முகத்தவனே முத்திநலம்
சொன்னவனே தூமெய்ச் சுகத்தவனே மன்னவனே
சிற்பரனே ஐங்கரனே செஞ்சடைய சேகரனேர்
தற்பரனே நின்னருள் சரண்.

பொன்னின் றொளிரும் புரிசடையோய் நின்னையன்றிப்
பின்னொன் றறியேன் பிழைநோக்கி—என்னை
அடித்தாலும் நீயே அணைத்தாலும் நீயே
பிடித்தேன்உன் பொற்பாத பேறு.

பற்றும் செழுந்தமிழால் பாடுகின்றோர் செய்தபெருங்
குற்றம் குணமாகக் கொள்ளும் குணக்கடலே
மற்றங்கும் எண்தோள் மலையே மரகதமே
பெற்றிங் கடியேன் பிணிகெடுத்தால் ஆகாதோ?

போற்றேன் எனினும் பொறுத்திடல் வேண்டும் புவிநடையாம்
சேற்றே விழுந்து தியங்குகின் றேனைச் சிறிதும்இனி
ஆற்றே னெனதர சேயமு தேயென் அருட்செல்வமே
மேற்றேன் பெருகு பொழில்தணி காசல வேலவனே.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பார்க்கின் றிலேயே பன்னிருகண் படைத்தும் எளியேன் பாடனைத்தும்
தீர்க்கின் றிலேயே என்னேயான் செய்வேன் சிறியேன் சிமானே
போர்க்குன் றொடுசூர்ப் புயக்குன்றும் பொடிசெய் வேல்கைப் புண்ணியனே
சீர்க்குன் றெனும்நல் வளத்தணிகைத் தேவே மயிலூர் சேவகனே.

திருச்சிற்றம்பலம்

வேலும் மயிலும் துணை

அருணகிரிநாதர் கந்தரலங்காரம்

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நலியவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயும்கும ரேசிரு
நாளும் சிலம்பும சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடமபும் எனக்குமுன னேவந்து தோன்றிடினே.

வேலும் மயிலும் துணை

வேலும் மயிலும் துணை

அருணகிரிநாதர் அருளிச் செய்த திருப்புகழ்

குன்றுதோருடல்

அதிருங் கழல்ப ணிந்துன் அடியேனுன்
அபயப் புகுவ தென்று நிலைகாண
இதயம் தனிலிருந்து க்ருபையாகி
இடர்சங் கைகள் கலங்க அருள்வாயே
எதிரிங் கொருவ ரின்றி நடமாடும்
இறைவன் தனது பங்கில் உமைபாலா
பதியெங் கிலுமிருந்து விளையாடிப்
பலகுன் றிலுமமர்ந்த பெருமாளே.

வேலும் மயிலும் துணை

---

5. மானம் காக்க

பெரும் புகழும் எல்லையிலாச் செல்வமும் வருமாயினும் அவற்றை அடைய மேற்கொள்ளும் வழி நேர்மையும் நீதியும் கொண்டதாய் இருக்கவேண்டும். நேர்மையைக் கடைப்பிடிக்காமல் இருப்பவன் பெருமையை இழக்கிறான். அந்நிலையிலிருந்து இழிந்தவன் மானம் இழந்தவன் ஆவான். மானம் பெரிதோ? உயிர் பெரிதோ? யாவரும் மானமே பெரிது என்பர். கவரிமான் என்றொரு மான் உண்டு. அது தன் உடம்பிலிருந்து ஒரு மயிர் நீக்கப்படு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மாயினும் உயிர் விட்டுவிடுமாம். அதுபோலச் சிறந்தோர்கள் தம் மானம் அழியும் நிலைவரின் உயிரைவிட்டு மானத்தைக் காத்துக் கொள்வார்கள். பலர் முன்னிலையில் திரௌபதியின் ஆடையைக் களையத் தொடங்கிய துச்சாதனன் தலை கவிழுமாறு திரௌபதி தன் உணர்ச்சிகள் யாவற்றையும் ஒருமுகமாக்கிக் கண்ணனைக் கருத்தில் இருத்தி, "கோவிந்தா! கோவிந்தா!" என்று கதறினாள். வண்ண வண்ணத் துணிகள் களையக்களைய மேலும் மேலும் வளர்ந்து வந்து கொண்டே இருந்தன. அவள் செய்த உபாயம் தான் என்ன? வேறென்னவாக இருக்கும்? திருமாலடியே சரண் எனக் கதறினாள். இதனை வில்லிபுத்தூராழ்வார் வாக்கால் காண்போம்.

"ஆறாகி இருதடங்கண் அஞ்சனவெம்
புனல்சோர அளகம் சோர
வேறான துகில்தகைந்த கைசோர
மெய்சோர வேறோர் சொல்லும்
கூறாமல் கோவிந்தா கோவிந்தா
என்றரற்றிக் குளிர்ந்து நாவில்
ஊறாத அமிழ்தூற உடல்புளகித்து
உள்ளமெலாம் உருகினாளே."

ஆகவே, பக்தசிகாமணிகளே!

தன் நிலை குறைந்து பெருமை அழியும் என்ற அச்சமா? அல்லது சொன்ன சொல்லைக் காப்பாற்ற முடியாமல் மானம் போகும் நிலையா? எதற்கும் அஞ்சவேண்டா!

"கோவிந்தா! கோவிந்தா!" என்று கதறுங்கள்;
"அச்சுதா! அச்சுதா!" என்று அலறுங்கள்;

அச்சம் அழியும்; மானம் நிலைக்கும் ஆனந்தம் பெருகும்; கண்ணன் கைவிடான்; கருணை பொழிவான்; திண்ணம் திண்ணம்.

கண்ணன் கழலிணையே கதி

---

6. வளமெலாம் நிறைந்து வாழ விருப்பமா?

வளமான வாழ்க்கை வாழ வழி வேண்டுமா? ஆண்டவன் அருளில் அசையாத நம்பிக்கையுடன் அனவரதமும் துதிப்பதே அதற்கு வழி. அவனருள் இருந்தால் எத்தகைய கடினமான காரியமும் எளிதில் முடியும்; ஊமை வாசாலம் உடையவன் ஆவான்; நொண்டியோ மலையையும் தாண்டுவான்.

"மூகம் கரோதி வாசாலம் பங்கும் லங்கயதே கிரிம்।
யத் க்ருபா தமஹம் வந்தே பரமானந்த மாதவம்" ॥

ஆகையால், கேவலம் தரித்திரத்தைக் களைந்து வளமான வாழ்க்கை வழியை அருளுவது அவனுக்குக் கஷ்டமோ? ஒரு நாளும் இல்லை. ஆனால் வளமிக்கு வாழ்பவர்கள் சிலரே. தரித்திரத்தால் பிணிப்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

புண்டு தடுமாறி 'ஏன் பிறந்தோம்' என்று மனம் நொந்து நடைப் பிணமாய் வாழ்பவரே பலர். இதற்கு காரணம் வேறொன்றுமில்லை. தவம் செய்பவர் சிலரே; செய்யாதவர் பலர். இக்கலிகாலத்திலோ ஆண்டவன் அருநாமத்தை அகமகிழ்ந்து ஒரு முறை சொல்லுதலே பெருந்தவம் செய்த பலனைத் தரும்.

அது செய்தால் போதுமே! பழவினையால் வந்த கொடுமையெலாம் தீர்ந்து பாரில் வாக்குச் சாதுரியமும் மனமகிழ்ச்சியும் செல்வப்பெருக்கும் அரோக திடகாத்திரமும் மற்றும் வேண்டுவன யாவும் பெற்று வல்லாங்கு வாழலாமே.

"வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது — பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு."

என்று ஔவையார் அருளியிருப்பது சிந்திக்கத்தக்கது. ஆகையால், சுத்த நிர்க்குணமான பரதெய்வத்தை, பேராயிரம் படைத்த பெருமானை, பரம்பொருளை எவ்வாறு பெயரிட்டுப் பாடி ஆடித் துதிக்க வேண்டும் என்பதை அறவாழி அந்தணன் தாள் சேர்ந்த ஆழ்வார்களும் தனக்குவமை இல்லாத தனித்தலைவன் தாள்சேர்ந்த சிவனடியார்களும் செய்துகாட்டியிருக்கிறார்கள். அவைகளைத் தினமும் பாராயணம் செய்துவந்தால் அவையே நன்மையும் செல்வமும் நாளும் நல்கித் தீமையும் பாவமும் போக்கித் துன்பம் துடைத்து இன்பம் பெருக்கிப் பெருவாழ்வளிக்கும். அவைகளில் சில பொறுக்கு மணிகள் :

ஆழ்வார்கள் திருவடிகளே சரணம்

நாலாயிர திவ்ய ப்ரபந்தம்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

பெரிய திருமொழி [1-1-9]

குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார்
  படுதுய ராயின எல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும்பு அருளும்
  அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும் பெற்ற
  தாயினும் ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்
  நாராய ணாவென்னும் நாமம். (1)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்

திருவாய்மொழி [3-10]

சன்மம் பலபல செய்து வெளிப்பட்டுச்
சங்கொடு சக்கரம்வில்
ஒண்மை யுடைய உலக்கை ஒள்வாள்
தண்டுகொண்டு புள்ளூர்ந்து உலகில்
வன்மை யுடைய அரக்க ரசுரரை
மாளப் படைபொருத
நன்மை யுடையவன் சீர்பர வப்பெற்ற
நானோர் குறைவிலனே. (1)

குறைவில் தடங்கடல் கோளர வேறித்தன்
கோலச் செந்தா மரைக்கண்
உறைவன் போலவோர் யோகு புணர்ந்த
ஒளிமணி வண்ணன் கண்ணன்
கறையணி மூக்குடைப் புள்ளைக் கடாவி
அசுரரைக் காய்ந்த அம்மான்
நிறைபுக ழேத்தியும் பாடியும் ஆடியும்
யானொரு முட்டிலனே. (2)

முட்டில் பல்போகத் தொருதனி நாயகன்
மூவுல குக்குரிய
கட்டியைத் தேனை யமுதை நன்பாலைக்
கனியைக் கரும்புதன்னை
மட்டவிழ்தண்ணந் துழாய்முடி யானை
வணங்கி அவன்திறத்துப்
பட்டபின்னை இறையாகிலும் யானென்
மனத்துப் பரிவிலனே. (3)

பரிவின்றி வாணனைக் காத்துமென் றன்று
படையொடும் வந்தெதிர்ந்த
திரிபுரம் செற்றவ னும்மகனும் பின்னும்
அங்கியும் போர்தொலையப்
பொருசிறைப் புள்ளைக் கடாவிய மாயனை
ஆயனைப் பொற்சக்கரத்
தரியினை அச்சுதனைப் பற்றி யானிறை
யேனும் இடரிலனே. (4)

இடரின்றி யேயொரு நாளொரு போழ்தில்
எல்லாவுல குங்கழிய
படர்புகழ்ப் பார்த்தனும் வைதிகனு முடனேறத்
திண்டேர் கடவி

CC-0 In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V.Hariharan Collection, Sholinganallur, Chennai

சுடரொளி யாய்நின்ற தன்னுடைச் சோதியில்
வைதிகன் பிள்ளைகளை
உடலொடுங் கொண்டு கொடுத்தவனைப்பற்றி
ஒன்றுந் துயரிலனே. (5)

துயரில் சுடரொளி தன்னுடைச் சோதி
நின்ற வண்ணம் நிற்கவே
துயரில் மலியும் மனிசர் பிறவியில்
தோன்றிக்கண் காணவந்து
துயரங்கள் செய்து தன்தெய்வ நிலையுலகில்
புகவுய்க்கும் அம்மான்
துயரமில் சீர்க்கண்ணன் மாயன் புகழ்துற்ற
யானோர் துன்பமிலனே. (6)

துன்பமும் இன்பமும் ஆகிய செய்வினை
யாயுல கங்களுமாய்
இன்பமில் வெந்நர காகி இனிய
நல்வான் சுவர்க்கங் களுமாய்
மன்பல் லுயிர்களு மாகிப் பலபல
மாய மயக்குகளால்
இன்புறு மிவ்விளை யாட்டுடை யானைப்
பெற்றேதும் அல்லலிலனே. (7)

அல்லலில் இன்பம் அளவிறந் தெங்கும்
அழகமர் சூழொளியன்
அல்லி மலர்மகள் போக மயக்குக்க
ளாகியும் நிற்குமம்மான்
எல்லையில் ஞானத்தன் ஞானமஃ தேகொண்டு
எல்லாக் கருமங் களும்செய்
எல்லையில் மாயனைக் கண்ணனைத் தாள்பற்றி
யானோர் துக்கமிலனே. (8)

துக்கமில் ஞானச் சுடரொளி மூர்த்தி
துழாயலங் கற்பெருமான்
மிக்கபன் மாயங்களால் விகிர்தம் செய்து
வேண்டுமுருவுகொண்டு
நக்க பிரானோ[illegible]யன்முத லாக
எல்லாரு[illegible]மவையும் தன்னுள்
ஒக்க வொடுங்க விழுங்கவல் லானைப்பெற்
றொன்றும் தளர்விலனே. (9)

தளர்வின்றி யேயென்றும் எங்கும் பரந்த
தனிமுதல் ஞானமொன்றாய்
அளவுடை யைம்புலன்கள் அறியா வகையால்
அருவாகி நிற்கும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வளரொளி யீசனை மூர்த்தியைப் பூதங்கள்
ஐந்தை இருசுடரை
கிளரொளி மாயனைக் கண்ணனைத் தாள்பற்றி
யானென்றும் கேடிலனே. (10)

கேடில் விழுப்புகழ்க் கேசவனைக் குருகூர்ச்
சடகோபன் சொன்ன
பாடலோர் ஆயிரத்துள் இவையும் ஒருபத்தும்
பயிற்றவல் லார்கட்கு, அவன்
நாடும் நகரமும் நன்குடன் காண
நலனிடை ஊர்திபண்ணி
வீடும் பெறுத்தித்தன் மூவுல குக்கும்
தருமொரு நாயகமே. (11)

திருவாய்மொழி [4—5]

வீற்றிருந் தேழுல கும்தனிக் கோல்செல்ல வீவில்சீர்
ஆற்றல்மிக் காளு மம்மானை வெம்மா பிளந்தான்றன்னை
போற்றியென் றேகைக ளாரத் தொழுது சொல்மாலைகள் (1)
ஏற்றநோற் றேற்கினி என்ன குறை எழுமையுமே.

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசர் தேவாரம்

மலையினார் மகளோர் பாக மைந்தனார் மழுவொன் றேந்திச்
சிலையினால் மதில்கள் மூன்றும் தீயெழச் செற்ற செல்வர்
இலையினார் சூல மேந்தி ஏகம்பம் மேவி னாரைத்
தலையினால் வணங்க வல்லார் தலைவர்க்கும் தலைவர் தாமே.

மையினார் மலர்நெ டுங்கண் மங்கையோர் பங்கராகிக்
கையிலோர் கபால மேந்திக் கடைதொறும் பலிகொள் வார்
எய்வதோர் ஏனம் ஓட்டி ஏகம்பம் மேவி னாரைக்
கையினால் தொழவல் லார்க்குக் கடுவினை களைய லாமே.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

சங்குலாம் முன்கைத் தையலோர் பாகத்தன்
வெங்குலாமத வேழம் வெகுண்டவன்
கொங்குலாம் பொழில் கோடிகா வாவென
ஏங்கி லாததோர் இன்பம்வந் தெய்துமே.

திருச்சிற்றம்பலம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

திருச்சிற்றம்பலம்

சுந்தரர் தேவாரம்

பொன்னு மெய்ப்பொரு ளுந்தரு வானைப்
போக முந்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை யென்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மைய னென்றறி யொண்ணு
எம்மா னையெளி வந்தபி ரானை
அன்னம் வைகும் வயற்பழ னத்தணி
யாரு ரானை மறக்கலும் ஆமே.

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

பட்டினத்தார் பாடல்கள்

மானைக் கலந்த மணவாளன் காழி வரதன்செங்க
ணானைப் புரந்தவன் பத்தர்க்கு முத்தி அளித்தருளும்
ஏனைப் பெரும்பொருள் கல்விமெய்ச் செல்வம் இருந்தளிப்
தேனைத் தருஞ்செழுந் தாமரை நாமகள்செந்திருவே. [பார்

பொருளும் குலனும் புகழும் திறனும்
அருளும் அறிவும் அனைத்தும்— ஒருவர்
கருதாஎன் பார்க்கும் கரைமிடற்றாய் தொல்லை
மருதாஎன் பார்க்கு வரும்.

ஓடாமல் பாழுக்கு உழையாமல் ஓரம் உரைப்பவர்பால்
கூடாமல் நல்லவர் கூட்டம் விடாமல்வெங் கோபம் நெஞ்சில்
நாடாமல் நன்மை வழுவாமல் இன்றைக்கு நாளைக்கென்று
தேடாமல் செல்வம் தருவாய் சிதம்பர தேசிகனே.

பாராமல் ஏற்பவர்க்கு இல்லைஎன் ஞமல் பழுதுசொல்லி
வாராமல் பாவங்கள் வந்துஅணு காமல் மனமயர்ந்து
பேராமல் சேவை [illegible]யாமல் அன்பு பெருதவரைச்
சேராமல் செல்வம் [illegible]ருவாய் சிதம்பர தேசிகனே.

கொல்லாமல் கொன்றதைத் தின்ஞமல் குத்திரம் கோள்களவு
கல்லாமல் கைதவ ரோடிணங் காமல் கனவிலும்பொய்
சொல்லாமல் சொற்களைக் கேளாமல் தோகையர் மாயையிலே
செல்லாமல் செல்வம் தருவாய் சிதம்பர தேசிகனே.

திருச்சிற்றம்பலம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

திருச்சிற்றம்பலம்

தாயுமானவர் பாடல்கள்

இல்லை உண்டென் றெவர்பக்க மாயினும்
சொல்ல வோஅறி யாத தொழும்பன்யான்
செல்ல வேறொரு திக்கறி யேன்எலாம்
வல்ல நீயென்னை வாழ்விக்க வேண்டுமே.

எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
யல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.

திருச்சிற்றம்பலம்

செந்திலாண்டவன் துணை

குமரகுருபரர் அருளிய மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

வருகைப் பருவம்

தொடுக்கும் கடவுள் பழம்பாடல் தொடையின் பயனே நறைபழுத்
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ் சுவையே அகந்தைக் கிழங்கை [யகழ்ந்
எடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்கு ஏற்றும் விளக்கே வளர்சிம
இமயப் பொருப்பில் விளையாடும் இளமென் பிடியே எறிதரங்
உடுக்கும் புவனம் கடந்துநின்ற ஒருவன் திருவுள்ளத்தில் அழகு
ஒழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்கும் குழற்காடு ஏந்தும்இள வஞ்சிக் கொடியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு வாழ்வே வருக வருகவே.

பெருந்தேன் இறைக்கும் நறைக்கூந்தல் பிடியே வருக முழுஞா
பெருக்கே வருக பிறைமௌலிப் பெம்மான் முக்கட் சுடர்க்கிடு
விருந்தே வருக மும்முதற்கும் வித்தே வருக வித்தின்றி
விளைந்த பரமா னந்தத்தின் விளைவே வருக பழமறையின்
குருந்தே வருக அருள்பழுத்த கொம்பே வருக திருக்கடைக்கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளம் குடைவார் பிறவிப் பெ
மருந்தே வருக பசுங்குதலை மழலைக் கிளியே வருகவே [பிணிக்கோ
மலயத் துவசன் பெற்றபெரு வாழ்வே வருக வருகவே.

குமரகுருபரர் அருளிய சிதம்பரச் செய்யுட் கோவை

வாழி திருமன்றங் கண்ட மலர்கண்கள்
வாழி பெருமான் புகழ்கேட்ட வார்செவிகள்
வாழி அவனை வணங்கு முடிச்சென்னி
வாழி அவன்சீர் பாடும் வாய்.

செந்திலாண்டவன் துணை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Chennai

7. மணமாக வேண்டுமா? மணமாகி மணமாக வாழ விருப்பமா?

ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செய்த

வாரணமாயிரம்

"வாரணமாயிரம்" என்று தொடங்கும் இப்பகுதி ஆண்டாளுடைய அருளிச் செயலாகிய நாச்சியார் திருமொழியில் ஆறுவதாக அமைந்துள்ளது. திருமணக் காலத்தில் 'பச்சை பூசுதல்' என்னும் நிகழ்ச்சி நடைபெறுங்கால் இப்பகுதிப் பாடல்களைப் பாடுதல் இயல்பு. அவ்வாறு பாடுதலால் மணமக்களின் வாழ்க்கை ...ிக்கும் என்பர் ஆன்றோர். மாயவனை மணந்து மகிழ்ந்தமை ...ால் தாம் கண்ட கனா நிகழ்ச்சியை ஆண்டாள் இப்பகுதியில் ...ுறப் பாடியுள்ளார். இப்பகுதியை நாத்தழும்பேறப் பயின்...ர், "வாயும் நன்மக்களைப் பெற்று மகிழ்வர்" என்று அம்மை ...ிர அருளியுள்ளார். தமக்கு மணப்பருவம் எய்தியும், மணம் ...டபெறத் தடைவரின், மகளிர் இப்பகுதியை ஒருமனத்துடன் ...த்து, ஆண்டாளின் திருவடிகளைத் துதித்தல் நலம். அவர்கட்கு ...ரவில் திருமணம் நிகழும் என்பர் பெரியோர்.

வாரணம் ஆயிரம் சூழ வலம்செய்து
நாரண நம்பி நடக்கின்றான் என்றெதிர்,
பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான். (1)

நாளை வதுவை மணமென்று நாளிட்டுப்
பாளை கமுகு பரிசுடைப் பந்தற்கீழ்
கோளரி மாதவன் கோவிந்தன் என்பானோர்
காளை புகுதக் கனாக்கண்டேன் தோழீ! நான். (2)

இந்திரன் உள்ளிட்ட தேவர் குழாமெல்லாம்
வந்திருந் தென்னை மகள்பேசி மந்திரித்து
மந்திரக் கோடி உடுத்தி மணமாலை
அந்தரி சூட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான். (3)

நால்திசைத் தீர்த்தங் கொணர்ந்து நனிநல்கி,
பார்ப்பனச் சிட்டர்கள் பல்லார் எடுத்தேத்தி,
பூப்புனை கண்ணிப் புனிதனோ டென்றன்னைக்
காப்புநாண் கட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான். (4)

கதிரொளி தீபம் கலசமுடன் ஏந்திச்
சதிரிள மங்கையர் தாம்வந் தெதிர்கொள்ள
மதுரையார் மன்னன் அடிநிலை தொட்டெங்கும்
அதிரப் புகுதக் கனாக்கண்டேன் தோழீ! நான். (5)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீ! நான்.

வாய் நல்லார் நல்ல மறையோதி மந்திரத்தால்
பாசிலை நாணல் படுத்துப் பரிதிவைத்துக்
காய்சின மாகளி றன்னான் என் கைபற்றித்
தீவலம் செய்யக் கனாக்கண்டேன் தோழீ! நான்.

இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான்
நம்மை உடையவன் நாரா யணன்நம்பி
செம்மை உடைய திருக்கையால் தாள்பற்றி
அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழீ! நான்.

வரிசிலை வாள்முகத்து என்னைமார் தாம்வந்திட்டு
எரிமுகம் பாரித்து என்னைமுன் னேநிறுத்தி
அரிமுகன் அச்சுதன் கைம்மேலென் கைவைத்துப்
பொரிமுகம் தட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான்.

குங்குமம் அப்பிக் குளிர்சாந்தம் மட்டித்து
மங்கல வீதி வலம்செய்து மணநீர்
அங்கவ னோடும் உடன்சென்றங் கானைமேல்
மஞ்சன மாட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான்.

ஆயனுக்காகத் தான்கண்ட கனாவினை
வேயர் புகழ்வில்லி புத்தூர்க்கோன் கோதைசொல்
தூய தமிழ்மாலை ஈரைந்தும் வல்லவர்
வாயும்நன் மக்களைப் பெற்று மகிழ்வரே.

ஆண்டாள் திருவடிகளே சரணம்

---

8. ஆண்டவனே அருமருந்து

பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப் பரிந்து பேர[illegible] செய்யும் பெருமான் ஆண்டவன். அவனே உளநோய்களை களைந்து உள்ளக் களிப்பும் உடற் சுகமும் தருவான். நோய் உண்டாக மூல காரணம் பழவினையே; மற்றைக் காரணங்[illegible] யாவும் மேலுக்குத் தோன்றுபவையே. கொடிய வினையாகு[illegible] அதைத் தீர்ப்பவனாகவும், நோயாகவும், நோய் கொண்டவனாக[illegible] மருந்தாகவும், மருத்துவனாகவும், யாவுமாகவும் இருப்ப[illegible] அவனே. ஆகையால் தீராத வினைகள் எல்லாம் தீர்க்கும் தெய்[illegible]தைப் பணிந்தேத்தி அவனிடத்தும் மருத்துவரிடத்தும் [illegible] நம்பிக்கையுடன் மருந்துண்பவர்கள் வெகு சீக்கிரத்தில் [illegible] நீங்கித் திடகாத்திரம் பெற்று நீடு வாழ்வார்கள். சாமான்ய [illegible] களும் அறிந்து பெரும்பயன் பெறவேண்டும் என்னும் [illegible]

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Chennai

விலாசத்தால் ஈசன் அடியார்கள் ஆண்டவனை அருமருந்தாய்க் கண்டு பாடிப் பரவியுள்ளார்கள். அவைகளை நாமும் நாவார, நெஞ்சுருக, கண்ணீர் மல்க, மெய்சிலிர்க்க அகங்குழைந்து அருமை யாய்ப் பக்தியுடன் பாடி வந்தால் நம்மைப் பதைக்கச் செய்யும் ாதக நோய்கள், நம்மை அண்டா ; வந்தாலும் உடனே பறந்து கிடும் என்பதில் அணுவளவும் ஐயமில்லை. ஆகையால் அத்தகைய பொக்கிஷங்களில் சில நன்முத்துக்களைத் தருகின்ரேம் ; அனுதின மும் பாராயணம் செய்து பயன் பெற்று வாழ்க.

ஆழ்வார்கள் திருவடிகளே சரணம்

நாலாயிர திவ்ய ப்ரபந்தம்

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்

பெரியாழ்வார் திருமொழி [5 - 2]

நெய்க்குடத்தைப் பற்றியேறும் எறும்புகள்போல் நிரந்தெங்கும்
கைக்கொண்டு நிற்கின்ற நோய்காள் காலம்பெற உய்யப்போமின்
மெய்க்கொண்டு வந்துபுகுந்து வேதப் பிரானுர்கிடந்தார்
பைக்கொண்ட பாம்பணையோடும் பண்டன்று பட்டினங்காப்பே. (1)

த்திரகுத்தன் எழுத்தால் தென்புலக்கோன் பொறியொற்றி
வைத்தவிலச் சினைமாற்றுத் தூதுவரோடி யொளித்தார்
த்துத்திரைக் கடற்சேர்ப்பன் மூதறிவாளர் முதல்வன்
த்தர்க்கமுதன் அடியேன் பண்டன்று பட்டினம்காப்பே. (2)

பிற்றில்தொழு வைப்பிரித்து வன்புலச் சேவையதக்கி
பிற்றும்அக் காணிகழித்துக் காலிடைப் பாசங்கழற்றி
பிற்றிடைமண் கொண்டவெந்தை இராப்பகல் ஓதுவித்தென்னைப்
பிற்றிப்பணி செய்யக்கொண்டான் பண்டன்று பட்டினங்
காப்பே. (3)

ங்கியவல் வினைநோய்காள் உமக்குமோர் வல்வினைகண்டீர்
ங்குப்புகேன்மின் புகேன்மின் எளிதன்று கண்டீர்கேண்மின்
கப்பிரா னவனெம்மான் சேரும்திருக் கோயில்கண்டீர்
கப்படா துய்யப்போமின் பண்டன்று பட்டினங்காப்பே. (4)

ணிக்குற ளுருவாய ாயனையென் மனத்துள்ளே
ணிக்கொணர்ந்து பு தவைத்துக் கொண்டேன் பிறிதின்றி
ணிக்கப்பண் டாரங்கண்டீர் வலிவன்குறும் பர்களுள்ளீர்
ணிக்கவேண்டா நடமின் பண்டன்று பட்டினங்காப்பே. (5)

றவுறு பிணிநோய்கள் உமக்கொன்று சொல்லுகேன்கேண்மின்
ற்றங்கள் மேய்க்கும்பிரானுர் பேணும்திருக் கோயில்கண்டீர்
முறைக் கின்றேன் இன்னம் ஆழ்வினைகாள் உமக்கிங்கோர்
இல்லை கண்டீர்நடமின் பண்டன்று பட்டினங்காப்பே. (6)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Hariharan Collection, Sholinganallur, Chennai

கொங்கைச் சிறுவரையென்னும் பொதும்பினில் வீழ்ந்துவழுக்கி
அங்கோர் முழையினில் புக்கிட்டழுந்திக் கிடந்துழல்வேனை
வங்கக்கடல் வண்ணம்மான் வல்வினையா யினமாற்று
பங்கப்படா வண்ணஞ்செய்தான் பண்டன்று பட்டினங்காப்பே. (7)

ஏதங்களா யினவெல்லாம் இறங்கலிடு வித்தென்னுள்ளே
பீதகவாடைப் பிரானுர் பிரமகுரு வாகிவந்து
போதில்கமல வன்னெஞ்சம் புகுந்துமென் சென்னித்திடரில்
பாதவிலச் சினைவைத்தார் பண்டன்று பட்டினங்காப்பே. (8)

உறகல் உறகல்உறகல் ஒண்சுடர் ஆழியேசங்கே
அறவெறிநாந் தகவாளே யழகிய சார்ங்கமேதண்டே
இறவுபடாமல் இருந்த எண்மருலோக பாலீர்காள்
பறவையரை யாவுறகல் பள்ளியறை குறிக்கொண்மின். (9)

அரவத் தமளியினெடும் அழகிய பாற்கடலோடும்
அரவிந்தப் பாவையுந்தானும் அகம்படி வந்துபுகுந்து
பரவைத்திரை பலமோதப் பள்ளிகொள் கின்றபிரானை
பரவுகின்ருன் விட்டுசித்தன் பட்டினங்கா வற்பொருட்டே. (10)

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசர் தேவாரம்

கூற்ருயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்ருயடிக் கேயிர வும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்ருதென் வயிற்றி னகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. (1)

நெஞ்சம்உமக் கேயிட மாகவைத்தேன்
நினையா தொருபோதும் இருந்தறியேன்
வஞ்சம்இது ஒப்பது கண்டறியேன்
வயிற்ரேடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை
நணுகாமற் றுரந்து கரந்துமிடீர்
அஞ்சேலு மென்னீர் அதிகைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. (2)

திருச்சிற்றம்பலம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Harihara Collection, Sholinganallur, Chennai

திருச்சிற்றம்பலம்

சுந்தரர் தேவாரம்

கட்ட மும்பிணி யுங்களை வானைக்
காலற் சீறிய காலுடை யானை
விட்ட வேட்கைவெந் நோய்களைவானை
விரவி னல்விடு தற்கரி யானைப்
பட்ட வார்த்தை படநின்ற வார்த்தை
வாரா மேதவி ரப்பணிப் பானை
அட்ட மூர்த்தியை மட்டவிழ் சோலை
ஆரூ ரானை மறக்கலும் ஆமே.

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

மாணிக்கவாசகர் திருவாசகம்

முன்னை வினையிரண்டும் வேரறுத்து முன்னின்றான்
பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன் — தென்னன்
பெருந்துறையின் மேய பெருங்கருணை யாளன்
வருந்துயரம் தீர்க்கும் மருந்து.

இருந்தென்னை ஆண்டான் இணையடியே சிந்தித்
திருந்திரந்து கொள்நெஞ்சே எல்லாம் — தரும்காண்
பெருந்துறையின் மேய பெருங்கருணை யாளன்
மருந்துருவாய் என்மனத்தே வந்து.

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

பட்டினத்தார் பாடல்

பிறவா திருக்க வரம்பெறல் வேண்டும் பிறந்துவிட்டால்
இறவா திருக்க மருந்துண்டு காண்இது எப்படியோ
அறமார் புகழ்த்தில்லை அம்பல வாணர் அடிக்கமலம்
மறவா திருமன மே அது காண்நல் மருந்தெனக்கே.

திருச்சிற்றம்பலம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V.Hariharan Collection, Sholinganallur, Chennai

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ கோபாலகிருஷ்ண பாரதியார் கீர்த்தனை

பல்லவி

பித்தந் தெளிய மருந்தொன் றிருக்குது
பேரின்ப மன்றுள்ளே

அநுபல்லவி

மற்ற மருந்துகள் தின்றாலும் உள்ளுக்கு
வல்லே வல்லே — ஐயே அடிமை (பித்தந் தெளிய)

சரணங்கள்

பாம்பும் புலியும்மெய்ப் பாடுபட்டுத் தேடி
பார்த்துப் பயிரிட்டது
பாரளந்ததிரு மாயனும் வேதனும்
பார்த்துக் களித்ததுண்டு
பார்வதி யென்றொரு சீமாட்டி — அதில்
பாதியைத் தின்றதுண்டு — இன்னம்
பாதி யிருக்குது பறையா நீயும் போய்ப்
பாரென் றுத்தரம் தாரும் தீரும். (பித்தந் தெளிய)

பத்துத் திசையும் பரவிப் படர்ந்தாலும்
பார்த்துப் பிடியாரே
தத்திக் குதிக்கும் தாளங்கள் போடும்
தண்டைச் சிலம்புகொஞ்சும்
தித்திக்கும் தேனோடு செங்கரும் போநல்ல
சத்தமுடை யார்க்கே — என்
சித்தத்தைக் கட்டி இழுக்குது அங்கே
சென்றால் போதும் கண்டால் தீரும். (பித்தந் தெளிய)

ஊரைச் சொன்னாலும் இப்பாவம் தொலையும்
ஊழ்வினை ஊடறுக்கும்
பேரைக் கொண்டாடி புலம்புகி றார்வெகு
பேர்களுக் குப்பிழைப்பு
சாரும் நரைதிரை தீரும் மருந்து
சாதியைப் பாராது — இன்னம்
தீராத நோய்கள் படைத்த எனக்குத்
தீரும் தீரும் ஐயே அடிமை. (பித்தந் தெளிய)

திருச்சிற்றம்பலம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

9. நம் அங்கங்களால் காரியசித்தி

"மனம்போன போக்கெல்லாம் போகவேண்டா" என்பது பெரியோர் வாக்கு. மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம் பொறிகளும், மனத்தையும் இழுத்துக்கொண்டுபோய்த் தகாத வற்றில் செலுத்துவது சுலபம். இதனாலேயே "ஐம்பொறி ஆட்சி கொள், மனத்தை அடக்கு, மனத்தை அடக்கினால் ஜகத்தை அடக் கலாம்" என்ற வாக்குகள் தோன்றின. நாம் ஆண்டவன் பணிக்கே உடலை ஆளாக்கவேண்டும். சிவனடியார்களில் சிறந்த நாவுக்கரசர் உழவாரப் படைகொண்டு கோயிற் சுற்றுப்புறங்களில் புல் முதலிய வற்றைக் களைந்து சுத்தம் செய்து கைங்கரியம் செய்தம் யாவருக்கும் தெரிந்ததே. இதனை அப்பர் பெருமானே பின்வருது தேவாரப் பாசுரத்தால் விளங்கக் கூறியுள்ளார் :

"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும்எம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ யென்றும்
ஆரூரா என்றென்றே அலறு நில்லே."

மற்ற விலங்குகட்கெல்லாம் இல்லாத சிறப்புக்கள் பலவற் றைப் பரமன் மக்களுக்கு அருளியுள்ளான். அவற்றை அவனுக்கே பயன்படுத்தவேண்டும். சிந்திக்கும் ஆற்றலும், பேசும் திறமும் அருளிய தெய்வத்தைச் சிந்திக்கவே மனம்; அவன் புகழ் பாடவே நாக்கு; எங்கணும் நிறைந்துள்ளானைக் காணவே கண்கள்; மூலமாக நின்றானை முகரவே மூக்கு; கருதுவார்க்குக் கதியாய் விளங்கும் பகவந் நாமாவைக் கேட்கவே காது.

ஸ்ரீ ராமசந்த்ர மூர்த்தியையும், காயாம்பூ வண்ணனாகிய கண்ணனையும் அந்தரங்கமாக அனுபவித்த குலசேகராழ்வாரும் தாம் இயற்றிய முகுந்த மாலையில் இக்கருத்தைக் கல்மனமும் கரை யும்படிக் கூறியிருக்கிறார். (ஸ்தோத்திரமாலையில் காண்க.)

"என்பொறி ஐந்தும், உன்னிடத் தன்றி உண்ணும் இரை மாற்றவேண்டும ; இதுவே என் விண்ணப்பம் ; என்னப்பனே."

என்று ஒரு பக்தர் கதறுகின்றார். இவ்வாறு ஐம்பொறிகளையும் ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்வதால் உடலாலும், வாயாலும், கண்ணாலும், மூக்காலும், செவியாலும் நாம் செய்யும் பாவங் களும் அபசாரங்களும் அடியோடு தீர்ந்து தெய்வத் திருவருள் பெரு கும். குணமென்னும் குன்றேறி நின்று பரமபுருஷனின் கடாட்சத் திற்குப் பாத்திரமான ஆழ்வார்களும் நாயன்மார்களும் இதனையே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Parampara Sri V. Hariharan Collection, Sholinganallur, Chennai

வற்புறுத்திக் கூறியிருக்கிறார்கள். அவைகளைத் தினமும் பக்தி சிரத்தையுடன் பாராயணம் செய்வதால் ஐம்புலனையும் அடக்கி ஆதிபகவன் அருள்பெற்று இப்பிறப்பில் எல்லா இன்பமும் எய்துவர்; ஸகல கார்யங்களும் ஸித்திக்கும். மறுபிறப்பிலோ சிறந்த பேரின்பமடைவர்; இத்தகைய நெஞ்சையும் உயிரையும் உருக்கித் தொல்லை வஞ்சத்தை முருக்கியொழிக்கும் பாசுரங்களைக் கீழே காண்க. அவற்றை அனுதினமும் அன்புடனும், சிரத்தையுடனும் போற்றி மனனம் செய்துவந்தால் தீராதவினை யாவும் தீர்ந்து தூய்மையராய்க் கண்ணும், காதும், மூக்கும், வாயும், உடலும் பெற்ற பேற்றை அடைவார்கள். ஸகல கார்யங்களிலும் வெற்றி பெற்று ஸௌக்யமாக வாழ்வார்கள்.

ஆழ்வார்கள் திருவடிகளே சரணம்

நாலாயிர திவ்ய ப்ரபந்தம்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

பெரிய திருமொழி [11-7]

நீணகம் சுற்றி நெடுவரைநட் டாழ்கடலைப்
பேணான் கடைந்தமுதம் கொண்டுகந்த பெம்மானைப்
பூணார மார்வனைப் புள்ளூரும் பொன்மலையைக்
காணாதார் கண்ணென்றும் கண்ணல்ல கண்டாமே. (1)

நீள்வான் குறளுருவாய் நின்றிரந்து மாவலிமண்
தாளா லளவிட்ட தக்கணைக்கு மிக்கானைத்
தோளாத மாமணியைத் தொண்டர்க் கினியானைக்
கேளாச் செவிகள் செவியல்ல கேட்டாமே. (2)

தூயானைத் தூய மறையானைத் தென்னாலி
மேயானை மேவா ளுயிருண் டமுதுண்ட
வாயானை மாலை வணங்கி யவன்பெருமை
பேசாதார் பேச்சென்றும் பேச்சல்ல கேட்டாமே. (3)

கூடா விரணியனைக் கூருகிரால் மார்விடந்த
ஓடா வடலரியை உம்பரார் கோமானைத்
தோடார் நறுந்துழாய் மார்வனை ஆர்வத்தால்
பாடாதார் பாட்டென்றும் பாட்டல்ல கேட்டாமே. (4)

மையார் கடலும் மணிவரையும் மாமுகிலும்
கொய்யார் குவளையும் காயாவும் போன்றிருண்ட
மெய்யானை மெய்ய மலையானைச் சங்கேந்தும்
கையானைக் கைதொழாக் கையல்ல கண்டாமே. (5)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaishnava Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கள்ளார் துழாயும் கணவலரும் கூவிளையும்
முள்ளார் முளரியும் ஆம்பலுமுன் கண்டக்கால்
புள்ளாயோர் ஏனமாய்ப் புக்கிடந்தான் பொன்னடிக்
உள்ளதா ருள்ளத்தை உள்ளமாக் கொள்ளோமே. [சென்று (6)

கனையார் கடலும் கருவிளையும் காயும்
அனையானை அன்பினால் ஆர்வத்தால் என்றும்
சுனையார் மலரிட்டுத் தொண்டராய் நின்று
நினையாதார் நெஞ்சென்றும் நெஞ்சல்ல கண்டாமே. (7)

வெறியார் கருங்கூந்த லாய்ச்சியர் வைத்த
உறியார் நறுவெண்ணெய் தானுகந் துண்ட
சிறியானைச் செங்க ணெடியானைச் சிந்தித்
தறியாதார் என்றும் அறியாதார் கண்டாமே. (8)

தேனொடு வண்டாரும் திருமா லிருஞ்சோலை
தானிடமாக் கொண்டான் தடமலர்க் கண்ணிக்காய்
ஆன்விடையே ழன்றடர்த்தாற் காளானா ரல்லாதார்
மானிடவ ரல்லரென் றென்மனத்தே வைத்தேனே. (9)

மெய்ந்நின்ற பாவ மகலத் திருமாலைக்
கைந்நின்ற வாழியான் சூழும் கழல்சூடிக்
கைந்நின்ற வேல்கைக் கலிய னொருமாலை
ஐயொன்று மைந்தும் இவைபாடி ஆடுமினே. (10)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

பொய்கையாழ்வார் திருவடிகளே சரணம்

இயற்பா—முதற்றிருவந்தாதி

தோள் அவனை யல்லால் தொழாஎன் செவியிரண்டும்
கேள்வன தின்மொழியே கேட்டிருக்கும்—நாநாளும்
கோணா கனையான் குரைகழலே கூறுவதே
நாணாமை நண்ணேன் நயம். (63)

அன்பாழி யானை அணுகென்னும் நாஅவன்றன்
பண்பாழித் தோள்பரவி யேத்தென்னும்—முன்பூழி
காணானைக் காணென்னும் கண்செவி கேளென்னும்
பூணாரம் பூண்டான் புகழ். (72)

நாவாயி லுண்டே நமோநார ணாவென்று
ஓவா துரைக்கு முரையுண்டே—மூவாத
மாக்கதிக்கண் செல்லும் வகையுண்டே என்னொருவர்
தீக்கதிக்கட் செல்லும் திறம்?

பொய்கையாழ்வார் திருவடிகளே சரணம் (95)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Harihanan Collection, Sholinghur, Chennai

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்

[திருவாய்மொழி 3-8]

வாசகமே ஏத்த அருள்செய்யும் வானவர்தம்
நாயகனே நாளிளந் திங்களைக் கோள்விடுத்து
வேயகம் பால்வெண்ணெய் தொடுவுண்ட ஆனாயர்
தாயவனே என்று தடவுமென் கைகளே. (3)

கைகளால் ஆரத் தொழுது தொழுதுன்னை
வைகலும் மாத்திரைப் போதுமோர் வீடின்றி
பைகொள் பாம்பேறி உறைபர னேஉன்னை
மெய்கொள்ளக் காண விரும்புமென் கைகளே. (4)

கண்களால் காண வருங்கொலன் றாசையால்
மண்கொண்ட வாமனன் ஏற மகிழ்ந்துசெல்
பண்கொண்ட புள்ளின் சிறகொலி பாவித்து
திண்கொள்ள ஓர்க்கும் கிடந்தென் செவிகளே. (5)

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசர் தேவாரம்

திருஅங்கமாலை

தலையே நீ வணங்காய்—தலைமாலை தலைக்கணிந்து
தலையாலே பலிதேரும் தலைவனைத் தலையே நீ வணங்காய்.

கண்காள் காண்மின்களோ—கடல்நஞ்சுண்ட கண்டன் தன்னை
எண்டோள் வீசிநின் றாடும் பிரான்தன்னைக் கண்காள் காண்மின்களோ.

செவிகாள் கேண்மின்களோ—சிவன் எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப்பிரான்திறம் எப்போதும் செவிகாள் கேண்மின்களோ.

மூக்கே நீமுரலாய்—முது காடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை மூக்கே நீமுரலாய்.

வாயே வாழ்த்து கண்டாய்—மதயானை உரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத் தாடும்பி ரான்றன்னை வாயே வாழ்த்து கண்டாய்.

நெஞ்சே நீ நினையாய்—நிமிர் புன்சடை நின்மலனை
மஞ்சா டும்மலை மங்கைமணாளனை நெஞ்சே நீ நினையாய்.

கைகாள் கூப்பித்தொழீர்—கடிமாமலர் தூவிநின்று
பைவாய்ப் பாம்பரை யார்த்த பரமனைக் கைகாள் கூப்பித் தொழீர்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆக்கை யாற்பயனென் — அரன்கோயில் வலம்வந்து
பூக்கை யாலட்டிப் போற்றி யென்னுதவிவ் வாக்கை
யாற்பயனென்.
கால்க ளாற்பயனென் — கறைக்கண்ட னுறைகோயில்
கோலக் கோபுரக் கோகர ணஞ்சூழாக் கால்க ளாற்பயனென்.
உற்று ராருளரோ — உயிர்கொண்டு போம்பொழுது
குற்று லத்துறை கூத்தனல் லால்நமக் குற்று ராருளரோ.

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே.

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே.

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

மாணிக்கவாசகர் திருவாசகம்

வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்து
இணங்கத்தன் சீரடியார் கூட்டமும்வைத் தெம்பெருமான்
அணங்கொ டணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ.

திருச்சிற்றம்பலம்

---

10. வீட்டை வீட்டுக் கிளம்பும்போது

பஸ்ஸுகள், லாரிகள், கார்கள், சைகிள்கள் முதலியவற்றின் எண்ணிக்கை தினேதினே அதிகரித்து வருகின்றது. ஆகையால் அவைகளால் ஏற்படும் விபத்துக்களும் அதிகரிக்கின்றன. இதனால் வீட்டை விட்டுக் கிளம்பி வெளியே போகும் ஜனங்கள் க்ஷேமமாக வீடு திரும்பும்வரை பயமாகவே இருக்கிறது.

எனவே, வீட்டை விட்டு (1) உள்ளூரில் ஒரு கார்யமாகவோ, அல்லது (2) வெளியூர் ப்ரயாணமாகவோ கிளம்பும் நாம், வழியில் எவ்வித ஆபத்திலும் அகப்பட்டுக் கொள்ளாமல் கார்ய ஸித்தியுடன் க்ஷேமமாக வீடு திரும்பும் வகை என்ன ?

பக்கத்து வீட்டுக்கோ, கடைக்கோ, ஆஸ்பத்திரிக்கோ, பள்ளிக்கோ, ஆபீஸுக்கோ, வெளியூருக்கோ எங்குப் போவதானாலும், வீட்டுப் படியை விட்டுக் கீழே இறங்குவதற்கு முன்னால், ஒரு நிமிடமாவது, அவரவர் பூஜை அறைக்குள் போய், பகவான் துணைக்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

காகப் பிரார்த்தித்துப் பிறகு வீட்டை விட்டுக் கிளம்புவது அவசியம். இப்படிச் செய்வதால், நம்மை அறியாமலே, எம்பெருமான் "அக்ரதஃ ப்ருதஷ்டதஶ்சைவ பார்ஶ்வதஶ்ச" என்றபடி முன்னும் பின்னும் பக்கங்களிலும் நம்முடன் கூடத் தொடர்ந்து வருகிறார்; வழி நெடுகக் காப்பாற்றுகிறார் என்பது நம் பெரியோர் நம்பிக்கை.

மாதிரி ப்ரார்த்தனை

"நாலு கவிப் பெருமாள் வந்தார்! நம் கலியன் வந்தார்! ஆலி நாடர் வந்தார்! அருள்மாரி வந்தார்!. கொங்குமலர்க் குழலியர் வேள் வந்தார்! மங்கை வேந்தர் வந்தார்! பரகாலர் வந்தார்" என்று சிஷ்ய கோடிகள் விருது கூற பல திவ்யதேசங்களில் வரவேற்கப்பட்ட, திருமங்கையாழ்வார் நம்மனோர்க்கு அருளியுள்ள பெரிய திருமொழி 3—6—5-இல் ஒரு பகுதியைப் பாடுவோமே!

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

"..
.... ஓ மண்ணளந்த
தாளாளா! தண்குடந்தை நகராளா வரையெடுத்த
தோளாளா, என்றனக்கோர் துணையாளனாகாயே!"

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

———

வழியில் ஆபத்து வந்தால்

நம் இஷ்ட தெய்வத்தைப் பிரார்த்தித்துக்கொண்டு வெளியே புறப்பட்டுச் செல்லும் வழியில் ஓர் ஆபத்து — சோதனையாக — வரலாம். அந்த இடரைத் தவிர்ப்பது அல்லது அந்த ஆபத்தின் கடுமையைக் குறைப்பது எப்படி? இதற்கும் "ஸ்ரீ ராம நாமா" போன்ற அபயக்குரல் நம ஹ்ருதயத்திலிருந்து உடனே கிளம்ப வேண்டும். திரௌபதியும் கஜேந்திரனும் கதறியது நமக்கு ஞாபகம் வரட்டும். "ஆபத் பாந்தவா! அனாத ரக்ஷகா!! 'ஆதிமூலமே!' என்று கதறிய யானைக்கு அபயம் அளித்த ப்ரபோ!!! அபயம்! அபயம்!! அபயம்!!!" என்று கதறுவோம். நம் ஹ்ருதய கமலத்தில் அவன் திருவடித் தாமரையைப் பதித்துக் கதறுவோம் அவன் கண்டிப்பாகக் காப்பான்.

மாதிரி ப்ரார்த்தனை

திருவழுதி வளநாட்டிலே, திருக்குருகூரில் திருவவதாரம் செய்து பராங்குசன், மாறன், சடகோபன், வகுளாபரணன காரிமாறன், மாறன், குருகைப்பிரான், திருக்குருகூர்நம்பி, அருள்மாறன், தென்னரங்கன், பொன்னடி, திருநாவீறுடையபிரான் என்ற பல திருநாமங்களால் தோத்திரம் செய்யப்படும் நம்மாழ்வார் நம்மனோர் கடைத்தேறுவதற்காக மங்களாசாஸனம் செய்துள்ள திருவாய்மொழி 9-2-6- ஆம் பாசுரத்தில் என்ன அற்புதமாக எம்பெருமானை அழைக்கிறார் பாருங்கள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
"காய்சினப் பறவை யூர்ந்துபொன் மலையின்
மீமிசைக் கார்முகில் போல,
மாசின மாலி மாலிமான் என்றங்
கவர்படக் கனன்றுமுன் நின்ற,
காய்சின வேந்தே! கதிர்முடி யானே!
கலிவயல் திருப்புளிங் குடியாய்,
காய்சின ஆழி சங்குவாள் வில்தண்
டேந்தியெம் இடர்கடி வானே!"
நம்மாழ்வார் திருவடிகளே சரணம்

11. கடிதம் மூலம் காரியஸித்தி

"என் செயலால் ஆவதொன்றில்லை, இறைவா, எல்லாம் உன தருளே" என்பதை அனுபவபூர்வமாக நன்குணர்ந்த ஆன்றோர்கள் எச்செயல் தொடங்கினும் தெய்வக் காப்புச் செய்தே தொடங்கினர். கவிச்சக்ரவர்த்தி கம்பரும் தாம் ராமாயணம் இயற்றத் தொடங்கும்போது,

"உலகம் யாவையும் தாம்உள ஆக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டு உடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே."

என்று சரணாகதி செய்கிறார். ஆகவே நாமும் அத்தகைய ஆன்றோர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றிப் பெருநன்மைகள் எய்த வேண்டும்.

நாம் எப்போதும் நாமே நேரில் சென்று உத்தேசித்த காரியங்களைச் சாதித்துக்கொள்வதில்லை. பல சமயங்களில் நம் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் கடிதம் எழுதி அதன்மூலம் நற்காரியங்களை முடித்துக்கொள்கிறோம். அவ்வாறு எழுதும்போதும் ஆண்டவனை மனத்தில் தியானித்து அவன் தாள் வணங்கி ஆரம்பத்திலும் முடிவிலும் "ஸ்ரீராம ஜயம், சிவமயம், ஷண்முகநாதன் துணை" போன்ற துதிகளை எழுதுதல் நன்மை பயக்கும். நாம் உத்தேசித்த காரியம் நிறைவேறவும் ஆண்டவன் திருவருள் பாலிப்பான். ஆகவே கடிதம் மூலம் காரிய ஸித்தி பெறத் தெய்வத்தை வாழ்த்தியும் சரணாகதி செய்தும் வேண்டியும் கடிதம் எழுதுக. அத்தகைய துதிச்சொற்றொடர்கள் சிலவற்றைக் கீழே மாதிரிக்காகக் கொடுத்துள்ளோம். அன்பர்கள் இவை போன்றவற்றைத் தாமே தேர்ந்துகொள்ளலாம்.

விநாயகர்:
1. உ (பிள்ளையார் சுழி)
2. சித்தி விநாயகன் சேவடி போற்றி
3. யானை முகத்தவனே போற்றி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Parampara Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

4. ஆகுவாகனனே போற்றி
5. ஐங்கரனே போற்றி
6. இடையூறு அகற்றும் இறைவா சரணம்
7. தும்பிக் கையா தொழுதேன் காப்பாய்

சிவபெருமான் :

1. திருச்சிற்றம்பலம்
2. சிவாயநம
3. சிவமயம்
4. தென்னாடுடைய சிவனே போற்றி
5. அண்ணாமலைக்கு அரசே போற்றி
6. ஓம் நமசிவாய
7. சிவனவன் தாள்என் சிந்தை வைத்தேனே

திருமுருகன் :

1. வேலும் மயிலும் துணை
2. முருகன் துணை
3. செந்தூரான் சேவடி போற்றி
4. குகனே குருவே துணை
5. நமோ குமாராய
6. ஓம் சரவணபவ
7. செந்திலாண்டவன் துணை

ஸ்ரீராமன் :

1. ஸ்ரீராமஜயம்
2. ஸ்ரீராமாபிராமா சரணம்
3. ரவிகுலத் தோன்றல் தோள்வலி துணையே
4. கடற்கணை கட்டிய கருணாகரன் காப்பு
5. வீடணற் கருளிய விமலா சரணம்
6. சீதை மணாளா போற்றி
7. கோசலை பெற்ற குமரா போற்றி
8. தசரதன் பெற்ற தநயா சரணம்
9. எந்தையே ராகவா சரணம்
10. கோதண்டம் கைக்கொண்ட கோமான் சரணம்
11. தாயினும் இனியான் சரணமலர் போற்றி
12. கோசிகன் வேள்வி காத்தாய் போற்றி
13. பாதுகையளித்த பரமா சரணம்
14. நீதி கைக்கொண்ட நின்மலா சரணம்

ஸ்ரீ கிருஷ்ணன்:

1. கண்ணன் கழலடி சரணம்
2. வெண்ணெய் உண்ட வாயா போற்றி
3. மண்ணை உண்ட மாயா வாழ்க
4. தாயைக் குடல்விளக்கம் செய்தவா சரணம்
5. கருமுகில் வண்ணனைக் கருதென் மனனே
6. தாமரைக் கண்ணா திருவடி போற்றி
7. தூது நடந்த சேவடி வாழ்க

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

முடிவுரை

"ஸகலமும் நீயே! ஸகலகாரியங்களும் ஸித்திக்க நீயே அருள்புரிதல்வேண்டும்"

நம் மூதாதையர் "அவனன்றி ஓரணுவும் அசையாது!" என்பதில் பரிபூரண நம்பிக்கை வைத்து, ஸகலமும் பரம்பொருளே என்று எம்பெருமானைப் போற்றி வாழ்ந்து வந்தனர். நாமும் அப்படியே அவன் சரணே கதி, என்று ஆடிப்பாடி துதித்து வாழ்வோமானால், ஸகல காரியங்களும் சித்திக்கும்.

மாதிரி ப்ரார்த்தனை

தென் ஆற்காடு ஜில்லா, கடலூர் டவுனுக்கு 3 மைலில் உள்ள திருவஹீந்திரபுரம் என்ற திவ்ய தேசத்தில் "பக்தர்களை ஸத்தியமாக ரக்ஷிக்கும்" தேவநாதன் அதி அழகாக ஸேவை ஸாதிக்கிறார். அவர் "வடிவழகை மறவாதார் பிறவாதாரே!" இந்த எம்பெருமானைப்பற்றி, ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரான ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் தமது மும்மணிக் கோவை, ஏழாம் பாசுரத்தில், உள்ளம் உருகும் வகையில் பிரார்த்திக்கிறார் :—

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

"பயின்மதி நீயே பயின்மதி தருதலின்
வெளியு நீயே வெளியுற நிற்றலின்
தாயு நீயே சாயைதந் துகத்தலின்
தந்தையு நீயே முந்திநின் றளித்தலின்
உறவு நீயே துறவா தொழிதலின்
உற்றது நீயே சிற்றின்ப மினமையின்
ஆறு நீயே யாற்றுக் கருள்தலின்
அறமு நீயே மறநிலை மாய்த்தலின்
துணைவனு நீயே யிணையிலை யாதலின்
துய்யனு நீயே செய்யா ளுறைதலின்
காரண நீயே நாரண னாதலின்
கற்பக நீயே நற்பதந் தருதலின்
இறைவனு நீயே குறைமயான் றிலாமையின்
இன்பமு நீயே துன்பந் துடைத்தலின்
யானு நீயே யென்னு ளுறைதலின்
எனது நீயே யுன[illegible]தன்றி யின்மையின்
நல்லாய் நீயே [illegible]ல்லாங் கிலாமையின்
வல்லாய் நீயே வையமுண் டுமிழ்தலின்
எங்ஙன மாகு மெய்யநின் வியப்பே
அங்ஙனே யொக்க அறிவ தாரணமே!"

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீமத் ராமாயண நாட்குறிப்பு (டயரி)

(Srimad Ramayana Diary)

காலையில் எழுந்ததும் தன் கையையோ, கண்ணாடியையோ, பகவான் பாத கமலங்களையோ முதலில் பார்ப்பதை வழக்கமாக ஒவ்வொருவரும் வைத்துக்கொள்ள வேண்டுமென்று பெரியோர் கூறுவர். "தன் கையே தனக்கு உதவி" என்பதை ஞாபகப்படுத்துவதற்காகக் கையையும், "தன் முயற்சியால் முன்னேறி உயர்நிலையை அடையவேண்டும்" என்பதை வற்புறுத்துவதற்காகக் கண்ணாடியில் தன் உருவத்தையும், "பற்றற்று நல்ல காரியங்கள் யாவற்றையும் ஊக்கத்துடன் செய்து பகவான் பாத கமலங்களுக்கே அர்ப்பணம் செய்ய வேண்டும்" என்பதை நினைவுகூர ஆண்டவன் அடிகளையும் முதலில் பார்க்கவேண்டும் என்ற நோக்கத்துடன் இப்புத்திமதியைப் பெரியோர் கூறுகின்றனர் போலும்.

ஸ்ரீராமபிரானும் சித்திரகூடத்தில் தன்னை வந்து பணிந்த பரதனை நோக்கி, 'காலையில் எழுந்ததும் கண்ணாடி முதலிய மங்களப் பொருள்களை முதலில் பார்ப்பதை வழக்கமாக வைத்துக்கொண்டிருக்கிறாயா ?' என்று கேட்கிறார். ஆகவே, மங்களகரமான பொருட்களை நாட்காலையில் முதலில் காண்பது எவ்வளவு முக்கியம் என்பது தெரிகிறது. அதுபோலவே, காலையில் எழுந்ததும் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு பகவந்நாமாவை வாயாரச் சொல்லுவதும் மனமொருமித்து எழுதுவதும் மிகச் சிறந்தவை. அதனால் ஆயுள், ஆரோக்கியம், ஐசுவரியம், கல்வி முதலிய யாவும் பெருகும். நாம் தொடங்கும் ஸகல காரியங்களும் ஸித்திக்கும்.

நாள்தோறும் அதிகாலையில் எழுந்து காலைக்கடன்கள் யாவற்றையும் முடித்துக்கொண்டு முன் நாளில் தான் செய்த நல்ல காரியங்கள் யாவை ; தீய காரியங்கள் யாவை எனச் சிந்தித்தல் வேண்டும். அவைகளை நாட்குறிப்பில் எழுதிவரவும் வேண்டும். அவ்வாறு எழுதுவதால் நல்ல பலனுண்டு. பிறகு அன்றைய தினத்தில் செய்யவேண்டுவனவற்றைச் சிந்திக்கவேண்டும். இவ்வாறெல்லாம் சிந்திப்பதற்குமுன் பரமன் பாதங்களைக் கருத்தில் இருத்தி அவன் புகழை ஓரிரு வரிகளில் இன்றைய நாட்குறிப்பில முதலில் எழுதி, பிறகு, முன்தினச் செய்திகளை எழுதியபின் இன்றைய காரியங்களைத் திட்டமிட்டால் அக்காரியங்கள் இடையூறின்றி இனிது முடியும் என்பதில் எத்துணையும் ஐயமில்லை.

நம் நாட்டு இதிகாச புராணங்கள் யாவும் நம் முன்னோர்கள் நமக்காகப் பரம கருணையுடன் தேடித் தந்த அழியாச் செல்வங்கள். அத்தகைய இதிகாச புராணங்களிலிருந்து அருமையான கருத்துக்களைப் பொறுக்கி நாடோறும் நம் நாட்குறிப்பில் எழுதிவருவதால்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Hariharan Collection, Sholinganallur, Chennai

புராணங்களைப் படித்த பலனும், தெய்வத் திருவருளும் பெருகும் மேலும் சிந்தித்த செயல் ஸித்தி பெறும். மனம் தெளிவடைந்து சாந்தி உண்டாகும்.

ஆகவே, மாதிரிக்காக ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்திலிருந்து சில பொறுக்குமணிகள் மொழிபெயர்க்கப்பட்டு இங்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

அதுபோலக் கம்ப ராமாயணத்திலிருந்தும், துளசி ராமாயணத்திலிருந்தும் அன்பர்கள் தேர்ந்தெடுத்து எழுதி வரலாம். அதன் பலன் மிக மிக அற்புதமானது.

தவிர, இம்மாதிரி புனிதமான, பொன்னுன, தமிழ் மணமும், தெய்வமணமும் கமழும் வாக்கியங்களை, நாலாயிர திவ்ய ப்ரபந்தம், தேவாரம், திருவாசகம், அருட்பா முதலிய மாபெரும் நூல்களிலிருந்து, ஒவ்வொரு நாளும், தம்தம் டயரிகளில் முதலாவதாக எழுதும் வழக்கத்தைப் பழக்கஞ் செய்யும் பக்தர்கள் பகவான் துணையைப் பெரிதும் பெற்று, தாம் தொடங்கும் ஸகல காரியங்களிலும் பரம பாக்யங்கள் பெறுவர்.

॥ ஸ்ரீராம : ஶரணம் மம ॥

மாதமும் தேதியும்	ராமாயண நாட்குறிப்பு
Jan. 1.	புனிதமானதும் பாவத்தை அழிக்கக்கூடியதும் புண்யம் நிறைந்ததும் வேதங்கட்கு ஒப்பானதும் ஆகிய ஸ்ரீ ராமசரிதத்தைப் படிப்பவன் ஸகல பாவங்களினின்றும் விடுபடுகிறுன். —பால. 1-98.
Jan. 2.	ராமர் ஸகல உயிர்களையும் ரக்ஷிக்கிறுர்; தர்மத்தை சிரத்தையுடன் ரக்ஷிக்கிறுர். —பால. 1-13.
Jan. 3.	தகப்பனே நமக்கு பிரபு: அவரே நமக்கு உயர்ந்த தெய்வம். —பால. 32-21.
Jan. 4.	ப்ரஹ்ம தேஜஸின் பலமே மிகச் சிறந்தது. —பால. 56-23.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Ramanujam Collection, Sholinganallur, Chennai

Jan. 5. பொறுமையே தானம்; பொறுமையே ஸத்யம்; பொறுமையே யக்ஞம். —பால. 33 - 8.

Jan. 6. பொறுமையே கீர்த்தி; பொறுமையே தர்மம்; பொறுமையிலேயே உலகம் நிலைநிற்கிறது. —பால. 33 - 9.

Jan. 7. காமத்தாலாவது கோபத்தாலாவது எதிலும் அலட்சியத் தன்மையைக் காட்டக்கூடாது. —பால. 13 - 15.

Jan. 8. ஸகல லோகங்களிலும் ஸ்ரீ ராமன் ஸத்புருஷன்; ஸத்யத்தையும் தர்மத்தையும் மேற்கொண்டவன். —அயோ. 2 - 29.

Jan. 9. தர்மமும் செல்வமும் ஸ்ரீ ராமனிடமிருந்தே வெளியாகின்றன. —அயோ. 2 - 29.

Jan. 10. தர்மத்தில் நிலையாக நிற்கும் பெரியோர்களுக்கு மனம் ஒரு நிலையாக விளங்கும். —அயோ. 4 - 27.

Jan. 11. நெருங்கிப் பழகுவதால் தாவரங்களிடமும் நட்பு உண்டாகிறது. —அயோ. 8 - 28.

Jan. 12. ஸத்யம் என்ற ஒரு சொல்லே ப்ரஹ்மம்; ஸத்தியத்தில் தர்மம் நிலைநாட்டப்படுகின்றது. —அயோ. 14 - 7.

Jan. 13. ஸ்ரீ ராமர் முன்னுக்குப்பின் முரணாகப் பேசமாட்டார். —அயோ. 18 - 30.

Jan. 14. தகப்பன் ஆணைப்படி செய்பவன் எவனும் கெட்டுவிடமாட்டான். —அயோ. 21 - 37.

Jan. 15. தர்மமே உலகில் சிறந்தது; தர்மத்தில் ஸத்யம் நிற்கிறது. —அயோ. 21 - 41.

Jan. 16. பெண்ணுக்குப் பதியே தெய்வம்; பிரபு. —அயோ. 24 - 21.

Jan. 17. பதிக்குப் பக்தியுடன் பணிவிடைகள் செய்யும் பெண் உத்தமமான சொர்க்கத்தை அடைகிறாள். —அயோ. 24 - 26.

Jan. 18. பர்த்தாவின் பாக்கியம் முழுவதையும் பத்தினி ஒருத்தி தான் அடைகிறாள். —அயோ. 27 - 5.

Jan. 19. எந்நிலையிலும் பெண்களுக்குக் கணவன் காலடி நிழலே சிறந்தது. —அயோ. 27 - 9.

Jan. 20. இல்லறத்தை மேற்கொண்டவனுக்கு ஆத்மா மனைவியே. —அயோ. 37 - 24.

Jan. 21. ஸ்ரீ ராமர் உள்ள இடத்தில் பயம் இல்லை; அவமானமும் இல்லை, அச்சம் —அயோ. 48 - 15.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Parambariya Vaidharan Collection, Sholinganallur, Chennai

நிறத்தை யுடையவள்; இத்தகு பெருமை மிக்க லோகமாதாவே! நீ எப்போதும் என் அருகில் இருந்து என்னை அனுக்ரஹிக்குமாறு வேண்டுகிறேன்.

5. சந்த்ராம் ப்ரபாஸாம் யஶஸா ஜ்வலந்தீம்
ஶ்ரியம் லோகே தேவஜுஷ்டாம் உதாராம் ।
தாம் பத்மநேமீம் சரணமஹம் ப்ரபத்யே
அலக்ஷ்மீர்மே நஶ்யதாம் த்வாம்வ்ருணே ॥

அடியார்களின் ஆசைகள் யாவற்றையும் பூர்ணமாக அளித்து அநுக்ரஹிப்பவள் ஸ்ரீ தேவி; ஸ்ரீமந் நாராயணன் பூலோகத்தில் அவதரித்தால் தானும் அவ்வாறே அவதரித்து அடியார்களை ரக்ஷிக்கிறாள். ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஈ என்ற மூல சப்தத்தில் குறிக்கப்படுகிறாள்; அத்தகைய தாய் தாமரையின்மேல் அமர்ந்திருக்கிறாள்; அவளே எனக்குக் கதி; அவளையே அடைக்கலமாக அடைகிறேன். ஹே தேவி, என்னுடைய தரித்திரத்தை அழி; அறியாமையைப் போக்கு; குற்றங்களை நீக்கு.

[ஸ்ரீஸூக்தத்தின் ஸாரத்தினும் ஸாரமாக விளங்குவது இந்த ஶ்லோகமே. ஸ்ரீ மஹாலக்ஷ்மியிடம் சரணமடைவதை இதுவே விளக்குகிறது. எல்லாப் பயன்களையும் அளிக்கவல்லது.]

6. ஆதித்ய வர்ணே தபஸோதி ஜாதோ
வனஸ்பதிஃ தவ வ்ருக்ஷோத பில்வஃ ।
தஸ்ய பலாநி தபஸாநுதந்து
மாயாந்தராயாஶ்ச பாஹ்யா அலக்ஷ்மீஃ ॥

சூரியகாந்திக்கு நிகரான தேஜோமயமானவளே! நினதனுக்ரஹத்தாலேயே விருக்ஷராஜன் எனத்தக்க வில்வமரம் உண்டாயிற்று; அம்மரத்தின் பழங்கள் எனது அஞ்ஞான இருளை அகற்றட்டும்; ஐம்புலன்களாலும் உண்டான பாவங்களை நீக்கட்டும்.

7. உபைது மாம் தேவஸகைஃ கீர்த்திஶ்ச மணிநா ஸஹ ।
ப்ராதுர்பூதோஸ்மி ராஷ்ட்ரேஸ்மிந் கீர்த்திம்ருத்திம்
ததாது மே ॥

ஹே தேவி! தேவ ஸகாயனான மாதவன் எனக்கு அருள் புரியட்டும். கல்வியாலும் செல்வத்தாலும் எனக்குப் புகழ் உண்டாகட்டும். இவ்வுலகில் பிறந்துவிட்டேன்; உன்னையே வேண்டுகிறேன். உன் அனுக்ரஹத்தால் செல்வக் கோமரன், குபேரன், என் நண்பனாகட்டும்; புகழ்க்கன்னி என்னைச் சேரட்டும்; சிந்தித்ததெல்லாம் தரும் சிந்தாமணி என்னதாகட்டும்.

8. க்ஷுத் பிபாஸா மலாம் ஜ்யேஷ்டாம் அலக்ஷ்மீம்
நாஶயாம்யஹம் ।
அபூதிம் அஸம்ருத்திம்ச
ஸர்வாம் நிர்ணுத மே க்ருஹாத் ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஹே தேவியே! பசி, தாகம் முதலிய பலவற்றாலும் மக்களை வருத்தும் உன் அக்காளை உன் அனுக்ரஹத்தால் வெளியே விரட்டுகிறேன். இனி, உழைப்பின் பயன், முன்னேற்றம் ஆகியவற்றைத் தடுக்கும் ஏழ்மை, பற்றாக்குறை முதலிய தடைகளை என் இருப்பிடத்தினின்றும் நீயே விரட்டவேண்டும்.

9. கந்த த்வாராம் துராதர்ஷாம் நித்யபுஷ்டாம் கரீஷிணீம்।
ஈஸ்வரீம் ஸர்வபூதாநாம் த்வாமிஹோபஹ்வயே ஸ்ரியம்।

ஸுகந்த ஸ்வரூபமே ஸ்ரீதேவி; அவள் ஒருவராலும் அவமதிக்க முடியாதவள்; அஞ்ஞானிகளால் அறியப்படாதவள்; அவள் அருளாலேயே எல்லா உயிர்களும் பெரும் பாக்கியங்களைப் பெறுகின்றன. அந்த ஸ்ரீதேவியை எப்போதும் என் கிருஹத்தில் வாசம் செய்யும்படி நமஸ்கரித்து வேண்டுகிறேன்.

10. மநஸ:காமமாகூதிம் வாச: ஸத்யம் அஸீமஹி।
பஸூநாம் ரூபமந்நஸ்ய மயி ஸ்ரீ: ஸ்ரயதாம் யஸ:॥

ஆகவே, நாம் திண்ணமுடன் பண்ணின துதியால் எண்ணிய யாவும் — பசுவும், தானியமும், புகழும் — பெற்றவராவோம்; ஸ்ரீ தேவி என்னிடம் எப்போதும் பிரியாது அருள்புரியட்டும்.

11. கர்தமேந ப்ரஜாபூதா மயி ஸம்பவ கர்தம।
ஸ்ரியம் வாஸய மே குலே மாதரம் பத்ம மாலிநீம்॥

ஹே கர்தம பிரஜாபதியே! ஸ்ரீதேவி தங்களால் வளர்க்கப்பட்டவள்; தங்களுக்கு அவளுடைய கடாக்ஷம் எப்போதும் உண்டு; ஆகவே, தாங்கள் எனக்கு அனுக்ரஹம் செய்யவேண்டும்; எங்கள் குலத்தில் தலைமுறை தலைமுறையாக என்றும் ஸ்ரீதேவியின் பரிபூர்ண அநுக்ரஹம் நிலைத்திருக்கும்படி ஸ்ரீதேவியிடம் தாங்கள் சிபாரிசு செய்யவேண்டும்.

12. ஆப: ஸ்ருஜந்து ஸ்நிக்தாநி சிக்லீத வஸ மே க்ருஹே।
நிச தேவீம் மாதரம் ஸ்ரியம் வாஸய மே குலே॥

ஹே சிக்லீதரே! ஜலதேவதைகள் என் கிருஹத்தை நெய், தயிர், தேன் போன்ற இன்சுவைப் பொருள்களால் நிரப்பட்டும்; தாங்கள் என் கிருஹத்தில் எப்போதும் வசிக்குமாறு, என் வமிசத்தில் எப்போதும் நிலைத்து ஸ்ரீமகாலக்ஷ்மி வாசம் செய்யச் சிபாரிசு செய்யவேண்டும்.

13. ஆர்த்ராம் புஷ்கரிணீம் புஷ்டிம் பிங்களாம் பத்மமாலிநீம்।
சந்த்ராம் ஹிரண்மயீம் லக்ஷ்மீம்ஜாதவேதோ மமாவஹ।

ஸ்ரீமத் நாராயண மூர்த்தியே! ஸ்ரீதேவி நெஞ்சகத்தே ஈரமுள்ளவள்; அன்பர் மனத்தாமரையில் வீற்றிருப்பவள்; புஷ்டியை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V... Collection, Sholinganallur, Chennai

(நிறைவுக்கு) அதிதேவதை; யஜ்ஞஸ்வரூபிணி; தாமரை மாலை அணிந்தவள்; எல்லாரையும் மகிழ்விப்பவள். அவள் என் இருஹத்தையே நிலையான வாஸஸ்தலமாகக் கொள்ளும்படி நாங்கள் அனுக்ரஹம் செய்ய வேண்டும்.

14. ஆர்த்ராம் ய: கரிணீம் யஷ்டிம் ஸுவர்ணும் ஹேமமாலினீம் ।
ஸூர்யாம் ஹிரண்மயீம் லக்ஷ்மீம் ஜாதவேதோ மமாவஹ ॥

ஸ்ரீமந் நாராயணமூர்த்தியே! ஸ்ரீதேவி அமுதூறும் திருமேனி உடையாள்; செங்கோலேந்தும் கரமுடையாள்; ஸுவர்ண நிறமுடையாள்; பொன்மாலை அணிந்தவள்; புனிதத் தெய்வ வடிவுடையாள்; கோடி சூரிய ப்ரகாசமுடையாள்; அவள் என்றும் என்னகத்தில் இடையீடின்றி இனிது வாழ்க.

15. தாம் ம ஆவஹ ஜாதவேதோ
லக்ஷ்மீம் அநபகாமிநீம் ।
யஸ்யாம் ஹிரண்யம் ப்ரபூதம் காவோ
தாஸ்யோஶ்வான் விந்தேயம் புருஷாநஹம் ॥

ஸ்ரீநாராயண மூர்த்தியே! பொன், பொருள், கால்நடைச் செல்வம், சேவகர், புத்ரபௌத்ராதிகள் முதலிய யாவற்றையும் நல்கும் மோக்ஷலக்ஷ்மி என்றென்றும் என்னுடன் இருக்குமாறு அருள்புரிய வேண்டும்.

ஸ்ரீ தேவிக்குத் தனித் துதி

1. பத்மப்ரியே பத்மிநி பத்மஹஸ்தே பத்மாலயே
பத்மதளாயதாக்ஷி ।
விஶ்வப்ரியே விஷ்ணுமநோநுகூலே த்வத் பாதபத்மம் மயி
ஸந்நிதத்ஸ்வ ॥

தாமரையை விரும்புபவளே! பத்மநிதியை உடையவளே।
தாமரைக்கையளே! தாமரையில் வாழ்பவளே!
தாமரைக் கண்ணியே! உலகத்தால் விரும்பப்படுபவளே!
விஷ்ணுசித்தத்திற்குப் பாங்கானவளே!
நின் பாததாமரைகளை என் தலைமேல் வைப்பாயாக!

ஶ்ரியை ஜாத: ஶ்ரிய ஆநிர்யாய
ஶ்ரியம் வயோ ஜநி[illegible]ருப்யோ ததாது ।
ஶ்ரியம் வஸாநாம் அம்ருதத்வம் ஆயந்
பஜந்தி ஸத்ய: ஸ்மிதா மிதத்யூந் ॥

அம்பிகையின் லீலா விநோதத்துக்காகப் படைக்கப்பட்டதே இவ்வுலகம். அது எல்லாருக்கும் நீண்ட ஆயுளையும், செல்வங்களையும், சுகங்களையும் அருளட்டும்; தேவியை உபாசனை செய்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Ranjani Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பவர்கள் மீண்டும் மீண்டும் பிறவார் ; ப்ரஹ்ம ஸ்வரூபம் பெற்று ஒளிர்வர்.

பல ஶ்ருதி

3. ஶ்ரிய ஏவைநம் தத்ஶ்ரியா மாததாதி ।
ஸந்ததம் ருசாவஷட் க்ருத்யம் ஸந்தத்தம்
ஸந்தீயதே ப்ரஜயா பஶுபி: ।
ய ஏவம் வேத ॥

இந்த ஸ்ரீஸூக்தத்தை அன்புடன் மனம் லயித்துத் தினமும் அத்யயனம் செய்பவன் அழிவற்றதும் எல்லையற்றதுமான செல்வத்தை அடைவான். ஆகையால் அடியார்கள் இந்த 'ருக்கை'க் கொண்டு ஹோமங்களைச் செய்க. அவர்களை எல்லாச் செல்வங்களும் தாமாகவே வந்தடையும்.

ஸ்ரீ லக்ஷ்மீ காயத்ரீ

1. ஓம் மஹாதேவ்யை ச வித்மஹே
விஷ்ணுபத்ந்யை ச தீமஹி ।
தந்நோ லக்ஷ்மீ: ப்ரசோதயாத் ॥

ஹே மஹா விஷ்ணுவே! ஸ்ரீதேவியை — மஹா லக்ஷ்மியை — பக்தியுடன் மனமொருமித்துத் தியானிக்கிறோம்; அவளை உபாசிப்பதற்கு வேண்டிய அறிவுச் செல்வத்தை அடைய அவளே எங்களறிவைத் தூண்டவேண்டும்; அவளே உபாஸனையை நிறைவேற்றி வைக்கவேண்டும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit DV Hariharan Collection, Sholinganallur, Chennai

மதுராந்தகம் (ஸ்ரீ வகுளாரண்ய க்ஷேத்ரம்)

சென்னை—விழுப்புரம் ரயில் பாதையில் உள்ள மதுராந்தகம் ரயில்வே ஸ்டேஷனுக்கு மேற்கே சுமார் ஒரு மைல் தூரத்தில் உள்ளது இந்த க்ஷேத்ரம். சென்னையிலிருந்து பஸ் மூலமாகவும் இந்த ஸ்தலத்திற்குச் செல்லலாம். இதற்கு "வகுளாரண்ய க்ஷேத்ரம்" என்ற பிரஸித்தியான மற்றொரு பெயரும் உண்டு. இங்குக் கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீராமபிரான், இளைய பெருமாள், பிராட்டி ஸஹிதமாக, அபூர்வமான அழகுடனும் காம்பீர்யத்துடனும் பக்தர்களுக்கு ஸேவை தருகிறார். ஆங்கிலேய கலெக்டருக்கு ப்ரத்யக்ஷமாகி அவர் ப்ரார்த்தனைக்கு இணங்கி வெள்ளத்தால் உடைபட இருந்த ஏரியைக் காத்து அருளியவர். இங்கு ஸ்ரீவைஷ்ணவ பரமாசாரியாரான ஸ்ரீபாஷ்யகாரருக்குப் பெரிய நம்பியால், ஸ்ரீசக்கரவர்த்தித் திருமகன் ஸந்நிதிக்குப் பின்புறமாக உள்ள வகுள (மகிழ) மரத்தடியில் பஞ்ச ஸம்ஸ்காரம் ஸமாச்ரயணாதி செய்யப்பெற்றன என்பது இந்த ஸ்தலத்தின் மற்றொரு விசேஷமாகும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



அயோத்தி

ஸரயூ நதிக் கரையில் உள்ள ஸ்ரீராமர், லக்ஷ்மணர், ஆஞ்ஜநேயர் ஸந்நிதிகள்.



லக்ஷ்மண் ஜூலா

இளைய பெருமாளுக்கு நம் முன்னோர் அமைத்த ஒரே ஒரு தனிக் கோயில். இது இமயமலைமீது அழகாக விளங்குகிறது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



அயோத்தி

இந்த ஸ்தலம் உத்தரப் பிரதேசத்தில் உள்ளது. இங்கு ஸ்ரீராம ...ானே கனவில் தோன்றிப் பணித்தவண்ணம், ஒரு தென்னாட்டுப் ...ண்மணியால் நிர்மாணிக்கப்பட்ட "அம் மாஜி மந்திர்" என்னும் ...க்கோயிலில் ஸ்ரீ ராமசந்த்ரமூர்த்தி எழுந்தருளியுள்ளார்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



பஞ்சவடி

இந்த ஸ்தலம் ஸ்ரீ ராமர் வன வாஸத்தில் லோகமாதாவுடன் மன முவந்து வசித்த இடம். இது நாஸிக் ஸ்டேஷனுக்கு 5 மைல் தூரத்தில் கோதாவரி நதிக்கரையில் அமைந் துள்ளது.

வேல்துர்த்தி

ஆந்திர ராஜ்யத்தில் கர்நூலிலிருந்து சுமார் 20 மைல் தூரத்தில் உள்ள வேல்துர்த்தியில் காட்சி தரும் ஸ்ரீ ஸீதாலக்ஷ்மண ஸமேத ஸ்ரீ ராமர்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,



பத்ராசலம்

ராஜமஹேந்திரத்திற்கு வடமேற்கில் 60 மைல் தூரத்தில் பத்ராசல மலைக்காட்டில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ ராமபிரான். கோபன்ன என்ற பக்தரைக் காக்க, ஹைதராபாத் நவாபுக்குப் பணம் செலுத்தித் தரிசனமும் அளித்தவர்.



திருமலை (திருப்பதி)

திருமலையில் ஸ்ரீ ஸ்ரீநிவாஸப்பெருமாள் மூலஸ்தானத்தில் எழுந்தருளியுள்ளமூர்த்தி. திருவேங்கடமுடையானுடன் ஒரே இடத்தில் தரிசிக்கலாம்.

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கிழ்த் திருப்பதி

கிழ்த் திருப்பதியில் ஸ்ரீ ஜாம்பவானுல் பிரதிஷ்டை செய்யப்பட்ட பெருமாள்.

திருவஹீந்திரபுரம்

தென் ஆர்க்காடு ஜில்லாவைச் சேர்ந்த தி[...] பாதிரிப்புலியூர் ரயில் நிலையத்திலிருந்து சுமார் 3 மை[...] தூரத்தில் திருவஹீந்திரபுரத்தில் உள்ள இந்த ஸ்ரீ[...] ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிய "ஸ்ரீ ர[...] கத்யம்" என்னும் திவ்ய ஸ்தோத்ரத்திற்குக் காரா[...]மானவர்.

ஸ்ரீரங்கம்

பெரிய கோயில் ப்ராகாரத்தில் உள்ள

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



திருநீர்மலை (தோதாத்ரி)

சென்னை பல்லாவரம் ஸ்டேஷனுக்கு சுமார் 3½ மைல் தூரத்தில் பஸ் செல்லும் பாதையில் உள்ள க்ஷேத்ரம். ஸ்ரீ வால்மீகி பகவானே ப்ரதிஷ்டை செய்த மூர்த்திகள்.

திருநின்றவூர் (தின்னனூர்)

திருநின்றவூர் ரயில் நிலையத்திற்கு ¾ மைலில் உள்ள ஸ்தலம். வெள்ளத்தால் உடையும் நிலையி லிருநத ஏரியைக் காத்ததால் "ஏரிகாத்த ராமன்" என்று திருநாமம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,



வடுவூர்

மன்னார்குடிக்கு 10 மைலில் உள்ள வடுவூரில் எழுந்தருளியிருக்கும் இந்த ஸ்ரீ ராம விக்ரஹம், அழகுக்கோர் அணி போன்றதாகும். பார்க்கப் பார்க்கப் பரவசமூட்டும் திருமேனி.



தில்லைவிளாகம்

தஞ்சை ஜில்லா தில்லைவிளாகம் ரயில் நிலை... திற்கு அருகில் உள்ள ஸ்தலம். பூ கர்பத்திலிருந்... அவதரித்த இம்மூர்த்திகள் சிற்பக் கலைக்கோ... சிறந்த உதாரணம். கண்களுக்கொரு தெவிட்டா... இன்பம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy, Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தனுஷ்கோடி

தனுஷ்கோடி ரயில் நிலேயத்துக்கருகில் ஸமுத்திரக் கரையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ராமர்.



திருச்சேறை

குப்பசோணத்திலிருந்து திருவாரூர் மெ மார்க்கத்தில் 9-வது மைலில் உள்ள திருச் சேறை ஸ்ரீ ஸாரநாதப் பெருமாள் ஸந்நிதியில் வனவாஸத் தோற்றத்துடன் எழுந்தருளி யுள்ள ஸ்ரீ ராமர்.

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,



திருப்புல்லாணி

ஸமுத்திரராஜனின் உதவியைப் பெற ஸ்ரீ ராமர் கொண்ட தர்ப்பசயனத் திருக்கோலம். ராமநாதபுரம் ரயில் நிலயத்திலிருந்து 6 மைலில் கீழ்க்கரை என்ற ஊர், திருப்புல்லாணி.



ராமேசுவரம்

ஸ்ரீ ராமபிரானே பிரதிஷ்டை செய்த தாகச் சொல்லப்படும ஸ்ரீ ராமேசுவரம் கோயிலில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ ராம சந்திர மூர்த்தி.

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ ராமஜயம்

பொருளடக்கம்

ஸ்தோத்திரமாலை

		பக்கம்
ஆதித்யஹ்ருதயம்		
காயத்ரீ ராமாயணம்	...	1
திவ்ய பிரபந்த பாசுர ராமாயணம்	...	4
ஆஞ்ஜநேயாஷ்டோத்தரம் (நாமாவளியுடன்)	...	7
ஸ்ரீ ஸீதாஷ்டோத்தரம்	...	12
ஸ்ரீ ராமாஷ்டோத்தரம் ,,	...	16
ஸ்ரீ ஸீதாராம ஸ்தோத்ரம் ,,	...	19
ஸ்ரீ நாம ராமாயணம்	...	22
கம்ப ராமாயணத்திலிருந்து......	...	23
ஸ்ரீ க்ருஷ்ணாஷ்டோத்தரம் (நாமாவளியுடன்)	...	25
ஸ்ரீ ஹயக்ரீவாஷ்டோத்தரம்	...	26
ஸ்ரீ நரஸிம்ஹாஷ்டோத்தரம் ,,	...	29
ஸ்ரீ வேங்கடேசாஷ்டோத்தரம் ,,	...	31
ஸ்ரீ லக்ஷ்மீ அஷ்டோத்தரம் ,,	...	34
ஸ்ரீ ஸரஸ்வத்யஷ்டோத்தரம் ,,	...	38
ஸ்ரீ துர்காஷ்டோத்தரம் ,,	...	42
ஸ்ரீ மஹிஷாஸுரமர்தினீ ஸ்தோத்ரம் ,,	...	45
ஸ்ரீ விக்நேஸ்வராஷ்டோத்தரம்	...	50
ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யாஷ்டோத்தரம் ,,	...	53
ஸ்ரீ சிவாஷ்டோத்தரம் ,,	...	56
ஸ்ரீ அந்நபூர்ணாஷ்டோத்தரசத நாமாவளி ,,	...	59
ஸ்ரீ துலஸ்யஷ்டோத்தரம் (நாமாவளியுடன்)	...	61
கன்னிப் பெண்கள் கவனிக்க! (பாதுகையின் மகிமை)	...	62
ஸ்ரீ ரங்கநாதாஷ்டகம்	...	65
ஸ்ரீ கனகதாரா ஸ்தோத்ரம்	...	67
ஸ்ரீ ஸுதர்சநாஷ்டகம்	...	68
ஸ்ரீ நவக்ரஹ மங்களாஷ்டகம்	...	71
...ஸூர்யாஷ்டோத்தரசத நாமாவளி	...	73
...ந்த்ராஷ்டோத்தர	...	75
...ங்காரகாஷ்டோத்தர ,,	...	76
...தாஷ்டோத்தர ,,	...	77
...ரு-அஷ்டோத்தர ,,	...	78
...க்ராஷ்டோத்தர ,,	...	79
...நி-அஷ்டோத்தர ,,	...	80
...ராஹூ அஷ்டோத்தர ,,	...	81
...கது-அஷ்டோத்தர ,,	...	82
...றவிப் பெரும் பயன் ,,	...	83
...ன் சரணே சரண் !	...	84

மாலை

CC-0 In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

TUTLMR : TURI

Vaidika Pandit Sri V Harihara Collection, Sholinganallur, Chennai

		பக்கம்
ஸ்ரீ விஷ்ணுவாலய மூர்த்திகளைத் துதிக்க சுலோகங்கள்		86
ஸ்ரீ சிவாலய மூர்த்திகளைத் துதிக்க சுலோகங்கள்	...	90
தெய்வத் தன்மை பொருந்தியவைகளைத் துதிக்கும் முறை		92
நவக்ரஹாஷ்டோத்தரசத நாமாவளி	...	92
தசாவதார ஸ்தோத்ரமும் நவக்ரஹ ப்ரீதியும்	...	94
ஸ்ரீ பாதுகையும் நவக்ரஹங்களும்	...	99
நவக்ரஹக் கோலம்	...	100

ஸகல கார்யங்களிலும் வெற்றி பெற ஸ்ரீராமன் பாதுகைகளைப் போற்றுவோம் !

ஸ்ரீராம பாதுகைகளின் பெருமை

ஸ்ரீ ராமபிரானின் வனவாஸ காலத்தில், நந்தி க்ராமத்தில் ஸ்ரீராம பாதுகைகளின் ப்ரதிநிதியாக பரதாழ்வார் அரச கார்யங்களைக் கவனித்து வந்தமையால், அவர் ஒவ்வொரு நாளும் நடந்த ராஜ்ய கார்யங்களை ஸ்ரீராம பாதுகைகளிடம் விண்ணப்பித்து வந்தார். எதைச் செய்தாலும் ஸ்ரீ பாதுகா தேவியிடம் தெரிவிக்காமலும் அவரது நியமனத்தைப் பெறாமலும் செய்வதில்லை. எந்தக் காணிக்கை வந்தாலும் ஸ்ரீ பாதுகா தேவியிடம் அர்ப்பணம் செய்வார். இப்படி அந்த மஹாத்மா ஸ்ரீராமசந்திரனுடைய பாதுகைகளுக்கு அடிமையாயிருந்து அவரது பலத்தால் ராஜ்யத்தை நன்கு ஆண்டுவந்தார். (ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்: அயோ. 115 ஸர்க்கம்)

> "வர்ஷாணி தானி வ்ருஷலோ ந தபாம்ஸி தேபே
> பாலோ ந கச்சிதபி ம்ருத்யுவசம் ஜகாம ।
> ராஜ்யே தவாம்ப ரகுபுங்கவபா[dura]ரக்ஷே
> நைவாபரம் ப்ரதிவிதேயம் அ[bhū]த் ப்ரஸக்தம் ॥"

— ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்

[ஸ்ரீ பாதுகா ராஜ்யத்தில் சாஸ்த்ர வரம்பை யாரும் மீறியதில்லை. சிசு மரணமே கிடையாது. தீமை தோன்றி அதற்கு சாந்தி பண்ணவேண்டிய நிலைமையே ஏற்படவில்லை.]

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ பாதுகாதேவி பூலோகத்தை மாத்திரமின்றி வானுலகத்தவரையும் 'ரக்ஷித்ததைப் பெரியாழ்வார் திருமொழி 4-9-1-ம் பாசுரம் கூறுகிறது :—

"மரவடியைத் தம்பிக்கு வான்பணயம் வைத்துப்போய் வானோர் வாழ,
செருவுடைய திசைக்கருமம் திருத்திவந் துலகாண்ட திருமால் கோயில்,
திருவடிதன் திருவுருவும் திருமங்கை மலர்க்கண்ணும் காட்டி நின்று,
உருவுடைய மலர்நீலம் காற்றாட்ட ஓசலிக்கு மொளிய ரங்கமே."

ஆண்டவனுக்கு அர்ப்பணிக்காமல் உண்பது திருடுவது போன்றது

உணவின் தூய்மை குறித்து ஸ்ரீ சிருங்கேரி ஆசார்யாள் பொன்னுரை

உலகில், சாப்பிடாமலிருப்பது முடியாது. சரீரம் நிலைப்பதற்காக எப்படிச் சாப்பிடுவதென்பதைத் தெரிந்துகொள்வதுடன் எவை அருந்தத்தக்கவை, எந்தவிதமாகச் சாப்பிட வேண்டும் என்பதையும் புரிந்துகொள்ளுதல் நலம். பகவத்பாதாள் 'ப்ரதஸ்லோகி'யில், இதனைக் குறித்து விவரித்துள்ளார்கள்.

முதலாவதாக, கண்ட பொருள்களைக் கண்ட இடத்தில் சாப்பிடக் கூடாது. உண்ணும் வகை குறித்து நம் சாஸ்திரங்கள் எம்முறையைக் கைப்பற்றவேண்டும் என்பதைத் தெளிவாக்குகின்றன.

உலகம் தானாக ஏற்படவில்லை என்பது ஆஸ்திகக் கருத்து. அது ஒரு காரிய காரணமாகவே ஏற்பட்டது. லோகநாயகன் இதனைச் சிருஷ்டித்து மக்களுக்குப் பஞ்ச இந்திரியங்களையும் ஆத்மாவையும் கொடுத்தார். சுகவாழ்விற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்தார். இதனை உணராது பகவான் ஞாபகமே இராது வாழ்தல் தவறு.

அணைகள் கட்டலாம்; கால்வாய்கள் வெட்டலாம்; பருவமழை இல்லையெனில் யாது பயன்? லோகநாயகன் சகாயமின்றி ஒன்றும் செய்யமுடியாது. இதை உணர்ந்து மக்கள் ஒருவருக்கொருவர் ஒத்தாசை செய்து உணவு சம்பாதித்து எல்லாரும் ஸந்தோஷமாகச் சாப்பிடவேண்டும். ஏகாங்கியாய் வாழ்வதில் சுகம் கிடையாது. சற்றுச் சிந்தித்துப் பார்த்தால் நீ மற்றொருவருக்காகவே ஆகாரம் தேடுகிறாய் என்பது புலனாகும். வீட்டில் உள்ள குழந்தைகளும் மற்றவர்களும் சுகமாயிருந்தால், தானும் சுகவாழ்வு வாழமுடியும் என்ற எண்ணம் இருக்கிறது. ஏகாங்கியாயிருந்தால் சுகமாய் வாழமுடியாது.

இஷ்ட காம்யங்களை நமக்குக் கொடுக்கச் சித்தமாயிருக்கும் பகவான் அளித்த வஸ்துக்களை, அவருக்கு முதலில் நிவேதனம் அளிக்காது சாப்பிடுபவர் திருடனுக்குச் சமானமாவார்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆண்டவனுக்கு அர்ப்பித்துச் சாப்பிடவேண்டும். தேவதை அதிதிகளுக்கு அளித்தபிறகு, மிச்சத்தைச் சாப்பிட்டால் ஸர்வ பாவங்களும் அகலும். அப்படிச் செய்யாதவன் அறிவில்லா தவன். அவன் சாப்பிட்ட அன்னம் வியர்த்தம். அவன் மிருத்துவை உள்ளே காப்பாற்றி வருகிறான். வந்ததெல்லாம் தனக்குப் போதாதென்று எண்ணுகிறான். இவனுக்குப் பாபம் பெருகி துர்ப்புத்தி அதிகமாகும்.

உணவு தயாரிக்க ஆரம்பித்து அடுப்பில் வைக்கும்போதே தேவதா வினியோகத்துக்காகச் செய்கிறோம் என்ற மனோபாவம் வேண்டும்.

அதிதியை விரட்டித் தான் மாத்திரம் சாப்பிடுவது பாவம். ஆண்டவனுக்கும், அதிதிக்கும் அளித்த அன்னம் அமிருதமாகும். எதுவானாலும், என் போகத்துக்காகச் சாப்பிடுகிறேன் என்ற எண்ணம் வரக்கூடாது. பரோபகார சிந்தனையுடன் பகவான் கொடுக்கிறான் என்ற புத்தியுடன் தானம் செய்தால் லக்ஷ்மி கூடவே ஸதா இருப்பாள். எச்சிற்கையால்கூடக் காக்காய் ஓட்ட மனமில்லாத துர்ப்புத்தியானவனுக்கு எல்லாரும் சத்ருதான்; தானமளித்து, பின், தான் உண்பவனுக்கு எந்த சத்ருவும் மித்திரனாவான்.

ப்ராண அக்னிஹோத்ரம் செய்து சாப்பிடுவது நல்லது. இப்படிச் செய்தால், சாப்பிடுபவன் நான்தான், என்ற பாவம் விலகி, அந்நிலையில் சைதன்ய ஸ்வரூபத்தை உணரமுடியும். உண்பவருக்கு உயரிய நன்மை கிட்டும்.

நமக்குச் சேவை செய்பவர்களுக்கும் திருப்தியாக அன்னம் அளிக்கவேண்டும்.—"தினமணி", 31—10—1960.

நெற்றிக் குறி இடுதல்

அந்த நாட்களில் நம் மக்கள் ஸ்நானம் செய்தவுடன் நெற்றியில் விபூதி, திருமண் போன்ற தெய்வச் சின்னங்களைத் தவறாமல் இட்டுவந்தார்கள். இவற்றின் தத்துவம் என்ன?

"ஏ பக்தா! நீ மண்ணிலிருந்து வந்தவன். உன் உடல் ஒரு மண்பாண்டம். என்றாவது ஒரு நாள் நீ மண்ணிற்குத் திரும்புவது திண்ணம். எனவே, திருமண் விபூதி இவற்றைக் குழைக்கும் ஸமயம் உன் அநித்யத்துவமும் நானும் உனக்கு ஞாபகம் வரட்டும். கூடிய வரை பிறர்க்கு உபகாரம் செய். ஸ்வபாவத்தைக் குறைத்துக்கொள்."

என்று இவைகளின்மூலம் பகவான் நமக்குக் கூறுகிறார்போலும்?

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Harihara, Sholinganallur, Chennai

தவிர, எவனொருவனுடைய நெற்றியில் இந்தத் தெய்வீகச் சின்னம் எப்பொழுதும் இருக்கிறதோ, எவன் வீட்டு முன்வாயிலில் இந்தச் சின்னங்கள் பொறிக்கப்பட்டு இருக்கின்றனவோ, அம்மனிதனுக்கும், அந்த வீட்டிற்கும் கடவுள் அருள் பரிபூரணமாக இருக்கும் என்று நம்பி நம் முன்னோர்கள் ஆனந்தமாக வாழ்ந்து வந்தார்கள் அக்காலத்தில்.

இன்று நெற்றிக்கு இடுவதை அவமானமாகக் கருதலானோம். அந்நாட்களில் வைஷ்ணவர் வீட்டு வாசல்களில் திருமண், சங்கு, சக்ரத்துடன் கூடிய சின்னங்கள் பொறித்துவைக்கப்பட்டிருப்பது வழக்கம்.



இப்போது அவர்கள் கட்டும் வீடுகளிலும் இதை மறந்துவிட்டனர்.

"நீறில்லா நெற்றிப் பாழ்; நெய்யில்லா உண்டி பாழ்"

என்பது ஔவைப் பிராட்டியின் அருள் வாக்கன்றோ! ஆதலின் நாமும் நீராடியவுடன் நெற்றியில் விபூதி, திருமண், கோபிசந்தனம் போன்ற சின்னங்களைத் தவறாமல் அணிவதுடன் நாம் வசிக்கும் வீடுகளிலும் இத்தகைய சின்னங்களை முன்வாயிலில் பொறித்து வைக்கவேண்டும்.

பல பிறவிகளில் செய்த புண்ணியப் பயனாய்ப் பெற்ற அரிய இம்மனித உடல் அழியக்கூடியதாதலின் அழியா இன்பத்தையடைய ஒவ்வொருவரும் பாடுபட்டு உய்யவேண்டும் என்று அறிவிப்பதே இச்சின்னம் என்பது நம் முன்னோர் நம்பிக்கை,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Harihara Collection, Sholinganallur, Chennai

"முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள் ளோரும் முடிவிலொரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணுவ தும்கண்டு மேலுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல் லால்பொன்னி னம்பலவன்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென் றேயறி வாரிலையே"

என்ற பட்டினத்தார் பாடலும் இக்கருத்தை வலியுறுத்தும்.

விபூதி

ஆணவம், கன்மம், மாயை என்னும் முக்குற்றங்களும் அகலவேண்டும் என்று கருதி வலக்கை நடு விரல் மூன்றினாலும் வடக்கு அல்லது கிழக்கு முகமாக இருந்து நெற்றியில் மூன்று கோடு வடிவமாக விபூதி என்னும் பஸ்மத்தை அணிதல்வேண்டும். விபூதியை அணியும்போது அது நிலத்தில் சிந்தா வண்ணம் அண்ணாந்து "ஓம் சிவசிவ" என்று கூறி அணிதல் முறையாகும்.

விபூதியே பஸ்மம். விபூதியே சிவம். சிவமே பஸ்மம். தான் பஸ்மமாய் இருந்து நாஸ்திகத்தையும் பஸ்மம் செய்வது விபூதி.

"மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே"

என்பது சம்பந்தர் அருள் மொழியாகும்.

திருமண்

இவ்வாறே நெற்றியில் திருமண் காப்பு அணிதலும் நம் முன்னோர்கள் வழக்கமாகும். திருமண் காப்பு என்னும் சொல்லே, திருமண் இடுதல் நமக்கு ஒரு ரக்ஷையாக அமைவதைக் குறிக்கும். இவை தெய்வ பக்தியைக் குறிக்கும் அடையாளங்கள். திருமண் திருமாலின் பக்தியையும் இடையில் அணியும் ஸ்ரீசூர்ணம் திருமகள் பக்தியையும் குறிக்கும். அது திருமாலின் திருவடி வடிவமாக அமையவேண்டும் என்பதைக் கீழ்வரும் ஸ்லோகம் நன்கு விளக்குவதாம்;

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

"பரஸ்ய பும்ஸ: பத ஸந்நிவேசான்
ப்ரயுஞ்ஜதே பாவித பஞ்ச ராத்ரா: ।
அகப்ரதீபான் அபதிஸ்ய புண்ட்ரான்
அங்கேஷு ரங்கேஸய பாதுகே த்வாம் ॥"

—ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்.

பாஞ்சராத்ரம் முதலிய ஆகம நூல்களைக் கற்றுணர்ந்த பெரியோர் தம் உடலில் அணியும் புண்ட்ரங்கள் (குறிகள்) திருமாலின் பாதுகை வடிவமானவை என்பதும், அதனால் பாவங்கள் யாவும் நீங்கும் என்பதும் இந்த ஸ்லோகத்தின் கருத்தாகும்.

எனவே, உலகில் பிறந்த யாவரும் தத்தம் முன்னோர்கள் அணிந்தவாறு விபூதியோ, திருமண்ணோ, கோபிசந்தனமோ அணியவேண்டுவது அவசியம் என்பது வெதற்றென விளங்கும் அன்றோ? நாமும் நம் முன்னோர் ஒழுகிய முறைப்படி நெற்றிக் குறியணிந்து நலம் பல பெறுவோமாக.

ஸகல காரியங்களிலும் ஸித்தி பெற
உங்கள் காரியங்களில் எதையும்

தாமதம் செய்யாதீர்கள்!

"DO IT NOW!"

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பதும் போலும் பிறப்பு"—குறள் 339

என்பதற்கிணங்க உலகம் நிலையில்லாதது. எந்நேரத்தில் என்ன நிகழும் என்பதை யாரும் அறுதியிட்டுரைத்தல் இயலாது. மின்னல் மின்னும்; ஒளிப்பிழம்பாய்க் காட்சி அளிக்கும்; உள்ளத்தை அள்ளும் எழிலுடன் திகழும்; ஆனால் அதன் ஆயுள் ஒரு கணமே. அத்தகைய மின்னல்போன்றதே வாழ்வு; ஒருகணத்தில் இருந்த இடம் தெரியாமல் மறையும்; ஆகவே, வாழ்க்கையில் நாம் செய்ய வேண்டிய கடமைகளை உடனுக்குடனே விரைந்து செய்ய வேண்டும். 'இந்நேரம் தப்பினால் எந்நேரம் வாய்க்கும்' என்ற அச்சம் நமக்கு எப்போதும் இருந்துகொண்டே இருக்கவேண்டும். உயிர்களுள் சிறந்த மக்களாய்ப் பிறந்த நாம் அண்ட சராசரங்களுக்கும் தலைவனாகிய ஆண்டவனை எப்போதும் மனத்தகத்தே இருத்தி வணங்கல் வேண்டும். ஆண்டவனை வழிபட வாழ்த்த—யாருக்கு மனம் உண்டோ அவனே மனிதன். அவ்வாறு வழிபடாதார் மனிதப் பிறவியினின்று வேறுபட்டவராவர்; தமக்கு அளிக்கப்பட்ட சிறந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளத் தவறியவர் ஆவர். இதனாலேயே, 'இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

குமோ?' என்ற கவலையோடு ஆண்டவன் அடியார்களுள் தலை சிறந்த பெரியார்கள்,

"மின்னின் நிலையில
மன்னுயிர் யாக்கைகள்
என்னு மிடத்து, இறை
உன்னுமின் நீரே"

எனப் பொருள் பொதிந்த அருளுரைகளைத் தெளிய அருளினர். அதாவது கடவுளை வழிபடுதலில் அசிரத்தை, காலஹரணம் கூடவே கூடாது என்பதை வலியுறுத்துகிறது மேற்கண்ட பொன்னுன மொழி.

